கணபதி துணை.

கடைச்சங்கப்புலவர்களுள் ஒருவராகிய

மதுரைக்

கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்

அருளிச்செய்த

மணிமேகலை.

இஃது

உத்தமதானபுரம்

மஹாமஹோபாத்தியாய

வே. சாமிநாதையரால்

பல பிரதிகளைக்கொண்டு பரிசோதித்து

நூதனமாகத் தாம் எழுதிய அரும்பதவுரையோடும்

பலவகை ஆராய்ச்சிக் குறிப்புக்களோடும்

ஸ்ரீ ஸேது ஸம்ஸ்தானாதிபதிகளும் மதுரைத் தமிழ்ச்சங்கத்தலைவர்களும்

சென்னைச் சட்ட நிருபணசபை அங்கத்தினர்களுமான

கௌரவம்பொருந்திய

மஹாராஜாஜஸ்ரீ

பா. இராஜராஜேசுவர ஸேதுபதி மஹாராஜா

அவர்களுடைய பேருதவியைக்கொண்டு

சென்னை:

கமர்ஷியல் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

துன்மதிவரு வைகாசிமீ

1921.

(Copyright Registered.)

இரண்டாம் பதிப்பு.] [விலை ரு. 6-4-0.

இப்புத்தகத்திலடங்கியவை.

க. இப்பதிப்பில் எடுத்துக்காட்டிய நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி ... v

உ. இரண்டாம்பதிப்பின் முகவுரை ... vii

ங. முதற்பதிப்பின் முகவுரை ... ix

ச. நூலாசிரியர் வரலாறு ... xxii

ஞ. மணிமேகலையால் தெரிந்த அரசர்களின் பெயர் முதலியன xxiii

ஃ. மணிமேகலைக் கதைச்சுருக்கம் ... 1-64

ம. மணிமேகலை மூலமும் அரும்பதவுரையும் க-ஙஃ0

பதிகம் ... க

க. விழாவறைகாதை ... ககக

உ. ஊரலருரைத்தகாதை ... ககஙக

ங. மலர்வனம்புக்ககாதை ... உள

ச. பளிக்கறைபுக்ககாதை ... சஉ

ஞ. மணிமேகலாதெய்வம் வந்துதோன்றியகாதை ... ஞச

ஃ. சக்கரவாளக்கோட்டமுரைத்தகாதை ... ஃஃ

எ. துயிலெழுப்பியகாதை ... அஞ

அ. மணிபல்லவத்துத்துயருற்றகாதை ... ஙஙஃ

ஙஃ. பீடிகைகண்டு பிறப்புணர்ந்தகாதை ... க0க

க0. மந்திரங்கொடுத்தகாதை ... க0எ

ககக. பாத்திரம்பெற்றகாதை .... ககள

கஉ. அறவணர்த்தொழுதகாதை ... கஙச

கங. ஆபுத்திரன்றிறமறிவித்தகாதை ... கசஉ

கச. பாத்திரமரபுகூறியகாதை ... கஞஉ

கஞ. பாத்திரங்கொண்டு பிச்சைபுக்ககாதை ... கஃங

கஃ. ஆதிரைபிச்சையிட்டகாதை ... கஃஃங

கள. உலகவறவிபுக்ககாதை ... களஅ

கஅ. உதயகுமரன் அம்பலம்புக்ககாதை ... கஅஃ

இப்புத்தகத்திலடங்கியவை.

கக. சிறைக்கோட்டமறக்கோட்டமாக்கியகாதை ... உ02உ

உ0. உதயகுமரனைக் காஞ்சனன்வாளாலெறிந்தகாதை உகள

உக. கந்திற்பாவை வருவதுரைத்தகாதை ... உ2சூ

உ2. சிறைசெய்காதை ... உசo

உங. சிறைவிடுகாதை ... உருங

உச. ஆபுத்திரனுடைடைந்தகாதை ... உசுரு

உரு. ஆபுத்திரனெடு மணிபல்லவமடைந்தகாதை ... உளசூ

உசூ. வஞ்சிமாநகர்புக்ககாதை ... உகூங

உள. சமயக்கணக்கர்தந்திறங்கேட்டகாதை ... ங0ங

உஅ. கச்சிமாநகர்புக்ககாதை ... ங உசூ

உகூ. தவத்திறம்பூண்டி தருமங்கேட்டகாதை ... ங சசூ

ங0. பவத்திறமறுகெனப்பாவைநோற்றகாதை ... ங சூருு

அ. மணிமேகலைப்பாட்டு முதற்குறிப்பகராதி ... ஈகூக

கூ. மணிமேகலைப் பிரயோகவிளக்கம் ஈகூஉ - ஈகூச

கo. மணிமேகலையில் வந்துள்ள வேறுகதைகள் ஈகூரு - ஈகூசூ

கக. புத்ததேவனுடைய பெயர்கள் ஈகூஎ - ஈகூஅ

கஉ. புத்தர்கோள்கைகளைப்பற்றிய மறுப்புக்கள் ஈகூகூ - சoo

கங. அரும்பதவுரையிலுள்ள உதாரணச்செய்யுளகராதி சo க-சoசூ

கச. அரும்பதமுதலியவற்றின் அகராதி சக0 - ருஉஎ

கரு. பிழையுந் திருத்தமும் ருஉஉ

இப்பதிப்பில் எடுத்துக்காட்டிய நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி.

அகத் - அகத்திணையியல்.
அகநா - அகநானூறு.
அடியார் - அடியார்க்குநல்லாருரை.
அவ - அவதாரிகை.
அளவை - அளவையிலக்கணம்.
அறநெறி - அறநெறிச்சாரம்.
ஆசார - ஆசாரக்கோவை.
ஆசீவக - ஆசீவகவாதச்சருக்கம்.
இலிங்க - இலிங்கபுராணம்.
இறை - இறையனாரகப்பொருள்.
உத்தர - உத்தரகாண்டம்.
உ.ம் - உதாரணம்.
உயிர் - உயிர்மயங்கியல்.
உரி - உரிச்சொல்லியல்.
உழிஞை - உழிஞைப்படலம்.
ஐங்குறு - ஐங்குறுநூறு.
கடவுள் - கடவுள்வாழ்த்து.
கம்ப - கம்பராமாயணம்.
கல் - கல்லாடம், கல்யாணச்சருக்கம்.
கலி - கலித்தொகை.
கலிங்க - கலிங்கத்துப்பரணி.
காஞ்சி - காஞ்சிப்படலம்.
கிளவி - கிளவியாக்கம். [கம்.
குண்டல - குண்டலகேசிவாதச்சருக்
குமார - குமாரகாலச்சருக்கம்.
குறள் - திருக்குறள்.
குறிஞ்சி - குறிஞ்சிப்பாட்டு.
குறுந் - குறுந்தொகை.
கோயில் - கோயிற்பாடியது.
சதகம் - திருச்சதகம். [ருரை.
சமய - சமயதிவாகரவாமனமுனிவ
சாங்கிய - சாங்கியவாதச்சருக்கம்.
சிலப் - சிலப்பதிகாரம்.
சிவ. சித்தி - சிவஞானசித்தியார்.
சிறுபாண் - சிறுபாணாற்றுப்படை.
சீவக - சீவகசிந்தாமணி.
சுயம் - சுயம்வரகாண்டம்.
சூ - சூத்திரம்.
சூடாமணி - சூடாமணிநிகண்டு.
சூளா - சூளாமணி.
செய் - செயுளியல்.
ஞானப் - ஞானப்பிரகாசருரை.
தக்க - தக்கயாகப்பரணி.
தஞ்சை - தஞ்சைவாணன்கோவை.
தரும - தருமவுரைச்சருக்கம். [யார்.
திருச்சிற் - திருச்சிற்றம்பலக்கோவை
திருவா - திருவாவுக்கரசுநாயனார்
திருவா - திருவாசகம். [புராணம்.
திவ் - திவ்யப்பிரபந்தம்.
தொகை - தொகைமரபு.
தொல - தொல்காப்பியம்.
நகர - நகரப்படலம்.
நள - நளவெண்பா.
நன் - நன்னூல்.
நன். வி - நன்னூல விருத்தியுரை.
நாடு - நாட்டுப்படலம்.
நாலடி - நாலடியார்.
நீல, நீலகேசி - நீலகேசிவிருத்தி.
நெடுநல் - நெடுநல்வாடை.
ப - பக்கம்.
பட்டினப் - பட்டினப்பாலை.
பதி - பதிகம்.
பதிற் - பதிற்றுப்பத்து.
பரி - பரிபாடல், பரிமேலழகருரை.
பழ - பழமொழி.
பி.ம் - பிரதிபேதம்.

புத்த, புத்தவாத - புத்தவாதச்சருக்
பு.வெ-புறப்பொருள்வெண்பா [கம்.
புறத் - புறத்திணையியல். [மாலை.
புறநா - புறநானூறு.
பூத - பூதவாதச்சருக்கம்.
பெரிய - பெரியபுராணம். [மொழி.
பெரியாழ்வார் - பெரியாழ்வார் திரு
பெருங் - பெருங்கதை. [படை.
பெரும்பாண் - பெரும்பாணாற்றுப்
பேர் - பேராசிரியர், பேராசிரியம்.
பொதுவியல் - பொதுவியற்படலம்.
பொரு - பொருநராற்றுப்படை.
மணி - மணிமேகலை.
மதுரை - மதுரைக்காஞ்சி.
மயிலை - மயிலைநாதருரை.
மரபு - மரபியல்.
மலைபடு - மலைபடுகடாம்.
மு - முழுவதும் ஒத்தது.
முரு - திருமுருகாற்றுப்படை.
முல்லை - முல்லைப்பாட்டு.
மூத்ததிருப் - மூத்ததிருப்பதிகம்.
மேருமந்தர - மேருமந்தரபுராணம்.
மேற் - மேற்கோள்.
மொக்கல-மொக்கலவாதச்சருக்கம்.
யாப்பு - யாப்புப்படலம்.
வச்சிராயுத - வச்சிராயுதச்சருக்கம்.
வஞ்சி - வஞ்சிப்படலம்.
வரை - வரைக்காட்சிப்படலம்.
வீர - வீரசோழியம்.
வேத - வேதவாதச்சருக்கம்.
வேற் - வேற்றுமையியல்.
வைசயந்தன்முத்தி - வைசயந்தன்
முத்திச்சருக்கம். [கம்.
வைசேடிக - வைசேடிகவாதச்சருக்

கணபதி துணை.

இரண்டாம் பதிப்பின் முகவுரை.

"ஆதியிற் தமிழ்நூ லகத்தியற் குணர்த்திய
மாதொரு பாகனே வழுத்து தும்ம
போதமெய்ஞ் ஞான நலம்பெறற் பொருட்டே."

இந்நூலும் அரும்பதவுரை முதலியனவும் 1898-ஆம் வருஷத்தில் முதன்முறை பதிப்பிக்கப்பெற்று நிறைவேறின; அப்பால் பல இடங்களில் தேடிப்பார்த்தும் உரையுள்ளபிரதிகிடைக்கவில்லை. மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் புத்தகசாலைப்பிரதியொன்றும், சென்னை, ராயபேட்டையிலுள்ள ம-ரா-ரா-ஸ்ரீ பார்சுவநாத நயினாரவர்கள் பிரதியொன்றும் மூலம்மட்டும் உள்ளனவாகக்கிடைத்தன. அவற்றாலும், இதுகாறும் செய்துவந்த பழைய தமிழ்நூலாராய்ச்சியாலும் இப்போது இதன் மூலம் முதலியன அடைந்த திருத்தங்கள் பல. முன்பு இந்நூலிற் பொருள் விளங்காமலிருந்த இடங்கள்சில விளங்கின.

இப்புத்தகத்துக்கு அங்கமாக முற்பதிப்பில் இதனோடு சேர்த்துப் பதிப்பிக்கப்பெற்ற புத்தசரித்திரம், பௌத்ததருமம், பௌத்தசங்கம் என்னும் பகுதி இப்போது யாவருக்கும் தெரிந்திருக்குமாதலாலும், தனிப்புத்தகமாக என்னாற் பதிப்பிக்கப் பெற்றிருத்தலாலும் இதிற் சேர்க்கப்படவில்லை.

முற்பதிப்பில் 'என' என்றுபதிப்பிக்கப் பெற்றிருந்த ஒவ்வொரு செய்யுளின் இறுதியையும் இப்பதிப்பில் 'என்' என்றே பதிப்பிக்கப்பட்டுள்ளது. பிரதிபேதங்கள் அவ்வப்பக்கங்களின் இறுதியில் தனியே காட்டப்பெற்றுள்ளன.

முன்பு தனித்தனியே பதிப்பிக்கப்பெற்றிருந்த அபிதான விளக்கம், அரும்பதவகராதி, அருந்தொடரகராதி, மூலவிஷயசூசிகை, அரும்பதவுரையில் அடங்கியவை, தமிழ் நூற்பெயர்கள் முதலியன என்னும் பகுதிகள் சில அன்பர்கள் விரும்பியபடி ஒருங்கே தொகுக்கப்பெற்று ஒரே அகராதியாக 'அரும்பத முதலியவற்றின் அகராதி' என்னும் பெயருடன் இப்போது பதிப்பிக்கப்பெற்றுள்ளன; மூலம் முதலியவற்றிற் காணப்பட்டு முன்பு பதிப்பிக்கப் படாமலிருந்த

அரும்பதங்களும், அருந்தொடர்களும், சிலவற்றின் பொருளும் உவமைகளும், பழைய செய்திகளும், வழக்கங்களும், பிறவும் இவ் வகராதியிற் காணலாகும்.

நூற்பரிசோதனையின் பொருட்டு என்னுடனிருந்து உதவி செய்பவர்கள் விஷயத்தில் நான் கவலையுறுவண்ணம் அவர்களுக்குப் பல வருடங்களாக மாசமேதனமளித்துபகரித்துவரும் ஸ்ரீ ஸேது ஸம்ஸ்தானஜமிதர்களும், மதுரைத்தமிழ்ச்சங்கத்தலைவர்களும், சென்னை சட்டரூபணசபை அங்கத்தினர்களுமான கௌரவம்பொருந்திய மஹாராஜராஜஸ்ரீ ப. இராஜராஜேசுவர ஸேதுபதிமஹாராஜா அவர்களுக்கு யான் செய்யக்கூடியது யாதுளது? ஆயினும் என் நன்றியறிவிற்கு அறிகுறியாக இப்பதிப்பை அவர்கள் பெயரால் வெளியிடலானேன்.

இவ்விரண்டாம்பதிப்பு அச்சில் இருக்குங்காலத்தில் ஒப்பு நோக்குதல் முதலிய அரிய உதவிகளைப்புரிந்துவந்த சென்னை இராசதானிக் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் மகா-ஸ்ரீ, இ. வை. அனந்தராமையரவர்களிடத்தும், மயிலாப்பூர் பி. எஸ். ஹைஸ்கூல் முதல் தமிழ்ப் பண்டிதர் சிரஞ்சீவி, ம. வே. துரைசாமி ஐயரிடத்தும், இராசாங்கத்துக் கையெழுத்துப் புத்தகசாலைத் தமிழ்ப் பண்டிதர் சிரஞ்சீவி, கோ. சேஷாத்திரி ஐயரிடத்தும் நன்றியறிவுடையேன்.

திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனகர்த்தரவர்களாகிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்களுடைய விருப்பத்தின்படி சென்ற ஒருவருஷத்துக்கு மேலாக நான் திருவாவடுதுறை முதலிய இடங்களில் அவர்களுடைய ஆதரவில் இருந்து வருதலால் என் புத்தகப் பதிப்பு வேலைகள் என் குமாரன் சிரஞ்சீவி ம. கல்யாணசுந்தரத்தால் இப்போது நடத்தப்பெற்றுவருகின்றன.

இப்பதிப்பிற்காணப்படும் பிழைகளைப் பொறுத்துக்கொள்ளும்படி விவேகிகளைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தொடங்கிய காரியம் ஒவ்வொன்றையும் இடையூறின்றி இனிது முறைவேற்றி ஊக்கமளித்துப் பாதுகாத்துவரும் தமிழ்த்தெய்வத்தை மனவாதமும் வாழ்த்துகின்றேன்.

திருவிடைமருதூர்,
27—5—1921.

இங்ஙனம்
வே. சாமிநாதையன்.

கணபதி துணை.

முதற்பதிப்பின் முகவுரை.

"தன்றே ணன்கெ னொன்று கைம்மிகூஉங்
கன்றுவளர் பெருங்கா டாயிறு
மொன்றுபெரி தறந்தன் றரியவென் னேந்கே."

உலகமார் பன்னூற் றிலகமா யிலகி
நவையறு மொண்பொன் னவைபுணர்ந் திலைமைத்
திரட்டுறு * மைந்து பொருட்டொடர் நிலைகளு
ளமிழ்திற் சிதைத்த தமிழ்மறு மடந்தை
யணிமே கலையா மணிமே கலைதான்,
நச்சும் பெருமை முச்சங் கத்துட்
கறையிடற் றிறைவ னிறையனு னெனப்பெயர்
வாய்ந்தே † புலம்பல வாய்ந்த சங்கத்
தொல்லிசை பலவுறு நல்லிசைப் புலவருட்
சிலமார் மதுரைக் கூலவா ணிகனீத்தலேச்சாத்தனுமென்னும்

புலவர்பெருமானால் அருளிச்செய்யப்பட்டது; இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், அடியார்க்குநல்லார், சமயதிவாகரவாமனமுனிவர், இலக்கணவிளக்கவுரையாசிரியர், திருவோற்றியூர் ஞானப்பிரகாசர், மயிலைநாதர், சங்கரநமச்சிவாயர்முதலிய உரையாசிரியர்களால் எடுத்துக்காட்டப்பட்டுள்ள பிரமாணநூல்களுள் ஒன்று. தன்மைநவிற்சியணியும் பாவிகவணியும் இன்னோரன்ன பிறவணிகளுமே ஆங்காங்கு அமைந்திருத்தலால், தன்னுட் கூறப்பட்டுள்ள மலை கடல் தீவு வனம் நாடு நகர் ஆறுமுதலியவற்றையும் பிறவற்றையும் நேரில் அறிந்துகொண்டாற்போலப் படிப்பவர்களுடைய மனத்திற்கு நன்றாகப் புலப்படச்செய்யும் நலப்பாடுற்றது; இக்கா

* ஐந்து பொருட்டொடர்நிலைகளாவன:—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதியென்பன.

† புலம் - நூல்; இதனை, "புலந்தொகுத் தோனே" என்னுந்தொல்காப்பியப்பாயிரத்தாலுணர்க.

லத்தில் வேறொருவாற்றலும் விளங்காதனவாகிய சில * தெய்வங்களுடைய பெயர்களையும், அத்தெய்வங்களை வழிபடுமுறைமையையும், சிலசாதியாரையும், அவர்களுடைய நடை முதலியவற்றையும், சில நகரங்கள் தீவுகள் மலைகள் வனங்கள் கோட்டங்கள் அறச்சாலைகள் மன்றங்கள் முதலியவற்றையும், அவைகள் இன்ன இன்ன வண்ணமாக இருந்தனவென்பதையும், இன்ன இன்ன சமயங்கள் இன்ன இன்ன இடத்திற் பரவியிருந்தனவென்பதையும், அவற்றின் இலக்கணங்களையும், சில அரசர் சில முனிவர் முதலியோருடைய சரித்திரங்களையும், பிறவற்றையும் இந்நூலில் விளங்க அறிந்துகொள்ளலாம்; இதில் சொல்நுட்பம் பொருள்நுட்பங்கள் நூலளவேயாகிய நுண்ணறிவிற்கேற்ப எவ்விடத்துங்காணப்படுமென்று கூறுவர்; இதனை,

> "மந்தா கினியணி வேணிப் பிரான்வெங்கை மன்னவனீ
> கொந்தார் குழன்மணி மேகலை நானுட்பங் கொள்வதெங்ஙன்
> சிந்தா மணியுந் திருக்கோ வையுமெழு திக்கொளினு
> நந்தா வுரையை யெழுதலெவ் வாறு நவின்றருளே"

என்று கவிஞர் பெருமானுகிய துறைமங்கலம் ஸ்ரீ சிவப்பிரகாச முனிவர் அருளிச்செய்த வேங்கைக்கோவைச் செய்யுளாலுணர்க.

சிலப்பதிகாரக்கதைத்தலைவனுன கோவலன்மகளாகிய மணிமேகலையென்பவளுடைய சரித்திரமாதலின், இந்நூல் சிலப்பதிகாரத்தோடு கதைத்தொடர்புடையது.

இதில், சோழவளநாட்டிள்ள காவிரிப்பூம்பட்டினத்தில் பெருங்குடிவாணிகர்மரபில் உதித்த கோவலனுக்கு மாதவியென்னும் நாடகக்கணிகையிடந்தோன்றிய மணிமேகலையென்பவள், தன்னுடைய தாய் கோவலன் மதுரையில் வெட்டுண்டிறந்ததுகேட்டுப் பரத்தைமைத்தொழிலை வெறுத்துப் பௌத்தமுனிவராகிய அறவணவடிகளைச் சரணடைந்து வாய்மைநான்கும் சீலமைந்தும் உபதேசிக்கப்பெற்றுப் பௌத்தசங்கத்திருத்தலையறிந்து, அவளோடுபழகி, சிறுபிராயத்திலேதானே பௌத்ததருமங்களை அறிதற்கேற்ற உணர்ச்சியுற்று, ஒருநாள், தாயின்கட்டளைப்படி சுதமதியுடன் பூக்கொய்தற்கு

* இத்தெய்வங்கள் முதலியவற்றின் பெயர்கள் அகராதியாக xxiii-ஆம் பக்கத்திற் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

மலர்வனஞ்சென்று, தன்னே விரும்பிவந்த உதயகுமரனுக்கு அஞ்சி அங்குள்ள பளிக்கறையில் ஒளித்திருந்து, அவன் போன பின்பு வெளியேவந்து, தன் குலதேவதையாகிய மணிமேகலா தெய்வத்தால் மணிபல்லவத்தீவிற் கொண்டுபோகப்பட்டு, அத்தீவி லுள்ள புத்தபீடிகைக்காட்சியால் தன்னுடைய முற்பிறப்பில் நிகழ் ந்த செய்திகளையறிந்து, அப்பால் அத்தெய்வம் அறிவுறுத்தியமூன்று மந்திரங்களையுணர்ந்து, மூற்பிறப்பிற் கணவனுயிருந்த இராகுல னென்பவனே இப்பிறப்பில் உதயகுமரனுகவந்தானென்று அத்தெய் வங்கூறக்கேட்டு, அப்பீடிகையின்காவற்றெய்வமாகிய தீவதிலகையி னுதவியாற் கோமுகியென்னும் பொய்கையையடைந்து, அதிலி ருந்த அமுதசுரபியென்னும் அக்ஷயபாத்திரம் தன்கையில் வரப் பெற்று, பின்பு காவிரிப்பூம்பட்டினத்தைச்சார்ந்து, அறவணவடி களே யடைந்து, ஆபுத்திரன்வரலாற்றையும் அவனுக்கு மதுரையிற் சிந்தாதேவி அமுதசுரபியைக் கொடுத்ததையும் பசித்தவயிர்களுக்கு உணவளித்தலே எவ்வாவற்றினும் மேலான தருமமென்பதையும் அவர்கூறக்கேட்டு, அவர்கூறியவாறே உணவளித்தற்பொருட்டு அமுதசுரபியைக் கையிலேந்திக்கொண்டு வீதியிற்சென்று, சிறந்த பத்தினியாகிய ஆதிரையென்பவள் முதலிற் பிச்சையிடப்பெற்று, காயசண்டிகையென்னும் வித்தியாதரமங்கையின் தீராப்பசியை அப்பாத்திரத்திலிருந்தெடுத்துதவிய ஒருபிடியமுதாற்போக்கி, அப் பாத்திரத்தில் மேன்மேலும் அமுது வளரப்பெற்று, அங்ஙகரத் துள்ள உலகவறவியென்னுமம்பலத்தை யடைந்து, அங்கேவந்த எல்லாவுயிர்களின் பசியையும்போக்கி, அவ்வறஞ்செய்தலேயே நித்த நியமமாகப் பூண்டு, தன்னே விரும்பிவந்த உதயகுமரன் அறிந்து கொள்ளாவண்ணம் மேற்கூறிய காயசண்டிகையின் வடிவங் கொண்டு அங்ஙகரத்துள்ள சிறைச்சாலேயையடைந்து, அங்கே பசித் திருப்பவர்களுக்கெல்லாம் உணவளித்து அதனே அறச்சாலேயாக்கி, தன்னே மீட்டும் விடாது தொடர்ந்த உதயகுமரன் காயசண்டிகை யின் கணவனுல் வெட்டுண்டு வீழ்ந்ததுகண்டு மனங்கலங்கிப் பின்பு சுந்திற்பாவைத்தெய்வத்தின் மொழிகளால் தேறுதலுற்று, உதய குமரனுடைய தந்தையாகிய மாவண்கிள்ளியாற் சிறையில்வைக்கப் பட்டு இராசமாதேவியின் முயற்சியால் அச்சிறையினின்று நீங்கி, நாகபுரத்தையடைந்து அதன்றலைவனன புண்ணியராசனேடு

மணிபல்லவஞ்சார்ந்து புத்தபீடிகையைக்காட்டி அதனால் அவனது பழம்பிறப்பை அவனுக்கறிவித்து, காவிரிப்பூம்பட்டினம் கடல் கொள்ளப்பட்டசெய்தியைத் தீவதிலகையாலறிந்துகொண்டு, அப் பாற்சென்று வஞ்சிநகர்ப்புறத்தேயுள்ள பத்தினிக்கடவுளாகிய கண் ணகியின் கோயிலையடைந்து தரிசித்து, தன்னுடைய எதிர்காலச் செய்திகளைக் கண்ணகித்தெய்வம் கூற அறிந்துசென்று, ஆங் கிருந்த சமயவாதிகள் பலரையுஞ்சார்ந்து அவரவர்களுடைய கொள் கைகளைத் தனித்தனியேவினவியுணர்ந்து, அங்ஙகரில் தவம்புரிந்து கொண்டிருந்த மாசாத்துவானைக்கண்டு அவன் மொழிந்தசெய்தி கள் பலவற்றையுங் கேட்டு, அவன்கூறியவாறு காஞ்சிநகரம்போய், அங்ஙகரிற் பசியால்வருந்திவாடியஎல்லாவுயிர்களுக்கும்உணவளித்து, அங்கேவந்த அறவணவடிகளைத் தரிசித்து, அவர் உபதேசித்த அற மொழிகளைக்கேட்டு, பின் முத்திபெறுதற்பொருட்டு அங்ஙகரிலேயே தவஞ்செய்துகொண்டிருந்தாளென்னுங்கதை விரித்துக் கூறப்படும்.

இந்நூல், பௌத்தசமயச்சார்பினளாகியமணிமேகலையின்சரித் திரமாதலின், இதில் அச்சமயக்கொள்கைகளைப் பரக்கக் காணலாம்.

பற்பல தருமங்கள் இதிற் சொல்லப்பட்டுள்ளன; அவற்றுள் மிகுதியாகக்காணப்படுவது ஒருவன் மனமொழிமெய்கள் தூயனாகி எல்லாவுயிர்களிடத்தும் எப்பொழுதும் அருளுடையனாதல்வேண்டு மென்பதே.

மணிமேகலையென்பவளுடைய சரித்திரத்தை விரித்துக்கூறு தலின், இஃது இப்பெயர் பெற்றதென்பர். நீலகேசி, புத்தவாதச் சருக்கத்தில், "குயலாகுயலம்" என்னுஞ்செய்யுளையில், * "தீவி னையென்பதி.....பிரமரு மாகி என்பது மணிமேகலை துறவாதலின், இதனால், ஸம்ஸ்காரமறிந்துகொள்க" எனச் சமய திவாகரவாமன முனிவரும், சிவஞானசித்தியார் பரபக்கத்திற் சௌத் திராந்திகன்மதத்துள்ள "ஒங்கிய வுருவம்" என்னுந் திருவிருத்தத் துரையில், * "தீவினையென்பதி.....பிரமரு மாகி என்பது மணிமேகலை துறவாதலின், இதனால் ஸம்ஸ்காரமறிந்து கொள்க" எனத் திருவோற்றியூர் ஞானப்பிரகாசரும் எழுதியிருத்த லால், இந்நூல், மணிமேகலைதுறவென்றும் அக்காலத்தில் வழங்கப்

* மணிமேகலை, உரை: கஉங - கங்கூ; ங0: சுரு - அ0.

பட்டுவந்ததென்று தெரிகின்றது; "மணிமே கலைதுற, வாரைம் பாட்டினு ளறியவைத்தனன்" என்று பதிகத்திறுதியிற் கூறப்பட் டிருத்தலும் இதற்கு இப்பெயருண்டென்பதை நன்குபுலப்படுத் தும்.

இந்நூல், அம்மைமுதலாகிய வனப்பெட்டினுள் இயைபின் பாற்படும்; தொல்காப்பியச் செய்யுளியலின்கண்ணே, 'அம்மை முத லியவனப்பெட்டும் தொடர்நிலைச்செய்யுட்கிலக்கணம்' என்று கூறு கின்றுழி, * "ஞகாரை முதலா ளகார வீற்றுப், புள்ளி யிறுதி யியைபெனப் படுமே" என்னுஞ் சூத்திரவுரையில், ஞணநமன யரலவழளவென்னும் பதினெருபுள்ளியுள் ஒன்றனே ஈறாக வமைத்துச் செய்யுளைப் பொருட்டொடராகவும் சொற்றொடராக வுஞ்செய்வது இயைபெனப்படும்; னகாரவீற்றுனிற்றுப் பொரு ளுமியைந்து சொல்லுமியைந்துவந்தன, சீத்தலைச்சாத்தனுரால் செய்யப்பட்ட மணிமேகலையும், கோங்குவேளிரால் செய்யப்பட்ட உதயணன்கதையும் போல்வன வென்று பேராசிரியரும் ஆசிரியர் நச்சினர்க்கினியரும் எழுதியிருத்தல்காண்க. இதனுல், மணிமேக லைச்செய்யுள் ஒவ்வொன்றும் 'என்' என னகரவொற்றீருகவே படிக்கப்படவேண்டுமென்பது அறியப்படுமாயினும், இக்காலத் தில் வழங்குதற்கேற்ப அச்செய்யுட்கள் னகர அகர வீருகவே கொள்ளப்பட்டன ; வேண்டுமேல் அவற்றை ஒற்றீருக்கிப் படித் துக்கொள்க. இந்நூலிற் சொல்லியையும் பொருளியையும் அமைந் திருத்தல் காண்க.

இதிற் கூறப்பட்டுள்ள சரித்திரம் நிகழ்ந்தகாலமும் இந்நூலா சிரியர் காலமும் ஒன்றென்றும், இஃது அவரால் தமிழிலேதான் முத லிற் பாடப்பட்டதென்றும், சிலப்பதிகாரத்தாலும் அதன் பதிகத் தொடக்கத்தில் அடியார்க்குநல்லாரெழுதிய உரைகடையாலும், இந் நூற் பதிகத்தாலும் நன்குவிளங்குகின்றமையின், இது வேறுமொழி யிலிருந்து வந்ததென்று சொல்லுவதற்கிடமில்லை.

இது, கதையைத் தொகுத்துக்கூறுவதும் பதிகமென்று வழங் கப்படுவதுமாகிய கதைபொதிபாட்டை முதலிற்பெற்று, விழா வறைகாதைமுதற் பவத்திறமறுகெனப் பாவைநோற்றகாதை

* தொல்காப்பியம், செய்யுளியல், உசo.

யிறுதியாகவுள்ள மூப்பதுபகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது ; காதை- பாட்டு ; நீலகேசி, குண்டலகேசிவாதச்சருக்கம், உஎ - ஆம் செய்யுளுரையில், "முன்ருன் பெருமைக்கணின்ருன் என்னுங் காதையை அனுவதித்தவாறு" எனவும், உஅ - ஆம் செய்யுளுரையில், "பிடகம் என்னுங்காதை சொன்னவாறு" எனவும், மொக்கலவாதச் சருக்கம், உங - ஆம் செய்யுளுரையில், "தன்புறத்தஎன்னுங்காதை சொல்லப்பட்டது" எனவும், சப - ஆம் செய்யுளுரையில், "எழும் பைத்தி என்னுங்காதை" எனவும், சக-ஆம்செய்யுளுரையில் "காலி ஞற்சமத்துய்ப்பான் என்னுங்காதை" எனவும், சஉ - ஆம் செய்யுளுரையில், "மக்கட்பண்பழியாது என்னுங்காதை" எனவும், அந்நூலுரையாசிரியர் எழுதியிருத்தலால், காதையென்பதற்குப் பாட்டென்று பொருள்கொள்ளுதல் தணியப்படும் ; "ஆறைம் பாட்டினு ளறியவைத்தனன்" எனப் பதிகத்திறுதியிற் கூறப்பட்டிருத்தலும், மிதிலைப்பட்டித் திருச்சிற்றம்பலக்கவிராயரவர்கள் வீட்டிற் கிடைத்தபிரதியில் இந்நூற்பகுதிகளின் பெயர்கள்யாவும் பாட்டென்றே காணப்பட்டிருத்தலும் இதனை வற்புறுத்தும்; காதையென்பதை இசையோடு பாடப்படுவதாகிய செய்யுளென்று பொருள்படுகிற 'காதா' (गाथा) என்னும் வடசொற்சிதைவென்று கொண்டால் யாதோரிழுக்குமின்றென்று வடமொழியாளர்கூறுவர் ; இது நிற்க;

சிலவருடங்களுக்குமுன் பழைய தமிழ்ப்புத்தகங்களைத் தேடும் வண்ணம் இத்தமிழ்நாட்டினுள்ளே செல்லுதற்குரிய பல ஊர்களுக்குச் சென்று அங்கங்குள்ள பரம்பரைத் தமிழ்ப்பண்டிதர்களுடைய வீடுகள்தோறும் உள்ளனவாகிய கையெழுத்துப்பிரதிகளைப் பரிசோதித்துப் பார்த்தகாலங்களிலெல்லாம் எனக்கு மணிமேகலைமூலப்பிரதிகள் கிடைத்தனவேயன்றி உரைப்பிரதி யாண்டும் கிடைத்திலது. சென்னை தஞ்சை முதலிய நகரங்களிலுள்ள பழைய கையெழுத்துப் புத்தகசாலைகளும் பார்க்கப்பட்டன ; அங்கும் கிடைக்கவில்லை. வெளிநாட்டிலுள்ளநண்பர்கள் பலரைப் பத்திரிகைவாயிலாகஇதைப் பற்றி வினவினேன் ; அங்ஙனம் வினவப் பட்டவர்களுள், இப் பொழுது கொழும்பிலிருக்கும் யாழ்ப்பாணத்துநல்லூர் ம-ரா-ள-ஸ்ரீ சிற். கைலாசபிள்ளையவர்கள் தமதுகையாலெழுதிய மூலப்பிரதி யொன்றை அன்புடன் அனுப்பினர்கள்; பின்பு பாரிஸ்நகரத்துள்ள புரொபஸர் ஜூலியன்வின்ஸன் என்பவர் 'இந்நகரத்துக் கையெழுத்

துப்புத்தகசாலையில் மணிமேகலைமூலப்பிரதி ஒன்றேயுள்ளது' என்றுதெரிவித்து மாதிரிகைக்காக அதிலிருந்து பதிகமட்டும்எழுதி யனுப்பினர். மற்றவர்கள் 'யாதொன்றுங் கிடைக்கவில்லை' என்று விடையளித்துவிட்டார்கள். கிடைத்தபிரதிகளை வைத்துக்கொண்டு ஒப்புநோக்கி ஆராய்ந்துவந்தபொழுது பிரதிகளில் எழுதுவோர்கள் இயல்பாகவேசெய்வித்திருந்த வேறுபாடுகளாலும், இது பௌத்த சமயக்காப்பியமாதலால் அச்சமயக்கொள்கைகளைக்கூறும்பாகங்களை யெல்லாம் எளிதிற்றெரிந்துகொள்ளல் கூடாமையாலும், அவற்றை ஒழுங்காகப் புலப்படுத்தும் பழைய * தமிழ்ப்பௌத்தநூல்கள் பண்டைக்காலத்தில் இருந்தும் பாதுகாப்போரின்மையால்இக்காலத் தில்இறந்தொழிந்தமையாலும், அக்கொள்கைகளை விளங்கச்சொல்லு வோர் அகப்படாமையாலும், பிழைகளைப் பிழைகளென்று நிச்சயித் துக்களைந்து திருத்தமானபாடங்களைத் தெரிந்துகொள்ளுதற்கு எடுத்துக்கொண்டமுயற்சியும் கழித்தகாலமும் அடைந்தவருத்தமும் அளவுபடுவனவல்ல.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்முதலிய சைவசமயாசாரியர் கள் அருளிச்செய்த தேவாரங்களிலுள்ள பௌத்தசமயமறுப்புக் களும், பெரியபுராணமுதலியவற்றுட் கூறப்பட்டுள்ள அச்சமயக் கொள்கைகளும் மறுப்பும், சிவஞானசித்தியார் பரபக்கத்துள்ள சௌத்திராந்திகன்மதமுதலியனவும், அவற்றிற்குத் திருவொற்றியூர் ஞானப்பிரகாசசெழுதியவுரையும், அவ்வுரையிலுள்ள சில உதா ரணச்செய்யுட்களும், மறுப்புக்களும், நீலகேசியும் அதனுரையும், அவ்வுரையில் மேற்கோள்களாக எடுத்துக்காட்டப்பட்டுள்ள சில கவிகளும், வீரசோழியம் யாப்புப்படலவுரையிலுள்ள சிலவுதா ரணப் பாடல்களும், இன்னுஞ்சிலவும் பௌத்தசமயமரபுகளிற் சிலவற்றையும் அச்சமயத்தார் பேசிவந்த சில தமிழ்ப்பரிபா ஷைகளையும் பிறவற்றையும்ஒருவாறு விளங்கச்செய்தன ; செய்தும் முன்பிருந்த ஐயங்கள் முற்றும் தீராமையாற் பின்னும் அறிந்தோர்

* அடியிலுள்ளவை பண்டைக்காலத்துப் பௌத்தநூல்களென்று சில காலுக்குமுன்னேதான் தெரிந்தது; அவை குண்டலகேசி, சித்தாந்தத் தொகை, திருப்பதிகம், விம்பசாரகதை யென்பன; அவற்றிலிருந்து சில பாடல்களே நீலகேசியுரை முதலியவற்றில் தாம்பெயர்களோடு எழுதப்பட் டுள்ளன.

பாற் சென்றும் தாரதேசத்தார்க்குக் கடிதமெழுதியும் விசாரித்தலேயே மேற்கொண்டிருந்தேன்.

ஆராய்ச்சிசெய்யத் தொடங்கிப் பலவருடங்களாகியும் இந்நூலை முன்னமே வெளிப்படுத்தாமைக்குக் காரணம் இதுவே.

இப்படி இருக்கையில், ஸம்ஸ்கிருததேசத்துவித்தைகளிலும் ஆங்கிலேய வித்தைகளிலும் மிகப்பயிற்சியடைந்த விளங்கும் மஹோர், ஸ்ரீமத் உ. வே. *அரங்காசாரியரவர்கள், எம். ஏ., பௌத்தசமய நூல்களிலும் பாண்டித்தியமுள்ளவர்களென்பதை அறிந்துகொண்டு உரியகாலங்களில் அவர்களிடத்துச் சென்று விஜ்ஞாபிக்கதேன்; வருகையில், ஒவ்வோரமயத்தும் தடையின்றி உடனுடன் அவர்கள் கூறியவிடைகளால் அதற்குமுன்பு எனக்கிருந்த ஐயங்களிற்பெரும் பாலன நீங்கின; நேகவே இந்நூலைப்பரிசோதித்தலில் என் மனம் ஊக்கம்பெற்றது. அவர்களுடையபேருதவி இல்லையாயின், மணிமேகலையில்வந்துள்ள துடிதலோகம், பாரமிதை, அரூபப்பிரமர், உரூபப்பிரமர்முதலியசொற்களுக்குங்கூட உள்ளவாறே பொருள்கொள்ளுதல் எனக்கு மிகவரிதாகும்; தமக்குரிய அரியவேலைகள் அதேகமிருந்தும் பழைய இத்தமிழ்நூல் வெளியேவந்து உலாவுதலேயே பயனகக் கருதி, யான் செல்லுங்காலங்களோறும் சிறிதும் சலிப்பின்றி அவர்கள் செய்துவந்தபேருதவி ஒருபொழுதும் மறக்கற்பாலதன்று; அம்மஹோபகாரிவிஷயத்தில் இத்தமிழ்நாட்டினேமாகிய நாமெல்லாம் நன்றிபாராட்டுதற்கு உரியவர்களாக இருக்கிறோம்.

எவ்விடத்தும் இந்நூலுக்கு உரையகப்படாமையாலும், உரைமுன்பு உண்டென்பது ஒருவாற்றலும் விளங்காமையாலும் இனி மூலத்தைமட்டுமாவது வெளிப்படுத்தவேண்டுமென்று நிச்சயித்துப் பதிப்பிக்கத்தொடங்கியபொழுது, தமிழ்ப்பாஷாபிமானிகளாகிய அன்பர்களிற் சிலர், 'உரையெழுதியே இதனை வெளிப்படுத்தவேண்டும்' என்று வற்புறுத்திக்கூறினமையின், அவர்கள் சொல்லை மறுத்தற்கஞ்சி, இது புலவர்நிலகர்கள் செய்தற்குரிய அரிய காரியமென்றுகருதாமல், †"ஆங்கவன் புகழ்ந்த நாட்டை யன்பெனு நறவ மாந்தி, மூங்கையான் பேசலுற்று னென்னையான் மொழிய லுற்

* படித்தவர்களுக்கு [illegible] ஆங்கிய இவ்வருங்கலை விநோதர்களுடைய பிரியமெத்த வருத்தத்தை விளக்கின்றது.

† கம்பராமாயணம், நாட்டுப்படலம், க.

றேன்" என்று பெரியோர் கூறியதற்கு இலக்கியமாக, தக்கநூலா ராய்ச்சியும் எண்ணியவற்றைச் சுவைபயக்கும்படி கல்லாடையில் விளங்கவெழுதும்வன்மையுமில்லாத யான், "மணிமேகலை நூனுட்பங்கொள்வதெங்ஙன்" என்று ஆன்றோரால் நன்குபாராட் டப்பட்டுள்ள இந்நூற்கு அரும்பதவுரையென்ற ஏதோவொன்றை எழுதத்தொடங்கினேன்.

மொழிகளுட் பெரும்பாலனவற்றிற்குப் பொருள் விளங்கிக் கிடக்கின்றமையின், அரியவற்றிற்குமட்டுமே பொருள்செய்தும், ஆங்காங்குள்ள வாக்கியங்களை ஒத்தவைகளாக இந்நூலிலும் வேறு நூலிலும் காணப்பட்டவாக்கியங்களை அவ்வவ்விடத்தில்தந்துகாட்டி அவற்றினிடங்களை உடனுடன் விளங்கச்செய்தும், பொருள்விளங் காத இடங்களில் (?) இக்கேள்விக்குறியை அமைத்தும், கையெழுத் துப் பிரதிகளிற்கண்ட பாடபேதங்களை எடுத்துக்காட்டி அவற்றுள் இன்றியமையாத சிலவற்றிற்குமட்டுமேபொருளுப்புலப்படுத்தியும், எல்லாருக்கும் விளிதிற் பொருள் விளங்குதற்பொருட்டு வடசொற் களைப்பெரும்பாலும் விரவுவித்தும், சிலவற்றிற்குச் சங்கமருவிய நூல்களிலிருந்து மேற்கோள்கள் இப்பொழுது அசப்படாமையால் அவற்றைவிளக்குதற்குப் பிற்காலத்து நூல்களிலிருந்து பிரயோகங் களை எடுத்துக்காட்டியும் ஒருவாறு எழுதிமுடித்தேன்.

† "சவியுறத் தெளிந்து தண்ணெனொருமுக்கமும் பயின்று" என்று கம்பநாடரும், ‡ "செல்லாறு தோறும் பொருளாழ்ந்து தெளிந்து" எனப் பரஞ்சோதிமுனிவரும் அருளிச்செய்த திருவாக்குக்களுக்கு இலக்காகவிளங்குங் கவிகளினுடையவரிசையிலேநிற்கும் தகுதி யுள்ள பாட்டுக்களையுடைய இந்நூலுக்கு யானை அரும்பதவுரை யெழுதுபவன்? இதுசெய்தற்குத் துணிந்துவந்த எனது தறுகண்மை யைப் பொறுத்தருளும்படி இத்தமிழுலகத்தை மிகவும் வேண்டு கிறேன்.

பழையசெந்தமிழ்நூற்பரிபாலகரும் இவ்வாராய்ச்சியால் எனக்கு மனச்சோர்வுண்டாகாதவண்ணம் அடிக்கடி ஊக்கமளித்து

---

* திருவேங்கைக்கோவை.

† கம்பராமாயணம், ஆரணியகாண்டம், நிற்பதுகைப்படலம், க.

‡ திருவிளையாடற்புராணம், அன்னக்குழியிற் வைகையுமழைத்த படலம், உ.

வருபவரும் கொழும்புநகரத்துப் பிரபுசிகாமணியுமாகிய கௌரவம் பொருந்திய * பொ. குமாரசாமிமுதலியாரவர்கள், இந்நூலிற் சிற்சில விடங்களில் முன்னம் நிகழ்ந்த ஐயங்களை நீக்கிக்கொள்ளுதற் பொருட்டு யான் கேட்டவினாக்களுக்கு இலங்கையிலுள்ள பௌத்த வித்தியோதயபாடசாலைத்தலைவராகிய ஸ்ரீஸுமங்களரவர்களைக் கொண்டு விடைகளெழுதுவித்து அனுப்பிப் பேருதவிசெய்துவந் தார்கள்.

மணிமேகலையைக் கலலியின்றி ஆராய்ந்துபதிப்பித்துவெளிப் படுத்துதற்குப் பொருளுதவிசெய்த பாலவனத்தம் ஜமீன்தாரவர்க ளாகிய இராமநாதபுரம் ம-ரா-ரா-ஸ்ரீ பொ.பாண்டித்துரைத்தேவரவர் களுடைய தண்ணளியும் பெருந்தகைமையும் ஒருபொழுதும் மறக் கற்பாலனவல்ல; மிகவும் பாராட்டற்பாலன. இதைப்போன்ற எத் தனையோ பெரியகாரியங்களைத் திருத்தமாகச் செய்துநிறைவேற்றிய வர்களின் வழித்தோன்றலாய் மிக்க பாண்டித்தியமடைந்து நூலா ராய்ச்சியே இன்பத்துளின்பமெனக்கொண்டுவாழும்அப்பிரபு அவர் களுக்குப் பழையநூல்களையும் அவற்றினுரைகளையும் பதிப்பித்து வெளிப்படச்செய்து அமிழ்தினுமினிய தமிழைப் பரிபாலித்தல் இயல்பாயினும் படிப்பாரும் கேட்பாருமின்றி மூலையிலே மறைந்து கிடக்கும் அரியபெரியநூல்களைத் தேடித்தொகுத்துப் படித்துக் கொண்டு அநாதரவுற்றிருப்போர்க்கு அஃது அரியதினும்அரியதாகத் தோற்றுமென்பதுதிண்ணம்.

எனக்குண்டாகும் ஐயங்களை உடனுடன்போக்கிப் பேருதவி செய்தருளிய ஸ்ரீமத். உ. வே. மஹாமஹோபாத்தியாய பெருக வாழ்த்தான், அரங்காசாரியரவர்களுக்கும், கும்பகோணம் கவர்ன் மெண்ட்காலெஜ் ஸம்ஸ்கிருதபண்டிதரவர்களாகிய திருமலை ஈச்சம் பாடி ஸ்ரீமத். உ. வே. ஸ்ரீநிவாஸாசாரியரவர்களுக்கும் என்னுடைய வந்தனத்தை நன்றியறிவுடன் ஸமர்ப்பிக்கின்றேன்.

சென்னைக்குச் செல்லுந்தோறும்யாதொருகவலையுமின்றியிருந்து நூலாராய்ச்சிசெய்யும்படி எழும்பூரில் தமது அழகியமாளிகையில்

* இவர்கள் காலஞ்சென்றுவிட்டார்கள்; ஆயினும், இவர்களைப்போலவே இவர்களுடைய குமாரர் ஸ்ரீமான் டாக்டர் கு. ஸ்ரீ காந்தமுதலியார் அவர்கள் நூலாராய்ச்சி விஷயத்தில் எனக்கு மிக்க ஊக்கமளித்து வருகிறார்கள்.

எனக்கு இடந்தந்து ஊக்கமளித்து அன்புடன் ஆதரித்துவருகின்ற வர்களாகிய ஹைகோர்ட்டு வக்கீல், ஸ்ரீமத். உ. வே.கே. இராஜகோ பாலாசாரியரவர்களுடையபெருந்தகைமை மிகப் பாராட்டற்பாலது.

சிவகங்கையைச்சார்ந்த சிறுவயல் ஜமீன்தாரவர்களாகிய ம-ரா-ரா-ஸ்ரீ முத்துராமலிங்கத்தேவரவர்கள், எனது அன்பரும் பழைய தமிழ்நூலாராய்ச்சியிற் கூர்த்த அறிவினரும், தமது வித்து வானுமாகிய திருமானூர் ம-ரா-ரா-ஸ்ரீ கிருஷ்ணையரவர்களுக்கு மாதவேதனமளித்து வேண்டியகாலங்களிலெல்லாம் அவர்களே அனுப்பிப் பேருதவிசெய்துவந்தார்கள்; இவ்வகையான உதவிசெய் தல் மிகச் சிறந்ததென்பது யாவருக்கும் தெரிந்ததே.

இந்நூலை ஒப்புநோக்கிவந்தபொழுது ஏட்டுப்பிரதிகளை வைத் துக்கொண்டு பலமுறைபடித்து முதலில் அன்புடன் உதவிசெய்த வர்கள்:—கும்பகோணம் பேட்டைத்தெரு, ம-ரா-ரா-ஸ்ரீ தியாகராஜ பண்டாரம்; திருப்பெருந்துறை, ம-ரா-ரா-ஸ்ரீ பொன்னுசாமிபிள்ளை.

தங்களுக்கு அவகாசமுள்ளகாலங்களிலெல்லாம்வந்து உட னிருந்து இப்புத்தகவிஷயத்தில் எல்லாவுதவியும் அன்புடன் செய்த வர்கள்:—திருமானூர் ம-ரா-ரா-ஸ்ரீ கிருஷ்ணையர்; மணலூர் ம-ரா-ரா-ஸ்ரீ இராமானுஜாசாரியர்; பின்னத்தூர் ம-ரா-ரா-ஸ்ரீ நாராயணஸாமி ஐயர்; மணலூர் ம-ரா-ரா-ஸ்ரீ சந்தானமையங்கார்.

இழுக்கலுடையுழி ஊன்றுகோல்போன்ற இவர்கள் யாதொன் றையும் எதிர்பாராமற்செய்துவந்த பேருதவியை நினைக்குந்தோறும், "பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி, னன்மை கடலிற் பெரிது" என்னும் அருமைத்திருக்குறள் ஞாபகத்திற்குவந்து மனத் தைக்குளிர்விக்கின்றது.

மணிமேகலை பௌத்தசமயக்காப்பியமாதலின், படிப்பவர் களுக்கு விளங்கும்வண்ணம், அச்சமயக்கொள்கைகளை விரிவாக எழுதிச் சேர்க்க வேண்டுமென்று சிலகனவான்கள் வற்புறுத்திக் கூறினமையால் பௌத்தர்களால் மும்மணிகளென்று பாராட்டப் படும் புத்ததருமசங்கங்களின் விவரணங்களாகப் புத்தசரித்திரமும் பௌத்ததருமமும் பௌத்தசங்கமும் ஆகிய இவை, மேற்கூறிய மஹர், ஸ்ரீமத். உ. வே. அரங்காசாரியரவர்களுடைய பேருதவியா லியற்றி, இப்புத்தகத்திற்கு அங்கமாகப் பதிப்பிக்கப்பட்டன.

புத்தசரித்திரத்தை 'இங்கிலிஷ்' புஸ்தகங்களிலிருந்து தமிழில் மொழி பெயர்த்து உதவிய அன்பர்கள்—ம-ரா-ரா-ஸ்ரீ V. P. சுப்பிரமணிய முதலியார், C.B., V.C.; ம-ரா-ரா-ஸ்ரீ S. கிருஷ்ணசாமி ஐயர், B.A. B.L.; ம-ரா-ரா-ஸ்ரீ K. P. சோமசுந்தர ஐயர்; ம-ரா-ரா-ஸ்ரீ V. சுப்பிமணிய ஐயர், B.A.; ம-ரா-ஸ்ரீ M. S. நடேச ஐயர், B.A.

தான்போய் எழுதக் கூடாதகாலங்களில் மிஷ. மஞ்சூர் அரங்காசாரியரவர்களிடஞ்சென்று சென்றுபௌத்ததருமத்தையும் பௌத்த சங்கத்தையும் எழுதியளித்த அன்பர்கள் ம-ரா-ரா-ஸ்ரீ ஸு. கோபால சாமி ஐயர், B.A. முதலியவர்கள்.

பௌத்ததருமத்தையும் பௌத்தசங்கத்தையும் மஞ்சூர், அரங்காசாரியரவர்களிடஞ்சென்று படித்துக்காட்டிச் செப்பஞ்செய்து கொள்ளுதற்கு எனக்குக்காலம்வாயாமையால், அவர்கள் முதன்முறை சொல்லியெழுதுவித்தபடியே அவைகள்பதிப்பிக்கப்பட்டன.

தமக்குப் பறபல அரியகாரியங்களிருக்கவும் யான்விரும்பிய பொழுதெல்லாம் ஒப்புநோக்குதல்முதலிய பற்பலவுதவிகளை ஊக்கத்துடன் செய்துவந்த திருவல்லிக்கேணி, ஸ்ரீமத் உ. வே. வை. மு. சடகோபராமானுஜாசாரியரவர்களுடைய அன்புடைமை ஒரு பொழுதும் மறக்கறபாலதன்று.

எனக்கு இயல்பாகவுள்ள அறிவின்மையாலும், மறதியாலும், வேலை மிகுதியாலுண்டாகும் அயர்ச்சியாலும், பிறகாரணங்களாலும் இப்புத்தகத்தில் பல பிழைகள் இருத்தல்கூடும்; அவற்றைத் திருத்திப்படித்துக் கொள்ளும்படி எல்லோரையும் வேண்டுகிறேன்.

தொடங்கியகாரியத்தை நிறைவேறும்படி செய்தருளிய எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளின் இணையடிகளைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

கிடைத்த கையெழுத்துப் பிரதிகள்.

திருவாவடுதுறையாதீனத்துப்	... ...	பிரதி க.
எட்டயபுரம் பெரிய அரண்மனைப்	... ...	,, க.

இது, திருவாவடுதுறையாதீனத்து ஸ்ரீலஸ்ரீ அம்பல வாணதேசிகரவர்களால் வரவிடப்பட்டது.

சிவகங்கையைச்சார்ந்த மிதிலைப்பட்டி

ரா-ரா-ஸ்ரீ அழகியசிற்றம்பலக்கவிராயரவர்கள் ... பிரதி க.

திருமயிலையிலிருந்த திருநெல்வேலி,

,, திருவம்பலத்தின்னமுதம்பிள்ளையவர்கள் ,, க.

இந்தப் பிரதிகொடுத்தவர், திருமயிலைப் பார்த்த சாரதிக்கிராமணியென்பவர்.

,, சேலம் இராமசாமிமுதலியாரவர்கள் ... ,, க.

. [முதலிற்கிடைத்த பிரதி இதுவே.]

யாழ்ப்பாணத்துநல்லூர்,

,, சிற். கைலாசபிள்ளையவர்கள் ... ... ,, க.

ஆறுமுகமங்கலம்,

,, ஏ. சுந்தரமூர்த்திப்பிள்ளையவர்கள் ... ,, க.

S. P. G. High School, Vepery, தமிழ்ப்பண்டிதர்

,, திருமயிலை, சண்முகம்பிள்ளையவர்கள் ... ,, க.

சென்னை,

,, தி. முத்துக்குமாரசாமிமுதலியாரவர்கள் ... ,, க.

சென்னைமிருப்ப

ராசாங்கத்துக் கையெழுத்துப்புதகசாலைப் ... ,, க.

அப்பொழுதைக்கப்பொழுது புத்தகமாக்கி உடனுடன் கொடுத்துவிடப்பட்ட பிரதிகள் இரு.

இவற்றுள், மிகப்பழமையானதும் பரிசோதனைக்கு இன்றியமையாததாக இருந்ததும் மதுரைப்பிரதிக்குறைத்தும் பிறவற்றும் நிரம்பப்பாகிய பாகங்களையெல்லாம் ஒழுங்குபடச்செய்ததும் கொட்டிகிலைத்து அழகுகெட்டு மாசுபொதிந்து கிடந்த செந்தமிழ்ச்செல்வியின் மணிமேகலையை அவளணிந்துகொள்ளும்வண்ணம் செப்பஞ்செய்துகொடுத்ததும் மிதிலைப்பட்டிப்பிரதியே.

கும்பகோணம்,
ஜூலை 1898.

இங்ஙனம்
உத்தமதானபுரம், வே. சாமிநாதன்.

இந்நூலாசிரியராகிய

மதுரைக் கூலவாணிகன் சித்தலைச் சாத்தனார்

வ ர லா று.

இவர், கடைச்சங்கப்புலவர்களுள் ஒருவர்; கூலவியாபாரஞ் செய்துகொண்டிருந்தமையின் இப்பெயர்பெற்றரென்பர்; பத்தினிக்கடவுளாகிய கண்ணகியின் வரலாற்றையும் அவள்மேம்பாட்டையும் சேரன்செங்குட்டுவனுக்கு அறிவுறுத்தி அவனைக்கொண்டு அவளுக்குக் கோயில்கட்டுவித்து நித்தியபூசை முதலியனகடக்கும் படிசெய்தவர். அவ்வரசனுக்குக் கண்ணகியின்வரலாற்றைக் கூறிய பொழுது அவனெடு கேட்டுக்கொண்டிருந்தவரும் அவன்சகோதரரும் துறவுபூண்டவருமாகிய இளங்கோவடிகள் அவளுடையசரிதத்தைப் பொருட்டொடர்நிலைச்செய்யுளாகச்செய்தற்கு வேட்கையடையும்வண்ணஞ் செய்தவர் இவரே; இதனைச் சிலப்பதிகாரத்தின் பதிகத்தாலும், அந்நூலிலுள்ள உரு-ஆவது காட்சிக்காதையாலுமுணர்க. எட்டுத்தொகையில் நற்றிணை முதலிய நூல்களில் இவராற செய்யப்பட்டுள்ள பாக்களுமுண்டு; (நற்றிணையில் கூ பாக்கள்; குறுந்தொகையில் க; அகநானூற்றில் ச; புறநானூற்றில் க.) இவர்பெயர், கூலவாணிகனசாத்தனரெனவும், மதுரைச்சித்தலைச்சாத்தனரெனவும், சீத்தலைச்சாத்தனரெனவும், சாத்தனரெனவும் வழங்கும். "தண்டமிழ்ச்சாத்தன்"(பதிகம், கo) எனமும, "தண்டமிழாசான்சாத்தன்" (காட்சிக்காதை, கூச) என்றும், "கன்னூற்புலவன்" (காட்சிக்காதை, கoசு) என்றும் சிலப்பதிகாரத்து இவர்சிறப்பிக்கப்பட்டிருக்கின்றனர். சங்கத்தில் அரங்கேற்றுவித்தற்பொருட்டுவரும் நூல்களிற்பிழைகள் காணப்படுந்தோறும் ஆக்கியோர்களைக் குற்றங்கூறுதற்குத் துணியாராய் 'இத்தப்பிழைகளைக் கேட்கும்படி நேரிட்டதே' என்று இவர் மனம்வருந்தித் தமதுதலையைக் குத்திக்கொள்வாரென்றும், அதனல் தலை புண்பட்டுச் சீயோடிருந்தமையின், சீத்தலைச்சாத்தனரென்பது இவர்க்குப்பெயராயிற்றென்றுங்கூறுவர்; இதனை, "வள்ளுவர்முப்பாலாற், றலைக்குத்தித் தீர்வுசாத் தற்கு" என்று மருத்துவன்நாமோதரனர் திருக்குறளைச் சிறப்பித்துக்கூறிய செய்யுளிற் குறிப்பித்திருத்தலகாண்க. சிலப்பதிகாரத்தை இவர் கேட்டனரெனச் சிலப்பதிகாரப்பதிகத்தினுதியிலும், இந்நூலைச் சிலப்பதிகாரநூலாசிரியர் கேட்டனரென இந்நூற்பதிகத்தினுதியிலும் கூறியிருத்தலால், இளங்கோவடிகளும், இவரும் ஒரேகாலத்தினரென்பது அறியப்படுகின்றது. மலைநாட்டிற சீத்தலையென்னும் ஊரிலுள்ள ஐயனர் பெயராகிய சீத்தலைச்சாத்தனரென்பது இவரது இயற்பெயரென்று ஒரு சாரார்கூறுவர்; உண்மை விளங்கவில்லை.

இந் நூலால் தெரிந்த அரசர்களின் பெயர்கள் முதலியன.

க.—அரசர்கள்:—அத்திபதி, இரவிவன்மன், இராகுலன், ராமன், உதயகுமரன், ககந்தன், கரிகால்வளவன் (கரிகாற்பெருவளத்தான்), கனகன், காந்தன், கிள்ளிவளவன், குமரன், சீதரன், சங்குட்டுவன், துச்சயன், தூணையிளங்கிள்ளி, தூங்கெயிலெறிந்த தாடித்தோட்செம்பியன், தொடுகழற்கிள்ளி, நாகநாட்டரசரிருவர், நெடுஞ்செழியன், நெடுமுடிக்கிள்ளி, புண்ணியராசன், பூமிசந்திரன், மு, மாவண்கிள்ளி, மாவலி, முசுகுந்தன், வசு, வடிவேற்கிள்ளி, வத்தவன் (வத்ஸராஜன்), வளைவணன், வாணன், விசயன், விடர்ச்சூலெறித்தவேந்தன், விராடன், வெண்வேற்கிள்ளி.

உ. அக்ஷயபாத்திரம் :—அமுதசுரபி.

ங. ஆறுகள்:—கங்கை, காயங்கரை, காரியாறு, காவேரி, குமரி.

ச. உலகம்:—துடிதலோகம், வித்தியாதரருலகு.

ஞ. ஊர்கள்:—அசோதரநகரம், இடவயம், உஞ்சை, கச்சயம், கபிலை, காஞ்சனபுரம், காஞ்சி, காவிரிப்பூம்பட்டினம் (காகந்தி), கொற்கை, கோசம்பி (கௌசாம்பிநகரம்), சண்பை, சிங்கநகரம், சித்திபுரம், சேடி, தக்கணமதுரை (மதுரை), நாகபுரம், வஞ்சி, வயனங்கோடு, வாரணாசி.

ட. குலங்கள்:—இந்திரகுலம், சூரியகுலம், மாவலிகுலம்.

ண. கோயில்கள் :—இந்திரவிசாரம், கலிங்கமம், குச்சரக்குடிகை, சக்கரவாளக்கோட்டம், தருமிலை (சுற்பகதருநிற்குங்கோயில்), தீவதிலகைகோயில், புத்தபாதபீடிகைக்கோயில், பூதசதுக்கம், மணிமேகலாதெய்வக்கோயில், வச்சிரகக்கோட்டம் (வச்சிராயுதம்நிற்கும்கோயில்.)

அ. தருமசாலை:—உலகவறவி.

கூ. தீவங்கள்:—இரத்தினத்தீவம், இலங்காதீவம், சம்புத்தீவம், சிறுதீவு இரண்டாயிரம், பெருந்தீவுநான்கு, மணிபல்லவம்.

கo. தெய்வங்கள்:—அந்தரி (துர்க்கை), அருபப்பிரமர் நான்குவகையினர், இந்திரன், உருபப்பிரமர் பதினுறுவகையினர், கண்ணகி, கந்திற்பாவை (துவதிகன்), குமரி, கோவலன், சம்புத்தீவக்காவற்றெய்வம் (சம்பாபதி), சித்திரசேனன், சித்தாதேவி, சிவபெருமான்,

திருமால், தீவதிலகை, பலதேவன், பிரமன், பூதம் (அங்காடிப் பூதம், சதுக்கப்பூதம்), மணிமேகலாதெய்வம், மஹாப்ரஹ்மா, மாரன், மாருதவேகன், முருகக்கடவுள், விந்தாகடிகை.

கக. நகரத்தெய்வங்கள்:—சம்பாபதி, மதுராபதி.

கஉ. நாடுகள்:—அங்கநாடு, உத்தரமகதம், கலிங்கநாடு, காந்தார நாடு, சாவகநாடு, நாகநாடு, பாண்டிநாடு, பூருவதேயம், மகதம்.

கஙு. நூல்கள்:—ஓவியநூல், திருக்குறள், பிடகம், மடைநூல், மற்கலிநூல்.

கச. நோய்:—யானைத்தீநோய்.

கரு. பாம்பு:—திட்டிவிடம்.

கசு. புத்தஸ்தலமுள்ள இடங்கள்:—காஞ்சி, காவிரிப்பூம்பட்டினம், சமந்தம் (சமனெளி, பாதபங்கயமலை), மணிபல்லவம், வஞ்சிநகர்.

கள. புலவர்கள்:—இளங்கோவடிகள், திருவள்ளுவர், மதுரைக்கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனர்.

கஅ. போய்கைகள்:—கோமுகி, சரவணம்.

கஙு. மலைகள்:—இமயம், சமந்தம் (சமனெளி, பாதபங்கயமலை, திருத்திரகூடம்), தவளமலை, நாகர்மலை, பொதியில், மேரு, மேருவைச்சூழ்ந்த ஏழுகுன்றங்கள், விந்தம்.

உ0. முனிவர்கள்:—அக்கபாதர், அகத்தியர், அசலர், அறவண வடிகள், கவேரர், கிருதகோடி, கேசகம்பளர், கௌதமமுனிவர், சங்கதருமர், சாதுசக்கரர், சிருங்கி, சைமினி, தருமசாவகர், பரசுராமர், பிரமதருமன், புத்தன், மண்முகமுனிவன், விசுவாமித்திரன், வியாசன், விரிஞ்சி, விருச்சிகன்.

உக. வனங்கள்:—கவேரவனம், சம்பாதிவனம், தருமதவனம்.

உஉ. வாதங்கள்:—அளவைவாதம், ஆசீவகவாதம், சாங்கிய வாதம், சைவவாதம், நிகண்டவாதம், பிரமவாதம், பூதவாதம், மந்திரவாதம், வேத்வாதம், வைசேடிகவாதம், வைணவவாதம்.

உங. விழாக்கள்:—இந்திரவிழா, மங்கலத்திருநாள்.

———

மணிமேகலைக்கதைச்சுருக்கம்.

"படிக நிறமும் பவளம்போல் வாயுங்
கடிகமழ்செங் தாமரைபோற் கண்ணும்—துடியிடையும்
அல்லும் பகலு மடைவரத முக்கினைந்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி."

க.—விழாவறைகாதை.

பண்டைக்காலத்திற் காவிரிப்பூம்பட்டினத்தை வளமுறச் ய்வித்தற்கு நினைந்த அகத்தியமுனிவருடைய கட்டளையின்படி, ங்கெயிலெறிந்ததொடித்தோட்செம்பியனென்னுஞ்சோழன், இந் ரனேவணங்கிக் குறையிரந்து அவனனுமதிபெற்று இருபத்தெட்டு ள் அங்ஙகரில் நடத்தியதும், அச்சோழன் காலத்திற்போலவே ற்காலங்களில் அவன்பரம்பரையோரால் ஆண்டுதோறும் நடத்தப் பற்று வந்ததுமாகிய இந்திரவிழாவை நடத்தக்கருதிய அங்ஙகரத் ள்ள பலசமயவாதிகளும் பிறரும் ஒருங்குகூடி, "இந்திரவிழாவை ம் மறந்தால் முசுகுந்தனது துயரைப் போக்கியதான நாளங்காடிப் தம் துன்பஞ்செய்யும்; பாவிகளைப் புடைத்துண்பதாகிய சதுக்கப் தம் இங்ஙகரை விட்டுநீங்கும்; ஆதலால், இவ்விழாவை நடத்துவே ாக" என்று தம்முள் நிச்சயித்துக்கொண்டு, அவ்விழா நடக்கப் ாதலே நகரத்தாருக்கு அறிவிக்கும்படி முரசறைவோனுக்குச் சால்ல, அவன் வச்சிரக்கோட்டத்துள்ள முரசை யானையின் பிடரி லேற்றி, முதலில் ஊரைவாழ்த்தி, "மேகம் மாதந்தோறும் மும்மழை பாழிக; அரசன் செங்கோலினனாகுக; அறிஞர்களே! இந்திரவிழா டக்குங்காலத்திற் சுவர்க்கலோகம் வதிதாகும்படி எல்லாத்தேவ ம் அதனை நீங்கி இங்கே எழுந்தருளுவாரென்பது பெரியோர்க ுடைய துணிபாதலால், வீதிமுதலியவற்றிற் பூரணகும்பங்களும் பாற்பாலிகைகளும் பாவைவிளக்குக்களும் ஆகிய இவற்றைப் பரவ வத்திடுமின்; குலைக்கமுகும் குலைவாழையும் கரும்பும் வஞ்சிக் காடியும் பூங்கொடியும் ஆகிய இவற்றைக் கட்டவேண்டிய இடங் ளிற் கட்டுமின்; தூணங்களில் முத்துமாலைகளை நாற்றுமின்; வீதி ளிலும் மன்றங்களிலும் பழமணலை மாற்றிப் புதுமணலைப் பரப்பு

மின்; துகிற்கொடிவகைகளை மாடங்களிலும் வாயில்களிலும் கட்டு மின்; சிவபெருமான்முதல் சதுக்கப்பூதமிறுதியாகிய தெய்வங்கள் உறையுங் கோயில்களிற்செய்யவேண்டிய காரியங்களை ஏற்பச்செய்யு மின்; தருமோபதேசஞ்செய்ய அறிந்தவர்களே! பக்தரிலும் அம்பலங் களிலுஞ்சென்று பிரசங்கம் புரிமின்; சமயவாதிகளே! வித்தியாமண் டபத்தை அடைந்து இருத்தற்குரிய இடத்திலிருந்து வாதம்புரிமின்; யாரிடத்தும் பகைமையும் கோபமுங் கொள்ளன்மின்" என்று கூறி மூரசறைந்து இந்திரவிழாவைத் தெரிவித்தான்.

உ.—உரலருந்தகாதை.

பின்பு, காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரவிழாகடைபெற் றது; அவ்விழாக்காலத்திற் பண்டைவழக்கப்படியே ஆதிதற் பொருட்டு மணிமேகலையும் மாதவியும் வாராமையால் மனம் புழுங் கிய சித்திராபதி, வயந்தமாலையை அழைத்து, "நீமாதவிபாற்சென்று விழாவிற்கு வாராதிருத்தல்பற்றி இவ்வூரார் கூறும் பழிமொழியை அவளுக்குச்சொல்லி வா" என்று அனுப்ப, அவள்சென்று மணி மேகலையோடு மாதவிபிருந்த மலர்மண்டபத்தையடைந்து, அங்கே தவத்தால வாடிய மாதவியின் உடம்பைக்கண்டு வருத்தமுற்று அவளைநோக்கி, "நீ உன் மகளுடன் இந்திரவிழாவிற்கு வராமலும், உன் மரபிற்கு ஒவ்வாத தவவொழுக்கம்பூண்டும் இருத்தல்பற்றி ஊரார்கூறும் பழிமொழிகள் பல" என்றுகூற, மாதவி, "கணவன் கொலையுண்டதற்குப் பொருளாய் மிகச்சினந்து மதுரையை எரித்த பத்தினிக்கடவுளாகிய கண்ணகியினுடைய மகள் மணிமேகலை தவ வழியிற்செல்லுதற்கு உரியளேயன்றி, மிகவுமிழிந்த பரத்தைமைத் தொழிலுக்கு உரியளல்லள்; ஆதலின், அவள் அங்கேவாராள்; நான் இங்கேவந்து பௌத்தாசாரியராகிய அறவணவடிகளை வணங்கி, என் காதலன் மதுரையிற் கொலையுண்டது முதலிய பெருந்துன்பத்தை வருந்திச்சொல்லி முறையிட்டேன்; முறையிட்ட எனக்கு அவர்,

'தொடர்ந்தநரைவந்து தோன்றியபோதும்
நரைவந்த வாயது கேளாமையின்றி
பற்றின்றி யாயது முன்னரு மின்னை
தற்றேறு நூலை நிறை' (சூடா - எ)

என்று நால்வகைவாய்மைகளையும் அருளிச்செய்து, பஞ்சசீலத்தை யும் உபதேசித்து, 'இவற்றைக்கடைப்பிடி' என்றுசொல்லி என்னைத்

வழியிற் புகுத்தினராதலின், நானும் அங்கே வருதற்கு உரியே
ல்லேன் ; இச்செய்தியை என் தோழிகளுக்கும் என் நற்றாய்
த்திராபதிக்கும் சொல்" என்றுகூற, அதுகேட்ட வயந்தமாலை,
றுதற்கரிய மாணிக்கத்தைக் கடலில் வீழ்த்தியவர் போலச் செய
ற்று மீண்டு சித்திராபதியிடம் சென்றாள்.

க.—மலர்வனம்புக்ககாதை.

இங்ஙனம் மாதவி வயந்தமாலைக்குச் சொல்லிய வருத்தச்
சால்லைக்கேட்ட மணிமேகலைக்கு அக்கேள்விவழியாகப் பற்றறு
ற்குரிய நற்காலம் (ஞானஉதயம்) வந்துற்றமையால், அவள், தன்
டைய தாய்தந்தைகளான கண்ணகிக்கும் கோவலனுக்கும்
துரையில் நேர்ந்த துயரச்செய்தி தன்காதுகளைச் சுடமனங்கலங்கி
ழுது சிந்துகின்றகண்ணீரால் தான்தொடுக்கின்றமாலையை நனைத்
க்கொண்டிருப்ப, மாதவி அதனைக்கண்டு கண்ணீரைத்துடைத்து
வளுடைய துக்கத்தை ஒருவகையாக மாற்ற நினைந்து, "இப்
மாலை உன் கண்ணீர்க் கலப்பால் தூய்மையொழிந்தது ; ஆதலின்,
வறுமாலை தொடுத்தற்கு நீ சோலைசென்று புதுமலர் பறித்துவா"
ன்றாள்.

அதனைக்கேட்ட சுதமதி, மாதவியைநோக்கி, "தாய்தந்தையர்
ரு நேர்ந்த பெருந்துன்பத்தைக்கேட்டு மிக்கதுக்கத்தை அடைந்த
மணிமேகலையின் கண்ணீரைக்காணிற் காமன் தன் படைக்கலங்
ளை எறிந்துவிட்டு நடுங்குவான் ; இப்பாவையை ஆடவர் புறத்தே
காண்பராயின், விட்டு நீங்குவாரோ ? நீங்கார் ; இயற்கைத்தன்மை
தன்றுவர் ; குன்றுமல் நிற்பராயின், அவர்கள் பேடியரல்லரோ?
ஆதலால், இவளை இப்பொழுது புறத்தே பூப்பறித்தற்குத் தனியே
அனுப்பலாகாது ; இங்ஙகரத்தில் நான் வந்ததற்குரிய காரணங்கூறு
வேன் ; கேட்பாயாக ; சண்பைநகரத்துள்ளானை கௌசிகனென்
னும் அந்தணனுடைய மகளாகிய யான், தனியேசெல்லுதற்கு அஞ்
சாமல் ஆராய்ச்சியின்றி ஒரு சோலையிற்சென்று பூப்பறித்தேன் ;
அப்பொழுது இந்திரவிழாவைக்காண்டற்கு இந்நகரைநோக்கிஆகாய
வழியேவரும் மாருதவேகனென்னும வித்தியாதரனொருவன் என்
னைக்கண்டு உடனே எடுத்துக்கொண்டு மேலேசென்று, தன்வயமாக்
கிச் சிலநாள்கழித்தபின் இந்நகரத்தே என்னைவிட்டுவிட்டு நீங்கித் தன்

நகரம்போயினன்; மகளிர் தனியேசெல்லுதலால் உண்டாகுந் தீங்கு இத்தன்மையது ; ஆதலால், மணிமேகலை தனியே போய்ச் சோலையிற் பூப்பறித்தல் தவறுகும்; இவளுடன் யாரேனும் செல்லவேண்டும்; இலவந்திகைச் சோலைக்குச்சென்றால் அரசனுடைய பக்கத்திலுள்ளார் அங்கிருப்பர்; உய்யானத்திற்குச் செல்லலாமோவெனின், அதில் தேவர்களாலன்றி மனிதர்களால் விரும்பப்படாதனவும் வண்டுகள் மொய்க்கப் பெருதனவுமான மலர்களையுடைய மரங்கள்லாம் வாடாத பூமாலைகளைத் தூக்குதலால், 'இவ்வனம் பாசக்கையையுடைய பூதங்களாற் காக்கப்படும்' என்று நினைந்து அவ்வனத்தை அறிவுடையோர் அடையார் ; சூரியகிரணத்தாற் சிறை யிழந்த சம்பாதியிருந்த சம்பாதிவனமும், காவிரியின் தங்கையாகிய கவேரனிருந்த கவேரவனமும் மிக்க முதுமையையுடையனவும் தீண்டிவருத்துவனவுமாகிய தெய்வங்களாற் காக்கப்படுதலின் அவற் றினிடத்தும் அறிவுடையோர் செல்லார் ;

அருளு மன்பு மாயிரு ஞாலம்
மொருபெரும் பூட்கையு மொழியா மோம்புத்
பகவன தாணையிற் பயிர்மரம் பூக்கும் (மணி - பக)

உவவனமென்று ஒருவனமுண்டு ; அவ்வனத்தில் தன்னகத்துள் ளோருடைய ஓசையை வெளிப்படுத்தாமல் அவர்களுருவங்களை மட்டும் வெளிப்படுத்துவதாகிய பளிக்குமண்டபம் ஒன்றுளது ; அம்மண்டபத்தினுள்ளே மாணிக்கச் சோதிபரந்த ஒரு பதுமபீடம் இருக்கிறது ; அப்பீடத்திலிட்டால் அரும்புகள்மலரும் ; பலவருடஞ்சென்றாலும் அதில் இட்டமலர்கள்வாடா ! அம்மலர்களில் வண்டுகள் மொய்யா ; இதுகாறும் அதன் பெருமையை உனக்குச் சொல்ல மறந்தேன் ; கேட்பாயாக ; ஒருதெய்வத்தை நினைந்தோர் அத்தெய்வத்தின் அடிகளைத்தியானித்து மலர்களை அப்பீடத்திற் சேர்த்தால் அம்மலர்கள் அப்பீடத்தை நீங்கி அத்தெய்வத்தின் அடிகளிடத்தே செல்லாகிற்கும் ; யாதொரு நினைப்புமின்றி அவற்றை அப்பீடத்தே சேர்ப்பின், அவைகள் அதனை விட்டு நீங்கா ; இதற்குக் காரணம்யாதென்று வினவுவாயாயின், சொல்லுவேன்; 'செய்யும் கருமங்கள் மனத்தோடு கூடாத விடத்தும் அவைகள்பலிக்கும்' என்னும் விதிகள் துன்பமடையவும், 'மனத்தோடுகூடாதவழிக் கருமங்கள் பலியா' என்போர்க்கு உதாரணமாக

வும் மலரை இட்டுக் காட்டுதற்கு மயனென்னும் தெய்வத்தச்சனால் அப்பீடம் நிருமிக்கப்பட்டதாகும்; அவ்வனத்திலன்றி உன்மகள் வேறுவனங்களிற் செல்லுதற்கு உரியளல்லள்; அவளோடு பூப்பறித் தற்கு நானும் துணையாகச் செல்வேன்" என்று சொல்லிவிட்டு மணிமேகலையோடுசேர்ந்து அவள்போகும்பொழுது,உண்ணுநோன்பி யொருவனைத் தொடர்ந்து நின்று, "ஐய, இதனை உண்ணும்; உண்டால், காற்றுப்புகாத அறையிற் புகுந்தவர்போலே அழுக்குடைய உடம்பிற்புகுந்து வருந்திக்கொண்டிருக்கும் உம்முடைய உயிர் அவ்வருத்தமொழிந்து மிக்க இன்பத்தை அடையாநிற்கும்; ஆதலால், இதனையுண்டு தெளிக" என்று கள்ளையுண்ணும்படி வற்புறுத்திக் கூறும் களிமகன்பின்னே வியப்புற்றுச்செல்லும் சனங்களும், ஒரு பித்தனுடைய பலவகைப்பட்ட விகாரச்செயல்களைக்கண்டு வருந்தி நிற்கும் சனங்களும், பேடொன்றுங் கூத்தைக்கண்டுநிற்கும் சனங்களும், தெருவின் இருபுறத்துமுள்ள மாளிகைகளில் எழுதப்பட்டுள்ள சித்திரங்களைக்கண்டு வியந்து நிற்கும் சனங்களும், சிறு தேரின்மீது செய்துவைக்கப்பட்டுள்ள யானையின்மேற் சிறுவர்களை யேற்றி மகளிர் பாராட்டுதலைக்கண்டு நிற்கும் சனங்களும் ஆகிய எல்லோரும், முன்னம் விராடநகரத்திற் பேடிவடிவங்கொண்டு சென்ற அருச்சுனனைக்கண்டு வியந்து சூழ்ந்துகொண்டவர்களைப் போல மணிமேகலையைச் சூழ்ந்துகொண்டு, "மிக்க அழகையுடைய இவளைத் தவவழியிற் புகுத்திய தாய் மிகவும்கொடியவள்; இவள் பூப் பறித்தற்குச்சோலையிற் புகுவாளாயின், ஆங்குள்ள அன்னப்பறவைகள் முதலியன இவள் நடைமுதலியவற்றைக் கண்டு என்னபாடு படா!" என்று இவைபோல்வனவற்றைச் சொல்லி அவளுடைய அழகைப் பாராட்டி மிகவும் வருந்தி நின்றனர்; மணிமேகலை, சுத மதியோடு மெல்லச்சென்று உவவனத்தில் மலர்கொய்தற்குப் புகுந்தாள்.

ச.—பளிக்கறைபுக்ககாதை.

புகுந்தவள், அச்சோலையின் வளங்களையும் ஆங்குள்ள பொய்கையின் அழகையும் சுதமதிகாட்டக் காண்பாளாயினள்.

அவள் அங்கே அப்படியிருக்க, மதவெறிகொண்டு தெருத்தோறும் சனங்களை வருத்தித் திரிந்ததான காலவேகமென்னுமியானையின் மதத்தையடக்கித் தேரேறிச் சேனையுடன்வரும் உதயகுமரன்

நாடகக்கணிகையர்வீதியில் ஒரு மாடத்தே மலர்ணேமேற் காதற்பரத்தை யொருத்தியோடு, யாழின் கோட்டைத் தழுவிக்கொண்டு மயங்கிப் பாவைபோலிருந்த எட்டி.குமரனைத் தெருப்பக்கத்திலுள்ள சாளர வழியாற்கண்டு, "நீ அடைந்ததுன்பம் யாது?" என்றான்; உடனே அவன் தணுக்குற்றெழுந்து விரைந்து அருகேசென்று உதயகுமரனை வணங்கித்துதித்து, "இயற்கையழகுகெட்டு மலர்வனத்திற்கு இவ்வீதிவழியே நடந்துசெல்லும் மணிமேகலையைக்கண்டேன்; கண்டவுடன் அவளது தந்தையாகிய கோவலன் மதுரையிலடைந்த கொடுந்துன்பம் நினைவிற்கு வந்து என் மனத்திண்மையை மாற்றி இந்த யாழிலுள்ள பகைநரம்பில் என்கையைச் செலுத்தியது; இதுவே நான் அடைந்தவருத்தம்" என்று சொல்ல, பலகாலாக மணிமேகலையை விரும்பிக்கொண்டேயிருந்த உதயகுமரன், அவன் சொல்லால், அவள்சோலை சென்றுளென்பதை அறிந்து மகிழ்ந்து, "அங்கேபோய் மணிமேகலையை என் தேரிலேற்றிக்கொண்டுவருவேன்" என்று அவனுக்குச் சொல்லிவிட்டுத் தேரைச்செலுத்திச் சென்று உவவனத்தின் மதில்வாயிலை யடைந்தான்.

மணிமேகலை, அத்தேரொலியைக்கேட்டுச் சுதமதியை நோக்கி, "உதயகுமரன் என்மேல் மிக்க விருப்முடையவனென்று மாதவிக்கு வயந்தமாலை சொல்லியதை முன்னங்கேட்டுளேன்; இஃது அவனுடைய தேரொலிபோலும்; இத்துன்பத்திற்கு யாதுசெய்வேன்?" என்றாள்; அதைக்கேட்ட சுதமதி அவளை ஆங்குள்ளபளிக்கறையிற் புகுத்தித் தாழக்கோலிட்டுக்கொண்டு உள்ளே இருக்கச் செய்துவிட்டு, தான் அப்பளிக்கறைக்கு ஐந்துவிற்கிடைத்தூரத்தே நின்றாள்; அங்ஙனம்நின்ற சுதமதியைச் சோலையிலுள்ளேவந்த உதயகுமரன் கண்டு, "யாருமில்லாத இவ்விடத்தே நின்றாய்; நீ மணிமேகலையுடன் வந்தாயென்று அறிந்துகொண்டேன்; அவள்முதுக்குறைவுற்றனளோ? அவளுடைய செவ்வாய் ஈகைத்தலைப் பெற்றதோ? கண்கள் பிறழ்ந்து உலாவி வேட்கையைப் புறப்படுத்துமோ? அவள் பௌத்தசங்கத்தாரிருப்பிடத்தை நீங்கி இவ்விடம் வந்ததற்குக் காரணம் யாது? சொல்வாய்" என்று தனது வேட்கை தோன்ற வினவினன்.

அப்பொழுது சுதமதி, வாயிலில்லாத அறையில் அகப்பட்டோர் போல மனம்வருந்தி, "இளமைப்பருவத்திலேயே முதுமைவேடம்

பூண்டு வழக்கைக்கேட்டு உண்மையை வெளிப்படுத்திய சோழன் கரிகாற்பெருவளத்தானுடைய வழித்தோன்றலே! நீ ஆண்டில் இளையையாயினும் அறிவில் முதியையல்லனே?, உனக்கு மகளிர் தெரிவித்தற்குரியனவும் உளவோ? ஆயினும், ஒன்று தெரிவிப்பேன்? கேட்டருளுக:—

வினையின் வந்தது வினைக்குவினை வாயது
பூவனை நீங்கிப் புலம்புறத் திரிவது
மூத்துவளரி வுடையது நீப்பிணி பிருக்கை
பற்றின் பற்றிடங் குற்றக் கொற்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை
யவலக் கவலை யுகையா நழுங்க
றவலா வுள்ளத் தன்பா லுடையது
மக்கள் பாக்கை யிதுவென வுணர்ந்து
மிக்கோ யிதனைப் புரமதிப் பாராய்" (ககக - உக)

என்று உடம்பினியல்பைக்கூறினள்; அவள் அங்ஙனங்கூறிய இனியவார்த்தை உதயகுமரனதுகாதை அடையுமுன்னே பளிக்கறையினுள்ளேயிருந்த மணிமேகலையினுருவம் அவன்கண்ணுக்குத் தோற்றியது.

நி.—மணிமேகலாதெய்வம் வந்துதோன்றியகாதை.

தோற்றியவுடன், அவ்வடிவத்தை மணிமேகலையின் வடிவமென்று நிச்சயித்து அப்பளிக்கறையினுள்ளே சென்றடைதற்கு நினைந்த உதயகுமரன், அதன்வாயில் காணப்படாமையால் அஃது இவ்விடத்திலுள்ளதென்பதை அறிந்துகொள்ளுதற்குப்பளிக்குச் சுவரைக் கையால் தடவிக்கொண்டு சூழ்ந்து வந்தான்; வந்தவன் சுதமதியைப்பார்த்து, "மணிமேகலை எத்திறத்தினள்? சொல்" என்றான்; என்றவனுக்குச் சுதமதி, "அவள் தவவொழுக்கமுடையவள்; குற்றஞ்செய்தாரைச் சபிக்கும்வன்மையையுமுடையவள்; சிறிதும் காமவிகாரமில்லாதவள்; ஆதலின், நீ அவளை விரும்புதல்தக்கதன்று" என்று கூறினள்; கூறவே "அவள் எத்தன்மையளாயினும் ஆகுக; எப்படியும் எனக்கு உரியளாக்கடவள்" என்று சொல்லிக்கொண்டு செல்பவன், மீட்டும் சுதமதியைப் பார்த்து, "துறவொழுக்கம் பூண்ட சமணமாதர்களின் நடுவே ஒருவித்தியாதரனல் இடப்

பட்டவளென்று எல்லாராலுங்கூறப்படும் நீ அவரைநீங்கிப் பௌத்த சங்கத்தைச்சார்ந்த மாதவியின் மகளுடன்வந்ததற்குக் காரணம் யாது? சொல்லுவாய்" என்றான்.

அதுகேட்ட சுதமதி, "அரச! யான்சண்பைநகரத்துள்ள கௌசிகனென்னும் அந்தணனுடையமகள்; என் இளமைப்பருவத்தில் அன்னை இறந்தாள்; அவளிறந்தபின்பு தந்தையால் ஆதரிக்கப் பட்டுவந்த நான் ஒருசோலையிற்சென்று தனியேநின்று பூக்கொய்கையில் என்னை விரும்பி ஆகாயத்தே எடுத்துச்சென்று தன்வயமாக்கிக் கொண்ட வித்தியாதரனொருவனால் இடப்பட்டு இந்நகரத்திருந்தேன்; இதனையறியாத என் தந்தை என்னைக்காணமல் வருந்தித் தேடிக்கொண்டே கன்னியாகுமரியாற்றிற்கு நீராடச்செல்பவர்களோடுசென்றார்; செல்லுகையில் இடையிலுள்ளதான இந்நகரத்துச் சங்கமுகத்துறையில் நீராடுதற்கு அந்தணர்களோடுவந்து என்னை இந்நகரிற்கண்டு, 'நீ இங்கேஎப்படிவந்தனை?' என்றுவினவி வருந்தி, அந்தணர்களோடிருத்தற்கு நான்தகுதியில்லேனாயினும்என்னிடத்து மிக்க அன்புடையவராதலின், அவர் என்னைக் கைவிடாதவராகி மணிதோறும் பிச்சையெடுத்து உண்பித்துத் தாமுமுண்டு பொழுது கழிப்பாராயினர்; அப்படியிருக்கையில், ஒருநாள், அவர் பிச்சையெடுத்தற்குச் செல்லும்பொழுது இளங்கன்றையுடைய ஒருபசு அவரை முட்டி வயிற்றைக் கிழித்துவிட்டது; அதனைச்சரிந்தகுடரைக் கையிலேந்திக்கொண்டு நானிருந்தவிடமென்று முன்பு அறிந்தவராதலாற் சமணப்பள்ளியிற்புகுந்து, 'முனிவர்களே! யான்உங்களடைக்கலம்; என்னைப் பாதுகாக்கவேண்டும்' என்று முறையிட்டார்; அதைக் கேட்டஅவர்கள் சினந்து அவரை என்னோடும் புறத்தே தள்ளிவிட்டனர்; நாங்களிருவரும் மிக்கதுக்கமுடையவர்களாய்ப் புறவீதியிற் சென்று, 'கதியற்ற எம்மைப் பாதுகாக்கும் அறவோர் யாரேனுமுண்டோ?' என்று புலம்பி முறையிட்டோம்; அப்பொழுது மணிதோறும் சென்று ஐயமெடுக்கும் பாத்திரத்தையேந்திய கையையுடையவனும் முழுமதிபோன்ற முகத்தினனும் பொன்னிறமுள்ள சீவரஆடையினையுமாகிய சங்கதருமனென்னும் முனிவன் விரைந்துவந்து, 'என்னதன்பம் அடைந்தீர்கள்?' என்று எம்மை அருளுடன் பார்த்து இனியமொழிகளைக் காதுகளில் நிறைத்து எம்மனத்தைக் குளிர்வித்து உடனே தன் கையிலுள்ள பிச்சைப்பாத்திரத்தை

என்கையிற்கொடுத்துவிட்டு என் தந்தையின் துன்பம் மூற்றும் நீங் கும்படி அவரைத் தழுவிஎடுத்துக்கொண்டு சென்றுபௌத்தசங்கத் தார் இருப்பிடத்தைக்காட்டி என்தந்தையின் மரணத்துன்பத்தை யும் நீக்கினேன்; அம்முனிவன் எனக்குச் செவியறிவுறுத்திய,

எங்கோ னியல்குண னேதமில் குணப்பொருள்
உலக நோன்பிற் பலகதி யுணர்ந்து
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்
இன்பச் செல்வி மன்பதை யெய்த
அருளறம் பூண்ட வொருபெரும் பூட்கையின்
அறக்கதி ராழி திறப்பட வுருட்டிக்
காமற் கடந்த வாமன் (எக - எ)

பாதங்களேயே என்னுடைய நாவானது இடைவிடாமற் பாராட்டுமே யல்லாமல் வேறொன்றையும்சொல்லஅறியாது; அதுமுதல், பௌத்த சங்கத்தைச்சார்ந்திருந்த மாதவியிடத்தில் உறைவேனுயினேன்; அதனல் இவளுடன்வந்தேன்" என்று கூறினள்; அதுகேட்டஉதய குமரன், "உனதியல்பை அறிந்துகொண்டேன்; மணிமேகலையைச் சித்திராபதியால் இனி அடைதலுங்கூடும்" என்றுசொல்லிவிட்டுக் காமப்பரவசனுய் அச்சோலையினின்றும் போயினன்; போனவுடன் மணிமேகலை பளிக்கறையினின்றும் வெளியேவந்து சுதமதியை நோக்கி, "அன்பிலனென்றும் தவவுணர்ச்சியில்லாதவனென்றும் வரு ணக்காப்பிலனென்றும் வீலமாதென்றும் என்னை உதயகுமரன் இகழ்ந்தானென்று நினையாமல், அவன்பின்னே என்னுடைய நெஞ்ச மானது செல்லுதலுற்றது; இதற்குக்காரணம்யாது? காமத்தினியல்பு இதுவோ?" என்று சொல்லிக்கொண்டு நின்ருள்; நின்றபொழுது, இந்திரவிழாவைக் காணுதலுற்ற மணிமேகலாதெய்வம், அவர்களுக் குத்தெரிந்தவளும் மாயவித்தைசெய்பவளுமாகிய ஒரு மடந்தை வேடம்பூண்டு அச்சோலையையடைந்து பளிக்கறையிலுள்ள ஸ்ரீ பாதபீடிகையை வலங்கொண்டு உயர எழும்பினன்று,

"புலவர் நீர்த்தண் புண்ணியப் புராண
உலக நோன்பி லுயர்ந்தோ யென்கோ
குற்றங் கெடுத்தோய் செற்றஞ் செறுத்தோய்
முற்ற வுணர்ந்த முதல்வ வென்கோ

காமற் கடந்தோ யேம மாயோய்
நீநெறிக் கடும்பகை கடிந்தோ யென்கோ
ஆயிர வாத் தாழியர் திருந்தடி
நாவா யிரவிலே னேத்துவ தெவன் !" (கூஅ - கo)

எள்று துதிக்கத்தொடங்கியது; அங்ஙனம் துதித்துக்கொண்டிருக்கையிற் பகற்காலம்நீங்க அந்திமாலை வந்தது.

கூ.—சக்கரவாளக்கோட்டமுரைத்தகாதை.

வந்த அந்திமாலைப் பொழுதுநீங்க, சந்திரன் உதயமாயினன்; மணிமேகலாதெய்வம் மீட்டும்,

ஆதி முதல்வ னறவாழி யாள்வோர்
பாத பீடிகை பணிந்தன னேத்தி (கக - ஒ)

அங்கே வாடிநின்ற சுதமதியைப்பார்த்து, "நீங்கள் இங்கே நின்ற தற்குக் காரணம் யாது? என்ன துன்பமடைந்தீர்கள்?" என்று கேட்க, சுதமதி உதயகுமரன் மணிமேகலையை விரும்பிச் சொல்லிய சொல்லையும், பின்பு சித்திராபதியால் அவளைப் பெறலாமென்று அவன் எண்ணிச்சென்றதையும் கூறினள்; கூறலும் அத்தெய்வம் அவளைப்பார்த்து, "உதயகுமரனுக்கு மணிமேகலைபாலுள்ள ஆசை சிறிதும் தணிவுற்றிலது; 'இது முனிவர்களுடைய தவவனம்; இதில் யாம் தீங்குசெய்யலாகாது' என்றெண்ணியே அவன் இச்சோலையை நீங்கினன்; இவள் இதனைக் கடந்துசெல்வளாயின், புறவீதியில் அவன் இவளை அகப்படுத்திக்கொள்ளுவான்; இஃது உண்மையே; நீங்கள் இச்சோலையைச்சூழ்ந்த மதிலின் மேற்றிசைக்கண்ணதாகிய சிறியவாயில் வழியேபோய் முனிவர்களுக்கு இருப்பிடமாகிய சக்கர வாளக் கோட்டத்திற்செல்லுக; சென்றால் ஒருபொழுதும் யாதொரு துன்பமும் அணுகாது" என்று சொல்லியது; சொல்லலும், சுதமதி, "மாருதவேகனும் நீயுமே அதனைச் சக்கரவாளக்கோட்டமென்று சொல்லுவீர்; மற்றையோர்யாவரும் சுடுகாட்டுக்கோட்டமென்றே சொல்லாநிற்பர்; சக்கரவாளக்கோட்டமென்றதற்குக் காரணம் யாது? அதனைச்சொல்லுக" என்றாள்.

என்றலும், அத்தெய்வம், "காவிரிப்பூம்பட்டினம் தோன்றிய காலத்தே உடன்றோன்றியதான நன்காடு இச்சோலையின் பக்கத்தே யுள்ளது. அது, நாற்புறத்தும் வாயில்களையுடைய மதிலாற்சூழப்

பட்டது ; காளிகோட்டத்தையும், அருத்தவர், அரசர், கணவனிறக்க உடனேயிறந்தமடவார் ஆகிய இவர்களுள்இன்னாரின்னார் இன்ன இன்னவிடத்தே புதைக்கப்பட்டாரென்பதற்கு அறிகுறியாக அவரவர்கள் வருணம் ஆச்சிரமம் முதலியவற்றிற்கும் அவரவர்கள் தகுதிக்கும் ஏற்பச் சிறியனவும் பெரியனவுமாகக் கட்டப்பட்டுள்ள பற்பலகோட்டங்களையும், மயானதெய்வங்களுக்குப் பலியிடுதற்கு உரிய தூண்களையும், கற்களை நிறுத்திச் செய்யப்பட்டுள்ள நிண்ணை களையும், காவற்காரர் உண்பதற்கும் உறங்குவதற்கும் அமைக் துள்ள குடிசைகளையும், தோரணங்களையும், பந்தர்களையுமுடையது; பிணங்களைச் சுடுதற்கும் சும்மாபோடுதற்கும் குழியிற்புதைத்தற் கும் உள்ளேவைத்து வாயிலையடைத்தற்கும் தாழியாற் கவித்தற்கு மாக இரவும் பகலும் வருபவர்களுடைய ஓசையும், அங்ஙனம் வந்து செல்பவர்களுடைய ஓசையும், சாப்பறைகளினோசையும், இறந்த துறவிகளைத்தொழுபவரோசையும், மற்றையோர்பொருட்டு அழு பவரோசையும், நரியின் கூக்குரலோசையும், செத்தோரையழைக் கும் பேராந்தைகளினோசையும், கோட்டானுடையகுரலும், ஆண் டலைப்பறவைகளின் குரலும் அம்மயானத்தில் மிகுதியாகவுண்டு; தான்றி, ஓடுவை, உழிஞ்சில், கான்றை, சூரை, கள்ளிமுதலிய பற் பல மரவிசேடங்களும் அங்கே அடர்ந்துள்ளன ; பேய்கள்நெருங்கி யுள்ள வாகைமரம் நிற்கும் மன்றங்களையும், நிணத்தோடு இறைச்சி களைத்தின்று மகிழ்ந்து பறவைகள் தங்கியுள்ள விளாமரம் நிற்கும் மன்றங்களையும், காபாலிகசமயத்தோர் வாழும் வன்னிமரம்நிற்கும் தன்றங்களையும், விரதத்தாலினைத்த உடம்பையுடையசிலர் உடைந்த மலைகளை மாலையாகக்கட்டும் இலந்தைமரம் நிற்கும் மன்றங்களையும், பிணங்களைத்தின்போர் களித்துவாழும்வெளியான இடங்களையுடைய மன்றங்களையும் அம்மயானம் உடையது ; நெருப்பிருந்தபாண்டங் களும் மண்டைகளும் பாடைகளும் அறுத்தெறிந்த மாலைகளும் உடைந்த குடங்களும் நெற்களும் பொரிகளும் சிறுபலியாக இடப் பட்ட அரிசிகளும் எங்கும் பரவப்பெற்றது ;

தவத்துறை மாக்கண் மிகப்பெருஞ் செல்வர்
ஈற்றினம் பெண்டி ராற்றுப் பாலகர்
மூதியோ ரென்னு னினோயோ டென்னுன்
கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்பு யிர்

வழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டும்
கழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து
மிக்க கல்லறம் விரும்பாது வாழும்
மக்களிற் சிறந்த மடவோ ருண்டோ! (கூவ - கoச)

இத்தன்மையதான அச்சுதிகாட்டைப் பார்ப்பனச்சிறுவனாகிய சார்ங் கலனென்னும் ஒருவன், நகரமாக நினைந்து அதில் தனியே சென்று அங்கே களித்தாடிய பேயொன்றைக்கண்டு அஞ்சி அதனால் தாக்கப்பட்டுக் கதறிக்கொண்டு ஓடித் தனது தாயாகிய கோதமை யையடைந்து, 'சுடலையிலுள்ள பேய்க்கு என்னுயிரைக் கொடுத் தேன்' என்று சொல்லி அவள்மூன் வீழ்ந்து இறந்தான்; உடனே கோதமை, 'முதுமைப்பருவமடைந்து தளர்ந்த பார்ப்பானும் யானும் கண்ணீழந்துள்ளேமென்பதையும் வேறு புகலில்லேமென்பதை யும் நினையாமல் எங்கள் மைந்தனுடைய உயிரையுண்டது, அணங் கோ ! பேயோ ! அறிகிலேனே ! ' என்று புலம்பிக்கொண்டு தன் அருமைப்புதல்வனுடைய உடம்பையெடுத்து மார்போடு தழுவிச் சென்று சுடுகாட்டைச்சூழ்ந்தமதில்வாயிலை யடைந்துநின்று, 'சம்பா பதி! நீர்த்துறைகளிலும் மன்றங்களிலும் பழைய மரவடிகளிலும் கோட்டங்களிலும் வேறிடங்களிலுமிருந்து யாருக்கும் எந்தச் சம யத்தும் யாதொருதீங்கும் அணுகாவண்ணம் பாதுகாத்தருளும் நீ என்மகனைக் காவாதொழிந்ததற்குக் காரணம் யாது? நின்பால் நடுவு நிலைமையில்லையோ ? இனி யான் என்செய்வேன்!" என்று வருந்தி முறையிட்டாள்.

"முறையிடவே சம்பாபதிவந்து, 'இவ்விரவில் இம்மயானத் திற் பேய்கள் போக்குவரவுசெய்யும் வாயிலில் நின்று மிக்க வருத்த மடைந்து நீ என்னை அழைத்ததற்குக் காரணம் யாது ? சொல் வாய்' என்ன, கோதமை நிகழ்ந்ததைக் கூறினள்; சம்பாபதி, 'உன் மகனுயிரை அணங்கும் பேயும் கவர்ந்தில ; அவனுடைய அறியா மையையே பற்றுக்கோடாகக்கொண்டு இழவூழே அவனுயிரைக் கவர்ந்து சென்றது' என்று கூறினள்; கூறலும், கோதமை 'என் னுயிரை வாங்கிக்கொண்டு இவனுயிரை நீ தந்தருள்வாயாயின், இவன் கண்ணற்ற தந்தையைக் காத்தளிப்பான்; ஆதலால், அங்ஙனம் செய்தருள்வாயாக' என்று வேண்டினள் ; சம்பாபதி மனமிரங்கி, 'உயிர் உடம்பைவிட்டுநீங்கின் அது வினைவழியேசென்று வேறு

பிறப்பை அடையாநிற்கும், இதில் ஏதேனும் ஐயமுண்டோ? போனவுயிரை மீட்டளித்தல் என்னுல் இயலுங்காரியமன்று; ஆதலால், மகன் இறந்ததுபற்றி நீ இரங்காதே,

உலக மன்னவர்க் குயிர்க்குயி ரீவோர்
இலரோ விந்த வீமப் புறங்காட்
டரசர்க் கமைத்தன வாயிரங் கோட்டம்
நிரயக் கொடுமொழி நீயொழி' (கஉசு - ள)

என்றலும், கோதமை, 'கேட்ட வரங்களேயெல்லாம் தேவர் தருவா ரென்று நூல்கள் கூறுகிற்கும்; ஆதலால், யான் கேட்ட இவ்வரத்தை நீ தந்தருள்க; தாராயாயின், இவ்விடத்தில் இப்பொழுதே என் னுயிரைத் துறப்பேன்' என்று சொன்னுள்; சொல்லவே சம்பாபதி, 'நீ சொல்லியபடியே இச்சக்கரவாளத்துள்ள தேவர்களில் யாரேனும் நீ கேட்ட வரத்தைக் கொடுப்பாருளராயின் யானும் அதனைக் கொடுக்கும் உரிமையுடையேனுவேன்; என் ஆற்றலைக் காண்பா யாக' என்று சொல்லிவிட்டு, நான்குவகை அருவப்பிரமகணங்களையும் பதினுறுவகை உருவப்பிரமகணங்களையும் இருசுடர்களையும் அறுவகைத்தெய்வகணங்களையும் பலவகை அசுரகணங்களையும் எண்வகை நாகர்களையும் பல விண்மீன் கூட்டங்களையும் அச்சுவினி முதலிய இருபத்தேழு நாட்களையும் கோட்களையும் தனக்குள்ளே அடக்கிக்கொண்டிருக்கும் சக்கரவாளத்தில் வாங்கொடுக்கும் வன் மையையுடைய தேவர்களையெல்லாம் வருவித்துக் கோதமைக்கு முன்னே நிறுத்தி, 'இவளுடைய வருத்தத்தைக் கெடுத்திடுவீராக; இவளடைந்த வருத்தம் இதுவாகும்' என்று நிகழ்ந்தவற்றைச் சொல்ல, அத்தேவர்கள் சம்பாபதி கூறியவாறே கூறிமுடித்தார்கள்; அதனைக்கேட்டு உண்மையறிந்து ஒருவாறு வருத்தமொழிந்த கோத மை தன்மகனைச் சுடுகாட்டிற் சேர்த்துவிட்டு இறந்துபோயினுள்.

"அப்பால், சம்பாபதியின் வன்மையை யாவருக்கும் புலப் படுத்த வேண்டி, எல்லாத்தேவர்களும் கூடியவிடத்து அவர்கள் கூடியதற்கு அறிகுறியாக, இவ்வுலகின் நடுவேயுள்ள மேருமலையும் அதனைச் சூழ்ந்த ஏழுசிறுமலைகளும் நான்குபெருந்தீவுகளும் இரண் டாயிரம் சிறுதீவுகளும் மற்ற இடவிசேடங்களுமாகிய இவற்றைப் புலப்படுத்தி ஆங்காங்கு வாழ்பவர்களுடைய உருவங்களையும் வகுத்து மயனுல் நிருமிக்கப்பட்டதாதலின், சக்கரவாளக்

கோட்டமெனப் பெயர்பெற்றது; இது சுடுக்காட்டைச் சூழ்ந்த மதிலின்புறத்தே யுள்ளதாதலாற் சுடுகாட்டுக்கோட்டமென்று எல்லாராலும் கூறப்படும்; இதன் வாலாறு இதுவாகும்" என்றுசொல்லக் கேட்டுக்கொண்டிருந்த மணிமேகலை "மனிதர் வாழ்க்கை இத்தன்மைத்து" என்றுசொல்லுள்; அவள் அங்கே அப்படியிருக்கையில், சுதமதி தூங்குதலுறறனள்; அப்பொழுது அத்தெய்வம் தன்வித்தையால் மயக்கி மணிமேகலையைத் தழுவியெடுத்துக் கொண்டு ஆகாயவழியே முப்பதுயோசனையளவு தெற்கேசென்று கடல் சூழ்ந்த மணிபல்லவமென்னும் சிறுதீவையடைந்து அதில் அவளை வைத்துவிட்டுச் சென்றது.

எ.—துயிலெழுப்பியகாதை.

சென்ற மணிமேகலாதெய்வம், "விடிந்தால் மணிமேகலையை எப்படியும் நான் அகப்படுத்திக்கொள்வேன்" என்று எண்ணிக் கொண்டு காமபரவசனுய்த் துன்பமுற்றுத் தூங்காமலேயிருந்த உதயகுமான் முன்னேசென்று, அவன்காண நின்று,

".....மன்னவன் மகனே
கோணிலை திரிந்திடி த் தோணிலை திரியும்
கோணிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்
மாரிவறங் கூரிற் மன்னுயி ரில்லை
மன்னுயி ரெல்லாம் மண்ணுள் வேந்தன்
தன்னுயி ரென்னுந் தகுதியின் ரூகும்
தவத்திறம் பூண்டோ டம்மேல் வைத்த
அவத்திற மொழிக" (எ - கசு)

என்று அவனுக்குச் சொல்லிவிட்டுப் பின்பு உவவனஞ்சென்று அங்கே தூங்குகின்ற சுதமதியையெழுப்பி, "யான் மணிமேகலா தெய்வம்; இங்ஙகரில் நடக்கும் இந்திரவிழாவைக் காணுதற்கு வந்தேன்; நீ அஞ்சாதே; பௌத்தசமயவழியே செல்லுதற்குரிய நற்காலம் மணிமேகலைக்கு உண்டாயிற்று: ஆதலால், அவளை எடுத்துக்கொண்டுசென்று மணிபல்லவத்தில் வைத்தேன்; தன்னுடைய முற்பிறப்பில்நிகழ்ந்த செய்தியையும் அறிந்துகொண்டு அவள் இற்றைக்கு ஏழாவதுநாளில் இங்கே வந்துசேருவாள். இங்ஙகரில் வேறு வடிவங்கொள்வளாயினும் அவள் உனக்கு ஒளிப்பாளல்லள்; அவள்

இங்கே புகும்காலில் இக்ஙகரின்கண்ணே பல அற்புதங்கள் நிகழும்; நான் வந்ததையும் மணிமேகலை நல்லவழியிற்சென்றதையும் மாதவிக்குச் சொல்வாயாக; மாதவி முன்னமே என்னையறிவாள்; கோவலன், 'நமது குலதெய்வத்தின் பெயரை இக்குழந்தைக்கு இடுக' என்றுசொல்லி, என்பெயரை இவளுக்கு (மணிமேகலைக்கு) வைத்த நாளின் இரவில் மாதவியின்கனவிற்சென்று, 'காமன் செயலற்றுவருங்கும் வண்ணம் ஆசையை மூற்றக்கெடுக்கும் தவமாதைப்பெற்றாய்' என்று நனவிற்கூறுவதுபோல யான் கூறியதுண்டு; இதனையும் அவளுக்கு நினைப்பூட்டுவாயாக" என்று கூறிப்போயிற்று.

அப்பாற் சுதமதியெழுந்து மணிமேகலையின் பிரிவால் வருந்தி அச்சோலையைச்சூழ்ந்த மதிலின்மேற்கேயுள்ள சிறியவாயில் வழியே சென்று சக்கரவாளக்கோட்டத்தையடைந்து ஆங்குள்ள உலகவறவியின் ஒரு பக்கத்தேயிருந்தாள்; அவள் அப்படியிருக்கும்பொழுது அவ்விடத்தே தூணிலுள்ள பாவையொன்றை அதிஷ்டித்திருக்கும் தெய்வமொன்று, சுதமதிமயங்கி அஞ்சும்படி,

"இரவி னன்ம லெருபெரு மகளோ
துரகத் தானைத் துச்சயன் தேவி
தயங்கிணர்க் கோதைத் தாரை சாவற
மயங்கி யானைமுன் மன்னுயிர் நீத்தோய்
காராளர் சண்பையிற் கௌசிகன் மகளோ
மாருத வேகனே டிக்ஙகர் புகுந்து
தாரை தவ்வை தன்னெடு கூடிய
வீரை யாகிய சுதமதி கேளாய் (கூஅ - கo)

உன் தங்கையாகிய இலக்குமி தன்னுடையமுற்பிறப்பையும் உன்னுடையமுற்பிறப்பையும் அறிந்துகொண்டு இற்றைக்கு ஏழாநாளிரவில் இக்ஙகரத்தே வருவள்; அவள் பிரிந்ததுபற்றி நீ அஞ்சற்க" என்று தன்னுடைய வாக்காற் கூறிற்று; அதனைக்கேட்டு மனமடுங்கிய சுதமதி, பொழுதுபுலருமளவும் அவ்விடத்தேயிருந்து சூரியன் உதித்தவுடன் எழுந்து புறப்பட்டு வீதிவழியேசென்று மாதவியையடைந்து முதனாளில் நிகழ்ந்தவற்றைச் சொன்னவுடனே அவள் மாணிக்கத்தையிழந்த நாகம்போன்று மிக்க துயரத்தோடிருந்தாள்; சுதமதி, மணிமேகலையின் பிரிவாற்றுமையால் உயிரிழந்த உடம்புபோலச் செயலற்றிருந்தனள்.

அ.—மணிபல்லவத்துத்தியநற்றகாதை.

சுதமதி இங்கே இப்படியிருக்க, மணிபல்லவத்திற் கடலருகே மணலிற்றுயின்ற மணிமேகலை, துயிலுணர்ந்து தனக்குத் தெரிந்த பொருள் யாதொன்றும் அங்கே காணப்படாமையால், தான் முன் பிருந்த இடத்தைத் துறந்து வேற்றிடத்துச் சென்று பிறந்த உயிர் போன்றவளாகித் திகைத்துக்கொண்டிருக்கையிற் சூரியன் உதித் தான்; உதித்தவுடன் அவள், "இவ்விடம், உவவனத்தில் முன்னம் கண்டறியப்படாத ஒருபகுதியோ!

சுதமதி யொளித்தாய் துயரஞ் செய்தனை
னனவோ கனவோ வென்பதை யறியேன்
மனநடுக் குறூஉ மாற்றந் தாராய்
வல்லிருள் கழிந்தது மாதவி மயங்கு
மெல்லவீ வாராய் விட்டகன் றனையோ ! (உo - உச)

இது, மாயவித்தையோடிதோன்றிய அம்மடந்தைசெய்த வஞ்சமோ! ஒன்றும்தெரியவில்லையே! தனியேயிருத்தற்கு மிகவும் அஞ்சுகின் றேன்; நீ விரைந்து வருவாயாக" என்று சொல்லிக்கொண்டு, பல நீர்த்துறைகளிலும் பல மணற்குன்றங்களிலும் சென்று தேடித் தனக்குத்தெரிந்த ஒருவரையுங் காணுதவளாகிக் கூக்குரலிட்டு அழுதுவருந்துபவள், தன் தந்தையைநினைந்து,

"கோற்றொடி மாதரொடு வேற்றுரு டடைந்து
வைவா ளுழந்த மணிப்பூ ணகலத்
தையா வோ" என் றழுவோண் முன்னர், (சக - ரு)

இந்திரனுலிடப்பட்டதம் தரிசித்தோர்க்குப் பழம்பிறப்பைத் தெரி விப்பதுமாகிய புத்தபீடிகை தோன்றியது.

கூ.—பீடிகைகண்டு பிறப்புணர்ந்தகாதை.

தோன்றலும், அதனைக்கண்ட மணிமேகலை, விம்மிதத்தால் தன்னை அறியாளாயினுள்; அவளுடையகைகள் தலைமேற்குவிந்தன; பின்பு ஆனந்தக்கண்ணீரையுகுத்து அப்பீடத்தை மூன்றுமுறை வலம்வந்து பணிந்து எழுபவள், அப்பீடிகைக் காட்சியால் தன்பழம் பிறப்பில் நிகழ்ந்த செய்திகளையறிந்து, "மாதவ! உறுதிப்பொருளை யுணர்ந்தோய்! காயங்கரையென்னும் நதிக்கரையில் நீசொல்லியவெல் லாம் உண்மையாதலை விளங்க அறிந்தேன்:—காந்தாரமென்னும்

பெரியதொரு காட்டிலுள்ள பூருவதேசத்தில் இடவயமென்னும் நகரை இராசதானியாகக்கொண்டு அரசுபுரிந்துவாழும் அத்திபதி யென்னும் அரசனுடைய மைத்துனனுகிய பிரமதருமன்! நீ அவ்வரச னிடத்திற் சென்று தருமோபதேசம்புரிகையில், 'இச்சம்புத்தீவில் இற்றைக்கு ஏழாம் நாளில் பூகம்பமுண்டாகும்; உண்டாகும் பொழுது இந்நகரும் நாகநாட்டில் நானூறு யோசனைப்பரப்பும் பாத ளத்தில்வீழ்ந்து கெட்டொழியும்; ஆதலால், நீ இந்நகரத்தைவிட்டு விரைவில் வேறுநகரம் புகுவாய்' என்று சொல்ல, அவன் நகரத்தார் யாவருக்கும் அச்செய்தியைப் பறையறைவித்துச்சாற்றி எல்லாருட னும்அந்நகரைநீங்கி அதற்கு வடக்கேயுள்ள அவந்திநகரம் செல்லு தற்குப் புறப்பட்டு வழிக்கொண்டு இடையேயுள்ள காயங்கரையென் னும் நதிக்கரையை அடைந்து அங்கே பாடிவீடு செய்துகொண் டிருந்தபொழுது, ஐயா! நீ உரைத்தபடியே குறித்த நாளிற் பூகம்ப முண்டாக இடவயநகரம் அழிந்துபோயிற்று; அதுதெரிந்த அரச னும் மற்றையோரும் உன்பால் அன்புபிக்கு உன்னைச் சரணமடை ந்து சூழ்ந்துநின்ற காலத்தில், அவர்களுக்கு முத்திவழியை உப தேசித்துக்கொண்டிருந்தாய்; இருந்தபொழுது, அசோதரநகரத்தரச னுகிய இரவிவன்மனென்பவனுடைய தேவியான அமுதபதியென்ப வள் வயிற்றிற்பிறந்து இலக்குமியென்று பெயர் பெற்று, அத்திபதி யென்னுமரசனுக்கு நீலபதியென்பவள்பாற் பிறந்த இராகுலனுக்கு மனைவியாய்ப் புக்க யான் என் கணவனைநோடி வந்து தருமங்கேட்டற் பொருட்டு வணங்கியவுடன், நீ என்னை நோக்கி, 'இவ்விராகுலன் இற்றைக்குப் பதினுறும்நாளில் திட்டிவிடமென்னும் பாம்பால் இறப்பான்; நீ இவனைநோடி நீயிற் புகுவாய் ; புகுந்து, பின்பு காவிரிப் பூம்பட்டினத்திற் சென்று பிறப்பாய்; அவ்விடத்தில் உனக்கு ஒரு துன்பம் வரும்; அப்பொழுது மணிமேகலாதெய்வம்வக்துதோன்றி நள்ளிரவில் உன்னையெடுத்துக்கொண்டு சென்று காவிரிப்பூம்பட்டி னத்திற்குத் தெற்கே கடலிலுள்ள சிறுதீவொன்றில் வைத்துவிட்டுச் செல்லும்; சென்றபின் ஆங்குள்ள புத்தபீடிகையைத் தரிசித்துத் தொழுவாய் ; தொழுதவுடன் உனது முற்பிறப்பில் நிகழ்ந்தசெய்தி களையறிந்து இன்று நான் சொன்ன மொழிகளையும் தெரிந்து கொள்வாய்' என்றுசொல்ல, 'என் கேள்வன் இன்னவாறு பிறப்பா னென்பதையும் தெரிவிக்க வேண்டும்' என்றுகேட்டேன்; கேட்ட

எனக்கு,'உன்னைக்கொண்டு சென்ற தெய்வம் மீண்டுந்தோன்றி உனக்கு அதனைப் புலப்படுத்தும்' என்று அருளிச்செய்தாய்; அத்தெய்வம் வரவில்லையே!" என்று ஏங்கி அழுதுகொண்டிருந்தாள்.

கo.—மந்திரங்கொடுத்தகாதை.

மணிமேகலை இப்படியிருக்கையில்,—புத்தபீடிகைக்காட்சியால் இவள் பழம்பிறப்பையறிந்தாள்; இவளுடையஇயற்கையும் அழகியது—என்றெண்ணிக்கொண்டு ஆகாயத்தினின்றும் இறங்கி வந்த மணிமேகலாதெய்வம், அவள்கேட்கும்படி,

"உயிர்க ளெல்லா மூணர்வுபா ழாகிப்
பொருள்வழங்குசெலித்துலே தூர்த்தறி விழந்த
வதற்தலே யுலகத் தறம்பாடு பிறக்கச்
சுடர்வழக் கற்றுத் தடுமாறு காலையோர்
இளவள ஞாயிறு தோன்றிய தென்ன
நீயோ தோன்றினை நின்னடி பணிந்தேன்
நீயே யாகுகிற் கமைந்தனிவ் வாசனம்
நாமிசை வைத்தேன் தலைமிசைக் கொண்டேன்
பூமிசை யேற்றினேர் புலம்பற" (எ - கடு)

என்றுபுத்ததேவருடைய பீடிகையைஅவராகவேமதித்துத் துதித்து வலம்வந்து பூசித்து வணங்கியது ; வணங்கிய தெய்வத்தை மணிமேகலை வணங்கி, "உன் திருவருளால், என்னுடைய முற்பிறப்பை அறிந்தேன்; அப்பிறப்பிற் கணவனாயிருந்த இராகுலன் எங்கேபிறந்துளன்?" என்றுகேட்டாள்.

கேட்டவளுக்கு அத்தெய்வம், "இலக்குமி! கேட்பாயாக; நீ ஒருநாள் சோலையொன்றில் இராகுலனோடு ஊடியிருந்தாய்; இருந்த பொழுது அவன் ஊடலைத்தீர்த்தற்கு உனதடியைவணங்கினான்; வணங்குகையில், இரத்தினத்தீவஞ்சென்று அங்கே தருமசக்கரத்தைப் பிரவிருத்திக்கச்செய்துவிட்டு வருபவனாகிய சாதுசக்கரனென்னும் பௌத்தசாரணமுனிவனொருவன் உச்சிப்பொழுதில் ஆகாயத்தினின்றும் இறங்கிவர, நீ அவனைக்கண்டு மெய்நடுங்கி மயங்கிக் கலங்கி ஒல்கிப் பணிந்தாய்; அதுகண்ட இராகுலன், 'இங்கே வந்தவன்யார்?' என்று கோபித்துச்சொல்லும், நீ அஞ்சி நடுநடுங்கி அவன்வாயைப்பொத்தி, 'ஆகாயத்தினின்றுமிறங்கியிப்பெரியோனுடைய மலரடியை வணங்காமலும் இவனைத்துதியாமலும் இருந்தது எவ்வளவுபெரும்பிழை?' என்று அவனுக்குச்சொல்லி அவனோடும்

அம்முனிவனுடைய பாதங்களே வணங்கி, 'யாங்கள் தேவரீருடைய அடியேமல்லேமாயினும்,

அந்தீந் தண்ணீ ரமுதொடு கொணர்கேம்; (கூ-எ)

அமுதுசெய்தருள்க; தேவரீருடைய திருவுளப்பாங்கின்படியே கூடத் தற்கு உரிமையுடையேம்' என்று தெரிவித்தலும், அம்முனிவன், 'தாயே! உண்பேன்; இங்கே கொண்டுவருக' என்று சொல்ல, நீ உடனே அவற்றைக் கொணர்ந்து அவனே உண்பித்தாய்;

அங்கா ளவனுண் டருளிய வவ்வமிழ்தம்
நின்னுங் கொழியாது நிற்பிறப் பறுத்திடும்; (சo - சக)

அவ்விராகுலனே உவவனத்தில் உன்பால்வந்த உதயகுமரன் அதனாலேதான் அவனுடையமனம் உன்னே விரும்பியதன்றி உன் மனமும் அவனே மிகப்பற்றியது; அந்தப்பற்றை மாற்றி நல்வழிப் படுத்தற்கு நீனேந்து உன்னே இத்தீவிற்கொணர்ந்து வைத்து இப் பீடிகையைக் காட்டினேன்; இலக்குமீ! இன்னுங்கேட்பாயாக; மூற்பிறப்பில் உன்னுடைய தமக்கைமாராயிருந்த தாரையையும் வீரையையும் அங்காட்டுள்ள கச்சயாகரத்தரசனுகிய துச்சய னென்பவன் மணஞ்செய்துகொண்டு ஒருநாள் அவர்களோடு சென்று மலேவளங்களேக்கண்டு வந்து கங்கைக்கரையை அடைந் திருந்தபொழுது, அறவணவடிகள் அங்கே வரக்கண்டு உடனே எழுந்து வணங்கிய அவன், 'தேவரீர் யாவிர்? எங்கே எழுந்தருளி யது?' என்றுகேட்க, அவர் 'பாதபங்கயமலேயைத் தரிசித்தற்கு வந் தேன்; ஆதிகாலத்தே புத்ததேவர் எல்லாவுயிர்களும் துக்கத்தி னின்றும் நீங்கி இன்புற்றிருக்கவேண்டுமென்று நினேந்து அவை கள் யாவும் கேட்டு மகிழும்படி அம்மலேயின் உச்சியில் நின்று கொண்டு தருமோபதேசஞ் செய்தபொழுது அவருடைய பாதச் சுவடுகள் தங்கப்பெற்றமையால், அஃது அப்பெயரையுடையதா யிற்று; குற்றமற்ற அறிவுடையீர்! நீங்களும் அதைத்தரிசித்து வழிபடுமின்' என்று கூறினர்; அவர் கூறியவாறு உடனேசென்று அம்மலேயையடைந்து தரிசித்த புண்ணிய விசேடத்தால் தாரையும் வீரையும் முறையே மாதவியாகியும் சுதமதியாகியும்வந்து உன் னேடுகூடினர்; மணிமேகலே! நீ பழம்பிறப்பையறிந்தாய்; தரு மத்தின்தோற்றத்தையும் தெரிந்துகொண்டாய்; மற்றைச்சமய வாதிகளுடைய கொள்கைகளேயும் இனி ஒருகாலத்திற் கேட்பாய்;

அங்ஙனம்கேட்கும்பொழுது, உன்னை, 'இளமைப்பருவத்தினள்' என்று நினைந்து அவர்கள் தத்தம் சமயஉண்மைகளைச்சொல்லார்கள்; ஆதலால், அக்காலத்து நீ வேற்றுவடிவங்கொள்ளவேண்டுவது இன்றியமையாதது' என்றுகூறி வேற்றுவடிவைக்கொடுப்பதும் ஆகாயவழியே சஞ்சரிக்கச்செய்வதுமாகிய மந்திரங்கள் இரண்டை அவளுக்கு உபதேசித்து, 'நீ புத்ததேவராருளிச் செய்தருல்லற வழியை நணுகுதல் ஒருதலையென்று உணர்வாயாக; இப்பீடிகையை வணங்கித்துதித்து ஊர் செல்வாயாக' என்று சொல்லிவிட்டு மேலே செல்லுதற்கு எழுந்து, 'இன்னும் ஒன்றைச் சொல்லமறந்துவிட்டேனே' என்று மீட்டும் இறங்கிவந்து, 'சிறந்த விரதவொழுக்கமுடையாய்! கேட்பாயாக; மக்கள் யாக்கை உணவாலாகிய தொகுதி; இம்மந்திரமோ பசியைத்தொலைக்கும்; இதனைக் கொள்வாயாக' என்றுசொல்லி அம்மந்திரத்தை அவளுக்கு உபதேசித்துவிட்டு எழுந்து ஆகாயவழியே சென்றது.

கக.—பாத்திரம்பெற்றகாதை.

அப்பால், மணிமேகலை அத்தீவிலுள்ள மணற்குன்றுகளையும் பூஞ்சோலைகளையும் குளிர்ந்த பொய்கைகளையும் பார்த்துக்கொண்டு மெல்ல உலாவிவருகையில், ஒருத்திவந்துநின்று, ''கப்பல் கவிழப்பெற்ற மகளிர்போல இங்குத்தனியேவந்த நீ யார்?'' என்று கேட்டாள்.

மணிமேகலை, ''பொற்கொடிபோல்வாய்! 'நீ யார்' என்றது, என்னுடைய எந்தப் பிறப்பின் செய்தியைத் தெரிந்து கொள்ளுதற்கு? கேட்பாயாக; சென்றபிறப்பில் இலக்குமியென்னும் பெயரையுடையேன்; இராகுலனென்னும் அரசிளங்குமரனுக்கு மனைவியாயிருந்தேன்; இப்பிறப்பில் நாடகக்கணிகையாகிய மாதவியின் வயிற்றிற்பிறந்தேன்; என்பெயர் மணிமேகலையென்பது; மணிமேகலாதெய்வம் காவிரிப்பூம்பட்டினத்துள்ள உவவனத்திலிருந்து இத்தீவிற் கொண்டுவந்து வைத்தமையால், இந்தப் பீடிகையைத் தரிசித்து முற்பிறப்பை அறிந்துகொண்டேன்; இங்கே வந்தமையால் நான் அடைந்தபயன் இது; என்னுடைய வரலாறும் இதுவாகும்; பூங்கொடிபோல்வாய்! உன் வரலாறு யாது?'' என்று கேட்டவுடன் அவள், ''இத்தீவிற்கு அயலிலுள்ளதான

இரத்தினத்தீவத்திலே மிகஉயர்ந்து விளங்காகின்ற சமந்தகூட மலையின் உச்சியிலேயுள்ள புத்ததேவரது அடியிணைப்படிமை களைத் தரிசித்துவிட்டு இத்தீவிற்கு முன்னொருகாலத்தில் வந் தேன்; வந்தமுதல் இந்திரன் கட்டளையால் இந்தத்தருமபீடிகை யைக் காத்துக்கொண்டு இவ்விடத்திலேயே இருக்கிறேன்; என் பெயர் தீவதிலகையென்பது; புத்ததேவரருளிச்செய்த நல்லற வழியே நடப்போர் யாரேனும் இதனைத்தரிசிப்பாராயின் அவர்கள் அந்தத் தரிசனவிசேடத்தால் உடனே தம்முடைய பழம்பிறப் புணர்ச்சியை அடைவது திண்ணம்; அத்தன்மையினையுடையோர் உலகத்தில் மிக அரியர்; அவர்களுக்கே தருமபதம் உரித்து; இஃது உண்மை; பழம்பிறப்புணர்ச்சியை அடைந்தமையால், நீ மிகவும் பெரியை; இந்தப் பீடிகைக்குமுன்னே மாமலர்க்குவளையும் செய்த லும் மயங்கிய கோமுகியென்னும் கொழுநீரிலஞ்சியொன்று உள் ளது; அப்பொய்கையினுள்ளேயிருந்து அமுதசுரபியென்னும் அக்ஷய பாத்திரமானது ஒவ்வொருவருடத்தும் புத்ததேவர் அவதரித்த காலமாகிய வைசாக சுத்த பூர்ணிமைதோறும் மேலேவந்து தோன்று நிற்கும்; இத்தினம் அப்பூர்ணிமையே; அதுதோன்றும்வேளையும் இதுவே; இப்பொழுது அந்தப்பாத்திரம் உன்கையில் வருமென்று எண்ணுகிறேன்; அதிலிடப்பட்ட அன்னம் எடுக்க எடுக்க மேன் மேலும் வளர்ந்துகொண்டேயிருக்கும்; அதன் வரலாற்றை உன் ஊரிலுள்ள அறவணவடிகளிடத்தே இனிக்கேட்பாய்" என்று சொல் லலும், மணிமேகலை அதைப்பெறுதற்கு விரும்பிப் புத்தபீடிகையை வந்தித்து அவளோடு சேர்ந்துசென்று கோமுகிப்பொய்கையை வலஞ் செய்துவந்து நின்றவுடன், அப்பாத்திரம் அப்பொய்கையினுள்ளி ருந்து மணிமேகலையின் கையை அடைந்தது; உடனே அவள் அளவு கடந்த மகிழ்ச்சியுற்று நின்று,

"மாரனை வெல்லும் வீர நின்னடி
நீகெழுக் கடும்பகை கடிந்தோய் நின்னடி
பிறர்க்கற முயலும் பெரியோய் நின்னடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி
எண்பிறக் கொழிய இறந்தோய் நின்னடி
கண்பிறர்க் களிக்குங் கண்ணோய் நின்னடி
நீமொழிக் கடைத்த செவியோய் நின்னடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி
நரகர் துயர்கெட நடப்போய் நின்னடி

உரகர் துயர மொழிப்போய் நின்னடி
வணங்குத லல்லது வாழ்த்தலென் னுவிற்
கடங்காது" (சுக - எஉ)

என்று புத்ததேவரைத் துதித்தாள்; இங்ஙனந்துதித்த மணிமேகலைக்கு உயிர்களுடைய பசித்துன்பத்தையும் அதனைத் தீர்ப்போருடைய பெருமையையும் தீவதிலகை சொல்லப்புகுந்து,

"குடிப்பிறப் பழிக்கும் வீழ்ப்பங் கொல்லும்
பிடித்த கல்வியிற் பெரும்பூண் வீழ்உம்
நாணுநி கோயு மாணெழில் சிதைக்கும்
* * * புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோர்
இசைச்சொ லமைவுக் கென்ன நிமிராது; (எசு - அக)

முன்னொருகாலத்தில், மழையே இல்லாதுபோனமையால், பசியால் வருந்திய கௌசிகமுனிவர் அதனைத் தீர்த்துக்கொள்ளுதற்கு எங்குந்திரிந்து சிறிதும் உணவுகிடையாததுபற்றிமெலிந்து பின் காயிறைச்சியைப் பெற்றுத் தின்னப்புகுந்து, முதலில் அவ்விறைச்சியின் ஒருபகுதியைத் தெய்வங்கட்குப் பலியிடுவாராயினர்; அது தெரிந்த இந்திரன் உடனே எங்கும் மழைபெய்யச்செய்தமையால், உயிர்கள் களித்துவாழும்படி விளைவுபெருகியதென்பர்; அதனை நீ கேட்டிருப்பாயே.

ஆற்றுநர்க் களிப்போ ரறவிலை பகர்வோர்
ஆற்று மாக்க ளரும்பசி கூர்வோர்
மேற்றே யுலகின் மெய்க்கெதி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே: (கூஉ - சு)

ஆதலால், பசியைப்போக்கி உயிரைக்கொடுத்தலாகிய தருமத்தைச் செய்வாய்" என்று கூறினள்; அதுகேட்ட மணிமேகலை, "போன பிறப்பில் என்கணவனுகிய இராகுலன் திட்டிவிடமென்னும் பாம்பாலிறந்தது பொருமல், யான் தீப்பாய்ந்து உயிரோடு வேவாநிற்கையில் முன்னம் சாதுசக்கரமுனிவனே உண்பித்த நினைவையுடையேனுனேன்; இறக்குங்காலத்தில் எனக்கு அங்ஙனேப்பிருந்த புண்ணிய விசேடத்தாலேயே இந்தப்பாத்திரம் என்கையிற் புகுந்ததென்று எண்ணுகிறேன்; இதுநிற்க, பசியால்வாடிய குழந்தையின் முகத்தைக்கண்டு மனமிரங்கிப் பால்சுரக்கும் தாய்போலவே வயிறுகாய் பெரும்பசி அலைத்தற்கு இரங்கி வெயிலென்றும் மழையென்றும்

பாராமல் எங்கும்வாடி அலைந்துதிரியும் ஏழைகளுடைய முகத்தைக்கண்டு இரங்கி இப்பாத்திரம் மேன்மேலும் அவர்களுக்கு அமுது சுரந்தளித்தலைக் காணும் விருப்பமுடையேன்" என்று சொல்லக்கேட்டு மகிழ்ந்த தீவதிலகை, அவளோடு பின்னும் சில நேரம் அளவளாவிக் கொண்டிருந்து, "இனி இப்பாத்திரத்தோடு உன் ஊருக்குச் செல்வாயாக" என்றுசொல்ல, மணிமேகலை, அவள் பாதத்தை வணங்கிப் புத்தபீடிகையைத்தொழுது வலஞ்செய்து ஆகாயகமனமந்திரத்தை ஜபித்து மேலேயெழுந்து ஆகாயவழியே சென்று, தன்னைக்காணாது வருந்தித் திகைத்து மயங்கி வழியை நோக்கிக்கொண்டே நிற்கும் சுதமதியையும் மாதவியையும் பார்த்து, வியப்படையும்வண்ணம் அவர்களுடைய முற்பிறப்பை அவர்களுக்கு அறிவித்து, "மானிடயாக்கையாற் பெறுதற்குரிய தவவழியை அறவணவடிகளிடத்தே இனிப் பெறக்கடவீர்; இஃது ஆபுத்திரனுடைய கையிலிருந்த அமுதசுரபியென்னும் அக்ஷயபாத்திரமாகும்; இதனைத் தொழுமின்" என்றுசொல்லி அதனை அன்புடன் தொழுத அவர்களை அழைத்துக்கொண்டு அறவணவடிகளைத் தரிசித்தற்குச் சென்றாள்.

கஉ.— அறவணர்த்தொழுதகாதை.

சென்றவள், "அறவணவடிகள் எங்கேயுள்ளார்?" என்று விசாரித்துக்கொண்டு போய்,

கரைமுதிர் யாக்கை நடுங்கா நாவின்
உரைமூ தானை வளைவிடங் குறுகி, (கஉ - ச)

அவரைத் தரிசித்து மும்முறை பணிந்து துதித்துத் தான் உவவனஞ்சென்றதும், உதயகுமரன் அங்கே வந்து சொல்லிப் போனதும், பின்பு மணிமேகலாதெய்வம் தன்னையெடுத்துச்சென்று மணிபல்லவத்தில் வைத்ததும், அத்தீவிலுள்ள புத்தபீடிகைக்காட்சியால் தன் பழம்பிறப்பைத் தானறிந்துகொண்டதும், 'முற்பிறப்பிற் கணவனுயிருந்த இராகுலனே உதயகுமரனாக வந்துபிறந்தான்; அப்பிறப்பில் உனக்குத் தமக்கைகளாக இருந்த தாரையும் வீரையுமே மாதவியும் சுதமதியுமாக வந்தனர்; அவர்கள் வரலாற்றை அறவணவடிகள்பால் நீ தெரிந்துகொள்' என்று மணிமேகலாதெய்வஞ்சொல்லி மூன்றுமந்திரங்களை உபதேசித்துச் சென்ற

தும், அப்பால் தீவதிலகை வந்ததும், அவளுடன் சென்று கோமுகிப் பொய்கையிலிருந்த அமுதசுரபியைப்பெற்றதும், 'ஊருக்குச்சென்று அறவணவடிகள்பால் ஆபுத்திரன் வரலாற்றைக்கேள்' என்று அத்தீவதிலகை சொல்லத் தான் வந்ததும் ஆகிய இவற்றையெல்லாந்தெரிவிக்க, அம்முனிவர்கேட்டு மகிழ்ந்து, "மூன்பு ஒருமுறை நான் பாதபங்கயமலையை வழிபட்டு மீண்டுவருகையில் அச்சயராசனை ஒரு சோலையிற்கண்டேன்; 'அரச! நீயும் உன்மனைவியரும் சுகமோ?' என்று யான்வினவ, அவன் மனங்கலங்கி அரற்றிக்கொண்டு, வீரை மதுவின்மயக்கத்தால் ஒருயானைமூன் சென்று இறந்ததும் அச்செய்தியைக்கேட்டு வருந்திய தாரை ஒருமாடத்தின் மீதேறி வீழ்ந்து மரித்ததுமாகிய பெருந்துன்பத்தைக்கூறி வருந்தினன்; நான், 'இது பழவினைப்பயனுகும்; ஆதலால், நீ வருந்தாதே' என்று சொல்லிப்போந்தேன்; அங்ஙனமிருந்த நீவிர் இப்போது கூத்தரைப்போல வேறுவேடம் பூண்டுவந்தீர்கள்" என்று மாதவியையும் சுதமதியையும் பார்த்துச்சொல்லிவிட்டு, பின்னும் மணிமேகலையைப்பார்த்து, "இவ்வுலகிற் பௌத்ததருமங்கள் குறையப் பாவங்கள் மிகுந்தன; ஆனலும் சிறிதுசிறிது தருமமுண்டாதலுங் கூடுமென்றுஎண்ணி நான்தருமத்தை உபதேசித்துவருதலுமுண்டு; அத்தருமத்தை இவ்வுலகத்திலுள்ள மாந்தரறியார்; இவ்வுண்மையையறிந்த இச்சக்கரவாளத்துள்ள தேவர்களுடைய வேண்டுகோளால், * ஆயிரத்தமுநூற்றுப் பதினைஞ்சும் ஆண்டில் துஷிதலோகத்திலுள்ள தேவன் இவ்வுலகத்தில் அவதரிப்பான்; அதற்குப்பின்பு யாவருக்கும் அருளறத்தில் மனஞ்செல்லும்;

புத்த ஞாயிறு தோன்றுங் காலைத்
திங்களு ஞாயிறும் நீங்குரு விளக்கத்
தங்கா ஞாண்மீன் றகைமையி னடக்கும்
வானம் பொய்யாது மாரிலம் வாம்படும்;
ஊருடை யுயிர்க்கரு துயர் காணு;
வளிவலங் கொட்கு மாதிரம் வாமபடும்;
நளியிரு முந்நீர் நலம்பல தருஉம்;
கதனெகழ் ஞாற்றிக் கலிங்கமு பொழியும்;
பதவை பயன்றுய்த் துறைபதி நீங்கா;
விலங்கு மக்களும் வெரூஉப்படைக நீங்கும்;

* இங்கே கூறப்பட்டுள்ள ஆண்டு இன்னசகாப்தத்தைச் சார்ந்ததென்று புலப்படவில்லை.

கலக்களுர் ஈரகரும் பேயுங் கைவிடும்;
கூனுங் குறளு மூமுஞ் செவிடும்
மாவு மருளு மன்னுயிர் பெறுஅ;
அங்ஙாட் பிறந்த னருளறங் கேட்டோர்
இன்னுப் பிறவி யிகக்தோ ராதலிற்
போதி மூலம் பொருந்திய சிறப்பின்
ஈாதன் பாத கவைகெட வேத்துதல்
பிறவி தோறு மதவேன் மடக்கொடி! ; (உசு - கoஉ)

"இதுநிற்க ; மணிமேகலை! இங்ஙகரத்தில் உன்னுலே சில விசேடங்கள் நிகழ்வனவாம்; அவை நிகழ்ந்தபின்பன்றி யான்கூறும் தருமமொழி உன்மனத்திற் பொருந்தாது; இவ்விருவரும் மூற்பிறப் பிற் பாதபங்கயமலையை வழிபட்ட புண்ணிய விசேடத்தால், பிற் காலத்தில் உன்னுேடுகூடிப் புத்ததேவரது திருவடியைத்தொழுது வணங்கி வினைகளினின்றும் நீங்கி முத்தியை அடைவார்கள்; உயிர் மருந்தாகிய மிகச்சிறந்த அமுதசுரபியை நீ பெற்றனை ; எல்லாவுயிர் களுடைய பசியையும் தீர்ப்பாயாக;

மக்க டேவ ரெனவிரு சார்க்கும்
ஒத்த முடிவி னுேரை முரைக்கேன்
பசிப்பிணி தீர்த்தல் எல்லே யவரும்
தவப்பெரு கல்லதஞ் சாற்றினர். (ககசு - கூ)

மணிமேகலையும் 'அங்ஙனமே செய்வேன்' என்றுள்

கஉ.—ஆபுத்திரன் திறமறிவித்தகாதை.

பின்பு அறவணவடிகள் மணிமேகலையை நோக்கி, " ஆபுத்தி ரன் வரலாற்றைக்கூறுவேன்; கேட்பாயாக; வாரணசியென்னுமூரில் வேதமோதுவிப்பவனுகிய அபஞ்சிகனென்னும் அந்தணன் மனைவி, சாலியென்பாள்; அவள் நியமத்தப்பி ஒழுகினமையால் உண்டாகிய பாவத்தைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு, தான் கர்ப்பிணியாக இருந்தும் அதைப்பாராமல் கன்னியாகுமரிக்கு ஏரோடச்சென்றுள்; சென்றவள் சூலால் வருந்தி வழிபிடையே ஒரு குழந்தையைப் பெற்று, அக்குழந்தையிடத்திற் சிறிதும் இரக்கம்வையாமல் அதனை ஒரு தோட்டத்தில் இட்டு நீங்கினள்; நீங்கவே அக்குழந்தை உணவு பெறுது பசியால் வருந்தியழுதது, அவ்வழுகையோசையைக்கேட்டு ஒருபசுவானது வந்து அதன் வருத்தந்தீரும்படி நாவால் நக்கிப் பாலூட்டி ஏழுநாள் வரையும் அப்புறஞ்செல்லாது பாதுகாத்து

வந்தது; அப்படியிருக்கையில், வயனங்கோடென்னும் ஊரிலுள்ளவ னுகிய பூதியென்னும் அந்தணனொருவன் தன் மனைவியோடும் அவ்வழியேவருபவன், அக்குழந்தை அழுத கூக்குரலைக் கேட்டுச் சென்று தனியேகிடக்கும் அதனைக்கண்டு மிக்க துன்பத்தோடு கண்ணீர் பெருக்கி, 'இவன் பசுமகனல்லன்; என்மகனே' என்றுகூறி அக்குழந்தையையெடுத்து ஊர்சென்று வீடடைந்து மகிழ்ச்சியுடன்வளர்த்து உரியகாலத்தைத் தன்குலத்திற்குரிய கல்வி களை நன்குபயிற்றிவந்தான்; வருகையில். அச்சிறுவன் ஒருநாள் அவ் வூரில் ஓரந்தணன்வீட்டிற்புகுந்து, யாகசாலையில் ஒருபசு மாலையைச் சுற்றிய கொம்புகளையுடையதாய்ப் பின்பு தனக்குண்டாகும் துன்பத் திற்கு அஞ்சி வெய்துயிர்த்துப் புலம்பி வேடர்களுடைய வலையிற் பட்ட மான்போல அஞ்சிக் கதறுவதைக்கண்டு மனமுடைந்திக் கண்ணீ ருகுத்து, 'இவர்களறியாத வண்ணம் இப்பசுவைக் கவர்ந்துகொண்டு இரவிற்போய்விடுவேன்' என்று தன்னுள் ாண்ணிக்கொண்டே ஒரு பக்கத்தில் ஒதுங்கியிருந்து அன்றிரவில் அப்பசுவைக் கையிற்பற்றி ஊருக்குவெளியே போய்விட்டான்; பசுவைக்காணுத அத்தணர்பலர் அதனைத் தேடிச்சென்று வழியிற் பசுவையும் அதனைக்கவர்ந்து சென்ற அச்சிறுவனையுங்கண்டு அகப்படுத்திக்கொண்டு, அவன் கருத்தையறியாராய், 'புலையா! இப்பசுவை இரவில் ஏன் கவர்ந்து சென்றாய்?' என்று கேட்டு அவனைக் கோலாலடித்து ஒறுக்கத்தொ டங்கினார். அப்பொழுது பசு, அவர்களுள் மிகவும் வருத்திய உவா த்தியாயனைமுட்டி வயிற்றைக்கிழித்துக் குடரைப் புறப்படச்செய்து காட்டிற்கு விசைத்தோடிவிட்டது. ஆபுத்திரன் அவர்களைநோக்கி, 'வருத்தன்மின் ; யான் சொல்வனவற்றைக் கேண்மின் ; நீங்கள் வருத்தும்படி இப்பசு என்னகுற்றஞ் செய்தது?

விடுநில மருங்கிற் படுபுல் லார்த்து
நெடுநில மருங்கின் மக்கட் கெலலாம்
பிறந்தகாட் டொட்டுஞ் சிறந்ததன் றீம்பால்
அறந்தரு மெஞ்சோ டருள்சுரந் தூட்டும்
இதனெடு வந்த செற்ற மெம்மனோர்?' (மணி - 6)

என்றுகேட்க, அவர்கள், 'நீ விதியையறியாமல் வேள்வியை இகழு கின்றாய் ? ஆதலால் பசுமகனென்பதற்குப் பொருத்தமுடையை' என்று இகழ்ந்துகூறலும், ஆபுத்திரன்,

'ஆன்முக னசலன் மான்மகன் சிருங்கி
புலிமகள் விரிஞ்சி புரையோர் போற்றும்
கரிமக னல்லனே கேச கம்பள
னீங்கிவர் நூங்குலத் திருடி கணங்களொன்
றேங்குயர் பெருஞ்சிறப் புரைத்தலு முண்டால
ஆவொடு வந்த வழிகுல முண்டோ' (சுங - ச)

என்றுசொல்ல, அவர்களுள்ளே ஓரந்தணன், "இவனுடைய பிறப்பின் வரலாற்றை யான் அறிவேன்; முன்னொருநாள் கன்னியாகுமரியில் விதிப்படி நீராடிவிட்டு வருத்தத்தோடிவந்த சாலியென்னும் ஒரு பார்ப்பனியைக்கண்டு, 'உன்ஊர் யாது? நீ எதற்காக இங்கே வந்தனை?' என்று நான் கேட்டதற்கு அவள், 'யான், வாரணசியென்னு மூரிலுள்ள ஆரணஉவாத்தியாயனாகிய ஓரந்தணன் மனைவி; யானெழுகிய தீயவொழுக்கத்தாற் கணவனைப்பிரிந்து கன்னியாகுமரிக்கு நீராடச் செல்லுகையில், கொற்கை நகரத்துக்கு அப்பாற் காதவழித் தூரத்திலுள்ள இடையர்சேரியில் ஆண்குழந்தையொன்றைப்பெற்று இரக்கமின்றி அதனை அங்குள்ள ஒருதோட்டத்தில் இட்டுப் போனேன்; இப்படிப்பட்ட தீவினையேனாகிய எனக்கு நற்கதியுண்டோ?' என்று மிகத் துன்புற்று அழுதாள்; அங்ஙனம் அழுத வள்பெற்ற அந்தமகனே இவன்; இதைச் சொல்லுதலால் யாதுபாவனென்று இதுகாறும் உங்களுக்குத் தெரிவிபாதிருந்தேன் அசுத்தனாதலால் இவனைத்தொடாதொழிமின்" என்றுசொல்ல, ஆபுத்திரன், 'திலோத்தமையின் புத்திரர்கள் பெரிய முனிவர்களாக இருத்தல் கேட்டிலிரோ? நீங்கள் * சாலிக்குத் தவறுகூறத் துணிந்தீர்களே' என்று சொல்லி அவர்களைப்பார்த்து நகைத்தான்; வளர்த்த பூதியும் அவனை அசுத்தனென்று எண்ணி உடனே நீங்கிவிட்டான்; அப்பால், ஆபுத்திரன் பிச்சையெடுத்து உண்டு பொழுதுகழிக்க எண்ணினான். பசுவைத்திருடின கள்வனென்று இகழ்ந்து அந்தணர்களுடைய கிராமங்களிலெல்லாம் அவனுடைய பிச்சைப்பாத்திரத்திற் கல்லிடத்தொடங்கினர்கள்; அதனால், வேறு புகலின்றித் தென்மதுரையையடைந்து சிந்தாதேவியின் கோவிலாகிய கலைநியமத்தின் முன்னேயுள்ள அம்பலத்தையே இருப்பிடமாகக்கொண்டு கையிற் பிச்சைப்பாத்திரத்தையேந்தி வீடுதோறும் சென்று சென்று வாங்கி வந்த வுணவை,

* சாலியென்பதற்கு அருந்ததியென்னும் ஒருபொருள் தோன்றுதலும்.

காணர் கேளார் கான்முடப் பட்டோர்
பேணுந ரில்லோர் பிணிகடுக் குற்றோர்
யாவரும் வருகவென் றிசைத்துட னூட்டி, (ககக - ஈ)

அவர்களுண்டொழிந்த மிச்சத்தையே தானுண்டு பிச்சையோட்டைத் தலையணையாக வைத்துக்கொண்டு அவ்வம்பலத்தின்கண்ணே நாள்தோறும் இரவிற் கண்படைபுரிந்து காலங்கழித்து வந்தான்.

கச.—பாத்திராபதிகூறியகாதை.

அவன், அங்ஙனம் காலங்கழித்து வருகையில், அவனுக்கு ஒருநாள் அங்கே நிகழ்ந்த செய்தியைச்சொல்வேன்; கேட்பாயாக; அவன் அவ்வம்பலத்தில் ஒரிரவில் தூங்கும்பொழுது, சிலர்வந்து, 'பெரும்பசி எங்களை வருத்தாநின்றது' என்றார்கள்; அதைக்கேட்ட அவன் அத்துன்பத்தைத் தீர்த்தற்கு ஆற்றலில்லாதவனாய் மிக்க வருத்தமடைந்தான்; அச்சமயத்திற் சிந்தாதேவி எழுந்தருளிவந்து 'இதனைக்கொள்வாயாக; நாடெல்லாம் வறுமையுற்றாலும் இவ்வோடு வறுமையை யடையாது; கொடுக்கக்கொடுக்க இதில்உணவு வளர்ந்து கொண்டே யிருக்கும்' என்று சொல்லி, தன்கையிலுள்ள அக்ஷய பாத்திரமொன்றை அவன்கையிற் கொடுத்தாள்; உடனே அவன் அளவுகடந்த மகிழ்ச்சியடைந்து,

'சிந்தா தேவி! செழுங்கலை நியமத்து
நந்தா விளக்கே! நாமிசைப் பாவாய்!
வானோர் தலைவி! மண்ணோர் முதல்வி!
ஏனை யுற்ற விடர்களைவாய்' (கஎ - ஙo)

என்று துதித்து அத்தேவியைப் பணிந்து, பசியால் மிகவருந்தி இருந்தவர்களை ஊட்டி மகிழ்வித்து, அன்றுமுதல் எல்லாவுயிர்களுக்கும் உணவளிப்பானாயினன்; உண்பதற்காக மனிதர்கள் பலர் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள்; விலங்குகளும் பறவைகளும் அவனைப் பிரியாவாய் அன்புடன் சுற்றிக்கொண்டன; அப்படியிருக்கையில், ஒருநாள் அவனது புண்ணியமிகுதியைத் தனது பாண்டுகம்பள நடுக்கத்தால் அறிந்த இந்திரன், அவனுக்கு வரங்கொடுக்க நினைந்து ஒரு முதிய வேதியனது வடிவுகொண்டு வந்து நின்று, 'நான் இந்திரன்; வரங்கொடுத்தற்கு வந்தேன்; நீ விரும்பியது யாது? உன்னுடைய பெரிய தானத்தின்பயனைப் பெற்றுக்கொள்வாயாக' என்று சொல்ல, ஆபுத்திரன் விலாவெலும்பு ஒடியும்வண்ணஞ் சிரித்து,

'அறஞ்செய் மாக்கள் புறங்காத் தோம்புநர்
ஈற்றவஞ் செய்வோர் பற்றற முயல்வோர்
யாவரு மில்லாத் தேவர்கள் ஊட்டுக்
கிறைவ னுகிய பெருவிறல் வேந்தே !' (சா - சக)

'வருந்திவந்தவர்களுடைய தீர்த்தற்கரிய பசியினைத்தீர்த்து அவர் களுடைய இனிய முகத்தை யான் காணும்படி செய்கின்ற எனது தெய்வப்பாத்திரம் ஒன்றே போதும்; வேறொன்றும் வேண்டற் பாலதன்று' என்று அவனை மதியாது சொன்னன் ; சொல்லவே இந்திரன் கோபித்துப் பசித்துன்பத்தால் வருந்துவோரில்லாம் படி செய்வேனென்று மனத்தில் நினைந்து எங்கும் மழைபெய் வித்து மிக்க செல்வத்தை யுண்டாக்கினன்; அதனால் பசித்துவரு வோர் இலராயினர்; அதுகண்டு ஆபுத்திரன் முன்னிருந்த அம் பலத்தை நீங்கி ஊர்தோறும் போய், 'உண்போர் யாரேனுமுண் டோ ?' என்று வினவத்தொடங்கினன்; அதுகேட்டுச் செல்வக் களிப்பால் யாவரும் அவனை இகழ்ந்தார்கள் ; உண்போரைப் பெருமையால், அவன் பெருஞ்செல்வத்தை யிழந்தோரைப்போல வருந்தித் தனியே செல்லுகையில், கப்பலில்வந்த சிலர் அவனைக் கண்டு, சாவகநாடு மழையில்லாமையால் மிகுந்த வறுமையுற்றதென் றும் அதிலுள்ள உயிர்கள் பெரும்பாலும் பசியால் இறந்தனவென் றும் கூறினர்; அதுகேட்டு அவன் அந்நாட்டிற்குச் செல்ல நினைந்து ஒரு கப்பலிலேறினன் ; அக்கப்பல்சென்று மணிபல்லவத்தினருகே ஒருநாள் தங்கிற்று ; அவன் அத்தீவில் இறங்கினன் ; இறங்கிய ஆபுத்திரன் ஏறிவிட்டானென்று மீகாமன்எண்ணி இருளில் அக்கப் பலை வேற்றிடம் செலுத்திக்கொண்டு போயினன். அது தெரிந்து ஆபுத்திரன் மிகுந்த வருத்தமடைந்து, 'பலர்க்கு உணவளிக்கும் இப் பாத்திரத்தை வைத்துக்கொண்டு யாருமில்லாத இத்தீவில் யான் மட்டும் இரேன்' என்று எண்ணி அப்பாத்திரத்தைத் தொழுது, 'வருடத்திற்கு ஒருநாள் நீ தோன்றுவாயாக' என்று கூறிக் கோமு கிப் பொய்கையில் அதைவிடுபவன், 'மிக்கருணையோடுகூடித் தருமஞ்செய்தலேயே மேற்கொண்டு எல்லாவுயிர்களையும் பாதுகாப் போர் யாரேனும்வரின் அவர்கையிற் புகுவாயாக' என்றுசொல்லி அப்பொய்கையில் விட்டுவிட்டுத் தான் பட்டினியிருந்து உயிர் துறப்பானுயினன்; அப்பொழுது அத்தீவிற்குச் சென்ற யான் அவ னைக்கண்டு, 'நீ யாது துன்பமடைந்தாய் ?' என்றுகேட்க, அவன்

நிகழ்ந்தவற்றைச்சொல்லி மணிபல்லவத்தில் உடம்பைவீழ்த்தி விட்டு எல்லாவுயிர்களையும் பாதுகாக்கு மெண்ணத்தோடு சென்று சாவகநாட்டரசனுடைய பசுவயிற்றி லுதித்தான்.

கரு.—பாத்திரங்கொண்டு பிச்சைபுக்ககாதை.

"மணிமேகலை! இன்னும் கேட்பாயாக; முன்பு ஆபுத்திர னுக்கு ஏழுநாள் வரையும் பாலூட்டிய பசுவானது அப்புண்ணிய விசேடத்தால் சாவகநாட்டில் தவளமலையில் தவஞ்செய்துகொண்டி ருக்கும் மண்முகமுனிவனிடத்தே, பொன்மயமாகிய கொம்புகளை யும் குளம்புகளையும் உடையதாய்ச்சென்று, ஈனுமுன்னமே பால் சுரந்து எல்லாவுயிர்களையும் உண்ணச்செய்துகொண்டிருந்தது; அதனைக்கண்டு, முக்கால உணர்ச்சியையுமுடைய அம்முனிவன் 'இப்பசுவயிற்றில் எல்லாவுயிர்களையும் பாதுகாக்கும் ஒருவிசேடபுரு டன் பொன்மயமான மூட்டையினிடம் தோன்றுவன்' என்று கூறினன்; தருமஞ்செய்தற்காகவே மணிபல்லவத்தில் இறந்த ஆபுத் திரன் தன்னைக் குழந்தைப்பருவத்தே காத்தளித்த பசுவை எப் பொழுதும் நினைத்துக்கொண்டிருந்தவளதலின், மண்முகமுனி வன் கூறியவாறே அப்பசுவயிற்றில் தோன்றினன்; அவன் தோன் றியகாலம் வைசாகசுத்த பூர்ணிமை; அப்பொழுது சில நன்னிமித் தங்கள் நிகழ்ந்தன. அதுதெரிந்த சக்கரவாளக்கோட்டத்துள்ள முனிவர்கள், 'புத்தன் அவதரிக்குங்காலத்தில் தோன்றும் நிமித்தங் கள் இப்பொழுது நிகழ்வதற்குக் காரணம் என்ன?' என்று வியப் புற்று, அதனுண்மையைத் தெரிந்துகொள்ளுதற்குக் கந்திற்பாவை யையடைந்து விஞ்சையர்கள்: அது, 'மணிபல்லவத்தில் இறந்த ஒரு விசேடபுருடன்உயிர்களைப் பாதுகாத்தற்காகச் சாவகநாட்டி லுதித்தான்; அதனாலேதான் நன்னிமித்தங்கள் நிகழ்ந்தன, அவன் வரலாற்றை அறவண்ணன்பாற் கேண்மின்' என்றுசொல்லி என்பால் அனுப்பி எனது நாவைவருத்தியது; மகட்பேறில்லாமல் வருந்துபவ னான அங்கராத்தராசன் பூமிசந்திரனென்பவன் மண்முகமுனிவனை வணங்கி மேற்கூறிய பசு பெற்ற குழந்தையை வாங்கிக்கொண்டு சென்று வளர்த்துவந்தான்; அச்சிறுவன் இப்பொழுது அரசுரிமை பெற்று வாழ்கின்றனன்; இதுநிற்க, காவிரிமாநதி மாறாது நீர்பெருகி இந்நாட்டை வளமுறச்செய்தும் யாதுகாரணத்தினு லோ உயிர்கள் வறுமையால் வருந்துகின்றன, ஆதலால்;

வெண்டிரை தந்த வமுதை வானோர்
உண்டொழி மிச்சிலை யொழித்துவைத் தாங்கு, (இக - உ)

மிகப் பயன்படுகின்ற இவ்வமுதசுரபியை நீ சும்மாவைத்திருத்தல் தகுதியன்று'' என்றுகூறினர்; அதைக்கேட்ட மணிமேகலை, உடனே அவரை வணங்கித் துதித்துப் பிக்குணிக்கோலம் பூண்டு அப்பாத்திரத்தைக் கையிலேந்தி வீதியையடைந்தாள்; அடையவே, உச்சயினிநகரத்தரசனாகிய பிரச்சோதனனென்பவன் உதயணனை வஞ்சித்துச் சிறைப்படித்தியபொழுது, அவனைச் சிறைமீட்டற்கு அவன்மந்திரியாகிய யௌகந்தராயணனென்பவன் வேற்றுருவடிவங் கொண்டு வீதியையடைந்த காலத்தில், அவனைக்கண்டு துன்புற்று அநேகர் சூழ்ந்தாற் போலப் பிக்குணிக்கோலத்தையுடைய மணிமேகலையைக் கண்ட பலரும், 'உதயகுமரனுடைய உள்ளத்தில் ஒளித்திருக்குமிவள் எல்லாருங் காணும்படி பிச்சைப் பாத்திரத்தையேந்தி வீதியையடைந்தது என்ன வியப்பு!' என்றுகூறித் துன்புற்று அவளைச் சுற்றிக்கொண்டனர்; அப்பொழுது மணிமேகலை, ''கற்புடைமாதர் இடும் ஐயத்தையே முதலில் ஏற்றுக்கொள்ளுதல் தகுதி'' என்றுசொல்ல, காயசண்டிகை, ''மழையைத் தரும் கற்புடைமாதர்களுள் மிகமேம்பட்டவளாகிய ஆதிரையென்பவளுடைய வீடு இது, நீ இதிற் புகவேண்டும்'' என்று அவளுக்குக் கூறினள்.

கசு.—ஆதிரைபிச்சையிட்டகாதை.

அங்ஙனங்கூறிய காயசண்டிகை, மீட்டும் மணிமேகலையை நோக்கி, ''இந்த ஆதிரையின் கற்புவிசேடத்தைக் கேட்பாயாக; இவள்கணவன் சாதுவனென்பான்; அவன் ஒருபரத்தையின் இணக்கத்தாற் கைப்பொருளிழந்து வறுமையுற்று வேறுதேயம் போய்ப் பொருள்தேடவெண்ணிச் சிலவணிகரோடு கப்பலேறிச் சென்றான்; செல்லுகையிற் கடுங்காற்றால் அக்கப்பல் கவிழ்ந்தது; கவிழவே சாதுவன் அதிலிருந்து ஓடிக்கவிழ்ந்த பாய்மரத்துண்டமொன்றைத் தெப்பமாகப்பற்றிக்கொண்டு நீந்திச்சென்று, உடையில்லாது சஞ்சரிப்பவராகிய நாகருடைய மலைப்பக்கத்தை அடைந்தான் அஃது அங்ஙனமாக;

''அக்கப்பலினின்றும் கழுவிய மரத்தைப்பற்றிக் கடலில் நீந்திப் பிழைத்துக் காவிரிப்பூம்பட்டினம்வந்தோர், 'கப்பல் உடைய இறந்த

வர்களோடு சாதுவனுமிறந்தான்' என்று ஆதிரைச்குக் கூறினர்; அதுகேட்ட அவள், மிக்க வருத்தமடைந்து இறக்கத் துணிந்து மயானத்திற் குழிதோண்டி அதில் விறகுகளை அடுக்குவித்துத் தீயை மூட்டி, 'வினைப்பயனால் என்கணவனடைந்த இடத்தை நானுமடையக்கடவேன்' என்று சொல்லி அதிற்புகுந்தாள்; புகுந்தவளை அத் தீயானது சுடாதொழிந்தது; ஒழியவே, அவள், 'தீயுஞ்சுடாதபாவியேன் இனி யாதுசெய்வேன்?' என்று ஏங்குகையில், ஆகாயவாணியானது, 'ஆதிரை! உன்கணவன் இறக்கவில்லை; அவன் பிழைத்துச் சென்று இப்பொழுது நாகர்மலைபிலிருக்கிறன்; அங்கே பலவருடம் தங்கான்; சந்திரதத்தனென்னும் வாணிகனுடைய கப்பல்வழியே வந்து உன்னையடைவான்; நீ வருந்தாதே' என்று கூறிற்று; அதைக் கேட்ட ஆதிரை வருத்தமொழிந்து வீட்டையடைந்து கணவன் விரைந்து வருதலைக்குறித்து அதற்கேற்ற புண்ணியங்களை இடைவிடாது செய்துவந்தாள்.

"அங்கே நாகர்மலையையடைந்த சாதுவன், ஒருமரநிழலைச் சார்ந்து அயர்ச்சியால் துயில்கொள்ள, அம்மலையிலுள்ள நாகர்கள் வந்து இவ்வுடம்பு நமக்கு நல்ல உணவாகுமென்றெண்ணி அவனை எழுப்பினர்; அவன் அவர்கள் பாஷையை விளங்கக் கற்றவனதலால், அவர்களோடுபேச, அவர்கள் அவனை வருத்துதலைத்தவிர்ந்து எங்களாசிரியன் ஒருவனிருக்கிறன்; அவனிடம் நீ வரல்வேண்டும் என்று அழைத்துச்சென்றார்கள்; சாதுவன், அவர்களோடும்போய்,

கள்ளாடு குரிசியுங் கழிமுடை மாற்றமும்
வெள்ளெரி புணங்கலும் விளையாவிருக்கையில்
எண்குறு பிணைவோ டிருந்தது போலப்
பெண்டிடனிருந்த, (சுசு - கூ)

அவர்களுடைய குருமகனைக்கண்டு அவனெதி ரளவளாவி அவனை வசமாக்கிக்கொண்டான்; கொள்ளவே அக்குருமகன், 'நீ இங்கு வந்தது எதன்பொருட்டு?' என்ன, சாதுவன் நிகழ்ந்ததைக் கூறினன்; அவன், 'பரியால் வருந்திய இவனுக்கு வேண்டியவளவு கள்ளையும் ஊனையுங்கொடுத்துப் பின் இளையவளாகிய நங்கை ஒருத்தியையுங்கொடுமின்' என்று சொன்னன். சாதுவன் அதுகேட்டு அவனுடைய அறியாமைக்கு வருந்தி, 'எனக்கு அவைவேண்டா' என்றான்; அவன், 'பெண்டிரையும் உண்டியையுமன்றி மாந்தர்க்கு

இன்பந்தருவது வேறெ யாதுளது? இருந்தாற் சொல்வாய்' என்று கோபித்துச் சொல்ல, சாதுவன்,

'மயக்குங் கள்ளு மின்னுயிர் கோதலும்
கயக்கறு மாக்கள் கடிந்தவர் கேளாய்
பிறந்தவர் சாதலு மிறந்தவர் பிறத்தலும்
உலங்கலும் விழுத்தலும் போன்ற துண்மையின்
நல்லறஞ் செய்வோர் கல்லா கடைதலும்
அல்லறஞ் செய்வோ ராருகா கடைதலும்
உண்டென வுணர்தலி னுரைகோர் கணேத்தலர்' (அ - கூ)

என்று கூறினன்; பின்பு அவன்கேட்ட வினாக்களுக்கெல்லாம் தக்கவாறு விடைகூறி மறுபிறப்பும் புண்ணிய பாவங்களும் அவற்றால் வரும் இன்பதுன்பங்களும் உண்டென்பதை அறிவுறுத்தி இறக்கும்வரையும் நடக்கவேண்டிய முறையையும் அவனுக்கு இயையத் தெரிவித்து விடைபெற்று, அவன்கொடுத்த சந்தனம் அகில் துகில் முதலியவற்றைக் கைக்கொண்டு, அங்குவந்த சந்திரதத்தனென்னும் வாணிகனுடைய கப்பலிலேறி இங்ஙகரையடைந்து இவளோடு வாழ்வானுகிப் பல தானங்களும் செய்தான். அப்படிப்பட்ட மேம்பாட்டையுடையவளாகியிந்த ஆதிரையின் கையால் முதலிற் பிச்சைபெறுக" என்று சொல்ல, மணிமேகலை அவளுடைய மனையிற்புகுந்து வாய்பேசாமற் சித்திரம்போல நின்றாள்; நின்றவுடன்,

தொழுது வலங்கொண்டு துயரறு கிளவியோ
டமுத சுரபியி பகல்சுரை கிறைதரப்
பாரக மடங்கலும் பசிப்பிணி யறுகென
ஆதிரை யிட்டனள் ரூருயிர் மருந்து. (கஉ - ரு)

கஎ.—உலகவறவிபுக்ககாதை.

ஆதிரையளித்த பிச்சையை முதலில் மணிமேகலை ஏற்ற பின்பு அமுதசுரபியிலுள்ள சோற்றுத்திரளை,

அறத்தி னீட்டிய வெண்பொருள் போலவும்
நிறத்து வழிப்பட் டுஞ் செய்கை போலவு (கூ - ச)

எடுக்க எடுக்கக் குறையாமல் மேன்மேலும் வளர்ச்சியையடைந்து, வந்தோருடைய பசியைப்போக்கி விளங்கிற்று. அதுகண்ட காயசண்டிகை வியந்து மணிமேகலையை வணங்கி, ''அன்னாய்! என்னுடைய தீராப்பசியையும் தீர்த்தருளவேண்டும்" என்று வேண்டினள்; உடனே மணிமேகலை, அமுதசுரபியிலிருந்து ஒருபிடி

யமுதையெடுத்து அவளது கையிலிட்டாள், அதனையுண்டு அப்பசி நோய் தீர்ந்து மகிழ்ந்த காயசண்டிகை, "வடதிசையில் வித்தியாதரருலகிலுள்ள காஞ்சனபுரமென்பது என்னுடைய ஊர்; தென்றிசைக்கண்ணதாகிய பொதியின்மலையின் வளங்களைக் காண்பதற்குக் கணவனும் யானும் புறப்பட்டுப்போந்து இடையேயுள்ள காட்டாறொன்றின் கரையிலிருந்தோம். இருக்கையில், விருச்சிகனென்னும் முனிவனொருவன் பாரணஞ்செய்தற்குப் பனங்கனிபோன்ற பருமையையுடைய காவற்கனியொன்றைத் தேக்கிலையில் வைத்து விட்டு நீராடச்சென்றான். அக்கனி அம்முனிக்கு உணவாகுமென்பதனை அறியாத நான் முற்பிறப்பிற்செய்த தீவினையால் அதனைக் காலாற் சிதைத்துக் கெடுத்தேன்; நீராடி மீண்டுவந்த விருச்சிகன் அக்கனி என்னாற் சிதைந்திருத்தலையறிந்து மிகவும் கோபித்து என்னைநோக்கி, 'தெய்வத்தன்மையுள்ளதும் பன்னிரண்டு வருடத்துக்கு ஒருமுறை ஒருகனியைத் தருவதுமாகிய காவன்மரத்திலுண்டானது இது; இதனையுண்டோர் பன்னிரண்டுவருடம் பசியொழிந்திருப்பார்; நானோ பன்னிரண்டுவருடம் பட்டினியிருந்து ஒருநாளுண்ணும் விரதமுடையேன்; உண்ணுந்தினமும் இன்றுதான்; யான் உண்ணக்கருதிய கனியும் இதுவேகாண்; இதனை நீ அழித்துவிட்டாய்; ஆதலால், ஆகாயவழியே செல்லுமந்திரத்தை மறந்து யானைத் தீயென்னும் நோயாற் பன்னிரண்டுவருடம் தீராப்பசிகொண்டு வருந்திப் பின்பு இங்கு இக்கனியை நான் உண்ணுந்தினத்தில் நீ பசியொழிவாயாக' என்றுகூறிப் பசியால் வருந்திப்போயினன்; உடனே எனக்குப் பெரும்பசியுண்டாயிற்று. அதனால் மிக்க வருத்தமடைந்தேன்; அதுகண்ட என்கணவன் சிறந்த கனிகள் கிழங்குகள் காய்கள் முதலியவற்றை நிரம்பக்கொணர்ந்து என்னையுண்பிக்கவும் அப்பசி தீரவில்லை; அத்தானஞ்செல்லும் மந்திரமும் என்னிடவுக்கு வரவில்லை; அப்பொழுது அதுகண்டு வருந்திய என்கணவன், 'நீ நடந்துசென்று இத்தமிழ்நாட்டில் ஆற்றுமாக்கட்கு அருந்துணைவர்களாகிய பெருஞ்செல்வர்கள் வாழ்ந்திருக்கும் காவிரிப்பூம்பட்டினத்தையடைந்து அங்கேயிருப்பாயாக' என்று சொல்ல, நான் அவ்வண்ணமேவந்து இங்கிருக்கின்றேன்; இங்கு இந்திரவிழா நடக்குங்காலத்தில் ஒவ்வொருவருடத்தும் என்கணவன் வந்து என்வருத்தத்தைப் பார்த்துவிட்டுத் தானும் வருந்திச்செல்வான்.

தணிவில் வெம்பசி தவிர்த்தனே வணங்கினேன்
மணிமே கலையென் வாள்பதிப் படர்கேன்; (எஉ - ச)

இங்ஙகரில் முனிவர்கள் பலர் இருக்கும் சக்கரவாளக்கோட்டமென் பது ஒன்றுண்டு; அதிற் பலரும்வந்து புகுதற்காகவே எப்பொழுதும் கதவுதிறந்துள்ள உலகவறவியென்னும் பெயரையுடைய அம்பலம் ஒன்றுண்டு. அதில்,

ஊரூ ராங்க ணுறுபசி யுழந்தோர்
ஆரு மின்மையி னரும்பிணி யுற்றோர்
இடுவோர்த் தேர்த்தக் கிருப்போர் பலர்; (எஉ . அக)

ஆதலால், அவ்விடத்திற்குச்செல்வாயாக' என்றுசொல்லிவிட்டு, அவள் தன்னூருக்குப்போயினள். போகவே மணிமேகலை, வீதி யின் ஒருபக்கத்தே ஒதுங்கிச்சென்று உலகவறவியையடைந்து மூன்றுமுறை வலம்வந்து பணிந்து அதிலேறிச் சம்பாபதியையும் கந்திற்பாவையையும் வணங்கி,

வெயில்சுட வெம்பிய வேய்கரி காளத்துக்
கருவி மாமழை தோற்றிய தென்னப்
பதினெ வருந்திய பைதல் மாக்கட்
கமுத சுரபியா டாயிழை தோன்றி, (கக - ச)

"இப்பாத்திரம் ஆபுத்திரன் கையிலிருந்ததாகிய அமுதசுரபி; உண் ணுதற்கு விருப்பமுள்ள யாவரும் வருக" என்றுசொல்ல, பலரும் வந்து உண்பாராயினர், ஆகவே அவ்வம்பலத்தில் உண்ணுமொலி மிகுந்தது.

கஅ.—உதயகுமரன் அம்பலம்புக்ககாதை.

மணிமேகலை பிக்குணிக்கோலங்கொண்டு பாத்திரமேந்தி ஐயமேற்று உலகவறவியிற் சென்றுளென்பதைக்கேட்ட சித்திரா பதி, மனங்கொதித்து வெய்துயிர்த்துக் கலங்கி, "மணிமேகலையை இச்செயலினின்றும் நீக்குவேன்" என்று எண்ணிக்கொண்டு நாடகக்கணிகையரெல்லாரையும் பார்த்து, "கோவலன் இறந்தது கேட்டு மாதவி எல்லாவற்றையுந் துறந்து முனிவர்களுடைய தவச் சாலையையடைந்து தாபதக்கோலம் பூண்டிருத்தல் நகைக்கத்தக்க தாக இருக்கின்றது; யாம் கணவனுடன் இறக்கும் பத்தினிப்

பெண்டிரல்லேம், பாணன் இறந்தபொழுது அவனுடன் இறவாது யாழைப்போல்வேம்; பின்னும்,

நறுந்தா துண்டு கயலிற் காலே
வறும்பூத் துறக்கும் வண்டு போல்குவம் : (கந - ஐ0)

தாபதக்கோலந்தாங்குவது நம்முடைய குலவொழுக்கத்திற்கு ஒத்த தன்று; மாதவிமகள் மணிமேகலையின் பிக்குணிக்கோலத்தை மாற்றி அவள் கையிலேந்திய பிச்சைப்பாத்திரத்தை,

பிச்சை மாக்கள் பிரிகை காட்டி, (கூ0)

பலநாளாக விரும்பிக்கொண்டிருக்கும் உதயகுமரனுல் அவளை அவனது தேரிலேற்றுவித்தே வருவேன். அங்ஙனஞ்செய்து வாரேனுயின் குடிக்குற்றப்பட்டு எழுசெங்கலைத் தலைமேலேற்றிக்கொண்டு நாடகவரங்கைச் சுற்றிவந்து பழியோடிருக்கும் நாடகமடந்தையர் போல இனி நான் நாடகக்கணிகையர் வீட்டிற்குச் செல்லேனெனக் கடவேன்" என்று சபதஞ்செய்துவிட்டுத் தன்னைச் சிலர் சூழ்ந்து வரச்சென்று உதயகுமரனுடைய அரண்மனைகையடைந்து அவனைக்கண்டு துதித்து, மணிமேகலை உலகவறவியை அடைந்திருக்கின்ருளென்பதை அவனுக்குக் குறிப்பிக்க, அவன் உவவனத்தில் மணிமேகலையைக் கண்டதுமுதல் நிகழ்ந்தவற்றைக்கூறி அவளிடத்துள்ள விசேடத்தன்மையைப் பாராட்டினன்; சித்திராபதி, அவனுடைய மனத்தை வேறுபடித்தும் வார்த்தைகள் பலவற்றைச் சொல்லி மூயல, அவன் உள்ளம்பிறழ்ந்து தேரேறி உலகவறவியையடைந்து, பலர்க்கும் உணவளித்துக்கொண்டிருக்கும் மணிமேகலையைக்கண்டு அருகிற்சென்று, "நீ தவக்கோலம் பூண்டது யாது கருதி?" என்று வினவினன்; மணிமேகலை, 'பழம்பிறப்பிற் கணவனுக இருந்த இவனே வணங்குதல் முறையாகும்' என்று எண்ணி வணங்கி,

"பிறத்தலு மூத்தலும் பிணிப்பட் டிரங்கலும்
இறத்தலு முடைய நிலேம்மைக் கொள்கையும்
மக்கள் யாக்கை பிழைவை வுணர்ந்து
மிக்க கல்லறம் விரும்புதல் புரிந்தேன்" (கந - கூ)

என்றுகூறி, வேற்றுவடிவங்கொள்ள நினைந்து அவனைநீங்கிக்கோயிலினுள்ளேசென்று சம்பாபதியை வணங்கி, முன்பு மணிமேகலா

தெய்வம் உபதேசித்த மந்திரத்தை ஜபித்துக் காயசண்டிகை வடிவ முற்று அமுதசுரபியையேந்தி வெளியேவந்து நின்றாள்; அவள் அவ் வாறுவந்ததையறியாத உதயகுமரன் 'சென்ற மணிமேகலை சம்பா பதிகோயிலுள்ளே ஒளித்துக்கொண்டாள்' என்று நினைந்துசென்று சம்பாபதியைவணங்கி, "பிச்சைப்பாத்திரத்தைக் காயசண்டிகை யின் கையிற்கொடுத்துவிட்டு ஒளித்துச்சென்ற மணிமேகலையை இங்கேயுள்ள இவ்வளவு பாவைக்கூட்டங்களுள்ளே நான் எவ்வாறு தெரிந்துகொள்ளுவேன்? நீ எனக்கு அவளைக்காட்டாயாயின், இவ் விடத்திலேயே பாடுகிடப்பேன்; பலகாள்சென்றாலும் செல்லுக; மணிமேகலையை இங்கேவிட்டுவிட்டு நான்மட்டும்போகேன்; உன் னுடைய திருவடியைத்தொட்டேன்" என்று சபதங்கூறினன்.

ககூ.—சிறைக்கோட்டமறக்கோட்டமாக்கியகாதை.

உதயகுமரன், சம்பாபதியை வணங்கி இங்ஙனம் சபதங்கூறு கையில், அவன்கேட்கும்படி, "நீ எம்பெருமாட்டியின் முன்னே ஆராய்ந்து பாராமல் வஞ்சினங்கூறினை; இங்ஙனங்கூறியதில் யா தொருபயனுமில்லை" என்று ஆங்குள்ள சித்திரங்களுள் ஒன்றை அதிட்டித்துநிற்கும் தெய்வங் கூறியது; அவ்வார்த்தையைக்கேட்டு அவன் மனங்கலங்கி வருந்தி, "மணிமேகலையை மறப்பாய் என்று முன்னங் கூறிய தெய்வத்தின் வார்த்தையும் வியப்பைத்தருகின் றது; தெய்வத்தன்மையுள்ளதாக இருத்தலின், அவள் ஏற்றிய பாத் திரமும் வியப்பைத்தருகின்றது; இச்சித்திரம் பேசியதும் வியப்பை உண்டுபண்ணுகின்றது; இவற்றையெல்லாம் மணிமேகலையின் செய்தியை அறிந்துகொண்டபின்பு அறிவோம்" என்று நிச்சயித் துக்கொண்டு காமபரவசனாய் வெய்துயிர்த்து மீண்டு தன் இருப் பிடத்தை அடைந்தான். மணிமேகலை, "நம்வடிவத்தோடு திரிந் தால், உதயகுமரன் விட்டுநீங்கான்; கைப்பற்றிக்கொள்ள முயலு வன்; ஆதலால், நாம் காயசண்டிகை வடிவங்கொள்ளுதலே நன்று" என்றெண்ணி அவ்வடிவுகொண்டு சம்பாபதியின் கோயிலிலிருந்த அமுதசுரபியைக் கையிலேந்திக்கொண்டு எங்கும்போய், பசித்து வந்த யாவருக்கும் உணவளித்துச் செல்லுபவள், ஒருநாள் அக்காதத் துள்ள சிறைச்சாலையிற்புகுந்து அங்கே தண்டிக்கப்பட்டிருந்து பசி யால் வருந்துவோரை அருளுடன்பார்த்து மனமுருகி இனிய

மொழிகளைக்கூறி உண்பிப்பாளாயினள்; அதனைக்கண்ட காவலாளர், அவள் ஒரு பாத்திரத்திலிருந்தே பலருக்கும் உணவளித்தலைத் தெரிந்து வியப்புற்று, "இப்பாத்திரத்தின் விசேடத்தையும் இவள் செய்தியையும் அரசனுக்குத் தெரிவிப்போம்" என்று நினைந்து சென்று ஒரு மண்டபத்தில் மிக்க சிறப்புடன் சீர்த்தியென்னும் இராசமாதேவியோடு வீற்றிருக்கும் அரசனுடைய செவ்வியைப் பார்த்துச் சேய்மையில் வணங்கிநின்று,

"வஞ்சகமே தடக்கை மாவண் கிள்ளி
ஒளியொடு வாழி யூழிதோ றூழி
வாழி யெங்கோ மன்னவர் பெருந்தகை
தேவிரு மன்னே கெடுகநின் பகைஞர்" (கஉள - ஈ0)

என்று வாழ்த்தி, "யானைத்தீயென்னும் நோயால் வருந்தி உடல் மெலிந்து இங்ஙகரில் திரியு மங்கை யொருத்தி, சிறைக்கோட்டத்துள்ளே வந்து தேவரீரை வாழ்த்திக் கையின்கண் பிச்சைப்பாத்திரம் ஒன்றையே வைத்துக்கொண்டி அதிலிருந்துண்டாகி வளரும் சோற்முல் அங்கேயுள்ள எல்லாருடைய பசியையுந்தீர்த்து விளங்குகின்றுள். இவ்வற்புதத்தைத் தெரிவிப்பதற்கே வந்தோம்" என்றார். அதைக்கேட்ட அரசன், "அம்மங்கையை இங்கே அழைத்து வருக" என்றுன். உடனே காவலாளர்கள் வந்து அதனைச்சொல்ல அவள்சென்று அரசனைக்கண்டி, "அரச! உனது அருள்வாழ்க" என்றுள். அரசன், "மிக்க தவமுடையாய்! நீயார்? கையிலேந்திய பாத்திரம் எங்கே கிடைத்தது?" என்றுன். அவள் "அரசே! கெடுங்காலம் வாழ்வாயாக; யான் விஞ்சைமகள்; இங்ஙகரில் வேற்று வடிவங்கொண்டி திரிந்தேன்; இது பிச்சைப்பாத்திரம்; இதனை அம்பலத்தேயுள்ள தெய்வமொன்று எனக்கு அருளியது; இது, தெய்வத்தன்மையோடு கூடியது; யானைத்தீயென்னுந் தீராப்பசியைத் தீர்த்தொழித்தது; பசியால் மெலிந்தவர்களுக்கு மிருதசஞ்சீவினியாகவுள்ளது" என்று சொல்ல, அரசன், "யான் செய்யவேண்டுவது யாது?" என்றுகேட்ப, அவள், "சிறைச்சாலையை அறச்சாலையாகச் செய்யவேண்டும்" என்றுள்; அரசன் அவள் விரும்பிய வண்ணமே சிறைச்சாலையை அழித்துத் தூய்மைசெய்து அவ்விடத்தைப் பலவகையான புண்ணியங்களும் நடத்தற்குரிய இடமாகச்செய்வித்தான்.

௨0.—உதயகுமரனை வாளாலெறிந்தகாதை.

அரசனுடையகட்டளையால், சிறைச்சாலை பலவகைப் புண்ணியங்களும் நிகழ்தற்குரிய அறச்சாலையாய் விளங்கிற்று; உதயகுமரன் இச்செய்திகளையெல்லாம் கேட்டு, 'மணிமேகலை உலகவறவியை நீங்கி வெளியே வந்தபொழுது அவளைக் கைப்பற்றிக்கொண்டுபோய்த் தேரிலேற்றி அவள் கற்ற வித்தைகளையும் அவள் கூறும் இனிய மறுமொழிகளையும் கேட்பேன்' என்று தன்னுள்ளே எண்ணிக்கொண்டு சென்று அவளிருக்கும் உலகவறவியில் ஏறினன். காஞ்சனனென்னும் வித்தியாதரன் 'பெரும் பசியால் வருந்தும்படி காயசண்டிகைக்குப் பொதியின்மலையைச் சார்ந்த காட்டாற்றின் கரையில் விருச்சிகமுனிவன் இட்டசாபத்தை அவள் அனுபவித்தற்குரிய பன்னிரண்டு வருடங்களும் சென்றன; சென்றும் அவள் வாராமைக்குக் காரணம் யாதோ?' என்று மிக்க கவலையுற்று, தனது நகரை நீங்கி ஆகாயவழியே வந்து காவிரிப்பூம்பட்டினத்தில் இறங்கிப் பூதசதுக்கமும் பல பூஞ்சோலைகளும் முனிவர்களுடைய தவச்சாலைகளும் மன்றங்களும் அம்பலங்களும் ஆகிய இடங்களிலெல்லாம் சென்று சென்று தேடித்தேடித் திரிந்து, காயசண்டிகை வேடம் பூண்டு உணவளித்து மாந்தர்கள் பலருடைய பசிகளையும் மாற்றிக்கொண்டிருக்கும் மணிமேகலையை மணிமேகலையென்று அறியாதுகொண்டு காயசண்டிகையென்றே நிச்சயித்துக்கொண்டு அருகிற் சென்று அவளைநோக்கி, "நீ ஏந்திய இப்பாத்திரம் ஒன்றுபோதும் இதனால் அளிக்கப்படும் உணவை அருந்துவோர் பலராய் உள்ளார்; எனக்கு இது மிக்க வியப்பைத் தருகின்றது; உன்னை வருத்திய யாதேத்தீயாகிய நோயை ஒழித்தற்குத் தேவர்கள் இதனைக் கொடுத்தார்களோ?" என்று சொல்லிப் பின்பு பழையகட்பினைப் புலப்படுத்து மொழிகள் பலவற்றைக்கூறிப் பாராட்டவும் அவள் அவற்றைச் சிறிதும் மதியாமல் அவனை நீங்கி உதயகுமரனையடைந்து அவனருகே நின்று இளமைபின் நிலையில்லாமையை அவனுக்கு அறிவுறுத்தினாள்; அங்கே இயல்பாகவந்த முதுமைப்பருவத்தாலொருத்தியைக் காட்டி, முன்பு அழகையுடையனவாயிருந்த அவளுடைய உறுப்புக்கள் வலிமைகுறைந்து அழகுகெட்டு வெறுக்கத்தக்கனவாக இருத்தலைப் பலவாற்றாலும் அவனுக்குப் புலப்படுத்துவாளாகி,

"பூவினுஞ் சாந்தினும் புலான்மறைத் தியாத்துத்
தூவியு மணியிழை தொல்லோர் வகுத்த
வஞ்சத் தெரியாய் மன்னவன் மகளே" (க எ - கூ)

என்று கூறினள். அவள் அவ்வாறு கூறுதலைக்கேட்ட காஞ்சனன், "யான் பாராட்டிக்கூறுகின்ற சொற்களின்பொருளே இவள்கொள்ளு கின்றிலள்; என்னே மதிக்கின்றிலள்; அயலான்பின்னே செல்லுகின் றாள்; என்னே அயலானுக்கருதுகின்றாள்; காதற்குறிப்பைப் புலப் படுத்திக்கொண்டே நீதிமொழிகளே இவனுக்குக் கூறுகின்றாள்; இவன் ஆகாயகாமனுதலினாலேயே இவள் இவ்விடத்தில் தங்கிவிட் டாள் போலும்" என்றுநினைந்து மிக்க கோபங்கொண்டு புற்றிலடங் கும் பாம்பைப்போல் அவ்வுலகவறவியினுள்ளே புகுந்து தீதகருதி ஒளித்து அடங்கினன். அவன் அங்ஙனம் அடங்கியதை அறியாத உதயகுமரன், மிக்க வேட்கையையுடையவனாகி, 'மணிமேகலைதான் காயசண்டிகைவேடம்பூண்டு கையிற் பிச்சைப்பாத்திரத்தை ஏந்திக் கொண்டு வந்துநின்று நம்மை மயக்கினள்; அறிந்தவன் போன்று பழமைகூறிப் பாராட்டிய அயலானொருவன் இங்கே இருத்தலால், இவள் இன்றிரவில் இவ்விடத்தைவிட்டு நீங்குவாளல்லள்; இவள் செய்தியை இன்றிரவின் நடுயாமத்தே வந்து தெரிந்துகொள்வோம்' என்று தன்னுள் எண்ணிக்கொண்டே சென்று தன்னிருப்பிட மடைந்தான்; மணிமேகலையும் காயசண்டிகையுருவத்தோடே சம் பாபதி கோயிலை அடைந்து வதிந்தாள். அப்பால், எல்லாரும் தூங்கிய பின்பு உதயகுமரன் மூன்பு எண்ணியவாறே செல்லத் துணிந்து தனியேயெழுந்து அரண்மனையை நீங்கி உலகவறவியை யடைந்து,

வேக வெஞ்சீ காகங் கிடந்த
போகுயர் புற்றி னபுகுவான் போல (கூஅ - கூ)

அதனுள்ளே புகுந்தான். உடனே, அங்கே முன்னம் புகுந்து இவன் வரவை நோக்கிக்கொண்டே மோகபத்துடனிருந்த காஞ்சனன், 'இவன் இவளிடத்திலேயே வந்தான்' என்று நிச்சயித்து அதிக வேகத்தோடும் எழுந்து, விரைந்து போய், அவன் தோளே வெட்டி வீழ்த்திவிட்டு, காயசண்டிகையைக் கைப்பற்றிக்கொண்டு ஆகாய வழியே செல்லுவோமென்று நினைந்து அவளருகே சென்றான்; அப்பொழுது அங்கேயுள்ள கந்திற்பாவையானது, 'காஞ்சன!

செல்லாதே; செல்லாதே; இவள் உன்மனைவியாகிய காயசண்டிகை யல்லள்; இவ்வடிவம் மணிமேகலைகொண்ட வேற்றுவடிவம்; காய சண்டிகை கடும்பசியொழிந்து ஆகாயவழியே செல்லுகையில் அவ ளுக்கு நேர்ந்த துன்பத்தைக் கேட்பாயாக; ஆகாயசாரிகள் தர்க்கை யெழுந்தருளியிருக்கும் விந்தமலைக்குநேராக மேலே செல்லார்; யாரேனும் அங்ஙனம்செல்வாராயின், அம்மலையைக்காக்கும் விந்தா கடிகையென்பவள் அவர்களைச் சாயையினாலே இழுத்துத் தன் வயிற்றில் அடக்கிக்கொள்வாள். இதனையறியாத காயசண்டிகை அம்மலைக்கு நேராக மேற்சென்று அவள் வயிற்றில் அடங்கி விட் டாள். காஞ்சன! இதனையுங் கேட்பாயாக; உதயகுமரன் ஊழ் வினையினால் இறந்தானெனினும் நீ சிறிதும் ஆராயாது வெட்டின மையால், அறிவில்லாதவனாவாய்; மிக்க தீவினையைச் செய்து விட்டாய்; அவ்வினை விடாது தொடர்ந்து உன்னை வருத்தும்' என்று சொல்லியது; அதுகேட்டு மனம் வருந்திக் காஞ்சனன் தன்னகரத்திற்குச் சென்றான்.

உக.—கந்திற்பாவை வருவதுரைத்தகாதை.

அப்பால் சம்பாபதியின் கோயிலில் இருந்த மணிமேகலை, காஞ்சனன் செய்தியையும் உதயகுமரன் வெட்டுண்டு வீழ்ந்து இறந்ததையும் காஞ்சனனுக்குக் கந்திற்பாவை கூறிய அற்புத மொழியையுமறிந்து உடனேயெழுந்து தான்கொண்ட வேற்று வடிவத்தைத் துறந்து, (உதயகுமரன் உருவத்தைநோக்கி) 'முற் பிறப்பில் திட்டிவிடத்தால் உன்னுயிர்போன காலத்தில் நின்பிரி வாற்றாது தீயிற்பாய்ந்து நானும் உயிர்துறந்தேன்; உவவனத்திற் கண்டபொழுது உன்பாற் கருத்தைச் செலுத்தியதுபற்றி மணி மேகலாதெய்வம் என்னை எடுத்துச்சென்று மணிபல்லவத்தில் வைத்துப் புத்தபீடிகைக்காட்சியால் என்பழம்பிறப்பை எனக்குத் தெரிவித்து உன் முற்பிறப்பையும் கூறிற்று. அதனால், நீ முன்பு கணவனாக இருந்ததையறிந்து யான் உன்பால் அன்புற்று,

பிறந்தோ நிறந்தது மிறந்தோர் பிறந்ததும்
அறந்தரு சால்பு மறந்தரு தின்பமும்
யானைக் குரைத்துநின் னிடர்வினை யொழிக்கக்
காயசண் டிகைவடி வானோன் காதல; (கசு - உஉ)

வித்தியாதரனுடைய வாட்படையால் வெட்டுண்டு வீழ்ந்தனையே ; அந்தோ !' என்று புலம்பி வெய்துயிர்த்து வருந்தி, அவனுருவின் அருகே செல்வாளாயினள் ; அப்பொழுது அங்குள்ள கந்திற் பாவைத் தெய்வம், "நீ இவனிடத்திற் செல்லாதே ; செல்லாதே ; உனக்கு இவன் கணவனாக இருந்ததும் இவனுக்கு நீ மனைவியாக இருந்ததும் சென்ற பிறவியிலேமட்டும் நிகழ்ந்தனவல்ல; அதற்கு முன்னமேயும் எத்தனையோ பிறவிகளில் நிகழ்ந்தன ;

> இனக்கிழவன் மகளைத் தோள்பிரிய நீஉ
> மனக்கினி யாற்குநீ மகளாய நீஉம்
> பண்டும் பண்டும் பல்பிறப் புளவாற்
> கண்ட பிறவியே யல்ல காரிகை; (உக - ரு உ)

இங்ஙனம் தடுமாறும் பிறவித்துன்பத்தை ஒழித்துக்கொள்ளுதற்கு முயலும் அறிவினையுடையாய் ! இவனிறந்ததுபற்றி நீ துன்பமடையாதே" என்று தனது தெய்வவாக்காற் சொல்லிற்று. அதுகேட்ட மணிமேகலை சென்று, "இவ்வம்பலத்தில் யாவருக்கும் மெய்ம்மையைச் சொல்லிக்கொண்டு எழுந்தருளியிருக்கும் தெய்வம் ஒன்றுண்டென்பர் ; அத்தெய்வம் நீதானே? உன் திருவடியை வணங்குகின்றேன் ; சென்றபிறவியில் திட்டிவிடத்தாலும் இப்பிறவியில் வித்தியாதரனுடையவாளாலும் இவன் இறந்ததற்குள்ள காரணத்தை நீ அறிவையோ? அறிந்திருப்பாயாயின், அதனை அடிச்சிக்கு உரைத்தருளல் வேண்டும்" என்றாள்; என்றலும், அத்தெய்வம் "புத்ததேவன் அவதரித்து வருதலைக்கூறிக் காயங்கரையென்னும் ஆற்றங்கரையி லிருந்துகொண்டு மனிதருடைய அறிவின்மையைப் போக்கும் பிரமதருமமுனிவரை இராகுலனும் நீயும் வழிபட்டு அவருக்கு அமுது செய்விக்க நினைந்து அக்கருத்தை அவருக்கு அறிவித்து அவர் உடன்பாடுபெற்று, 'விடியற்காலத்திலேயே அடிசில் முதலியவற்றை விரைந்து ஆக்குவாய்' என்று மடையனுக்குக் கூறினீர் ; அவன் யாது காரணத்தாலோ அக்காலத்தில் வாராமல் சிறிதுபொழுது பாணித்துவந்து, அங்ஙனம்வந்த அச்சத்தால் வழுக்குற்றுக் கால்தளர்ந்து மடைக்கலம் சிதையும்படி வீழ்ந்தான் ; வீழ்ந்ததனைக்கண்டும் இரங்காமல், 'இவன் முனிவர்க்குச் செய்யவேண்டிய காரியத்தை விரைந்து வந்து செய்யாது தாழ்த்தான்' என்று சினந்து தோளும் தலையும் துண்டமாய்

வேறுகும்படி இராகுலன் அவனே வெட்டினனென்; வெட்டிய அவ்வல் வினையே அப்பிறப்பில் அவனைத் திட்டிவிடத்தால் இறக்கச்செய்த தன்றி இப்பிறப்பிலும் இங்கு வெட்டுண்டு வீழச்செய்தது. உதய குமரன் இங்ஙனமிறந்ததற்குக் காரணம் இதுவே; வினை; தன் பயனை ஊட்டாமலொழியாதென்பது திண்ணம்; இன்னும் கேட்பா யாக; உதயகுமரனிறந்ததற்கு மிகவும் வருத்தமுற்ற சக்கரவாளக் கோட்டத்து முனிவரால் அச்செய்தியை அறிந்த அரசன் உன்னைச் சிறையில்வைப்பான்; அதுதெரிந்த இராசமாதேவி உன்னைச் சிறை மீட்டுத் தன்காவலில் வைத்துக்கொள்வாள்; மாதவியின் வேண்டு கோளால் வந்த அறவணவடிகளுடைய சொல்லால் அக்காவலினின் றும் நீங்குவை. அப்பால் நீ சாவகநாடுபோய் ஆபுத்திரனுஞ் சென்று அவனுடு மணிபல்லவத்தை அடைவை; தன் வரலாற் றைப் புத்தபீடிகைக் காட்சியாலும் தீவதிலகையாலுமறிந்து அவ் வரசன் தன்னுட்டையடைந்தபின், நீ ஒரு முனிவன்வேடம் பூண்டு வஞ்சிநகரம் புகுவாய்; புகுந்து அந்நகரத்துள்ள சமயவாதிகள் பல ருடைய கொள்கைகளையுங் கேட்பை;

தீவினை யுறுதலுஞ் செத்தோர் பிறத்தலும்
வாயே யென்று மயக்கொழி மடவாய்! (ககஉ - ச)

இதுநிற்க; என் வரலாற்றையும் கேட்பாயாக; யான் தெய்வகணங் களைச்சார்ந்த ஒருவன்; என்பெயர் துவதிகனென்பது; இத்தப் பழையதூணில் எனக்கு ஒப்பாக மயனுற் செய்யப்பட்ட இத்தப் படிமத்தைவிட்டு ஒருபொழுதும் நீங்கேன்" என்று மிகவும் விளக் கமாகச் சொல்லியது. சொன்னவுடன், மணிமேகலை, "அப்பால் என்னுடைய மரணமிறுதியாக நிகழும் செய்திகளை யெல்லாம் உரைத்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தாள்; பிரார்த்திக்கவே, "மழையில்லாததுபற்றிக் காஞ்சிநகரத்தில் உயிர்கள் பசியால் வருந்துதலையும் மாதவி சுதமதி யென்னும் இருவருடன் அறவண வடிகள் அந்நகரஞ்சென்று தன்னுடையவரைப் பார்த்துக்கொண்டு தங்கியிருத்தலையும் வஞ்சிநகரத்தில் நீ அறிந்து உடனே அக்காஞ்சி நகரஞ் சென்று உணவளித்து எல்லாவுயிர்களையும் பாதுகாப்பாய்; அந்நகரத்தே உன்னாலே பற்பல அற்புதங்கள் நிகழும். அப்பால், வஞ்சிநகரிற் கேட்ட சமயவாதிகளுடைய கொள்கைகளையெல்லாம் அறவணவடிகளுக்கு நீ தெரிவிப்பாய்; அப்பொழுது, அவர்,

தவமும் தருமமுஞ் சார்பிற் றோற்றமும்
பவமறு மார்க்கமும் பான்மையி னுரைத்து
'மதவிரு ளிரிய மன்னுயி ரேமுற
அதவெயில் விரித்தாங் களப்பி லிருத்தியொடு
புத்த ஞாயிறு தோன்றுங் காறும் (கஉங - எ)

இந்தத் தலத்திலேயே இறந்தும் பிறந்தும் தருமோபதேசஞ் செய்து கொண்டு தங்காதிற்பேன்' என்று சொல்லுவர்; அவர்செய்த உபதேசமொழிகள் பிழையாமல் நல்லறங்கள் பலவற்றையும் செய்து இறந்து மேலேவரும் பிறப்புக்களே *உத்தர மகதநாட்டிலேயே பெறுவாய்; அவைகள் யாவும் உனக்கு ஆண்பிறப்பாகவே நிகழும்; அப்பிறப்புக்களுள் ஒவ்வொன்றிலும் அருளறத்தினின்றும் ஒழியாயாகின்று முடிவிற் புத்ததேவனுக்கு முதல்மாணாக்கனுகும் பெரும் பேறுற்றுப் பற்றற்று நிருவாணமடைவாய். இன்னுங்கேள்; உன் குலத்து முன்னோர்களுள் தானந்தாங்கிச் சீலத்தில் மேம்பட்ட ஒருவனைக் கடலினின்றும் முன்னம் எடுத்தளித்த மணிமேகலா தெய்வம் நீ முற்பிறப்பில் சாதுசக்கரமுனிவனுக்கு உணவளித்த புண்ணியவிசேட முடையா யென்பதையறிந்து உவவனத்தினின்றும் உன்னையெடுத்து மணிபல்லவத்திற் கொண்டுசென்று புத்த பீடிகையைக் காணச்செய்தது" என்று அத்தெய்வம் சொல்லிற்று; கேட்ட மணிமேகலை கவலையொழிந்து மயக்கம் நீங்கியிருந்தாள்; அவ்வளவிலே சூரியனுதித்தான்.

உஉ.—சிறைசெய்காதை.

சூரியனுதித்தவுடன், கந்திற்பாவையையும் சம்பாபதியையும் வழிபட்டவர்கள், அங்கே உதயகுமரன் வெட்டுண்டு கிடத்தலைக் கண்டு, அதனைச் சக்கரவாளக்கோட்டத்திலுள்ள முனிவர்களுக்குக் கூறினர். அம்முனிவர்கள், "இவன் வெட்டுண்டதற்குக் காரணம் நீ அறிந்ததுண்டோ?" என்று மணிமேகலையைக்கேட்ப அவள் நிகழ்ந்தவற்றைச் சொல்ல, அவர்கள் உதயகுமரனுடைய உடம்பையும் மணிமேகலையையும் வேறிடத்தில் ஒளித்துவைத்து விட்டு அரண்மனைசென்று தம்முடைய வரவை வாயில்காப்போ

* புத்ததேவரவதரித்ததும், அவருக்கு ஞானோதயமானதும் மகதநாடாதலால், அது சிறந்த புண்ணிய பூமியாகப்பௌத்தரால்மிகப்பாராட்டப்படும்.

ரால் அரசனுக்குத் தெரிவித்து உள்ளேபோய் அரசனையடைந்து அவனை வாழ்த்தியபின்பு, அவர்களுள் ஒருமுனிவர், "அரசே! இன்றுமட்டுமன்று; இங்ஙகரில் காமவிகாரத்தால் மயங்கிப் பத்தினிப் பெண்டிரையடுத்து வன்மைசெய்தும் தவமகளிரை விரும்பியொழுகியும் ஒறுக்கப்பட்டு இறந்தோர் முற்காலத்தும் பலருண்டு; கேட்பாயாக; அரசர்களுடைய பரம்பரையை வேரறுத்த பரசுராமன் போர்செய்தற்கு வந்தபொழுது துர்க்கை, அக்காளில் இங்ஙகரையாண்ட காந்தனென்னும் அரசனைப்பார்த்து 'நீ இப்பொழுது பரசுராமனோடு போர்செய்தற்குச் செல்லுதல் தகுதியன்று' என்று கூறினமையால், வேறிடஞ் செல்லுதற்கு நினைந்த அவ்வரசன் இங்ஙகரைப் பாதுகாத்தற்குரியோர் யாரென்று ஆராய்ந்து காவற்கணிகையின் புதல்வனும் வீரருள்வீரனுமாகிய ககந்தனென்பவனே இதற்குத் தகுதியுள்ளானென்று நிச்சயித்து, அவனை, வருவித்து, 'அரசாளுங்குலவுரிமை உனக்கின்மையால், அபசாரம் பரையோரைக் கொல்லுதலேயே விரதமாகக்கொண்ட பரசுராமன் உன்னோடு போர்செய்தற்கு வாரான்; அகத்தியமுனிவருடைய சட்டனை பெற்றுயான் மீண்டு வருமளவும் இங்ஙகரை நீ பாதுகாக்கக்கடவை; உன்னுற் காக்கப்படுதலின் இங்ஙகர்க்குக் காகந்தியென்ற பெயருண்டாகக்கடவது' என்றுசொல்லிவிட்டு வேற்றுவடிவங்கொண்டு தான்கருதியவிடஞ் சென்றான்.

"அவன் சென்றபின் ககந்தனென்பவனால் இங்ஙகர் பாதுகாக்கப்பட்டு வந்தது; அப்பொழுது ஒருநாள் ககந்தனுடைய பிள்ளைகளுள் இளையவன், காவிரியில் நீராடிவிட்டுத் தனித்து வருபவளாகிய மருதியென்னும் பார்ப்பனியை அந்திவாயிலிற்கண்டு காமபரவசனாய், 'நீ வா' என்றழைத்தான்; அவள் மனங்கலங்கி, 'இவ்வுலகில் மழைவளத்தைத்தரும் பத்தினிப்பெண்டிராயுள்ளார் பிறருடைய நெஞ்சிற் புகார்; நானே இவனுடைய உள்ளத்திற் புகுந்தேன்; ஆதலால், இனி அந்தணனுடைய முத்தீயைப்பேணுந் தகுதி எனக்கு இல்லையே! இதற்குக்காரணம் யாது?' என்றுதுன்பமுற்றுத் தன்னுடைய வீட்டிற் செல்லாமற் பூதசதுக்கம் புகுந்து மயங்கி, 'தெய்வமே! கொண்டவனுக்கு யாதொரு குற்றமுஞ் செய்திலேன்; அப்படியிருந்தும் பிறனுடைய நெஞ்சில் எளிதாகப் புகுந்தேன்; யான் செய்த தவறு இன்னதென்று எனக்கே புலப்படவில்லை; தவ

மறைந்தொழுகுவோர்முதலியதியவர்களைப் பாசங்கட்டிவர நீஇங்கே அறைந்துண்பை என்று ஆன்றோர்கூறக் கேட்டுளேன்; இப்பொழுது என்னை அங்ஙனஞ்செய்யாமையின், நீ ஈண்டிருத்தல் பொய்யாமோ?' என்று அவலித்து அரற்றினள். அரற்றும்பொழுது சதுக்கப்பூதம் தோன்றி, 'மடக்கொடி! கேட்பாயாக;

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யெஞ்ஞான்றும்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்; (ரிக்-சுக)

பொய்க்கதைகளையும் நகையை விளைவிக்கு மொழிகளையும் பிறர் வாய்க்கேட்டு நிருத்தநீதவாத்தியங்களையுடைய விழாக்களை விரும்பித் தெய்வங்களை வழிடமும் நியமத்தை மேற்கொண்டிருந்தனை; ஆதலின், உன் ஏவலால் மேகம் மழையைப்பெய்யாது; உத்தமப் பத்தினிப்பெண்டிரைப்போலப் பிறருடைய மனத்தைச் சுடுத்தன்மையும் உனக்கு இல்லாதுபோயிற்று. மேற்கூறிய வெற்றுச்செய்கைகளை விடுவாயாயின், மேகம் உனது மொழிவழிப்படி ஒழுகாநிற்கும்; மனம்போனவாறே யொழுகும் பெண்டிரைக் கட்டுவதுபோல உன்னை என்பாசம் கட்டுதல்செய்யாது. குற்றஞ்செய்தோரை ஏழு நாள் வரையில் தண்டித்தல் அரசனுடைய முறைமை; அவன் அக்காலவரையறையுள் அதனைச் செய்யாதொழியின், அப்பால் தண்டிப்பது என்னுடைய முறைமையாகும்; இவ்வேழுதினத்திற் குள்ளேதானே இச்செய்தியைக் கேட்டுக் ககந்தன் உன்னை விரும்பிய சிறுதொழிலாளனை வெட்டிவிடுவான்' என்று எடுத்துரைத்தது; அப்பூதம் உரைத்த ஏழுநாளைக்குள்ளே அச்சிறு தொழிலாளன் தாதையின்வாளால் தடியப்பட்டனன்; மன்னவரேறே! இன்னும் கேட்பாயாக.

"இங்ஙகரில் முன்பிருந்த பேரழகையுடைய தருமதத்தனென்னும் வாணிகனும் அவன் மாமன்மகளாகிய விசாகையென் பவளும் ஒருவர்பால் ஒருவர் மிக்க அன்புபாராட்டி உரையாடிக் கொண்டிருந்தமைபற்றி, 'இவர்காந்தருவமணத்திற்குரியவராயினர்' என்று ஊரிலுள்ளாரெல்லாரும் பழிகூறுவாராயினர். அதுபொறாத விசாகையானவள் சென்று உலகவறவியிலேறி, 'கந்திற்பாவாய்! இப்பழியை ஒழிப்பாய்' என்று முறையிட்டாள்; உடனே அத்தெய்வம், 'நகருள்ளீர்! இவள் யாதொருகுற்றமும் இல்லாதவள்' என்று தனது

தெய்வவாக்கால் அவளே உயர்த்திக்கூறியது; அதுகேட்டு ஊரார் அவளே வியந்து புகழ்ந்தார்கள்; விசாகை, 'இத்தெய்வம் தெளிவியாதாயின், இவ்வூராருக்கு என்பாலுண்டாகிய ஐயம் நீங்காது; மறுபிறப்பிலேதான் மைத்துனனுக்கு மனையியாவேன்; இப்பிறப்பில் இவனே மணத்தல்செய்யேன்' என்று கன்னுடைய நற்றாய்க்குச் சொல்லிவிட்டுக் கன்னிமாடம்புகுந்து தவஞ்செய்துகொண்டிருந்தாள். அப்பால், தருமதத்தன் தன்பழியைப் போக்கிய கந்திற் பாவையைத் துதித்துக் காஞ்சிரிப்பூம்பட்டினத்தைக்கடந்து தென்மதுரையை யடைந்து, 'விசாகையையன்றி வேறுமகளிரை யான் விரும்பேன்; இப்பிறப்பு இங்ஙனம் ஒழிவதாக' என்று எடுத்துக்கூறி விரதம் பூண்டவனுடி வாணிகஞ்செய்து அறவழியே பொருளீட்டிப் பெருஞ்செல்வமுற்று அரசனுல் எட்டிப்பூப்பெற்று மிக்க சிறப்பை யடைந்து அறுபது பிராயம்வரையும் அக்ககரிற் றங்குவானுயினன்; அப்பொழுது அவனிடத்தில் ஓர்தணன்சென்று, 'நீ விவாகமின்றி இக்ககரத்தே இருந்து என்னகாரியஞ்செய்தனே? மனேவியில்லாதவர்கள் எவ்வளவு தருமஞ்செய்வாராயினும் தெய்வலோக மடையாரென்பதை நீ கேட்டறிந்திலேயோ? இனித் தாழ்த்தலின்றி உன்னகரஞ் செல்வாயாக' என்று கூறலும், தருமதத்தன் அக்ககரைவிட்டு நீங்கிவந்து இக்ககரத்திற் புகுந்தான். அவன்வந்ததுகேட்ட விசாகை சிறிதும் தாணமின்றிக் கன்னிமாடத்திலிருந்து புறத்தேவந்து அவனேயடைந்து, 'இப்பொழுது நம்முள் ஒருவரையொருவர் நாம் அறிந்திலேம்; முன்பு நம்மை மயக்கிய அழகுகள் எங்கே ஒளித்துச்சென்றன? உனக்கு அறுபதுபிராயம் ஆயின; எனக்கும் கூந்தல் கரைத்தது; முன்பிருந்த இளமையும் காமமும் எங்கே ஒளித்துப் போயின; உரைப்பாயாக. இப்பிறப்பில் யான் நின்னடியை அடையேன். மறுமையில் நின்னேமணப்பது நிண்ணம்.

இளமையு நில்லா யாக்கையு நில்லா
வளமிய கூற்பெருஞ் செல்வமு நில்லா
புத்தே ளுலகம் புதல்வரும் தாயார்
மிக்க வறமே விழுத்துணை யாவது ; (கந்தரு - அ)

ஆதலால், தானஞ்செய்க' என்றுசொல்ல, அவன் தான் ஈட்டிய பொருள்களேயெல்லாம் விசாகைக்குக்காட்டி அப்பொருள்களேக் கொண்டு அவளோடுசெய்த நல்லறங்கள் மிகப்பல; இது நிற்க;

முன் இந்த விசாகை கந்திற்பாவைத்தெய்வத்தாற் பழிநீங்கிப் பலர் கூடிவே தியில் வருகையில், மூன்பு மருகியால் மடிந்தவனுடைய மூத்தோன், அவ்விசாகையைக்கண்டு அகிமோகங்கொண்டு, தான் தலைபிலணிந்த மாலையைவாங்கி அவள் கழுத்தில் இதற்குத் துணிந்து அம்மாலையை எடுத்தற்காகத் தன்கையைக் குடுமியிற் செலுத்த அக்கை அதனைவிட்டு நீங்காததாயிற்று. ஆகவே, 'விசாகையின் ஒழுக்கவிசேடத்தால் அவன்கை கீழே இழிந்திலது' என்று பலர்கூறக்கேட்ட ககந்தன் மிகுந்த கோபங்கொண்டு தன்மக னென்று பாராமல் உடனே அவனை வெட்டிவீழ்த்தினான்" என்று கூறலும், அரசன், "இன்றுமட்டுமன்று என்று தொடங்கிப் பல வற்றையுங் கூறினீர்; முன்பு நிகழ்ந்ததாகக்கூறிய அத்தீயவொழுக்கம் இக்காலிலும் உளதோ? இயம்புமின்" என்று கேட்ப, அம்முனி வர்களுள் ஒருவர்,

"மூடிபொரு ளுணர்ந்தோர் மூதுநீ ருலகில்
கடியப் பட்டன வைத்தன வவற்றில்
கள்ளும் பொய்யுங் களவுங் கொலையும்
தள்ளா தாகுங் காமந் தம்பால்
ஆங்கது கடிந்தோ ரல்லவை கடிந்தோரென
நீங்கின ரன்றே நிகரதவ மாக்கள்
நீங்கா ரன்றே நீணில வேந்தே
தாங்கா ரகத் தானினை யுழப்போர்; (கசுகூ - எசு)

தன் கணவனுகிய கோவலன் கொலையுண்டதுபொருமல் மாதவி உலகவாழ்வைவெறுத்து முனிவர்களுடைய தவச்சாலையை அடைந் தாள். அவள் பெற்ற மணிமேகலையென்பவள் இளம்பருவத்தே தானே தவஞ்செய்யத்துணிந்து சிற்றிலும் பேரிலுஞ் சென்று ஐய மேற்று அருந்தி ஊரம்பலமடைந்தாள்; அவள் அவ்வியல்பினளாக வும், அவனை விழைந்து நிழல்போல விட்டு நீங்காமற் காமபர்வசனுய் கள்ளிருளில் உதயகுமரன் அவ்வம்பலத்தை அடைந்தான். அது தெரிந்த மணிமேகலை, அவன் தன்னை கலியாதிருக்கவேண்டிக் காய சண்டிகைவடிவம் பூண்டாள். அங்கே மூன்னமிருந்த காயசண்டி கையை அழைத்துச் செல்லுதற்குவந்த அவள் கணவனுகிய வித்தி யாதரன்கண்டு, அவள் மணிமேகலையென்பதையறியாமல், அவனைத் தன் மனைவியாகிய காயசண்டிகையென்றும், அங்கேவந்த உதய

குமரனைத் தன் மனைவியைவிரும்பி வந்தவனென்றும், தானே தன் னுள் நிச்சயித்துக்கொண்டு முறுகியகோபமுற்று உடனே அவனை வாளால் வெட்டி வீழ்த்தினன்" என்று சொன்னர். அதுகேட்ட அரசன் தன்மகன் இறந்ததற்குச் சிறிதும் வருந்தாமல், சோழிக வேளதியைப் பார்த்து, "உதயகுமாணுக்கு யான் செய்யவேண்டிய தண்டனையைத் தான் செய்தமையால் வித்தியாதான் தகவில னுவான்;

மாதவர் கோன்பு மடவார் கற்பும்
காவலன் காவ லின்றெனி னின்றால்; (உoஅ - கூ)

தன்மகனைப் பூமியிலே கிடத்தி அவன்மீது தேர்க்காலைச் செலுத்தி முறைசெய்த அரசர்பிரானுடைய பரம்பரையில் ஒரு தீவினையாளன் பிறந்தானென்பதை மற்றை அரசர்கள் கேட்குமுன்னம் அவனைப் புறங்காடடைவித்து, கணிகைமகளாகிய மணிமேகலையையும் சிறைப் படுத்துக" என்றனன்; சோழிகவேளதி அவ்வாறு செய்தான்.

உங.—சிறைவிடுகாதை.

பின்பு, அரசன்கட்டளையால், வாசந்தவையென்னும் முதியவ ளொருத்தி, புத்திரசோகத்தாற் கலங்கி வருந்தும் இராசமாதே வியை விரைந்தடைந்து தொழுது முன்னின்று வாழ்த்தி அவளு டைய வருத்தம் நீங்கும்வண்ணம் பல கட்டுரைகள்கூறி ஒருவாறு ஆற்றுவித்துப் போயினள். அவள் போனபின்பு, இராசமாதேவி தன்னுடையவருத்தம்புறத்தேதோன்றுதவண்ணம்அடக்கிக்கொண் டவளாய், "மணிமேகலையை வஞ்சித்து வருத்துவேன்" என்று எண்ணி அரசனைச்சார்ந்து, "செங்கோல்வேந்தே! மணிமேகலை யின் சிக்குணிக்கோலத்தைக்கண்டு தன்னறிவுவேறுபட்ட உதய குமரன் அரசாட்சிக்கு உரியவனல்லன்; அவன் அக்கொடுந்தொழி லால் இறந்தது தக்கதே; தனது இளமையைப் பயனற்றதாகச் செய்த பேரறிவுடையவளாகிய மணிமேகலைக்குச் சிறை தகுதி யன்று" என்றாள். அரசன், "உன்கருத்து அப்படியாயின் அவ ளைச் சிறையினின்றும் விடுவி" என்று கூறினன். கேட்ட இராச மாதேவி சிறையினின்றும் விடுவித்து அவளை அழைத்துக் கொண்டு அரண்மனையுட்சென்று, "இவ்வூரிலுள்ளாரெல்லாரும் அடித்து வருத்தும்படி இவளைப் பித்தியாகச்செய்வேன்" என்

றெண்ணி மயக்கும்மருந்தை அவளுக்கு ஊட்டினள். அவள் மறு பிறப்புணர்ந்தவளாதலால் சிறிதும் அறிவுவேறுபடாதிருந்தாள். அப்பால் இராசமாதேவி அறிவிலியாகிய ஓரிளஞ்ஞை அழைத்து, "இவளுடம்பை எப்படியேனும் வேறுபடித்தி 'மணிமேகலை என்னை விரும்பினள்' என்று பலர்க்கும் சொல்வாயாக" என்றுசொல்லிப் பொற்காசுகள் பலவற்றைக் கைநிறைய அவனுக்குக்கொடுப்ப, அவன் அத்தீச்செயற்குடம்பட்டு மணிமேகலை இருந்த இடத்தை அடைந்தான். அடைதலும் அவள், 'இவன் வந்தது இராசமாதேவியின் வஞ்சனையால்' என்று நிச்சயித்து வேற்றுருவெய்துவிக்கும் மந்திரத்தை ஜபித்து ஆண்வேடம்பூண்டு அங்கேயிருந்தாள். அங்ஙனமிருந்ததனைக்கண்ட அறிவிலி, நடுநடுங்கி, 'அரசருடைய அந்தப்புரத்தில் ஆடவர் அணுகார்; இராசமாதேவியின் தீயநினைப்பை யான் அறிந்திலேன்' என்று பயந்து அவ்விடத்தைவிட்டு விரைந்து புறத்தே ஓடிப்போயினன். அதன்பின் இராசமாதேவி 'நமது அருமைப்புதல்வனை மயக்கி மாளச்செய்த இவளை இனி உயிரோடு வையேன்' என்று சினந்து, 'நோய்மிகுதியால் இவளுக்கு உணவு செல்லவில்லை' என்று அவள்பாற் பொய்ந்நோயொன்றைக் காட்டி அவளைப் புழுக்கறையில் அடைப்ப, அவள் ஊணுழி மந்திரமுடையளாதலின் அம்மந்திரத்தை ஜபித்துச் சிறிதும் வாட்டமின்றி அவ்வறையிலேயே இருந்தாள். அதனைக்கண்ட இராசமாதேவி ஆச்சரியமுற்று நடுநடுங்கி அவளைநோக்கி, "மகனையிழந்த பெருந்துன்பம் பொறுக்கலாற்றாது இத்தீங்குகளைச்செய்தேன்; நீ இவற்றைப் பொறுத்தருளவேண்டும்" என்று பலவாறு வேண்டினள். வேண்டவே மணிமேகலை, "சென்றபிறப்பில் நீலபதியின்வயிற்றிற்றோன்றிய இராகுலனைத் திட்டிவிடமென்னும் பாம்பு உயிருண்டபொழுது, அதனைப்பொறைஞகித் தீயிற்பாய்ந்து என்னுடைய உயிரைவிட்ட நாளில்,

யாங்கிருந் தழுதனை யிளங்கோன் றனக்குப்
பூங்கொடி நல்லாய் பொருந்தாது செய்தனை
உடற்கழு தனையோ வுயிர்க்கழு தனையோ
உடற்கழு தனையே லுன்மகன் றன்னை
எடுத்துப் புறங்காட் டிட்டனர் யாரே
உயிர்க்கழு தனையே லுயிர்புகும் புக்கில்

செயப்பரிட்டு வினையாற் றெரிந்துணர் வரிய
தவ்வுயிர்க் கன்பினை யாயி னுய்தொடி
எவ்வுயிர்க் காயினு மிரங்கல் வேண்டும் ; (எக - கூ)

உன்மகனே வித்தியாதரனெருவன் வெட்டிவீழ்த்தியதற்குக் காரண மான தீவினையை இன்னதென்று கூறுவேன்; கேட்பாயாக; அது மூற்பிறப்பில் மடைக்கலஞ்சிதைய வீழ்ந்த மடைத்தொழிலாளனை வெட்டிவீழ்த்தியதாலுண்டாகிய தீவினையே; அத்தீவினை அப்பிறப்பி லேயே நஞ்சுவிழியரவால் அவனுடைய நல்லுயிரைவாங்கி இப்பிறப் பிலும் விஞ்சையன்வாளால் வெட்டுண்ணச்செய்தது. 'இச்செய்தி களெல்லாம் நீ எப்படி அறிந்தாயோ ?' என்பையாயின், 'நடந்தது இவ்வாருகும் " என்று தான் உவவனஞ்சென்றது முதலிய எல்லா வற்றையும் ,அவளுக்கு விளங்கக்கூறிப் பின்னுங்கூறுவாளாயினள்: " நீ மருந்தால் எனக்குப் பித்தேற்றினை; யான் மறுபிறப்புணர்ந்தே னதலின், சிறிதும் அறிவுபிறழாதிருந்தேன்; உன் ஏவலால் கல்லாக் கயவன் என்பால்வர வேற்றருவெய்துவிக்கும் மந்திரவலியால் ஆணுருக்கொண்டிருந்தேன். யாதொரு நோயுமில்லாத என்னைப் பொய்நோய்காட்டிப் புழுக்கறையில் அடைப்பித்தாய்; ஊணெழி மந்திரமுடைமையினலேயே அத்துன்பத்தினின்றும் தப்பினேன். நீ சென்ற பிறப்பில் எனக்குக் கணவனுயிருந்த இராகுலனை ஈன்றதா யாதலின், உனது துக்கத்தைக் களைந்து தீவினையைப்போக்கி உன்னை நல்வழிப்படுத்தற் பொருட்டே ஆகாயவழியே செல்லுதலையும் வேற் றுருக்கொள்ளுதலையும் யான் நினைந்திலேன்; இதுநிற்க; இவ்வுலகத் துள்ளோர்க்குத் துன்பம் தருவன யாவையெனின், காமம், கொலை, கள், பொய், களவென்னும் ஐந்துமாம். இவற்றைத் துறந்தோரே சில முடையோராவர்.

செற்றஞ் செறுத்தோர் முற்ற வுணர்ந்தோர்
மல்லன்மா ஞாலத்து வாழுவோ ரரண்போர்
அலலன் மாககட் கிலது நிரப்புகர்
திருந்தே லெல்வனே செலவுல கறிந்தோர்
வருதி வந்தோ ரரும்பசி களைந்தோர்
துன்ப மறுக்குந் துணிபொரு ளுணர்ந்தோர்
மன்பதைக் கெல்லா மனபொழி யார்" எனை
ஞான நன்னீர் நன்கனங் தெளித்துத்
தேனு ரோதி செவிமுதல் வார்த்து
மகன்முயர் நெருப்பா மனம்வித காக
வகஞ்சுடு வெந்தீ யாயிழை யலிப்ப, (கஙக - சக)

இராசமாதேவி, மனந்தெளிந்து மணிமேகலையை வணங்கினள்; மணிமேகலை அதனைப்பொருளாகி, "நீ என் கணவனைப்பெற்ற தாயாக இருத்தலன்றி அரசனுடைய மாபெருந்தேவியாகவுமுள்ளாய்; ஆதலால் என்னை வணங்குதல் தகுதியன்று" என்று துதித்து அவளைத் தானும் அன்புடன் வணங்கினள்.

உச.—ஆபுத்திரனுடைந்தகாதை.

மணிமேகலையை விரும்பிச்சென்ற உதயகுமரன் விஞ்சையனுடைய வாட்படையால் உலகவறவியில் வெட்டுண்டு இறந்ததையும் மணிமேகலை சிறையில் வைக்கப்பட்டிருத்தலையுங் கேட்டு வருந்தி நடுங்கி அவளைச்சிறையினின்றும் நீக்கினைந்த சித்திராபதி, இராசமாதேவிபாற்சென்று வணங்கி, "மாபெருந்தேவி! கோவலனிறந்தானென்று மாதவி தனது பரத்தைமைத் தொழிலை நீத்துத் தவச்சாலையையடைந்ததும், அவள்மகளாகிய அரங்கக்கூத்தி பாத்திரமேந்தி வீடுதோறுஞ் சென்றுசென்று பிச்சையேற்றதும் யாவரும் அவமதித்துச் சிரித்தற்கு இடமாயினவேயன்றி வேறல்ல; இதுநிற்க; உதயகுமரனிறந்ததன்றி, மணிமேகலையால் இனி இந்நகரத்திற்கு உண்டாகும் பெருந்துன்பமுமொன்றுண்டு; கேட்பாயாக:—

"முன்னொருநாள், அரசன், இங்ஙகரிற் கடற்கரையைச் சார்ந்த புன்னைமரச்சோலையில் பேரழகினளாகிய ஒரு மங்கையைக் கண்டு விரும்பி அவளோடும் ஒருமாதம் அச்சோலையில் உறைவானாயினன்; அம்மங்கை அவனிடஞ்சொல்லாது தன்னிடஞ்சென்றாள்; செல்லவே, அரசன், இளங்கொடியாங் கொளித்தனனென்று பலவிடத்தும் தேடிக்கொண்டிருக்கும் பொழுது, அற்புதசக்தியையுடைய ஒரு சாரணன்வர, அரசன் கண்டு அவனைவணங்கி முன்னின்று, 'என்உயிர்போல்பவளாகிய ஒருத்தி இங்கே ஒளித்தனள்; அவளை அடிகள்கண்டதுண்டோ? உண்டாயின், சொல்லுக' என்றுகேட்ப, அந்தச்சாரணன், 'அரச! அம்மடந்தையை யான் இப்பொழுது கண்டிலேனாயினும் முன்பு அறிந்துளேன், கேட்பாயாக; அவள் நாகநாட்டரசனுகிய வளைவணனென்பவனுடைய தேவியான வாசமயிலையென்பவளின் வயிற்றிற் றோன்றிய பீலிவளையென்பாள்; அவள் பிறந்தாளிற் சோதிடங்கூற

வந்த கணி, 'இவள் சூரியகுலத்தரசனொருவனைச் சேர்ந்து கருவுற்று வருவாள்' என்று அரசனுக்குக்கூறினன்; இது முன்புநடந்தது; அவளே நீகூறியமடந்தை; இனி, அவள்வயிற்றிற்றோன்றும் மகனே வருவான்; அவள் வாராள்; நீ கவலாதிருக்கக்கடவை; இன்னும் ஒன்று கேட்பாயாக; இந்திரவிழாச் செய்யாதநாளில் மணிமேகலா தெய்வத்தின் சொல்லால் உன்நகரத்தைக் கடல்கொள்ளும்; இந்திர சாபமுமிருத்தலால், அதுதப்பாது; ஆதலால், யான் கூறியதை உண்மையென்றே நினைந்து, இந்நகரைக் கடல்கொள்ளாதபடி இந்திர விழாவை வருடந்தோறும் மறவாது செய்துவருக' என்று சொல்லி விட்டுப் போயினன்; அவன்போன அந்நாள்தொடங்கி, நகரத்திற்கு எப்போது கேடுவந்துவிடுமோவென்று இந்நகரத்தாரெல்லாரும் நடுங்கிக்கொண்டேயிருக்கின்றனர். தன்னுடைய பெயரைப் பெற்றமடந்தை துன்பமுறுவாளாயின், அதனைப் பரிகரித்தற்கு மணிமேகலாதெய்வம் வருதலுங்கூடுமோவென்று யானும் அஞ்சாநின்றேன்" என்று சொல்லித் துதித்து, "நல்லமனமுண்டாகப் பெற்ற நாடகக்கணிகையை மன்மனைக்குப் போதரும்படி கட்டளையிடுவாய்" என்று கேட்ப, இராசமாதேவி,

> "கள்ளும் பொய்யுங் காமமுங் கொலையும்
> உள்ளக் களவுமென் றிவரோர் துறந்தவை (எள - அ)

மேலானசெய்கையென்றுகொண்ட உனது பரத்தைமைத்தொழிலை அசுத்தவழியென்றெண்ணி வந்த இவள் உன்னுடன்வந்து உன்மனையிற் புகுதாள்; என்னுடைதானே இருத்தற்குரியள்" என்றுசொல்லிக் கொண்டிருக்கையில், மணிமேகலையின் நிலைமையைக்கேட்ட மாதவி, அதனைச் சுதமதிக்குக்கூறி வருந்திச்சென்று அறவணவடிகளை வணங்கி அறிவித்து அவரை முன்னிட்டுக்கொண்டு அவளைச் சிறைமீட்டற்பொருட்டு இராசமாதேவியிடம்வர, இராசமாதேவி அவரைக்கண்டவுடன் மற்றை இருவரோடுமெழுந்து எதிர்சென்று அவரடியைவணங்கினள்; அவர், "அறிவுண்டாக" என்று ஆசிகூறினர்; அப்பால் அவள் அவரைச் சிறந்த ஓராதனத்திலிருத்தி அடிவிளக்கிச் சிறப்புச்செய்து, "எமது நல்வினையே மிகப்பெரியோராகிய உம்மை இங்கே எழுந்தருளச்செய்தது;

> காத்தெரி வில்லா யாயினுந் தளர்ந்து
> மூத்தவிவ் யாக்கை வாழ்கபல் லாண்டு" (கூங - கஂஂ)

என்றுகூற, அவர், "யான் இத்தவவுடம்பிற் பொருந்தியிருந்தும் அத்தமிக்குஞ் சூரியன்போன்றேன் ;

பிறந்தார் மூத்தார் பிணிகோ யுற்றார்
இறந்தா ரென்கை யியல்பே யிதுகேள்" (கo௬ - ச)

என்று பன்னிரு நிதானங்களையும் அவளுக்கு விளங்க உபதேசித்து "எப்பொழுதும் நல்லறத்தையே பேணிக்கேட்டு அவ்வாறே யொழுகுக" என்று சொல்லிப் பின் மணிமேகலையை நோக்கி, "மற்றைச் சமயதருமங்களையெல்லாம் நீ கேட்டபின்பு இவற்றையும் இவற்றின் பகுதிகளையும் உனக்கு விளங்க உணர்த்துவேன்" என்றுகூறித் தம் மிடஞ்செல்லுதற்கு எழுதலும், மணிமேகலை எழுந்து அவரை வணங்கிப் பின்பு இராசமாதேவி முதலியோரைநோக்கி, "அறவண வடிகள் கூறிய உபதேசமொழிகளை மறவன்மின்; அவர்கூறியவாறே ஒழுகுமின் ; யான் இங்ஙகரிலிருப்பேனாயின், 'உதயகுமரனுக்கு இவள் கூற்றாயிருந்தாள்' என்று யாவருங்கூறுவர்; ஆதலால் இங்கி ரேன் ; இனி, ஆபுத்திரனுடைடைந்து பின்பு மணிபல்லவஞ்சார்ந்து புத்தபீடிகையைத் தரிசித்துவிட்டு, அப்பால் வஞ்சிங்கரஞ்சென்று பத்தினிக்கடவுளைத் தரிசித்தபின் எங்கும்போய் நல்லறஞ் செய்து கொண்டு ஒழுகாநிற்பேன் ; எனக்கு இடருளதாகுமோவென்று நீர் சிறிதும் கவலற்க" என்றுசொல்லி அவர்களையும்வணங்கி, சூரியாஸ் தமயத்திற்குப்பின் அந்திமாலைப்பொழுதிலேசென்று, உலகவறவி யையும் சம்பாபதியையும் கந்திற்பாவையையும் வலங்கொண்டு துதித்து ஆகாயவழியே பறந்துசென்று, இந்திரனுடைய வழித்தோன்றலாகிய புண்ணியராசனது நகர்ப்புறத்தேயுள்ள சோலைக்குள்ளே யிறங்கி அயர்வுயிர்த்து, ஆங்குள்ள ஒரு முனிவனைவணங்கி, "இந் நகரின்பெயர் யாது ? இதனையாளும் அரசன் யார்?" என்று கேட் டாள் ; அம்முனிவன், "இதன்பெயர் நாகபுரமென்பது ; இதனை யாள்பவன் பூமிசந்திரன்மகனாகிய புண்ணியராசனென்பான்; இவன் பிறந்தகாலந்தொடங்கி இந்நாட்டில் மழை பிழைத்ததில்லை; பூமியும் மரங்களும் பிறவும் பலவளங்களையும் மிகத் தாராநிற்கும் ; உயிர் களுக்கு ஒருவகையான நோயுமில்லை" என்று அரசனுடைய பெரு மையை அவளுக்கு விளங்கக் கூறினன்.

உரு.—ஆபுத்திரனெடு மணிபல்லவமடைந்தகாதை.

அப்பொழுது, புண்ணியராசன், தன்பெருந்தேவியோடு அச்சோலையிற்புகுந்து ஆங்குள்ள தருமசாவகனென்னும் முனிவனை வணங்கி

அறனு மறனு மரித்தமு நித்தத்
திறனுந் துக்கமுஞ் செல்லுயிர்ப் புக்கிலுஞ்
சார்பிற் றோற்றமுஞ் சார்பறுத் துய்தியும்
ஆரிய னமைதியு மமைவுறக் கேட்டு, (கூ - சு)

பின்பு, "இவள் ஒப்பற்ற பேரழகினள்; கையிற் பிச்சைப்பாத்திர மொன்றை உடையவளாய்த் தருமங்கேட்கிறாள்; யார்?" என்று வினவுகையில், அருகேநின்ற சட்டையிட்ட பிரதானி, அரசனை வணங்கி, "இவளையொப்பவர் யாருமில்லை; முன்னொருகாலத்தில் கிள்ளிவளவனெடு நட்புக்கொள்ளுதலை விரும்பிக் காவிரிப்பூம்பட்டினத்திற் சென்றபொழுது, அங்கேயுள்ள அறவணவடிகள் இவள் வரலாறுகளையெல்லாம் விளங்கக் கூறினனென்று முன்னமே நான் உரைத்ததுண்டு; அம்மடந்தையே இவள்" என்று கூறினன்; கூறலும், மணிமேகலை அரசனைப்பார்த்து, "உன்கையிலிருந்த பாத்திரமே என்கையையடைந்தது; செல்வத்தால் மயங்கினேபோலும்; என்செய்தனை? மணிபல்லவஞ்சென்று புத்தபீடிகையைத் தரிசித்தாலன்றி உனது பழம்பிறப்பின் செய்தியையறியாய்; ஆதலால், அரச! அங்கே வருவாயாக" என்று சொல்லிவிட்டு, எழுந்து ஆகாயவழியேசென்று சூரியாஸ்தமயத்திற்கு முன்னமே மணிபல்லவத்திலிறங்கி வலங்கொண்டு புத்தபீடிகையைத் தரிசித்தாள். அது பழம்பிறப்பை அவளுக்குத் தெரிவித்தது. அதனையறிந்து வியந்து அவள் அங்கேயிருக்க, புண்ணியராசன் அச்சோலையை நீங்கி நகரிற் புகுந்து, தன்னைவளர்த்த தாயாகிய அமரசுந்தரியைக்கண்டு வினவித் தன்வரலாறு முழுவதையும் அவள் கூறக்கேட்டு வருந்தி அரசாட்சியில் வெறுப்புற்றுத் துறத்தற்குத் துணிந்து தன்கருத்தை வெளியிட்டான்; அதனைக்கேட்ட சனமித்திரனென்னுமந்திரி, அவனை வணங்கி,

"எங்கோ வாழி யென்சொற் கேண்மதி; (கூகூ)

உன்னை அரசன் பெறுவதன்முன் இந்நாட்டில் பன்னிரண்டு வருடம் மழையில்லாமற் போயிற்று; வறுமைமிக்கது; அதனால்

எல்லாவுயிர்களும் வருந்தின ; அக்காலத்தில் நீ தோன்றினை ; தோன்றியபின் இந்நாட்டில் எல்லாவளங்களும் நிரம்பின ; உயிர்கள் துயரம்நீங்கி வாழ்வனவாயின ; நீ நீங்குவாயாயின், எல்லாவுயிர்களும் தாயைப்பிரிந்த குழந்தைகளைப்போலக் கூவாநிற்கும் ; இந்த நிலையையுடைய உலகத்தைக் காவாமல் உனது பயணையே விரும்பிச் செல்லுதல் தகுதியன்று ;

தன்னுயிர்க் கிரங்கான் பிறவுயி ரோம்பு
மன்னுயிர் முதல்வ னறமுமீ தன்றால்" (ககசு - எ)

என்றுகூற, அரசன் கேட்டு, "மணிபல்லவத்தை வலங்கொள்ள வேண்டுமென்று எனக்குண்டாகிய வரம்புகடந்த ஆசை தணித்தற்கு அரியது ; ஆதலால், அங்கே போய்வருவேன் ; ஒருமாத காலம் இங்கரைப் பாதுகாத்தல் உனது கடன்" என்றுகூறிப் புறப்பட்டு வழிக்கொண்டு கடற்கரையைச்சார்ந்து நாவாயேறி மணிபல்லவத்தை யடைந்தான் ; உடனே மணிமேகலை வந்து அழைத்துச்சென்று அவளோடு அத்தீவை வலம்வந்து "பழம்பிறப்பை யுணர்விக்கும் தருமபீடிகை இது" என்றுகாட்ட, அரசன், அதைத் தரிசித்து வலங்கொண்டு துதித்தான்; துதிக்கவே அப்பீடிகை பழம்பிறப்பின் செய்தியை அவனுக்கு விளங்கத் தெரிவித்தது. அதனை யறிந்து வியப்புற்று, தனக்குப் பழம்பிறப்பில் அமுதசுரபியென்னும் அக்ஷயபாத்திரத்தையளித்த சிந்தாதேவியைத் துதித்து மணிமேகலையோடுமெழுந்து தென்மேற்கிற் சென்று கோமுகிக்கரையில் புன்னைமரத்தின் நிழலிலே இருந்தான் ; இருக்கையில் ஆபுத்திரனோடு மணிமேகலை வந்திருத்தலைத் தீவதிலகை அறிந்துவந்து, "அமுதசுரபியைக் கையிலேந்தி உயிர்களின் பெருந்துயரத்தைத் தீர்த்த பெரியோனே! அக்காலத்தில், மறந்து உன்னை இத்தீவில் தனியே விட்டுவிட்டுக் கப்பலேறிச்சென்று, பின்பு உன்னைநினைந்து மீண்டுவந்து இங்கே நீ இறந்திருத்தலை யறிந்து உடனே தம்முயிரை நீத்த ஒன்பது செட்டிகளின் உடலென்புகள் இவை ; காண்பாயாக; அச்செட்டிகள் உண்பிக்க உண்டு உடன் வந்தோர்கள், அவர்கள் இறந்ததுதெரிந்து தாங்களும் இறந்தார்கள்; அவர்களுடைய என்புகள் இவைகள்காண்; அலைகள்தொகுத்த மணலால் மூடப்பட்டுப் புன்னை நிழலின்கீழே உனது பண்டையுடம்பு இருந்ததைப் பார்ப்பாயாக.

நின்னுயிர் கொன்றுய் நின்னுயிர்க் கிரங்கிப்
பின்னுள் வந்த பிறருயிர் கொன்றுய்
கொலைவ னல்லையோ கொற்றவ ஞயினே''. (களவு - ச).

என்று அரசனே நோக்கிக்கூறி, பின்பு மணிமேகலையைப்பார்த்து, ''காவிரிப்பூம்பட்டினத்தைக் கடல்கொண்டது; அதற்குக் காரணங் கேட்பாயாக: நாகநாட்டரசன் மகளாகிய பீலிவளையென்பவள் தான் பெற்ற குழந்தையுடன்வந்து இத்தீவையும் புத்தபீடிகையையும் வலம்வந்து தொழுதுபோழுது, சம்பளச்செட்டியின் கப்பல் வந்து தங்க, பீலிவளை அவனிடஞ் சென்று, 'இவன் அரசன்புதல்வன், இவனை அவனிடஞ் சேர்ப்பாயாக' என்று சொல்லி, குழந்தையை அவன்கையிற் கொடுக்க அவன் பெருமகிழ்ச்சியடைந்து வாங்கிக் கப்பலேறிச் செல்லுகையில், கப்பல் உடைந்துபோயிற்று, போகவே கப்பலிலிருந்தோரிற்சிலர் மெல்லப் பிழைத்துச்சென்று காவிரிப்பூம் பட்டினத்தையடைந்து புதல்வனைக் கெடுத்தசெய்தியை அரசனுக் குத் தெரிவித்தார். அதுகேட்டு அவன் பொருமற் செயலற்றுக் கடற்கரையையடைந்து மகனைத் தேடிக்கொண்டு அலைந்தமையால், நகரம் இந்திரனுக்கு விழாச்செய்தலை விட்டொழிந்தது. ஒழியவே, அதனைப்பொறுக்காமல் மணிமேகலாதெய்வம், 'இந்நகரைக் கடல் கொள்ளுக' என்று சபிக்கக் கடல் நகரை மூடியது; மூடவே அரசன் வேறிடஞ்சென்றான். அறவணவடிகளோடு மாதவியும் சுத மதியும் யாதொரு வருத்தமுமின்றிப்போய் வஞ்சிநகரம் புகுந்தார்'' என்று சொல்லிப் போயினள்; அவள்போனபின்பு புண்ணியராசன் அவ்விடத்தே மணலைத்தோண்டி, அங்கேதோன்றிய தன்னுடைய பழைய உடம்பின் என்பைக்கண்டு மயக்கமுற்றான். மணிமேகலை தேற்றித் தருமோபதேசஞ்செய்து அவனை நகரத்திற்கு அனுப்பி விட்டுத் தான் வஞ்சிநகரஞ்செல்லநினைந்து ஆகாயத்திலெழுந்தாள்.

உசு.—வஞ்சிமாநகர்புக்ககாதை.

எழுந்தவள், ஆகாயவழியேசென்று வஞ்சிநகர்ப்புறத்தே இற ங்கி, தாய் கண்ணகியையும் தந்தை கோவலனையும் தரிசிக்கவேண்டு மென்கிற ஆசை தூண்டுதலாற் கோயிலிற்புகுந்து கண்ணகியை வணங்கித்துதித்து, ''கணவனிறந்ததுதெரிந்து உடன் இறவாம லும் கைம்மைநோன்பை நோவாமலும் சினங்கொண்டு மதுரையை அழித்ததற்குக் காரணங்கூறி யருளவேண்டும்'' என்று பிரார்த்திக்

கப் பத்தினிக்கடவுளாகிய கண்ணகி, "எனது தலைவனுக்குநேர்ந்த மரணத்துன்பத்தைப் பொறுக்க முடியாமையால், மதுரையை எரித் தழிக்கத்தொடங்கினேன்; அப்பொழுது மதுராபதியென்கிற அந் நகரத்தெய்வம் எனக்கு முன்னே தோன்றி, 'இத்துன்பத்தை நீங்க ளனுபவித்தல் முற்பிறப்பிற் செய்த தீவினையினாலேயே. அதனைக் கூறுவேன்; கேட்பாயாக:

'மூன்பு கலிங்கநாட்டிலுள்ள சிங்கபுரத்தரசனாகிய வசு என்ப வனும் கபிலபுரத்தரசனாகிய குமரனென்பவனும் தம்மூட் பகைமை கொண்டு போர்செய்வாராயினர்; அப்பொழுது மனைவியுடன் சிங்க புரத்துக் கடைவீதியிற்சென்று பண்டம்விற்றுக்கொண்டிருந்த சங்கமனென்னும் வணிகன்பாற் பொருமையுற்று, அந்நகரத்தரச னிடம் வேலைபார்த்துக்கொண்டிருக்கும் பரதனென்பவன், 'இவன் பகைவனுடைய ஒற்றன்' என்று அரசனுக்குச்சொல்லி, யாதொரு குற்றமுமில்லாத அச்சங்கமனை அவ்வரசனைக்கொண்டு கொலை செய்வித்தான். சங்கமன்மனைவி நீலியென்பவள், அதனைத்தெரிந்து, ஏங்கி அழுது பெரிய மலைமீதேறி வீழ்ந்து உடம்பைத்துறக்க நிச்ச யித்து, 'எமக்குத் துன்பஞ்செய்தோர் மறுபிறப்பில் இத்துன்பத் தையே அடைவார்களாக' என்று சபித்துவிட்டு இறந்தாள். அப் பரதனே கோவலனாகப்பிறந்தான்; அவ்வினையால் இத்துன்பமடைந் தீர்கள்; பழம்பிறப்பிற்செய்த வினையின்பயனை யாரும் நுகர்ந்தே ஒழித்தல்வேண்டும்' என்கிற உண்மைமொழியைக்கூறியது; அத் தெய்வம் கூறியபின்னும் என்கோபம் அடங்காமையால், நகரத்தை எரித்தழித்தேன்; முன்புசெய்த நல்வினையாலே நானும் என் கணவனும் தேவர்களாகிச் சென்றோம். இந்நல்வினையினாலுதியிற் கோபத்தாலுண்டாகிய பாவப்பயனை நுகர்தல்கூடும்; இப்படிப் பிறந்து மிறந்தும் புண்ணியத்தின் இறுதியிற் பாவப்பயனையும் பாவத்தினாலு தியிற் புண்ணியப்பயனையும் நுகர்ந்து நுகர்ந்து உழலாகிற்பேம். அப்பால் மகதநாட்டிற் கபிலையம்பதியிற் புத்தஞாயிறு உதித்துப் போதிமரத்தினடியில் எழுந்தருளியிருந்து நால்வகைச் சத்தியங் களையும் அறிந்து பன்னிரண்டுசார்புகளின் தோற்றங்களையும் அவற் றின் அழிவையும் விளங்கக்கூறி இச்சக்கரவாளமுழுவதும் தரும வொளியை வீசுங்காலத்தில், யாம் அவ்வுபதேசமொழிகளைக் கேட் டித் துறந்து நிருவாணமடைவேம்; இப்பயனை யாம் அடைதற்

குக்காரணம், முன்பு காவிரிப்பூம்பட்டினத்திற் புத்தசைத்தியத்தி லுள்ள இந்திரவிகாரமேழினையும் உன்தந்தையுடன் ஏத்தியபுண்ணி யமே; யாம் கிருவாணத்தையடைவது பலகாலைக்குப் பின்பேயா யினும், அதுகாறும் பலவகையாகிய சித்திகளையும் செய்துகொண் டிருப்பேம். இதனிற்க, நீ இக்ககரிலுள்ள பல சமயவாதிகள்கூறும் கொள்கைகளையெல்லாங்கேட்டு அவற்றுள் ஒன்றும் உனக்கு உண் மையென்று தோன்றுமையால் பின்பு பௌத்தசமயத்தைப்பற்றி யொழுகுவை" என்று சொன்னவுடன், மணிமேகலை வணங்கி வேற்றுருவெய்துவிக்கும் மந்திரத்தை ஜபித்து ஒரு முனிவன் வேடங்கொண்டு,

தேவ குலமுக் தெற்றியும் பள்ளியும்
பூமலர்ப் பொழிலும் பொய்கையு மிடைந்து
நற்றவ முனிவருங் கற்றடங் கினரும்
கன்னெறி காணிய தொன்னூற் புலவரும் (எஉ - நு)

எங்களும் விளங்கிய வஞ்சியம்பதியில், செங்குட்டுவனென்னும் சேரர்பெருமானது புகழ் விளங்கும்படி சென்று புகுந்தாள்.

உஎ.—சமயக்கணக்கர் தந்திறங்கேட்டகாதை.

புகுந்த மணிமேகலை, சமயவாதிகள் பலருடைய கொள்கை களையும் அறியவிரும்பி, அவருள்ளே வைதிகவழியைச்சார்ந்த அள வைவாதியை முதலிலடைந்து, 'உன் கொள்கையை உரை' என்று வினவி, அவன் கோட்பாட்டைக் கூறக்கேட்டும் அப்பாற் சைவ வாதியையும், அப்பாற் பிரமவாதியையும், அப்பால் வைணவவாதி யையும், அப்பால் வேதவாதியையும், அப்பால் ஆசீவகவாதியையும், அப்பால் நிகண்டவாதியையும், அப்பாற் சாங்கியவாதியையும், அப் பால் வைசேடிகவாதியையும், அப்பாற் பூதவாதியையும் சார்ந்து சார்ந்து வினவிவினவி, அவரவர் தத்தங்கொள்கைகளைக் கூறக் கேட்டு அவற்றை அறிந்துகொண்டாள்.

உஅ.—கச்சிமாநகர்புக்ககாதை.

அதன்பின், மாதவியையும் சுதமதியையும் அறவணவடிகளை யும் காணவிரும்பிப் புறகரத்தைக் கடந்துசென்று வஞ்சிநகரத்தி லுள்ளேபோய்ப் பலவகைச்சாதியாருமிருத்தற்குரிய வீதிகளையும் வேறுள்ள பலஇடங்களையும்முறையேகண்டு மகிழ்ச்சியுற்றுச்செல்ப வள், பௌத்த தருமங்களைச்சொல்லு முனிவர்கள் தங்கியிருக்கும்

தவச்சாலையிற் புகுந்து, அங்கே தவஞ்செய்துகொண்டிருந்த மாசாத்துவானைப் பணிந்து, எடுக்கஎடுக்க உணவுவளரும் அமுதசுரபியின் விசேடத்தையும், அப்பாத்திரத்தைக்கொண்டு செய்த தானவிசேடத்தால் ஆபுத்திரன் புண்ணியராசனுகப்பிறந்து சாவகநாட்டை ஆண்டுவரும் பெருமையையும், தான் அவனே மணிபல்லவத்திற்கு அழைத்துவந்து புத்தபீடிகையைக் காட்டப் பழம்பிறப்புணர்ச்சியை அவன் பெற்றதையும், தீவதிலகை வெளிப்பட்டதையும், காவிரிப்பூம்பட்டினத்தைக் கடல்கொண்டமையால் மாதவியும் சுதமதியும் அறவணவடிகளும் சாதலின்றி அங்குள்ளவர்கள் புகுந்தார்களென்று தான் தீவதிலகையாற் கேட்டதையும், புண்ணியராசன் நாகபுரஞ்செல்லத் தான் மணிபல்லவத்தைவிட்டு வந்ததையும், தாயாகிய கண்ணகியைத் தரிசித்தது முதலியவற்றையும், பின் வேற்றுருக்கொண்டுபலசமயவாதிகளைச்சார்ந்து அவர்களுடையகொள்கைகளைக் கேட்டதையும், அக்கோட்பாடுகளெல்லாம் பொருத்தமில்லாமையால் தான் அவற்றை மனங்கொள்ளாததையும், பௌத்ததருமத்தைக் கேட்கவிரும்பி அறவணவடிகளைத் தேடிக்கொண்டுவந்ததையுஞ் சொன்னாள். இவற்றையெல்லாங்கேட்ட மாசாத்துவான், "உன்னை நான் கண்டது எனது நல்வினையாலேயே ; உன்தந்தை கோவலனும் தாய் கண்ணகியுமடைந்த வருத்தங்களும் மதுரையம்பதி அழிவுற்றதும் ஆகிய இவற்றைக் கேள்வியுற்று எல்லாவற்றையுந்துறந்து பௌத்தமதத்தைச்சார்ந்து தவஞ்செய்தலேமேற்கொண்டேன்; கொண்டயான் இங்கேவந்ததற்குக் காரணம்கேட்பாயாக:—

" முற்காலத்தில் இங்ஙகரையாண்ட இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனென்னுமரசன் தன் தேவிமாரோடும் இச்சோலையைச்சார்ந்து இருந்தபொழுது, இலங்காதீவத்துள்ள சமனரெளியென்னு மலையையடைந்து தரிசித்து வலங்கொண்டு ஆகாயவழியே மீள்வோராகிய சாரணர் இச்சோலையிலிறங்கி ஒரு சிலாதலத்திலிருந்தார்; அங்ஙனமிருக்கக்கண்ட அரசன் அவர்களை வணங்கி உபசரித்து அமுதுசெய்வித்துத் துதிக்க, அவர்கள்

பிறப்பிற் றுன்பமும் பிறவா வின்பமும்
அறத்திகை முதல்வ னருளிய வாய்மை
இன்ப வாரமு திறைவன் செவிமுதல்
துன்ப நீங்கச் சொரியு மந்நாள், (ககக - உஉ.)

நின்தந்தைக்கு ஒன்பதுதலைமுறை முன்னோனாகிய கோவலனென் பவன் அவ்வரசனுக்குக் காதற்பாங்கனாதலால், இங்கே வந்திருந்து அச்சாரணர் அரசனுக்குக்கூறிய அறமொழிகளைக்கேட்டு, தான் ஈட்டிய பலகோடிதனங்களையும் முன்னோர்கள் தருமவழியே தேடிய பொருள்கள் பலவற்றையும் ஏழுதினத்துள் இரவலர்க்குக் கொடுத்துவிட்டுப் பின்பு தவஞ்செய்வானாயினன்; அவன் அக்காலத்திற் புத்ததேவனுக்குக் கட்டுவித்த சைத்தியத்தைத் தரிசித்தற்காகவே வந்தேன்; காவிரிப்பூம்பட்டினத்தைக் கடல்விழுங்கியிடும் என்ற செய்தியை ஈண்டுள்ள முனிவர்கள் துணிந்துகூறக்கேட்டு அங்ஙகரஞ்செல்லாமல் இவ்விடத்திலேயே இருந்துவிட்டேன்; தீவினையுடைமையாற் கொலையுண்டிறந்த உன்தந்தை, நல்வினையால் தெய்வயாக்கையைப்பெற்றுப் பின்னும் தீவினைப்பயனை அனுபவித்து, அப்பால் புத்ததேவன் அவதரித்துச் செய்யுந் தருமோபதேசத்தைக்கேட்டு வீடடைவானென்று அறிந்தோர் கூறக்கேட்டேன்; நானும்அக்காலத்தில் அவ்வறமொழிகளைக் கேட்டேன்; உனது பிற்காலச் செய்திகளை நீ கந்திற்பாவையாலறிந்தாயென்று அறவணவடிகளாலறிந்தேன்; அம்முனிவர், உனக்குத் தருமோபதேசஞ்செய்தற்கு அமைந்தவிடம் காஞ்சிஙகரமென்றெண்ணி இங்கிருந்து அங்கேசென்றார்; மாதவியும் சுதமதியும் அவருடன் அங்ஙகரம் போயினர்; இன்னுங்கேட்பாயாக; மழையில்லாமையாற் காஞ்சிஙகரத்தில் மிக்க வறுமையுண்டாயிற்று; பலவுயிர்கள் இறந்தன; அங்ஙனில் ஐயமிடுவோர் இல்லாமற் போனமையால் அங்கேயிருந்த முனிவர்கள் இவ்விடம் வந்துவிட்டார்கள்; ஆதலால், அங்ஙகரமடைந்து எல்லாவுயிர்களையும் பாதுகாத்தல் உனக்குக் கடனாகும்" என்றுசொல்ல, மணிமேகலை அவனைவணங்கி அமுதசுரபியைக் கையிலேந்திக்கொண்டு வஞ்சிஙகரத்தின் மேற்றிசையினின்று மேலெழுந்து ஆகாயவழியே வடதிசைக்கட்சென்று, மிக்க செல்வங்குன்றி வறுமையுற்று அழகுகெட்டுப் போயிருக்குங் காஞ்சிஙகரத்தைக்கண்டு மனமிரங்கி வலம்வந்து அங்ஙகரினுடுவேயிறங்கி அங்கே தொடுகழற்கிள்ளியின் துணைவனாகிய இளங்கிள்ளியாற் கட்டுவிக்கப்பட்டுள்ள புத்தாலயத்தை வணங்கி அதற்குத் தென்மேற்கிற்சென்று ஓருசோலையில் தங்கினள்; அச்செய்தியைத் தெரிந்த ஒருவன், விரைந்துசென்று அரசனை வணங்கி, 'அரச! கோவலன்புதல்வி சிறந்த தவஞ்செய்

தொழுகுபவள்; இச்சம்புத்தீவில் எல்லாருள்ளுஞ் சிறந்தவள்; அவள் கையிலேந்திய அமுதசுரபியென்னும் பாத்திரத்தோடு இங்ஙகரில் வந்து தருமதவனத்தேஉறைகின்றாள்' என்றான். அதுகேட்ட அரசன் கந்திற்பாவை முன்பு நமக்குக்கூறியது உண்மையேயென்று மதித்து அத்தெய்வத்தை வந்தித்து மந்திரிகளுடன்விரைந்து சென்று மணிமேகலையையடைந்து அவளை நோக்கி,

"செங்கோல் கோடியோ செய்தவம் பிழைத்தோ
கொங்கவிழ் குழலார் கற்புக்குறை பட்டோ
நலத்தகை நல்லாய் நன்னு டெல்லாம்
அலத்தற் காலை யாகிய தறியேன் (கஅஅ - கக)

இனிச்செய்வது யாது? என்று மயங்கிக்கொண்டிருந்தேன்; இருந்தபொழுது, ஒரு பெரிய தெய்வம் எனக்கு முன்னேவந்து, 'நீ வருந்தற்க; உனது நல்வினையால் ஒரு மடந்தை இங்கே தோன்றுவள்; அவளுடைய கையிலுள்ள தெய்வப்பாத்திரத்திலிருந்து எடுக்க எடுக்கக் குறையாமல் மேன்மேலும் வளருகிற உணவால் இவ்வுலகமெல்லாம் உய்யும்; அவளுடைய கருணையால் மேகமும் மழைமிகப் பொழியும்; அவள் இங்ஙகாத்திற்கு வந்தபின்பு உண்டாகும் விசேடங்கள் பலவாம்; கார்வறங் கூரினும் நீர்வறங் கூராது; அவள்வந்திருத்தற்காகக் கோமுகி யென்னும் பொய்கையும் அதனையுடைய மணிபல்லவமென்னுந்தீவும் இங்குவந்தனவென்று சொல்லும்படி, இங்ஙகரவீதியில் ஒரு பொய்கையையும் அதனைச்சூழ ஒரு சோலையையும் உண்டுபண்ணுக' என்று சொல்லிவிட்டுப் போயிற்று; அத்தெய்வம் போனபின்பு அதன் கட்டளையிட்டபடியே செய்துவைத்த இடம் இஃது" என்று சொல்லி அவ்விடத்தைக்காட்ட, மணிபல்லவம்போன்ற அச்சோலையையடைந்து அதனையும் பொய்கையையுங் கண்டு மகிழ்ச்சியுற்ற மணிமேகலை, தனதுபழம் பிறப்பை அறிவுறுத்திய புத்தபீடிகையை அச்சோலையில் இயற்றுவித்துத் தீவதிலகையையும் மணிமேகலாதெய்வத்தையும் வழிபடுதற்குரியகோயிலையும் அங்கே உண்டாக்கி நித்திய பூசையையும் திருவிழாவையும் அரசனைக்கொண்டு செய்வித்துத் தான் வந்தித்துத் துதித்து மேற்கூறிய புத்தபீடிகையில் ஆருயிர்மருந்தெனும் அமுதசுரபியைவைத்து உண்ணுதற்கு எல்லாவுயிர்களும் வருகவென்று அழைத்தனள்; அழைக்கவே,

மொய்த்த மூவறு பாடை மாக்களிற்
காணர் கேளார் கான்மூட மானேர்
பேணு மாக்கள் பேசார் பிணித்தோர்
படிவ நோன்பியர் பசிநோ யுற்றோர்
மடிதல் கூர்ந்த மாக்கள் யாவரும்
பன்னூ றுயிரம் விலங்கின் றொகுதியு
மன்னுயி ரடங்கலும் வந்தொருங் கீண்டி (உஉக- எ)

உண்ணவுண்ண அவ்வுணவு மேன்மேலும் பெருகிப்பசித்துன்பத்தை அகற்றி விளங்கியது; அப்புண்ணிய விசேடத்தால் எங்கும் மழை பெய்தது; வளங்கள் மிகுந்தன. அப்படி நிகழுங்காலத்தில் அறவண வடிகள் அந்நிகழ்ச்சிகளைக் கேட்டு மாதவியோடும் சுதமதியோடும் அறச்சாலையை அடைந்தனர்; பின்பு மணிமேகலை விரைந்துசென்று அன்புடன் வணங்கி அவரடிகளை விளக்கி ஆதனத்திலிருத்தி அறுசுவைப்போனகம் அமுது செய்வித்து, "யான் செய்த புண்ணியம் தப்பாது பலித்திடுக" என்று சொல்லி மீட்டும் வணங்கினள்.

உகூ.—தவத்திறம்பூண்டு தருமங்கேட்டகாதை.

வணங்கிய மணிமேகலையை வாழ்த்திச்சொல்லும் அறவண வடிகள், "பிலிவளைபெற்ற குழந்தையைக் கம்பளச்செட்டி கடலிற் கெடுத்தது தெரிந்த அரசன் வருத்தமுற்று அக்குழந்தையைத் தேடியலைந்தமையாற் காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரவிழாச் செய்யப்படாது போயிற்று; மணிமேகலாதெய்வம் அதுதெரிந்து, 'நகரைக் கடல்கொள்ளுக' என்று சபித்தது; இந்திரனும் சபித்தான். அதனால், அந்நகரம் கடலால் விழுங்கப்பட்டது. அப்பால் உன் தாயாரும் யானுமாக உன்பொருட்டு இந்நகரம் அடைந்தேம்" என்று கூறினர்; கூறவே மணிமேகலை அவருடைய அடியிணையைவணங்கி, "மணிபல்லவத்திற் புத்தபீடிகையைக் காத்துக்கொண்டிருக்கும் தீவதிலகையென்பவளும் இச்செய்தியைச் செப்பினள்; நான் வேற்றுருக்கொண்டு சென்று வஞ்சிநகரமடைந்து ஆங்குள்ள பலசமயவாதிகள் கூறிய கொள்கைகள் யாவும் மனத்திற்குப் பொருந்தாமையால் வற்றையும் முன்புகொண்டிருந்த வேற்று வடிவத்தையுந்துறந்து இந்நகரமடைந்து நும்மைச் சரண்புக்கேன்; தேவீர் அடிச்சிக்கு உண்மைப்பொருளை உணர்த்தியருள வேண்டும்" என்று பிரார்த்

திக்க, அவர் பிரத்தியக்கம், அனுமானமென்னும் இரண்டு அளவை களின் இலக்கணங்களையும் அவற்றின் போலிவகைகளையும் உண் மையறிவுண்டாவதற்குக் கருவியாக அவளுக்கு விளங்கக் கூறினர்.

கூ0.—பவத்திறமறுகெனப் பாவைநோற்றகாதை.

தானஞ்செய்தலை மேற்கொண்டு சீலத்தில் முதன்மையாக நின்று பழம்பிறப்பின் உணர்ச்சியையடைந்த மணிமேகலை, அப் பால், 'புத்தம் சரணங்கச்சாமி', 'தர்மம் சரணங்கச்சாமி', 'ஸங்கம் சரணங்கச்சாமி' என்பவற்றை மூன்றுமுறை சொல்லி மும்மணி களையும் மூன்றுமுறைவணங்கி அறவணவடிகளைச் சரணுகதியாக அடைந்தாள்; அடையவே பௌத்தகருமத்தை உபதேசிக்கத் தொடங்கிய அவர், "இதனைக்கேட்பாயாக:—உயிர்களெல்லாம் அறி வில்லாமல் இருந்த காலத்தில் தேவர்கள் பிரார்த்திக்கத் துடிதலோ கத்தினின்றும் இவ்வுலகிலவதரித்து அரசமரத்தினடியிலேயிருந்து தத்துவத்தை ஆராய்ந்தறிந்து மாரனென்று மூக்குற்றங்களையும் அறுத்து விளங்கிய புத்ததேவன் அருளிச்செய்த இன்பமயமாகிய கட்டுரையாகும் இது; பண்டைக்காலத்தில் அவதரித்த அளவற்ற புத்தர்கள் கருணைமிகுந்து திருவாய்மலர்ந்தருளியதும் இதுவே" என்றுசொல்லி, பேதைமைமுதலிய பன்னிரு நிதானங்களின் தோற்றவொடுக்கங்களையும் பிறவற்றையும் முறையே விளங்க உப தேசித்து, "உன்மனத்திருள் நீங்குக" என்றுகூறி ஞானதீபத்தை நன்கு காட்டினர்; மணிமேகலை அவ்வுபதேச மொழிகளைக்கேட்டு ஐயந்திரிபறவுணர்ந்து, "பிறவித்துன்பம் ஒழிவதாக" என்று அங்ஙனமே நோற்றுக்கொண்டிருந்தாள்.

உ

கணபதிதுணை.

மணி மேகலை.

பதிகம்.

*[கதைபோதிபாட்டு.]

இளங்கதிர் ஞாயி றெள்ளுந் தோற்றத்து
விளங்கொளி மேனி விரிசடை யாட்டி
பொன்றிகழ் நெடுவரை யுச்சித் தோன்றித்
தென்றிசைப் பெயர்ந்தவித் தீவத் தெய்வதஞ்
சாகைச் சம்பு தன்கீழ் நின்று
மாநில மடந்தைக்கு வருந்துயர் கேட்டு
வெந்திற லரக்கர்க்கு வெம்பகை தோற்ற

க. ஞாயிறு - சூரியன். எள்ளும் - இகழும்; உவமவுருபுமாம்.

க - உ. "பொன்னிற் பொலிந்த நிறத்தா டோன்ற" மணி. †சு: கசடு.

ங. வரை - மேரு. உச்சி - உச்சியில்.

ச. இத்தீவம் - சம்புத்தீவு.

ஞ. சாகை - இலை. சம்பு - நாவன்மரம்.

எ. வெம்பகைதோற்ற -வெவ்வியபகையாக தோற்ற.

(பிரதிபேதம்.) க. 'எள்ளுந்தோன்றல்' ச. 'தென்றிசைபெயர்ந்த' ஞ. 'சாய்கை' எ. 'தோற்றச்'

* இதுவும், இதுபோல் இந்நூலின் ஒவ்வொருபகுதியின் தலைப்பில் இருதலைப் பகரத்துள் உள்ள வாக்கியங்களும், இடைத்த கையெழுத்துப் பிரதிகளுள் மிகப் பழையதும் இந்நூற் பரிசோதனைக்கு இன்றியமை யாதிருந்ததுமாகிய மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக்கவிராயாவர்கள் வீட்டுப்பிரதியிற் காணப்பட்டன. இதனலும், பதிகத்தினிறுதியில் "ஆதைம் பாட்டினு ளறியவைத் தலனென்" என்றிருத்தலாலும் இந்நூற்பகுதிகளின் பெயர் பாட்டென்று வழங்கிவந்ததென்றும் தோற்றுகின்றது.

† முதலிலுள்ள எண் காதையையும் பின்னுள்ளது அதனடியையும் குறிப்பன.

சம்பு வென்பாள் சம்பா பதியினள்
செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் விளக்குங்
கo கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட
வமர முனிவ னகத்தியன் றனது
கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை
செங்குணக் கொழுகியச் சம்பா பதியயற்
பொங்குநீர்ப் பரப்பொடு பொருந்தித் தோன்ற
கரு வாங்கினி திருந்த வருந்தவ முதியோ ரீ
ளோங்குநீர்ப் பாவையை யுவந்தெதிர் கொண்டாங்
காணு விசும்பி ஞகாய கங்கை
வேணவாத் தீர்த்த விளக்கே வாவெனப்
பின்னிலை முனியாப் பெருந்தவன் கேட்டீங்
உo கன்னே கேளிவ் வருந்தவ முதியோ
ணின்னெல் வணங்குந் தன்மையள் வணங்கெனப்
பாடல்சால் சிறப்பிற் பரதத் தோங்கிய

அ. சம்பாபதியினள் - சம்பாபதியினிடத்தேயிருந்தாள்; சம்பாபதி யென்பது காவிரிப்பூம்பட்டினத்தின் பழையபெயர்.

கூ. செங்கதிர்ச்செல்வன் திருக்குலம் - சூரியகுலம்.

கo. கஞ்சவேட்கையின் - நீருண்டாக்கும் விருப்பத்தையுடைய; (கம் - நீர்). கஞ்சம் - நீருமாம்; "கஞ்சங் கலங்குவனை" (நள. சுயம். கரு) காந்த மன் - காந்தனுடையமன்; காந்தனென்பது ஒரு சோழன்பெயர்; "கன்னி யேவலிற் காந்த மன்னவன்" மணி. உஉ : உள.

கக. "அமர முனிவ னகத்தியன் றனது" மணி. உஉ : கூரு.

கஉ. கரகம் - குண்டிகை; "நீரற வறியாக் கரகத்து" (புறநா. க.) காவிரிப்பாவை - காவிரியாகிய மங்கை; "நீர்ப்பாவை" மணி. பதிகம் : கசு.

கஙூ. செங்குணக்கு - செவ்விய கிழக்கு ; செம்மை - சேர்மை.

கள. ஆணு - நேயம்; "ஆணுப் பைங்கிளி யாண்டுப் பறந்தே" (சீவக. கooஉ.) ஆகாயகங்கை, பெயர்.

கஅ. வேணவா - வேட்கையாலாகிய அவா; (தொல். உயிர். சூ. அசு பார்க்க.)

கக. பின்னிலைமுனியா-பின்நிற்றலிலெவறாத. பெருந்தவன்-அகத்தியன்.

உo. அன்னே, விளி. அன்னையென்றது, காவிரியை.

உஉ. பரதத்து - பரதகண்டத்தில்.

(பி - ம்.) கo. 'கஞ்சை' கக. 'முனிவரன்' கஉ. 'கவிழ்ந்த' கஙூ. 'ஒழுகியசம்பாபதி' கள. ஆணுஉ' கக. 'முனிவாய்' உo. 'முதியோளினி' உக. 'தகைமையள்'

பதிகம்.

கோடாச் செங்கோற் சோழர்தங் குலக்கொடி
கோணிலை திரிந்து கோடை நீடினுங்
உரு தானிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை
தொழுதன ணிற்பவத் தொன்மூ தாட்டி
கழுமிய வுவகையிற் கவாற்கொண் டிருந்து
தெய்வக் கருவுந் திசைமுகக் கருவுஞ்
செம்மலர் முதியோன் செய்த வங்கா

உங. சோழர்தங்குலக்கொடி - வேற்றுவேந்தரணுகாமையால் சோழர் தங் குலக்கொடியாயுள்ளாள்; இப்படியே, வையைநதி, "வையையென்ற பொய்யாக் குலக்கொடி" என்று கூறப்பட்டுள்ளது; சிலப். கங : களo.

உச. மணி. க : ங-ஆம் அடிக்குறிப்பைப் பார்க்க.

உரு. பாவை - காவிரி.

உசு. தொழுதணிற்ப - தொழுது நிற்ப.

உள. கழுமிய - கலந்த. கவான் - துடை.

உஅ - ஙு. தெய்வக்கரு - உலகம் முப்பத்தொன்றனுள் மகாராஜிக லோகமுதலிய தெய்வலோகம் ஆறினுமுள்ள அறுவகைத் தெய்வகணபிண் டங்கள்; தெய்வலோகம் ஆறுவன: (க) மகாராஜிகலோகம், (உ) திரயத்தி ரிம்சலோகம், (ங) யாமலோகம், (ச) துஷிதலோகம், (ஞ) நிருமாணரதி லோகம், (சு) பரநிருமித வசவர்த்திலோகமென்பன; "இருமூ வகை யிற், பெருவனப் பெய்திய தெய்வதக்கணங்களும்" (மணி. சு: களஅ - ஙு). திசைமுகக்கரு - ப்ரஹ்ம காயிகலோகமுதலிய ப்ரஹ்மலோகம் இருபதினு முள்ள இருபது வகைப்பட்ட ப்ரஹ்மகணபிண்டங்கள்; ப்ரஹ்மலோ கம் இருபதாவன: (க) ப்ரஹ்மகாயிகலோகம், (உ) ப்ரஹ்மபுரோஹித லோகம், (ங) மஹாப்ரஹ்மலோகம், (ச) பரீத்தாபலோகம், (ஞ) அப்பிரமாண பலோகம், (சு) ஆபாஸ்வரலோகம், (எ) பரீத்தசுபலோகம், (அ) அப்பிரமாண சுபலோகம், (ஙு) சுபகிருஸ்நலோகம், (கo) பிரகதபலலோகம், (கக) அஸம்ஞ் யாஸத்துவலோகம், (கஉ) அப்பிரகலோகம், (கங) அதபலோகம், (கச) ஸுதர்சலோகம், (கஞ) ஸுதர்சிலோகம், (கசு) அகநிஷ்டலோகம், (கஎ) ஆகாசானந்தியாயதனலோகம், (கஅ) விஞ்ஞாநானந்தியாயதனலோகம், (கஙு) அகிஞ்சன்யாயதனலோகம், (உo) நைவ ஸம்ஜ்ஞாயதனலோகமென் பன. இவற்றுள், பிரஹ்மகாயிகலோகமுதலிய பதினைதையும் உருபப் பிரஹ்மலோகமென்றும், ஆகாசானந்தியாயதன லோகமுதலிய நான்கையும் அருபப்பிரஹ்மலோகமென்றும் கூறுவர்; "நால்வகை மரபி னருபப்பிரமரு, நானூல் வகையி னுருபப் பிரமரும்" (மணி. சு : களசு - எ). மேற்சுமிய வற்றுள், தெய்வலோகங்கள் ஆறும் ஸகாம லோகங்களென்றும், பிரஹ்ம லோகங்கள் இருபதும் நிஷ்காமலோகங்களென்றும் கூறப்படும். இவை, பௌத்தநூலிற் காணப்பட்டன. செம்மலர் முதியோன் - மஹாப்ரஹ்மா. அக்காள் - அக்காளில்.

(பி - ம்.) உச. 'கோணிலைதிரிந்து'. உசு. 'தொன்மூதாட்டியைக்'.

கo ளென்பெயர்ப் பதித்தவிவ் விரும்பெயர் மூதூர்
நின்பெயர்ப் பதித்தே னீவா ழியவென
விருபாற் பெயரிய வுருகெழு மூதூ
ரொருதூறு வேள்வி யுரவோன் றனக்குப்
பெருவிழா வறைந்ததும் பெருகிய தலரெனச்
கூடு சிதைந்த நெஞ்சிற் சித்திரா பதிதான்
வயந்த மாலையான் மாதவிக் குரைத்தது
மணிமே கலைதான் மாமலர் கொய்ய

கo. என்பெயர்ப்படுத்த - என்பெயர்ப்படச்செய்த ; என்றதனால், சம்பாபதி யென்னும் பெயர், சம்புத்தீவத்தெய்வத்திற்கு இயல்பாகவே உண்டென்பது பெறப்பட்டது. இதனை, "தகவிலே கொல்லோ சம்பாபதி" (மணி. சு : கசுஅ) என்று வருதலாலுணர்க. சிலப்பதிகாரத்திலும் இந்நூலிலும் தென்மதுரையையும் அதன் அதிதேவதையையும் மதுராபதியென்று வழங்கியிருத்தல் காண்க. சோழர்களின் பழைய இராசதானியாதலின், இந்நகரம், மூதூரெனப்பட்டது. இப்படியே இந்நூலிற் பலவிடத்தும் இந்நகரை மூதூரென்று வழங்குவர்;(உ: சுஉ, சுo; கூ: சுஉ; சு: உஅ; கஅ: சுக; உo : உஅ; உக: ககக); "ஆரக்கண்ணிச் சோழன்மூதூர்" (பதிகம் - கஉ) எனவும், "வீக்குநீர் வேலி யுலகிற் கவன்குலத்தோ, டோங்கிப் பரந்தொழுக லான்" (சிலப். க : கக - உ) எனவும் வருதல் காண்க.

கூஉ. இருபாற் பெயரிய - சம்பாபதி, காவிரிப்பூம்பட்டினம் என்னும் இருவகைப் பெயரினையுடைய. உருகெழு மூதூர் - பகைவர்க்கு அச்சத்தைச் செய்தல் பொருந்திய பழைய ஊர் ; மு. மணி. சு : சுசு.

க - கூஉ. விரிசடையாட்டி தெய்வதம் சம்புவென்பாள், சம்பாபதியினள் ; அக்காலத்துக் காவிரிப்பாவை ஒழுகி அச்சம்பாபதியயலில்தோன்ற, ஆங்கிருந்த முதியோள் நீர்ப்பாவையை எதிர்கொண்டு விளக்கே வாவென, அதனைப் பெருந்தவன் கேட்டு வணங்கென, குலக்கொடி தண்டமிழ்ப் பாவை அம்முதியாளினைத் தொழுதுநிற்ப, அம்மூதாட்டி, அவளைக் கவானிற் கொண்டிருந்து, அந்நாளில், என்பெயர்ப்படுத்த இம்மூதூரை நின்பெயர்ப் படுத்தேன், நீவாழியவென்றலால் இருபாற்பெயரியமூதூரென்க.

கூசு. தூறுவேள்வியுரவோன் - இந்திரன் ; சதமகன்.

கூசு. அலர்பெருகியதென ; அலர் - பலரறியநிகழ்த்தும் பழிமொழி.

கூடு. சித்திராபதி - மாதவியின் தற்றாய்; "எற்பயந்த, சித்திராபதிக்குஞ் செப்புநீ" (மணி. உ : எo - எக) என்று மாதவி கூறுதலாலுணர்க.

கூசு. வயந்தமாலை - மாதவியின்தோழி ; "தன்மக டோழி, வயந்த மாலையை வருகெனக் கூஉய்" (மணி. உ: எ-அ). இவளைக் கூனியென்றும் வழங்குவர். மாதவி - மணிமேகலையின்தாய்; நாடகக்கணிகை.

(பி - ம்.) கூக. 'பெயர்படுத்தேன்'

வணிமலர்ப் பூம்பொழி லகவயிற் சென்றது
மாங்கப் பூம்பொழி லரசிளங் குமரனைப்
சஂ பாங்கிற் கண்டவள் பளிக்கறை புக்கதும்
பளிக்கறை புக்க பாவையைக் கண்டவன்
றுளக்குறு நெஞ்சிற் றுயரொடும் போயபின்
மணிமே கலாதெய்வம் வந்துதோன் றியது
மணிமே கலையைமணி பல்லவத் துய்த்தது
சருு மூவவன மருங்கினவ் வுரைசா றெய்வதஞ்
சுதமதி தன்னைத் துயிலெடுப் பியதூஉ
மாங்கத் தீவகத் தாயிழை கல்லா
டான்றுயி லுணர்ந்து தனித்துய ருழந்தது
மூழந்தோ ளாங்கணே ரொளிமணிப் பீடிகைப்
ருo பழம்பிறப் பெல்லாம் பான்மையி னுணர்ந்தது

சுஅ. பொழில் - உபவனம். அகவயின் - உள்ளிடத்தே.

சுக. பொழில் - பொழிலில். அரசிளங்குமரன் - உதயகுமரன்.

சo. பளிக்கறை - பளிங்காலாகிய அறை. சக. பாவை - மணிமேகலை.

சஉ. துளக்குறுநெஞ்சு - நிலைகலங்குதலுற்ற நெஞ்சு; "கடிமரத் துளங்கியகாவும்" புறநா. உங.

சங. மணிமேகலாதெய்வம் - அரக்கர் வாதைபண்ணுதபடி இந்திரனே யலாலே சில தீவைப் பாதுகாத்துக்கொண்டிருத்தலேயுடையது ; கோவல னுடைய குலதெய்வம்.

சச. மணிபல்லவம் - ஒரு சிறுதீவு ; சிறுதீவை அந்தரத்தீவென்று வழங்குவர்.

சருு. உவவனம் - உண்டாக்கப்பட்டவனம் ; உபவனமென்னும் வட மொழிச் சிதைவு; இதனை ஆராமமென்றும் வழங்குவர். உரைசால் - புக முமைத்தி.

சசு. சுதமதி - மாதவியின் தோழியாகிய ஒரு பார்ப்பனி. துயில் எடுப்பியதூஉம் - துயில் எழுப்பியதும் ; "உரவுநீர்ப் பரப்பி னூர்துயி லெடுப்பி" சிலப். சு : எக.

சஎ. கல்லாள் - மணிமேகலை.

சஅ. தனித்துயருழந்ததும் - ஒப்பற்ற துயரால் வருந்தியதும்; "அருந்திய ருழக்குரின் றிருந்திழை யரிவை" புறநா. கசசு.

சகூ. ஒளிமணிப்பீடிகை - செவ்வொளியையுடைய மாணிக்கத்தாலா இய புத்தனுடைய பாதபீடிகையால்.

(பி - ம்.) சக. 'பாவை கண்டவன்' சஉ. 'பெயர்ந்தபின்' சச. 'மணிப் பல்லவம்' சசு. 'துயிலெழுப்பியதூஉம்' சஅ. 'தான் றுயிலெழுந்து' சகூ. 'உழந்தோண்முன்னர்'

முணர்ந்தோண் முன்ன ருயர்தெய்வந் தோன்றி
மனங்கவ லொழிகென மந்திரங் கொடுத்ததுந்
தீப திலகை செவ்வனந் தோன்றி
மாபெரும் பாத்திர மடக்கொடிக் களித்ததும்
நூறு பாத்திரம் பெற்ற பைந்தொடி தாயரொ
டியாப்புறு மாதவத் தறவணர்த் தொழுதது
மறவண வடிக ளாபுத் திரன்றிற
நறுமலர்க் கோதைக்கு நன்கண முரைத்தது
மங்கைப் பாத்திர மாபுத் திரன்பாற்
சுo சிந்தா தேவி கொடுத்த வண்ணமு

நுக. உயர்தெய்வம் - மணிமேகலாதெய்வம்.

நுஉ. கவல் - கவலுதல் ; முதனிலைத் தொழிற்பெயர். மந்திரம் - வேற்றரு அடைவிப்பதும், அந்திரத்தில் நிரியச்செய்வதும், பசியை ஒழிப் பதுமாகிய மூன்று மந்திரங்கள். கொடுத்ததும் - உபதேசித்ததும்.

நுங. தீபதிலகை - மணிபல்லவத்திலுள்ள புத்தனுடைய பாதபீடி கையை இந்திரனேவலாற் காவல்பூண்டு ஒழுகுபவள் ; தீவுக்கு அலங்கார மாக உள்ளவளென்பது பொருள். செவ்வனம்-செவ்விதாக ; "தீவதிலகை செவ்வன முரைக்கும்" (மணி. கக : உo) எனவும், "சிறந்தோர்க் கல்லது செவ்வஞ் சுரவாது" (மணி. கக: கஉக) எனவும் இம்மொழி இப்பொரு ளில் வழங்கிவருதல் காண்க.

நுச. மாபெரும்பாத்திரம் - அமுதசுரபி யென்னும் பெயருள்ள பிக்ஷா பாத்திரத்தை. மடக்கொடிக்கு - மணிமேகலைக்கு.

நுடு. தாயரொடு - மாதவி சுதமதியென்னும் இருவரோடு ; "ஆங்கத் தாயரோடறவணர்த் தேர்ந்து" (பதிகம், அசு), "பொற்றொடிதாயரு மப் பதிப்படர்ந்தனர்" (உஅ : கநுச), "ககர்கடல் கொள்ளகின் ருயரும் யானும்" (உசு : நடு) என இவ்விருவரையும் மணிமேகலையின் தாயரென இந்நூலுள்ளே வழங்கிவருதல் காண்க.

நுசு. யாப்பு - கட்டு ; அறவணர் - புத்த சங்கத்தினரான ஒரு முதிய முனிவர்.

நுள. ஆபுத்திரன் - ஓர்கத்தணன்; தன்னைப்பெற்றவுடன் தாய் நீங்கி விட, ஏழுநாள் வரையில் ஒரு பசுவாற் பாலூட்டிக் காக்கப்பட்டமையின், இவன் இப்பெயர்பெற்றான். திறம் - வரலாறு.

சுo. சிந்தாதேவி - மரல்வதீதேவி ; யாவருக்கும் சிந்தையிற்றோன்றிச் சொற்பொருளுணர்த்துபவளென்பது பொருள் ; இந்நூலுள்ளே, "நாமி சைப் பாவாய்" (கச : கஅ) ; "செழுங்கலைப் பாவாய்" (உநு : கநுக) ;

(பி - ம்.) நுஉ. 'ஒழியென' நுங. 'தீவதிலகை' நுசு. 'ஓப்புறும்' நுள அறவணரடிகள்' நுஅ. 'நறுமணக்கோதைக்கு' நுக. 'ஆங்கப்பத்திரம்' ர

மற்றப் பாத்திர மடக்கொடி யேந்திப்
பிச்சைக் கவ்வூர்ப் பெருந்தெரு வடைந்ததும்
பிச்சை யேற்ற பெய்வளை கடிஞையிற்
பத்தினிப் பெண்டிர் பாத்தூ ணீத்ததுங்
சுரு காரிகை நல்லாள் காயசண் டிகைவயிற்
றூணைத் தீக்கெடித் தம்பல மடைந்தது
மம்பல மடைந்தன ளாயிழை யென்றே
கொங்கலர் நறுந்தார்க் கோமகன் சென்றது
மம்பல மடைந்த வரசிளங் குமரன்முன்
எ0 வஞ்ச விஞ்சையன் மகள்வடி வாகி
மறஞ்செய் வேலோன் வான்சிறைக் கோட்ட
மறஞ்செய் கோட்ட மாக்கிய வண்ணமுங்
காயசண் டிகையென விஞ்சைக் காஞ்சன

"உணர்வித் றேன்றி யுரைப்பொரு ளுணர்த்து, மணிதிக முவிரொளி மடந்தை" (உரு: கசஅ) என வழங்குதலால், இஃது உணரப்படும்.

சுக. மடக்கொடி - மணிமேகலை.

சுஉ. பிச்சைக்கு - பிக்ஷைக்கு. அவ்வூர் - காவிரிப்பூம்பட்டினம்.

சுங. கடிஞை - பிச்சைப்பாத்திரம்; "தோமறு கடிஞையும்" சிலப். கo: கூஅ.

சுச. பத்தினிப்பெண்டிர் - ஆதிரை. பாத்தூண்-பகுத்துண்ணுமுணவு.

சுரு. காயசண்டிகை - ஒரு வித்தியாதரமகள்.

சுசு. ஆணைத்தீ - எதனலும் தணியாத பெரும்பசியைச் செய்வதொரு வியாதி; இதனைப் பஸ்மகவியாதியென்பர் ஸ்ரீபுராணமுடையார். இதனியல்பை, சீவக. சoo, சoங-ஆம் பாடல்களாலுணர்க. அம்பலம் - உலகவழக்கு.

சுஅ. கோமகன் - உதயகுமரன்.

எo. விஞ்சையன்மகள்வடிவு - காஞ்சனனென்னும் வித்தியாதரனுடைய மனைவியாகிய காயசண்டிகையினது உருவம்; மகள் - மனைவி; இந்நூலுள்ளே "தினக்கிவள் மகனுத் தோன்றிய தூஉ, மனக்கினி யாற்குமீ மகளாய தூஉம்" (உக: உகூ-கூo) என்புழி மகளென்பது இப்பொருளதாதலுணர்க.

எக. வேலோன் - சோழன்; சிறைக்கோட்டம் - சிறைச்சாலையை.

(பி - ம்.) சுகூ. 'பெருந்தகைக்கடிஞை' எo. 'மகள் வடிவாயதூஉம்' எகூ. 'காஞ்சயன்'

ஞமிழை தன்னே யகலா தணுகலும்
எடு வஞ்ச விஞ்சையன் மன்னவன் சிறுவனே
மைத்துடை வாளிற் றப்பிய வண்ணமு
மையரி யுண்க ணவன்றுயர் பொரு அ
டெய்வக் கிளவியிற் றெளிந்த வண்ணமு
மறைகழல் வேந்த ஞமிழை தன்னைச்
அ0 சிறைசெய் கென்றதுஞ் சிறைவீடு செய்தது
நறுமலர்க் கோதைக்கு நல்ல முரைத்தாங்
காய்வளே யாபுத் திரனு டடைந்தது
மாங்கவன் றன்னே டணியிழை போகி
யோங்கிய மணிபல் லவத்திடை யுற்றது
அரு மூற்றவ ளாங்கோ ருயர்தவன் வடிவாய்ப்
பொற்கொடி வஞ்சியிற் பொருந்திய வண்ணமு

எச. அணுகலும் - நெருங்குதலும்.

எசு. மைத்து - வலி. தப்பிய - வெட்டிய; "வாளிற்றப்பியவல்வினை யன்றே" மணி. உக: சு0.

எஅ. தெய்வக்கிளவி - கந்திற்பாவையாகிய தெய்வத்தின் மொழி.

எக. வேந்தன் - மாவண்கிள்ளி. அ0. வீடு - விடுதல்.

அக. நறுமலர்க் கோதைக்கு-இராசமாதேவிக்கு. நல்லறம்-பௌத்த தருமம்; இதனை அருளறமென்றுங் கூறுவர்.

அஉ. ஆபுத்திரனு - சாவகநாடு.

அங. ஆங்கவன் றன்னோடு - ஆபுத்திரனோடு.

அச. புத்தனுடைய பாதபீடிகையினை யுடையதாதலின், 'ஓங்கிய மணிபல்லவம்' என்றார்.

அடு. உயர்தவள் வடிவாய் - மணிமேகலை உயர்ந்த முனிவன் வடிவம் கொண்டு; "மையறு சிறப்பிற் றெய்வதந் தந்த, மந்திர மோதியோர் மாதவன் வடிவாய்" (உசு: எ0 - எக) என்று பின் வருதல் காண்க.

அசு. வஞ்சி - சேரனுடைய இராசதானி.

(பி - ம்.) எள-அஉ. 'நெடுநிலைக் கந்தினின்ற பாவை, வருவதுரைத்து மயக்கொழி யென்றது, மகன்றுயர் பொறாமன்னவன் மாதரைச், சினங் கொண் டாங்கோர் சிறையிடையிட்டதுஞ், சிறைவீடு செய்த விராசமாதேவி, பொதைகொண் டிரப்பச் சிலம் கொடுத்ததும், தாழ்கழல் வேந்தன் சாவகமன்னனுக், காயிழை தன்னே யகற்றிய வண்ணமும்' அக. 'நறுமலர்க் கோதை நல்லறம்' அசு. 'பொற்கொடிமூதூர்', 'பொற்றொடிவஞ்சி'

நவையறு நன்பொரு ளுரைமி னேவெனச்
சமயக் கணக்கர் தந்திறங் கேட்டது
மாங்கத் தாயரோ டறவணர்த் தேர்ந்து
பூங்கொடி கச்சி மாநகர் புக்கதும்
புக்கவள் கொண்ட பொய்யுருக் களைந்து
மற்றவர் பாதம் வணங்கிய வண்ணமுங்
தவத்திறம் பூண்டு தருமங் கேட்டுப்
பவத்திற மறுகெனப் பாவை நோற்றது
கூறு மிளங்கோ வேந்த னருளிக் கேட்ப
வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
மாவண் டமிழ்த்திற மணிமே கலைதுற

அள. நவையறு - குற்றமற்ற. நன்பொருள் - நல்லதத்துவங்களை.

அஅ. சமயக்கணக்கர் - சமயவாதியர்; "சமயக் கணக்கர் மதிவழி கூறுது", "மாறுகொண்டனையு மதிநூற் கடல்கினார், சமயக் கணக்கர் தந் திறங் கடந்து" கீல். கள: கூறு.

அங. ஆங்கு - வஞ்சிநகரத்தில். கூ. கச்சி - காஞ்சிநகரம்.

கக. பொய்யுரு - முன்னங்கொண்ட முனிவன்வடிவு.

கூஉ. அவர் - அறவணவடிகள். கஉ. தருமம் - பௌத்தத்தருமம்.

கறு. இளங்கோவேந்தன் - சிலப்பதிகாரமூலாசிரியராகிய இளங் கோவடிகள். அருளிக்கேட்ப - அருள்புரிந்துகேட்ப; கேட்டருளவென விகுதிபிரித்துக் கூட்டினும் அமையும்.

கசு. கூலவாணிகன் சாத்தன் - கூலவாணிகனான சாத்தன்; கூலம் எண்வகைத்து; நெல்லு, புல்லு, வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகியென; பதினெண் வகைத்தென்பர் கூத்தநூலார்; "பதினெண் கூலமு முழவர்க்கு மிகுக" மதிவாணர் நாடகத்தமிழ் நூல்.

கஎ. தமிழ்த்திறம் - தமிழிலக்கணத்தின் பாகுபாட்டால். மணி மேகலை துறவு - மணிமேகலைதுறவென்னும் பெயருள்ள இந்நூலை. இக் நூலுக்கு மணிமேகலைதுறவென்னும் பெயருண்மை, நீலகேசியுரை முத லியவற்றிற் காணப்படும்; ஆயினும் மணிமேகலையென்னும் பெயர் இரு வகைவழக்கினும் மிகுதியாக வழங்குதல்பற்றி, அப்பெயரே ஈண்டு எடுத் தாளப்பட்டது. இனி, மணிமேகலைதுறவென்பதனை நூற்பெயராகக்கொள் ளாமல் மணிமேகலை யென்பவளுடைய துறவென்று கொள்ளினும் பொருந் தும்.

(பி - ம்.) அக. 'தொழுது' கூ. 'காஞ்சிமாநகர்' கூஉ. 'மற்றவன்' கஎ. 'வண்டமிழத்தின் மணிமேகலை திறம்'

வாறைம் பாட்டினு ளறியவைத் தனனென்.

பதிகம் முற்றிற்று.

க * அரியேறு ..... ன்னுயர்த்த வாதியான் வண்டின்
புரியேறும் போதி நிழற்கீழ்ப் - பெரியோ
னடித்தா மரைமலரை யன்போடுஞ் சென்று
பிடித்தார் பிறவார் பெயர்ந்து.

உ. பூத்தபுனற் பூம்பொய்கைப் பூம்புகார் மாதவிக்கு
வாய்த்த மணிமே கலைதுறவைச் - சாத்தன்
மணிமே கலை..... ....

....

கூஅ. ஆறைம்பாட்டினுள் - மூப்பது பாட்டினுள். அறிய - தமிழகத்தா ரறியும்படி. என்னென்னும் அசைச்சொல்லால் ஆசிரியப்பாமுடிதல் சிறப் புடைத்தென்பர்; "ஞகாரைமுதலா" (தொல். செய். சூ. உச்o)என்பதற்கு, "ஞணநமனயரலவழள வென்னும் பதினெரு புள்ளியீற்றினுள் ஒன்றனை இறுதியாகச் செய்யுஞ்செய்யுள் பொருட்டொடராகவும் சொற்றொடராகவும் செய்வது இயைபெனப்படும் எ - று ; இயைபென்றதனானே பொருளும் இயைந்து சொல்லும் இயைந்துவருமென்பது கருத்து. சீத்தலைச்சாத்தனு ராற் செய்யப்பட்ட மணிமேகலையும் கொங்கவேளாற் செய்யப்பட்ட தொ டர் நிலைச்செய்யுளும் போல்வன ; அவை னகார ஈற்றன் இற்றன " எனப் போராசிரியரும், "ஞ...ள என்னும் பதினெரு புள்ளியுள் ஒன்றனையீறாகக் கொண்டு செய்யுளைப் பொருட்டொடராகச் செய்வது இயைபெனப்படும் எ - று ; இயைபென்றதனானே பொருளியைதல் பெற்றும். பரந்த மொழி யால் அடங்கிமிரிந்த தோல் உயிரீற்றவாயெவரும். னகரவீறான் இற்றப்பொ ருள் தொடர்ந்தன மணிமேகலையும் உதயணன்கதையும்" என நச்சினார்க் கினியரும் எழுதியவை இங்கே அறிதற்பாலன.

கூஉ - கூஅ. மூதூர் விழாவறைந்ததுமுதற் பாவைநோற்றது ஈறாக வுள்ள மணிமேகலைதுறவை இளங்கோவேந்தன் கேட்பக் கூலவாணிகன் சாத் தன் ஆறைம்பாட்டினுள் அறிய வைத்தனனென்க.

எல்லாவடியும் நேரடியாய் வந்து முடிதலின், இப்பாட்டு நிலைமண்டில ஆசிரியப்பா.

(பி - ம்.) பாயிரமுற்றும்.

---

* இந்த இரண்டுசெய்யுட்களும், இந்தவண்ணமாக மிதிலைப்பட்டி அழ கிய சிற்றம்பலக்கவிராயரவர்கள் வீட்டுப்பிரதியில்மட்டுமிருந்தன.

மணிமேகலை.

முதலாவது

விழாவறைகாதை.

[முதலாவது விழாவறைந்தபாட்டு.]

உலகந் திரியா வோங்குயர் விழுச்சீர்ப்
பலர்புகழ் மூதூர்ப் பண்பு மேம்படீஇய
வோங்குயர் மலயத் தருந்தவ னுரைப்பத்
தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்

க - ங. உலகம் - நன்மக்களுடைய ஒழுக்கம். திரியா - வேறுபடாத. ஓங்குயர் விழுச்சீர் - மிகவுமுயர்ந்த சீரியபுகழ். திரியாமூதூர், சீரினையுடைய மூதூரென்க ; "உலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீ, ரலவாய்" (முருகு கூசு - ருடி.) பலர் புகழ் மூதூர் - பலதேசத்தாரும் கொண்டாடும் பழமை யாகிய நகரம்; என்றது காவிரிப்பூம்பட்டினத்தை. பலரும்புகழ்தலே, "பூம் புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்" (சிலப். க : கo.), "வாழி யரோ.....புகழா லமைந்த புகார்" (சிலப். புகார்க்காண்டத்தினிறுதிச் செய்யுள்) என்பவற்றாலும் பிறவற்றாலும் உணர்க; பலர் - பல சமயத்தாரு மாம். மூதூர்ப் பண்பு மேம்படீஇய - மூதூரினதுதன்மைகள் மிகும்பொ ருட்டு. மலயம் - பொதியின்மலை. அருந்தவன் - அகத்தியன். மேம்படீஇய உரைப்பவென்க.

ச. தூங்கு எயில்...செம்பியன் - தேவர்கட்குப் பகைவராகிய அசுரர் களுடைய, ஆகாயத்திலே அசைகின்ற மதில்களை அழித்த வீரவளையை யணிந்த தோளையுடையசோழன்; இவன் சோழருள் ஒருவன்; இவன் தூங் கெயிலழித்ததனை; "ஒன்னருட்குந் தன்னருங் கடிந்திறம், தூங்கெயி லெறிந் தநின் னூங்கணோர்" (புறநா. ஈக), "தூங்கெயின் மூன்றெறிந்த சோழன் காணம்மாவே, சோழன்புகார்நகரம் பாடேலோ ரம்மாவே" (சிலப். உக : 'வீங்குநீர்' என்னும் செய்யுள்), "வீங்குதோட் செம்பியன் சிற்றம் விறல் விசும்பிற், தூங்குமெயிலுந் தொலைத்தலால்" (பழ. சகூ.) என்பவற்றா லுணர்க.

(பி - ம்.) உ. 'மேம்படுதல்', 'மேம்படியர்' ஈ. 'ஆங்குயர் மலயத் தருந்தவனுரைப்ப'

நி விண்ணவர் தலைவனை வணங்கிமுன் னின்று
மண்ணகத் தென்றன் வான்பதி தன்னுண்
மேலோர் விழைய விழாக்கோ ளெடுத்த
நாலேழ் நாளினு நன்கினி துறைகென
வமரர் தலைவ னுங்கது நேர்ந்தது
கo கவராக் கேள்வியோர் கடவா ராதலின்
மெய்த்திறம் வழக்கு நன்பொருள் வீடெனு
மித்திறந் தத்த மியல்பினிற் காட்டுஞ்
சமயக் கணக்கருந் தந்துறை போகிய
வமயக் கணக்கரு மகலா ராகிக்

நி. விண்ணவர்தலைவன் - இந்திரன்.

உ - நி. அருந்தவன் உரைப்பச் செம்பியன் வணங்கியென்க ; உரைப்ப எறிந்தவெனவுமையையும்.

சு. 'மண்ணகத்து' என்பதுமுதல் சோழன்வரர்த்தை. வான்பதிதன் னுள் - கன்றுகிய காவிரிப்பூம்பட்டினத்தில்.

எ. விழாக்கோள் எடுத்த - விழாவெடுத்தலே மேற்கொண்ட.

அ. நாலேழ்காளினும் - இருபத்தெட்டுநாளிலும்; "நாலேழ் நாளினும்" என்பர் மேலும் க: சுஎ.

நி - அ. முன்னின்று உறைகென ; உறைகென - உறைகவென்று சோழன் வேண்ட.

கூ. நேர்ந்தது - இந்திரன் உடன்பட்டது ; இது பெயர் ; விழாவை யென்றபடி.

கo. கடவார் - பிழையார்.

கக. மெய்த்திறம் - மெய்ம்மையையுணர்த்துவனவாகிய நூல்வகைகள். வழக்கு - உலகியல். வீடு - முத்தி; "மெய்த்திறம் வழக்கென விளம்புகின்ற, வெத்திறத்தினும்" (உஎ : கoசு-எ) என்பர் மேலும். இப்படியே " அரு மறை விதியு மூலகியல் வழக்குங், கருத்துறை பொருளும் விதிப்பட நினைந்து" என்றார் கல்லாடத்தும், சுசி-ஆ

கஉ. இத்திறம் - இவ்வகைகளை.

கங. தம்துறைபோகிய - தம்முடைய வழியிற் கைதேர்ந்த.

கச. அமயக் கணக்கரும் - காலங்களை எண்ணிச் சொல்வோராகிய சோதிடரும். கணக்கரென்பது கணகரென்னும் வடமொழிச்சிதைவு. அகலா ராகி - இங்கரை விட்டு நீங்காராகி.

(பி - ம்.) கக. 'விளக்கும்' கச. ' கலையக்கணக்கருங்கல்லென் பேரூர்'

கடு கரந்துரு வெய்திய கடவு ளாளரும்
பரந்தொருங் கீண்டிய பாடை மாக்களு
மைம்பெருங் குழுவு மெண்பே ராயமும்
வந்தொருங்கு குழீஇ வான்பதி தன்னுட்
கொடித்தேர்த் தானைக் கொற்றவன் றுயரம்
உ0 விடுத்த பூதம் விழாக்கோண் மறப்பின்

கடு. கரந்துரு வெய்திய கடவுளாளரும் - மக்கள்கண்கள் காணப் பொருவென்று தமது மிக்க ஒளியையுடைய தெய்வயாக்கையைமறைத்து அக்கண்கள்பொறுக்குமளவினவாகிய உருவங்களே திருமித்துக்கொண்டதேவரும். இதனை, "அந்தரத் துள்ளோ ரறியா மாபின், வந்து காண்குறூஉம் வானவன் விழவும்" (சிலப். சூ: எ - ங), "அவளுக்குட், பூவந்த வுண்கண் பொறுக்கென்று - மேவித்தல்,மூவா விளமலர்ங் காட்டி" (சிலப். கூ: ஙூ - ஞ்) என வருவனவற்றாலும் அவற்றின் உரையாலும் உணர்க.

ககூ. ஒருங்கீண்டிய - ஒன்றுபடத்திரண்ட. பாடைமாக்கள் - மொழி வேறுபட்டமாக்கள்; இவர்கள், மரக்கலத்தருஞ் செல்வப்பொருட்டால்வந்த பரதேசிகள்; இவரை, "புலம்பெயர்மாக்கள்" (சிலப். ஞ: ஙக), "மொழிபெயர் தேத்தோர்" (சிலப். சு: ஙசஙூ) எனவுங்கூறுவர்.

கஎ. ஐம்பெருங்குழு - அமைச்சர், புரோகிதர், சேனாபதியர், தூதுவர், சாரணரென்னுமிவர்கள். எண்பேராயம் - கரணத்தியலவர் முதலியோர்; இதனை, "அமைச்சர் புரோகிதர் சேனா பதியர், தவாத்தொழிற் றூதுவர் சாரண ரென்றிவர், பார்த்திபர்க் கைம்பெருங் குழுவெனப் படுமே", "கரணத் தியலவர் கருமவிதிகள், கலாகச் சுற்றங் கடைகாப் பாளர், ஙகரமாந்தர் ஞரிபடைத் தலைவர், யானை வீரரிவுளி மறவ, ரினைய ரென்பே ராயமென்ப" என்பனவற்றாலுணர்க; இவைதிவாகரம்; "ஐம்பெருங் குழுவு மெண்பே ராயமும்" சிலப். ஞ: கஞ்ச ; பெருங். க. ஞ: சூ.

கஅ. ஒருங்கு குழீஇ - ஒன்றுபடக்கூடி. 'வான்பதிதன்னுள்' என்றது முதலியன, சமயக்கணக்கர்முதலியோர் வார்த்தை.

ககூ. கொற்றவன் - முசுகுந்தன். துயரம் - அவனுடைய கண்ணும்மனமும் இருளும்வண்ணம் அசுரர்விட்ட தாமதாத்திரத்தால் அவனுக்குளதாகிய துன்பம். துயரம் - துயரத்தை.

உ0. விடுத்தபூதம் -முசுகுந்தனுக்கு ஒரு மந்திரமுபதேசித்து அவ்விருஷப்போக்கிய, பட்டினப்பாக்கம் மருவூர்ப்பாக்க மிரண்டற்குமிடையேயுள்ள நாளங்காடியிடத்துப் பூதம்; 'வெற்றிவேன் மன்னற் குற்றதை யொழிக்கென..... பீடிகை" (சிலப். ஞ: சூஞ - எ); "கடுவிசை யவுணர்.....யிட னுங் காண்கும்" (சிலப். சூ. எ - ஙஞ) என்பவற்றாலும் அவற்றின் உரையாலும் உணர்க. விழாக்கோள் - விழாவெடுத்தல்.

(பி - ம்) கடு. 'கரந்தருவெய்திய' கஅ. 'குழீஇய' ககூ. 'துயரற', 'துயரிற' உ0. 'மறைப்பின்'

மடித்த செவ்வாய் வல்லெயி றிலங்க
விடிக்குரன் முழக்கத் திடும்பை செய்திடுங்
தொடுத்த பாசத்துத் தொல்பதி ஈரகரைப்
புடைத்துணும் பூதமும் பொருந்தா தாயிடு
உடு மாயிரு ஞாலத் தரசதலை யீண்டி
மாயிரங் கண்ணேன் விழாக்கால் கொள்கென
வச்சிரக் கோட்டத்து மணங்கெழு மூரசங்
கச்சை யானைப் பிடர்த்தலை யேற்றி
யேற்றுரி போர்த்த விடியுறு முழக்கிற்

உக. வல்லெயிறு - வலியபல்.

உஉ. முழக்கத்து - முழக்கத்தோடு. இடும்பை - துன்பம்.

உ0 - உஉ. மறப்பின், பூதம் இடும்பை செய்திடு மென்க.

உங - ச. தொடுத்த - கட்டிய. ஈரகர் - தம்மைப் பிறர்கம்புவதற்குத் தவவேடத்தில் மறைத்து நின்று அத்தவத்திற்கிழுக்கானவற்றின்கண் ஒழுகும் பொய்வேடத்தார் முதலிய அறுவகையோர். புடைத்து - அறைந்து. பூதம் -மேற்கூறிய பொய்வேடத்தார் முதலிய அறுவரைத் தன்பாசங்கட்டி வர அவரை அறைந்துண்ணும் சதுக்கப்பூதம்; இதனை, "மாதுய ரெவ்வ மொடு மனையகம் புகாஅள்.....சேயிழை யரற்றலும்" (மணி. உஉ: சசு - நுசு), "தவமறைந் தொழுகுந் தன்மையி லாள, பவமறைந் தொழுகு மலைவுப் பெண்டி, றறைபோகமைச்சர் பிறர்மனை நயப்போர், பொய்க்கரி யாளர் புறங்கூற் றாளரென், கைக்கொள் பாசத்துக் கைப்படு வோரெனக், காத நான்குங் கடுங்குர லெடுப்பிப், பூதம் புடைத்துணும் பூத சதுக்கமும்", "பத்தினி யொருத்தி.....உயிர்முஞ் புடைப்ப" (சிலப். நு: கஉ - ஙச; கநு: எசு - அசு) என்பவற்றாலுணர்க.

உடு. மாயிருஞாலம் - மிகப் பெரிய பூமி. ஈண்டும் - கூடும்.

உசு. ஆயிரங்கண்ணேன் - இந்திரன். கால்கொள்கென - தொடங்குக வென்று சொல்ல; "காலுங்கோள் விழவின் கடைநிலை சாற்றி" சிலப். நு: கசச.

உஎ. வச்சிரக்கோட்டம் - வச்சிராயுதம் நிற்குங்கோயில். மணங் கெழுமூரசம் - விழாமுரசு.

உஅ. கச்சை - நீழ்வயிற்றிற் கட்டும் கச்சை. பிடர்த்தலை - பிடரிடம்.

உஏ - அ. "வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசங், கச்சையானைப் பிடர்த்தலை யேற்றி" சிலப், நு. கசக - உ.

உக - ங.க. ஏற்றுரிபோர்த்தமுரசு-வென்ற ஏற்றினது உரியைப்போர்த்தின முரசு ; இக்கருத்தினைப்பின் வருவனவற்றாலுணர்க: "ஏறிரண்டடல் மடித்து, வென்றதன் பச்சை சீவாதுபோர்த்த,.....முரசம்" புறநா. உஅஅ,

(பி - ம்.) உக. 'வல்லெயிறரும்ப' உஎ. 'மன்கெழு', 'மணமுழாவார்ந்து' உங. 'இடியுருமுழக்கின்'

கூ0 கூற்றுக்கண் விளிக்குங் குருதி வேட்கை
முரசு கடிப்பிகூஉ முதுக்குடிப் பிறந்தோன்
நிருவிழை மூதூர் வாழ்கென் றேத்தி
வான மும்மாரி பொழிக மன்னவன்
கோணிலை திரியாக் கோலோ னுகுக
கூரு நீவகச் சாந்தி செய்தரு நன்னு

"ஏற்றுரிமுரச நாணவெறிதிரை" (சீவக. உகசஉ), "சாற்றிடக் கொண்ட வேற்றுரி முரசம்" (பெருங். க. கூஅ: கo0) "ஏற்றுரி முரசி னிறைவன் மூதூர்க்கு" (மெய்ஞ். சாரூ: ககரு). இடியுறு முழக்கின் முரசு - இடியினது முழக்கம்போலுமுழக்கினையுடைய முரசு; உறு, உவமவுருபு; "தோளுந் நெர்தெய்வந் தூணியாய்த்துயர் தீர்த்தவாறும்" (சீவக. கo); கூற்றுக்கண் விளிக்கு முரசு - கூற்றையழைக்கு முரசு; கண், அசைநிலையுமாம்; "மீன் கணற்றதின் சுனையே" (புறநா. கoக). குருதிவேட்கைமுரசு - குருதிப்பலி கொள்ளும் விருப்பத்தையுடைய முரசு; "குருதிவேட்கை யுருகெழு முரசம்" (புறநா. ஙo). கடிப்பு - முரசடிக்குங் குறுந்தடி.

கூஉ. வாழ்கென்று - வாழகவென்று.

கூரு. 'வானமும்மாரி' முதலியன முரசறைவோர் கூற்று. வானம் - மேகம். மாரி - மழை.

கூசு. கோணிலை திரியாக் கோலோனுகுக - கோள்கள் நிற்கும்நிலையும் யாமைக்குக் காரணமாகிய செங்கோலையுடையோனுகுக; "கோணிலை திரிந் திடிற் கோணிலை திரியும்" என இந்நூலுள்ளும் (எ: அ), "கோணிலை திரிந்து.....மரசுகோல் கோடினென்றன் " எனச் சீவகசிந்தாமணியுள்ளும் (உருரு) வருதல் காண்க.

கூரு. நீவகச்சாந்தி - நீபசாந்தி; என்றது இந்திரவிழாவை; சம்புத்தீவக் காவற்றெய்வம், முற்காலத்து இத்தீவிலுள்ளார்க்கு அசுரரால்வரும் தீங்கைப் பரிகரித்தற்பொருட்டு இந்திரனுக்குச் செய்தமையால், இவ்விழா இப்பெயர் பெற்றது; "நாவ லோங்கிய மாபெருந்தீவினுட், காவற்றெய்வதந் தேவர்கோற் கெடுத்த, நீவகச்சாந்தி" (மணி. உ: க - கூ); இனி, நகரத்திற்குஉளவாகுந் தீங்குகளைப் பரிகரித்தற் பொருட்டுச் செய்யப்படும் இவ்விழா, நீவிற்குச் செய்வதனைடொக்கு மென்பதுபற்றித் நீவகச்சாந்தியெனப்பட்டதெனினுமமையும்; இவ்வூரம்பலத்தை "உலகவறவி" எனு இந்நூலுள்ளும் (எ: கூசு; கஎ: எஅ, அசு), இவ்வூர்வாயிலை, "உலகவிடைகழி" எனச் சிலப்பதிகாரத்துள்ளும் (கo. உஎ) இவ்வூரசனை "உலக மன்னவன்" என இந்நூலுள்ளும் (கூ: சசு) கூறியிருத்தல் காண்க.

(பி - ம்.) நக 'கடிப்பிடூம்' நகூ. 'வானமும் மாரியும்' நகூ. 'நீப சாந்தி', 'நீவகைசாந்தி'

ளாயிரங் கண்ணோன் றன்னே டாங்குள
கால்வேறு தேவரு நலத்தகு சிறப்பிற்
பால்வேறு தேவரு மிப்பதிப் படர்ந்து
மன்னன் கரிகால் வளவனீங் கியநா
சo னிங்கர் போல்வதோ ரியல்பின தாகிப்
பொன்னகர் வறிதாப் போதுவ ரென்பது
தொன்னிலை யுணர்ந்தோர் துணிபொரு ளாதலிற்
றேரண வீதியுந் தோமறு கோட்டியும்
பூரண கும்பமும் பொலம்பா விளக்களும்
சரு பாவை விளக்கும் பலவுடன் பரப்புமின்
காய்க்குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும்
பூக்கொடி வல்லியுங் கரும்பு நடுமின்

கஎ. நால்வேறு தேவர் - மூப்பத்து மூவர்; அவர் வசுக்களெண்மரும், திவாகரர் பன்னிருவரும், உருத்திரர் பதினொருவரும், மருத்துவரிருவரும்.

கஅ. பால்வேறு தேவர் - பதினெண் கணங்கள்; பால் - பகுதி. படர்ந்து - நினைந்து.

கக. கரிகால் வளவன் - புகாரையாண்ட ஒரு சோழன். நீங்கியகாள் - பகைவரை வெல்ல வடதிசையை நோக்கி அவன் போன காளில்; "இருநில மருங்கின்.....புண்ணியத் திசைமுகம் போகிய வக்காள்" என்று சிலப்பதிகாரத்து வருதல் காண்க; நு: அக - கூசை.

சக. பொன்னகர் - தேவலோகம். வறிதா - வறுமையையடையதாக. தேவர் பலரும் விழாக்காண இந்திரர்க்கு வந்துவிடுதல்பற்றி, இவ்வாறுகூறப் பட்டது.

சo - சக. ஆகி வறிதாவென்க.

சஎ. கோட்டி - சபை; கோயில்வாயிலெம்பர் சிலப்பதிகார அரும் பதவுரையாசிரியர்; கo : சஉ.

சஅ. பொலம் பாவிகை - பொற்பாலிகை.

சநு. பாவைவிளக்கு - பிரதிமை விளக்கு; "பாவை விளக்குப் பசும் பொற்படாகை" (சீவக. நு: கநுசஉ.) உடன்பரப்புமின் - ஒருங்குபரப்புமின்.

சசு. வஞ்சி - மரவிசேடம்; கொடிவிசேடமுமாம்; வஞ்சிநகரத்தை, "பொற்கொடிப் பெயர்ப்பரீஉம் பொன்னகர்" எனப் பின்னர்க்கூறுதல் காண்க; உசு: கூட.

சரா. பூக்கொடிவல்லி யென்றார், துகிற்கொடியை மாற்றுதற்கு; "கத விகைக் கொடியுக் காழுன்று விலோதமும்" மணி. க : நுஉ.

(பி - மீ.) கஅ. 'இப்பதியடர்ந்து' சஉ. 'சொன்னிலை' சஎ. 'தோட்டியும்' சசு. 'வாழைக்கதலியும் வஞ்சியும்' சஎ. 'கரும்பொடு நடுமின்'

பத்தி வேதிகைப் பசும்பொற் றூணத்து
முத்துத் தாம முறையொடு நாற்றுமின்
நுo விழுவுமலி மூதூர் வீதியு மன்றமும்
பழமணன் மாற்றுமின் புதுமணற் பரப்புமின்
கதலிகைக் கொடியுங் காழ்ஞன்று விலோதமு
மதலை மாடமும் வாயிலும் சேர்த்துமி
னுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப்
நுடு பதிவாழ் சதுக்கத்துத் தெய்வ மீருக
வேறுவேறு சிறப்பின் வேறுவேறு செய்வினை
யாறறி மாபி னறிந்தோர் செய்யுமின்
றண்மணற் பந்தருந் தாழ்தரு பொதியிலும்
புண்ணிய நல்லுரை யறிவீர் பொருந்துமி

சஅ. பத்தி - வரிசை. வேதிகை - திண்ணை. தூணம் - தூண்.

சக. தாமம் - மாலை.

நுo. மன்றம் - ஊர்க்கு நடுவாய் எல்லாருமிருக்கும் மரத்தடி ; "மன்றமும் பொதியிலும்" முருகு. உஉசு.

நுஉ. கதலிகைக்கொடியும் காழ்ஞன்று விலோதமும், துகிற்கொடி. விசேடங்கள் ; காழ் - காம்பு.

நுக. மதலை - கொடுங்கை ; பற்றுக்கோடுமாம்.

நுச. நுதல்விழி நாட்டத்திறையோன் - இறைவி கண்புதைத்தபொழுது நெற்றியிற் புதப்பட விட்ட கண்ணையுடைய தலைவன் ; என்றது சிவபெருமானை ; விழிநாட்டம், வினைத்தொகை. இனி, நுதலில் இமையா நாட்டமென்றுமாம் ; "நுதல்விழி நாட்டத் திறையோர் கோயிலும்" சிலப். கச: எ.

நுடு. சதுக்கத்துத் தெய்வம் - சதுக்கப் பூதம் ; என்றது, முன்னர்க் கூறிய அறுவகை நிலைப் புடைத்துண்ணும் பூதத்தை. சதுக்கம் - நாற் றெருக்கூடுமிடம்.

நுசு. செய்வினை - செய்வினையை.

நுள. ஆறறிமரபினறிந்தோர் - நிருத்த முதலிய ஆறங்கங்களையுமுணர்ந்த முறையையுடைய அந்தணர் ; "ஆறறியந்தணர்க்கு" (கலி. கடவுள்.) அறிந்தோர், முன்னிலைப்பெயர்.

நுஅ. பொதியில் - அம்பலம். நுக. புண்ணியநல்லுரை - தருமபதம்.

(பி - ம்) சக. 'முத்தத்தாம முகையொடு' நுக. 'பழமணற் பாற்றுமின்' நுஉ. 'கதலிக்கொடியும்' நுடு. 'சதுக்கத்தெய்வம்' நுஅ. 'தண்மணப்பந்தர்' நுக. 'அறிந்தோர் பொருந்துமின்'

கூ0 ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள்
பட்டி மண்டபத்துப் பாங்கறிந் தேறுமின்
பற்ரு மாக்க டம்மூட ஞயிலுஞ்
செற்றமுங் கலாமுஞ் செய்யா தகலுமின்
வெண்மணற் குன்றமும் விரிபூஞ் சோலையுங்
கூரு தண்மணற் றுருத்தியுந் தாழ்பூந் துறைகளுந்
தேவரு மக்களு மொத்துடன் றிரிதரு
நாலேழ் நாளினு நன்கறிந் தீரென
வொளிறுவாண் மறவருந் தேரு மாவுங்
களிறுஞ் சூழ்தரக் கண்மூ சியம்பிப்
எ0 பசியும் பிணியும் பகையு நீங்கி
வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி

கூ0. ஒட்டிய - சட தருசெய்த.

கூக. பட்டிமண்டபம் - வித்தியாமண்டபம்; உலக்கமண்டபமென்றுங் கூறுவர், "பட்டி மண்டப மேற்றினே யேற்றினே" (திருவா. சதகம், சக) "பகைப்புறத்துக் காடுத்த பட்டிமண்டபமும்" (சிலப்.பு:கo உ), "பன்னருங் கலைதெரி பட்டி மண்டபம்" (கம்ப. கோ. கூஉ.) பாங்கு-உரிய இடம்.

கூஉ. பற்ரூமாக்கள் - பகைவர்.

கூங. செற்றம் - பகைமை நெடுங்காலம் நிகழும்கோபம்; "செற்ற நீக்கிய மனத்தினர்" (1பரிபா. கஉ.) கலாம் - போர்; "புலாற்களனு செய்த கலாஅத் தானேயல்" புறநா. கூசு.

கூடு. துருத்தி - ஆற்றிடைக்குறை. தாழ்பூந்துறைகள் - ஆழ்ந்த பொலிவினையுடைய நீர்த்துறைகள்.

கூஅ. ஒளிறுவாள் - மினுங்கும்வாள்; "ஒளிறுவாண் மன்னர்" (புறநா. களஎ.) மறவர் - வீரர்.

கூக. கண்மூசு - முகத்தையுடைய மூசு; "கடிப்பிடு கண்மூசம்" (நாலடி. கoo.) மூசின்முகத்தைக் கண்ணென்றல் மரபு.

எ0. பகை - உட்பகை.

எக. மழையும் செல்வமும் சுரக்கவென்று வாழ்த்தி.

எ0 - எக. "பசியும் பிணியும் பகையு நீங்கி, வசியும் வளனுஞ்சுரக்கென வாழ்த்தி" சிலப். கு: எஉ - கூ.

(பி - ம்.) கூ0. 'ஒட்டியதுறுபொருணுணர்ந்த வாதிகள்' கூஅ. 'வெளிறு வாண்மள்ளரும்' கூக. 'இயம்ப' எ0. 'பச்சையு நீங்கி'

யணிவிழா வறைந்தன னகநகர் மருங்கென்.

க.—விழாவறைகாதை முற்றிற்று.

எஉ. அகநகர் - உள்நகர்; என்றது பட்டினப்பாக்கத்தை.

க - எஉ. அருந்தவன் உரைப்பச் செம்பியன் விண்ணவர்தலைவனை நாலேழ்நாளினும் வான்பதிதன்னுள் உறைகென அவனேர்ந்ததைக் கேள்வியோர் கடவாராதலின், சமயக்கணக்கர் முதலியோர் குழீஇ, 'மறப்பினும் இடும்பைசெய்திடும் பொருந்தாதாயிடும் கால்கொள்க' என முதுக்குடிப் பிறந்தோன் மூரசத்தை ஏற்றி இயம்பி ஏத்திச் சுரக்கெலவாழ்த்திப் பொழிக ஆகுக நன்கமிந்நீர் துணிபொருளாதலின் நாலேழ்நாளினும் பரப்புமின் கடுமின் நாற்றுமின் மாற்றுமின் பரப்புமின் சேர்த்துமின் செய்யுமின் பொருந்துமின் ஏறுமின் அகலுமின் என அகநகர்மருங்கு விழாவை அறைந்தனனென்க.

(பி - ம்.) எஉ. 'அகனமர் மருங்கென'.

இரண்டாவது

ஊரலருரைத்தகாதை.

[இரண்டாவது ஊரலருரைத்தபாட்டு.]

நாவ லோங்கிய மாபெருந் தீவினுட்
காவற் றெய்வதந் தேவர்க்காற் கெடுத்த
தீவகச் சாந்தி செய்தரு நன்ஞெண்
மணிமே கலையொடு மாதவி வாராத்
தணியாத் துன்பந் தலைத்தலை மேல்வரச்
சித்திரா பதிதான் செல்லலுற் றிரங்கித்
தத்தரி தெடுங்கட் டன்மக டோழி

க. நாவலோங்கிய மாபெருந்தீவு - சம்புத்தீவு; இது, மகாத்வீபம் நான்களுள் ஒன்றுதலின், மாபெருந்தீவெனப்பட்டது; இகநருத்தி, "நால்வகையரபின் மாபெருந்தீவும்" (மணி. சு: ககுரு) எம்பதனுல் விளங்கும்.

கூ. நாள்-நாளில்; "தீவகச் சாந்தி செய்தரு நன்னுள்" மணி. க: கூரு.

(பி - ம்.) கூ. 'தீபசாந்தி செய்தரு மங்காள்' ச. 'மாதவிபாரா'

வயந்த மாலையை வருகெனக் கூஉய்ப்
பயங்கெழு மாநக ரலரெடுத் துரையென
க0 வயந்த மாலையு மாதவி துறவிக்
கயர்ந்துமெய் வாடிய வழிவின ளாதலின்
மணிமே கலையொடு மாதவி யிருந்த
வணிமலர் மண்டபத் தகவயிற் செலீஇ
யாடிய சாய லாயிழை மடந்தை
கரு வாடிய மேனி கண்டுளம் வருந்திப்
பொன்னே ரணையாய் புகுந்தது கேளா
யுன்னே டிவ்வூ ருற்றதொன் றுண்டுகொல்
வேத்தியல் பொதுவிய லென்றிரு திறத்துக்
கூத்தும் பாட்டுந் தூக்குந் துணிவும்

அ. கூஉய் - அழைத்து.

கூ. பயம் - பிரயோசனம். அலர் - பலரறிய நிகழ்த்தும் பழிமொழி. உரையென - அலரை மாதவிக்குச் சொல்லென்று சித்திராபதிசொல்ல.

க0. துறவிக்கு - துறவுக்கு.

கக. அயர்ந்து - மனந்தளர்ந்து. அழிவினள் - வருத்தமுடையாள்.

கங. மலர்மண்டபம் - பூத்தொடுக்கு மண்டபம். அகவயிற்செலீஇ - உள்ளிடத்தேசென்று.

கச. சாயல் - மென்மை. மடந்தை - மாதவியினை.

கரு. வாடியமேனி - தவத்தாற்வாடிய மேனியை.

கசு. பொன் - திருமகள்; 'பொன்னேரணையாய்' என்பது முதலியன வயந்தமாலைகூற்று. புகுந்தது - சம்பவித்ததை.

கள. உற்றதொன்றுண்டுகொல் - உற்றதாகிய பகைமை ஒன்றுண்டோ.

கஅ. வேத்தியல் - அரசர்க்காடுங்கூத்து; பொதுவியல் - எல்லார்க்கும் ஒப்ப ஆடுங்கூத்து; திறம் - வகை; "வேத்தியல் பொதுவிய லென்றிரு திறத்து, மாத்திரை யறிந்து மயங்கா மரபி, னுடனும்" சிலப். கச : கசஅ-ரு0.

கஙு. பாட்டு - இசை. தூக்கு - தாளங்களின் வழியே வரும் செந்தூக்குமுதலிய ஏழுதூக்குகள்; "ஒருசீர் செந்தூக் கிருசீர் மதலை, மூச்சீர் துணிவு நாற்சீர் கோயி, லைஞ்சீர் நிவப்பே யறுசீர் கழாலே, யெழுசீர் நெடுந்தூக் கென்மனார் புலவர்" என்பதனுணர்க. துணிவு-தாளங்கள்; துணிந்து நிகழ்த்தப்படுதலின், இப்பெயர் பெற்றதுபோலும்.

(பி - ம்.) அ. 'வசந்த' கூ. 'அகன்கெழுமன்னகரலர்படுத்துரையென' க0. 'துறவியிற்கு' கள. 'நின்னே டிவ்வூர் நின் றதொன் றுண்டுகொல்'

உ0 பண்ணியாழ்க் காரணமும் பாடைப் பாடலுங்
தண்ணுமைக் கருவியுந் தாழ்தீங்[1]குழலுங்
கந்துகக் கருத்து மடைநூற் செய்தியுஞ்
சுந்தரச் சுண்ணமுந் தூநீ ராடலும்
பாயற் பள்ளியும் பருவத் தொழுக்கமுங்
உடு காயக் காரணமுங் கண்ணிய துணர்தலுங்
கட்டுரை வகையுங் கரந்துறை கணக்கும்
வட்டிகைச் செய்தியு மலராய்ந்து தொடுத்தலுங்
கோலங் கோடலுங் கோவையின் கோப்புங்
காலக் கணிதமுங் கலைகளின் முணிவு

உ0. யாழக்காரணம் - யாழுக்குரியசெயகை. பாடைப் பாடல - அகரா டகங்களுக்கும் புறநாடகங்களுக்கும் உரிய உருக்கள்.

உக. கருவி - வாச்சியம். குழல் - வங்கியம்.

உஉ. கந்துகம் - பந்து. மடைநூல் - பாகசாதத்திரம்.

உங. சுந்தரச்சுண்ணம் - நிறத்தையுடைய வாசனைப்பொடி; "சுந் தரச்சுண்ணத்து" சிலப். (5); கருரு.

உச. பாயற்பள்ளி - பாயலிடம். பருவத்தொழுக்கம் - காலங்கட்கேற்ப ஒழுகும் ஒழுக்கம்.

உடு. காயக்காரணம் - காயத்தாற்செய்யப்படும் அறுபத்து நான்கு வகைச்செய்கை. கண்ணியதுணர்தல் - பிறர் கருதியதை அறிந்து கொள்ளுதல்.

உசு. கட்டுரைவகை - தொடுத்துக்கூறும் சொல்வன்மை. கரந்துறை கணக்கு - மறைத்துறையும்வகை; "அடிசில் வினையும் யாழின் முறையும், கடிமலர்ச் சிப்பமுங் காந்துறை கணக்கும், வட்டிகை வரைப்பும் வாக் கின் விகற்பமும், கற்றலை யெல்லாங் காட்டுமி னமக்கென" பெருங். க. நச: கசுசு - கூ.

உள. வட்டிகை - எழுதுகோல்; "வட்டிகைச் செய்தியிற் வரைந்த பாவை" என்பர் பிறரும்; ச : நுசு.

உஅ. கோலம் - அவ்வக்காலங்கட் கேற்பக்கொள்ளும் ஒப்பனை; "இர விற்கோர், கோலங் கொடியிடையார் தாங்கொள்ள" (சிலப். கூ : கூ - ச.) கோப்பு - கோத்தல்.

உக. காலக்கணிதம்-சோதிடம்; "ஆயுள் வேதருங் காலக் கணிதரும்" (சிலப். (5); சசு) கலைகள் - பாத்தையாக்குரியவென்று நூலகளிற் கூறப் பட்ட யாழ்வாசினைமுதலிய அறுபத்து நான்கினும் இப்பாட்டில மூன்றும்

(பி - ம்.) உ0. 'பண்ணியாழ்க்கானமும்', 'பண்ணியாழ்த்தானமும்' உக. 'தாழ்ந்தீங்குழலும்' உடு. 'கண்ணியதுரைத்தலும்' உஅ. 'கோவையுங் கோப்பும்'

நாடக மகளிர்க்குரிய னன்கனம் வகுத்த
வோவியச் செந்நூலுரை நூற் கிடக்கையுங்
கற்றுத்துறைபோகிய பொற்றொடி நங்கை
நற்றவம் புரிந்தது நானுடைத் தென்றே
யலகின் மூதூரான்றவ ரல்லது
பலர்தொகு புரைக்கும் பண்பில் வாய்மொழி
நயம்பாடில்லே நானுடைத் தென்ற
வயந்த மாலைக்கு மாதவி யுரைக்குங்
காதல னுற்ற கடுந்துயர் கேட்டுப்
போதல் செய்யா வுயிரொடு நின்றே
சாரணர் பொற்கொடி மூதூர்ப் பொருளுரை யிழந்து

பின்னுங் கூறு தொழிந்த கலைகள்; பரத்தையர்க்குரியகலைகள் அறுபத்து நான்கென்பதைப் பின்வருவனவற்றாலுணர்க; "யாழ்முத லாக வறுபத் தொருநான், கேரிள மகளிர்க் கியற்கையென் றெண்ணிக், கலியுற வகுத்த காமக் கேள்வி" (பெருங். க. கூறு: அச -); "கலிவலார் நெஞ்சிற் காமமே போற்றும்" (சீவக. உகoஎ); "பண்ணுங் கியாழும் பழித்த நீஞ்சொ, லெண் ணெண் கலையோ ரிருபெரு வீதியும்" (சிலப். கச : கசசு - எ); "எண்ணுன் கிரட்டி யிருங்கலை பயின்ற...மடநதையர்" சிலப். உஉ: கசஅ - கூ.

நoo. நன்கனம்வகுத்த - நன்றாகவகுக்கப்பட்ட; "நாணமு முடையு நன்கன நீத்து" (கூ : அஅ) எனவும், "நாவினு நன்னூ லன்கன நவிற்றி" (கசு: உச) எனவும், "நாத்தொலி யின்றி நன்கன மறிந்த பின்" (கசு: உசு) எனவும் நன்கனமென்பது இப்பொருள்பட்டு இசநூலுள்ளே பயின்றுவருதல் காண்க.

நக. ஓவியச்செந்நூல் - ஓவியநூல். இப்பெயருள்ள நூல் ஒன்றுண் டென்பது, 'ஓவியநூலுள் நீற்றல இருத்தல் கிடத்தல இயங்குதலென்னும் இவற்றின் விகற்பங்களா பலவுள' (சிலப். அ: உடீ - ப; அடியார்) என்பதனு லறியலாகும்.

நஉ. துறைபோகிய - கற்றவகைகளிற் கைதேர்ந்த.

நசு - (ரு). நற்றவம்புரிந்தது நானுடைத்தென்று பலர் கூடி உரைக் கும் வாய்மொழியென்க.

நசு. நயம்பாடில்லே - அழகுண்டாதில்லே.

நஎ. காதலன் - கோவலன். கடுந்துயர் - மிக்கதுயர்; என்றது கொ லையுண்டதை; "கணவற் குற்ற கடுந்துயர்" (உ : ரு0), "காதலனுற்ற கடுந் துயர்" (உ: கூசு) எனபர் பின்னும்; "கணடா னவன்றன்னைக் காணக் கடுந்துயரம்" சிலப். கசு : டீ.

சo. பெருளுரை - புகழுரை.

(பி - ம்.) நசு. 'நலம்பாடில்லே' நஎ. 'போதல் செல்லாவுயிரோகன்றே'

நற்றொடி நங்காய் நாணுத் துறந்தேன்
காதல னிறப்பிற் கனையெரி பொத்தி
யூதுலைக் குருகி னுயிர்த்தகத் தடங்கா
தின்னுயி ரீவ ரீயா ராயி
சருு னன்னீர்ப் பொய்கையி னளியெரி புகுவர்

சக. நங்காயென்றது, வயத்தமாலையை.

ஈஅ - சக. கேட்டு நின்று இறந்து துறந்தேனென்க.

சஉ. கனையெரி - மிக்கவெருப்பு; "கனையெரி யுறைய மருங்கும்" (புறநா. உஈ.) பொத்தி - மூட்டி; "கானவர் பொத்திய ஞெலிநீ விளக்கத்து" புறநா. உசஎ.

சஈ. ஊதுலைக் குருகி னுயிர்த்த-உலையிலூதும் துருத்திறக்கைப் போலவே அழலெழுவுயிர்த்து; "காதலர்ப் பிரிந்த [illegible]துலைக் குருகி னுயிர்த்தனை தொடுங்கி" (சிலப். ஈ: ருு, உ - சு); "காதலற் கெடுத்த நோயோ டெனங்கனன், றூதுலைக் குருகி னுயிர்த்த ரால்" மணி. உ.உ: கருகை-உ.

சஎ. இன்னுயிரீவர் - இனிய வுயிரைக் கொடுப்பார்; என்றது, காதலனிறந்தமை கேட்டபொழுதே இறப் பென்றபடி; பாண்டியன் நெடுஞ்செழியனிறப்ப அவன்மனையாகிய பெருங்கோப்பெண்டும் உடனே இறந்த சரித்திரம் இங்கே அறியத்தக்கது; அதுவருமாறு: "அரிமா னோக்கிய வமளி மிசை யிருந்த, திருவீழ் மார்பிற் றென்னர் கோமான், நயங்கிணைக் கோதை தன்னுயர் பொறுஅன், மயங்கினன் கொல்லென மலாடி வருடித், தலைத்தா ணெடுமொழி தன்செவி கேளாள், கலக்கங் கொள்ளான் கடுத்துயர்பெறுஅ ண், மன்னவன் செல்வுழிச் செல்க யானெனத், தன்னுயிர் கொண்டவ னுயிர்தே டினள்போற், பெருங்கோப் பெண்டு மொருங்குடன் மாய்ந்தனள்" (சிலப். உரு: எஅ - அசு.) இவ்வரலாற்றாலே மூதாளர்த்தமென்பர்; "கயலேர் கணணி கணவனெடு முடிய, விடலோ றிழிச் செல்லார் வியக்துரைத் தன்று", "ஒருயி ராக வுணர்க வுடன்கலந் தார்க், கிருயி ரொப்ப நிலைதெரிவார் - போ ரில், விடனேந்தும் வேலோற்கும் வெள்வளையி னுட்கு, முடனே யுலந்த துயிர்" பு - வெ. பொதுவியற்படலம், கூ.

சஉ - ருு. களியெரி - செறிந்தவெருப்பு; "நன்மர னளிய நறுந்தண் சாரல்" (புறநா. கருஐ.) காதலனிறப்பிற் பொய்கையிற்புகுவதுபோலச் செறிந்த நெருப்பிற் புகுவர் பத்தினிப்பெண்டிர்; "பெருந்தோட்கணவன் மாய்ந்தென வரும்பற, வள்ளித ழுள்ளுந் தாமரை, நள்ளிரும் பொய்கையுந் நீயுமோ ரற்றே" (புறநா. உசகூ.) கணவனை யிழந்த பத்தினிப்பெண்டிர்க்குப் பொய்கையுந் தீயும் ஒருதன்மையினவென்றபடி.

சசஅ - ருு. பின்வரும்வாக்கியத்தில் இவ்வடிகளின்கருத்து அமைந்திருத்தல் காண்க; "காதலன் வீயக் கடுத்துய ரெய்திப், போதல் செய்யா வுயிரொடு புலத்தி, களியிரும் பொய்கை யாடுகர் போல, முளியெரி புகூஉ முதுக்குடிப் பிறந்த, பத்தினிப் பெண்டிர்" மணி. கஅ:கக - ருு.

(பி - ம்.) சருு. 'பொய்கையினியெரி'

களியெரி புகாஅ ராயி னன்பரோ
டெஞ்ஞாறை வாழ்க்கைக்கு நோற்றுடம் படுவர்
பத்தினிப் பெண்டிர் பரப்புநீர் ஞாலத்
தத்திறத் தாரு மல்லளெம் மாயிழை
நுo கணவற் குற்ற கடுந்துயர் பொரூஅண்
மணமலி கூந்தல் சிறுபுறம் புதைப்பக்
கண்ணீ ராடிய கதிரிள வனமுலை
திண்ணிதிற் றிருகித் தீயழற் பொத்திக்
காவலன் பேரூர் கனையெரி யூட்டிய
நிந மாபெரும் பத்தினி மகண்மணி மேகலை
யருந்தவப் பயித்த லல்ல தியாவதுந்
திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅ

சள. நோற்றுடம்படுவர் - கைம்மை நோன்பை நோற்று உடம்பை வருத்துவார். கைம்மைநோன்பு இன்னதென்பதைப் பின்வரும் மேற்கோள் களாலுணர்க ; "வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் கட்டை, வேலை வெள் தை வலசியாகப், பாற்பெய் பள்ளிப் பாயின்று வதியு, முயவற் பெண்டிர்" (புறநா. உசக), "இன்புறு தங்கணவ ரிடரெரி யகமூழ்கத், துன்புறுவன நோற்றுத் துயருறு மகளிரைப்போல்" சிலப். கஅ: நக.

சஅ பரப்புநீர் - கடல்.

சக. ஆயிழை - கண்ணகி.

நுக. சிறுபுறம் - பிடர்; "செயத்தகு கோவையிற்சிறுபுற மறைத்து" (சிலப். கu: கo2.) புதைப்ப - மறைப்ப; கூந்தல் அவிழ்ந்துகிடப்ப வென்றபடி.

நுஉ - ரு. முலைதிருகி - இடமுலையை வலக்கையாற்றிருகி; "இட முலை கையாற் றிருகி" (சிலப். உக: சரு.) அழற்பொத்தி - அழலைமூட்டி.

நுச. காவலன்பேரூர் - பாண்டியனது பெரிய ஊராகிய மதுரையை.

நுந. மாபெரும்பத்தினி - கண்ணகி.

நுசு. அருந்தவப்படுத்தலல்லது - செய்தற்கரிய தவவழியிற் சேர்த்தலே யன்றி. யாவதும் - சிறிதும்.

நுள. திருந்தாச்செய்கைத் தீத்தொழில் - பரத்தைமைத்தொழில்; "கள் ளும் பொய்யுங் காமமுங் கொலையு, முள்ளக் களவுமென் றுரைவோர் துறந் தவை, தலைமையாக் கொண்டநின் றன்மையில் வாழ்க்கை" என்று சித்திரா பதியைநோக்கி இராசமாதேவி பாத்தைமையை இழித்துச் சொல்லியதாகப் பின்னுங் கூறுவர்; உச; எள - கூ.

நுடு - ள. மணிமேகலை தவவழியிற் சேர்க்கப்படுவாளன்றிப் பரத்தை (பி - ம்.) சள.'நோற்றுடன் படுவர்' நுஉ. 'கண்ணீராட்டிய' நுசு 'அருந்தவம்படுத்தலல்லது'

ளாங்கன மன்றியு மாயிழை கேளா
யீங்கிம் மாதவ ருறைவிடம் புகுந்தேன்
சுo மறவண நீத்த மாசறு கேள்வி
யறவண வடிக ளடிமிசை வீழ்ந்து
மாபெருந் துன்பங் கொண்டுள மயங்கிக்
காதல னுற்ற கடுந்துயர் கூறப்
பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
சுரு பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்ன
தற்றே ருறுவ தறிகென் றருளி

மைத் தொழிலிற் சேர்க்கப்படுவானல்லன்; "மணிமே கலையை வான்றுய ருறுக்குங், கணிகையர் கோலங் காண தொழிக" சிலப். உள; கo டு - சு.

நுகூ. மாதவர் - பொறுத்த சங்கத்தார்.

சுo. மறவண நீத்த - பாவத்தற்மைகளைத் துறந்த; பாவங்கள் பத்து வகைப்படும்; காயத்திற்றோன்றுவன மூன்றும், சொல்லிற்றோன்றுவன நான்கும், உள்ளத்திற் றோன்றுவன மூன்றுமென; இதனை, "தீவினை யென்பது யாதென வினவின்,.....கொலையே களவே காமத் தீவிழை, வுலியா வுடம்பிற் றோன்றுவ மூன்றும், பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில், சொல்லெனச் சொல்லிற் றோன்றுவ நான்கும், வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சி யென், றுள்ளந் தன்னி னுருப்பன மூன்றுமெனப், பத்து வகையால்" (மணி. உச; கஉச - நக; ஒப்பு நo: சுரு - எஉ) எனப்பதனுணர்க.

சுநு. சூஉ - அறவண வடிகட்குக்கூற.

இனி, துக்கம், துக்கநிவாரணம், துக்கோற்பத்தி, துக்கநிவாரணமார்க்கமென்னும் வாய்மைகள் நான்கும் முறையே கூறப்படும்.

சுச. பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம் - துக்கம்.

சுரு. பிறவா ருறுவது பெரும்பேரின்பம் - துக்க நிவாரணம்.

சுசு. பற்றின் வருவது முன்னது - துக்கோற்பத்தி; "பற்றெனப் படுவது பசையிய வன்றே" மணி. நo: கூஉ.

சுசு - எ. பின்னது அற்றே ருறுவது - துக்கநிவாரணமார்க்கம்.

சுள. அறிகென்றருளி - துக்கமுதலிய வாய்மை நான்கினையும் அறிந்து கொள்வாயென்று உபதேசித்து; "துன்பந் தோற்றம் பற்றே காரண, மின்பம் வீடே பற்றிலி காரண, மொன்றிய வுரையே வாய்மைகான் காவது" (மணி. நo : கஅசு - அ). வாய்மை, சத்தியமென்று வழங்கப்படும்.

(பி - ம்.) நுகூ. 'உறைவிடம்புகுந்து' சுக. 'அறவணரடிகளடியிணை'

யைவகைச் சீலத் தமைதியுங் காட்டி
யுய்வகை யிவைகொளென் றுரவோ னருளினன்
எ0 மைத்தடங் கண்ணுர் தமக்குமெற் பயந்த
சித்திரா பதிக்குஞ் செப்பு நீயென
வாங்கவ ளுரைகேட் டரும்பெறன் மாமணி
யோங்குதிரைப் பெருங்கடல் வீழ்த்தோர் போன்று
மைய னெஞ்சமொடு வயந்த மாலையுங்
எடு கையற்றுப் பெயர்ந்தனள் காரிகை திறத்தென்.

உ.—ஊரலருரைத்தகாதை முற்றிற்று.

சுஅ. ஐவகைச்சீலம் - காமம், கொலை, கள், பொய், களவு என்னும் இவ்வைந்தையும் முற்றத்துறத்தல்; "கள்ளும் பொய்யுங் காமமுங் கொலையு, முள்ளக் களவுமென் றுரவோர் துறந்தவை" என்பர் பின்னும்; (உசா: எஎ - அ). "சீல நீங்காச் செய்தவத் தோர்க்கு" (உக: டுஎ), "சீலந் தாங்கித் தானந் தலைநின்று" (உசா: கசுஅ), "தானந் தாங்கிச் சீலந் தலை நின்று" (சு0: க)என இத்தூலுள்ளே சீலமென்பது பயின்றவருதல் காண்க.

சுசு. உய்வகை இவைகொளென்று - பிறப்பிறப்பினின்றும் தப்பும் வகை நால்வகைவாய்மையும் ஐவகைச் சீலமுமாகும்; இவற்றைக் கொள்வா யாகவென்று. உரவோன் - அறவண வடிகள்.

சுச - சு. வாய்மையும் சீலமும் இன்றியமையாதனவென்பதை, "வழுவாச் சீலம் வாய்மையிற் கொண்ட, பான்மையின்" (மணி. உசு:உ0-உக) என்பதனுலுணர்க.

எ0. மைத்தடங்கண்ணுர் - ஆயத்தார்.

எஉ - சு. பெறுதற்கரிய மாணிக்கத்தைப் பெரியகடலில் வீழ்த்திய வர்களே யொத்து; "அதுகேட்ட வரசனு நகரமு, மோங்கிய சுன்மணி யுறுகடல் வீழ்த்தோர், தம்மிற் றுன்பந் தானெயெய்த" சிலப். சு0:உசு-சு0.

எடு. கையற்று-செயலற்று. காரிகைதிறத்து-மாதவியிடத்தினின்றும்.

க - எடு. சுன்னுளில் மாதவிவாராத்துன்பம் மேல்வரச் சித்திராபதி இரங்கி வயந்தமாலையைக்கூவி அலரை மாதவிக்கு உரையென்றுசொல்ல,வய ந்த மாலை, மாதவியிருந்த மண்டபத்துச்சென்று கண்டு, வருந்தி, அனையாய், கேளாய், உண்டுகொல்! பண்பில்வாய்மொழி நாணுடைத்தென்ற வயந்த மாலைக்கு உரைக்கும் மாதவி, கேட்டு நின்று இழுக்குநாணுத்துறந்தேன்; மணிமேகலை தீத்தொழிற் படாஅள்; இன்னுங்கேள்; புகுந்து வீழ்த்து மயங்கித் தயரைக்கூற, உரவோன் அறிகென்றருளிக் காட்டி இவற்றைக் கொள்ளென்றருளினன்; இதனைக் கண்ணுர்தமக்கும் சித்திராபதிக்கும் நீ செப்பென்றுசொல்ல, வயந்தமாலையும்கேட்டு மணியைக் கடலில்வீழ்த்தோர் போன்று கையற்றுப் பெயர்ந்தனளென முடிக்க.

(பி - ம்.) சுஅ. 'சீலத்தமைவுங்' எஉ. 'ஆங்கவருரை'

மூன்றாவது

மலர்வனம்புக்ககாதை.

[மூன்றாவது மலர்வனம்புக்கபாட்டு.]

வயங்த மாலைக்கு மாதவி யுரைத்த
வுயங்குகோய் வருத்தத் துரைமூன் றோன்றி
மாமலர் நாற்றம் போன்மணி மேகலைக்
கேது நிகழ்ச்சி யெதிர்ந்துள தாதலிற்
நு றந்தையுந் தாயுந் தானனி யுழந்த
வெந்துய ரிடும்பை செவியகம் வெதுப்பக்
காத னெஞ்சங் கலங்கிக் காரிகை
மாதர் செங்கண் வரிவனப் பழித்துப்

க - உ. உரைத்த உரைமூன் தோன்றி - சொல்லிய சொல்லினிடமாக உதித்து.

ச. கன்மங்களாகிய காரணங்கள் தத்தம்பயனைக்கொடுத்தற்குத் தோற்றுதலை, 'ஏது நிகழ்ச்சி' என்பது பௌத்தநூல் வழக்கு; இதனை ஹேதுப்ரபவ தர்மமென்பர்; "ஏது நிகழ்ச்சி மீங்கிலை முதலின்" (கூ: நுக), "ஏது நிகழ்ச்சி யாவும் பலவுள" (கஉ:கபநு), "ஏது நிகழ்ச்சி யாவும் பலவுள" (உக: ககூo) என இந்நூலுள்ளே இப்பெயர் பின்பும் வருதல் காண்க. இஃது 'ஏது' எனவும் வழங்கும்: எதிர்ந்துளதாதலின்- தோற்றியதாதலால்; "சுணங்கெதிர்ளமுலை" மதுரை. சகசு.

உ - ச. மணிமேகலைக்கு ஏதுநிகழ்ச்சி மலர்காற்றம்போல் தோன்றி எதிர்ந்துளதாதலினென இயைக்க.

நு. தந்தையும் தாயும் -கோவலனும் கண்ணகியும். உழந்த - வருந்திய.

கூ. வெதுப்ப - சுட. எ. காரிகை - மணிமேகலை.

அ. மாதர்- காதல்; உரிச்சொல்; "மாதர்காதல்"(தொல். உரி.சூ. கo.) வரிவனப் பழித்து - மையெழுதிய அழகைச்சிதைத்து; "வரிவனப்புற்ற" புறநா. கூக.

(பி - ம்.) ச. 'ஏதுநிகழ்ச்சிசெய்திரந்துளது' நு. 'தாயருந்தாந்துயருழந்த', 'தாழ்துயருழந்த' அ. 'வனப்பழிந்து'

புலம்புநீ ருருட்டிப் பொதியவிழ் நறுமல
கஎ நிலங்கிதழ் மாலையை யிட்டுநீ ராட்ட
மாதவி மணிமே கலைமுக நோக்கித்
தாமரை தண்மதி சேர்ந்தது போலக்
காமர் செங்கையிற் கண்ணீர் மாற்றித்
தூநீர் மாலை தூத்தகை யிழந்தது
கடு நிகர்மலர் நீயே கொணர்வா யென்றலு
மதுமலர்க் குழலியொடு மாமலர் தொடுக்குஞ்
சுதமதி கேட்டுத் துயரொடுங் கூறுங்
குரவர்க் குற்ற கொடுந்துயர் கேட்டுத்
தணியாத் துன்பந் தலைத்தலை யெய்து
உஎ மணிமே கலைதன் மதிமுகந் தன்னு
ளணிதிகழ் நீலத் தாய்மல ரோட்டிய
கடைமணி யுகுநீர் கண்டன ஞயிற்
படையிட்டு நடுங்குங் காமன் பாவையை

கூ. புலம்புநீருருட்டி - வருத்தத்தாலுண்டாகியகண்ணீரை உதிர்த்து.

எ - கஎ. காரிகை அழித்து மாலையை நீராட்ட.

கஉ. தாமரை, எழுவாய். மதி - மதியை. தாமரைமலர் மாதவி கைக்கும், மதி மணிமேகலைமுகத்திற்கும் உவமை.

கஙு. காமர் - விருப்பம்.

கஜ. தூய நீர்மையையுடைய மாலையானது கண்ணீரில் நனைந்து தூயதன்மையையிழந்தது.

கடு. நிகர்மலர் - ஒளியையுடைய மலர்; "நீர்வார் நிகர்மலர் கடுப்ப" (அகநா. கக), "அரும்பவிழ் முல்லை, நிகர்மலர் நெல்லொடு தூஉய்" சிலப். கூ: க - உ.

கசு. மதுமலர்க்குழலி - மணிமேகலை.

கஅ. குரவர்க்கு - தாய் தந்தையர்க்கு.

உஉ. கடைமணி யுகுநீர் - கண்மணிக் கடையினின்றும் உகுகின்ற நீர்; "ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுட" சிலப். உ0: நிகா.

உஙு. படையை எறிந்துவிட்டுக் காமன் நடுங்குவான்.

(பி - ம்.) கூ. 'புலம்புநீருருட்டி' கஎ. 'இலங்குதண்மாலையை யிடு நீராட்ட', 'இங்நீராட்ட'

யாடவர் கண்டா லகறலு முண்டோ
உரு பேடிய ரன்றே பெற்றியி னின்றிடி
ஞங்கன மன்றியு மணியிழை கேளா
யீங்கிங் ஙகரத் தியான்வருங் காரணம்
பாரா வாரம் பல்வளம் பழுங்கிய
காராளர் சண்பையிற் கௌசிக னென்போ
கூ0 னிருபிறப் பாள னெருமக ஞள்ளே
னெருதனி யஞ்சே னோரா னெஞ்சமோ
டாரா மச்திடை யலர்கொய் வேன்றனே
மாருத வேகனென் பானேர் விஞ்சையன்
றிருவிழை மூதூர் தேவர்கோற் கெடுத்த
கூரு பெருவிழாக் காணும் பெற்றியின் வருவோன்
சூரன் மாலேயன் றமனியப் பூணினன்

உச. உண்டோ, ஓ எதிர்மறை.

உரு. பெற்றியின் - தம் இயற்கைத்தன்மை திரியாமல்; நின்றிடின் - இவனெவிரும்பாது நிற்பாராயின்.

உங - எ. யான்வருங் காரணத்தைக் கேளாய்.

உஅ - கூ. பாராவாரம் - கடல். பழுங்கிய - முழுகிற்ற; "பெருவளம் பழுங்" (புறநா. ஙகங) காராளர்-பூவைநியர். சண்பை - ஒரு ஙகரம்; சீகாழி யுமாம்; அங்ஙனாடடிற் கங்கைக்கரையிலுள்ளதாகிய சம்பையென் றுஙகர மூமாம்; இவ்வுரைக்குக் காராளரென்பதனைக் காராரென்பதை விகாரமாகக் கொள்க; காரானர் - ஒரு சாதியார்.

உக. மு: மணி. எ: கoஉ.

ஙக. ஒருதனி - ஒப்பில்லாததனி; பிக்கதனிமை.

ஙஉ. ஆராமம் - உபவனம்.

ஙங. விஞ்சையன் - வித்தியாதரன்.

ஙச. மூதூர் - காவிரிப்பூம்பட்டினம்.

ஙசு - எ. தாரன் - பூமாலேயையுடையவன்; மாலேயன் - மணிமாலே யையுடையவன்; 'தார மாலேயன்' எனப் பாடமோதி, மந்தாரமாலேயையுடை யவனெனினுமமை யும். தமனியப் பூணினன் - பொற் பூணினேயுடையவன்; பாரோர் காண - மக்கள் கண்ணிற்குப் புலப்படாத; பலர் தொழுபடிமை யன் - தேவர் பலருந் தொழும் தெய்வவடிவையுடையன்; படிமை - தெய்வ வடிவு; "தாரன் மாலேயன் தமனியப் பூணினன், பாரோர் காணப் பலர் தொழு படிமையன்" சிலப். கடு: கடுஎ - அ.

(பி - ம்.) உஅ. 'பாராவாரப்பல்வளம்' உக. 'காரானசனபை' ஙஉ. 'அலர்கொய்வேனே'

பாரோர் காணப் பலர்தொழு படிமைய
னெடுத்தன னெற்கொண் டெழுந்தனன் விசும்பிற்
படித்தன னுங்கவன் பான்மையே னுயினே
சு0 னுங்கவ னீங்கெனை யகன்றுகண் மாறி
நீங்கினன் றன்பதி கெட்டிடை யாயினு
மணிப்பூங் கொம்பர் மணிமே கலைதான்
றனித்தலர் கொய்யுந் தகைமைய ளல்லள்
பன்மல ரடிக்கிய ருன்மரப் பந்த
சுரு நிலவக் திகையி னெயிற்புறம் போகி
னுலக மன்னவ னுழையோ ராங்குளர்

கூகூ - எ. வருவோனும் படிமையனுமாகிய விஞ்சையன்.

கூஅ. எடுத்தமன் - எடுத்து. விசும்பிலெழுந்தனனென்க.

கூக. படுத்தனர் - அகப்படுத்திக்கொண்டான். அவன் பான்மையனு யினேன் - அவனுடைய இன்பத்தின் பகுதியையுடையேனுயினேன்; "பனி யிரு விசும்பிற் றேவர் பான்மையிற் றென்று சொன்னுள்" சீவக. முருகு.

சo - சக. ஆங்கவன் - மாருதவேகன். ஈங்கு-இக்கரத்திடத்து. கண் மாறி எனை அகன்று நீங்கினர் - விழுத்தகண இமைக்கும் அளவிலே மறைந்து என்னைவிட்டு நீங்கினன்; கண்மாறல - விழுத்த கண இமைக்குமாவிலே மறைதல்; "கண்மா முடவ ரொடுக்க மொழி" (மதுரை. ஊசூ.) தன்பதி கெட்டிடையாயினும் நீங்கினமென்னக் கூட்டுக. சுதமதியை மாருதவேகன் இக்கரத்திலிட்டு நீங்கினனென்பதை, "அஞ்செஞ் சாய லரான்தா ணத்து ளோர், விஞ்சைய னிட்ட விளங்கிழை யெனக்கூற, கடலென் பேருர்ப் பல்லோ ருரையினே" (மணி. கூ: உக - கூ) என்று உதயகுமரன் கூறியவாற்றுனு முணர்க.

சஉ. மணிப்பூங் கொம்பர் மணிமேகலை - மாணிக்கப் பூங்கொம்பு போலும் மணிமேகலை; எழுவாய்.

இனிப் பூக்கொய்தற்குரிய இடங்கூறுகின்றுள்.

சச - ரு. பலமலர்களை நிரைத்த கல்ல மரநிழலையுடைய இலவந்தி கையினது மதிலின் புறத்தே சென்றுல; மரப்பந்தர் - சோலையுமாம். இல வந்திகை - யாதிர வாவி; "நிறைக்குறி னிறைத்துப் போகுமிற் போக்கும், பொறிப்படை யமைந்த பொங்கில வந்திகை" (பெருங். க. சo: கூகக - உ); 'இலவந்திகை - நீராவியைக் குழ்ந்த வயந்தச்சோலை; அஃது அரசனும் உரிமையுமாடும் காவற்சோலை' (சிலப். கo: கூo - கூக) என்பர் அடியார்க்கு நல்லார்.

சசு. உலகமன்னவன் - சோழ ன். உழையோர் - பக்கத்திலுள்ளோர்.

(பி - ம்.) கூக. 'பான்மையளானேன்' சo. 'ஆங்கவனென்னை' சகூ. 'கொய்யுந்தன்மையளல்லள்' சச. 'நன்மலர்ப்பந்தர்'

விண்ணவர் கோமான் விழாக்கொ ணன்ஞண்
மண்ணவர் விழையார் வானவ ரல்லது
பாடுவண் டிமிரா பன்மரம் யாவையும்
நுo வாடா மாமலர் மாலிக டேக்கலிற்
கைபெய் பாசத்துப் பூதங் காக்குமென்
றுய்யா னத்திடை யுணர்ந்தோர் செல்லார்
வெங்கதிர் வெம்மையின் விரிசிறை யிழந்த
சம்பாதி யிருந்த சம்பாதி வனமுங்
நுடு தவாநீர்க் காவிரிப் பாவைதன் றுதை
கவேரனுங் கிருந்த கவேர வனமு
மூப்புடை முதுமைய தாக்கணங் குடைய

சள. ஞன்ஞண் - ஞன்ஞளில்.

சஅ. வானவரல்லது - தேவர் விரும்புதலியன்றி. அல்லது மண்ணவர் விழையாரென இயைக்க.

சகூ. தேவர்கள் விரும்பினமையால் மரங்களில் வண்டுகள் இமிராவாயின; "சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காத்தட், பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்" புநாது. சகூ - சு.

சகூ-நுo. மரம் யாவையும் மாலைகளைத் தூக்கலின்; தூக்குதல் - தொங்கவிடல். வாடாத மலர்மாலைகள், தேவர்களால் சிருஷ்டிக்கப்பட்டன; "வாடா மாலை வார்தளிர்ப் பிண்டி வாம" சீவக. நoகஅ.

நுக. கைபெய்பாசர் - கையினிடத்துக் கொண்ட பாசம். மரங்கள் வாடாமாலைகளைத் தூக்குதலால் பூதங்காத்தல் உணரப்பட்டது.

நுஉ. உய்யானம் - உத்தியானம்; அரசர் விளையாடுங் காவற்சோலை; "உய்யா னத்தி னுறுதுணை மகிழ்ச்சியும்" சிலப். கச : கஉள.

நுங. வெங்கதிர் - சூரியன்.

நுச. சம்பாதி - சடாயுவினுடன்பிறந்தவன். புள்ளிருக்குவேளூர் சம்பாதிபுரமென்று வழங்கப்படுதலாலும், காவிரிப்பூம்பட்டினத்திற்குச் சமீபமாக இருத்தலாலும், அது மூற்காலத்துச் சம்பாதிவனமாக விருத்தல் கூடுமென்று ஊகிக்கப்படுகின்றது.

நுடு - சு. தாதையாகிய கவேரன்; "கவேர கன்னிப் பெயரொடு விளங்கிய, தவாக்களி மூதூர்" எனப் பின்னும்; கூ: நுஉ - ஈ.

நுள. முதுமைய - முதுமையையுடைய. தாக்கணங்கு - நீண்டிவருத்தும் தெய்வம்; "தாக்கணங்கு, தானைக்கொண் டன்ன தடைத்து" (குறள். கoஅஉ), "வெம்முது பேய்க்கென் றுயிர்கொடுத்தேன்" என்று பின்னும் வருதல் காண்க; சு: கநo.

நுச - எ. சம்பாதிவனமும் கவேரவனமும் தாக்கணங்குடையன.

(பி - ம்.) நுச. 'சம்பாவனமும்'

யாப்புடைத் தாக வறிந்தோ ரெய்தா
ரருளு மன்பு மாருயி ரோம்பு
சுo மொருபெரும் பூட்கையு மொழியா நோன்பிற்
பகவன தாணையிற் பன்மரம் பூக்கு
மூவவன மென்பதொன் றுண்டத னுள்ளது
விளிப்பறை போகாது மெய்புறத் திடூம்
பளிக்கறை மண்டப மூண்டத னுள்ளது
சுரு தூகிற மாமணிச் சுட ரொளி விரிந்த
தாமரைப் பீடிகை தானுண் டாங்கிடி
னரும்பவிழ் செய்யு மலர்ந்தன வாடா

நிஅ. யாப்புடைத்தாக - உறுதியுடைத்தாக; யாப்பு - உறுதி; "யாப்பறை மாக்க ளியல்பிற் கொள்ளார்" சிலப். கசை: சுo.

நிகூ. அருள் - அன்புகாரணத்தால் தோன்றும்அளி; அன்பு - அருட்கு முதலாகி மனத்தின்கண் நிகழும் நேயம்.

சுo. பூட்கை - மேற்கோள்; "அறத்தாறு நுவலும் பூட்கை" (புறநா. கூ.)

சுக. பகவனது ஆணையின் - புத்தனது கட்டளையினாலே.

சுஉ. உள்ளது - உள்ளிடத்தது.

சுஎ - சு. விளிப்பு அறைபோகாது - ஓசை அறைபோகாமல். மெய்புறத்தி இடூம் - தன்னைச்சார்ந்தாருடம்பைமட்டும் புறத்தே தோன்றுவிக்கும். பளிக்கறைமண்டபம் - பளிக்கு மண்டபம்; தன்னுட் புகுந்தவர்களுடைய ஓசையை வெளிப்படுத்தாமல் அவர்களுருவத்தை மட்டும் வெளிப்படுத்துவதென்று அப்பளிங்கு மண்டபத்தின் தன்மைகூறியவாறு. விளிப்பறை, இருபெயரொட்டுமாம்; அறை - ஓசை.

சுஉ - சு. அதன் உள்ளதாகிய மண்டபமெனக்கூட்டுக.

சுஎ. அதனுள்ளது - அம்மண்டபத்தின் உள்ளிடத்தது.

சுரு - சு. மணிச்சுடரொளிவிரிந்ததாமரைப்பீடிகை - மாணிக்கச்சோதி பரந்த பதுமபீடம்; என்றது புத்தன் பாதபீடத்தை; புத்தன் பாதத்தை மணிபத்மமென்றலும் அதனை வழிபடுவோர் அதுபற்றி, 'ஓம் மணிபத்மே ஹூம்' என்ற மந்திரத்தை ஜபித்தலும் பௌத்தமத சம்பிரதாயம்.

சுஏ - சு. உள்ளதாகிய பீடிகையென்க.

சுசு. ஆங்கு இடின் - அப்பீடத்தே இட்டால்.

சுஎ. அவிழ்செய்யும் - அவிழ்தலைச் செய்யும்.

சுஎ - அ. தொல்யாண்டு கழிபினும் வாடா முசா வென்க. காலம் தோன்மையதாதலின், 'தொல்யாண்டு' என்றார்.

(பி - ம்.) சுஉ. 'அதினுள்ளது'

சுரும்பின மூசா தொல்யாண்டு கழியினு
மறந்தே னதன்றிற மாதவி கேளாய்
எ0 கடம்பூண்டோர் தெய்வங் கருத்திடை வைத்தோ
ராங்கவ ரடிக்கிடி னவரடி தாணுறு
நீங்கா தியாங்கணு நினைப்பில ராயிடி
னீங்கிதன் காரண மென்னை யென்றியேற்
சிந்தை யின்றியுஞ் செய்வினை யுறுமெனும்
எடு வெந்திற னேன்பிகள் விழுமங் கொள்ளவுஞ்
செய்வினை சிந்தை யின்றெனின் யாவது
மெய்தா தென்போர்க் கேது வாகவும்
பயங்கெழு மாமல ரிட்டுக் காட்ட
மயன்பண் டிழைத்த மரபின தறுதா
அ() னவ்வன மல்ல தணியியைழை நின்மகள்
செவ்வனஞ் செல்லுஞ் செம்மை தானிலண்

எ0. கடம்பூண்டு - முறைமையால் மேற்கொண்டு; "நிழல்வாய் நேமி, கடம்பூண் டுருட்டுங் கொளியர்" (சிலப். கடு: க - உ.) ஓர் தெய்வம் - ஒரு தெய்வத்தை.

எக. அவர் - அத்தேவருடைய; அடிக்கு ஆங்கு இடின் - அடியின்பொ ருட்டு (மலரை) அப்பீடத்தே இட்டால்; அவரடிதாணுறும் - (அம்மலர்) அத்தேவருடைய அடியை அடையும்.

எஉ. நினைப்பிலராய் இடின் யாங்கணும் நீங்காது.

எச - ரு. சிந்தையின்றியுஞ் செய்வினை யுறுமெனும் வெந்திறல் னோன் பிகள் - மனமில்லாதிருக்கவும் அறமும் பாவமுமாவாருமென்று சொல்லு கின்ற வெவ்விய திறலையுடைய விரதிகள். விழுமங்கொள்ளவும் - வருத்தங் கொள்ளவும்.

எசு - எ. சிந்தை யின்றெனிற் செய்வினை யாவதும் எய்தாது என் போர்க்கு ஏதுவாகவும் - மனமில்லையாயின் அறமும்பாவமும் சிறிதும் உள வாகாவென்று கூறுவோர்க்குக் குறியாகவும்.

எசு - எ. மனமுளதாயவழி வினையுமுளதாமென்பதும், மனமிலதாய வழி வினையுமிலதாமென்பதுமாகிய இவற்றை, நூகை, நூகை-ஆம் திருக்குறள் களாலும் அவற்றிற்குப் பரிமேலழகரெழுதிய உரையாலுமுணர்க.

எஅ. பயம் - பயன். எஙு. அது - அப்பீடிகை.

அக. செவ்வனஞ் செல்லும் - நேராகச்செல்லும்; வேறுகச்செல்லு மென்றுமாம்; "திருமக ளிருக்கை செவ்வனங் கழிந்து" சிலப். சு: கஉ.

(பி - ம்.) சுஅ. 'சுரும்புமூசா' சுகூ. 'மறந்தேனிதன்றிறமாதவிமகள் கேள்' எக. 'ஆங்கவனடிக்' எஅ. 'பைங்கெழுமாமலரிட்டுக்காட்டி'

மணிமே கலையொடு மாமலர் கொய்ய
வணியிழை நல்லா யாணும் போவலென்
றணிப்பூங் கொம்ப ரவளொடுங் கூடி
அரு மணித்தேர் வீதியிற் சுதமதி செல்வுழீஇச்
சிமிலிக் கரண்டைய னுழைகோற் பிரம்பினன்
றவலருஞ் சிறப்பி னராந்தா ணத்துளோ
னுணமு முடையு நன்கன நீத்துக்
காணு வுயிர்க்குங் கையற் றேங்கி
கூ0 யுண்ணு நோன்பொ டியவ லியானையின்
மண்ணு மேனியன் வருவோன் றன்னை
வந்தீ ரடிகணும் மலரடி தொழுமென
னெந்த மடிக ளெம்முரை கேண்மோ
வழுக்குடை யாக்கையிற் புகுந்த தும்முயிர்

அச. அவளொடும் - மணிமேகலையோடும்.

அசு. சிமிலிக்கரண்டையன் - உறியிலேவைத்த குண்டிகையையுடை யன்; "கல்பொளிந் தன்ன விட்டுவாய்க் கரண்டைப், பல்புரிச் சிமிலி நாற்றி" (மதுரை. சைஉ - கூ). நுழைகோற் பிரம்பினன் - நுண்ணிதாகத் திரண்ட பிரம்பையுடையன்.

அள. தவலருஞ்சிறப்பினராந்தாணத்துளோன் - கேடில்லாத மேன் மையையுடைய அராந்தாணத்தேயுள்ளான்; அராந்தாணம்—அருகத்தானம்; என்றது ஜினாலயத்தை; "அருஞ்செஞ் சாய லராந்தா ணத்துள்" மணி. ரு : உகூ.

அக. காணுவுயிர்க்குங் கையற்றேங்கி - நுண்ணிய உடம்பையுடைய உயிர்கட்கும் நடத்தல் இருத்தல் கிடத்தல் நிற்றல்முதலிய தன்முழில்க ளால் துன்பமுழுமோவென்று செயலற்று ஏங்கி.

கூ0. உயவல் - வருந்துதலையுடைய; "உயவற்பாண" புறநா. சுகூ.

கூக. மண்ணுமேனியன் - கழுவாத மேனியையுடையன். வருவோன் றன்னைநோக்கி.

கூகூ. கேண்மோ - கேளும்; ஓ, அசைநிலை; "மூதுமறை யந்தணிர் முன்னிய துரைமோ", "மாமறை மாக்கள் வருங்குலங் கேண்மோ"(கூ:ருசு, கூகூ) என இந்நூலுள்ளே பின்பு வருதல்காண்க.

கூச. அழுக்குடையாக்கையென்றன், மண்ணுமேனியாதலால்.

(பி - ம்.) அசு. நீர்மலிகரண்டையனுழைத்தோற்பிரம்பினன்' அள. 'அரந்தாணம்', 'அராந்தானம்' கூச. 'புகுந்தது', 'புகுந்து'

கூடு புழுக்கறைப் பட்டோர் போன்றுளம் வருந்தா
திம்மையு மறுமையு மிறுதியி லின்பமுந்
தன்வயிற் றருஉமென் றலைமக னுரைத்தது
கொலையு மூண்டோ கொழுமடற் றெங்கின்
விளைபூந் தேறலின் மெய்த்தவத் தீரே
கஂ0 யுண்டி தெளிந்திவ் யோகத் துறுபயன்
கண்டா லெம்மையுங் கையுதிர்க் கொண்மென
வுண்ணை நோன்பி தன்னெஞ்சு சூளுற்
றுண்மென விரக்குமோர் களிமகன் பின்னரும்

கூடு. புழுக்கறைப்பட்டோர் - புழுங்கச்செய்யும் அறையில் அகப்பட்டோர்.

கூ - டு. தும்முயிர் பட்டோர்போன்று உளம் வருந்தாதவண்ணம்.

கூசு - எ. இம்மைப்பயன்முதலிய மூன்றையும் தன்வயிற்றருஉம் (கூசு) தேறலெனவும், (கூஎ)உரைத்ததாகிய (கூக) தேறலென புமியைக்க ; தரூஉம் தலைமகனென இயைப்பினுமமையும்.

கஂ0. யோகமென்றது, அம்முனிவனது தவநெறியை ; மருந்துமாம் சேர்க்கையுமாம்.

கஂக. எம்மையும் கையுதிர்க்கொண்மென - தேறலையன்றி எம்மையும் அகற்றிவிடுமென்று. சிலநில்லாதவரைக்காணின், அவரோடு பேசாமல் அவரைப் போகும்படி கையசைத்துக் குறிப்பித்தல் சைனமுனிவர்க்கு இயல்பு ; இப்படியே "மையறு படிவத்து மாதவர் புறத்தெமைக், கையுதிர்க் கோடலின்" (கூ : நி-ச - கூ) எனப் பின்னும் வருதல் காண்க.

கஂஎ. உண்ணைநோன்பி - இரண்டு உவாவும் அட்டமியும் முட்டுப் பாடும் பட்டினிவிட்டுண்ணும் விரதி; என்றது சைனமுனிவனை; "பட்டினி நோன்பிகள்" (சிலப். கூ : கசுச.) நூலந்நூறு - சபதஞ்செய்து.

கஂக. உண்மென - உண்ணுமென்று. ஓர்களிமகன்பின்னரும் - ஒரு கட்குடியன்பின்னே நிற்போரும்.

அசு - கஂக. கரண்டையன், பிரம்பினன், உளோன் என்பன உண்ணு நோன்பிக்கு அடை ; "துறக்கங் கூடினும் துறந்திவ ணீங்கும், பிறப்போ வேண்டேன் யானெனக் கூறி,யார்த்த வாய நூர்க்களி மூர்க்கன், செவ்வழிக் கீதஞ்சிதையப் பாடி, யல்வழி வருமோ ரந்த ணாளனைச், செல்ல லாகா தில்லிவணீயென, வெய்தச் சென்று வைதவண் மிலக்கி, வழுக்கிலீள முண்ணு மிவ் வடிநரும் தேறலைப்,பழித்துக் கூறுநின் பார்ப்பனக் கணமது, சொல்லா யாயிற் புல்லுவென் யாரெனக்,கையலைத் தோடுமோர் களிமகற் காண்மின்" ; பெருங். க. சஂ0 : அஅ - கூஅ.

(பி - ம்.) கூடு. 'போன்றுவருந்தா' கூஎ. 'தன்மையிற்றரூஉம்' கஂக. 'கைவிதிர்க்கொண்மென' கஂஎ. 'நோன்பியைத்'

கணவிர மாலையிற் கட்டிய திரள்புயன்
கoருகுவிமுகி ழெருக்கிற் கோத்த மாலையன்
சிதவற் றுணியொடு சேணேங்கு நெடுஞ்சினைத்
ததர்வீழ் பொடித்துக் கட்டிய வுடையினன்
வெண்பலி சாந்த மெய்ம்முழு தூறீஇப்
பண்பில் கிளவி பலவொடு முரைத்தாங்
ககo கழூஉம் விழூஉ மாற்றுங் கூஉந்
தொழூஉ மெழூஉஞ் சுழலலுஞ் சுழலு
மோடலு மோடி மொருசிறை யொதுங்கி
நீடலு நீடி நிழலொடு மறலு
மைய லுற்ற மகன்பின் வருந்திக்
ககரு கையறு துன்பங் கண்டுநிற் குரருஞ்
சரியற் றுடி மருள்படு பூங்குழற்
பவளச் செவ்வாய்த் தவள வாணகை
யொள்ளரி நெடுங்கண் வெள்ளிவெண் டோட்டுக்
கருங்கொடிப் புருவத்து மருங்குவீ பிறைதுதற்

கoசு. கணவிரமாலை - அலரிமாலை; "கணவிர மாலை மகக்கொண் டென்ன" மணி. நு: சுஅ.

கoசு. சிதவற்றுணி - சிதிலவுடை.

கoசு - எ. சினைத் ததர் வீழ்பு - கிளைகளிலுள்ள செறிந்த சுள்ளிகள்; வீழ்பு - சுள்ளிகளுக்கு ஆகுபெயர்; ததர் - கொத்துமாம்; "சிதர்சினை முருக்கின் சேணேங்கு நெடுஞ்சினைத், ததர்" சிறுபாண். உருபு - நு.

கoஅ. வெண்பலி - வெண்ணீறு. சாந்தம் - சந்தனம்.

ககக. சுழலலுஞ்சுழலும் - சுழலுதலையுஞ் செய்வன். இவ்வாறு பின் வருவனவற்றிற்கும் இப்படியே பொருள்கொள்க; "இயங்கலு மியங்கு மயங்கலு மயங்கும்" சிலப். உரை : கஞ்சு.

ககச. மையலுற்றமகன் - பித்தன். ககசு. தாடி - மோவாய்.

ககஅ. வெள்ளிவெண்டோடு - சங்கினாற்செய்த காதணி.

ககக. கருங்கொடிப் புருவம் - கரிய ஒழுங்காகிய புருவம்; "கருங் கொடிப் புருவ மேரு" (சீவக. சுருஅ); இதனை, வடமொழியில் பூருலதா என்பதனோடு ஒப்பிடுக.

(பி - ம்.) கoச. 'கணவிரை', 'கணவிரிமாலை கட்டியதிரணியன்' கoஎ. 'பொழித்துக்', ககo. 'அரற்றிவ்வமர் றும்' ககக. 'சுழலினுஞ்சுழலும்' ககஉ. 'ஓடினுமோடும்' ககங. 'நீடினுநீடும்' ககச. 'மையலுற்று' ககஅ. 'வெள்ளிவண்டோட்டுக்'

கஉ0 காந்தளஞ் செங்கை யேந்திள வனமுலை
யகன்ற வல்கு லந்துண் மருங்கு
லிகந்த வட்டிடை யெழுதுவரிக் கோலத்து
வாணன் பேரூர் மறுகிடைத் தோன்றி
நீணில மளந்தோன் மகன்முன் ஞடிய
கஉரு பேடிக் கோலத்துப் பேகொண் குரும்
வம்ப மாக்கள் கம்பலை மூதூர்ச்
சுடிம ணேங்கிய நெடுநிலை மணிதொறு
மையறு படிவத்து வானவர் முதலா

கஉஉ. வட்டிடை - முழந்தாளளவாக உடுக்கும் உடையிடைசேடம்; "வட்டிடைப் பொலிந்த வண்ணக் கலாபமொடு, பட்டுச்சுமந் தசைந்த பரவை யல்குல்...வாசவ தத்தையை" (பெருங். உ. ச: கஉஉ - கூ) எழுதுவரிக் கோலம் - கொங்கை முதலியவற்றில் எழுதிய பத்திக்கற்று; "எழுதுவரிக் கோல முழுமெயு முறீஇ" சிலப். நு: உஉசு.

கஉங - ச. வாணன் - பாணாசுரன்; வேர் - சோரகரம்; நீணில மளந் தோன் - கண்ணன்; மகன் - காமன் (பிரத்தியும்னன்) "வாணன்பேரூர் மறுகிடை கடந்து, நீணில மளந்தோ ஞடிய" சிலப். கூ: நுச - நு.

கஉநு. பேடி - புறநாடகம் பதினெண்ணுள் ஒன்று; அப்பதினெண் னையும் அவற்றை நிகழ்த்தியவர்களையும் பின்வரும்வெண்பாவாலுணர்க; "கடையமயி ராணிமரக் கால்விளைத்த கந்தன், குடைதுடிமா லல்லியமற் கும் பஞ் - சுடர்விழியாற், பட்டமதன் பேடுதிருப் பாவையன் பாண்டரங் கங், கொட்டியிவை காண்பதினேர் கூத்து." இப்பேடி உழைகாரணமாக வாணனுற் சிறைவைக்கப்பட்ட தன்மகன் அநிருத்தனைச் சிறைமீட்டுக் காமன் சோரகரத்தாடியஆடல். மடமை - வாணன்மகள்.

ககசு - உநு. "ஆண்மை திரிந்த பெண்மைக் கோலத்துக், காம ஞடிய பேடி யாடலும்" (சிலப். கூ: நுச - எ), "சுருளிரு தாடி மருள்படு பூங்குழை, ஸரிபரந் தொழுகிய செழுங்கய லெடுங்கண், விரிவெண் டோட்டு வெண்ணை கைத் துவர்வாய்ச், சுடக வரிவளை யாடமைப் பணைத்தோள், வளரிள வனமுலைத் தளரியன் மின்னிடைப்,பாடகச் சீறடி யாரியப் பேடி" சிலப். உஎ: ககக - சூ.

கஉசு. வம்பமாக்கள் -புதியோர்; "வம்பமாக்க டம்பெயர் பொறித்த" (சிலப். நு: ககக.) கம்பலை - முழக்கம். மூதூர் - மூதூரில்.

கஉஎ. சுடிமண் ஞங்கிய - செங்கலாற் செய்யப்பட்டு உயர்ந்த; "சுடிம ணேங்கிய நெடுநகர் வரைப்பு" (பெரும்பாண். சஅநு),"சுடிம ணெடிமதில்" (பு—வெ. உழிஞை. ககூ), "சுடிம ணேறு.....கடிமனை" சிலப். கச: கசஞ - எ.

கஉ-அ. படிவம் - தெய்வவடிவம்.

(பி - ம்). கஉநு. 'பேடிகாண்குரும்'

வெவ்வகை யுயிர்களு முவமங் காட்டி
கஙo வெண்சுதை விளக்கத்து வித்தக ரியற்றிய
கண்கவ ரோவியங் கண்டுகிற் குரும்
விழவாற்றுப் படுத்த கழிபெரு வீதியிற்
பொன்னுண் கோத்த நன்மணிக் கோவை
யையவி யப்பிய நெய்யணி முச்சி
கஙரு மயிர்ப்புறஞ் சுற்றிய கயிறகடை முக்காழ்
பொலம்பிறைச் சென்னி நலம்பெறத் தாழச்
செவ்வாய்க் குதலை மெய்பெரு மழலை
சிந்துபு சின்னீ ரைம்படை நனைப்ப

கஙக - கஙக. சுதை * வண்ணச்சாந்து. வித்தகர் - ஈண்டு, சித்தசாரிகள்; "வித்தக ரியற்றிய விளங்கிய கைவினைச், சித்திரச் செய்கை படாம்"(மணி. ட: கசுள - ஈ); விளக்கத்தையுடைய சுதையாலியற்றிய ஓவியம்; ஓவியம் - சித்திரம். "எம்மகைச் செப்பியு முவமங் காட்டி, நுண்ணிதி னுணர்ந்த நுழைதகை மௌக்கிற், கண்ணுள வினைஞரும்" (மதுரை. கஙசு - ஈ); "மயனெனக்கொப்பா வகுத்த பாவையி, னீங்கே னியானா" மணி. உக: கஙஉ - ர.

கஙஉ. விழவு ஆற்றுப்படுத்த - விழவை வழிப்படுத்தினர்; நடத்தினர் என்றபடி; "முருகாற்றுப் படுத்த வுருகெழு பெயரர்" முருகு. உசஅ.

கஙச. ஐயவியப்பிய நெய்யணி முச்சி - வெண்சிறுகடுகையப்பிய நெய்யணிக்தமயிர்முடி; பேய்ப்பெண்டி வருத்தாவண்ணம் குழந்தைகளின் மயிர்முடியில் நெய்யணிந்து வெண்சிறுகடுகை அப்புதல் மரபு. வெண்சிறுகடுகிற்குக் கடிப்பகையென்னும் பெயர் வந்ததற்குக்காரணமிதுவே; கடி - பேய். "குறுகடைப் புதல்வர்க்குக், காவற் பெண்டிர் கடிப்பகை யெறிந்து, பூபங் காட்டித் தூங்குதுயில் வதியவும்" (எ: ருள - சு) எனவும், "அரவாய்க் கடிப்பகை யையவிக் கடிப்பகை" (எ: எகூ) எனவும் பிரிப்பு வருதல் காண்க; சதுர்திராபீடனென்பவனது தலையில் வெண்சிறுகடுகு அப்பியிருந்ததாக, 'காதப்பரி' என்னும் வடநூலிலும் கூறப்பட்டுள்ளது. முச்சி - உச்சியில்.

கஙரு - சு. கயிற்கடை - கொக்குவாய்; கோக்கும்வாயுமாம்; (கொக்கியென்று வழங்குகின்றது); "கயிற்கடை யொழுகிய காமர் தாமணி, செயத்தகு கோவை" (சிலப். சு: கoக - உ) முக்காழ் - மூன்று கோவையாகிய முத்துவடம். பிறைச்சென்னி - பிறை வடிவமாகிய ஆபரணத்தின் இரண்டு கோடுகள். செ ன்னி - சென்னியில். முக்காழ் தாழவென்க.

கஙஎ. 'மெய்பெரு மழலை' என்று ஈண்டுக்கூறியதுபோல, 'வினையா மழலை' என்றுபின்னுங்கூறுவர்; சு: கூகூ.

கஙஅ. ஐம்படை - ஐம்படைத்தாலி; காத்தற் கடவுளான திருமாலின் சங்கம் சக்கரம் கதை கடகம் சார்ங்கம் என்னும் ஐந்து ஆயுதங்களின் வடிவமாக அமைப்பது; இதனைப் பஞ்சாயுதமென்றும், ஐந்தாவது நாளில் பிள்ளை

வற்றங் காவாச் சுற்றுடைப் பூந்துகி
கசo ரொடித்தமணிக் கோவை யுடுப்பொடு தயல்வரத்
தளர்நடை தாங்காக் கிளர்பூட் புதல்வரைப்
பொலந்தேர் மீமிசைப் புகர்முக வேழத்
திலங்குதொடி கல்லார் சிலர்ஙின் றேற்றி
யாலமர் செல்வன் மகன்விழாக் கால்கோள்
கசரு காண்மி னேவெனக் கண்டுநிற் குரும்
விராடன் பேரூர் விசயனும் பேடியைக்
காணிய சூழ்ந்த கம்பலை மாக்களின்
மணிமே கலைதனை வந்துபுறஞ் சுற்றி

களுக்கு இதனைத் தாரணஞ் செய்தல் மரபென்றும் கூறுவர் வடநூலார். 'கிருஷ்யாத்நம்' என்னும் வடநூலில் இதற்குவிதி உள்ளது. "அமளித் தஞ்சு மைம்படைத் தாலிக், குதலைச் செவ்வாய்க் குறுநடைப் புதல்வர்" (எ: ருகூ - எ.) என்பர் பின்னும்; இது தாலியெனவும் தாலியைம்படை யெனவும் வழங்கும்; "தாலி கனைத்தன்று மிலனே பாலிட், டயினியு மின்ற யின் றனனே" (புறநா. எஎ), "எழிலார் திருமார்பிற் கேற்கு மிவையென், றழகிய வைம்படையு மாரமுங் கொண்டு, வழுவில் கொடையான் வயிச்சி ரவ ணன், ரொழுதுவனுய் ஙின்ருன் ருலேலோ, தூமணி வண்ணனே தாலேலோ" (பெரியாழ்வார்திருமொழி, க. ஈ: டு), "தாலி யைம்படை தவழு மார் பிடை" கம்ப. நாடு. டுஅ.

கசக - கூ. பொற்றேரின் மேலுள்ள யானையிற் புதல்வரை யேற்றி; "பொற்சிறு தேர்மிசைப் பைம்பொற்போதக,நற்சிறுரூர்தலின்" சீவக. அசு.

கசச. ஆலமர்செல்வன் - சிவபெருமான்; மகன் - முருகக்கடவுள்; "ஆலமர் செல்வன் புதல்வன் வரும்"(சிலப். உச: 'செறிவரை');சிறுரை முரு கக்கடவுளாக எண்ணினர். விழாக் கால்கோள் - விழாவின் தொடக்கம்.

கசரு. என - என்று சொல்ல.

கசஉ - சுரு. வீதியில் கல்லார்சிலர், கோவையையும் முச்சியையும் குதலையையும் மழலையையும் பூணியுமுடைய புதல்வரை வேழத்து மூக்காழ் தாழச் சின்னீர் நனைப்பத் துகில்துயல்வர ஏற்றிக் காண்மினெ வெருசொ ல்ல, அதனைக்கண்டு நிற்பவர்களும் எட்க.

கசஙு. பேரூர்-பேரூரில். விசயனும்பேடியை-அருச்சுனனுகியபேடியை.

கசஎ. காணிய-காண. கம்பலைமாக்கள்- வேறுசிலகாட்சிகண்டு முழங் ஙித் திரியுமவர்; "கம்பலை மாக்கள் கனவனைத்தாங் காட்ட" சிலப். கசு: உசு.

கசஅ. வந்து புறஞ்சுற்றி - பின்னரும் கண்டுநிற்குரும் காண்குரும் கண்டுநிற்குரும் கண்டுநிற்குரும் வந்து புறத்தேசூழ்ந்து.

(பி - ம்) கசo 'எடுப்பொடு' கசஉ. 'தேரதன்பிசை' கசஙு. 'சிலர் ஙன்றேற்றி' கசஙு. 'விசயப்பேடியை' கசஎ. 'கம்பலமாக்களின்'

யணியமை தோற்றத் தருந்தவப் படுத்திய
கரு0 தாயோ கொடிய டகவில ளீங்கிவண்
மாமலர் கொய்ய மலர்வனந் தான்புகி
னல்லிள வன்ன நாணு தாங்குள
வல்லுக கொல்லோ மடந்தை தன்னடை
மாமயி லாங்குள வந்து மூன்னிற்பன
கருரு சாயல்கற் பனகொலோ தைய றன்னுடன்
பைங்கிளி தாமுள பாவைதன் கிளவிக்
கெஞ்சல கொல்லோ விசையுக வல்ல
வென்றிவை சொல்லி யாவரு மினைந்துகச்
செந்தளிர்ச் சேவடி நிலம்வடு வுறுமற்
கசு0 குரவமு மரவமுங் குருந்துங் கொன்றையுந்
திலகமும் வகுளமுஞ் செங்கால் வெட்சியு
நரந்தமு நாகமும் பரந்தலர் புன்னையும்

கசகூ - ரு0. அணி யமை தோற்றத்து - ஆபரணங்க ளில்லாத தோ, றத்தையுடைய; "உப்பமை காமத் துப்பிலி" (கo௭) எனவும், "நிகரமைக் முழந்தாளும்" (கள௫) எனவும் சீவகசிந்தாமணியிலி 'அமை' என்பது இ பொருளில் வருதல்காண்க. அருந்தவப் படுத்திய - அரிய தவகெறியி, சேர்த்த. தாயோ - மாதவியோ. "மணிமேகலை, யருந்தவப் படுத்த லல்ல யாவதும், திருந்தாச் செய்கைத் தீத்தொழிற்படாஅள்" (உ: ரு - எ என்று மாதவி முன்பு கூறியிருத்தல் காண்க.

கரு0. இவர் - மணிமேகலை.

கரு௨ - ரு. ஆங்குள அன்னம் நாணு மடந்தை தன்னடை வல்லு கொல்லோவென இயைக்க.

கரு௭. இசையுக அல்ல - ஒப்பனவல்ல.

கரு௮. இனைந்து ூக - வருந்திச்சிந்த.

கரு௯. சேவடியும் நிலமும் வடுவுறுமல் ; மெல்ல நடந்தாளென்றபடி

கசு0. குரவம் - குராமரம். மரவம் - வெண்கடப்பமரம்.

கசுக. திலகம் - மஞ்சாடிமரம். வகுளம் - மகிழ்.

கசுஉ. நரந்தம் - நாரத்தை. நாகம் - நாகபுன்னை ; "நனைகினையவ நகுவிரையன நலமுடையன நாகம்" நீலகேசி.

(பி - ம்) கரு0. 'கொடியவர்' கருரு. 'சாயல கொல்லோ' கசு0 'குந்தமுங் கொன்றையும்'

பிடவமுங் தளவமு முடமுட் டாழையுங்
குடசமும் வெதிரமுங் கொழுங்கா லசோகமுஞ்
சுரு செருந்தியும் வேங்கையும் பெருஞ்சண் பகமு
மெரிமல ரிலவமும் விரிமலர் பரப்பி
வித்தக ரியற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே
யொப்பத் தோன்றிய வுவவனந் தன்னைத்
கஎ தொழுதனள் காட்டிய சுதமதி தன்னெடு
மலர்கொய்யப் புகுந்தனண் மணிமே கலையென்.

கூ.—மலர்வனம்புக்ககாதை முற்றிற்று.

சுரு. பிடவம் - குட்டிப்பிடவமென்னுங்கொடி. தளவம் - செம்முல்லை ; இதனைக் குறிஞ்சிப்பாட்டுரையாலுணர்க; "பனிவளர் தளவின் சிறுவாய்ச் செம்முகை" (ஐங்குறு. ரசஎ); "புதன்மிசைத் தளவி னிதண் முட் செங்நெ, நெருங்குகுலைப் பிடவமோ டொருங்குபிணி யவிழ" (அகநா. உரு); "குருதிக் கூரெயிறு கூத்தியர்கட் கொண்ட கொடித்தளவமே" (சீவக. கசுருக.) முடம் - வளைவு.

சுசு. குடசம் - வெட்பாலை விசேடம் ; வெதிரம் - மூங்கில் ; "குடசமும் வெதிரமுங் கொழுங்கொடிப் பகன்றையும்" சிலப். கரு: கருஎ.

சுசு. எரிமலரிலவம் - நெருப்பைப்போலச் சிவந்தபூவையுடைய இலவ மரம்; "எரியுரு வுறழ விலவ மலர" கலி. கூரு.

சுசுஅ. சித்திரச்செய்கைப்படாம் - சித்திரத்தொழிலமைந்த துகில்.

கஎ. தொழுதனள் காட்டிய - வனதேவதையைத் தொழுது உவவனத்தைக் காட்டிய ; புத்தனது பாதபீடிகையுள்ள வனமாதலால் அதனைத் தொழுதனளென்றுமாம்.

க - கஎக. மாதவியுரைத்த உரைமுன்றேன்றி மணிமேகலைக்கு ஏது நிகழ்ச்சி எதிர்ந்தனதாதலின் அக்காரிகை வெதுப்பக் கலங்கி அழித்து உருட்டி ஆட்ட மாதவி நோக்கி மாற்றிக்கொணர்வாயென்றலும் அதனைக் கேட்டுத் துயரொடுகூடும் சுதமதி 'நீர் கண்டனனுயிற் காமன் கடுங்கும் ; ஆடவர் அகறலுமுண்டோ, நின்றிடற் பேடியரன்றே, அன்றியும், யான் இக் ககரத்துவருங்காரணம் கேளாய், கொய்வேனி விஞ்சையன் எடுத்தனன், எழுந்தனன், படுத்தனன், ஆயினேன், அவன் ஈங்கு என்னையகன்று தன்பதி நீங்கினன், ஆதலால், மணிமேகலை தன்மையளல்லள் ; போகின், உழையோ ராங்குளர் ; செல்லார் ; எய்தார் ; உவவனமென்பதொன்றுண்டு ; உண்டு ; உண்டு ; மரபினது அதுதான் ; செம்மைதானிலள் ; யானும் போவல்' என்று கூடிச்செல்வுழி, பின்னரும் நிற்குரும் காண்குரும் நிற்குரும் நிற்குரும் மணிமேகலையைச்சுற்றி இனைந்தன, மணிமேகலை சுதமதிதன்னெடு மலர் கொய்யப் புகுந்தனளென முடிக்க.

நான்காவது

பளிக்கறைபுக்க காதை.

[நான்காவது மணிமேகலை உதயகுமரனைக்கண்டு பளிக்கறைபுக்கபாட்டு.]

பரிதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக்
கிருள்வளைப் புண்ட மருள்படு பூம்பொழிற்
குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட
மழலை வண்டின மல்லியாழ் செய்ய
நெ வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்
மயிலா டரங்கின் மந்திகாண் பனகாண்
மாசறத் தெளிந்த மணிநீ ரிலஞ்சிப்

க. செல்வனுடையதிர். கதிர்த்தானைக்கு-கிரணக்காகிய சேனைக்கு.

கூ. தும்பி குழலிசை கொளுத்திக் காட்ட - தும்பிகள் வேய்ங்குழலின் ஓசையைப் பொருத்திக்காட்ட ; தும்பி - வண்டிற்கிசைவு ஒருசாதி.

கூ - ச. இவ்வடிகளின் பொருள் "கொம்பர்த்தும்பி.....மல்லியாழ் செய்ய" (கசு: நெ - அ) என்று இற்றைட்பின்பு வற்திருத்தல் காண்க.

நெ. வெயில் நுழைபு அறியாப் பொதும்பர் - ஞாயிற்றின்கதிர்தோன்றிய காலத்தும் படிகிற்றகாலத்தும்புடைபடச் சிறிதும் செல்லுதலறியாத இளமரக்கா ; குயில் நுழை பொதும்பர் - இரவெருக்கத்தாலே குயில்கள் நுழைந்து செல்லும் இளமரக்கா ; "வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்" பெரும்பாண். [illegible].

ச - சு. பொழிற் காட்சிச் செய்ய மயில் ஆடுகிற்கும் பொதும்பராகிய அரங்கில் இருந்து காண்பனவாகிய மந்திகளைக் காண்பாயாக.

எ. மணிநீரிலஞ்சி - பளிங்குபோலும் நீரையுடைய பொய்கை ; நீல மணிபோலுநீரையுடைய இலஞ்சியென்றுமாம். இலஞ்சி - இலஞ்சியில்.

(பி - ம்.) க. 'பருதி' உ. 'வினைவண்டின', 'வளைப்புண்டென மருள் படும்' கூ - ச. 'கொழுந்திக்காட்ட மழலைவரிவண்டினம்' சு. 'மந்திகாண'

பாசடைப் பரப்பிற் பன்மல ரிடைதின்
ரொருதனி யோங்கிய விரைமலர்த் தாமரை
கo யரச வன்ன மாங்கினி திருப்பக்
கரைதின் ரூலு மொருமயி றனக்குக்
கம்புட் சேவற் கணைகுரன் முழவாக்
கொம்ப ரிருங்குயில் விளிப்பது காணு
யியங்குதேர் வீதி யெழுதகள் சேர்ந்து
கரு வயங்கொளி மழுங்கிய மாதர்தின் முகம்போல்
விரைமலர்த் தாமரை கரைதின் ரேங்கிய
கோடுடை தாழைக் கொழுமட லவிழ்ந்த
வால்வெண் சுண்ண மாடிய திதுகாண்
மாதர் நின்கண் போதெனச் சேர்ந்து
உo தாதுண் வண்டின மீதுகடி செங்கையி

க. ஒருதனி - ஒப்பில்லாதனி; "ஒப்புகடைய தாகையு ளொருதனிய ணுகி" (சீவக. டடo); "ஒருதனிரின்றும்" (சு : கசு), "ஒருதனி போங்கிய திருமலர்" (கரு : டட), "வினை...ஒருதனி பிருத்த திரு" (கசு : டகூ - சு), "உடக வறையி னொருதனியேபை" (கா : ஆச), "ஒருதனி ...மன்னவன்" (உ : உoசு) என 'ஒருதனி' எனபது இந்நூலுள்ளே பயின்று வருதல் காண்க.

அ - கூ. இவ்வடிகளிற்பொருள் கடு-ஆம் காதை எடு-சூ ஆம் அடிகளில் வந்துள்ளது.

கக. ஆலும் - சுழலும்; ஆலவாளித்தலைக்குமெ ரடமாம்; "மால்வரைச் சிலம்பின் மகிழ்ந்தாக் தாடும்,பின் மஞ்ஞையின்" பெரும்பாண். கூo-கூக.

கஉ. கம்புள் - சம்பங்கோழி. சேவலினது குரல் முழவிவாலியாக.

கஙூ. கொம்பர் - கொம்புகள். விளிப்பது - பாடுதல்; "விளியாதான் கூத்தாட்டு" (திரிகடுகம், கக), "பிரிந்தவரின்மிர்துழ்தீதம்" (சீவக. கஙூசக) என்புழி விளித்தல் இப்பொருள்பட்டு வருதல் காண்க.

கச. எழுதின்றதுகள்.

கள. சங்குகடக்தாற் போலுக தானையும் ; தூளா. காடு. கச.

கஎ. வால்வெண்சுண்ணம் - தூய வெள்ளிய சுண்ணம் ; "ஊர்தி வால்வெள் ளோமை" (புறநா. க.) இது-இத்தாமரைமலரினை.

கச - அ. முகம் சேர்ந்து ஒளிமழுங்கிய தின்முகம்போற் சுண்ணமா டியதாகிய இத்தாமரைமலரினைக் காண்பாயாக.

(பி - ம்.) கூ. 'இருமலர்த்' கக. 'கரைதின்றுடும்' கள. 'தோடுடைத் தாழைக் கொழுமடல் வீழ்ந்த'

னஞ்சிறை விரிய வலர்ந்த தாமரைச்
செங்கயல் பாய்ந்து பிறழ்வன கண்டாங்
கெறிந்தது பெருஅ திரையியழந்து வருந்தி
மறிந்து நீங்கு மணிச்சிரல் காணைனப்
உரு பொழிலும் பொய்கையுஞ் சுதமதி காட்ட
மணிமே கலையம் மலர்வனங் காண்புழி
மதிமருள் வெண்குடை மன்னவன் சிறுவ
னுதய குமர னுருகெழு மீதூர்
நீயா னடுங்க நடுவுநின் றேருங்கிய
கூ0 கூம்புமுதன் முறிய வீங்குபிணி யவிழ்ந்து
கயிறுகால் பரிய வயிறுபாழ் பட்டாங்
கிதைசிதைத் தார்ப்பத் திரைபொரு முந்நீ
ரியங்குதிசை யறியா தியாங்கணு மோடி
மயங்குகா லெறித்த வங்கம் போலக்

உரு. அதி, சாதியொருமை. இரை - முன்புகௌவியிருந்த உணவு.

உக - ங. அஞ்சிறைவிரிய எறிந்தென இயைக்க.

உச. மணிச்சிரல் - நீலமணிபோன்ற சிச்சிலிப்பதவை; "புலவுக்கய லெறித்த பொன்வாய் மணிச்சிரல்" சிறுபாண். கஅக.

ககூ - உச. நின்கண்ணிப் போதெய்தெண்ணி உண்ணவருகின்ற வண்டினங்களைக் கடியும் நின்செங்கைபோலத் தாமரைமலரிற்பாய்ந்து பிறழ்வனவாகிய செங்கயல்களைக்கண்டு எறிந்து அவற்றைப்பெறுமல் இரையையு மிழந்து வருந்தி மீண்டு நீங்கும் சிரலைக் காண்பாயாக.

உஎ. மருள், உவமவுருபு; "மதிமருள் வெண்குடை" (புறநா. களச.) மன்னவன் - சோழன்.

உஅ - கூ. உருகெழு மீது ஊர் நீயான் - அச்சம்பொருந்திய மேலிடத்தே ஊர்ந்திருக்கின்ற மாலுமி; நீயானென்பதற்குப்பொருள் மாலுமியென்பதை, "ஆழ்கடம் பௌவத் தருங்கல மியக்கு, நீயான் போல" (பெருங். க. சகூ: கூ - கo) என்பதனுணர்க.

ஙo. கூம்புமுதல் முறிய - பாய்மரம் அடியிலே முறியும்படி.

ஙo - ஙக. வீங்கு பிணி அவிழ்ந்து கயிறு கால்பரிய - இறுகின பிணிப் பவிழ்ந்து பாய்கட்டினகயிறு அறுபட.

ஙக - உ. வயிறு பாழ்பட்டு இதை சிதைத்து ஆர்ப்ப - நடுவிடம் பாழாகிப் பாய் பீறுண்டு ஒலிப்ப.

ஙச. சுழல் காற்றினால் அலைக்கப்பட்ட மரக்கலம்.

(பி - ம்.) உக. 'இரிய' உஅ. 'மூதூர்' உகூ. 'மீயான்', 'கனிதானடுங்க' ஙo. 'முரிய'

நடு காழோர் கையற மேலோ ரின்றிப்
பாகின் பிளவையிற் பணிமுகங் துடைத்துக்
கோவியன் வீதியுங் கொடித்தேர் வீதியும்
பீடிகைத் தெருவும் பெருங்கலக் குறுத்தாங்
கிருபாற் பெயரிய வுருகெழு மூதூர்
சo சொருபாற் படாஅ தொருவழித் தங்காது
பாகும் பறையும் பருந்தின் பந்தரு
மாதுல மாக்களு மலவுற்று விளிப்ப
நீல மால்வரை நிலனெடி படர்ந்தெனக்
கால வேகங் களிமயக் குற்றென

நடு. காழோர் - குத்துக்கோற்காரர் ; "காழோர், கடுங்களிறு கவளங் கைப்ப" (மதுரை. கூறுஅ - கூ.) கையற - செயலற. மேலோரின்றி - பாகரின்றி ; எஃபது பாகரை யிகியென்றபடி.

நசு. பாகின் பிளவையிற் பணிமுகம் துடைத்து - பாகனுலுண்டாகிய பிளவையினையுடைய பரியமுகத்தைக் கையாற்றுடைத்து. பிளவை - அங்கு சத்தாற் பிளக்கப்பட்ட புண் ; பாகனுடைய உடற்பிளவாலென்றுமாம்.

நஎ. கோவியன்வீதி - இராசப்பெருந்தெரு.கொடித்தேர்வீதி - கொடியணிந்த தேரோடும் வீதி.

நஅ. பீடிகைத்தெரு - கடைத்தெரு. பெருங்கலக்குறுத்து - பெரிய கலக்கத்தையுண்டாக்கி.

நஎ - அ. மு. கீலப். நடு: சo - சக. நஉ. மு. மணி. பதி. நஉ.

சக. பாகு - பாகன். பறை - பறையடிப்போர் ; யானைக்குமுன்பு பறை அடிக்கப்படுதல் மரபு; இதனை, "நிறையழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப், பறையறைந் தல்லது செல்லதக வென்னு, மிறையே தவமுடை யான்" (கலி. நடுசு) எஃபதனுணர்க.

சஉ. ஆதுல மாக்கள் - மிக்க வறுமையையுடையார். அலவுற்று - சுழன்று ; "நறையும் விரையு மோச்சியு மலவுற்று" (குறிஞ்சி. எ.) விளிப்ப - கூப்பிட.

சஙு. இல்பொருளுவமை.

சசு. காலவேகமெஃபது அவ்யானையின்பெயர் ; கட்டியங்காரனுடைய பட்டத்து யானையை அசனிவேகமென்றும், தடமித்தன் பட்டத்து யானையை வஜாயசுந்தரமெஃபறும் சீவகசிந்தாமணியிற் கூறியிருத்தல் காண்க. களிமயக்குற்றென - மதமயக்குற்றுத் திரிந்ததாக ; களி, மதத்திற்கு ஆகுபெயர்.

உகூ- சசு. நீயான் நடுங்கக் கூம்பு முதல்முறியக் கயிறுகால்பரிய இதை (பீ - ம்.) நசு. 'பாகின விழவிற்' நஎ. 'கோவியல்' சஉ. 'வாதுவ மாக்களும்' சசு. 'காலமேகம்'

சரு விடுபரிக் குதிரையின் விரைந்துசென் றெய்திக்
கடுங்கண் யானையின் கடாத்திற மடக்கி
யணித்தேர்த் தானையொ டாசிளங் குமரன்
மணித்தேர்க் கொடுஞ்சி கையாற் பற்றிக்
காரலர் கடம்ப னல்ல னென்ப
ருo தாரங் கண்ணியிற் சாற்றினன் வருவோ

சிதைத்தார்ப்ப முள்நீரில் யாங்கணும் ஓடி மயங்குகின்ற வங்கம்போலக் காழோர்கையறப் பாகன்முதலியோர் அலமுற்று விளிப்ப மூதூரில் மேலோரின்றித் துடைத்துப் பெருங்கலக்குமுத்து ஒருபாற்படாது ஒருவழித்தங்காது நீலமால்வரைபடர்ந்தெனக் காலிவ்வகம் களிமயக்குற்றதாகவென முடிக்க.

வங்கம் யானைக்கும், காற்று மதத்திற்குமுவமை. வங்கம்போலக் கால வேகம் களிமயக்குற்றலை வெனவியையும். இப்படியே, " வீங்குபிணி நோன்கயி றீஇயினத புடையூக், கூம்புமுதன் முருங்க வெற்றிக் காய்ந் துடன், கடுங்காற் றெடுப்பக் கல்பொரு துரைஇ, கெடுஞ்சுழிப் பட்ட காவாய் போல, விருதலைப் பணில மார்ப்பச் சினஞ்சிறந்து, கோலோர்க் கொன்று மேலோர் வீசி, மென்பிணி வன்றொடர் பேணுது காழ்சாய்த்துக், கன்றுநீத் துழிதருங் கடாஅ யானையும் " (மதுரை. கூஎசு - அங்) என வந்திருத்தல் காண்க.

சரு. பரிக்குதிரை; பரி - செலவு; " பகைப்புலங் கவர்ந்த பாய்பரிப் புரவி " மதுரை. சுஅசு.

சசூ. கடுங்கண் - தறுகண்மை; அது கடுகக்கொல்லுதல்; " கெடுஞ் சுழிப் பட்ட கடுங்கண் வேழத், தரவுச்சினம் தணித்து " (மலைபடு. சுஉரு - சுo) கடாத்திறம் - மதத்தின்கூறுபாடுகள்.

சஅ. கொடுஞ்சி - 'தாமரைப்பூவடிவமாகப்பண்ணித் தேர்த்தட்டின் முன்னே நடுவது' என்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர்; "கொடுஞ்சி கெடுக் தேர்" (மதுரை. எருஉ); "கெடுக்தேர்க் கொடுஞ்சி " புறநா. எஅ.

சசூ. காரலர் கடம்பன் அல்ல னென்பதை - கார்காலத்து அலர்கின்ற கடம்பின் அலராற்றெடுக்கப்பட்ட மாலையையுடைய முருகக்கடவுளல்ல னென்பதை; "கார்நறுங் கடம்பின்" (புறநா. உசு) என்பதனால் கடம்பு கார் காலத்திற்கு உரியதென்பதும், " பராஅரை மராஅத், தருள்பூந் தண்டார் புராஎ மார்பினன் " (முருகு. கo - கக) என்பதனால் முருகக்கடவுள் கடப்ப மாலையையுடையரென்பதும் அறியப்படும்.

ருo. ஆரங்கண்ணி - ஆத்திமாலை; இது சோழர்களுக்குரிய அடையாளமாலை; " ஆரங் கண்ணிச் சோழன் " சிலப். பதிகம், கூ.

சசூ - ருo. அழகாலும் ஆண்மையாலும் உதயகுமரனே முருகக்கடவுளென்றெண்ணிக் கடப்பமாலையின்மையானும் ஆத்திமாலையுண்மையானும் அவனைச் சோழன்மகனென்று கண்டோர்துணிந்தமையின் இவ்வாறு கூறப்பட்டது.

உள - ருo. மன்னவன்சிறுவன், உதயகுமரன், அரசிளங்குமரன், சென்

ஞடக மடந்தையர் நலங்கெழு வீதி
யாடகச் செய்வினை மாடத் தாங்கட்
சாளரம் பொளித்த கால்போகு பெருவழி
வீதிமருங் கியன்ற பூவணைப் பள்ளித்
நிரு தகரக் குழலா டன்னெடி மயங்கி
மகர யாழின் வான்கோடி தழீஇ
வட்டிகைச் செய்தியின் வரைந்த பாவையி
னெட்டி குமர னிருந்தோன் றன்னை
மாதர் தன்னெடி மயங்கினை யிருந்தோ

தெய்தி அடக்கிப்பற்றி அல்லனென்பதைச்சாற்றித் தானையொடு வருவோனென்க.

நிக. நாடகமடந்தையர் - நாடகக்கணிகையர் ; வீதி - வீதியில்.

நிஉ. ஆடகம் - நால்வகைப் பொன்னுள் ஒன்று. செய்வினை - செய்தொழில். மாடத்தாங்கண் - மாடத்திடத்தே.

நிங. கால்போகுபெருவழி - காற்றுச்செல்லும் பெரியவழி; கால்போகு பெருவழியாகிய பொளித்தசாளரம்.

நிச. வீதி மருங்கு இயன்ற - வீதியின் பக்கத்தே இயற்றிய. பூ அணைப்பள்ளி - மலரணையாகிய சேக்கையில்.

நிரு. தகரம் -மயிர்ச்சாந்து. தகரக்குழலாளென்றது,ஒரு கணிகையை.

நிசு. மகரயாழ் - நால்வகையாழுள் ஒன்று ; அது பதினேழு நரம்பு டையது. கோடு - யாழ்த்தண்டு ; "அங்கோட்டுச் செறித்த வவிழ்ந்துவீங்கு திவவு" (சிறுபாண். உஉஉ); "கருங்கோட்டுச் சீரியாழ்" (நெடுநல். எ0.) தழீஇ - தழுவி.

நிள. வட்டிகை - எழுதுகோல் ; "வட்டிகைச் செய்தியும்" (உ: உள) என்றார் மூன்னும்.

நிஅ. எட்டி - வைசியர் பெறும் பட்டப்பெயர் ; "எட்டிப் பூப்பெற் றிருமுப் பதித்தியாண், டொட்டிய செல்வத் துயர்ந்தோ ஞயினன்" (உஉ: ககச) என்பர் பின்னும் ; "எட்டி குமர னினிதி னியக்கு, மின்னெலி வீணைப் பண்ணெலி வெரீஇ" (பெருங். க. சo: ககசு - எ); "எட்டி காவிதிப் பட்டங் தாங்கி" (மதி உ. கூ: கசச); "எட்டிசாயல னிருந்தோன் றனது" (சிலப். கடு: கசுகூ); 'எட்டி காவிதி யென்பன தேய வழக்காகிய சிறப்புப் பெயர்' என்பர் (தொல். தொகை. சூ. கஉ) ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

நிகூ. மயங்கினை யிருந்தோய் - மயங்கியிருந்தோய்.

(பி - ம்.) நிகூ. 'சாளரமொழித்த', 'சாரலமொழிந்த' நிரு. 'தாதவிழ் குழலாள்' நிசு. 'மாதர்வீணையின்'

சுo யாதுநீ யுற்ற விடுக்க ணென்றலு
மாங்கது கேட்டு வீங்கிள முலையொடு
பாங்கிற் சென்று தான்றொழு தேத்தி
மட்டவி ழலங்கன் மன்ன குமரற்
கெட்டி குமர னெய்திய துரைப்போன்
சுருi வகைவரிச் செப்பினுள் வைகிய மலர்போற்
றகைகலம் வாடி மலர்வனம் புகூஉ
மாதவி பயந்த மணிமே கலையொடு
கோவல னுற்ற கொடுந்துயர் தோன்ற
நெஞ்சிறை கொண்ட நீர்மையை நீக்கி
எo வெம்பகை நரம்பி னென்கைச் செலுத்திய

சுo. இடுக்கண் - துன்பம்.

நிo - சுo. அங்ஙனம் வருவோன் வீதியில் மாடத்துப் பள்ளியிற் குழலாடன்னெடு மயங்கித் தரீஇப் பாவையினிருந்தோன் றன்னை, இருந்தோய், நீயுற்ற இடுக்கண்யாதென் றலுமென்க.

எட்டிகுமரன் வீதிமருங்கியன்ற சாளரச்சேக்கையிலிருந்தமையின், உதயகுமரன் அவனைக்கண்டான்.

சுஉ. பாங்கு - முறைமை. தொழுது - பணிந்து.

சுஙூ. மட்டு - தேன். சுசு. எய்தியது - நேர்ந்ததை.

சுo - சுசு. என்றலும் அதுகேட்டு எட்டிகுமரன் கணிகையொடுஞ் சென்று தொழுது ஏத்தி மன்னகுமாற்கு உரைப்போன்.

சுருi. செப்பினுள் வைகியமலர் புழுக்கத்தால் வாடும்; "மடைமாண் செப்பிற் றமிய வைகிய, பெய்யாப் பூவின் மெய்சா யினளே" குறுந்தo. கூ; பெருங். க. கூஙூ: எஅ - ஆம் அடியின் குறிப்பைப்பார்க்க.

சுசு. தகைகலம் - மிக்கவழகு.

சுஎ - அ. பயந்த - பெற்ற. மணிமேகலையைக் கண்டவுடன் எட்டிகுமரனுக்குக் கோவலனைடைந்தநம்பம் நினைவிற்கு வந்தமையின், 'மணிமே கலையொடு, கோவல னுற்ற கொடுந்துயர் தோன்ற' என்றான்; இப்படியே "இளங்கோன் கண்ட விளம்பொற் பூங்கொடி.....உருவி லாளனெ டிரு வம் பெயர்ப்ப" (நi: க - சு.) என்பர் பின்னும்.

சுசு. நெஞ்சு இறைகொண்ட நீர்மையை - மனம் தங்குதல்கொண்ட தன்மையை; "வண்டிறை கொண்ட கமழ்பூம் பொய்கை" மதுரை. உருசு.

எo. பகைநரம்பு - பின்தநரம்பிற்கு ஆறுவதும் மூன்றுவதுமாகிய நரம் புகள்; "பின்ற நரம்பிற் காறு மூன்றுஞ், சென்றுபெற நிற்பது கூட மாகும்" (சிலப். அ: கூகூ - சி. உரை.) கூடம் - பகை.

திதுயா னுற்ற விடும்பை யென்றலு
மதுமலர்த் தாரோன் மனமகிழ் வெய்தி
யாங்கவ டன்னையென் னணித்தே ரேற்றி
மீங்கியான் வருவே னென்றவற் குரைத்தாங்
எரு கோடுமழை கிழியு மதியம் போல
மாட வீதியின் மணித்தேர் கடைஇக்
காரணி பூம்பொழிற் கடைமுகங் குறுகவத்
தேரொலி மாதர் செவிமுத லிசைத்தலுஞ்
சித்திரா பதியோ டுதய குமரனுற்
அo றென்மேல் வைத்த வுள்ளத் தானென
வயந்த மாலை மாதவிக் கொருகாட்
கிளந்த மாற்றங் கேட்டே ஞதலி
ஞங்கவன் றேரொலி போலு மாயிழை

சுச - எக. உரைப்போன் மலர்போல் கலம்வாடி வடம்புகூடும் மணி மேகலையொடுகோவலனுற்ற துயர்தீர்ந்ததன் அத்துயரம் நீர்மையைநீக்கி என் கையைப் பகைகரம்பிற் செலுத்தியது ; யானுற்ற இடும்பை இதுவென்றலு மென்க.

எஉ. தாரோன் - உதயகுமரர். முனிவருடைய உறைவிடத்தைநீக்கி மலர்வனத்திற்குச் சென்ற மணிமேகலையை இனி எளிதிற் பெறலாமென்று மகிழ்ந்தான்.

எசு. அவள்தன்னை - மணிமேகலையை. எச. அவற்கு -எட்டிகுமரற்கு.

எடு. கிழியுமதியம் - கிழிதற்குக் காரணமாகிய மதியம். மதியம் போல - சந்திரன்போல ; கலங்கரம்பனமையின், உதயகுமரனுக்கு மதி உவ மையாயிற்று ; "நாட்செய் கிலகந்த கைவெண்மதி செல்வ தொத்தான்" (சீவக. சுருசு.) மாடங்கட்கு மழைமையும்,தேருக்கு மதியத்தையு முவமை யாக்கினும் பொருத்தும்.

எசு. கடைஇ - செலுத்தி; "காலியக் கன்ன கதிழ்பரி கடைஇ" மது மை. சுசo.

எள. கடைமுகம் - வாயிலிடம். குறுக - அடைய.

எஅ. மாதர் - மணிமேகலை. செவிமுதல் - செவியிடம்.

எக - அ. என்றலும் மகிழ்வெய்தி, 'அவனை என்தேரேற்றி இங்குவரு வேன்' என்று அவற்குரைத்து மதியம்போலத் தேரைக் கடைஇப் பொழி லின் கடைமுகங்குறுக, அதன்தேரொலி செவிமுதலிசைத்தலுமென்க.

அஉ. கிளந்த - சொல்லிய. அசு. ஆயிழை, விளி.

(பி - ம்.) எடு. 'கிழிக்கும்'

யிங்கென் செவிமுத லிசைத்ததென் செய்கென
அரு வழுதுறு நீஞ்சொ லாயிழை யுரைத்தலுஞ்
சுதமதி கேட்டுத் துளக்குறு மயில்போற்
பலிக்கறை மண்டபம் பாவையைப் புகுகென்
றெளித்தறை தாழ்கோத் துள்ளகத் திரீஇ
யாங்கது தனக்கோ ரைவிலின் கிடக்கை
கூo நீங்காது நின்ற நேரிழை தன்னைக்
கல்லென் ரூனையொடு கடிந்தோர் நிறுத்திப்
பன்மலர்ப் பூம்பொழிற் பகன்மூழ்த் ததுபோற்
பூமரச் சோலையும் புடையும் பொங்கருந்
தாமரைச் செங்கண் பரப்பினன் வரூஉ
கூரு மாசிளங் குமர ரருமி லொருசிறை
யொருதனி நின்ரு யுன்றிற மறிந்தேன்

அசு. என்செய்கு - யாதுசெய்வேன்.

அரு. அழுதுறு நீஞ்சொ லாயிழை - மணிமேகலை.

எக - அரு. உதயகுமரன் என்மேல் வைத்த உள்ளத்தானென்று வயந்தமாலை சித்திராபதியோடிற்று முன்னெருநாள் மாதவிக்குக் கிளந்தமாற்றத்தை நான் கேட்டேன்; ஆதலின், ஆயிழாய், என் செவிமுதலிசைத்த ஒலி, அவன் தேரொலிபோலும்; இதற்கு யான் யாதுசெய்வேனென்று மணிமேகலை யுரைத்தலுமென்க.

அசு. துளக்குறுமயில் - தளர்ச்சியுற்ற மயில்.

அள. மண்டபத்தில். பாவையை - மணிமேகலையை. புகுக என்று.

அஅ. இரீஇ - இருக்கச்செய்து.

அக. ஐந்துவிற்கிடை நீளத்தே நிற்றல் மரபு; "ஐவிலி னகல நின்றுய் கடிதொழு தினைஞ்சி னுறுகு"(சீவக. கoச.)"இருக்த மன்னவற் கெழுதோ லெல்லியுட், பொருத்தல் செல்லாது புக்கவ னினைஞ்ச"(க. சூள: நிரூ - சு) என்று எழு காலெல்லைகூறுவர், பெருங்கதை நூலாசிரியர்.

அசு - கூo. கேட்டு மண்டபத்திற் புகுகவென்றுபாவையையெழுதித் தாழ்கோத்து இருத்தி அதுதனக்கு ஐந்துவிற்கிடக்கையில் மயில்போல நின்ற நேரிழையாகிய சுதமதிதன்னை.

கூக. கடிந்தோர்: கடுமை - விரைவு. கூஉ. பகல் - நரியன்.

கூங. பொங்கர் - ஈண்டுக் கட்டுமலை ; மரக்கிளையென்றுமாம்.

கூச. பரப்பினன் - பாப்பி.

கூடு. ஒருசிறை - ஒருபக்கம் ; "வானவருறையும் பூரா ரொருசிறை" சிலப். கo: கடுஅ.

கூசு. திறம் - இயல்பு.

(பி - ம்.) அரு. 'அழுதூறு' அஅ. 'தாட்கோத்து', 'தாட்கட்கோத்து'

வளரிள வனமூலை மடந்தை மெல்லிய
ளரிடை யறியுந் தன்மையள் கொல்லோ
வினையா மழலை வினைந்து மெல்லியன்
கoo மூனெயி றரும்பி முத்துநிரைத் தனகொல்
செங்கய னெடுங்கண் செவிமருங் கோடி
வெங்கணை நெடுவேள் வியப்புரைக் குங்கொன்
மாதவ முறைவிட மொரீஇமணி மேகலை
தானே தமியளிங் கெய்திய துரையெனப்
கoரு பொதியறைப் பட்டோர் போன்றுளம் வருந்தி
மதுமலர்க் கூந்தற் சுதமதி யுரைக்கு
மிளமை நாணி முதுமை யெய்தி
யுரைமுடிவு காட்டிய வுரவோன் மருகற்

கூள. மெலலியல - மணிமேகலை.

கூஅ. தளரிடை - ஆடவர் காமத்தாற்றளார்ந்த சமயத்தை ; இடை - காலம்; "உடையோர்போல விடையின்று குறுகி" புறநா. ருச.

கூக. "வினையா மழலையின் விரித்துரை யெழுதி" சிலப். அ: கூள.

கoo. "முனைவள ரிளமுகையே முழுமதி புரைமுகமே" (சிலப். எ: கசு); "முனைபிர வெண்பல் முதுக்குறை நங்கை" மெடி. கடு: உoஉ.

கoஉ. வெங்கணை - விருப்பத்தைச் செய்யும் அம்பு.

கoக. மாதவர் - சுங்கத்தார் ; அறவணவடிகளென்றுமாம். ஒரீஇ - நீங்கி.

கoச. தமியள் - தனித்தவளாய்.

கூo - கoஎ. தானையொடு தேரைப் புறத்தே நிறுத்திப் பொழிலிற் பகல் மூளுந்தறுபோல் வருங்குமரன், சுதமதியைக்கண்டு, 'ஒருசிறை தனி நின்றாய், உன்றிறமறிந்தேன் ; மணிமேகலை அறியுந்தன்மையள் கொல்லோ; அவள் மூனெயிறு முத்துநிரைத்தனகொல; அவள்கண்கள் வேள் வியப் புரைக்குங்கொல ; அவள் மாதவருறைவிடத்தை யொரீஇத் தமியளாய் இங்கு எப்தியதற்குக் காரணமுரை' என்று கேட்பவென்க.

கoரு. பொதியறைப்பட்டோர் - முவாரமிலலாத மேறையில் அகப் பட்டோர் ; "போதார் பிதலிப் பொதியறை யோரென" சிலப். கo: ககக.

கoள - அ. இளமைநாணி முதுமையெய்தி உரைமுடிவுகாட்டிய வுர வோன்-இளமைப்பருவத்தைநாணி முதுமைப்பருவத்தையடைந்து, தம்முட் பகைமை கொண்டெவந்தாரிருவருடைய சொலலை ஆராய்ந்து அவற்றினைமுடி வை அவர்களுக்கு விளக்கிய அறிவுடையோனுகியகரிகாற்பெருவளத்தானென் னுஞ் சோழன்; இவ்வரலாற்றை அடியிலவரும் பழமொழிவெண்பாவாலும்

(பி - ம்.) கூஅ. 'தளர்நடையறியுந்தன்மையைகொல்லோ' கoரு. 'போன்றமெய்வருந்தி' கoஅ. 'மருமாற்கு'

கறிவுஞ் சால்பு மரசியல் வழக்குஞ்
ககo செறிவுளை மகளிர் செப்பலு முண்டோ
வினைய தாயினும் யானென்று இளப்பல்
வினைவிளங்கு தடக்கை விறலோய் கேட்டி
வினையின் வந்தது வினைக்குவிளை வாயது
புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது
ககரு மூப்புவிளி வுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடங் குற்றக் கொள்கலம்
புற்றடங் காவிற் செற்றச் சேக்கை

அதன் உரையாலுமுணர்க : உக.—"உரைமுடிவு ஏணு னினமையோ னென்ற, 'உரைமுது மக்க ளுவப்ப - உரைமுடித்துச், சொல்லான் முறை செய்தான் சோழன் குலவிச்சை, கலலாமற் பாகம் படும்" எ ற்பது—"தம் மூள் மறுதலையாயினு நிருவர் தமக்கு முறைமைசெய்யவேண்டி வந்து சில சொன்னுல் அச்சொன்முடிவுகண்டே ஆராய்ந்து முறைசெய்ய அறிவுநிரம் பாத இளமைப்பருவத்தானென்றிகழ்ந்த உரைமுதுமக்களுவக்கும்வகை உரைமுடித்துவந்து முறைவேண்டிவந்த இருதிறத்தாரும் சொலலிய சொற் கொண்டே ஆராய்ந்தறிந்து முறைசெய்தான் கரிகாற்பெருவளத்தானென் னுஞ்சோழன்; ஆதலால், தத்தம் குலத்துக்குத்தக்க விச்சைகள் கற்பதற்கு முன்னே செம்பாகமுளவா மெ ற்ளாறு." இவ்வரலாறு, "மூதியோ, ரவை புகு பொழுதிற்றம் பகைமுரண் செலவும்" (கஅள - ப) என்று பொருநராற் றுப்படையிலும் கூறப்பட்டிருக்கின்றது. உரவோன் மருகற்கு-கரிகாற்பெரு வளத்தான் வழித்தோன் றலாகிய உலக்கு; மருகன் - வழித்தோன் றல்; "உலக மாண்ட வுயர்ந்தோர் மருக" மதுரை. உக.

கoக. சால்பு - அமைதி. அரசியல்வழக்கு - அரசநீதி.

கo(கு - கo. அதுகேட்டு உளம்வருந்தியுரைக்குஞ்சுகமது மருகற்கு அறிவு முதலியவற்றை மகளிர்செப்புதலும் உளதாகுமோவென்றுணர்க.

ககக. இளப்பல் - சொலலுவேன். ககஉ. வினை - போர்.

இனி, மணிமேகலையை அவன் விரும்பாமலிருத்தற்கு உடம்பின் தாய் தன்மையைச் சொலலுவாள்.

ககங. வினையிர்வந்தது - கன்மத்தால் வந்தது. வினைக்குவிளைவாயது - கன்மத்திற்கு விளைநிலமாகவுள்ளது.

ககச. புனைவன - சந்தனம் மலர்முதலியனவு.

ககரு. மூப்புவிளிவுடையது - முதுமையையும் சாதலையுமுடையது. தீப்பிணி யிருக்கை - கொடியநோய்களுக்கு இருப்பிடமாகவுள்ளது.

ககள. அரவு அடங்கு புற்றினென இயைக்க. செற்றம் - பகைமை நெடுங்காலநிகழ்வது. சேக்கை - தங்குமிடம்.

(பி - ம்.) ககஉ. 'கேண்' ககரு. 'மூத்த' தீ

ச.—பளிக்கறைபுக்ககாதை. நிங

யவலக் கவலை கையா றழுங்க
றவலா வுள்ளந் தன்பா லுடையது
கஉ0 மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து
மிக்கோ யிதனைப் புறமறிப் பாரா
யென்றவ ளுரைத்த விசைபடி தீஞ்சொல்
சென்றவ ணுள்ளஞ் சேரா முன்னர்ப்
பளிங்குபுறத் தெறிந்த பவளப் பாவையி
கஉடு னிளங்கொடி தோன்றுமா லிளங்கோ முன்னென்.

ச.—பளிக்கறைபுக்ககாதை முற்றிற்று.

ககஅ. அவலம் - வருத்தத்தோன்றி நிற்றல்; கவலை-யாதுசெய்வலென்றல்; கையாறு - மூர்ச்சித்தல்; அழுங்கல் - வாய்விட்டழுதல்; இம்மூன்றும் அரற்றெனப்படும்.

ககஅ - கூ. அவல முதலியனைகள் நீங்காததாகிய உள்ளத்தினைத் தன்னிடத்தே உடையது.

கஉ0. யாக்கை இதுவென் - யாக்கை இத்தன்மையதென்று; இதுவென்றது, 'வினையின் வந்தது' என்றது முதலியவற்றை.

கஉக. இதனை - இவ்வுடம்பை. புறமறிப்பாரா - புறமறியாகப் பார்ப்பாராக; பார்ப்பின், இதன் நோய்தன்மை விளங்குமென்றபடி; "மற்றதனைப் பைம்மறியாப் பார்க்கப் படும்"(நாலடி. சஉ); "பைம்மறியா நோக்கப் பருந்தார்க்குந் தகைமைத்து" இறை. கூ. க - உரை.

கஉஉ. அவள் - சுதமதி.

கஉச. "பளிங்குபுறத் தெறிந்த பவளப் பாவை" (மணி. கஅ: எஅ); "பளிக்கறைப் பவழப் பாவை பரிசெனத் திகழுஞ் சாயல்" சீவக. ககூ..

கஉடு. தோன்றும் - தோன்றுகின்றாள்.

கஉஉ - டு. என்று அவள் உரைத்தசொல் அவளுள்ளம் சென்று சேரா முன்னர்; இளங்கொடி பாவைபோல இளங்கோமுன் தோன்றுமென்க.

க - கஉடு. காண்பனகாண் காணுய்காண் காண் காணெனச் சுதமதி காட்ட மணிமேகலை வஞ்சிகாண்புழி, மன்னவன்சிறுவன் உதயகுமரன் அரசிளங்குமரன் வருவோன், இருந்தோன்றன்னை, இருந்தோய், யாதென்றலும், உரைப்போன், என்றலும், மகிழ்வெய்தி உரைத்துக் கடைஇக் குறுகத் தேரொலி இசைத்தலும் என்செய்கென்வுரைத்தலும் கேட்டு இரீஇ நின்ற கோழைதன்னை, நின்முய், அறிந்தேன்; தன்மையள்கொல்லோ, நிரைத்தனகொல், உரைக்குங்கொல், உரையென, சுதமதி, செப்பலுமுண்டோ; கிளப்பல்; கேட்டி என்று உரைத்தசொல் சேராமுன்னர் இளங்கொடி தோன்றுமெனமுடிக்க.

(பி - ம்.) ககஅ. 'கையாற்றழுங்கல்'

ஐந்தாவது

மணிமேகலாதெய்வம்

வந்துதோன்றியகாதை.

[ஐந்தாவது மணிமேகலை உதயகுமரன்பால் உள்ளத்தாளென
மணிமேகலைதனக்கு மணிமேகலாதெய்வம்
வந்துதோன்றியபாட்டு.]

இளங்கோன் கண்ட விளம்பொற் பூங்கொடி
விளங்கொளி மேனி விண்ணவர் வியப்பப்
பொருமுகப் பளிங்கி னெழினி வீழ்த்துத்
திருவின் செய்யோ ளாடிய பாவையின்
விரைமல ரைங்கணை மீன விலோதனத்
திருவி லாளனெ டிருவம் பெயர்ப்ப

க. இளங்கோன் - உதயகுமரன். பொற்பூங்கொடி - காமவல்லி போன்ற மணிமேகலை.

உ. விளங்கொளி மேனி விண்ணவர் - தேவர்; மணி. சு: ம - கo.

ஊ. பொருமுகப் பளிங்கின் எழினி - பளிங்காகிய பொருமுகவெழினியை; எழினி - திரைச்சீலை; பொருமுகவெழினி - மூவகைத் திரைச்சீலைகளுள் ஒன்று; "ஒருமுக வெழினியும் பொருமுக வெழினியுங், கரந்துவர லெழினியும் புரிந்துடன் வகுத்த" சிலப். கூ: கoம - கo.

எ. திருவின் செய்யோள் - இலக்குமி; இன், சாரியை; "செம்மலர்த் திருவின்பாவாய்" (சீவக. கூகஅ) என்புழிப்போல. பாவை - பதினேராடலுள் ஒன்று; அஃது, போர்செய்தற்குச் சமைக்குங் கோலத்தோடு அசுரர் மோகித்து வீழும்படி ஒகல்லிப்பாவைவடிவாய்த் திருமகள் ஆடியது; இதனை, "செருவெங் கோல மகுணர் நீங்கத், திருவிற் செய்யோ ளாடிய பாவையும்" (சிலப். சு: கo - ஙக) என்பதனுணர்க; "பாவை திருமக ளாடிற் றதற்குறுப், போவாம லொன்றுடம் பொர்றது." பாவையின்-பாவைபோல; பாவையாடிய திருமகர்போல வெனினும் பொருந்தும்.

ஏ. மலரைங்கணை - மலராகிய ஐந்திபாணம். விலோதனம் - கொடி.

ஐ. உருவிலாளன் - அநங்கன்; 'உருவி லாளனெ டிருவம் பெயர்ப்ப' என்பதற்கு இவளுருவத்தைக் காண்பவர்களுக்கு உடனே மன்மதபாதை உண்டாகின்றதென்பது கருத்தாகக்கொள்க; மணி. சு: எள - அ பார்க்க.

(1 - ம்.) நி - சு. 'விலோதத்திருவிலாளுருவம்

நி.மணிமேகலாதெய்வம் வந்துதோன்றியகாதை.நிநி

வோவிய னுள்ளத் துள்ளியது வியப்போன்
காவியங் கண்ணி யாகுத லெளிந்து
தாழொளி மண்டபத் தன்கையிற் றடைஇச்
கo சூழ்வோன் சுதமதி தன்முக நோக்கிச்
சித்திரக் கைவினை திசைதொறுஞ் செறிந்தன
வெத்திறத் தாணின் னிளங்கொடி யுரையெனக்
குருகுபெயர்க் குன்றங் கொன்றோ னன்னநின்
முருகச் செவ்வி முகந்துதன் கண்ணுற்
கடு பருகா ளாயிற் பைந்தொடி நங்கை

க - சு. பூங்கொடி, பாவையின் உருவிலாளனுடு உருவம் பெயர்ப்ப வென்க.

எ. ஓவியன் - சித்திரமெழுதுவோன்; உள்ளியது - சித்திரம் எழுதுவதற்காக நினைந்ததை; மணிமேகலையுருவத்தைச் சித்திரமென்று கருதினு னென்றவாறாயிற்று; இது "சித்திரக் கைவினை திசைதொறுஞ் செறிந்தன, வெத்திறத் தாணின் னிளங்கொடி யுரையென" (நு: கக - உ), "மேவிய பரிங்கின் விருகுறிற் பாவையிற்", "தாவியச செய்தியென் றெழிவேன் முன்னர்" (கஅ: சுசு - எ), "ஈங்கிம் மண்ணீட் டியாரென வுணர்கேன்" (கஅ: கடுசு) எனப் பின் வருவனவற்றால் துணியப்படும். வியப்போன் - ஆச்சரியமடைவோன்; இது பெயர்; இனி, 'ஓவியன்' எ றபதற்கு உதயகுமரன் ஆச்சரியத்தால் சித்திரம் போன்றவனுய் நின்றென்றும், 'அது' என்பதற்கு அவ்வடிவத்தையென்றும் பொருளுரைப்பினும் பொருதும்.

அ. காவியங்கண்ணியாகுதல - மணிமேகலையாதலை.

எ - அ. வியப்போன் தெளிகதென்க.

கூ. தாழ் ஒளி மண்டபம் - தங்கிய ஒளியையுடைய பளிக்குமண்டபத்தை. தடைஇ - தடவிப்பார்த்து; மண்டபத்துள்ளே செலலக் கருதிய வன் வாயில் காணுதற்கு முயலுகின்றன்.

கஉ. எத்திறத்தாள் - என்ன இயலபையுடையாள; நின் இளங்கொடி எத்திறத்தாளென்க.

கo - கஉ. சூழ்வோன் நோக்கி உரையென.

கசு. குருகுபெயர்க்குன்றம் - இரவுஞ்சகிரி. கொன்றோன் - முருகக் கடவுள்; "குருகு பெயர்க்குன்றங் கொன்ற கெடுவேலே" (சிலப். உசு: 'சாவண'); "குருகு பெயர்க்குன்றங் கொன்றோன் மடவன்" ஷெ. ஷெ 'ஆய்வளை'

கச. முருகச்செவ்வி - இளமைப்பருவத்தின் அழகை.

கடு. ஆயின் - ஆராய்மிடத்து.

கச - டு. நங்கை நின் செவ்வியைப் பருகாளெனவியைக்க.

(பி - ம்.) கூ. 'தாளொலி' கக-உ. 'சித்தரவொத்தாணின்' கச. 'முருகற்செவ்வி' கடு. 'பருகாளாயினிப்'

யூழ்தரு தவத்தள் சாப சரத்தி
காமற் கடந்த வாய்மைய ளென்றே
தூமலர்க் கூந்தற் சுதமதி யுரைப்பச்
சிறையு முண்டோ செழும்புனன் மிக்குழீஇ
நிறையு மூண்டோ காமங் காழ்கொளிற்
செவ்வியு ளாயினென் செவ்வியு ளாகென
வவ்விய நெஞ்சமொ டகல்வோ ளுயிடை
யஞ்செஞ் சாய லராந்தா ணத்துளோர்
விஞ்சைய னிட்ட விளங்கிழை யென்றே
கல்லென் பேரூர்ப் பல்லோ ருரையினே
யாங்கவ ருறைவிட நீங்கி யாயிழை
யீங்கிவ டன்னே டெய்திய தூரையென

கசு. ஊழ - முறை ; பொதுத்தர்களுக்கு ஊழ்வினை உடன்பாடாகலின், ஊழ்வினையால் தரப்பட்ட தவத்தையுடையளென்றுமாம். சாப சரத்தி - சாபமாகிய அம்பையுடையாள் ; சாபம் - சபித்தல்; வில்லையும் அம்பையு முடையளென்றும் ஒருபொருள் தோன்றிற்று. தவத்தினரைச் சாபசரரென்பர் வடநூலார்.

கக. செழும்பு னல் மிக்குழிச் சிறையுமுண்டோ - வளவியபுனல் மிக்க விடத்து அதனைத் தாங்கும் அரணுமுண்டோ; இல்லையென்றபடி; "நீர் மிகிற் சிறையு மில்லைத் தீயிகி, னன்னயிர் நிழற்று நிழலு மில்லை" (புறநா. நுக.), "நீர்மிகி னில்லை சிறை" பழ. ககo.

ஸ்ர ககூ - உo. "சிறையெனப்பதிலிலேச்செல்வே செம்புனல்பெருகுமாயி, னிறையெனப்பதில்லைக் காமனேர்கின்று சிதக்குமாயின்" சூளா. கல். கருடு.

உo. காமம் காழ் கொளின் நிறையும் உண்டோ - காமம் அடிப்படின் அதனை நிறுத்துந்தன்மையும் உளதாகுமோ; காழ் - வைரம். நிறை - நிறுத்தும் தன்மை; "பிறிது மாகுப காமங் காழ்கொளிற்பின்" குறுந். கஎ.

உஉ. ஒருவியம் - பிறர்க்கு இவள் உரியளாதல கூடுமோவென்பதால் உளதாகிய பொருமை. ஆயிடை - அப்பொழுது.

உசு. அஞ்செஞ்சாயல், விளி ; என்றது சுதமதியை. அராந்தாணம்: மணி. ரு : அஎ.

உள. விஞ்சையன் - வித்தியாதரன்; என்றது மாருதவேகனை.

உடு. உரையினை - சொல்லியுடையாய்.

உசு - டு. அராந்தாணத்திற் சுதமதி மாருதவேகனுல் இடப்பட்டா ளென்பதை, "என்மக ளிருந்த விடமென் றெண்ணித், தீர்ஞறு தன்பக் தாங்காது புகும்து, சமணீர் காணுஞ் சரலென் றோனே" (மணி. நு: நுo - நுஉ) என்பதனுலுமுணர்க.

உஎ. உரையெனல் - சொல்லென்று உதயகுமரன் சொல்ல.

(பி - ம்). கசு. 'தவத்தர் சாபச்சாதலி', 'தவத்தான சாபதி சாத்தி' கஅ. 'தூஉலர்' உo. 'காழ்க்கொளிற்' உக. 'ஆயினின்ன செவ்வியளாக் கென' உஉ. 'ஆயிழை'

வார்கழல் வேந்தே வாழ்கநின் கண்ணி
தீதெறிப் படாஅ தெஞ்சினே யாகுமதி
யீங்கிவ டன்னே டெய்திய காரணம்
வீங்குநீர் ஞால மாள்வோய் கேட்டருள்
யாப்புடை யுள்ளத் தெம்மனை யிழக்தோன்
பார்ப்பன முதுமகன் படிம வண்டியன்
மழைவளக் தரூஉ மழலோம் பாளன்
பழவினைப் பயத்தாற் பிழைமண மெய்திய
வெற்கெடித் திரங்கித் தற்றக வுடைமையிற்
குரங்கு செய்கடற் குமரியம் பெருந்துறைப்
பாக்துசென் மாக்களொடு தேடினன் பெயர்வோன்
கடன்மண்டு பெருக்துறைக் காவிரி யாடிய

உஅ. "வாழுகதுங் கண்ணி மாஅதா" ஐவக. கஅகo.

உக. படாஅ - செல்லாத. நெஞ்சினே யாகுமதி - நெஞ்சையுடையா யாக ஆகக்கடவாய்; மதி, முன்னிலையசை.

ஈo - ங க. காரணம் கேட்டருள்.

ஈஉ. யாப்பு - உறுதி. எம்மனை - எம் அன்னை; "எம்மனை காணுய்" (சு: கஉக) என்பர் பின்னும்; "எம்மனை தமிழை யாகி" சீவக. ஈகடு.

ஈக. படிமவண்டி - ஒருாற்றப்பட்டினி விட்டுண்ணும் உணவு; "படிம வண்டிப் பார்ப்பன மகனே" குறுந். கடுங்.

ஈடு. மாறுதலேகையுக்குத் தான் சில காள் உரியளாளதுபற்றி, 'பிழைமண மெய்திய' என்றார்; "ஒத லந்தணர்க் கொவ்வே ஞயினும்" (டு: சஈ) என்றது பிள்ளைத்தல் காண்க.

ஈ ஈ. எற்கெடித்து இரங்கி - என்னைக் காணப்பெறாது இரங்கி; "அரசுகெடித் தலம்வரு மல்லற்காலே" (சிலப். சு: அ.) தன் தக உடைமை யின் - தன்னைத்தக்கிருக்கும்படி உடைமையினையே.

ஈஎ. குமரி - கன்னியாகுமரி.

ஈஏ - அ. குற்றமுற்ற குலமகளிர் அக்குற்றத்தைப் போக்குதற்பொ ருட்டுக் குமரியாட்டச் செல்லுதல் மரபாதலால், இவள் கன்னியாகுமரியாற் றிற்குச் செல்லவர்களோடு சேர்ந்து சுதமதியைத் தேடிச்சென்றனள்; "பார்ப் பனி சாலி காப்புக்கடை கழிந்து, கொண்டோற் பிழைத்த கண்ட மஞ்சித், தென்றிசைக் குமரி யாடிய வருவாள்" மணி. கஉ: டு - எ.

ஈஈ. கடன்மண்டு பெருக்துறைக்காவிரி - சங்கமுகத்துறை.

(பி - மீ.) ஈஉ. 'யாப்பிடை' ஈஎ. 'குரங்குசெய் கடற்றுறை', 'குரங் ஙகுசெய்கடற்குமரி' ஈஈ. 'ஆடிட'

சo வடமொழி யாளரொடு வருவோன் கண்டூங்
கியாங்கனம் வந்தனை யென்மக ளென்றே
தாங்காக் கண்ணீ ரென்றலை யுதிர்த்தாங்
கோத லந்தணர்க் கொவ்வே ஞயினுங்
காதல ஞதலிற் கைவிட லீயா
சரு னிரந்தூண் டலைக்கொண் டிங்ஙகர் மருங்கிற்
பரந்துபதி மனைதொறுந் திரிவோ ஞெருகாட்
புனிற்றுப் பாய்ந்த வயிற்றுப் புண்ணினன்
கணவிர மாலை கைக்கொண் டென்ன
நினைநீடு பெருங்குடர் கையகத் தேந்தி
நுo யென்மக ளிருந்த விடமென் றெண்ணித்
தன்னுறு துன்பந் தாங்கா து புகுந்து
சமணீர் காணுஞ் சமணெண் ணேனே
யிவணீ ரல்லவென் றென்னெதிம் வெகுண்டி
மையறு படிவத்து மாதவர் புறத்தெமைக்
நிரு கையுதிர்க் கோடலிற் கண்ணிறை நீரே

சo. வடமொழியாளர் - பார்ப்பார் ; பார்ப்பனியை, "வடமொழி யாட்டி" (கூ: எக) என்றும் பின் கூறுவர்.

சக. மகள், விளிப்பெயர்.

சச. கைவிடலீயான் - கைவிடார் ; "காவலன் மகளை கைவிட லீயான்" (ககூ: க உ) என்பர் பின்னும்; "காட்டிய தாதலிற் கைவிட லீயான்" சிலப். கூ: அரு.

சஎ. புனிற்று - ஈன்ற அணிமையையுடைய பசு.

சஅ. கணவிரமாலை - அலரிமாலை ; மணி. கூ : கoச.

நுஉ. சமணீர்காள் - சமணர்களே.

நுஙூ. இவண் நீர் அல்ல என்று - இவ்விடத்திற்குரிய தன்மையன் றென்று.

நுசு. படிவம் - தவவேடம். மாதவர் - சைமுனிவர்.

நுரு. கையுதிர்க்கோடலின் - கையசைத்துப் போய்விடுகவென்று குறிப் பித்தலால்; "காண மிலியெனக் கையுதிர்க் கோடலும்" (ககூ: கo) என்று பின்னும்வரும்; இவ்வழக்கம் மலைகாட்டில பிருதியாகவுள்ளது. கண் ணிறை நீரேம் - கண்களில் நிறைந்த நீரை யுடையேமாய்.

(பி - ம்.) சக. 'கியானமவந்தனையேமகளென்றே' சஉ. 'உருத் தாங்கு' சஅ. 'காதலினுதலிற்' சஎ. 'திரிவேனெரு' ச எ. 'புயிற்றுறு' சஅ. 'கணவீரமாலை கைக்கொண்டனன்' சஙூ. 'அடக்கி' நுங. 'இவனீரல்ல' நுச. 'படிமத்' நுரு - ஙூ. 'கணணறை நீரென, மறவோரருளி லாருயிலோவென'

மறவோ ருளீரோ வாருமி லோமெனப்
புறவோர் வீதியிற் புலம்பொடு சாற்ற
மங்குமேய் மாட மணிதொறும் புகூஉ
மங்கையிற் கொண்ட பாத்திர மூடையோன்
கூ0 கதிர்சுடு மமயத்துப் பகிமதி முகத்தோன்
பொன்னிற் றிகழும் பொலம்பூ வாடைய
னென்னுற் றனிரோ வென்றெமை நோக்கி
யன்புட னளிஇய வருண்மொழி யதனை
லஞ்செவி நிறைத்து நெஞ்சகங் குளிர்ப்பித்துத்
கூரு தன்கைப் பாத்திர மென்கைத் தந்தாங்
கெந்தைக் குற்ற விடும்பை நீங்க
வெடுத்தனன் றழீஇக் கடிப்பத் தலையேற்றி
மாதவ ருறைவிடங் காட்டிய மறையோர்
சாதுயர் நீக்கிய தலைவன் றவமுனி
எ0 சங்க தருமன் றனெமக் கருளிய

நிகூ. ஆரும் இலோம்,- பாதுகாப்போர் யாரையு நிலலேம்.

நுஎ. புறவோர் - புறத்திருள்ளோரது.

நுகூ. பாத்திரம் - பிச்சைப்பாத்திரம். இதனைக் கோரகையென்பர்.

கூ0. இல்லறத்தோர்எல்லோருமுண்டபின்பு, பெரத்தசுகியாகிகள் பகலில் உச்சிப்பொழுதிற் பிச்சைக்குச்செல்ல வேண்டுவது விதியாதலின், "கதிர்சுடு மமயத்து" என்றார். இப்படியே, "வெங்கதி ரமயத்து வியன் பொழி லகவயின், வந்து தோன்றலும்" (கo: உள - அ) ; வெயில்விளங் கமயத்து விளங்கித் தோன்றிய', சாது சக்கரன் றன்னையா னூட்டிய" (கக : கoஉ - ங) எனப் பின்னர் வருதல காண்க.

கூக. மருதக்துவரில் தோய்க்கப்பட்டு மஞ்சள் நிறமுள்ளதாதலால்,'பொன்னிற்றிகழும் பொலம்பூ வாடை' எனப்பட்டது; இதனைச் சீவாமென்பர்.

கூங. அளிஇய - கலந்த; 'அன்புடை மன்மொழி யளிஇ' முருகு.உகூஉ. "இன்சொலா னீர மலாஇப் படிநிலவாஞ் செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்" (குறள். கூக.)

எ0. சங்கதருமன், பெயர்; புத்த தர்ம சங்கமென்னு மூன்றனுள் சங்கத்திற்குரிய தருமத்தை அனுசரித்து நடப்பவனென்று பொருள்.

(பி - ம்.) நுஎ. 'சேர' கூ0. 'கதிர்சுட்டமைத்து' கூங. 'அளிஇய ருண்மொழி' கூச. 'நிறைத்து.....குளிர்ந்து' கூஞ. இடும்பைகணீங்க' எ0. தானெனக் கருளிய'

வெங்கோ னியல்குண னேதமில் குணப்பொரு
ளுலக நோன்பிற் பலகதி யுணர்ந்து
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாள
னின்பச் செவ்வி மன்பதை யெய்த

எக. எங்கோன் - எம்முடையசுவாமி; இயல் குணன் - இயல்பாகவே தோன்றின குணங்களையுடையோன்; "இறைவன் குரவ னியல்குண னெங் கோன்" சிலப். கo: கஎச.

எடை. உலகநோன்பு - உலகமெலாம்; பலகதி உணர்ந்து - பலபிறப் புக்களிலும் பிறந்துபிறந்து உணர்ந்து; கதி-பிறப்பு. 'புத்தன் கைவந்த முத்தியைவிட்டுக் கன்மவசத்தாலன்றிக் கருணையாற் பரிசுத்த ஞானத்துடன் பலவிலங்கிற் பிறந்தும் இறந்தும் பிணிப்பட்டும் மூத்தும் தர்மோபதேசம் பண்ணி ஒழியாமல் உலகுய்யக்கொண்டாடு' எனினும், 'கன்மவசத்தாற் பிற ந்தானெனில், விலங்காய்ப் பிறந்து பேசுதலும், யானையாய் மருப்பீதலும், முயலாய் மாமரமீதலும் பிறவும் நிகழா' (நீல. சமய) என்றும் கூறுவர்; புத்தன் கருணையாற் பலவகைப் பிறப்பும் எடுத்தானென்பதைப் புத்தஜாதக கதைகளிற் பரக்கக்காணலாம்; "எறும்புகடை யாயன்முதலா வெண்ணி றந்த வென்னுரைக்கப், பிறந்திறந்த யோனிதொறும் பிரியாது சூழ்போகி, யெவ்வுடம்பி லெவ்வுயிர்க்கும் யாதொன்று மிடரெய்தி,னவ்வுடம்பி லுயிர்க்கு யிரா யருள்பொழியுந் திருவுள்ளம்", "மீனுரு வாகி மெய்ம்மையிற் படிந்தனை, மானுரு வாகியே வான்குண மியற்றினை" (பரி. யாப்பு. கக. உதாரணங் கள்); "வானுடும் பரியாய மானினமாயும் வன்கழற் கலிமுரு மெண்கா றுண் மான், முனையும் பணையெருமை யொருத்தி யாயுந் தடக்கை பிரங் களிருயுஞ் சடங்க மாயு, மீனுய முபலாயு மன்ன மாயு மடிலையும் பிறவாயும் வெல்லுஞ் சிங்க, மானுயுங் கொலைகளவு கட்பொய் காமம் வஞ்சித்தவர்தா முறைத்தபதி மானு வுரே" (நீல. சமய.)

எக. தான்வீற்றிருத்தல் தடைக்கென்னுங்கொடியாமல் பிறர்க்கே உரிமை பூண்டொழுகுபவன்; "மூவுரும் பெருமைக்க னிலிமுழுமுதி வெய்துகாறு, நன்றே நிகழ்ந்தான் குணமேமொழிந் தாம்நலாகீகேள்,றெய்றுறு முளனான் பிறரீக்கேயுறு தீக்குழந்தா, னன்றே பிறவு னைவுழுசரு னங்க ளன் றே" (குண்டல. கடவுள்.); "இருட்பா வினைநீக்கி யெவ்வுயிர்க் குங் காவலென, வருட்பாரம் தினசுமந்த வன்னுமுதி லின்றளவு, மது வொன்று மலரடிக்கீழ் வந்தடைந்தோர் யாவர்க்கும், பொதுவன்றி னினக் குரித்தோ புண்ணியனின் றிருமேனி", "தீதியல் புலியது பகிகெடு வகைகின திருவுரு வருளிய திறமலி பெருமையை" (பரி. யாப்பு. கக. உதாரணங்கள்), "பிறர்க்கற முயலும் பெரியோய் கன்னடி" (கக: கங), "தன்னுயிர்க் கிரக்கான் பிறவுயி ரோம்பு, மன்னுயிர் முதல்வன்" (உரு:ககக - எ) என்பர் பின்னும். மூ. அக்நா. நுசு.

எச. நிருவாணமடைதற்குரிய பருவத்தை உயிர்ப்பன்மைகள் அடை யும்படி; மன்பதை - உயிர்ப்பன்மை; "மன்பதை காக்குகின் புரைமை" புறநா. உகo.

(பி - ம்.) எஉ. பலகெதியிழந்து' எக. 'பிறர்க்குரை யாளன்'

நி.மணிமேகலாதெய்வம் வந்துதோன் றியகாதை.சுக

எரி வருளறம் பூண்ட வொருபெரும் பூட்கையி
னறக்கதி ராழி திறப்பட வுருட்டிக்
காமற் கடந்த வாமன் பாதந்
தகைபா ராட்டுத லல்ல தியாவது

எரு. காருணியத்தை பூணட ஒப்பற்ற பெரிய மேற்கோளினாலே; அருளாறும், கலைஞரும், காருண்யம், தயாகுணம் என்பன ஒருபொருட்சொற்கள்; இதனை 'அஹிம்ஸா பரமோதர்ம:' என்பதுற்காண்க. திதகோவிந்தத்தில் திருமாலின் தசாவதாரத்தை வடித்துக்காட்டிய பின் "புத்த ரூபத்தில்" என்றும் சுலோகத்திற் பெரத்தாசாரத்தின் பெருமையைப்பற்றி, "காருண்ய மாதந்வதே" என்று ஸ்ரீஜயதேவர் பாராட்டி யிருக்கின்றனர்.

எச - ரு. எய்தப் பூண்டமைக்க. உயிர்ப்பலிமகம் இன்பச் செய்வினைய அடையும்படி புத்தர் அரு தம்பூண்டமையை, "உயிரகலல்லாம்... நீயோ தோன்றியை பின்னரு தொழுதனர்" (கo : எ - கஉ), "மாயுய ரெவ்வ மக்களை நீக்கி, ...சூன்முக மருங்கி ல்" (கo: கூஉ-சு) என இம்மூலுயிர்னே பின்னர் வருவனவற்றாலுமுணர்க.

எசு. அறக்கதிர் ஆழி நிரப்பட உருட்டி - தருமசக்கரத்தை உலகத்திற் பலரையாக உருளச்செய்ய; தருமத்தைத் சக்கரமாகக் கூறியதற்கேற்ப 'உருட்டி' என்றார். 'நிறப்பட' எ ற தனுரு, பலவகையாக அவை தருமோபதேசஞ்செய்தலை கூறுயவாறுயிற்று. இதுபற்றியே புத்தனைத் தருமசக்காப் பிரவர்த்தகாசாரியனென்பர்; "ஆதி முத வன தலைழியா ன் வோன்" (கo: ரக) என்பார் பிறரும்; "அரு ராழி உபதேதாய்நீ, யறவாழி பயந்தோய் நீ, மருளாழி அறுகதோய்நீ மலரயாழி புரதோய்நீ" (பிர. யாப்பு. கக. உதாரணம்)

எள. காமற்கடந்த - மாரனென்னும்; மாரன் - தர்மவிரோதிகளான இச்சைகளை மடத்திலே உண்டாக்கும் ஒருதெய்வம்; மகாபோதிவிருட்சத்தின்கீழே தவவொழுக்கம்பூண்டு நிலைத்திருக்க சபிப்பு இடைஞ்செய்யப்பட்டதை யுணர்த்தும் வரலாறுகளெல்லாம் வெளியுருமைப்பட்டு விளங்கியமையால், புத்தனை, 'காமற் கடந்த வாமன்' என்றார்; "மாரனை வென்றும் வீரனிவன்" (கக: சுக), 'போதி ..... மாரனை வென்றனை' (கo: கo - கக) எனப் பின்னர் வருதல்காண்க. 'மாரன்' என்பதற்குப்பொருளை மன்மதனென்றெண்ணுவது பௌத்த சம்பிரதாயமாதலால், இவ்விடத்தில், காமனென்று வருமிடமெல்லாம் மாரனென்று பொருள்கொளுக. வாமன் - புத்தன்; அழகுள்ளவனென்றுபொருள். பாதம் - பாத்தலை.

எo - எள. அருளியபாதம்.

எஅ. தகை பாராட்டுதல் என்பன, ஒரு சொன்னீரவாய்த் துதித்தலென்ற பொருளிலமைந்தன. யாவதும் - நிறைந்தும்.

(பி - ம்.) எரு - சு. 'பூட்கை, யறக்கதிர்' எஅ. 'அல்லதை யாவதும்'

மிகைகா வில்லேன் வேந்தே வாழ்கென
அ0 வஞ்சொ லாயிழை நின்றிற மறிந்தேன்
வஞ்சி நுண்ணிடை மணிமே கலைதனைச்
சித்திரா பதியாற் சேர்தலு முண்டென்
றப்பொழி லாங்கவ னையர்த்து போயபின்
பளிக்கறை திறந்து பணிமதி முகத்துக்
அடு களிக்கயல் பிறழாக் காட்சிய ளாகிக்
கற்புத் தானில னற்றவ வுணர்விலள்
வருணக் காப்பிலள் பொருள்விலை யாட்டியென்
றிகழ்ந்தன ஞகி நயந்தோ னென்னது
புதுவோன் பின்றைப் போனதென் னெஞ்ச
கூ0 மிதுவோ வன்னாய் காமத் தியற்கை
யிதுவே யாயிற் கெடுகதன் றிறமென
மதுமலர்க் குழலாண் மணிமே கலைதான்
சுதமதி தன்னொடு நின்ற வெல்லையு
ளிந்திர கோடணை விழாவணி விரும்பி

எசு. மியகா - மிகைக்கின்றன; மிகைத்தல் - வேறுபொருள்களைச் சொல்லுதல்; "காயினை வெல்லேற் ஞயிரத்தெட்டு, நாம மல்லது நவிலா தென்னு" (சிலப். சுo : சுசுசு - எ.)

அ0. நின்றிறம் - நிகழ்வையாழ்.

அஉ. அப்பொழில் - அப்பொழிலில். அயர்த்து - தன்னைமறந்து; விரும்பியென்றுமாம்; மஎரி. ரிறு: சுஎக.

அடு. களிக்கயல் - கண்கள்.

அள. வருணக்காப்பு - வருணத்திற்கேற்ற காவல்; வருணமாகிய காவலென்றுமாம். பொருள் விலையாட்டி - விலைமாது.

அசு. நயந்தோன் - விரும்பினோன். ஙசு. தன்னென்றது, காமத்தை.

கச. இந்திர கோடணை விழா (இந்திர கோடணையாகிய விழா) - இந்திரவிழா. பலவகைப்பட்ட முழக்கங்களையுமுடைமையின், விழா, கோடணை யெனப்பட்டது; கோடணை - முழக்கம்; அலங்காரமெனினுங் கூறுவர்; "இந்திர கோடணை யிங்கர்க் காண, வந்தேம்" (மணி. எ: கள - அ), "இந்திர கோடணை விழவணி வருகாள்" (மெடி. கள: சுஙசு.)

(டி - மீ.) எசு. 'காயில்லெனை வேந்தே' அச. 'பகர்மதிமுகத்து' அசு. 'நற்றவப்புணர்விலள்' அஎ. 'வருணக்காப்பினும் பொருண்முலையாட்டி' அசு. 'பின்னர்ப்போன' கக. 'கெடுகதின்றிறமென

கூடு வக்து காண்குறூஉ மணிமே கலாதெய்வம்
பதியகத் துறையுமோர் பைந்தொடி யாகி
மணியறைப் பீடிகை வலங்கொண் டோங்கிப்
பலவன் றீர்த்தன் புண்ணியன் புராண
னுலக நோன்பி னுயர்ந்தோ யென்கோ
கoo குற்றங் கெடித்தோய் செற்றஞ் செறுத்தோய்
மூற்ற வுணர்ந்த முதல்வா வென்கோ
காமற் கடந்தோ யேம மாயோய்
தீநெறிக் கடும்பகை கடிந்தோ யென்கோ
வாயிர வாரத் தாழியந் திருந்தடி
கoடு நாவா யிரமிலே னேத்துவ தெவனென்
றெரிமணிப் பூங்கொடி யிருநில மருங்குவந்
தொருதனி திரிவதொத் தோதியி னெஞ்சுங்கி
நிலவரை யிறந்தோர் முடங்குநா நீட்டும்

கூசு. மு.மணி.சு: கா.ஓர்பைந்தொடியாகி-ஒரு பெண்வடிவுகொண்டு.
கூஎ. மணியறைப் பீடிகை - பளிங்கறையிலுள்ள பாதபீடத்தை.
கூக. உலகநோன்பு: மணி. பு. எஉ.

கoo. குற்றம்-காமவெகுளி மயக்கங்கள்; "யாமே யுரைத்த பொருள் கட்கெல்லாங், காமம் வெகுளி மயக்கங் காரணம்" (கு.o: உறுஉ-கூ) என்று பின்னர்க் கூறுவர்; "பூமகளோ முதலாகப் புகுந்தமரர் பெண்டிசையுந், தூமல ராலமலரைத் தொழுதிரந்து மிவ்வியகாட், காமமுங் கடுஞ்சினமுங் கழிப் பரிய மயக்கமுமாய்த், தீமைசால் கட்டிலுக்குத் திறக்கருவி யாய்க்கிடந்து, காமஞ்சார் தமர்களுக்கு மயப்படுமா றினிதுரைத்துச், சேமஞ்சார் வன்னெறிக்குச் செல்லுமா றருளினையே" (மீரா. யாப்பு. கசு. உதாரணம்.)

கoக. முற்றவுணர்ந்த முதல்வா - சர்வஜ்ஞர்.

கoஉ. ஏமமாயோய் - பாதுகாவலாக வுள்ளோய்; ஏமம்-இன்பமுமாம்.

கoகூ. தீநெறியாகிய கடும்பகை; தீநெறி - குமார்க்கம்.

கoசு. இவ்வுடைய பாதத்தில் ஸகஸ்ராரசக்கரோகையுண்டென்பர்.

கoடு. ஏத்துவது எவன் - துதிப்பது எத்தன்மையது; என்னுவில் அடங்குவதன்று என்றபடி; மணி. கக: எக - உ.

கoள. ஓதியின் - மெய்ஞ்ஞானத்துடன்.

கoஅ. நிலவரை இறந்து - நிலவெல்லையைக் கடந்து. ஓர், இடைச் சொல். நீட்டும் - நீட்டுகின்றன; சொல்லுகின்றனென்றபடி: இனி, நில

(பி - ம்.) கூடு. 'மணிமேகலைதான்' கூசு. 'உலவாநோன்பின்' கoo. 'குற்றங்கடிந்தோய்' கoகூ. 'கடந்தோயெம்கோ' கoசு. 'காமத்தாழியன் றிருந்தடி' கoடு. 'நாவாயிரமிலமேத்தவஃதெவனென' கoள. 'திரிவ தொதியினெஞ்சுங்கி', 'திரிவதோதியினெஞ்சி', கoஅ. 'முடங்குணநீட்டும்'

புலவரை யிறந்த புகாரெனும் பூங்கொடி
கக0 பன்மலர் சிறந்த நன்னீர் மகழிப்
புள்ளொலி சிறந்த தெள்ளரிச் சிலம்படி
ஞாயி லிஞ்சி நகைமணி மேகலை
வாயின்மருங் கியன்ற வான்பணைத் தோளி
தருவிலை வச்சிர மெனவிரு கோட்ட
ககரு மெதிரெதி ரோங்கிய கதிர்ள வனமுலை
யார்புனை வேந்தற்குப் பேரள வியற்றி
யூழி யெண்ணி நீடுகின் ரேங்கிய
வொருபெருங் கோயிற் றிருமுக வாட்டி
குணதிசை மருங்கி ணண்முதிர் மதியமுங்
கஉ0 குடதிசை மருங்கிற் சென்றுவீழ் கதிரும்
வெள்ளிவெண் டோட்டொடு பொற்ரே டாக
வெள்ளறு திருமுகம் பொலியப் பெய்தலு

வெல்லையைக் கடந்தாராகிய தேவர் தலைகுனிவதற்குக் காரணமாகிய தனது காவை நீட்டுகின்றனென்றுமாம்.

கo. புலவரையிறந்த - அறிவின் எல்லையைக் கடந்த; "புலவரையிறந் தோய் போகுதல் பொறைஎன்" (சிலப். உரை: கள ப.) புகார் - காவிரிப்பூம் பட்டினம்.

கஉ. ஞாயில் - மதிலுறுப்புக்களில் ஒன்று; அஃது, ஏப்புழைக்கு நடுவாய் எய்து மலரையுஞ் சூட்டென்பர் (சீவக. கo7) ஆசிரியர் நச்சினார்க் கினியர்; குருவித்தலையெட்டா (சிலப். கo7: உகள) அடியார்க்குநல்லார். இஞ்சி - மதில்.

ககரு. பணை - மூங்கில்; இது தோரணகம் எனைப்படும்.

கக0 - கரு. அகழியாகிய அடியினையும், இஞ்சியாகிய மேகலையையும், பணையாகிய தோளினையுமுடையாள்.

ககச. தருவிலை - கற்பகதரு நிற்குங்கோயில்; வச்சிர (நிலை) - வச்சிரா யுதம் நிற்குங்கோயில்.

ககள. ஆர்புனை வேந்தன் - சோழன்.

ககச - அ. இருகோட்டமாகிய கொங்கையினையும், சோழன் கோயிலா கிய திருமுகத்தையுமுடையாள்.

ககரு. குணதிசை - கீழ்த்திசை. கஉக. தோடு - காதணிவிசேடம்.

கஉஉ. எள்ளறு - இகழ்ச்சியற்ற. பெய்தலும் - அணிந்துகொள்ளவும்.

(பி - ம்) கக0. 'கன்மலர் சிறந்த' ககஉ. 'மனமணிமேகலை' ககரு. 'நெடுநகர்க்கு' ககள. 'நீடுகின்று' ககரு. 'குணதிசை'

நி.மணிமேகலாதெய்வம்வந்துதோன்றியகாதைசூடு

மன்னச் சேவ லயர்ந்துவிளை யாடிய
தன்னுறு பெடையைத் தாமரை யாடக்கப்
கஉடு பூம்பொதி சிதையக் கிழித்துப் பெடைகொண்
டோங்கிருந் தெங்கி னுயர்மட லேற
வன்றிற் பேடை யரிக்குர லழைஇச்
சென்றுவீழ் பொழுது சேவற் கிசைப்பப்
பவளச் செங்காற் பறவைக் கானத்துக்
கஙo குவளை மேய்ந்த குடக்கட் சேதா
முலைபொழி தீம்பா லெழுதுக ளவிப்பக்
கன்றுகினை குரல மன்றுவழிப் படர
வன்றி யந்தணர் செந்தீப் பேணப்
பைந்தொடி மகளிர் பலர்விளக் கெடுப்ப
கஙஙி யாழோர் மருதத் தின்னரம் புளரக்
கோவலர் முல்லைக் குழன்மேற் கொள்ள

ககக - உஉ. மதியமும் கதிரும் முறையே வெள்ளித்தோடும் பொற் றேடுமாகத் திருமுகத்திற்பெய்தலும்,

கoக - உஉ. பூங்கொடி தோழி முகவாட்டி அவள், திருமுகம் பொலியப்பெய்தலும்; சூரியன் அத்தமிக்கவுமென்றபடி.

கஉங. அயர்ந்து - மெய்ம்மறந்து; விரும்பியென்றுமாம்.

கஉங - சு. அன்னச்சேவல் பெடைகொண்டு தெங்கின் மடலேற.

கஉள. அரிக்குரல் - மெல்லிய குரலால் ; அழைஇ - அழைத்து.

கஉள - அ. பேடை, அழைஇப் பொழுதைச் சேவற்கு இசைப்ப.

கஉக. செங்காற் பறவை - அன்னப்புள். கானமென்றார், மிகுதிபற்றி.

கஙo. சேதா - செவ்விய பசு. கஙஉ. குரல - குரலவாய்.

கஙo - கஉ. சேதா பால் துகளாயவிப்பக் குரலவாய்ப் படர; "ஆன் கணங், கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதர" (குறிஞ்சி. உகள - அ) ; "கறவைதம் பதிவயிற், கன்றமர் விருப்பொடு, மன்றுநிறை புகுதர" (கலி. ககக); "மதவுநடை கல்லான், வீங்குமாண்செருத்த நீம்பால் பிலிற்றக், கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதரு, மாலையும்" அகநா. கச.

கஙசு. முல்லை - முல்லைப்பண் ; "குழல்வளர் முல்லையிற் கோவலர் தம்மொடு, மழலைத் தும்பி வாய்வைத் தூத" சிலப். ச: கஙி - சு.

(பி - ம்.) கஉஙி. 'பூம்பொறிசிதையக்' கஉசு - எ. 'ஏறி, யன்றிற் பேடை யரிகுரலனை இ' கஙஉ. 'குரன்மன்று' கஙசு. 'முல்லை குழன்மேல வைப்ப'

வமாக மருங்கிற் கணவனை யிழந்து
தமரகம் புகூஉ மொருமகள் போலக்
கதிராற்றுப் படித்த முதிராத் துன்பமோ
கசo டந்தி யென்னும் பசலைமெய் யாட்டி
வந்திறுத் தனளான் மாநகர் மருங்கென்.

ரு.—மணிமேகலாதெய்வம் வந்துதோன்றியகாதை முற்றிற்று.

கஙள. அமரகம் - போர்க்களம். கஙஅ. தமரகம் - தம்மவர்களிடம்.
கஙகூ. கதிராற்றுப்படித்த - சூரியனைப்போக்கிய.
கசo. அந்திப்பொழுதாகிய மங்கை; பசலை மெய்யாட்டி யென்றார், கணவனைப் பிரிந்தாளென்பது புலப்பட.
கசக. இறுத்தனள் - தங்கினள்.
கசo - சக. பசலை மெய்யாட்டி மாநகர்மருங்கு வந்திறுத்தனள்.
க - கசக. இளம்பொற்பூங்கொடி உருவம் பெயர்ப்ப, சூழ்வோன் சுதமதி முகநோக்கி உரையென, உரைப்ப, அகலவோன் எய்தியது உரையென, கேட்டருள்; சங்கதருமனருளிய வாமன்பாதத்தைப் பாராட்டுதலல்லது பிறைநாவில்லேனென, அவள் போயபின், மணிமேகலை சுதமதியோடு நின்ற வெல்கூயுர், மணிமேகலாதெய்வம், பைம்தொடியாகிப் பீடிகையை வலங் கொண்டு ஒங்கி ஓதுங்கி நாநீட்டும்; நீட்டப் புகாரெலாம் பூங்கொடி பெய்தலும், பசலைமெய்யாட்டி முதிராத் துன்பமொடு நகர்மருங்கு வந்திறுத்தனளென்று முடிக்க.

— —

ஆறுவது
சக்காவாளக்கோட்டமுரைத்தகாதை.

[ஆறுவது மணிமேகலைதனக்கு
மணிமேகலாதெய்வம் சக்கரவாளக்கோட்டமுரைத்து
அவளை மணிபல்லவத்துக் கொண்டுபோனபாட்டு.]

அந்தி மாலை நீங்கிய பின்னர்
வந்து தோன்றிய மலர்கதிர் மண்டிலஞ்
சான்றோர் தங்க ணெய்திய குற்றங்

உ. மலர்கதிர் மண்டிலம் - சந்திரமண்டிலம்.
கூ. சான்றோர் - உயர்ந்தகுடியிற்பிறந்த மேன்மக்கள். எய்திய - உண்டாகிய.
(பி - ம்.) கசo. 'பூட்டி' உ. 'மண்டலம்'

தோன்றுவழி விளங்குந் தோற்றம் போல
ருு மாசறு விசும்பின் மறுநிறங் கிளர
வாசற விளங்கிய வந்தீர் தண்கதிர்
வெள்ளிவெண் குடத்துப் பால்சொரி வதுபோற்
கள்ளவிழ் பூம்பொழி லிடையிடைச் சொரிய
வுருவு கொண்ட மின்னே போலத்
கo திருவி லிட்டுத் திகழ்தரு மேனிய
ளாதி முதல்வ னறவாழி யாள்வோன்
பாத பீடிகை பணிந்தன ளேத்திப்
பதியகத் துறையுமோர் பைந்தொடி யாகிச்

சு. தோன்றுவழி - தோன்றுமிடத்து.

ருு. மாசு - குற்றம். விசும்பு - ஆகாயம். மறு - களங்கம். நிறம் கிளர - நிறம் விளங்கித்தோன்ற; நிறம் - மார்பிலென்றுமாம்.

ரு - ருு. சந்திரனிடத்துள்ள தூய்மையாலும், தான் அதற்குமாறுக இருத்தலாலும், களங்கம், சான்றோரிடத்துண்டாகிய குற்றம்போல விளங்கித் தோன்றியதென்பதாம்; இது, "குடிப்பிறந்தார்" (கூருஎ) என்னும் குறளின் கருத்தை ஒருவாறு தழுவி, ஆண்டுள்ள பொருளையும் உவமத்தையும் முறையே உவமமாகவும் பொருளாகவும் பெற்றுவந்தமை காண்க, "அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந், திங்களுஞ் சான்றோரு மொப்பர்" நாலடி. கடுங.

சுரு. ஆசு - குற்றம். தண்கதிர் - நிலாவை.

எ. சந்திரனுக்கு வெள்ளிக்குடமும், நிலாவிற்குப் பாலும் உவமை.

உ - அ. மண்டிலம் மறுநிறங்கிளரப் பால்சொரிவதுபோல் தண்கதிரை இடையிடையே சொரியாநிற்க.

கூ. இல்பொருளுவமம்.

கo. இந்திரவில்லைப்போல ஒளிவிட்டு அழகைத்தருகின்ற திருமேனியையுடையளாய்; "திருவி லிட்டுத் திகழ்தரு மேனிய ள்" (சிலப். கருரு: கருசூ.) இந்திரவில் இன்னவாறு தோன்றுமெனப் புலப்படாமையினால், அங்ஙனம் தோன்றுகின்ற தெய்வங்கட்கு அஃது உவமமாயிற்று; "மற்றவன் றேவ ருங்கி வானிடு ஞெலியிற் றோன்றி" (சீவக. கூருக); "வானிடு வில்லின் வரவதியா வாய்மையாற், கானிலக் தோயாக் கடவுளே" நாலடி. கடவுள்.

ககு. மு. மணி. கo: சுக. அறவாழியாள்வோன் - புத்தன்.

கஉ. பாதபீடிகை - உவமவாயிலாற்றிறப்பிக்கையினாலுண்டாபாதபீடம். பணிந்தனளேத்தி - பணிந்தேத்தி.

கஙு. மு. மணி. ருு: கூசு.

(பி - மீ.) சு. 'விளக்கும்' எ. 'குடத்திற்பால்' அ. 'பூம்பொழிலிடையே சொரிய' கூ. - கo. 'உருவுகண்டமின்னே போன்று, திரு'

சுதமதி நல்லாண் மதிமுக நோக்கி
கடி யீங்கு நின்றீ ரென்னுற் றீரென
வாங்கவ ளாங்கவன் கூறிய துரைத்தலு
மரசிளங் குமர னுயிழை தன்மேற்
றணியா நோக்கந் தவிர்ந்தில னுகி
யறத்தோர் வனமென் றகன்றன னுயினும்
புறத்தோர் வீதியிற் பொருந்துத லொழியான்
பெருந்தெரு வொழித்திப் பெருவனஞ் சூழ்ந்த
திருந்தெயிற் குடபாற் சிறுபுழை போகி
மிக்க மாதவர் விரும்பின ருறையுஞ்
சக்கர வாளக் கோட்டம் புக்காற்
கடுங்குல் கழியினுங் கடிகைவை யெய்தா
தங்குநீர் போமென் றருந்தெய்வ மூரைப்ப

கடி. நின்றீரென்றது, மணிமேகலையையும் உளப்படுத்தி. என்னுற்றீர் - யாது துன்பமுற்றீர். எனை - என்று மணிமேலாதெய்வம்கேட்ப.

கஐ - கடி. மேனியள், ஏத்தி ஆகி நோக்கி என்னுற்றீரெனவென்க.

கசு. அவள் - சுதமதி. அவன் - உதயகுமரன். கூறியது - 'சித்திராபதியாற் சேர்தலு முண்டு' (குரு: கூஉ) என்றது

கள. ஆயிழைதன்மேல் - மணிமேகலையிடத்து.

கக. அறத்தோர் வனமென்று - முனிவர்களுறைகின்ற வனமென்று

உ0. புறத்தோர்வீதியில - புறத்திலுள்ளவர்களுடைய வீதியினிடத்தே.

கள - உ0. குமரன் தவிர்ந்திலனுகி அகன்றமையன்; ஆயினும் வீதியிற் பொருந்துதலொழியானென்க.

கக - உ0. மணி. குரு: குசு - எ.

உக. பெருந்தெருவென்றது, முன்புகூறிய புறத்தோர்வீதியை.

உஉ. ழ. மணி. எ: அக. மதில. குடபாற் சிறுபுழை - மேற்றிசையினிடத்தேயுள்ள சிறிய நுழைவாயில்.

உஊ - ச. மணி. கடு: ஊக - உ; கள: எடு - சு; உஉ: நு - சு.

உடு. கடிகைவை - உதயகுமரனுற் பற்றப்படுகை.

உசு. அங்கு - சக்கரவாளக்கோட்டத்திடத்தே.

கசு - உசு. அவள் உரைத்தலும், அருந்தெய்வம், 'அரசிளங் குமரன் பொருந்துத லொழியான்; ஆதலாற் போகிப் புக்காற் கடிகைவை யெய்தாது; நீர் அங்குப்போம்' என்றுரைப்பவென்க.

(பி - மீ.) கச. 'கலலாடன்முகம்' கஅ. 'தவிர்விலனுகி', 'தணிந்திலனுகி' கக. வனமென...னுயினும்' உக. 'ஒழித்துப்பெருவனஞ்' உடு - சு. எய்தாவங்குநீர்போமெனவருங்'

வஞ்ச விஞ்சையன் மாருத வேகனு
மஞ்செஞ் சாய னீயு மல்லது
கெடுகர் மருங்கி னுள்ளோ ரெல்லாஞ்
சுடுகாட்டுக் கோட்ட மென்றல துரையார்
சக்கர வாளக் கோட்ட மஃதென
மிக்கோய் கூறிய வுரைப்பொரு ளறியே
னீங்கிதன் காரண மென்னை யோவென
வாங்கதன் காரண மறியக் கூறுவன்
மாதவி மகளொடு வல்லிருள் வரினு
நீகே ளென்றே நேரிழை கூறுமிக்
காமப் பேரூர் தன்னெடு தோன்றிய
வீமப் புறங்கா டுங்கித னயல
தூரா நற்றே ரோவியப் படுத்துத்
தேவர் புகுதரூஉஞ் செழுங்கொடி வாயிலு
நெல்லுங் கரும்பு நீருஞ் சோலையு
நல்வழி யெழுதிய நலங்கிளர் வாயிலும்
வெள்ளி வெண்சுதை யிழுகிய மாடத்
துள்ளுரு வெழுதா வெள்ளிடை வாயிலு
மடித்த செவ்வாய்க் கடித்த நோக்கிற்

சுக. அஃது சக்கரவாளக்கோட்டமெனல்.

சுஉ. என்னையோவென - யாதென்று சுதமதி கேட்ப.

சுச. கூறுவல் - கூறுவேன்.

சுரு - சு. மாதவிமகளொடு நீ கேள். நேரிழை - மணிமேகலாதெய்வம்.

சுஅ. ஈமப்புறங்காடு - மயானம் ; ஈமம் - பிணஞ்சுடுதற்கு அடுக்கும் விறகுடுக்கு, "கரிபுற விறகி னீம வெள்ளழல்" (புறநா. உசுக.) இதன் - இந்த உவமானத்தின். புறங்காடு இதன் அயலிடத்தினுளது.

சுஎ. ஊராதந்தேர் - விமானம். ஓவியப்படுத்து - சித்திரம்போலாகாயத்தே நிற்கும்படி செய்து.

சுஏ. வெள்ளிவெண்சுதை - மிக்க வெண்மையையுடைய சுண்ணச் சாந்து. இழுகிய - பூசிய.

சுஐ. உரு - வடிவங்கள். வெள்ளிடை - வெளியான இடம்.

சுடு. கடித்தநோக்கு - கோவித்துப்பார்த்த பார்வை.

(பி - ம்.) உஅ. 'சாயநீயும்' சுக. 'கோட்டமீதென' சுசு. 'எனைகொலோவென' சுஅ. 'ஈமப்பெருங்காடு' சுஉ. 'ஓலியகப்படுத்து' சுட. 'நலலவழியொழுகியநலங்' சுஎ. எழுதியமாடத்'

நெடித்த பாசத்துப் பிடித்த சூலத்து
நெடுநிலை மண்ணீடு நின்ற வாயிலு
நாற்பெரு வாயிலும் பாற்பட் டோங்கிய
காப்புடை யிஞ்சிக் கடிவழங் காரிடை
நு0 யுலையா வுள்ளமோ டுயிர்க்கட னிறுத்தோர்
தலைதூங்கு நெடுமரந் தாழ்ந்துபுறஞ் சுற்றிப்
பீடிகை யோங்கிய பெரும்பலி முன்றிற்

சசு. தொடித்த பாசம் - பிறரைக் கட்டிய கயிறு ; மணி. க: உசு.

சஎ. நெடு நிலை மண்ணீடு - நீண்ட தோற்றத்தையுடைய பூதவடிவம்; என்றது மயானத்தைப் பாதுகாப்பதொரு தெய்வவிசேட வடிவமென்பர். மண்ணீடென்பதற்குச் சுதையாற் செய்யப்பட்ட பாவையென்று பொருள் ; "பாங்குற மண்ணீட்டிற் பண்புற வகுத்து" (சு : உ00), "ஈங்கிம் மண்ணீட் டியாரென வுணர்கென்" (கச: கநுசு) என இத்தூலுள்ளும், "கண்ணுள் வினைஞரு மண்ணீட் டாளரும்" (நு: ஈ0) எனச் சிலப்பதிகாரத்துள்ளும் வருதல் காண்க. மண் - சுதை; "மண்மாண் புனைபாவை யற்று", "மண் ணே டியைந்த மரத்தினையர்" (குறள். சஅ0, நுஎசு)

சஅ. நாற்பெருவாயிலும் - செழுங் கொ வாயிலும் கலங்கினார்வாயி லும் வெள்ளிடைவாயிலும் நின்றவாயிலுமாகிய நான்கு பெரியவாயிலும். பாற்பட்டு - பகுதிப்பட்டு.

சகூ. காப்பு - காவல். கடி வழங்கு ஆரிடை - பேய்கள் சஞ்சரிக் கின்ற அரிய இடம்; என்றது மயானத்தை.

சஅ - கூ. ஓங்கிய ஆரிடையென்க.

நு0. உலையாவுள்ளமோடு - தளராத உள்ளத்தோடு, உயிர்க்கடனிறுத் தோர்- உயிராகிய கடனைக்கொடுத்தோர்; உயிர்க்கடனிறுத்தலே, சிலப். நு: அஎ - அ ஆம் அடிகளின் உரையிற்காண்க. இவர்களே, மயானவாசினி யது மந்திரஸாதகரான பைரவவேஷதாரிகளென்றும், காபாலிகமதத் தினரென்றும் கூறுவர்; இஃது அவிப்பலியெனப்படும்; "சிரத்தெரிக்கன வரிந்த ரிக்குருவை செய்த பைரவர்கள் செந்நிலம், பரிக்தெ ரிக்குபொடி செய்ய மற்றவை பரிப்ப மற்றவர் சிரிப்பரே" தக்க. காடுபாடியது.

நுக. தலைதூங்குநெடுமரம் - உயிர்க்கடனிறுத்தோருடைய தலைகள் தொங்கப் பெற்ற நீண்ட மரங்கள். பலிகொடுப்போர் சினகைய மரத்தில் முடிந்துவிட்டுத் தலையையரிந்து தூக்கைக்குப் பலிகொடுத்தல் மரபாத லால், இங்ஙனங்கூறினர். "வீங்குதலே நெடுங்கழையின் மிசை தோறுந் திசைதோறும் விழித்து நின்று, ஆங்குதலை சிரிப்பனகண் டுதங்குதலை மறந் திருக்குஞ் சுடர்க்கட் சூர்ப்பேய்" (கலிங்க. கோயில். உக.) இது போன்ற ஒழுக்கம், வடநூலில் தசகுமாரசரித்தத்தில் உபகாரவர் மாவின் சைசவவிருத்தாந்தத்திற் சொல்லப்பட்டுள்ளதென்பர்.

நுஉ. பீடிகை - பீடம். பெரும்பலிபீடிகையோங்கிய முன்றிலென்க.

(பி -ம்.) சஎ. 'நெடுநிலைமதமண்ணீடுநின்றவாயிலும்', சகூ. 'கடிவழாங் கா' நு0 - நுக. 'உயிர்க்கடவதொர்தலைதாங்கு'

காடமர் செல்வி கழிபெருங் கோட்டமு
மருந்தவர்க் காயினு மரசர்க் காயினு
நிரு மொருங்குடன் மாய்ந்த பெண்டிர்க் காயினு
நால்வேறு வருணப் பால்வேறு காட்டி
யிறந்தோர் மருங்கிற் சிறந்தோர் செய்த
குறியவு நெடியவுங் குன்றுகண் டன்ன
சுடுமண் ணெங்கிய நெடுநிலைக் கோட்டமு
சுo மருந்திறற் கடவுட் டிருந்துபலிக் கந்தமு
நிறைக்கற் றெற்றியு மிறைக்களச் சங்கியுங்

நிக. காடமர்செல்வி - துர்க்காதேவி; சண்டிகையென்றுங்கூறுவர்; (மணி. கஅ: ககநி.) கோட்டம் - கோயில். "கோளி யாலமுங் கோழரை மரங்களுங் குழுமித், நாளி யார்த்தெழு சுடலையு முலறும் நுவன்றி, மீளி யாக்கைய தாக்கியுண் பேய்க்கண மிகைநிழ், கூளி தாய்க்கென வாக்கிய கோட்டமொன் றுளதே" என்றும் நீலகேசிச் செய்யுளாலும் மயானத்தில் துர்க்கையாலயம் இருந்ததாகத் தெரிகின்றது.

நிo - நிங. இறந்தோருடைய தலைகள் நாற்குறுங்கின்ற மரங்களாற் சுற்றப்பட்டுப் பலிபீடிகை ஒங்கிய மூன்றிலையுடைய கோட்டம்.

நிரு. ஒருங்குடன்மாய்ந்த பெண்டிர் - கணவருடன் விறந்தமகளிர்.

நிச - நிரு. ஆயினும், ஓர் எண்ணிடைச்சொல்; "போதியி லாயினு மிமய மாயினும்,.....புகாரேயாயினும்" (சிலப். க: கச - சு) என்புழிப்போல.

நிசு. நால்வேறுவருணம் - பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திர வருணங்கள்.

நிஎ. இறந்தோர்மருங்கில் - இறந்தவருடம்பைப் புதைத்தவிடத்தே.

நிஅ. குறியவும் நெடியவுமாகிய சிறிய மலைகளைக் கண்டாலொத்த; சிலப். உஎ : கருங.

நிகூ. சுடுமண் - செங்கல். கோட்டம் - அறை; "மப் புறங்காட், டரசர்க் கமைந்தன வாயிரங் கோட்டம்" (மூ: ககஎரு - சு) என்பர் பின்னும்.

நிஅ - கூ. கண்டன்ன கோட்டம்.

சுo. பெறுதற்கரிய நிறலையுடைய தெய்வங்களையுடைய, திருத்திய பலியிடுதற்குரிய தூண்கள்; கந்தம் -ஸ்கந்தமென்னும் வடமொழிச்சிதைவு; "இலகொளிக்கந்தமும்" (மணி. உச : ககஉ); "கலிகெழு கடவுள் கந்தங் கைவிட" புறநா. நிஉ.

சுக. நிறைக்கற்றெற்றி - நிறுத்திய கல்லாலாகிய திண்ணை. மிறைக்களச்சங்கி - வளைந்த இடத்தினையுடைய பலவழிகளுங் கூடினசந்து; மிறைவளைவு; "மிறைக்கொளி நிருத்தி னனே" சீவக. உஅச.

(பி - ம்) நிநி. 'பெண்டீர்' நிக. 'சுடுமனெங்கிய' சுக. 'நிறைகற் றெற்றியுமிறைகளச்'

தண்டு மண்டையும் பிடித்துக் காவல
ருண்டுகண் படிக்கு முறையுட் குடிகையுந்
தூமக் கொடியுஞ் சுடர்த்தோ ரணங்களு
மீமப் பந்தரு மியாங்களும் பரந்து
சுடுவோ ரிடுவோர் தொடுகுழிப் படுப்போர்
தாழ்வயி னடைப்போர் தாழியிற் கவிப்போ
ரிரவும் பகலு மிளிவுடன் றரியாது
வருவோர் பெயர்வோர் மாரூச் சும்மையு
மெஞ்சியோர் மருங்கி னீமஞ் சாற்றி

உ. மண்டை - உண்ணுதற்குரிய ஒருவகை மண்கலம்; ஏற்கும்பாத்திரமென்றுங்கூறுவர்; "கவிழ்த்த மண்டை மலர்க்குரர் யாரென", "பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்', "ஏலாது கவிழ்ந்தவை னிரவன் மண்டை" (புறநா. ௪0௬, ௪௫, ௪௬.) காவலர் - மயானங்காப்போர்.

ஈ. குடிகை - பர்ணசாலை; 'குடிகா' என்னும் வடமொழிச்சிதை வென்பர்; இஃது இக்காலத்துக் குடிசையென வழங்குகின்றது.

ஊ. தூமக்கொடி - புகையொழுங்கு; "மீன்சுடு புகையிற் புலவுநாறு நெடுங்கொடி" புறநா. ௫௮.

ஏ - ஈ. கழிபெருங்கோட்டமும், நெடுநிலைக்கோட்டமும், பலிக்கற்றமும், தெற்றியும், சந்தியும், குடிகையும், கொடியும், தோரணங்களும், பந்தரும் யாங்களும் பரந்தென்க.

ஙூ. சுடுவோர்-பிணங்களைச்சுடுவோர்; இடுவோர் - கொணர்ந்து அவற்றைச் சும்மா போகடுவோர். தொடுதல் - தோண்டுதல்; மணி. ஙஊ: உரு.

ஊ. தாழ்வயின் அடைப்போர்-பள்ளமாகிய இடங்களிற் பிணங்களை அடைத்துவைப்போர்; தாழ்வயின்-தாழ்ந்த இடம்; தாழியிற்கவிப்போர்-பிணங்களைத் தாழியினுலே கவிப்போர்; இதனை, "தேவ ருலக மெய்தின ஞதலி, னன்னேஞ் கவிக்குங் கண்ணகன் முழி" (உ௪ அ), "கவிசெந் தாழிக் குவிபுறத் திருந்த" (உ ஈ அ) "ஈமத் தாழி, யகலி தாக வீனமோ" (உருஊ) "தாழிய டெருங்கா டெய்திய ஞான்றே" (ஈ.ஙச) எனவரும் புறநானூற்றுப் பாடல்களாலுணர்க; இது, முதுமக்கட்டாழி யெனவும் வழங்கும்.

ஊ. இளிவுடன் - அருவருப்புடன். ஊ. சும்மை - ஒலி.

எ0. எஞ்சியோர் - வீவித்திருப்போர். ஈமஞ் சாற்றி - ஈமமுண்டென் பதைச் சொல்லி.

(பி - ம்.) ஊ. 'காழ்வயினடப்' ஊ. 'இரவும்பகலுமேயாவீடினறி வரு' எ0. 'எஞ்சினர்மருங்கினேமஞ்சாற்றி'

சூ.—சக்கரவாளக்கோட்டமுரைத்தகாதை. எகூ

நெஞ்சு நடுக்குறூஉ நெய்த லோசையும்
துறவோ ரிறந்த தொழுவிளிப் பூசலும்
பிறவோ ரிறந்த வழுவிளிப் பூசலு
நீண்முக நரியின் றீவிளிக் கூவுளு
எறி சாவோர்ப் பயிருங் கூகையின் குரலும்
புலவுண் பொருந்திய குராலின் குரலு
மூண்டலை தற்றிய வாண்—லைக் குரலு
நன்னீர்ப் புணரி நளிகட லோதையி
னின்னு விசையொலி யெண் ணுறின் றுறுது

எகூ. நெய்தல் ஓசையும் - நாயைப் போன்ற ஓசையும்; "நரி னெய்தல் கறங்க வோரி, நீர்த்தண முடைபி ரம்பி" (புறநா. ககூஅ); "பலல வர்க் கிரங்கும் பாடிமிழ் நெய்தல், கழைக ரைகொடிகுங் காடு" பு - வே. காஞ்சிப்பொதுவியற்பா), ர.

எஉ. தொழுவிளிப் பூசல் - நரிமுழக்கம்; துறவோராதலால், தொழு விளிப்பூசலை கூறப்பட்ட து.

எஙூ. பிறவோர் - இலராதலாலோ.

எடு. இறப்போரை அழைக்கும் பேராசையினை ஒலியும்; பேராசை செத்தோரை அழைக்குமென்றுங் கூறுவர்; "போழ்வாயகை, கூகை, சுட்டுக் குவியெரி செத்தோர்ப் பயிருங், கரியம் பறந்தலை" புறநா. உசo.

எசூ. குரால் - கோட்டான்.

எள. உணவாகத் தீவழுங்கிய கடித்துண்ட ஆனடலைப்பறவை களின் குரலும்; ஆண்—லைப் பறவை-ஆணமக துதலைபோன்ற வடிவமுள்ள ஒருவகைப் பறவை; இதன, "நீணடலைபி டதறி நிரை துவைத்த கெடுங்குஞ் சிசுசிரத்தைத் தனினெடு மெரு மணி, யாண—லைபடு மருகணைந்து பார்க்கு மாலோ வுதழுமச ரிரமச முழுதுந் மாரே ர" (கலிங்க. கோயிலபாடி யது, கசு) எ ர்பதனாலுணர்க ; "அழுகுரற கூகைபோ டாண்டலை விளிப் பவும்" (பட்டின. உரிஅ); "ஆண—லை பா—" (முத்தநிருப். கூ); "ஈமத்தா மமு மெரியு மிருடி நிரகா, மக் கூகையு மோரிய முறழுமநற் கதிக்கும், யாமத் தலடிவக தாண்டலை மாண லிவ்வை கூகுர, நீமைக் கேயிட னுயதோர் செம்மலை யுடை—த்" நல. தரு. ர.

எஅ. புணரி நளி கட ல - மீன்கள் நெருங்கிய பெரிய கடல். ஓதையின் - ஓசை போல.

எக. இன்னு இசை ஒலி - துன்பத்தை இசைக்கின்ற ஒலிகள்.

சுகூ - எக. மாறுசு கம்மையும், நெய்தலோசையும், தொழுவிளிப் பூச

(பி-ம்.) எகூ. 'வாழுவி ரிப்பூசலும்' எஙூ. 'வீழுமுகநரியி ன்றீவிளிக்குர லும்'எசூ.'புலாலுண்பொருந்திய குராலுணகுரலும்' எள.'ஊன்தலைதற்றிய' எஅ. 'நளிர் கடல்'

அ0 தான்றியு மொடிவையு முழிஞ்சிலு மோங்கிக்
கான்றையுஞ் சுரையுங் கள்ளியு மடர்ந்து
காய்பசிக் கடும்பேய் கணங்கொண் டுண்டு
மாலமர் பெருஞ்சினை வாகை மன்றமும்
வெண்ணிணந் தடியொடு மாந்தி மகிழ்சிறந்து
அரு புள்ளிறை கூரும் வெள்ளின் மன்றமுஞ்
சுடலை நோன்பிக ளொடியா வுள்ளமொடு
மடைதீ யுறுக்கும் வன்னி மன்றமும்
விரத யாக்கைய ருடைதலை தொகுத்தாங்
கிருந்தொடர்ப் படுக்கு மிரத்தி மன்றமும்

லும் அழுவிளிப் பூசலும், கூவும், குரலும், குரலும் குரலும் ஆகிய இன்ன விசைகள் அறுதிருக்கப்பெற்று.

அ0 - அக. தான்றி முதலிய மரவிசேடங்கள் நெருங்கப்பெற்று.

அஉ. காய்பசி - மிக்கபசி; (மணி. சு: ககஎ; மெடி. ககூ: ஈகூ.)கணம்-கூட்டம்.

அங. மால் - மேகம். சினை -கினை. பலபேய்கள் கூட்டங்கொண்டிருத்தற்கு இடமானதுபற்றி, வாகையடிமன்ற மெனப்பட்டது. பின் வருவன வற்றையும், இப்படியே கொள்க. ஊருக்கு நடுவாய் எல்லாருமிருக்கு மரத்தடியை மன்றமென்பர் (முருகு. உஉசு.) ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

அச. தடி - தசை. மாந்தி - உண்டு.

அரு. புள் - பேராந்தை, கோட்டான், கழுகு, பருந்து, காக்கை, ஆண்டலைப்புள் முதலியவைகள். இறைகூரும் - தங்குதல் மிக்க. வெள்ளில் - விளாமரம்.

அசு. சுடலை நோன்பிகள்-காபாலிகர்; "இறைவி கோட்டத்து ளீரிருதிங்கள தகவை, யுறையு ளாகவவ் வுறையருங் காட்டகத் துறைவான், பொறையு மாற்றலும் பூமியு மேருவு மணையான், சிறைசெய் சிந்தையா னந்தமில் பொருள்களைத் தெரிந்தான்" (தரும. எ) என்னும் நீலகேசிச் செய்யுளால் 'முனிசந்திரன்' என்ற ஒரு முனிவன் மயானத்திலிருந்து தவஞ்செய்தானென்று தெரிகிறது. ஒடியாவுள்ளம் - தளராதவுள்ளம்.

அள. மடை - சோறு. வன்னி - வன்னிமரம்.

அஅ. உடைதலைகளைச் சேர்த்து.

அக. இருந்தொடர்ப்படுக்கும் - பெரியமாலைகளாகச்செய்யும். இரத்தி மன்றம் - இலக்கைமரநிற்கும் மன்றம்; "இரத்தி நீடிய வகன்றலை மன்றத்து" புறநா.கூச.

(பி - ம்.) அ0. 'ஓமையு முழிஞ்சிலு மொடுங்கிக்' அக. 'கள்ளியும் படர்ந்து' அகூ. 'ஆலம் பெருஞ்சினைவாகை மன்றமும்' அச. 'வெண்ணிணக் குடியொடுமாந்தி' அரு. 'வெள்ளிடை மன்றம்' அக. 'இருந்தடிபடுக்கும்'

கூ0 பிணந்தின் மாக்க ணிணம்படு குழிசியில்
விருந்தாட் டயரும் வெள்ளிடை மன்றமு
மழற்பெய் குழிசியும் பிழற்பெய் மண்டையும்
வெள்ளிற் பாடையு முள்ளீட் டறுவையும்
பரிந்த மாலையு முடைந்த கும்பமு
கூடு செல்லும் பொரியுஞ் சில்பலி யரிசியும்
யாங்கணும் பரந்த வோங்கிரும் பறந்தலை
தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வ
ரீற்றிளம் பெண்டி ராற்றுப் பாலகர்
முதியோ ரென்ஞ னிளையோ ரென்ஞன்
கoo கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்பவிவ்
வழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டுங்

கூ0. குழிசி - பாணை.

கூக. வெள்ளிடைமன்றம்- வெளியான இடத்தையுடையமன்றம்; "உள்ளூர்ப் பனிக்கும் வெள்ளிடை மன்றமும்" சிலப். (ந): கசஎ.

கூஉ. பிழற்பெய்மண்டை.?

கூங. வெள்ளிற் பாடை, இருபெயரொட்டு. உள்ளீட்டறுவை - உள்ளே பண்டங்கள் இடுதலிடப்பெற்ற உறி; "சுவல்மே லறுவையும்" (சிலப். கo: கூஅ.) அறுவை - சீலையெனின், உள்ளீட்டையுடைய கிழியுமாம்.

கூச. பரிந்த மாலை - பாடையிற்கட்டி அறத்தெறியப்பட்ட மாலை; "வெள்ளின் மாலையும் விரிந்தவெண் டலைகளுங் கரிந்த, கொள்ளி மாலையுங் கொடிபடு கூறையு மகலும், பள்ளி மாறிய பாடையு மெலும்புமே பரந்து, கள்ளி யாரிடைக் கரந்ததோர் தோற்றமுங் கடிதே" நீல. தரும. ச.

க்ரு. சில்பலி யரிசி - சிறுபலியாகிய அரிசி; "நூவெள் ளரிசி, சில் பலிச் செய்து" முருகு. உகூ - ச.

கூசு. பறந்தலை - பாழிடம்.

அஉ - கூசு. வாகைமன்றமும், வெள்ளிமன்றமும், வன்னிமன்றமும், இரத்திமன்றமும், வெள்ளிடை மன்றமும் ஆகிய இம்மன்றங்களையாங்கணும் அழற்பெய்குழிசி முதலியவைகள் பரந்த பறந்தலையென்க.

சுரு - கூசு. பரந்து அழுது பரந்த பறந்தலையென்க.

கூஅ. ழ. மணி. எ : அக. கoo. கொடுந்தொழிலாளன் - காலன்.
சூக - கoக. ஆரிடை பறந்தலை சுடலை தின்னக்கண்டும்.

(பி - ம்) கூ0. 'பிணந்தின்மாகக்கணிணம்படுகுழிசியின்' கூஉ. 'பிழற் பெய்மண்டையும்' கூங. 'இளையோ ரென்ஞன் முதியோ ரென்ஞன்'

கழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து
மிக்க கல்லறம் விரும்பாது வாழு
மக்களிற் சிறந்த மடவோ ருண்டோ
கஅடு வாங்கது தன்னெயோ ருருங்கடி நகரெனச்
சார்ங்கல னென்போன் றனிவழிச் சென்மோ
னென்புக் தடியு முதிரமு மியாக்கையென்
றன்புறு மாக்கட் கறியச் சாற்றி
வழுவொடு கிடந்த புழுவுன் பிண்டத்
ககஅ தலத்தக மூட்டிய வடிநரி வாய்க்கொண்
டிலப்பி னின்பமோ டுணக்கு மோதையுங்
கலேப்புற வல்குல் கழுகுகுடைக் தண்டு
நிலத்தலை நெடுவிளி யெடுக்கு மோதையுங்
கடகஞ் செறித்த கையைத் தீநா
ககடு யுடையக் கவ்வி யொடுங்கா வோதையுஞ்
சாந்தந் தோய்ந்த வேந்திள வனமுலை

கஅஉ. மிகப்பெரியசெல்வமாகிய கள்ளையுண்டு விளையாடுதலிற்செய்தது.

கஅசு. மடவோர் - மூடர்.

கஅடு. அதுதன்னை - அம்மையாகத்தை. கழு - காவல்.

கஅசு. தனிவழிச்சென்றுணுகிய சார்ங்கலன்.

கஅஅ. அன்புறு மாக்கட்கு - உடம்பினிடத்தே அன்புமிகுந்த மனிதர்கட்கு. மாக்களென்றார், இம்முறைவைத்தியமாதி மனவுணர்ச்சியில்லாதவரென்றற்கு; "மாவு மாக்களு மையறி வினவே" தொல். மரபு. சூ. கஉ.

கஅள - அ.யாக்கை, என்பு முதலியவாயெலும்பு மாக்கட்குச் சாற்றி.

கஅக. வழு - தானுணிசேடம் ; வழுவொடு - வழுவுதலுடனென்று மாம். பிண்டமென்றது உடம்பை.

கஅஅ -கூ.சாற்றிக் கிடந்தவெல்க; இனி, சாற்றி வாய்க்கொண்டுஉணக்கும் நரியோதையெனினுமமையும்.

ககஅ. அலத்தகம் - செம்பஞ்சுக்குழம்பு.

ககக. உலப்பு இல் இன்பமோடு - நீங்கடில்லாத இன்பத்தோடு.

ககச. நீநாய் - மயானத்திற்றிரியும் ஒருவகைநாய்.

(பி - ம்.) கஅடு. 'தன்னே யொருங்குகழ நகரென' கஅள. 'அன்புந்தழியும்' கஅக 'வழுவொடு தோய்ந்தபடிமுன் பிண்டத்து' ககஉ. 'நிலத்தலை' ககடு. 'கழுவி'

காய்ந்தபசி யெருவை கவர்ந்தூ ணுணைதையும்
பண்புகொள் யாகைகையின வெண்பலி யரங்கத்து
மண்கணை முழவ மாக வாங்கோர்
கஉ0 கருந்தலை வாங்கிக் கையகத தேந்தி
யிரும்பே ருவகையி னெழுதோர் பேய்மகள்
புயலோ குழலோ யெலோ கண்ணே
குமிழோ மூககோ விதழோ கவிரோ
பல்லோ முதலோ வென்னு திரங்காது
கஉரு கண்டொட் டிண்டி கைவையடி பெயர்த்துத
தண்டாக் களிப்பி னுடிங்கு கூதறுக
கண்டனன் வெளீஇக கதிருவை யெய்தி

ககள. காய தபசு-பிக்க டீ (மஹா. : அஉ; பிஷ். க : ஈ.)எருவை-தலைவெளுத்து உட) நிலர் (ரஜ்ஜு) ரு ; கழுகுமாம்; "யிசும்பா டெரு வை பசுந்தடி தடுப்ப" புறநா. ஈ.

ககஅ. வெளபலி யரங்கத்து - சாமபர குப பாகிய ஊருகத்திலே.

ககக. மண கணை - முழுமாக - மாரி சு யமைந்த நிணை தண்ணு மையாக; தணை யுமை - ந் ர் குரிய)) கத தோலாகருவி.

ககக - கூ. உ கரு மோலை தயிர, ஒடருமோலை தயும், நுங்கா வோ தையும், கொர நூணை தயிம ந ய நுலை க ர முழு மாக டலைக.

கஉ0. கருந்தலை ப நறு, ந) பணை) ஸரி தலையை.

கஉக. பேயமக ர - ல) பே ர.

கஉங. குமிழு - குமிழமரு. கவர - ( ) முறுக்கம்பு.

கடஅ. ஈ ரறுதி - ட ல கருநாம .

கஉரு. கண தொ_பி உ ஸ) - க ர (தோலை ழ உணவி ; "கண டொடடிணை" (புறநா. ப), பெயரடி - கை) தி ழுக்கோபபெயராதது; "கருமறிக காந்த கையடி ப டபபாக ர" திருபாண். கசுஅ.

கஉசு. தண்டாக க ரிப்பு - தணியாதக ர்ப்பு; "தண_ாவீகைத தகை மாண குடுமி" புறநா. .

ககக-ஈசு. உனைகுமோ தறுத லிய முழு மாகவெண்பலியரங்கத்தில ஒரு பேய்மகள கையடி பெயாத்து நுடிங்குகூதல தெயினாக.

கஉள. கண்ட ஸ ர - கணவி. கழுவல பெயரநி - அபபெயராத பிடிக கபபட்டு; "கழு கட கூளிக கடுவ) ப _டோர" சிலப். சு: கஉருி.

கஐ -) ர. செ (ரோ) ப சாரங்க (ர போல கணவி.

(பி - மீ.) க ர. 'அதி ர ல' க ர. 'கையடிபெயர்த்து', 'கையடிபெயாதது' கஉசு. 'க ர லிருடா ல'

விண்டோர் திசையின் விளித்தனன் பெயர்ந்தீங்
கெம்மனை காணு மீமச் சுடலையின்
கஙo வெம்முது பேய்க்கென் னுயிர்கொடித் தேனெனத்
தம்மனை தன்முன் வீழ்ந்துமெய் வைத்தலும்
பார்ப்பான் றன்னெடி கண்ணிழந் திருந்தவித்
தீத்தொழி லாட்டியென் சிறுவன் றன்னை
யாருமி றமியே னென்பது நோக்கா
கஙரு தாருயி ருண்ட தணங்கோ பேயோ
துறையு மன்றமுந் தொல்வலி மரனு
முறையுளுங் கோட்டமுங் காப்பாய் காவாய்
தகவிலை கொல்லோ சம்பா பதியென

கஉஅ. விண்டு - நீங்கி. விளித்தனன் பெயர்ந்து - கூப்பிட்டுக்கொண்டு பெயர்ந்து.

கஉசு. எம்மனை - என் தாயே.

கஙக. தனது தாயின்முன்னே, இறக்கவும்.

கoசு - ஙக. சார்ங்கலனென்பான் வீழ்ந்து மெய்வைத்தலும்.

கஙஉ. பார்ப்பானென்றது, சார்ங்கலன் தந்தையை; "பார்ப்பான் றன் னெடி கண்ணிழந் திருந்த" என்று இங்கே சொல்லுதலாலும், "கண்ணில் கணவனே" (ஃ :கருரு) என்று பின்பு வருதலாலும், சார்ங்கலனுடைய தந் தைதாயரிருவரும் கண்ணிழந்தோரென்பது பெறப்பட்டது.

கஙசு. மணி. ஃ: கசசு.

கஙரு. அணங்கோ பேயோ ; (மணி. சு : கசஅ, கருo.) அணங்கு - காமநெறியான் உயிர்கொள்ளும் தெய்வமகளென்பர்; குறள். ஙகஅ - பரி.

கஙங - ரு. சிறுவன் றன்னை ஆருயிருண்டது.

கஙசு. துறை - நீர்த்துறைகள். தொல்வலி மரன் - பழைய வலியை யுடைய மரம்.

கஙஎ. உறையுள் - தங்குமிடம். காவாய் - காவாமலிருத்தாய்.

கஙசூ - எ. முருகு. உஉக - சு.

கஙஅ. தகவிலை கொல்லோ - தகவின்மையையுடையாயோ ; தகவு நின்னிடமில்லையோ என்றுமாம்.

(பி - ம்.) கஉஅ. 'விளித்தனன்' கஉசு. 'காணுவீமச்' கஙo. 'பேய்க்கே முன்னுயிர்' கஙக. 'தம்முன்வீழ்ந்துமெய்வைப்பப்' கஙஉ-ங. 'ஒழிந்த, விதித் தொழி' கஙச. 'யாருமிறமியோனென்பதுநோக்கா' கஙசூ. 'தொல்பதி மரனும்'

மகன்மெய் யாக்கையை மார்புறத் தழீஇ
கசo யீமப் புறங்காட் டெயிற்புற வாயிலிற்
கோதமை யென்பாள் கொடுத்துயர் சாற்றக்
கடிவழங்கு வாயிலிற் கடுத்துய ரெய்தி
யிடையிருள் யாமத் தென்னையிங் கழைத்தனை
யென்னுற்றனையோ வெனக்குரை யென்றே
கசசு பொன்னிற் பொலிந்த நிறத்தா டோன்ற
வாருமி லாட்டியென் னறியாப் பாலக
னீமப் புறங்காட் டெய்தினேன் றன்னை
யணங்கோ பேயோ வாருயி ருண்ட
தூறங்குவான் போலக் கிடந்தனன் காணென
கடுo வணங்கும் பேயு மாருயி ருண்ணு
பிணங்குநான் மார்பன் பேதுகந் தாக
வூழ்வினை வந்திவ னுயிருண்டு கழிந்தது
மாபெருந் துன்பநீ யொழிவா யென்றலு
மென்னுயிர் கொண்டிவ னுயிர்தந் தருளிலென்
கடுசு கண்ணில் கணவனை யிவன்காத் தோம்பிடு
மிவனுயிர் தந்தென் னுயிர்வாங் கென்றலு
முதுமூ தாட்டி யிரங்கினண் மொழிலோ

கசக. கோதமை, அவளபெயர். கொடுத்துயர் - தன்மகன் இறந்தா னென்பது.

கசஉ. மணி. சு: சகூ.

கசஙூ. இருளையுடைய இடையாமத்தில்.

கசஞ. பொன்னிற் பொலிந்த நிறத்தாள் - ஞாயிறணைப்போல் விளங்கிய நிறத்தினையுடைய சம்பாபதி; பொன் - சூரியன்; "இலங்கதிர் ஞாயி றெள்ளுந் தோற்றத்து, விளங்கொளி மேனி விரிசடை யாட்டி" (க - உ.) என்று இந்நூற்பதிகத்தில் வருதல் காண்க.

கசசு. மணி. சு: கசூ. கசகூ. எனை - என்று கோதமை சொல்ல.

கடுக. மார்பன் - சார்ங்கலன். பேது கந்தாக-அறியாமை காரணமாக.

கடுஙூ. னென்றலும் - எனறு சம்பாபதி சொல்லலும்.

கடுஞ. கண்ணில் கணவனை: (மணி. சு: கஙஉ.) ஓம்பிடும் - பாது காப்பான்.

கடுசு. என்றலும் - என்று கோதமை சொல்லலும்.

கடுஎ. முதுமூதாட்டி - சம்பாபதி.

(பி - ம்.) கஙூ. 'யாக்கைமார்பு ற' கசஙூ. 'அழைத்தாய்' கசசு. 'அறி யாப்பார்ப்பான்' கசஎ. 'எய்தியோன்' கடுக. 'பேயதுகந்தாக' கடுஙூ. 'துன்ப மொழிவாய்' கடுஎ. 'உயிர்தந்தாலென்'

னைய முண்டோ வாருயிர் போனுற்
செய்வினை மருங்கிற் சென்றுபிறப் பெய்துத
கசுஉ லாங்கது கொணர்ந்துநின் னரிடர் நீக்குத
லீங்கெனக் காவகொன் றன்றுநீ யிரங்கல்
கொலையற மாமெனுங் கொடுந்தொழின் மாக்க
ளவலப் படிற்றுரை யாங்கது மடவா
யுலக மன்னவர்க் குயிர்க்குயி ரீவோ
கசுரு ரிலரோ விந்த வீமப் புறங்காட்
டரசர்க் கமைந்தன வாயிரங் கோட்ட
நிரயக் கொடுமொழி நீயொழி யென்றலுங்
தேவர் தருவர் வரமென் றிருமுறை
நான்மறை யந்தணர் கன்னு வுணைக்கு
கள0 மாபெருந் தெய்வ நீயரு ளாவிடின்
யானே காவே னென்னுயி ரீங்கென
வூழி முதல்வ னுயிர்தரி னலல

கருஅ - கூ. பிரம்மதத்தனிடம் போய்முறையிடாமல்; "செய்வினை வழித்தா யுயிர்செறு மென்பது, பொய்யின் காட்டிற்போர் பொருந நாதலின்" சிலப். உரை: கனல் - ப.

கசுஉ. அது - ஆகுபெயர். யானிட்ட - நீர்த்தற்குரிய பூப்பலம்.

கசுக. எனக்கு ஆயுதான்றரு - எனக்கு இப்பழியான ஒரு காரிய மன்று.

கசுச. அலைப்படித்தல் - கொல்லத் தருகின்ற பொய்யுரை. அது அவலப்படித்தலெனக்க.

கசுரு. இலரோ - உளர். புறங்காட்டில்.

கசுள. ஆயிரம் கோட்டம் ஆமைத்த - ஆயிரம் - அனேகம்; "இதமதோர் மருங்கிற் சிதம்பிதார் செய்த, குருதிப் பலியவர் குருதிகள் பருகி, சுடுமண் ணேங்கிய கெடுகிலக் கொடுமுடி" (பரி: முரு - கூ) என்றார் முன்னும்.

கசள. நிரயக் கொடுமொழி - நரகத்தைத்தரும் கொடிய வார்த்தை; என்றது, "இலையிர் தளிரிர் பூவிரென்னாது" (மணி. உ: கருகூ) என்றதை; எனறலும் - எனப்படும்பாடிணை யாகலும்.

கள்ஞ. நான் - வேதம். அ.ம. தெய்வமாகிய நீ.

களக. யாசிப்பவனுயிரைக் காத்தற்பொருட்டுப் பொய் கோதமை சொல்ல.

களஉ. ஊழிமுதல்வன் - மாதவர்; "தெய்வக் கருவுக் திசைமுகக் (பரி - மீ.) கள்ஞ. 'ஆலையிலம்' 'அலைப்படித்துரை' கசுரு. 'புறங்காட்டில்' கசள. 'வரம்பெறுதாடு' கஉ. 'செல்லாவுரைக்கு' களக. 'என்னுயிரென்றபின்'

தாழித் தாழி யகவரைத் திரிவோர்
தாந்தரின் யாணுந் தருகுவன் மடவா
கஎரு மீங்கெ னுற்றலுங் காண்பா யென்றே
நால்வகை மரபி னரூபப் பிரமரு
நாலுல் வகையி னூரூபப் பிரமரு
மிருவகைச் சுடரு மிருமூ வகையிற்
பெருவனப் பெய்திய தெய்வத கணங்களும்

கருவுஞ்,செம்மலர் முதியோன் செய்த வற்காள்'' (மணி. பதிகம்: உ-அ-கூ.) இகரத்தை அசைநிலையாக்கி ஊழ்வினையாகிய முதல்வனெனக்கூறினும் பொருந்தும்.

கஎகூ. சக்கரவாளமாகிய தாழியினுடைய உள்ளிடத்தே சஞ்சரிப்பவர்.

கஎச. தானெனவே தரலிற்மை பெறப்பட்டது.

கஎகூ - ச. இறந்துபோன உயிரை மீட்டுக்கொடுக்குமாற்றல் இந்தச் சக்கரவாளத்திலுள்ள தேவர்களுக்கு எங்ஙனமில்லையோ அங்ஙனமே எனக் குமில்லை யென்றபடி.

கஎரு. ஆற்றல் - வலி. என்று - என்று சம்பாபதிசொல்லி.

கஎசு. நால்வகை மரபின் அரூபப் பிரமரும் - உலகம் மூப்பத்தொன் றனுள் இருபத்தெட்டாவதாகிய 'ஆகாசாநந்தியாயதனலோகம்' முதலிய நான்கு உலகங்களிலுமுள்ள அரூபப்பிரம்மசாதியாராகியநால்வகையினரும். இவர்களைத் தியானம் ஐந்தனுள் அவிசேஷமென்னும் ஐந்தாவதில் தேறிய வர்களென்பர்.

கஎள. நால் நால்வகையின்உரூபப் பிரமரும் - மேற்கூறிய உலகங்களுள் பன்னிரண்டாவதாகிய 'பிரஹ்மகாயிகலோகம்' முதலாகிய உலகம் பதி னாறிலுமிருக்கிற உரூபப்பிரஹ்ம சாதியாராகிய பதினாலுவகையினரும்; இவர் களில் கஉ, கஊ, கச-ஆம் உலகங்களிலுள்ளவர்களே 'ஸ்ரோதாபத்தி' என் னும் முதலாவது தியானத்தில் தேறியவர்களென்றும், கரு, கசு, கள-ஆம் உலகங்களிலுள்ளவர்களே 'ஸகிருதாகாமி' என்னும் இரண்டாவது தியானத் தில் தேறியவர்களென்றும், கஅ, கசு, உ0-ஆம் உலகங்களிலுள்ளவர்களே 'அநாகாமி'என்னும் மூன்றாவது தியானத்தில் தேறியவர்களென்றும், உக-ஆ வது முதலிய ஏழுலகங்களிலுள்ளவர்களே 'அர்ஹத்' என்னும் நான்காவது தியானத்தில் தேறியவர்களென்றும் பௌத்தநூல்கூறும்.

கஎசு - எ. இருவகைப் பிரம்மலோகங்கள் இருபதின் பெயர்களையும் இந்நூற்பதிகத்தின் உ-அ-கூ ஆம் அடிகளின் உரையிற்காண்க.

கஎஅ. இருவகைச்சுடர்-சந்திர சூரியர்கள்.

கஎஅ - கூ. மேற்கூறிய உலகம் மூப்பத்தொன்றனுள் ஆறாவதாகிய 'மஹாராஜிகலோகம்' முதலிய உலகம் ஆறிலுமுள்ள அமரவகைத்

(பி - ம்.) கஎகூ. 'அகவயிற்றிரிவோர்' கஎச. 'மடவோயீங்கெனுற் றலுங்' கஎசு. 'பிடமரும்' கஎள. 'உருபிதப்பிரமரு', 'உருபப்பிடமரு'

கஅ0 பல்வகை யுரகரும் படுதுய ருறூஉ
மெண்வகை நரகரு மிருவிசும் பியங்கும்
பன்மீ னீட்டமு நாளுங் கோளுந்
தன்னகத் தடக்கிய சக்கர வாளத்து
வரந்தரற் குரியோர் தமைமுன் னிறுத்தி
கஅந யாந்தை கெடுமிவ ளருந்துய ரிதுவெனச்
சம்பா பதிதா னுரைத்தவம் முறையே
யெங்குவாழ் தேவரு முரைப்பக் கேட்டே
கோதமை யுற்ற கொடுந்துயர் நீங்கி
யீமச் சுடலையின் மகனையிட் டிறந்தபின்
கஙூ0 சம்பா பதித னுற்ற நேரன்ற
வெங்குவாழ் தேவருங் கூடிய விடந்தனிற்

தெய்வகணங்கள். இத்தலங்களின் பெயரைப் பதிகத்து உஅ-ஆம் அடியின் உரையிற்காண்க. 'பெருவளப் பெய்திய' என்றார் விளங்கொளி மேனியாதலின்.

கஅ0. படுதுயர் - மிக்க துன்பம்.

கஅக. எண்வகை நரகர் - மேற்கூறிய உலகம் முப்பத்தொன்றனுள் முதலாவதாகிய நரகலோகத்தின் பகுதிகளான மாநாரகியம், ரௌரவம், காலஸூத்ரம், ஸஞ்ஜீவனம், மஹாவீசி, தப்தம், ஸம்பி தாபனம், ஸம்ஹதம் என்னும் எட்டு நரகங்களிலுமுள்ளவர்கள்.

கஅஉ. ஈட்டம் - கூட்டம். நாள் - இருபத்தேழு கூட்டத்திரங்கள்.

கஅங. மேற்கூறிய அருப்பிரதேசமகணலோகமுதலியவற்றைத் தன்னுள் அடக்கிய கோளத்தைச் சக்கரவாளமெனப்பர்; "சக்கர வாளத்துத் தேவரெல்லாம்" (மணி. கஉ: எஉ), "எண்ணருஞ் சக்கர வாள மெங்கணும்" (சிந். உசு: நுஉ) என வருதல் காண்க.

கஅச. வரந்தரற்குரியோர் - தேவர். முன்னிறுத்தி - கோதமைக்கு முன்னே நிறுத்தி.

கஅடு. அரந்தை - துன்பம். கெடும் - கெடுமின். எனல் - என்று சம்பாபதி சொல்ல.

கஅசு - எ. சம்பாபதி உரைத்தமுறையினை மணி. ஃ: களஙூ - சஆம் அடிகளிற்காண்க.

கஅஅ. இறக்கத் துணிந்தமையால் கோதமை கொடுந்துயர் நீங்கினள். இது போன்ற நிகழ்ச்சியைச் சிலப்பதிகாரம், உடு: அஉ - ஆம் அடி முதலியவற்றிற் காண்க.

கஅகூ. ஈமம் - பிணஞ்சுடுதற்கு அடுக்கும் விறகுமிக்கு.

கஙூ0. - கங. தோன்றக் கூடியவிடமென்க.

(பி - ம்.) கஅஉ. 'பண்பினீட்டமு' கஅச-டு 'உரந்தரற் குரியோர் தம்மைமுன் னிறுத்தின், காக்கை' கஙூங. 'அங்குவாழ் தேவருங் கூட்டிய'

சூழ்கடல் வளைஇய வாழியங் குன்றத்து
நடுவு நின்ற மேருக் குன்றமும்
புடையி னீன்ற வெழுவகைக் குன்றமு
கஉடு நால்வகை மரபின் மாபெருந் தீவு
மோரீ ராயிரஞ் சிற்றிடைத் தீவும்
பிறவு மாங்கத னிடவகை யுரியன
பெறுமுறை மரபி னறிவுவக் காட்டி
யாங்குவா ழுயிர்களு மவ்வுயி ரிடங்களும்
உ00 பாங்குற மண்ணீட்டிற் பண்புற வகுத்து

கஉஉ. சூழ்கடல - பெரும்புறகடல். ஆழியங்குன்றத்து - சக்கரவாளகிரியின் உட்பட்ட இடத்தில்.

கஉங. நடுவிடத்தே நின்றதாகிய, எண்பத்தீராயிரம் யோசனை உயரமும் அவ்வுயரத்திற்குத் தக்க பருமையும் அமைத்துள்ள மேருமலையும்.

கஉச. அம்மேருவின் பக்கத்தே அதிலிருந்து உயரத்தில் ஒன்றற் கொன்று வரவரப் பாதி பாதியளவு குறைந்து குறைந்து ஒன்றைச்சுற்றியொன்றுகச் சூழ்ந்துள்ள ஏழு குலகிரிகளும்.

கஉடு. மேற்கூறிய மேருவும் அதனைச் சூழ்ந்துள்ள ஏழுகுலகிரிகளும் அக்குலகிரிகளுள் ஒவ்வொன்றினையும் சூழ்ந்து அவ்வக்கிரியின் உயர அளவுள்ள ஆழமும் அகலமுமமைந்த ஏழு கடல்களும் ஆகிய இவற்றையெல்லாம் சூழ்ந்து கிடக்கும் பெரும்புறக்கடலிலுள்ள சம்புத்தீவு முதலிய நான்கு மகாத்வீபங்களும். இந்த நான்கினுள் தெற்கேயுள்ளது சம்புத்தீவு; இது 'நாவலந் தீவு' என்றுங் கூறப்படும்; இதனை "நாவலோங்கிய மாபெருந் தீவு" (மணி. உ: க), "நாடலொடு பெயரிய மாபெருந்தீவத்து" (மஞ்சி. கக: கoஎ) என்பவற்றாலுணர்க.

கஉசு. மஹாத்வீபம் நான்கினுள் ஒவ்வொன்றையும் தனித்தனியே ஐந்நூறு ஐந்நூறுகக் சூழ்ந்துள்ள இரண்டாயிரம் சிறு தீவுகளும்; இச்சிறு தீவுகள் அந்தரத்தீவுகளென்றுஞ் சொல்லப்படும்.

கஉடு - சு. "அந்தரத் தீவினு மகன் பெருந் தீவினும்" (உடு: உஉச.) என்று பின்வருதல் காண்க.

கஉஉ - சு. இவ்வடிகளிலுள்ள வரலாறுகள் பர்மாதேசத்துப் புத்த நூலிலிருந்து தெரிந்துகொள்ளப்பட்டன.

கஉள - அ. உரியமவற்றைக்காட்டி.

கஉஉ. உயிர்களென்றது, அவ்வவ்வுயிர்கள் வாழுகின்ற உடம்புகளை.

உ00. பாங்கு - பகுத்திதிரள்; "அடியோர் பாங்கு மாயமு நீங்கி" (சிலப். கசு: அடி); அழகுமாம். மண்ணீட்டின் - சுதையாற் செய்யப்பட்டுள்ள பாவைவடிவமாக.

(பி - ம்.) கஉஉ 'ஆழிக்குன்றத்து' உ00. 'மண்ணிடிற்'

மிக்க மயலு விழைக்கப் பட்ட
சக்கர வாளக் கோட்டமீங் கிதுகா
ணிடுபிணக் கோட்டத் தெயிற்புற மாதலிற்
சுடுகாட்டுக் கோட்ட மென்றல தூரையா
உ0நி நிதன்வர விதுவென் நிருந்தெய்வ மூரைக்க
மதனி னெஞ்சமொடு வான்றுய செய்திப்
பிறந்தோர் வாழ்க்கை சிறந்தோ ளுரைப்ப
விறந்திருள் கூர்ந்த விடையிருள் யாமத்துத்
தூங்குதயி லெய்திய சுதமதி பொழியப்
உக0 பூங்கொடி தன்னைப் பொருந்தித் தழீஇ
யந்தர மாரு வாறைந் தியோசனைத்
தென்றிசை மருங்கிற் சென்றுதிரை யுடுத்த
மணிபல் லவத்திடை மணிமே கலாதெய்வ
மணியிழை தன்னைவைத் தகன்றது தானென்

கூ.—சக்கரவாளக்கோட்டமுரைத்தகாதை முற்றிற்று.

உ0க. மயன் - தெய்வத்தச்சன்; அசுரத்தச்சனென்றுங் கூறுவர்.

உ0ங. இடதல் - போகவிடுதல். பிணக்கோட்டம் - மயானம்.

உ0ச. பு. மணி. கூ: ஙக0.

உ0நி. இருந்தெய்வம் - மணிமேகலாதெய்வம்.

உ0கூ. மதனில் நெஞ்சமொடு - செருக்கற்ற மனத்துடனே.

உ0எ. சிறந்தோள்-மணிமேகலை; வாழ்க்கையென்றது நிலையாமையை. வாழ்க்கையைச் சிறந்தோள் உரைப்ப.

உ0அ. இடையிருள் யாமத்து - நடுயாமத்தில்; மணி. கூ: கசங.

உக0. பூங்கொடிதன்னை - மணிமேகலையை.

உகக. அந்தரம் ஆறு - ஆகாயமே வழியாக.

உகக - உ. முப்பதுயோசனை தூரம் தென்றிசைக்கண்ணே சென்று.

உக0 - கச. மணி. கூ: நிருு - எ.

க - உகச. கதிர்மண்டிலம் சொரிய, மேனியள் ஏத்தி கோக்கி என்னுந் தீரென, அவள் உரைத்தலும், அருந்தெய்வமுரைப்ப, சுதமதி என்னையோ வென, கேரிழை கூறும்; அங்ஙனங்கூறுகின்ற தெய்வம், இதன் வரவு இது வென்றுரைக்க, சிறந்தோளுரைப்ப, தெய்வம் இடையிருள்யாமத்துச் சுத மதியொழியப் பூங்கொடிதன்னைத் தழீஇச் சென்று மணிபல்லவத்தில் வைத்து அகன்றதெனமுடிக்க.

(பி - ம்.) உ0ச. 'என்பவரறியார்' உ0நி. 'இதுவெனவிருந்' உக0. 'பொருந்தினடழீஇ'

ஏழாவது

துயிலெழுப்பியகாதை.

[ஏழாவது மணிமேகலாதெய்வம் உவவனம்புகுந்து சுதமதியைத் துயிலெழுப்பியபாட்டு.]

மணிமே கலைதனை மணிபல் லவத்திடை
மணிமே கலாதெய்வம் வைத்து நீங்கி
மணிமே கலைதனை மலர்ப்பொழிற் கண்ட
வுதய குமர னுறுதுய ரெய்திக்
கங்குல் கழியிலென் கையகத் தாளெனப்
பொங்குமெல் லமளியிற் பொருந்தா திருந்தோன்
முன்னர்த் தோன்றி மன்னவன் மகனே
கோணிலை திரிந்திடிற் கோணிலை திரியுங்
கோணிலை திரிந்திடின் மாரிவறங் கூரு
மாரிவறங் கூரின் மன்னுயி ரில்லை
மன்னுயி ரெல்லா மண்ணுள் வேந்தன்
றன்னுயி ரென்னுந் தகுதியின் ரூகுந்
தவத்திறம் பூண்டோ டன்மேல் வைத்த

கூ. மலர்ப்பொழிற் கண்ட - உவவனத்திற்கண்ட.

சா. உறுதுயர் - மிக்க துன்பம்.

ஞ. கையகத்தாள் - கையினிடத்தே யுள்ளாள்.

சு. பொருந்தாது - துயிலாது. கூ. வறம் - வறுமை.

அ - கஉ. இந்நூற் பதிகம் உசா - ஆம் அடியைப் பார்க்க; "கோணிலை திரிந்து நாழி குறைபடப் பகல்கண் மிஞ்சி, நண்ணில மாரி யின்றி விளைவஃகிப் பசியு நீடிப், பூண்முலை மகளிர் பொற்பிற் கற்பழிந் தறங்கண் மாறி, யாணை வெல் வுலகு கேடா மரசுகோல கோடி னென்றும் " சீவக. உருஞ.

கூ. தவத்திறம் - தவத்தின்கூறுபாடு.

(பி - ம்) சா. 'துயிலெய்தி' அ. 'திரிந்திடக் கோணிலை' கஉ. 'தகுவை யாயின்', 'தகுதியையாயிற்' கூ. 'தவத்திற்பூண்டோ'

வவத்திற மொழிகென் றவன்வயி னுரைத்தபி
கடு னுவவனம் புகுந்தாங் குறுதுயில் கொள்ளுஞ்
சுதமதி தன்னைத் துயிலிடை நீக்கி
யிந்திர கோடணை யிங்ஙகர்க் காண
வந்தே னஞ்சன் மணிமே கலையா
ஞதிசான் முனிவ னறவழிப் படீஉ
உ0 மேது முதிர்ந்த திளங்கொடிக் காதலின்
விஞ்சையிற் பெயர்த்துகின் விளங்கிழை தன்னையோர்
வஞ்சமின் மணிபல் லவத்திடை வைத்தேன்
பண்டைப் பிறப்பும் பண்புற வுணர்ந்தீங்
கின்றேழ் நாளி லிங்ஙகர் மருங்கே
உரு வந்து தோன்று மடக்கொடி நல்லாள்
களிப்புமாண் செல்வக் காவற் பேரூ
ரொளித்துரு வெய்திறு முன்றிற மொளியா
ளாங்கவ ளிங்ஙகர் புகுந்த வந்நா

கச. அவத்திறம் - கேடுசெய்யுங்காரியம் ; "தவஞ்செய்வார்...செய்வாராசையுட் பட்டு" (குறள், உசுக) என்பதில 'அவம்' என்பது இப்பொருளில் வருதல்காண்க.

சு - கச. மணி. கஅ: அ0 - அங.

க - கச. மணிமேகலாதெய்வம் மணிமேகலையை மணிபல்லவத்திடை வைத்து நீங்கிப் பொருத்தாதிருந்தோனுகிய உதயகுமரன்முன்னர்த் தோன்றி நம் ஒழிகவென்று உரைத்தபினென்க.

கள. இந்திரகோடணை - இந்திரவிழா.

கஅ. ழ: சிலப். கடு: கூசு; அஞ்சல் - அஞ்சாதே.

கசு. ஆதிசான்முனிவன் - புத்தன்.

உ0. ஏது முதிர்ந்தது - ஏதுங்கழ்ச்சி முற்றியது.

உக. விஞ்சையின் - வித்தையினுலே.

உச. இன்றேழ்நாளில்-இற்றைக்குஏழாவதுநாளில்; மணி. கக: கஉசு.

உடு. தோன்றும் - தோன்றுவாள். நல்லாள் - மணிமேகலை.

உசு. பேரூர் - காவிரிப்பூம்பட்டினத்தில்.

உள. உருவை மறைத்து வருவாளாயினும்.

(பி - ம்.) கச. 'அவ்வியனுரைத்தபின்' கடு. 'நவவனம்' உக. 'குணர்ந்துகின்' உடு. 'வந்துகாண்குறும்' உசு. 'பெயரூர்' உள. 'உன்றிறமொழியாள்', 'ஊன்றிறமொழியாள்'

நீங்கு நிகழ்வன வேதுப் பலவுள
மாதவி தனக்கியான் வந்த வண்ணமு
மேதமி னெறிமக னெய்திய வண்ணமு
முரையாய் நீயவ ளென்றிற முணருந்
திரையிரும் பௌவத்துத் தெய்வமொன் றுண்டெனக்
கோவலன் கூறியிக் கொடியிடை தன்னையென்
னுமஞ் செய்த நன்ஞ ணள்ளிருட்
காமன் கையறக் கடிகவை யறுக்கு
மாபெருந் தவக்கொடி யீன்றனை யென்றே
நனவே போலக் கனவகத் துரைத்தே
னீங்கிவ் வண்ண மாங்கவட் குரையென்
றந்தரத் தெழுந்தாங் கருந்தெய்வம் போயபின்
வெந்துய ரெய்திச் சுதமதி யெழுந்தாங்
ககன்மனை யரங்கத் தாசிரியர் தம்மொடு

உக. நிகழ்வனவாகிய ஏதுக்கள்.

ஙக. ஏதமில்நெறி - குற்றமில்லாதவழி; அஃதாவது விசுத்திமார்க்கம்.

ஙஉ. அவள்-மாதவி; என்றிறம் உணரும்-என்வரலாற்றை உணர்வாள்.

ஙங. பௌவத்து - கடலினிடத்து. தெய்வமொன்று உண்டென - ரனது குலமுதல்வனை விபத்தினின்று நீக்கிப் பாதுகாத்த தெய்வமொன்று உள்ளதென்று.

ஙரு. நன்னளிற் செறிந்த இருளிடத்தே.

ஙங - ரு. சிலப் கரு : உஅ - ஆம் அடி முதலியவற்றின் பொருளை இவற்றுடன் ஒப்பிடுக.

ஙசு - எ. சிலப் ஙற : உரு - சு.

கரு - சற. மணிமேகலாதெய்வம் புகுந்து நீக்கி, 'இங்ஙகரில் இந்திர மிழாக்காண வந்தேன்; யான் மணிமேகலாதெய்வம் ; இளங்கொடிக்கு ஏது முதிர்ந்ததாதலால் அவளை மணிபல்லவத்தில் வைத்தேன்; அவள் இங்ஙகரில் இற்றைக்கு ஏழாநாளில் தோன்றுவள்; ஏதுப் பலவுள ; மாதவிக்குரை ; அவள் என்றிறமுணரும் ; இவ்வண்ணம் அவட்கு உரை' என்று போயபி னெனக்க.

சஉ. அகல் மனை அரங்கத்து - விசாலித்த வீடாகிய நடனசாலையில்; ஆசிரியர் தம்மொடு - இயலாசிரியனும், ஆடலாசிரியனும், யாழாசிரியனும், இசையாசிரியனும், குழலோனும், தண்ணுமையோனுமாகிய இவர்களோடு ன்று.

(பி - ம்) ஙக. 'ஏதமிலின்மக', 'ஏதமுனிமைக' ஙஉ 'உரைப்பொருளு ணரும்' ஙங. 'பவ்வத் தெய்வ முண்டென' ஙரு. 'கல்லிருள்' ஙசு. 'கை பாற் கடிகவை' சக. 'எய்தியசுதமதி' சஉ. 'தாசியர்தம்மொடு'

வகைதெரி மாக்கட்கு வட்டணை காட்டி
யாடல் புணர்க்கு மரங்கியன் மகளிரிற்
சரு கூடிய குயிலுவக் கருவிகண் டியின்று
பண்ணுக்கிளை பயிரும் பண்ணியாழ்த் தீந்தொடை
கொளைவல் லாயமோ டிசைகூட் டெண்டி
வளைசேர் செங்கை மெல்விர லுதைத்த
வெம்மைவெய் துறுது தன்மையிற் றிரியவும்
நிo பண்பில் காதலன் பரத்தமை நோனு
துண்கண் சிவந்தாங் கொல்குகொடி போன்று
தெருட்டவுந் தெருளா தூடலொடு துயில்வோர்
விரைப்பூம் பள்ளி வீழ்துணை தழுவவுந்

சாக. வகைதெரிமாக்கட்கு - அவிநய முதலிய கூறுபாடுகளைத் தெரிந்த மாந்தர்களுக்கு. வட்டணை காட்டி - கமல வர்த்தனையைக்காட்டி ; கமலவர்த்தனையாவது கைத்தலங்காட்டல் ; சீவக. சுளடு.

சசா. அரங்கியல் மகளிரின் - நாடகமகளிர்போல ; நாடக மகளிருடனென்றுமாம்.

சரு. கூடியகுயிலுவக்கருவி-சேர்ந்த குழல் யாழ் மத்தளம் குடமுழா இடக்கையென்பவைகள் ; "கூடிய குயிலுவக் கருவிக ளெல்லாம், குழல் வழி நின்ற தியாழே யாழ்வழித், தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப், பின்வழி நின்றது முழவே முழவொடு, கூடிநின் றிசைத்த தாமந் திரிகை" (சிலப். கூ: காஅ - சஉ. உரை.) கண்டியின்று - ஒலியாதடங்கி. 'மகளிரின்' (சச) என்றதனால் அவர்கள் துயின்றமையும் பெறப்பட்டது.

சசு - கூ. பண்ணுக்கிளை - பண்ணின் வகைகளை.பயிரும் - இசைக்கும். தீந்தொடை - இனிய நரம்புகள். கொளைவல் ஆயமோடு - பாட்டில் வல்ல மகளிர்கூட்டத்துடனே ; கொளை - ஒற்றறுத்தலுமாம். கூட்டெண்டி - சேர்ந்தனுபவித்து. உதைத்த - தெறித்த. உறுது - உறுமையால். தொடை திரியவுமென்க.

நிo - நிகூ. பரத்தமை - பரத்தன் தன்மை ; பரத்தையை நுகர்வான் பரத்தன் ; "பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர், நுண்ணேன் பரத்தரின் மார்பு" (குறள், காக); "வறமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு" (சிலப். கசு: சுஉ.) நோனாது - பொறாமல். துயில்வோர் - ஊடியமகளிர். வீழ்துணை - விரும்பியகணவன். துயில்வோர் தழுவவும்.

(பி - மீ.) சசு. 'பண்ணுக்கிழமைபிறமண்ணியாழ்' சள. 'கொளைவல்லாய' சஅ. 'வளையார் செங்கை' சசு. 'வேதுறுது' நிo. 'காதல்பார்த்தமை நோனாது' நிக. 'நுண்கண்' நிஉ. 'துயில்வோள்'

தளர்நடை யாயமொடு தங்கா தோடி
நுரு விளையாடு சிறுதே ரீர்த்துமெய் வருந்தி
யமளித் துஞ்சு மைம்படைத் தாலிக்
குதலைச் செவ்வாய்க் குறுநடைப் புதல்வர்க்குக்
காவற் பெண்டிர் கடிப்பகை யெறிந்து
தூபங் காட்டித் தூங்குதுயில் வதியவு
சுo மிறையுறை புறவு நிறைநீர்ப் புள்ளுங்
காவுறை பறவையு நாவுள் ளழுந்தி
விழுவுக்களி யடங்கி முழுவுக்கண் டியின்று
பழவிறன் மூதூர் பாயல்கொ ணகரோட்
கோமகன் கோயிற் குறுநீர்க் கன்னலின்
சுரு யாமங் கொள்பவ ரேத்தொலி யரவமு
முறையுணின் றெடுங்கிய வுண்ணு வுயக்கத்து
நிறையழி யானை நெடுங்கூ விளியுங்
தேர்வழங்கு தெருவுஞ் சிற்றிடை முடுக்கரு
மூர்காப் பாள ரெறிதுடி யோதையு
எo முழங்குநீர் மூன்றுறைக் கலம்புணர் கம்மியர்

நுசா. தளர்நடையாயம் - சிறுர்கூட்டம்.

நுசு. ஐம்படைத்தாலி : மணி. கூ: கூஅ - உரையைப்பார்க்க.

நுஅ - கூ. காவற் பெண்டிர் - செவிலித்தாயர். கடிப்பகை: (மணி. : எகூ.) காவற்பெண்டிர் துயில்வதியவும்.

சுo. இறை - இறப்பு. சுக. கா - சோலை.

சுஉ. களி - களிப்பு; கூத்துமாம். சுஙூ. நடுநாள் - நடு இரவில்.

சுக, சுஙூ. தன்மையிற்றிரியவும், வீழ்துணைதழுவவும், துயில்வதியவும், ருவி கண்டியின்று நா உள்ளழுந்தி முழவுக் கண்டியின்று ஊர் பாயல்கொள் நாளிலென்க.

சுச. கன்னலின் - நாழிகைவட்டிலால்; மணல்லை. நுஅ.

சுநு. யாமங்கொள்பவர் - நாழிகைக்கணக்கர்; சிலப். நு: சுக.

சுசு. உண்ணு உயக்கம் - உண்ணுமையாலுண்டாகிய வருத்தம்.

சுஎ. நெடுங்கூவிளி - நெடியகூப்பிடுதலின் முழக்கம்; மணி.எ: ககநு.

சுஅ. சிற்றிடைமுடுக்கர் - சிறிய இடங்களையுடைய முடுக்குத் தெருக்கள்.

சுஙூ. துடி - ஒருவகைத் தோற்கருவி.

எo. கலம்புணர் கம்மியர் - கப்பலிற் சேர்ந்து தொழில் செய்வோர்.

(பி - ம்.) நுசா. 'தாங்காதோடி' சுஉ. 'களிப்படங்கி' சுச-நு. 'குறி நீர்க் கன்னல், யாமங்கொள்வோர்' சுசு. 'ஓங்கிய'

தழந்தடி கள்ளின் றேப்பியுண் டயர்ந்து
பழஞ்செருக் குற்ற வனக்தர்ப் பாணியு
மாவாய்க் கடிப்பகை யையவிக் கடிப்பகை
விரவிய மகளி ரேந்திய தூமத்துப்
எடு புதல்வரைப் பயந்த புனிறுதீர் கயக்கந்
தீர்வினை மகளிர் குளஞ டரவமும்
வலித்த நெஞ்சி ஞடவ ரின்றியும்

எக. தழந்து அடிகள்ளின்தோப்பி உண்டு அயர்ந்து-தழாவிச்சமைத்த கள்ளுகளில் கெல்லாற் சமைத்த கள்ளையுண்டு தம்மைமறந்து; "இல்லடு கள்ளின் றேப்பி பருகி" பெரும்பாண். கசஉ.

எஉ. அனந்தர் - கள்ளையுண்டமையாலுண்டாகிய செருக்கு; "அனந்தர் நடுக்க மல்ல தியாவதும்" பொருந. கூச.

எங. கடிப்பகை - பேய்க்குப் பகையாகவுள்ளதென்று பெர்ருள்; அரவாய்க்கடிப்பகை - அரம்போன்ற வாயினையுடைய வேப்பிலை; ஐயவிக்கடிப்பகை-வெண் சிறுகடுகு; இவை பேய்க்குப்பகை யென்பதை புறநா: உசக - ஆம் செய்யுளாலும் உணர்க. பேய்முதலியவைகள் அணுகாதிருத்தற்கு இருவகைக் கடிப்பகையும் கூறப்பட்டன; மணி. ங: கஙச - உரையைப் பார்க்க.

எச. தூமத்தி - புகையுடன்.

எஙு - ச. மகளிரேந்திய அரவாய்க்கடிப்பகை ஐயவிக்கடிப்பகைவிரவிய தூமம் ஆகிய இந்த இரண்டுடன் சென்று என ஒருசொல் வருவிக்க.

எடு - சு. புனிறுதீர்மகளிர்; கயக்கந்தீர்மகளிரென்க. கயக்கம் - கயங்குதல். புதல்வரைப்பெற்றுப் புனிறுதீர்ந்த மகளிர் இரவிற்சென்று குளத்தில் நீராடுதலை, "கணவ ருவப்பப் புதல்வர்ப் பயந்து, பணிதீர்தேந் திளமுலை யமுத மூறப், புலவுப்புனிறு தீர்ந்து பொலிந்த சுற்றமொடு, வளமனை மகளிர் குளநீ ரயர" (மதுரை. சுஐ0 - சுஐங) என்பதனுமுணர்க. புதல்வரைப்பெற்றமகளிர் எழுந்துசென்று பத்தாவது இரவில் நீராடவேண்டுமென்று ஆபஸ்தம்பகிருஹ்யத்தின் கடு-ஆம் கண்டத்துள்ள அ-ஆம் ஸூத்திரத்தாலும், அந்நாலே அநுஸரித்துத் தோழிப்பரென்று வழங்குகிற வைதிகஸார்வபௌமரியற்றிய கிருஹ்யாதிநத்தில் சு-ஆம் கண்டத்தில் நாமகரணப்பிரகரணத்திலுள்ள "தசமேஹனி" என்னும் ஸூத்திரத்தாலும் தெரிகின்றது.

எள. வலித்த நெஞ்சின் ஆடவர் இன்றியும் - பகைமையைக் கருதிய நெஞ்சினையுடைய வீரர் இல்லாதிருக்கவும்.

(பி - ம்.) எக. 'தழந்தகளின் தொப்பிரண்டயர்த்து' எங. 'காவாய்க் கடிப்பகை' எச. 'இரவியன்மகளிர்' எடு-சு. 'புதல்வர்ப்பயந்தபுனிறுதீருக த்து, விரிவியன்மகளிர்குளநாளரவமும்', 'புனிறுதீருயக்கந், தீர்வியன்'

புலிக்கணத் தன்னோர் பூத சதுக்கத்துக்
கொடித்தேர் வேந்தன் கொற்றங் கொள்கென
விடிக்குரன் முழக்கத் திடும்பலி யோதையு
மீற்றிளம் பெண்டி ராற்றுப் பாலகர்
கடிஞ்சூன் மகளிர் நெடும்பு ணுற்றோர்
தந்துயர் கெடுக்கு மந்திர மாக்கண்
மன்றப் பேய்மகள் வந்துகைக் கொள்கென
நின்றெறி பலியி னெடுங்குர லோதையும்
பல்வே றோதையும் பரந்தொருங் கிசைப்பக்
கேட்டிளங் கலங்கி யூட்டிரு ளழுவத்து
மூருந்தே றிளநகை நீங்கிப் பூம்பொழிற்
றிருந்தெயிற் குடபாற் சிறுபுழை போகி
மிக்கமா தெய்வம் வியந்தெடுத் துரைத்த
சக்கர வாளக் கோட்டத் தாங்கட்
பலர்புகத் திறந்த பகுவாய் வாயி
லுலக வறவியி னெருபுடை யிருத்தலுங்

எஅ. புலிக்கணத் தன்னோர் - வீரர். பூத சதுக்கத்து - பூதத்தை யுடைய சதுக்கத்திலே ; சதுக்கம் - நாற்சந்தி.

அக. ழ. மணி. சு: கூஅ.

அஉ. கடிஞ்சூல்மகளிர்-முதற்சூலையுடைய மகளிர்; "கடிஞ்சூன் முண் டகங் கதிர்மணி கழாஅலவும் " சிறுபாண். கசஅ.

அஎ. ஊட்டிருளழுவத்து - ஊட்டினாற்போன்ற இருட்பரப்பில்.

அகூ. ழ. மணி. சு: உஉ.

கூஉ - கூ. ழ. மணி. கள: எஎ - அ. உலக அறவி - ஊரம்பலம்; எல் லாச்சாதியாரும் வந்து தங்குதற்குரிய தருமசாலை ; இதனை 'உலோகோபகா ரிகா ' என்பர் வடநூலார்.

சக - கூகூ. சுதமதியெழுந்து நடுநாளில் ஏத்தொலியரவமும், நெடுங் கூவிளியும், துடியோதையும், அனந்தர்ப்பாணியும், குளனுடரவமும், பலி யோதையும், நெடுங்குரலோதையும் ஆகிய பல ஓசைகளையும் கேட்டு உளங் கலங்கி நீங்கிப் போகிச் சக்கரவாளக்கோட்டத்திடத்தே உலகவறவியின் ஒரு புடையிருத்தலுமென்க.

(பி - ம்.) எஅ. 'பூதச்சதுக்கத்து' அகு. 'புலியின்' அள. 'பூட்டிரு ளழுவத்து' அஅ. 'நீங்கியபூம்பொழில்' கூகூ. 'உலகவிறைவி யொருபுடை'

கந்துடை நெடுநிலைக் காரணங் காட்டிய
கூடு வந்தி லெழுதிய வற்புதப் பாவை
மைத்தடங் கண்ணுண் மயங்கினள் வெருவத்
திப்பிய முரைக்குந் தெய்வக் கிளவியி

கசை - ரு. நெடுநிலை உடைக்கந்து அந்தில் - நெடிய தோற்றத்தையுடைய தூணிலிய அவ்விடத்தே; காரணம் காட்டிய - பழவினையாகிய காரணத்தை யாவருக்கும் காட்டுதற்பொருட்டு; எழுதிய - மயனென்னும் தெய்வத்தச்சனால் நிருமிக்கப்பட்ட; அற்புதப் பாவை-யாவருக்கும் ஆச்சரியத்தை உண்டுபண்ணுகின்ற பாவை ; இது, மேற்கூறிய உலகவறவியிற் சம்பாபதி கோயிலின் கிழக்கேயுள்ள தூணொன்றில் தெய்வகணத்தோனாகிய துவதிக னென்பவனுடைய வடிவம்போல மயனால் நிருமிக்கப்பட்ட பாவை ; மூக்காலச்செய்தியையும், கேட்போர்க்குச் சொல்லும் இயல்பையுடையது ; பேசுதல்பற்றி இது காவுடைப்பாவையென்றுஞ் சொல்லப்படும். இவற்றை, "கந்துடை நெடுநிலைக் கடவு ளெழுதிய, வந்திப் பாவை யருளு மாயிடின்" (கரு : ரூ - ச), "கந்துடை நெடுநிலைக் காரணங் காட்டிய, தந்துணைப் பாவையை" (கள : அக - கூ), "நெடுநிலைக் கந்தி னிடவயின் விளங்கக், கடவு ளெழுதிய பாவையாங் குரைக்கும்" (உ0 : கக0 - கக), "கடவு ளெழுதிய நெடுநிலைக் கந்தின், குடவயி னமைத்த நெடுநிலை வாயின், முதியாள் கோட்டம்" (உக : க - ரு), "என்றிவை சொல்லி யிருந்தெய்வ முரைத்தலும்" (உக : ரூஙி), "மன்பெருந் தெய்வ கணங்களி னுள்ளோன், துவதிக னென்பேன் றொன்றுமுதிர் கந்தின், மயனெனைக் கொப்பா வகுத்த பாவையி, னீங்கேன்" (உக : கரூ0 - ரூ), "நெடுநிலைக் கந்தினின்ற பாவை" (உ0 : உ), "இலகொளிக் கந்தி னெழுதிய பாவாய்" (உ0 : சுக), "காவுடைப் பாவை நங்கையை யெடுத்தலும்" (உ0 : கூச), "காவுடைப் பாவையை நலம்பல வேத்தி" (உ0 : கஅச) என இந்நூலில் வருவனவற்றாலுணர்க. எழுதிய - பண்ணிய ; "கடவு ளெழுதவோர் கற்று ராரெனின்" (உரு : கரூ0), "கடவு ளெழுதவோர் கற்கே யாதலின்" (வெ : கசுக), "கடவு ளெழுதவோர் கற்கொண் டல்லது" (உசு : கச) எனச் சிலப்பதிகாரத்து வருதல்காண்க.

கூசு. மைத்தடங் கண்ணுள் - சுதமதி.

கூள. திப்பியம் : இது, திவ்யமென்னும் வடமொழிச்சிதைவு ; தேவலோகத்திலிருப்பதென்று பொருள்; இவ்வாறு இறந்தகால எதிர்காலச் செய்திகளைக் கூறுதல் பெரும்பாலும் இவ்வுலகவழக்கமன்மையின், இதனை, 'திப்பியம்' என்றார். "செங்கோல் காட்டிய தெய்வமுந் திப்பியம், பையர வல்குல் பலர்பசி கண்ணாக், கையி லேந்திய பாத்திரந் திப்பிய,முன்னை முதல்வி யடிபிழைத் தாயெனச், சித்திர முரைத்த வித்தகத் திப்பியம்" (கக : கo - கச) என்று இந்நூலுள்ளே 'திப்பியம்' என்பது இப்பொருளில் வருதல் காண்க ; தெய்வக்கிளவியினால் திப்பியமுரைக்கும். தெய்வக்கிளவி - தெய்வத்தன்மையுள்ள சொல் ; வடசொல்லாலெனினுமமையும்.

(பி - ம்.) கூள - அ. 'கிளவி யிரவிவன்மகனெரு'

நிரவி வன்ம ஞெருபெரு மகளே
துரகத் தானைத் துச்சயன் றேவி
கஂ0 தயங்கிணர்க் கோதைத் தாரை சாவுற
மயங்கி யானைமுன் மன்னுயிர் நீத்தோய்
காராளர் சண்பையிற் கௌசிகன் மகளே
மாருத வேகனே டிங்ஙகர் புகுந்து
தாரை தவ்வை தன்னெடு கூடிய
கஂ0 வீரை யாகிய சுதமதி கேளா
யின்றேழ் நாளி லிடையிருள் யாமத்துத்
தன்பிறப் பதனெடு நின்பிறப் புணர்ந்தீங்
கிலக்குமி யாகிய நினக்கினை யாள்வரு
மஞ்சலென் றுரைத்த தவ்வுரை கேட்டு

கூஅ. இரவிவன்மன் - அசோதரகத்தரசன் ; இவன் சுதமதியென் பவளுடைய பூர்வஜன்மபிதா.

கூஅ - கூ. ழ. மணி. கக ; கஙூ - ச. துச்சயன் = துர்ஜயன் - பகைவர் களால் வருத்தமுற்று வெல்லப்படுபவனென்று பொருள் ; இவன் அங்காட்டி லுள்ள கச்சயமென்னு நகரத்தரசன் ; சுதமதியென்பவளுடைய பூர்வஜன்ம காயகன்; மணி. கஂ : நு0 - நுச.

கஂ0. தாரை - இவள் வீரைக்கு முன்னே பிறந்தவள்; வீரை யானை யால் இறந்தது கேட்டு இவள் இறந்தமையால், 'சாவுற' என்றார்; மணி. கஉ : சநு - அ.

கஂக. மயங்கி - மதுவைக் குடித்தமையால் மயங்கி.

கஂஉ. காராளர்சண்பை - அங்காட்டிற் கங்கைக்கரையிலுள்ளதாகிய சம்பாநகரம் ; இப்பொருளில், காராளரென்பது காராளரென்பதன் விகார மென்றும், கொடுமையென்று பொருள்படுகின்ற காராளத்வம் அல்லது காராளதையென்பது இச்சொற்குப் பகுதியென்றும், இக்காராளர்கள் துர்க்காபூஜை செய்தநரபலிகொடுப்போரென்றும், இப்பெயர் இக்காலத்து மஹாராஷ்டிர தேசத்திற் காடிகளென்று வழங்குகிறதென்றுங் கூறுவர்; மணி. கூ : உசு.

கஂச. தாரை தவ்வை - தாரையாகிய தவ்வை; தவ்வை - முன்பிறந்த வள். தாரையென்பது மாதவியென்பவளுடைய பூர்வஜன்ம நாமதேயம்.

கஂநு. வீரையென்பது சுதமதியென்பவளுடைய பூர்வஜன்ம நாம தேயம்.

கஂஅ. இலக்குமியென்பது மணிமேகலையின் முற்பிறப்பின் பெயர்; தாரை, வீரை, இலக்குமி இம்மூவரும் சகோதரிகள்.

கஂசு. அஞ்சல் - அஞ்சாதே. தெய்வம் உரைத்தது.

(பி - ம்.) கஂக. 'மயங்கியல் யானை' கஂஉ. 'காராளகசண்பை' கஂச. 'தாரைதனவ்வை' கஂநு. 'சுதைமதி' கஂசு. 'இன்றேளாளிடையிடை' கஂஎ - அ. 'உன்பிறப்புணர்ந்தீங், கலக்குமியாகிய'

கக0 நெஞ்ச நடுக்குறூஉ நேரிழை நல்லாள்
காவ லாளர் கண்டுயில் கொள்ளத்
தூமென் சேக்கைத் துயில்கண் விழிப்ப
வலம்புரிச் சங்கம் வறிதெழுந் தார்ப்பப்
புலம்புரிச் சங்கம் பொருளொடு முழங்கப்
ககடு புகர்முக வாரண நெடுங்கூ விளிப்பப்
பொறிமயிர் வாரணம் குறுங்கூ விளிப்பப்
பணிநிலைப் புரவி பலவெழுந் தாலப்
பணிநிலைப் புள்ளும் பலவெழுந் தாலப்
பூம்பொழி லார்கைப் புள்ளொலி சிறப்பப்
கஉ0 பூங்கொடி யார்கைப் புள்ளொலி சிறப்பக்
கடவுட் பீடிகைப் பூப்பலி கடைகொளக்
கலம்பகர் பீடிகைப் பூப்பலி கடைகொளக்

கக0. நல்லாள் - சுதமதி.

கஉ. சேக்கைத் துயில் கண் - படுக்கையில் தூங்குகின்ற ஆடவர் மகளிரென்னும் இருபாலாருடைய கண்கள்.

ககஙூ. வறிதெழுந்தார்ப்ப - பொருளின்றி முழங்க.

ககச. புலம் - அறிவு. சங்கம் - புலவர் கூட்டம்.

ககடு. வாரணம் - யானை. நெடுங்கூவிளிப்ப - நெடியகூப்பீட்டைச் செய்ய; (மணி. எ: சுள.) கூ - கூப்பீடு; "வினைபுனை நல்லி னினைகூஉக் கேட்பவும்" புறநா. சச.

ககசு. வாரணம் - கோழி.

ககள. பணை - குதிரைப்பந்தி. ஆல - ஆட.

ககஅ. பணை - இனை. ஆல-முழங்க.

கககூ. பூம்பொழில் ஆர்கைப் புள் ஒலி சிறப்ப - பொலிவு பொருந்திய சோலையினிடத்தே நிறைதலையுடைய பறவைகளின் முழக்கம் அதிகரிக்க.

கஉ0. பூங்கொடியார் - மகளிர். புள் - கைவளை ; "புட்கை போகிய புன்றலை மகார்" மலைபடு. உருஙூ.

கஉக. தெய்வங்களுக்குரிய பீடங்களிற் கொடுக்கப்படும் பொலிவு பெற்ற பலிகளானவை முடிவுகொள்ள.

கஉஉ. அணிகலங்கள் விற்கப்படுகின்ற அங்காடிவீதியில் மலராற் செய்யப்படும் அர்ச்சனைகளைக் கடையிடங்கள் கொள்ள; "பூப்பலி செய்து காப்புக்கடை நிறுத்தி" (சிலப். உஅ: உசுக.) வாயிலைகளில் இல்லுறை தெய்வங்களின் பொருட்டுக் காலையிற் பூவிடுதல் மரபு.

(பி - ம்.) ககஙூ. 'வலம்புரிசங்கம்' ககச. 'புலம்புரிசங்கம்', 'பொலம் புரிச்சங்கம்' ககள. 'ஆர்ப்ப' ககஅ. 'கணநிலைப்புள்ளும்...ஆர்ப்ப' கஉக.'கடி கொள' கஉஉ. 'பூப்பொலிகடிகொள'

குயிலுவர் கடைதொறும் பண்ணியம் பரந்தெழக்
கொடிப்போர் கடைதொறும் பண்ணியம் பரந்தெழ
கஉடு வூர்துயி லெடுப்ப வுரவுநீ ரழுவத்துக்
காரிருள் சீத்துக் கதிரவன் முகீஇத்தலு
மேவுறு மஞ்ஞையி னினைந்தடி வருந்த
மாநகர் வீதி மருங்கிற் போகிப்
போய கங்குலிற் புகுந்ததை யெல்லா
கஙo மாதவி தனக்கு வழுவின் றுரைத்தலு
நன்மணி யிழந்த நாகம் போன்றவ
டன்மகள் வாராத் தனித்துய ருழப்ப
வின்னுயி ரிழந்த யாக்கையி னிருந்தன
னென்னிய துரைத்த சுதமதி தானென்.

எ.—துயிலெழுப்பியகாதை முற்றிற்று.

கஉ. தோற்கருவி வாசிப்பாருடைய இடங்களிலெல்லாம் செவ்வை செய்யப் பட்ட வாத்தியங்கள் பரவியெழ; பண் - இசையென்றுமாம்.

கஉசு. உபகாரிகளுடைய வாயில்கள்தோறும் கொடுத்தற்குரிய பல பண்டங்களும் பரவுதலுற்றுமிக.

கஉடு. எடுப்ப - எழுப்ப. உரவுநீரழுவத்து - கடற்பரப்பில்.

கஉசு. சீத்து - அழித்து.

கஉஎ. ஏ - அம்பு; "சுதமதி கேட்டுத் துளக்குறு மயில்போல்" (சு: அசு) என்றார் முன்னும்.

கஉக. போயகங்குலில் - சென்ற இரவில்.

கஙக. "மன்னவன் மகனுக் குற்றது பொறுஅ, னன்மணி யிழந்த நாகம் போன்று" (உடு : கசுசு - டு) என்று இவ்வுவமையே பின்னும்வரும்; "இருநிதிக் கிழவனும் பெருமனைக் கிழத்தியு, மருமணி யிழந்த நாகம் போன்றதும்" (சிலப். கங: டுஎ - அ.) அவள் - மாதவி.

கஙங. "இன்னுயி ரிழந்த யாக்கை யென்னத், தன்னிய சுற்றந் துயர்க் கடல் வீழ்ந்ததும்" (சிலப். கங: டுகூ - சுo) என்புழியும் இவ்வுவமை வருதல் காண்க.

க-கஙசு. மணிமேகலாதெய்வம் நீங்கித் தோன்றி உரைத்தபின் புகுந்து நீக்கி உரையென்று போயபின், சுதமதி எழுந்து கேட்டு உளங்கலங்கி நீங்கிப் போகி ஒருபுடையிருத்தலும், பாவை உரைக்கும்; அது 'வரும், அஞ்சல்' என்று உரைத்தது; அதனைக்கேட்டு நடுக்குறுதல்லாள், கதிரவன் முகீஇத்தலும் போகி மாதவிக்குரைத்தலும், அவள் துயருழப்பத் தான் உயிரிழந்த யாக்கை போல இருந்தனளென முடிக்க.

(பி - ம்.) கஉடு. 'எடுப்பிய', 'எழுப்பிய' கஉகூ. 'போகியகங்குல்' கஙஉ. 'மதவாரா'

எட்டாவது

மணிபல்லவத்துத்துயருற்றகாதை

[எட்டாவது மணிமேகலை
மணிபல்லவத்துத்துயிலெழுந்து துயருற்றபாட்டு.]

ஈங்கிவ ளின்னண மாக விருங்கடல்
வாங்குதிரை யுடைத்த மணிபல் லவத்திடைத்
தத்துநீ ரடைகரைச் சங்குழு தொடுப்பின்
முத்துவினை கழனி மூரிசெம் பவளமொடு
நு விரைமர முருட்டுந் திரையுலாப் பரப்பின்
ஞாழ லோங்கிய தாழ்கண் ணசும்பி
னும்பலுங் குவளையுந் தாம்புணர்ந்த மயங்கி
வண்டிணை மலர்ந்த குண்டுநீ ரிலஞ்சி
மூடக்காற் புன்னையு மடற்பூந் தாழையும்
கo வெயில்வர வொழித்த பயில்பூம் பந்த

க. இவள் - சுதமதி.

ங. அடைகரையில். தொடுப்பு - விளாக்கொண்டு உழுதல்; "தொடுப்பே ருழவ ரோதைப் பாணியும்" சிலப். உள: உகo.

ங - ச. அடைகரையாகிய கழனியிலென்றுமாம்.

நு. விரைமரம் - சந்தனம் அகில் முதலியன; "விரைமர மென்றகில்" என்பர்மேலும் (கசு: கடஉ) "வீங்குதிரை கொணர்ந்த விரைமர விறகின்" சிறுபாண். கடுநு.

சு. ஞாழல் - புலிநகக்கொன்றை; "பொன்னுறு ஞாழற் பூவுடன் கடுக்கும், பேழ்வாய்ப் புலியுகிர்" (கலி. நுஉ.) அசும்பு - சேறு; "வாரசும் பொழுகு முன்றில்" புறநா. ககச.

எ. மயங்கி - கலந்து.

அ. குண்டு நீர் இலஞ்சி - ஆழமான நீரையுடைய பொய்கைக்கரை; இலஞ்சி, ஆகுபெயர்.

கூ. மூடம் - வஞ்சவு. கo. பந்தர் - நிழல்.

கூ - கo. புன்னையும் தாழையும் வெயிலின் வரவையொழித்த பந்தர்.

(பி - ம்). க. 'ஈங்கிவரிஞ்ஞனம்', 'ஈங்கிவரிஞ்ஞனம்' ச. 'முத்துவினை கழனி' நு. 'வரைமாமுருட்டு' சு. 'தாழ்கண்ணசுரும்பி'

ரறல்விளங்கு நிலாமண னறுமலர்ப் பள்ளித்
துஞ்ச துயிலெழுஉ மஞ்சி லோதி
காதற் சுற்ற மறந்து கடைகொள
வேறிடத்துப் பிறந்த வுயிரே போன்று
கரு பண்டறி னிளையொடு பதியுங் காணுள்
கண்டறி யாதன கண்ணிற் காண
நீல மாக்கட னெட்டிடை யன்றியுங்
காலே ஞாயிறு கதிர்விரித்து மூளப்ப
வுவவன மருங்கினி லோரிடங் கொல்லிது
உ0 சுதமதி யொளித்தாய் துயரஞ் செய்தனை
நனவோ கனவோ வென்பதை யறியேன்
மனநடுக் குறூஉ மாற்றந் தாராய்
வல்லிருள் கழிந்தது மாதவி மயங்கு
மெல்வளை வாராய் விட்டகன் றனையோ
உரு விஞ்சையிற் றோன்றிய விளங்கிழை மடவாள்
வஞ்சஞ் செய்தனள் கொல்லோ வறியே

கக. அறல் - நீர் அரித்து ஒழுகுதலாலுண்டாவது; "மட்டற னல்யாற்று" (புறநா. களை.) நிலாமணல் - நிலாவைப் போன்ற வெள்ளிய மணல். மலர்ப்பள்ளி - உதிர்ந்து கிடக்கும் மலராலாகிய படுக்கையில்.

கஉ. அஞ்சிலோதி - அழகிய சிலவானமயிரினையுடையாள்; "அஞ்சி லோதி யரசனுக் கொருநாள்" (உசு : உச)என்பர் மேலும்; "அஞ்சி லோதி" குறிஞ்சி. கஅ0.

க - கஉ. மணிபல்லவத்திற் கரையிற் கழனியிற் பரப்பில் இலஞ்சிக் கரையில் மணலிற் பள்ளியில் துயிலெழுந்த மணிமேகலை யென்க.

கங. கடைகொள - முடிவுகொள்ள. கரு. காணுள் - காணலாகி.

கசு. கண்டறியாதனவற்றைக்கண்ணிற் கண்டு.

கள. நெட்டிடை - நெடிய இடம்.

கக. 'உவவனம்' என்பது முதல் மணிமேகலை கூற்று.

உ0. சுதமதி, விளி. உக. இந்திரவிலை நனவோ கனவோ.

உங. மயங்கும் - மயங்குவாள்.

உச. மெல்லிய வளையினையுடையாய்; எல்வளையுமாம்.

உரு. விஞ்சையிற் றோன்றிய - வித்தையினாலே தோன்றிய.

(பி - ம்.) கக. 'துறல்விளங்கு நிலாமணற்றூமலர்' கச. 'ஓதிட த்து' கரு. 'பதியங்காணுள்' கசு-எ. 'காண,நீலமாகடல்' கஅ. 'காலஞாயிறு' உ0. 'ஒழித்தாய்'

ஒருதனி யஞ்சுவென் றிருவே வாவெனத்
திரைதவழ் பறவையும் விரிகிறைப் பறவையு
மெழுந்துவீழ் சில்லையு மொடுங்குசிறை முழுவலு
கo மன்னச் சேவ லரச ஞகப்
பன்னிறப் புள்ளினம் பரந்தொருங் கீண்டிப்
பாசறை மன்னர் பாடி போல
வீணீர்ப் பரப்பி னெதிரெதி ரிருக்குங்
துறையுந் துறைசூழ் நெடுமணற் குன்றமும்
கூடு யாங்கணுந் திரிவோள் பாங்கினங் காணுள்
குரற்றலைக் கூந்தல் குலைந்துபின் வீழ
வரற்றினள் கூஉ யழுதன ளேங்கி
வீழ்துய லெய்திய விழுமக் கிளவியிற்

உள. ஒருதனி - ஒப்பற்றதனிமையை. வாவென - வாவென்று சொல்லிக்கொண்டு.

உஅ - கூ. அலையில் தவழ்ந்துசெல்லும் பறவைமுதலிய நீர்வாழ் பறவைச் சாதிகள் நான்கும்.

உஅ - ஙக. திரைதவழ் பறவைமுதலியனவாகிய பன்னிறப் புள்ளினம்.

ஙஉ. போர்குறித்துவந்து படைவீடுகளில் விட்ட பகையரசரிருவருடைய படைகளிரண்டும் எதிரெதிரிருத்தல்போல. பாடி - படைவீடு.

உஅ - ஙச. திரைதவழ்பறவை முதலியன, அன்னச்சேவல் அரசனுக நீர்ப்பரப்பில் எதிரெதிரிருக்குந் துறையென்க. இப்படியே, "கம்புட் கோழியுங் கனைகுர னுரையுஞ், செங்கா லன்னமும் பைங்காற் கொக்குங், கானக் கோழியு நீர்நிறக் காக்கையு, முள்ளு மூரலும் புள்ளும் புதாவும், வெல்போர் வேந்தர் மூணியிடம் போலப், பல்வேறு குழூஉக்குரல் பரந்த வோதையும்" (கo : கக்ச - கூ) என்றார் சிலப்பதிகாரத்தும்.

ஙச - ஙடு. துறையும் குன்றமுமாகிய யாங்கணும். திரிவோள் - மணிமேகலை. பாங்கினம் - பக்கத்திலுள்ள இனங்களை.

ஙள - ஙடு. திருவே வாவெனத் திரிவோள்.

ஙசு. குரற்றலைக் கூந்தல் - பூங்கொத்தை இடத்தேயுடைய கூந்தல்; "குரற்றலைக் கூந்தற் குடசம் பொருந்தி" (சிலப். கச : அள); "குரற்றலைக் கூந்தல் குலைந்துபின் வீழ" ம்மே. ஙo : ஙஅ.

ஙள. கூஉய் - கூவி.

ஙஅ. விழுமக்கிளவியின் - துன்பத்தைப் புலப்படுத்தும் சொற்களால்.

(பி-ம்.) உள. 'அஞ்சுவானறிவேவாவெனத்' உக. 'சிலாலையுமொடுங்கு சிறைமுழுவலும்', 'ஒடுங்குசிறைமூயும்' ஙக. 'புள்ளும்பரந்து' ஙங. 'நெறியெதிர்நிற்கும்', 'எதிரெதிர்நிற்கும்' ஙசு. 'குரற்றலைகூந்தல்' ஙஅ - கூ. 'விழுக்கிளவியற்றுழ்ந்து'

முழ்துய ருறுவோ டந்தையை யுள்ளி
சஂ யெம்மிதிற் படித்தும் வெவ்வினே யுருப்பக்
கோற்றெடி மாதரொடி வேற்றுநா டடைந்து
வைவா ளுழந்த மணிப்பூ ணகலத்
தையா வோவென் றழுவோண் முன்னர்
விரிந்திலங் கவிரொளி சிறந்துகதிர் பரப்பி
ஈரு யுரைபெறு மும்முழ நிலமிசை யோங்கித்
திசைதொறு மொன்பான் முழநில மகன்று
விதிமா ணடியின் வட்டங் குயின்று
பதும சதுர மீமிசை விளங்கி
யறவோற் கமைந்த வாசன மென்றே
நிஂ நறுமல ரல்லது பிறமாஞ் சொரியாது
பறவையு முதிர்சிறை பாங்குசென் றதிராது
தேவர்கோ னிட்ட மாமணிப் பீடிகை

நகூ. தந்தையையுள்ளி - கோவலனே நினைந்து.

சஂ. எம்மிதிற்படுத்தும் வெவ்வினே - எம்மை இத்துன்பத்தினிடத்தே அகப்படுத்தும் வெவ்விய வினை; "என்னிதிற் படுத்த வேந்தல்" (சீவக. எகஉ.) உருப்ப - முதிர ; "ஊழ்வினை யுருத்தெழ" (சிலப். கசு : உகள) ; கோபிக்கவென்றுமாம்.

சக. கோற்றெடிமாதர் - கண்ணகி. வேற்றுநாடு - பாண்டிநாடு.

சஉ. வைவா ளுழந்த - கூரியவாளால் வெட்டுண்டு வருந்திய. அகலம் - மார்பு.

சடு. நிலமிசை மும்முழமோங்கி. சசு. ஒன்பான்முழம்-ஒன்பதுமுழம்.

சள. விதிமாண் - விதி மாட்சிமைப்பட்ட; ஆடியின் வட்டங்குயின்று - பளிங்கினுல் வட்டஞ் செய்யப்பட்டு.

சஅ. பதுமத்தையுடைய சதுரம் ; பதுமமென்றதற்குப் புத்தனுடைய பாதங்களெனினும் பொருந்தும். மீமிசை - மேற்பட்ட இடம்.

சஙு. அறவோற்கு - புத்தனுக்கு.

சச - கூ. சிறந்து பரப்பி ஓங்கி அகன்று குயின்று விளங்கி அமைந்த ஆசனமென்க.

நிஂ. பிற - பிறவற்றை. மரம் நறு மலரையே சொரியும்.

நிக. பறவையும் அப்பீடிகையின் பக்கத்திற்சென்று சிறையொலியைச் செய்யாது.

(பி-ம்.) சஂ. 'மெய்விதறபடுத்து', 'எம்மிகற்படுத்தும்' சஙு. 'ஐயா கொவென்றழுவாள்' சள. 'விதிமாண்டாடியின் வட்டணை குயின்று' சஅ-கூ. 'விளங்கியச், சிறவோர்' நிஂ. 'பிறமணஞ்' நிக. 'உதிராது'

பிறப்புவிளங் கவிரொளி யறத்தகை யாசனங்
கீழ்நில மருங்கி னகரா டாளரு
நிரு மிருவர் மன்னவ ரொருவழித் தோன்றி
யெமதீ தென்றே யெடுக்க லாற்றார்
தமபெரும் பற்று நீங்கலு நீங்கார்
செங்கண் சிவந்து நெஞ்சுபுகை யுயிர்த்துத்
தம்பெருஞ் சேனையொடு வெஞ்சமம் புரிகா
சுo ளிருஞ்செரு வொழிமி னெமதீ தென்றே
பெருந்தவ முனிவ னிருந்தற முரைக்கும்

நிசு. பிறப்புவிளங்கு ஆசனம் - காண்போருடைய பழம்பிறப்புக்கள் அவர்களுக்கு விளங்குதற்குக் காரணமாகிய ஆசனம்.

நிச. கீழ்நிலம் - கீழ்த்திசையிலுள்ள இடம். நாகரென்னும் ஒருவகை மனிதர் வாழுநாடு நாகநாடெனப்பர்; இக்காட்டின் பெயர், "நாக நன்னாட்டு நானூ றியோசனை" (சூ: உக), "நாகநாடு நடுக்கின் றுள்பவன்" (உச: நிச), "நாக நன்னா டாள்வோன்" (உநு: களஅ), "நாகநா டாள்வோன்" (உக: சூ) என இந்நூலுள்ளே பின்பு வருதல் காண்க. நாக இலச்சினையை (பாம்பின் அடையாளத்தை) உடைமையின், இவர்களுக்கு இப்பெயரும் தக்ஷகரென்ற பெயரும் வந்தனவென்று ஊகிக்கின்றனர்.

நிசு. எடுக்கல் ஆற்றார் - எடுக்கும் வன்மை இலராய்.

நிஎ. தம பெரும்பற்று - தம்முடைய பெரிய விருப்பம்; நீங்கலு நீங்கார் - நீங்குதலையும் செய்யார்; "சுழலலுஞ் சுழலு, மோடலு மோடு மொரு சிறை யொதுங்கி, நீடலு நீடும்" (சுக:கசக - சூ) என்றார் முன்னும்; "கறை மிட றணியலு மணிந்தன்று" புறநா. க.

நிஅ. நெஞ்சு புகையுயிர்த்து - மனங்கொதித்து; "வஞ்சினஞ் சாற்றி நெஞ்சுபுகை யுயிர்த்து" (கஅ: சூஎ) என்பர் மேலும்; "ஊழ்துலை தோற்க வுயிர்க்குமென் னெஞ்சன்றே" (கஅ :கசுஎ) என்றார் சிலப்பதிகாரத்தும்.

சுக. பெருந்தவ முனிவன் - புத்தன்; பொறிகளை யடக்கி நெடுநாள் பிக்ஷு நியமத்தோடிருந்து அரியதவஞ்செய்தது பற்றி இவனைப் பெருந்தவ முனிவனென்றார்; "ஆதிசான் முனிவ னாதவழி" (எ: கக), "பொதுவறி விகழ்ந்து புலமுறு மாதவன்" (கo: அச), "போதி மாதவன் பூமியிற் றோன்றும்" (கடு: உக), "பிணிப்பறு மாதவன் பீடிகை" (உநு: சுச) என இந்நூலுள்ளே வருதல் காண்க; "பொருந்து போதியி, லிருந்த மாதவர், திருந்து சேவடி, மருந்து மாகுமே" (சு), "பூதலத்து ளெவ்வுயிர்க்கும் பொதுவாயதிருமேனி, மாதவனீ" (கக), "மாதவரின் மாதவனீ வானவருள் வானவனீ" (கக), "மருளறுத்த பெரும்போதி மாதவரைக் கண்டிலமால்" (கடு) என்பன வீரசோழியம் யாப்புப் படல உதாரணங்கள்.

(பி - ம்) நிஎ. 'பற்றி' சுo. 'ஒளிமிலைம' சுக. 'பெருந்தகை முதல்வ னந்தற முரைக்கும்'

பொருவறு சிறப்பிற் புரையோ ரேத்துந்
தரும பீடிகை தோன்றிய தாங்கென்.

அ.—* மணிபல்லவத்துத்துயருற்றகாதை முற்றிற்று.

கூஉ. புரையோர் - ஈண்டு, பௌத்தரில் உயர்ந்தோர்; "புரையோர்ப் பேணிப் போகலும் போகுவை" (மணி.உச: அங); "அரசுவீற் றிருந்து புரை யோர்ப்பேணி" (ஷே. உரு: அக); "புரையோர் தாமுமிப் பூம்பொழி லிழிந்து" ஷே. உஅ: ககஉ

ருஉ - கூங. மாமணிப் பீடிகை, அறத்தகையாசனம், தருமபீடிகை அங்கே தோன்றியது.

சாங - கூங. அழுவோள்முன்னர்த் தோன்றிய தென்க.

ருசு - கூங. இவ்வடிகளிற்கூறிய வண்ணமே "வேகவெந்திற லெகாட் டரசர்.....திருத்தொளியாசனம்" (கூ:ருஅ - கூஉ) என்று பின்னுங்கூறுவர்.

க - கூங. இவள் இன்னணமாக, மணிபல்லவத்திடைத் துயிலெழும் அஞ்சி லோதி, போன்று காணுளாய்க் கண்டு, திருவே வாவென்று அழுவோள் முன்னர்த் தருமபீடிகை ஆங்குத் தோன்றிய தென்க.

(பி - ம்.) * 'மணிமேகலை மணிப்பல்லவத்து'

ஒன்பதாவது

பீடிகைகண்டுபிறப்புணர்ந்தகாதை.

[ஒன்பதாவது மணிமேகலை மணிபல்லவத்திடைப் பீடிகைகண்டு பிறப்புணர்ந்தபாட்டு]

ஆங்கது கண்ட வாயிழை யறியாள்
காந்தளஞ் செங்கை தலைமேற் குவிந்தன

க. அதுகண்ட - புத்தபீடிகையைக்கண்ட; ஆயிழை - மணிமேகலை யானவள்; அறியாள் - தன்னை அறியாளாயினுள்; இது புதுமைபற்றிவந்த மருட்கையென்னுமெய்ப்பாடு.

(பி - ம்) உ. 'குவிந்த'

தலைமேற் குவிந்த கையள் செங்கண்
மூலைமேற் கலுழ்ந்துமுத் தத்திர ளுகுத்ததி
ரு னிடமுறை மும்முறை வலமுறை வாராக்
கொடிமின் முகிலொடு நிலஞ்சேர்ந் தென்ன
விறுதுசுப் பலச வெறுநிலஞ் சேர்ந்தாங்
கெழுவோள் பிறப்பு வழுவின் றுணர்ந்து
தொழுதகை மாதவ துணிபொரு ளுணர்ந்தோய்
கo காயங் கரையினீ யுரைத்ததை யெல்லாம்
வாயே யாகுதன் மயக்கற வுணர்ந்தேன்
காந்தார மென்னுங் கழிபெரு நாட்டுப்
பூருவ தேயம் பொறைகெட வாழ
மத்தி பதியெனு மரசாள் வேந்தன்
கரு மைத்துன னுகிய பிரம தரும

கூ - சு. செங்கண் கலுழ்ந்து - சிவந்த கண்கள் கலங்கி. மூலைமேல் முத்தத்திரள் உகுத்து - கொங்கைகளின்மேலே நீர்த்துளிகளைச் சொரிந்து; அதின் - அப்பீடிகையினது.

கூ. மின்கொடி யணிமேகலையினுடைய உருவத்திற்கும், முகில் அவள் கூந்தலுக்கும் உவமை.

எ. அலச - அலைய. நிலஞ்சேர்ந்து - வணங்கி.

அ. எழுவோள் தனது முற்பிறப்பின் செய்தியை நன்றாக அறிந்து.

கூ. 'தொழுதகை மாதவ' என்பதுமுதல் 'என்றெடுத் தோதினே' (சுகூ) என்பதிறுதியாகவுள்ளவை, பிரமதருமனென்னுமுனிவன் முற்பிறப்பில் தனக்குக் கூறியவற்றைப் புத்தபீடிகைக் காட்சியாலறிந்து, அம்முனிவனை எதிர் பெய்து, மணிமேகலை கொண்டு கூறுகின்றவையெனக்கொள்க.

கo. காயங்கரை, ஒரு நதியின்பெயர். உரைத்ததை: ஐ சாரியை ; எல்லாம் - முழுவதும்.

கக. வாயேயாகுதல் - உண்மையாதலே ; வாய் - உண்மை ; "பொய்யறியா வாய்மொழியால்" மதுரை. ககூ.

கஉ. பலதேயங்களைத் தன்னுள்ளே பெற்றதென்பார் 'காந்தாரமென்னுங் கழிபெருநாட்டு' என்றார்.

கங. பொறை - பாரம்; என்றது பாவத்தை. கரு. பிரமதருமன், விளி.

(பி - ம்.) கூ. 'கையினள்' சு-ரு. 'கலிழ்ந்துமுத்தத்திரளுகுத்ததத்தட முறை' சு - எ. 'நிலஞ்சேர்ந்தெனலை, விறுதுசுப்பலைய' அ. 'உணர்ந்தோய்' கஉ - கூ. 'கழிபெருநன்னாட்டுப், பூறுவதேசம்'

ஞங்கவன் றன்பா லணைந்தற னுரைப்போய்
தீங்கனி காவ லோங்குமித் தீவிடை
யின்றேழ் நாளி லிருநில மாக்க
ணின்றுடுக்கெய்த நீணில வேந்தே
உo பூமி நடுக்குறூஉம் போழ்தத் திந்நகர்
நாக நன்னுட்டு நானூ றியோசனை
வியன்பா தலத்து வீழ்ந்துகே டெய்து
மிதன்பா லொழிகென விருநில வேந்தனு
மாபெரும் பேரூர் மக்கட் கெல்லா
உரு மாவு மாவுங் கொண்டுகழி கென்றே
பறையிற் சாற்றி நிறையருந் தானையோ
டிடவய மென்னு மிரும்பதி நீங்கி
வடவயி னவந்தி மாநகர்ச் செல்வோன்
காயங் கரையெனும் பேரியாற் றடைகரைச்
கூo சேயுயர் பூம்பொழிற் பாடிசெய் திருப்ப
வெங்கோ னீயாங் குரைத்தவந் நாளிடைத்

கசு. அவனென்றது, அத்திபதியென்னும் அரசனை. கள. சம்புத்தீவில்.

கஅ. மணி. எ: உசை.

கஅ - உo. இன்றேழ்நாளில் பூமி நடுக்குறும்பொழுதில்.

உo - உஉ. இத்நகரும் நாகநாட்டில் நானூறுயோசனைப் பரப்பும் பாதலத்தில் விழுந்து கெடுதலுறும்.

உங. இதன்பால் ஒழிக என - இந்நகரின் புறத்தே செல்வாயாக வென்றுசொல்ல.

உரு. ஆ - பசு: மா - மற்றை விலங்குகள்; சிறிதும் தீங்கு செய்யத் தகாத சாதியாதலின், பசு முற்கூறப்பட்டது; புறநா. கூ.

உசு. நிறை அருந் தானையொடு - பகைமேற்செல்பொழுது நிறுத்துத லரியசேனையோடு; "நிறையருந் தானை வேந்தனு நேர்ந்து" சிலப்.உரு:களஅ.

உள. இடவயம் - அத்திபதியின் நகரம்.

கo. பொழிலில்.

உஅ - கo. செல்வோன் இருப்ப.

கக. எங்கோனென்றது பிரமதருமனை.

(பி-ம்) கசு.'தன்பானைந்தறமுரை' கள. ஓங்குமத்தீவிடை' கஅ. 'பின்றேழ்', 'மின்றேழ்' உசு - எ. 'நிறையிருந்தானை யிடிவயம்' உஅ. 'விடவ யினவந்திம மானகர்', 'வசந்த மாநகர்' உக. 'பெயாறறடைகரை' கo-கக. 'இருதோமுனை கோனீயங்'

தங்கா தங்கர் வீழ்ந்துகே டெய்தலு
மருளறு புலவகின் மலரடி யதனை
யரசொடு மக்க ளெல்லா மீண்டிச்
சூடு சூழ்ந்தனர் வணங்கித் தாழ்ந்துபல வேத்திய
வருளறம் பூண்ட வொருபே ரின்பத
துலகுதுயர் கெடுப்ப வருளிய வங்கா
ளரவக் கடலொலி யசோதர மாளு
மிரவி வன்ம னெருபெருந் தேவி
சo யலத்தகச் சிறடி யமுத பதிவயிற்
றிலக்குமி யென்னும் பெயர்பெற்றுப் பிறந்தே
னத்தி பதியெனு மரசன் பெருந் தேவி
சித்திபுர மாளுஞ் சீதரன் றிருமக
ணீல பதியெனு நேரிழை வயிற்றிற்
சடு காலை ஞாயிற்றுக் கதிர்போற் ரோன்றிய
விராகுலன் றனக்குப் புக்கே னவனெடு

கூஉ. ஈகர்கேடெய்தியது கூறவே நாகநாட்டில் நானூறு யோசனைப் பரப்பினதுகேடும் கூறியதாயிற்று.

கூடு. ஏத்திய - ஏத்த. கூகூ - டு. நின்மலரடியதனை ஏத்த.

கூள. அருளிய - உபதேசித்த.

கூசு - எ. இன்பத்தை அருளிய அங்காளில்.

கூஅ. கடலரவம்போன்ற ஒலியையுடைய அசோதர நகரம்; "மலிதே ரான் கச்சியு மாகடலுந் தம்மு, மொலியும் பெருமையு மொக்கும்" என்று வருதல் காண்க.

சo. அலத்தகம்=அலக்தம் - அரக்கு.

கூக - சo. தேவியாகிய அமுதபதி.

சக. பிறந்து இலக்குமியென்னும் பெயர்பெற்றேனென விகுதிபிரித்துக் கூட்டுக.

சஉ - ச. பெருந்தேவியும் மகளுமாகிய நீலபதி.

சசு. இராகுலனென்பது புத்தனுடைய புத்திரன்பெயர்; அது புத்தனிடத்துள்ள பத்தியினுல் இவனுக்கு இடப்பட்டதுபோலும்.

சடு - சு. மனிதர்களுடைய பிறப்பிறப்புக்களுக்கு முறையே சூரியனுடைய உதயாஸ்தமனங்களே உவமை கூறுதல் பௌத்த ஸம்பிரதாயமாதலால், 'காலை ஞாயிற்றுக கதிர்போற் ரோன்றிய விராகுலன்' என்றுள்; இதனை, "குண திசைத் தோன்றி.....ஆங்கவன்றுனென்" (கச: கூக - கoச), (பி-ம்.) கூஉ. 'மலரடிவணங்கி' கூச. 'எல்லாம் வீழ்ந்து' கூடு-சு. 'ஏத்தி, யருளறம்' கூக. 'ஒருபெருமகளோன்' சக. 'பெயர் பெறப்பிறந்தேன்' சகூ. 'சித்தபுரம்' சஉ - ச. 'சித்திரபுரமாளுஞ் சீதாருகன்மக, ணீலமதி'

பராவரு மரபினின் பாதம் பணிதலு
மெட்டிரு நாளிலிவ் விராகுலன் றன்னைத்
திட்டி விடமுணுஞ் செல்லுயிர் போஞற்
நுஂ நீயழ லவனெடு சேயிழை மூழ்குவை
யேது நிகழ்ச்சி யீங்கின் ருதலிற்
கவேர கன்னிப் பெயரொடு விளங்கிய
தவாக்களி மூதூர்ச் சென்றுபிறப் பெய்துதி
யணியிழை நினக்கோ ரருந்துயர் வருதாண்

"தேவி கேளாய்...வீழ்கதிர் போன்றேன்" (உசு: கஂகஉ), "சாக்காடென்ப தருவுருத் தன்மை, யாக்கை வீழ்கதி ரெனமதைத் திடுதல்" (கூஂ:கஂஉ - கூ) என இந்நூலுள் வருவனவற்றுணர்க.

கூஎ - சுஎ. அங்ஙனில் யான் இராகுலனெடு நின் பாதம் பணிதலும்.

சஅ. எட்டிருநாளில் - பதினைந்நாளில்.

சகூ. திட்டிவிடம் - கண்ணில் விடமுடையதொரு பாம்பு; இதன் விழிக்கு எதிர்ப்பட்டோர் இறப்பர்; இதனை, "திட்டி விடமுணச் செல்லுயிர் போவுழி" (கக: கஂஂ), "திட்டி விடமுண நின்வயிர் போகாள்" (உக: கக), "திட்டி விடமுணச் செல்லுயிர் போயதும்" (உக: சஂ), "அழற்கணை மாருயி ருண்ண" (உகூ: சுகூ), "நஞ்சுவிழியிரவி னல்லுயிர் வாங்கி" (உகூ: அசு) என இந்நூலுள்ளே வருவனவற்றாலும், 'புத்தன் திருஷ்டிவிஷமாய்ப் பிறந்த ஜாதகத்து.....கண்விழிப்பித் பிராணிகள் சாமென்றறிந்து தன் கண்விழியாதேகிடந்தமையின்' எனவும் 'நீதிருஷ்டிவிஷமானகாலத்து நினக்குக் கொலையுள்ளமில்லையினும் கண்விழிக்கிற் பிராணிகள் சாமென்றறிந்து அதற்கஞ்சி விழியாது கிடந்தது எற்றே' எனவும் வரும் நீலகேசிவிருத்தி சமயதிவாகாரத்தாலும் உணர்க. "கண்விழித் தமிழ்விடக் கனலரா வரசு" எனத்தாடகைவதைப்படலத்தும்; "திட்டியின் விடமன்ன கற்பின் செல்வியை" எனக் கும்பகர்ணப் படலத்தும் கம்பர் கூறியிருத்தல் காண்க.

நுஉ. இராசருஷியும் யோகிகளிற் சிறந்தவருமாகிய கவோரென்பவர் முத்திபெறுதலிவிரும்பிப் பிரஹ்மதேவரைக்குறித்து அரிய தவம் செய்து அவராருளால் விஷ்ணுமாயையைத் தமதுபுத்திரியாக அடைத்து முத்தி பெற்றனரென்றும், பின்பு அகலன்னி ப்ரஹ்மதேவர் கட்டளையின்படி நதிவடிவு கொண்டு பிரவஹித்தமையால் அங்ஙனி கவேரகன்னி யென்றும் காவேரியென்றும் பெயர்பெற்றதென்றும் ஆக்நேயபுராணத்தின் இரண்டாம் பாகத்துள்ள காவேரி மாகாத்மியத்தின் உசு-ஆம் அத்தியாயத்தால் தெரிகின்றது; மணி. கூ: நுநு - சு.

நுகூ. மூதூர் - காவிரிப்பூம்பட்டினம். எய்துதி - அடைவாய்.

நுச. அருந்துயரென்றது, உதயகுமரனுல் மணிமேகலைக்கு உண்டாகும் மன வேறுபாட்டை.

(பி - ம்.) சஎ. 'பாராவருமரபிற்பாதம்' சகூ. 'விடமூண்டு', 'விடமுணச்'

நடு மணிமே கலாதெய்வம் வந்து தோன்றி
யன்றப் பதியி லாரிரு ளெடுத்துத்
தென்றிசை மருங்கிலோர் தீவிடை வைத்தலும்
வேக வெந்திற னாகநாட் டரசர்
சினமா சொழித்து மனமாசு தீர்த்தாங்
சுo கறச்செவி நிறந்து மறச்செவி யடைத்துப்
பிறவிப்பிணி மருத்துவ னிருந்தற முரைக்குந்
திருந்தொளி யாசனஞ் சென்றுகை தொழுதி
யன்றைப் பகலே யுன்பிறப் புணர்ந்தீங்
கின்றியா னுரைத்த வுரைதெளி வாயெனச்
சுரு சாதுயர் கேட்டித் தளர்ந்துகு மனத்தேன்
காதலன் பிறப்புங் காட்டா யோவென
வாங்குனைக் கொணர்ந்த வரும்பெருந் தெய்வம்
பாங்கிற் ரோன்றிப் பைந்தொடி கணவனை
யீங்கிவ னென்னு மென்றெடுத் தோதினை

நகை. சினமாசு - கோபமாகிய குற்றம். மனமாசு-காமமும் மயக்கமும்.

நுஅ - சுஉ. மணி. அ: நுசா - சுங.

சுo. அறச்செவி - அறத்தைக் கேட்டற்குரிய காது; திறந்தென்றார், கேட்பினும் கேளாத்தகையவாதலின் (குறள். சகஎ); "அறவுரை கேட்டு ணர்ந் தஞ்ஞான நீக்கி, மறவுரை விட்ட செவி" (அறநெறி. ககூ.) மறம் - பாவம்.

சுக. பிறவிப்பிணி மருத்துவன் - புத்தன். மருத்துவன்- வைத்தியன்.

நுள - சுஉ. வைத்தலும் சென்று ஆசனத்தைக் கைதொழுவாய்.

சுச. எனை - என்று நீ சொல்ல.

சுநி. சாதுயர் கேட்டு - இராகுலன் இறப்பானென்னும் துன்பமொழி யைக் கேட்டு.

சுசு. காதலன் - கணவன். பிறப்பும் : உம்மை, இறந்ததுதழீஇய எச்சப்பொருளது.

சுகூ. என்னும் - என்று சொல்லும்.

(பி-ம்.) நுஅ-சுo. 'வேகவெந்நீ ராகமன்னுடர்,காய்சினமொழிதலுமாசு தீர்த்தான், கறச்செவிதுறந்து மறச்செவிபடைப்ப' சுஉ-ச. 'தொழு, தன் றைப் பகலே நின்பிறப்புணர்த்தி, பின்றுகாணுரைத்தவுரை தெளிவருகென' சுஎ-அ. 'ஈங்கனைக் கொணர்ந்தவிரும்பெருதெய்வம், பாங்கினரோன்றி'

எ0 யாங்கத் தெய்வதம் வாரா தோவென
வேங்கின ளழூஉ. மிளங்கொடி தானென்.

கூ.—பீடிகைகண்டு பிறப்புணர்ந்தகாதை முற்றிற்று.

எக. இளங்கொடி - மணிமேகலை. அழூஉம் - அழுவாள். இளங்கொடி அழூஉம்.

க - எக. அதுகண்ட ஆயிழை தன்னை அறியாளாயினுள்; அப்பொழுது அவள் கைகள் தலைமேற்குவிந்தன; அங்ஙனங் குவிந்த கையளாய் உருத்து வந்து சேர்ந்து எழுவோள் பிறப்பையுணர்ந்து, "மாதவ, உணர்ந்தோய், நீ உரைத்ததையெல்லாம் மயக்கறவுணர்ந்தேன், பிரமதருமன், உரைப்போய், 'இத்தீவிடை இன்றேழ்நாளில் பூமி நடுக்குறூஉம் போழ்தத்து இக்ககரும் நாகநாட்டு நானூறு யோசனைப் பரப்பும் வீழ்ந்துகேடெய்தும், இதன்பாலொழிக' என்று சொல்லு, வேந்தனும் சாற்றி நீங்கிச் செல்வோன் இருப்ப, எங்கோன், நீ உரைத்தகாளில் நகர் கேடெய்தலும், நின்மலரடியை எல்லாம் ஏத்த அருளிய அந்நாளில், புக்கேன் அவனெடு நின்பாதம் பணிதலும், 'மூழ்குவை, எய்துதி, வருநாளில், வைத்தலும், கைதொழுதி, தெளிவாய்' என்று நீசொல்ல, காட்டாயோவென்று யான் கேட்ப ஓதினை; அத்தெய்வம் வாரா தோ" என்று இளங்கொடி ஙங்கி அழுமென்க.

(பி - ம்.) எ0. 'ஆங்கத்தெய்வம்'

பத்தாவது

மந்திரங்கொடுத்தகாதை.

[பத்தாவது மணிமேகலாதெய்வம் வந்துதோன்றி மந்திரங்கொடுத்தபாட்டு.]

அறவோ ஞசனத் தாயிழை யறிந்த
பிறவிய ளாயினள் பெற்றியு மைதென

க. அறவோன் - புத்தன். ஆசனத்து - ஆசனத்தால்.

க - உ. அறிந்த பிறவியள் ஆயினள் - அறியப்பட்ட பிறவியை உடையளாயினுள்; என்றது முற்பிறப்பை அறிந்தாளென்றபடி. பெற்றியும் ஐது - இவள் பெற்ற பேறும் அழகிது; பெற்றி - பேறு; "பிணிப்பறுத் தோர்தம்

(பி - ம்.) உ. 'பிறவியாயினள்பெற்றியமைதென'

விரைமல ரேந்தி விசும்பு டிழிந்து
பொருவறு பூங்கொடி பூமியிற் பொலிந்தென
நு வந்து தோன்றிய மணிமே கலாதெய்வ
மூந்தைப் பிறப்பெய்தி நின்றோள் கேட்ப
வுயிர்க ளெல்லா முணர்வுபா ழாகிப்
பொருள்வழங்கு செவித்துளை தூர்ந்தறி விழந்த
வறந்தலை யுலகத் தறம்பாடு சிறக்கச்
க0 சுடர்வழக் கற்றுத் தடுமாறு காலையோ
ரிளவள ஞாயிறு தோன்றிய தென்ன
நீயோ தோன்றினை நின்னடி பணிந்தே
னீயே யாகுநிற் கமைந்தவிவ் வாசன
நாமிசை வைத்தேன் றலைமிசைக் கொண்டேன்

பெற்றி யெய்தவும்" (சிலப். கடை: க00.) என - என்று மணிமேகலாதெய்வம் நினைந்து.

கூ - நு. பூங்கொடி ஏந்தி இழிந்து பூமியில் விளங்கினைப் போலத் தோன்றிய தெய்வமென்க.

சு. மூந்தைப் பிறப்பு - முற்பிறப்பு; நின்றோள் கேட்ப - நின்ற மணிமேகலை கேட்கும்படி. "அறிபிறப் புற்றனை" (க0: எடு) என்பர் பின்னும்.

எ. 'உயிர்க ளெல்லாம்' என்பது முதல் புத்தனுடைய பாதபீடிகையை வணங்கும் மணிமேகலாதெய்வத்தின் வார்த்தை. உணர்வு பாழாகி-அறிவின்றி.

அ. பொருள் - தருமம்; "பொருணீங்கிப் பொச்சாந்தார்" (குறள், உ.சசு) என்பதிற்காண்க; தூர்ந்தென்றார், அறத்தைக் கேளாதொழிதலின்; மூன்பு "அறச்செவி திறந்து" (கூ: கூ0) என்றதும் இதுபற்றிப் போலும்.

கூ. வறந்த தலை உலகத்து - வறுமையைத் தன்னிடத்தேயுடைய உலகத்தில். அறம் பாடு சிறக்க - தர்மோத்பத்தி அதிகரிக்க; பாடு=படுதல் - உண்டாதல்; "அறம்பா டறிந்தனை" (க0: எடு) என்று பின்னும்வரும்; பாடு சிறக்க - பெருமை சிறக்கவென்றுமாம்.

க0. சுடர் - சூரியன்; வழக்கு - வழங்குதல். காலை - காலத்தில்.

கக. இளவள ஞாயிறு - பால சூரியன்.

கஉ. பிடிகையைப் புத்தனுகவே பாவித்தமையால், 'நீயோ தோன்றினை' என்றாள்; "நீயேயாகி" என்று பின்னர்க் கூறுவதும் இக்கருத்துப்பற்றியே; பின்வருவனவற்றிற்கும் இஃது ஒக்கும்.

(டி - மீ.) அ. 'அறிவழிந்து' க0. 'சுடரவழகறுத்தடுமாறுகாலை' கஉ. 'நீயே தோன்றுதி நின்னடிதொழுதேன்' கங - ச. 'வாச, னுமிசை வைத் தேன்றலைமிசைகொண்டேன்'

கடு பூமிசை யேற்றினேன் புலம்பறு கென்றே
வலங்கொண் டாசனம் வணங்குவோண் முன்னர்ப்
பொலங்கொடி நிலமிசைச் சேர்ந்தெனப் பொருந்தி
யுன்திரு வருளா லென்பிறப் புணர்ந்தே
னென்பெருங் கணவன் யாங்குள னென்றலு
உ0 மிலக்குமி கேளா யிராகுலன் றன்னெடு
புலத்தகை யெய்தினே பூம்பொழி லகவயி
னிடங்கழி காமமொ டடங்கா ஞயவன்
மடந்தை மெல்லியன் மலரடி வணங்குழிச்

கடு. புலம்பு - வருத்தம்; "புலம்புசே ணகலப் புதுவி ராகுவிர்" (மலைபடு. சகஉ.) என்று - என்று சொல்லி.

ககூ. மானிடமகளாய் பிற்றலின், 'வணங்குவோள்' எனத் தெய்வத்தை உயர்திணையாற் கூறினார்; "யானஞ் செய்த பாவமென்னுள்" (சீவக. ஙகடு) என்புழிப்போல.

கள. பொலங்கொடி - பொற்கொடி; என்றது காமவல்லியை. பொரு ந்தி - வணங்கி.

சு - கள. கேட்பப் புலம்பறுகவென்று ஆசனத்தை வலங்கொண்டு வணங்குவோண் முன்னர்ப் பொருந்தியென்க.

கஅ. அவளைத் தெய்வமாகவறிந்தே மணிமேகலை 'உன்திருவருளால்' என்றாள்.

ககூ. என்றலும் - என்று மணிமேகலை கேட்பவும்.

உ0. 'இலக்குமி' என்பது முதல் மணிமேகலா தெய்வத்தின் வார்த்தை. முந்தைப் பிறப்பெய்தி நின்றேனாதலின், மணிமேகலையை அத்தெய்வம் இலக்குமியென்றழைத்தது.

உக. புலத்தகையெய்தினே - ஊடினாய்; புலத்தல் - ஊடுதல். அக வயின் - உள்ளிடத்தே.

உஉ. இடங்கழி காமமொடு - வரம்பு கடந்து எழுதற்குக் காரண மாகிய காமமோடு; இப்படியே, ஒ தியகுமரனைப்பற்றிச் சொல்லும்பொழுது "இடங்கழி காமமொ டடங்கா ஞஞி" (கஅ: ககூ) எப்பர் பின்னும்; "இட கழி மான் மாலே" என்பதற்கு 'இராகவேகத்தையுண்டாக்கும் மயக்க மூடைய மாலைக்காலம்' (பு - வெ. பெரும்திணை. நு - உரை) என்று பொருள் கூறுவர். "வம்பப்பரத்தை" என்பதற்கு 'இடங்கழிகாமத்தளாகிய குண் டக்கணிகை' (சிலப். க0: உகஅ) என்று பொருள் கூறுவர் அடியார்க்கு நல்லார்.

உங. நின்னடியை வணங்கும்பொழுது.

(பி - ம்.) கடு. 'புலம்பதச்செற்று' உ0. 'கேளிவ்விராகுலன்' உக. 'எய்திப்பூம்பொழிலகவையின்' உஉ. 'இடங்கடழிகாமனெடடங்காஞய வன்' உங. 'வணங்குழ்இச்'

சாது சக்கரன் மீவிசும்பு திரிவோன்
உரு நெருமர லொழித்தாங் கிரத்தின தீவத்துத்
தரும சக்கர முருட்டினன் வருவோன்

உ.சை. சாதுசக்கரன், காரணப்பெயர்; பெரியோர் கூட்டத்திலுள்ளவ னென்றவாறு. சக்கரம் - மண்டலம்; இனி, 'ஓம்மணிபத்மேஹூம்' என்ற மந்திரம் சுற்றுப்பக்கத்தில் எழுதப்பட்டுள்ள உலோகத்தாலாகிய சக்கர மொன்றை வலக்கையில்வைத்து மேற்கூறிய மந்திரத்தை உருவேற ஜபித்துக் கொண்டேயும் ஜபியாமலேயும் அச்சக்கரத்தைச் சுழற்றிக்கொண்டி ருத்தல்பௌத்தர்களிற் சிலருடைய ஸம்பிரதாயமாதலால், இவன் அங்ஙனம் செய்யப்பட்டுள்ள கல்ல சக்கரத்தைச் சுழற்றிக்கொண்டிருத்தலையுடைய னென்று பொருள்கூறியும்பொருந்தும். இஃது இக்காலத்து,'திபேத்'என்னும் தேசத்துப் புத்தர்களுடைய வழக்கமாகக் காணப்படுகின்றதென்றும், இம் மந்திரத்தை இங்ஙனம் ஜபித்தலால் வரும்பயன், நரகலோக முதலிய வற்றில் முறையேபிறவாமல் தாண்டிச்சென்று நிருவாணமடைதலென்றுங் கூறுவர். மீ விசும்பு திரிவோன் - மேலேயுள்ள ஆகாயத்திற் சஞ்சரிப்பவன்; பௌத்தரில் இருத்தி (=வர்த்தி) பெற்றோர் ஆகாயவழியேசென்று அவ்வவ் விடங்களில் இறங்கிப் புத்தருடைய பாதபீடிகை முதலியவற்றைத் தரிசித் தலும், பக்குவிகளுக்குத் தருமோபதேசஞ்செய்தலும், ஏனையோர்க்கு எண் ணியவற்றையளித்தலும் மரபு; இத்தன்மையையுடையோர் சாரணரென்றும் சொல்லப்படுவர். இதனை, "நிலத்திற் குளித்து நெடுவிசும் பேறிச், சலத்திற் திரியுமோர் சாரணன் றோன்ற" (உ: ஆக - எ), "தரும சாரணர் தங்கிய குணத்தோர், கருமுகிற் படலத்துக் ககனத் தியங்குவோ, ரரசற் கேது வவ் வழி நிகழ்தலிற், புரையோர் தாமும் பூம்பொழி லிழிந்து" (உஅ: கoக - கஉ) எனப்பின்வருவனவற்றாலுணர்க. இப்படியே சமணரில் இருத்தி பெற்றோரும் சாரணரென்று சொல்லப்படுவர்; "நீரினிற் பூவில் வானி னினைத்துழி யொதுங்கு கின்ற, சாரண ரெண்ம ராவர் சமணரி லிருத்தி பெற்றோர்" (சூடாமணி. உ: ச.) என்று வருதல காண்க.

உரு. தெருமரல்-மனக்கவற்சி; "செய்யார் தேஎக் தெருமரல் கலிப்ப" (பொநந. கஙச.) இரத்தின தீவத்து - இரத்தினத்தீவில்; இது மணி பல்லவமென்னும் தீவிற்கு அயலிலுள்ள பிறதீவு. இதிற் புத்தனுடைய பாதக்குறிகள் பொருந்திய உச்சியையுடைய மலையொன்று உண்டு. இதன் பெயர் சமந்த மென்பது; இதனை, "ஈங்கித னியலகத் திரத்தின தீபத்தோங் குயர் சமந்தத் துச்சி மீமிசை, யதவியங் கிழவோ னடியினீ யாகிய, பிறவி யென்னும் பெருங்கடல் விடூஉ, மதவி நாவா யாங்குளது" (கக: உக - ருு) என்று மேல்வருதலாலுணர்க.

உசு. உருட்டினன், வினையெச்சமுற்று. தருமம் முதலும் முடிவுமில் லாத நித்தியப்பொருளென்பார் தருமசக்கரமென்றும், அதனைத் தடை யின்றிச்செலுத்துகின்றவனென்பார் உருட்டினன் வருவோனென்றுங் கூறினர்; இப்படியே "அறக்கதி ராழி திறப்பட வுருட்டி" (ருு: எசு) என்றார் மூன் னும்; தருமத்தை ஸகாதரமென்று வடநூலார்கூறுதல்காண்க. தருமத்தைச்

(பீ - மீ.) உரு - சு 'நீபத்துத்.....முருட்டிய வருவோன்'

வெங்கதி ரமயத்து வியன்பொழி லகவயின்
வந்து தோன்றலு மயங்கினே கலங்கி
மெல்லியல் கண்டனே மெய்ந்நடுக் குற்றனே
நல்கூர் நுசுப்பினே நாணினே யிறைஞ்ச
விராகுலன் வந்தோன் யாரென வெகுளலும்
விராமலர்க் கூந்த லவன்வாய் புதையா
வானூ டிழிந்தோன் மலரடி வணங்காது
நாகல் கூர்ந்தனே யென்றவன் றன்னொடு
பகையறு பாத்தியன் பாதம் பணிந்தாங்
கமர கேணின் றமரல மாயினு
மன்றீந் தண்ணீ ரமுதொடு கொணர்கே

சக்கரமாகவும், அதன் அங்கங்களைச் சக்கரத்திற்குரிய அங்கங்களாகவும் உருவகஞ்செய்து நூல்கள் கூறும்; இதனை, அச்வகோஷபோதிஸத்துவரென்ப வரால் வடமொழியிற் செய்யப்பட்டுள்ள புத்தசரித காவ்யமென்னு நூலில் தர்மசக்காப்பிரவர்த்தனத்தியேஷ்ண மென்னும் பதினைந்தாம் வர்க்கத்தி னிறுதியிற் காண்க. இனி, முன்னர்க்கூறிய உலோகசக்கரத்தைக் கையில் வைத்துச் சுழற்றிவருவோனெனினும் பொருந்தும்; இப்பொருள், சாதுசக்கரனென்னும் பெயருக்குப் பொருத்தமுடைத்தாதல் காண்க.

உஎ. வெங்கதிரமயத்து-உச்சிப்பொழுதில்; மணி. நி: சு0;கக: க0உ.

உசு-அ. சாதுசக்கரன் நிரிவோன் வருவோன் வந்துதோன்றலுமென்க.

உசு - ஙு0. மெய்நடுக்குறுதல் முதலியன இறைபொருளாகப்பிறந்த அச்சமென்னுமெய்ப்பாடு.

ஙக. சாதுசக்கரனைத் தன் மனைவி இறைஞ்சக்கண்டு வெகுண்டமை குடிகோள்பற்றிவந்த வெகுளியென்னு மெய்ப்பாடு.

ஙசு. நா நல்கூர்ந்தனே - நா வறுமையுற்றாய்; என்றது, சாரணனைத் தரியாது வீணேயிருந்தாயென்று இகழ்ந்தபடி; "நாடாது தணிந்து நாகல் கூர்ந்தனே" (ககஃ: சு) என்பர் பின்னரும்.

ஙரு. பாத்தியன் - (புத்தனுடைய) பாதத்திற்கு அன்பன்; "திருவாத வூர்ச் சிவபாத்தியன்" என்பதில் 'பாத்தியன்' என்பது இப்பொருளில் வருதல் காண்க; இது நம்பியாண்டார்நம்பிகள் திருவாக்கு.

ஙசூ. நின் றமரலம் ஆயினும் - யாம் நினக்குச் சிறந்த அன்பரல்லேமாயினும்.

ஙள. அமுது - அன்னம்; அமிர்தமென்னும் வடமொழிச்சிதைவு; இதனை ஆருயிர் மருந்தென்று இந்நூலுள்ளே பலவிடத்துங்கூறுவர்.

(பி - ம்.) ஙு0. 'நலங்கூர்' ஙக. 'இராகுலன்வந்தோர்', 'இராகுலவந்தோய்' ஙக - உ 'வெகுளலு, மமலா' ஙசு. 'நானலகூந்தனே' ஙரு - சூ. 'பணிந்துநீங்கமரகேள்'

முண்டி யாமுன் குறிப்பின மென்றலு
மெம்மனை யுண்கே னீங்குக் கொணர்கென
சா0 வங்கா ளவனுண் டருளிய வவ்வற
நின்னுங் கொழியாத நின்பிறப் பறுத்திடு
முவவன மருங்கி லுன்பாற் றேன்றிய
வுதய குமர னவனுன் னீராகுல
ஞங்கவ னன்றியு மவன்பா லுள்ள
சரு நீங்காத் தன்மை நினக்குமுண் டாகலிற்
கந்த சாலியின் கழிபெரு வித்தோர்
வெந்துகு வெண்களர் வீழ்வது போன்மென

ஈ அ. உண்டி - உண்பாய். என்றலும் - என்று நீ சொல்லலும்.

ஊ ஊ. எம்மனை - தாயே. கொணர்க என - கொண்டுவருகவென்று சாதுசக்கரன் சொல்லி.

சா0. அவன் உண்டருளிய அவ்வறம் - சாதுசக்கரன் அமுது செய்த மையாலுண்டாகிய அந்தப்புண்ணியம்.

சக. நின்னுங்கொழியாது - நின்னைவிட்டு நீங்காது ; நின்னுங்கு: மணி. கக: சள.

சா0 - சக. அவ்வறம் நின்பிறப்பை அறுத்திடும்.

சஊ. உதயகுமரனுகிய அவன்.

சஎ. அவனன்றியும் - அவன் உன்பால் நீங்காத விருப்பத்தைச்செலுத்தவதல்லாமலும்.

சஎ - நி. உதயகுமரனை மணிமேகலை இடைவிடாது நினைத்திருந்தா ளென்பதை, உதயகுமரன் வெட்டுண்டு இறந்தபொழுது, "உவவன மருங்கி னின்பா லுள்ளந், தவிர்விலே ஞதலின்" (மணி. உக: கஊ - ச) என்று அவள் அவனைக்குறித்துக் கூறியவாற்றலும் உணர்க.

சசு. கந்தசாலி - சிறந்தவாசனையுள்ள ஒருவகை நெல் ; இப்பெயரினதாகிய நெல்லொன்று உண்டென்பது, தசகுமாரசரித்தத்தின் உத்தரார்த்தத்தில் ஆறாவது உச்சுவாசத்திலுள்ள கோமினிகதையால தன்குபுலப்படும். இக்காலத்து இந்நெல் கன்னடதேசத்துள்ள மங்கலாபுரத்தில் (மங்களூரில்) மிகுதியாகவுள்ளது. மணிமேகலையின் உயர்வுபற்றி அவளுக்குக் கந்தசாலி உவமைகூறப்பட்டது. கழிபெருவித்து - மிகச்சிறந்தவிதை.

சள. களர் - உப்புநிலம். வீழ்வது போன்ம் - விதைக்கப்படுவதை யொக்கும்; என்றது, திருமத்துக்குமூலமாகிய நீ உதயகுமரனே விரும்புவாயாயின் உனதியல்பு களர்நிலத்தில் விதைக்கப்பட்ட கந்தசாலியின் விதையைப்போன்று பயனற்றுப்போமென்றபடி. என - என்று நினைந்து.

(பி - ம்.) ஈ அ. 'உண்டியான்' ஊ ஊ. 'உண்டுகேளீயீங்குக்குணர்கென' சா0. 'அருளியவதலமுது', 'அருளியவவ்வமுது' சள. 'வெங்களர்'

வறத்தின் வித்தாங் காகிய வுன்னையோர்
திறப்படற் கேதுவாச் சேயிழை செய்தே
நு0 னின்னுங் கேளா யிலக்குமி நீதின்
றவ்வைய ராவோர் தாரையும் வீரையு
மாங்கவர் தம்மை யங்ஙனாட் டகவயிற்
கச்சய மாளுங் கழற்கால் வேந்தன்
றுச்சய னென்போ ஞெருவன் கொண்டன
நுநு னவருட ஞங்கவ னகன்மலை யாடிக்
கங்கைப் பேரியாற் றடைகரை யிருந்துழி
மறவண நீத்த மாசறு கேள்வி
யறவண ஞங்கவன் பாற்சென் ரூனை
யீங்கு வந்தீர் யாரென் றெழுந்தவன்
சு0 பாங்குளி மாதவன் பாதம் பணிதலு
மாதி முதல்வ னறவாழி யாள்வோன்
மாதுய ரெவ்வ மக்களை நீக்கி

சுஅ. தருமத்திற்கு மூலமாகிய உன்னை.

சுஅ - கூ. ஓர்திறப் ப்டற்கு ஏதுவாச்செய்தேன் - நின்மனம் ஒருவழிப் படுதற்குக் காரணமாகச்செய்தேன்; ஒருவழி - வைராக்கியமார்க்கம்; ''ஒரு மனமெய்தி யிருவினைப் பிணிவிட, முப்பகை கடந்து நால்வகைப் பொருளு ணர்ந்து'' (வீர. யாப்பு. கக. உதாரணம்) என்று வருதல்காண்க. செய்தே னென்றது, மணிமேகலையை உவவனத்திலிருந்து மணிபல்லவத்திற்குக் கொண்டுபோய்ப் புத்தனது பாதபீடிகையைக் காட்டி முற்பிறப்பின் செய்தியை அவள் அறிந்து உய்யும்படி செய்ததனை; மணி. உக: கஙூ - எ.

நுக. தவ்வையராவோர் - மூன் பிறந்தோராவோர்.

நுஉ - ச. அவர்தம்மைத் துச்சயன் மணஞ்செய்துகொண்டான்.

நுநு. அவருட்ன் - தாரை வீரைபென்பவருட்ன். ஆடி - விளையாடி.

நுஅ. அவன் - துச்சயன். சென் றீரூனை - சென்ற அறவணவடிகளை.

நுஎ - அ. மணி. உ: சு0 - ஙூக.

நுகூ - சு0. அவன் பாங்கு உள்ளி - அவனுடைய இயல்பை நினைந்து. பணிதலும் - துச்சயன் வணங்குதலும்.

சுக. மணி. சு: கக. ஆதிமுதல்வ னென்பது முதலியவை, அறவண வடிகள் துச்சயனை நோக்கிக் கூறும் வார்த்தை.

சுஉ. மாதுயர் எவ்வம் - மிக்கதுன்பம்; எவ்வம் பிறப்பிறப்புக்களை; துயரெவ்வம், ஒருபொருட் பன்மொழி. நீக்கி - நீங்கச்செய்து.

(பி - ம்.) சுக. 'சேயிழைவந்தேன்' நு0: 'உன்றன்' நுக. 'தவ்வையரா கிய', 'தவ்வையளாகிய' நுஉ. 'அங்ஙனாடகவையிற்' நுநு. 'அவனுடனுங் கவரகன்மலை' நுசு. 'பெயராற்றிடைகரை'

கநு

விலங்குந் தம்மூள் வெரூஉம்பகை நீக்கி
யுடங்குயிர் வாழ்கவென் றுள்ளங் கசிந்துகத்
சுரு தொன்று காலத்து நின்றற மூரைத்த
குன்ற மருங்கிற் குற்றங் கெடுக்கும்
பாத பங்கயங் கிடத்தலி னீங்கிது
பாதபங் கயமலை யெனும்பெயர்த் தாயது
தொழுது வலங்கொள்ள வந்தே னீங்கிப்
எ பழுதில் காட்சியீர் நீயிருந் தொழுமென
வன்றவ னுரைத்த வவ்வுரை பிழையாது
சென்றுகை தொழுது சிறப்புச் செய்தலின்
மாதவி யாலியுஞ் சுதமதி யாலியுங்

சுரு. வெரூஉம்பகை - அஞ்சுதற்குக் காரணமாகிய பகை.

சுக. உயிர் உடங்கு வாழ்க என்று - எல்லாவுயிர்களும் தம்மூள் மன வேறுபாடின்றி ஒத்து வாழ்வனவாக வென்று கருதி; எல்லாவுயிர்களும் ஒரு படியாக நிருவாணமடைந்து வாழ்கவென்று கருதியென்று கூறினும் பொருந் தும். உள்ளம் கசிந்து உக - மனம் கருணைமிகுதியால் இரங்கிக்கரைய.

சுரு. தொன்று காலத்து - பழையகாலத்தில்:

சுஉ - ரு. மணி. கஉ: அஎ - ஈக.

சுரு - சு. நின்று அறம் உரைத்த குன்ற மருங்கில் - எல்லா உயிர்க ளும் காணும்படி நின்று தருமோபதேசஞ்செய்த மலையினிடத்தே. அம் மலையாவது கிருத்தினகூடம்; அது, மகததேசத்தின் இராசதானியாகிய இராசக்ருகநகரத்தின் அருகே உள்ளது. குற்றம்-காமவெகுளி மயக்கங்கள்.

சுக - சு. முதல்வன் ஆள்வோன் உயிர் வாழ்கவென்று நின்று அறம் உரைத்த குன்றம்.

சுஎ. பாதபங்கயம் - புத்தனுடைய பாததாமரைக் குறிகள்.

சுஅ. பெயர்த்தாயது - பெயரையுடைத்தாயிற்று.

எ0. பழுது இல் காட்சியீர் - குற்றமிலலாத அறிவினையுடையீர். தொழு மென - தொழுமினென்று துச்சயன் முதலியோரை நோக்கி அறவணவடி கள் சொலல.

எக. பிழையாது - தப்பாது.

எஉ. சிறப்பு - விழா; "சிறப்பொடு பூசனை செல்லாது" (குறள். கஅ); பூசையெனினும் பொருந்தும்.

(பி - ம்.) சுரு - சு. 'விலங்கு தம்முளா ருட்பகை நீக்கி, யுடன்பயிர் வாழ்க.....கசிந்து' சுஎ-அ. 'கிடைத்திலணங்கிது, பாதபங்கயமெனும்' எ0 - எக. 'காட்சியீரே நீருந்தொழுமினென், றவ்றவனுரைத்தவவ்வுரை'

கோதையஞ் சாய னின்ஞெடு கூடின
எடு ரறிபிறப் புற்றனே யறம்பா டறிந்தனே
பிறவற முரைப்போர் பெற்றியுங் கேட்குவை
பல்வேறு சமயப் படிற்றுரை யெல்லா
மல்லியங் கோதை கேட்குழு மங்கா
ளிளேயள் வளேயோ ளென்றுனக் கியாவரும்
அ0 விளேபொரு ளுரையார் வேற்றுரு வெய்தவு
மந்தரந் திரியவு மாக்குமிவ் வருந்திறன்
மந்திரங் கொள்கென வாய்மையி ஞெதி
மதிநாண் முற்றிய மங்கலத் திருநாட்

எசு. கோதையஞ்சாயலென்றது, மணிமேகலையை.

எகூ - சீ. ழ. மணி. கஉ: கஎ - அ.

எடு. அறிபிறப் புற்றனே - முற்பிறப்பை யறிந்தாய்; 'முன்தைப் பிறப் பெய்தி நின்றேள்' (சு) என்று இக்காதையில் முன்னும் கூறியிருத்தல் காண்க; அறம் பாடி அறிந்தனே-தருமோபதேசத்தியை யறிந்தாய்; 'அறம்பாடு சிறக்க' (க0: கூ) என்றார் முன்னும்.

எசு. பிற அறம் உரைப்போர் - மற்றைச் சமயதருமங்களேச் சொல்லு வோர்.

எஎ. படிற்றுரை - பொய்வார்த்தை.

எஅ. அல்லியங்கோதை, முன்னிலேப்பெயர்.

எகூ. இளேயள் - இளமையையுடையாள். வளேயோள் - வளேகளே யுடையாள்.

அ0. விளேபொருள் உரையார் - விளேகின்ற தத்தம் சமயதத்துவங்க ளேச் சொல்லார்; இயல்பன்றென்பார் விளேபொருளென்றார்; ஆதலாலென ஒருசொல் வருவிக்க. வேற்றுரு - வேறுவடிவம்.

எகூ - அ0. ழ. மணி. உசு: சுஅ - கூ. அக. அந்தரம் - ஆகாயம்.

அஉ. வாய்மையின் ஒதி - நால்வகை வாய்மையுடன் அம்மந்திரங்களே உபதேசித்து; வாய்மையின் - உண்மையுடனென்றுமாம்.

அங. மதி நாள் முற்றிய - சந்திரன் நாள்தோறும் ஒவ்வொரு கலேயாக வளர்ந்து முற்றுப்பெற்ற; மங்கலத்திருநாள் - பௌர்ணிமையில்; புத்தன் ஞானம் பெற்றதினம் வைசாகசுத்த பௌர்ணிமையாதலால், அதனே விளக் குதற்பொருட்டு 'மதிநாண் முற்றிய மங்கலத் திருநாள்' என்றார். புத்தன் பிறந்த தினமும் அதுவே. இதனால், வைசாகசுத்தபௌர்ணிமையைச் சிறந்த திருநாளாகப் பௌத்தர் இக்காலத்தும் கொண்டாடுவர்.

(பி - மீ.) எசு. 'நின்ஞெடுங்கூடினர்' எடு. 'அயப்பாடிறத்தனே' எஅ - கூ. 'நாளி, னிளேயவள் வளேயோரென்றுனக்கு' அக. 'அந்தரஞ் சேறலும்', 'அந்தரத் திரியவும்'

பொதுவறி விகழ்ந்து புலமுறு மாதவன்
அடி நிருவற மெய்ததல் சித்தமென் றுணர்நீ
மன்பெரும் பீடிகை வணங்கினை யேத்தி
நின்பதிப் புகுவா யென்றெழுந் தோங்கி
மறந்தது முண்டென மறித்தாங் கிழிந்து
சிறந்த கொள்கைச் சேயிழை கேளாய்
கூ0 மச்கள் யாக்கை யுணவின் பிண்ட
மிப் பெரு மந்திர மிரும்பசி யறுக்குமென்
றுங்கது கொடுத்தாங் கந்தர மெழுந்து
நீங்கிய தாங்கு நெடுந்தெய்வந் தானென்.

கo.—மந்திரங்கொடுத்தகாதை முற்றிற்று.

அசு பொதுவறிவு இகழ்ந்து-சாமானிய ஞானத்தைவெறுத்து; புலம் உறும் மாதவன்-தான்குவகையாகிய சத்தியங்களே அறிதற்குரிய ஞானத்தையடைந்த புத்தனுடைய; புலம் - மெய்ஞ்ஞானம்; முறுகு. சுஙு.

அடு. சித்தம் (=வித்தம்) - நிச்சயம். அசு. வணங்கினை - வணங்கி.
அஅ. மறித்து ஆக்கு இழிந்து - மீட்டும் அவ்விடத்தேயிறங்கி.
அசு. கொள்கை - விரதம்; "சான்றகொள்கை" மதுரை. ஙஅ.

கூo. மனிதருடைய உடம்பு உணவாலாகியதொகுதி; "உண்டி முதற்றே யுணவின் பிண்டம்" புறநா. சுஅ.

கூக. எல்லாமந்திரத்திலும் சிறந்ததென்பார் பிறியொழிக்குமந்திரத்தைப் பெருமந்திரமென்றார்.

கூஙு. நெடுந்தெய்வம் நீங்கியது.

க - கூஙு. ஆயிழை ஆசனத்தால் அறிந்தபிரவியளாயினள்; இவள்பெற்றியும் ஐதென்று வந்துதோன்றிய தெய்வம், நின்றேள்கேட்ப "நீயோதோன்றினை; நின்னடி பணிந்தேன்; வைத்தேன்; கொண்டேன்; ஏற்றினேன்; புலம்பு அறுக" என்று ஆசனத்தைவலங்கொண்டு வணங்காநிற்ப, அப்பொழுது அத்தெய்வத்தின்முன்னர்ப் பொருந்தி 'உன்றிருவருளால் என்பிறப்புணர்ந்தேன், என்கணவன் யாங்குளன்?' என்று மணிமேகலைகேட்டலும், அத்தெய்வம் "இலக்குமி! கேள், பொழிலில் இராகுலனுடு நீ புலக்காய்; அப்புலலியை மாற்றவேண்டி அவன் உன்னடியை வணங்கும்பொழுது, சாதுசக்கரன் திரிலோன் வருவோன் வெங்கதிரமயத்துப் பொழிலிலுள்ளே வந்து தோன்றலும், நீ கண்டு மயங்கிக் கலங்கி நடுக்குற்று நாணி இறைஞ்ச, இராகுலன் 'வந்தோன்யார்' என்று வெகுளலும், நீ அவன்வாயைப்புதைத்து 'இழிந்தோனுடைய அடியை வணங்காது நாலல்கூர்ந்தனை' என்று

(பி - ம்.) அச. 'பொதுவறிவிழுந்து புலம்பறு மாதவன்' அஎ. 'நின்றன்பதிப்புகுவாயென' கூக. 'நீங்கியதாங்க'

சொல்லி அவனோடு பாத்தியன் பாதம் பணிந்து, 'அமர, கேள்; கொணர்கேம்; உண்டி; யாம் உன்குறிப்பிடம்' என்றலும், அவன் 'கொணர்க' என்று உண்டருளிய அவ்வதம் நின்னை யொழியாது நின்பிறப்பை யறுத்திடும்; உவவனத்தில்தோன்றிய உதயகுமரன்முன் இராகுலன்; அவனுக்கு உன்பாலன்றி அவன் பால் உள்ளநீங்காத்தன்மை நினக்கு முண்டாதலின், நினது இயல்பு வீழ்வது போலுமென்றெண்ணி உன்னை ஒரு திறப்படற்கு ஏதுவாச் செய்தேன்; இலக்குமி! இன்னுங்கேள்; தாரையும் வீரையும் நின்தவ வையராவோர்; அவர் தம்மைத் துச்சயன்கொண்டனன்; அவன் அவருடன் மலையாடி அடைகையிலிருந்துழிச் சென்ற அரவணனை அவன் 'வந்தீர் யார்?' என்று எழுந்து பாதத்தைப்பணிதலும், அவன் 'பாதபங்கயத்தைத் தொழுது வலங்கொள்ளவந்தேன்; நீருந்தொழும்' என்ற உரைபிழையாது சென்று தொழுது சிறப்புச் செய்தலின், தாரையும் வீரையும் நின்னெடு கூடினர்; உற்றனை; அறிந்தனை; பெற்றியும் கேட்குவை; அங்ஙன், யாவரும் உனக்கு உரையார்; ஆதலால், இம்மந்திரங்கொள்க" என்று அவற்றை உபதேசித்து, "உணர்நீ; நின்பதிப்புகுவாய்" என்று எழுந்தோங்கி "யான் மறந்ததுமொன்றுண்டு" என்று மறித்தும் இழிந்து, "கேளாய்; யாக்கை உணவின்பிண்டம்; இப்பெருமந்திரம் இரும்பசியறுக்கும்" என்று அம்மந்திரத்தைக்கொடுத்து எழுந்து நீங்கியதென விணைமுடிவு செய்க.

பதினெண்ருவது

பாத்திரம்பெற்றகாதை.

[பதிலெனருவது மணிமேகலைக்குத் தீவதிலகை கோமுகியென்னும் பொய்கையிலழுந்த பாத்திரங்கொடுத்தபாட்டு.]

மணிமே கலாதெய்வ நீங்கிய பின்னர்
மணிபல் லவத்திடை மணிமே கலைதான்
வெண்மணற் குன்றமும் விரிபூஞ் சோலையுந்
தண்மலர்ப் பொய்கையுந் தாழ்ந்தன ணோக்கிக்
ருகாவதந் கிரியக் கடவுட் கோலத்துத்

கூ. குன்றமுதலியவற்றிற்கு இரண்டனுருபு விரிக்க.

ச. தாழ்ந்தனள் நோக்கி=தாழ்ந்து நோக்கி - யெல்ல நோக்கி.

ருகாவதம் - காதம்; 'வ' பகுதிப்பொருள் விகுதி யென்பர் (சிலப். கo: கூசு) அடியார்க்கு நல்லார். கடவுட்கோலம் - தெய்வவேடம்.

க - ரு. நீங்கியபின்னர் மணிமேகலை நோக்கித் திரியவென்க.

(பி - ம்.) ச. 'தண்புனற்பொய்கை'

தீவ திலகை செவ்வனந் தோன்றிக்
கலங்கவிழ் மகளிரின் வந்தீங் கெய்திய
விலங்குதொடி கல்லா யார்நீ யென்றலு
மெப்பிறப் பகத்துள் யார்நீ யென்றது
பொற்கொடி யன்னாய் பொருந்திக் கேளாய்
போய பிறவியிற் பூமியங் கிழவ
னிராகுலன் மனேயா னிலக்குமி யென்பே
ராய பிறவியி லாடலங் கணிகை
மாதவி யீன்ற மணிமே கலையா
னென்பெயர்த் தெய்வ மீங்கெனைக் கொணரவிம்
மன்பெரும் பீடிகை யென்பிறப் புணர்ந்தே
னீங்கென் வரவிதீங் கெய்திய பயனிது

சு. தீவதிலகை - இத்திரதேவனாற் புத்தனுடைய பாதபீடிகையைப் பாதுகாத்துக்கொண்டு மணிபல்லவத்திலிருப்பவள்; (மணி. பதிகம், நிகு; கக: உள - அ.) செவ்வனம் - செவ்விதாக; வேறுகவெனினும் பொருந்தும்; "திருமக ளிருக்கை செவ்வனங்கழிந்து" (சிலப். சு: கஉள) என்பதிற்காண்க.

எ. கலம் - கப்பல். மகளிரின் - மகளிர்போல.

அ. தொடி - வளை. என்றலும் - என்று தீவதிலகை கேட்கவும்.

சு - அ. தீவதிலகை தோன்றி யார் நீயென்றலும்.

கூ. 'எப்பிறப்பகத்துள்'என்பதுமுதலியன மணிமேகலையின் வார்த்தை.

கo. பொற்கொடி யன்னாய் - காமவல்லியையொப்பாய்.

கக. போய பிறவி - சென்ற பிறப்பு. கிழவன் - உரியவன்.

கஉ. மனே யான் - யான் மனைவி. இலக்குமி என்பேர் - இலக்குமி யென்பது எனது பெயர்.

கஙு. ஆய பிறவியில் - இப்பிறப்பில்.

கஙு - ச. பலவகையினராகிய கணிகையர்களுள் மாதவி நாடகக்கணி கையாதலின், அதனை விளக்குதற்பொருட்டு 'ஆடலங் கணிகை மாதவி' என் றுள். கணிகையர்களின் வகையினைச் சிலப்பதிகாரம், நு-ஆம் காதையிலும், கச - ஆம் காதையிலும் காண்க.

கடு. என்பெயர்த்தெய்வமென்றது, மணிமேகலாதெய்வத்தை.

கசு. பீடிகை - பீடிகையால்.

கள. பயனிதுவென்றது, பழம்பிறப்புணர்ந்ததனை.

(பி - ம்.) அ. 'இலக்குகொடி யன்னு யார்நீ' கஉ. 'என்பேன்'

பூங்கொடி யன்ஞ யார்நீ யென்றலு
மாயிழை தன்பிறப் பறிந்தமை யறிந்த
உ0 தீவ திலகை செவ்வன மூரைக்கு
மீங்கித னயலகத் திரத்தின தீவத்
தோங்குயர் சமந்தத் துச்சி மீமிசை

கஅ. என்றலும் - என்று மணிமேகலை கேட்கவும்.

ககூ. ஆயிழை - மணிமேகலை. அறிந்தமை - அறிந்த தன்மையை.

உ0. உரைக்கும் - சொல்லுவாள்.

மேல்வருவன தீவதிலகையின் வார்த்தை.

உக. இதன் அயலகத்து - இந்த மணிபல்லவத்தின் அயலிடத்துள்ள.

உஉ. ஓங்குயர் சமந்தத்து - மிகவுமுயர்ந்த சமந்தமென்னு மலையினது; உச்சிமீமிசை - உச்சியின்மேலே; மீமிசை - மேல்; "கொல்களிற்று மீமிசைக்கொடி" (புறநா. கூ.) இம்மலைக்குச் சமனெளி யென்றும் ஒரு பெயருண்டு; "இலங்கா தீவத்துச் சமனெளி யென்னுஞ், சிலம்பினை யெய்தி" (உஅ:கo எ-அ) என்று பின்வருதலாலுணர்க. "ஆறைத்தி யோசனை.....மணிபல் லவத்திடை" (மணி. சு: உகக-கூ) என்றதனால் மணிபல்லவம் காவிரிப்பூம் பட்டினத்திற்குத் தெற்கே முப்பதுயோசனை தூரத்திலுள்ளதென்றும், "ஈங்கிதன்.....யாங்குளதாதலின்" (உக-ருி)என இங்கே கூறியவதனால் இரத்தின தீவம் மணிபல்லவத்திற்கு அயலிடத்துள்ளதென்றும், அதிற் புத்தனுடைய பாதக்குறிகளுள்ள உச்சியையுடைய சமந்தமென்னு மலையொன்றுண்டென்றும் தெரிதலாலும், "இலங்கா தீவத்து.....எய்தி" (மணி. உஅ: ரo எ-அ) என்பதனால் இலங்காதீவத்திற் சமனெளி யென்று பெயருள்ள புத்தஸ்தலமாகிய மலையொன்றுண்டென்று தெரிதலாலும் முன்னுள்ள சமந்தமென்பதும், பின்னுள்ள சமனெளியென்பதும், இலங்கையிலுள்ள 'ஆடம்ஸ்பீக்' என்று ஆங்கில பாஷையில் வழங்கும் மலையையே குறிக்கின்றனவென்று எண்ணுவதற்கு இடமுண்டு. இலங்கைத்தீவின் மேல் மாகாணத்தில் தென்கீழ்ப்பிரிவில் இரத்தினபுரியென்ற ஓரிடமும், சிலராற் சமந்த கூடமென்றும் சிலராற்சமனெலியென்றும் சொல்லப்பட்டுள்ள மலையொன்றும் உள்ளனவென்று யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை, வே. சதாசிவப்பிள்ளையென்பவரால், கி. பி. 1884 - ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்டுள்ள இலங்கைப்பூமிசாஸ்திரசங்கிரகமென்னும் புத்தகத்தால் தெரிகின்றது. மணிபல்லவம் காவிரிப்பூம்பட்டினத்திற்குத்தெற்கே ஆறைத்து யோசனை தூரத்துள்ளதென்றும் அதன் அயலிலுள்ளது இரத்தின தீவமென்றும் முன்பு கூறியதற்கு, 'ஆடம்ஸ்பீக்' காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தெற்கே சற்றேறக்குறைய முப்பது காததூரத்திலிருத்தலும், அம்மலை பண்டைக்காலத்துச் சமந்தமென்றும் சமனெளியென்றும் கூறப்பட்டு வந்ததென்பதற்கு, இக்காலத்து அது 'சமந்தகூடம்' என்றும் 'சமனெலி'

(பி - ம்.) உஉ. 'சிமயத்துச்சி'

யறவியங் கிழவோ னடியிணை யாகிய
பிறவி யென்னும் பெருங்கடல் விடீஉ
உடு மறவி நாவா யாங்குள தாதலிற்
றொழுது வலங்கொண்டு வந்தே னீங்குப்
பழுதில் காட்சியிற் நன்மணிப் பீடிகை
தேவர்கோ னேவலிற் காவல் பூண்டேன்
நீவ திலகை யென்பெய ரிதுகே
ஈ0 டரும தலிவன் றலைமையி னுரைத்த

என்றும் பெயர்பெற்றிருத்தலும், சமணெளி இலங்காதீவத்துள்ளதென்பதற்கு அஃது இலங்கைத்தீவிலிருத்தலும் சான்றுதலறிக.

உங. அறவியங் கிழவோன் - அறத்திலே நிற்கின்ற உரிமையையுடையோனுகிய புத்தன்; "அறவியாற் காறு மூன்றும்", "அறவிய மனத்தராகி" (சீவக. ககஉடு, உஅள); "அறவிய மனத்தினே யாகி", "அறவியான்றனு மறவமிர்த மீந்தான்" (நீல. தரும. சஅ, கo0.) இணை - இரண்டு.

உச. பிறவி காரணகாரியத்தொடர்ச்சியாய்க் கரையின்றிவருதலின் 'பிறவியென்னும் பெருங்கடல்' என்றார். விடீஉம் - கடத்தும்.

உடு. அறவிநாவாய் - அறத்திலே நிற்பதாகிய நாவாய்; நாவாய்- கப்பல்.

உஉ - டு. உச்சிமீமிசை அடியிணையாகிய நாவாய் உள்ளது.

உஙு - டு. பிறவியாகிய பெருங்கடலிக்கடத்தும் அடியிணையாகிய நாவாயென்க; "பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா, நிறைவனடிசேராதார்" குறள். கo.

உசு. ஈங்கு வந்தேன்.

உக - சு. இம்மணிபல்லவத்தின் அயலிடத்தேயுள்ளதாகிய இரத்தின தீவத்துள்ள சமந்தமென்னுமலையினது உச்சியிற் புத்தனது பாதமாகிய அறவி நாவாய் உள்ளதாதலால் அதனைத் தொழுது வலங்கொண்டு ஈங்குவந்தே னென்றுனென்க.

உஎ. பழுது இல் காட்சி - குற்றமற்ற தோற்றத்தையுடைய. பீடிகை- பீடத்தை.

உஅ. காவல் பூண்டேன் - காத்தலை மேற்கொண்டேன்.

உகூ. என்பெயர் நீவதிலகையென்பது.

ஈo. தருமராசனென்பது புத்தன்பெயர்களுள் ஒன்றுதலின், தருமதலி வனென்றார்.

(பி - மீ.) உசு. ' வந்தேனிந்தப்' உஅ. 'காவற் பூண்ட'

பெருமைசா னல்லறம் பிறழா தோன்பினர்
கண்டிகை தொழுவோர் கண்டதற் பின்னர்ப்
பண்டைப் பிறவிய ராகுவர் பைந்தொடி
யரிய ருலகத் தாங்கவர்க் கறமொழி
கூடு யுரிய துலகத் தொருதலே யாக
வாங்கன மாகிய வணியிழை யிதுகே
ளீங்கிப் பெரும்பெயர்ப் பீடிகை முன்னது
மாமலர்க் குவளையு நெய்தலு மயங்கிய
கோமுகி யென்னுங் கொழுநீ ரிலஞ்சி
சo யிருதுளை வேனிலி லெரிகதி ரிடபத்

கக - கூ. தோன்பினரே இப்பீடிகையைத்தரிசித்தற்குக் கைதொழுதற்கு உரியராவார்; அங்ஙனந்தரிசித்தபின்பு அவர் பழைய பிறப்பின் செய்தியையறியும் அறிவையுடையராவார்.

கச - கு. அரியர் உலகத்து - அத்தன்மையையுடையோர் உலகத்திற் பெறுதற்கரியர்; அவர்க்கு அறமொழி உரியது -அவர்க்குத் தருமபதம் உரிமையையுடையது. ஒருதலையாக - நிச்சயமாக.

கசு. ஆங்கனமாகிய அணியிழை-அத்தன்மையையுடையாயாகிய அணியிழாய்; என்றது, நீ தருமபதங்கேட்டற்கு உரிமையையுடையாயென்றபடி.

கஎ. பெயர் - புகழ்; பெரும்பெயர் - வீடுமாம்; "மிக்குப்புக ழெய்திய பெரும்பெயர் மதுரை" மதுரை. சுசுகூ.

கஅ. மயங்கிய - கலந்த.

கஈ. கோமுகி - மணிபல்லவத்துள்ள ஒரு பொய்கை; காரணப்பெயர்; பசுவின் முகம்போன்ற வடிவமுடையதென்பது பொருள். இலஞ்சி - பொய்கையில்.

கஎ - க. முன்னிடத்ததாகிய இலஞ்சியில்.

ஆபுத்திரன் வேண்டுகோளின்படி கோமுகியென்னும் பொய்கையினுள் ளேயிருந்து அமுதசுரபியென்னும் பாத்திரம் ஒவ்வொருவருடத்தும் மேலே வந்து தோன்றுதலாம் புத்தனுடைய ஜனன காலமாகிய விசாகநட்சத்திரத்தோடு கூடிய வைசாகசுத்த பௌர்ணமையாதலின், அத்தினத்தை மேலே வரும் ஞான்கடிகளாற் சிறப்பித்துக் கூறுவார்.

சo. இருது இளவேனிலில் - இளவேனிற்பருவத்தில்; பன்னிரண்டு மாதங்களுள் ஆவணிமுதலிய இரண்டிரண்டுமாதங்கள் இருதுவெனவும் பெரும்பொழுதெனவும் பருவமெனவுங் கூறப்படும். அவை முறையே கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனிலென ஆறுவகையாம். அவற்றுள், ஈண்டு இளவேனிலென்றது சித்திரை வைகாசி மாதங்களை.

(பி - ம்.) கூடு. 'ஒருதலையாங்கனம்' கசு. 'ஆயிழை' கூ. 'என்னுமிக் கொழுநீரிலஞ்சி' சo. 'இருந்தளை'

தொருப்பின் மேலு மொருமூன்று சென்றபின்
மீனத் திடைநிலை மீனத் தகவையிற்
போதித் தலைவனெடு பொருந்தித் தோன்று

கதிர் எரி இடபத்து - சூரியன் மிக்க வெம்மையைச் செய்கின்ற வைகாசி மாதத்தில்.

சக. ஒருபதின் மேலும் ஒரு மூன்று சென்றபின் - இருபத்தேழு நட்சத்திரங்களுள் கார்த்திகைமுதலாகிய பதின்மூன்று நட்சத்திரங்கள் சென்ற பின்பு.

சஉ. நட்சத்திரங்களுள் நடுவில் நிற்றலையுடையதான விசாகநட்சத்திரத்தில்; "போதித் தலைவனெடு பொருந்திய போழ்ததத்து" (கரு: உசு) என்று பின்புவருதலின், ஈண்டு விசாகம் கொள்ளப்பட்டது. அச் சுவினிமுதலிய இருபத்தேழினுள் பதினைகாவதும் நடுவிலுள்ளதுமாகிய நட்சத்திரம் சித்திரையாக இருக்க அதனை நடுவிலுள்ளதாகக்கூறாமல் இவ்விடத்தில் விசாகத்தைக்கூறியது என்னையோவெனின், ஒவ்வொரு வருடத்தும் பகலையும் இரவையும் சமனாக முப்பது முப்பது நாழிகையாகவே பெற்ற இரண்டு விஷுவத்தினங்களுள் ஒன்றாகிய மேஷாயனத்திற் சூரியனுக்கு எந்த நட்சத்திரத்திற் பிரவேசமுண்டாகின்றதோ அதை நட்சத்திரங்களில் முதலாவதாகக் கூறுவது சோதிடநூற்றுணிபாதலாலும், முன்னொருகாலத்திற் சூரியனுக்குக் கிருத்திகாப்பிரவேசமிருந்த பொழுது மேஷாயனம் நேரிட்டிருந்ததென்றும் அதுபற்றிக்கார்த்திகையை முதலாகக் கொண்டு நட்சத்திரங்களை எண்ணிவந்தார்களென்றும் பழைய சோதிடநூல்களால் தெரிகின்றமையாலும் நட்சத்திரங்களின் நடுவிலுள்ளதை விசாகமென்றுகூறியது குற்றமன்றென்க. இப்படியே முன்னொருகாலத்தில் நட்சத்திரங்களைக் கார்த்திகை முதலாக எண்ணிவந்தார்களென்பது, கிருஷ்ணயஜுர்வேத ஸம்ஹிதையாலும் கிருஷ்ணயஜுர்வேத பிராஹ்மணத்தாலும் தெரிகின்றதென்பர். உச்சயினி நகரத்தில் விக்கிரமார்க்கனுடைய அவைக்களத்திலிருந்த நவரத்தினங்களுள் ஒருவரென்று சொல்லப்படுகிற வராகமிகிரரென்ற பிரஸித்த ஜ்யௌதிஷிகர், தமதுகாலத்தில் மேஷாயனத்திற் சூரியனுக்கு அச்வினிநட்சத்திரப் பிரவேசமுண்டாயிருத்த லையறிந்து பழையவழக்கத்திற்கு மாறாக நட்சத்திரங்களை அச்வினிமுதலாக எண்ணும் வழக்கத்தை வற்புறுத்தினமையின், இக்காலத்தில் நட்சத்திரங்கள் இங்ஙனம் எண்ணப்பட்டு வருகின்றனவென்பர்.

சக-உ. இங்கே விசாகநட்சத்திரத்தைப் பதினான்காவதாகக் கூறியிருத்தலின், இந்நூலாசிரியர் நட்சத்திரங்களைக் கார்த்திகை முதலாக எண்ணிவந்தகாலத்தினரென்பது ஊகித்தறியப்படுகின்றது.

சஙு. போதி-அரசமரம்; இதற்குப் போதத்தையுடையதென்பது பொருள்; போதம் - ஞானம்; இதனடியிலிருந்தபெறுவது கால்வகைச்சத்தியக்களையும் அறிந்துகொள்ளுதற்குரிய ஞானத்தைப் புத்தன் அடைந்தமையால்,

(பி - மி.) *சக - உ.* 'சென்றமீனத்' *சஙு.* 'போகத்தொருவரோடு'

மாபுத் திரன்கை யமுத சுரபியெனு
சரு மாபெரும் பாத்திர மடக்கொடி கேளா
யங்கா ளிக்கா ளப்பொழு திப்பொழுது
நின்ஞங்கு வருவது போலு நேரிழை
யாங்கதிற் பெய்த வாருயிர் மருந்து
வாங்குகர் கையகம் வருத்துத லல்லது

இஃது இப்பெயர்பெற்றதென்பர்; புத்தம் இதனடியிலிருந்தானென்பதை, "போதி நீழற் பொருந்தித் தோன்று, ஞாதன்" (கக: எங - சு), "போதி மூலம் பொருந்திய சிறப்பி, ஞதன்" (கஉ: கoக - உ), "ஓங்குயர் போதி யுவோன்" (கஉ: ககக), "போதித் தலிவனெடு" (கரு:உசு), "போதிமாத வன்" (கரு: உங), "மூன்பாவன் போதியினல்லதம்" (உஅ: கசக), "வடம் பூம் போதிப் பகவற்கு" (உஅ: கஎச), "போதி மூலத்து, ஞாதன்" (உங: உங - சு) என இந்நூலுள்ளே பின்வருவனவற்றுலுணர்க; இது மகா போதியெனவுங் கூறப்படும். தலிவன் புத்தன்; இனி, போதியென்பதற்கு ஞானமென்று பொருள்செய்தல் பௌத்தர் சைனர்களுடைய வழக்கமாக விருத்தலின், போதித்தலிவனென்றதற்கு ஞானத்திற்குத் தலிவனென்று பொருள் கூறினும் பொருந்தும்; "போதிச் செல்வம் பூண்டவ ரேத்தும் பொலிவின்னு, லாதிக் காலத் தந்தணன் காதன் மகனெத்தான்" (சீவக. நுசுசு.) தோன்றும், முற்று.

சo - சங. மு. மணி. கரு: உங - சு.

சச. அமுத சுரபி - அமுதத்தினது மணம்போன்ற மணமுடைய தென்றும், அமுதத்தைக்கொடுக்கும் காமதேனுவைப் போன்றதென்றும் பொருள் கூறுவர்; அமுதம் - அமிர்தம், உணவு. சுரபி - மணம், காம தேனு.

சo-சச. அமுதசுரபி, புத்தன் பிறந்தகாலத்தே ஒவ்வொருவருடத்தும் கோமுகியென்னும் பொய்கையிலிருந்து தோன்றுதலின், 'போதித் தலிவ னெடு பொருந்திக் தோன்றும்' என்றார்.

சங - ரு. பாத்திரம் தோன்றும்.

சள. நின்ஞங்கு வருவதுபோலும் - அப்பாத்திரம் நின்கையிடத்து வரு வதுபோலும்; நின்ஞங்கு: (மணி. கo : சக.) "நின்ஞங்கு வருஉமென் னெஞ்சினை, யென்ஞங்கு வாரா தோம்பினை கொண்மே" கலி. உங.

சஅ. அதில் - அமுதசுரபியென்னும் பாத்திரத்தில். ஆருயிர் மருந்து - அன்னம்; பசிநோயால் வருந்தாவண்ணம் உயிர்க்கைப் பாதுகாத்தலின், இஃது இங்ஙனங் கூறப்பட்டது; "அகன்சுரைப் பெய்த வாருயிர் மருந்து" (கக: ககள) என்பர் பின்னும்; சோறும் தண்ணீரும் இருமருந்தென்னப் படும்; புறநா. எo.

சஙு. கையகம் - கையிடத்தை.

(பி - மி.) சச. 'மாபுத்திரகை' சள. 'நின்ஞங்கருவது' சஙு. 'வருத்து தலல்லது'

நும தான்றெலை வில்லாத் தகைமைய தாகு
நறுமலர்க் கோதை நின்னூ ராங்க
ணறவணன் றன்பாற் கேட்குவை யிதன்றிற
மென்றவ ளுரைத்தலு மிளங்கொடி விரும்பி
மன்பெரும் பீடிகை தொழுதனள் வணங்கித்
நுரு தீவ திலகை தன்னெடுங் கூடிக்
கோமுகி வலஞ்செய்து கொள்கையி னிற்றலு
மெழுந்து வலம்புரிந்த விளங்கொடி செங்கையிற்
றெழுந்தகை மரபிற் பாத்திரம் புகுதலும்
பாத்திரம் பெற்ற பைந்தொடி மடவாண்
சுo மாத்திரை யின்றி மனமகிழ் வெய்தி
மாரனை வெல்லும் வீர நின்னடி
தீநெறிக் கடும்பகை கடிந்தோய் நின்னடி

நும. தானென்றது, அன்னத்தை. நுக. கோதை, விளி.

நுஉ. இதன்றிறம - இப்பாத்திரத்தின் வரலாறு. இதன்றிறத்தை அற வணன்பாற்கேட்குவை.

நுங. அவள் - தீவதிலகை. இளங்கொடி - மணிமேகலை.

நுச. தொழுதனள் வணங்கி - கைகுவித்து வந்தித்து.

நுசு. கொள்கையின் நிற்றலும் - நியமத்தோடு மணிமேகலைநிற்றலும்.

நுள. எழுந்து-கோமுகியிலிருந்து எழுந்து. இளங்கொடி-மணிமேகலை.

நுஎ - அ. பாத்திரம் எழுந்து இளங்கொடியினுடைய செங்கையிற் புகுதலும்.

சுo. மாத்திரையின்றி - அளவின்றி.

சுக. 'மாரனை' என்பது முதலியன, பாத்திரம்பெற்ற மகிழ்ச்சியால் மணிமேகலை புத்தனைக் குறித்துச் செய்யும் துதிகள். 'மாரன்' என்பதன் பொருளை, மணி. நு: எள - ஆம் அடிக்குறிப்பிற் காண்க.

சுஉ. நீநெறிக் கடும்பகை - கொடிய வழிகளாகியமிக்கபகையை; காம முதலியவற்றை 'அரிஷட்வர்க்கம்' என்றும், 'வைரி' என்றும் வடநூலார் கூறுதல்போலத் தீநெறியைக் கடும்பகையென்றார்; மணி. நு: கo நூ.

(பி - ம்.) நும. 'தான்றெலைவறியா' நுக. 'நறைமலர்க்கோதை' நுசு. 'கொழுதிவளஞ்' நுஅ. 'தொழுதகை' சுo. 'எய்த' சுஉ. 'கடப்போய்', 'பகைப்போய்'

பிறர்க்கற முயலும் பெரியோய் நின்னடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி
சுரு யெண்பிறக் கொழிய விறந்தோய் நின்னடி
கண்பிறர்க் களிக்குங் கண்ணேய் நின்னடி

சுஙூ. பிறர்க்கு அறம் முயலும் பெரியோய் - மற்றையோர்க்குப் புண்ணிய முண்டாதற்கு முயலுகின்ற பெரியோனே; இப்படியே, "பிறர்க்கற மருளும் பெரியோனை" (உக: கஎஅ) என்பர் பிறரும்; போதிவிருட்சத்தினடியிற் புத்தனுக்கு ஞானோதயமான பொழுது மாரன் அவனோக்கி, 'நீ இப்பொழுதே நிருவாணமடை' என்றுசொல்ல, புத்தன் மயங்குகையில், பிரஹ்ம தேவர்வந்து, 'நீ இப்பொழுது அடைய வேண்டாம்; நீ அறிந்த தருமத்தை உபதேசித்து நிருவாணமடைதற்குரியவழியை எல்லோர்க்கும் காட்டிவிட்டு அப்பாற் செல்க' என்றலின், புத்தன் தருமோபதேசஞ் செய்யத்தொடங் கினனென்று புத்தசரித்தத்தால் தெரிகின்றது.

சுஙூ. துறக்கம் - சுவர்க்கம். அழிவற்ற நிருவாணமே அவனுல் விரும் பப்பட்டமையின், அழிதன் மாலேயதாயதுறக்கம் வேண்டப்படாததாயிற்று.

சுரு. எண் பிறக்கு ஒழிய இறந்தோய்- மாந்தர்களுடைய எண்ணங் கள் எட்டாமற் பின்னே கிடக்கும்படி மேற்பட்ட நிலேயிற் சென்றேனே; பிறக்கு - பின்; "துறைபிறக் கொழியப் போகி" (பெரும்பாண். சுருக); "மூதிர்கரய் வள்ளியங் காடுபிறக் கொழிய" (முல்லை. கoக.) இதனுல் - கடத்தல்.

சுசு. பிறர்க்குக் கண் அளிக்குங் கண்ணேய் - உயிர்களுக்கு ஞானத் தை யருளிச்செய்த ஞானியே; கண் ஈண்டு ஞானம். புத்தன் பலர்க்குத் தருமோபதேசஞ்செய்த ஆசிரியனதலின், இங்ஙனங்கூறினர். இனி, உலோ கோபகாரத்திற்காகப் புத்தனெடுத்த அநேக ஜாதகங்களுள், ஒன்றில் இவன் கொடையைப் பரிசோதிக்கவெண்ணி, இந்திரன்வந்து இரண்டு கணகளே யுங் கேட்டபொழுது இவன் அவற்றைக் கொடுத்தானென்பராகலின், இதற்கு இந்திரனுக்குக் கண்ணேக்கொடுத்தோயென்று பொருள்கூறினும் பொ ருந்தும். இதனே, "விண்ணவர் நாயகன் வேண்டக், கண்ணினி தளித்த காதற், புண்ணிய னிருந்த போதி, நண்ணிட நோய்கலி யாவே" (வீர. யாப்பு கூ - உதாரணம்), "கண்கொடுத்தான் றடிகொடுத்தான் கயப்புலிக்குத் தற்கொடுத்தான், பெண்கொடுத்தா னுடம்பினையும் பிளந்திட்டுப் பிறர்க்கீந்தான், மண்கொடுத்தான் மகக்கொடுத்தான் மன்னுயிர்தற் சேர்ந்தார்க்கு, விண்கொடுத்தா னவன்கொடுத்த விரிதுலைப்பன் கேளென்றுரள்", "மிக்க தனங் கனமாரி மூன்றும் பெய்யும் வெங்களிற்றை மிகுசிந்தா மணியை மேனி, யொக்கவரிக் தொரு கூற்றை யிரண்டு கண்ணே யொளிதிகழுந் திரு முடியை யுடம்பி னூனே, யெக்கிவிழுங் குருதினே யரசுதன்னே யிண்ணியிர் போற் றேவியையீன் றெடுத்த செல்வ, மக்களெவந் திரந்தவர்க்கு மகிழ்கதே யீயும் வானவர்தா முறைத்த பதி மாஅ ஊரே" (நில. சமய.)என்னும் பாடல் களால் உணர்க.

(பி - ம்.) சுரு. 'என்பிறகொழியவிறைபோயநின்னடி', 'இருந்தோய் நின்னடி'

தீமொழிக் கடைத்த செவியோய் நின்னடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி
நரகர் துயர்கெட நடப்போய் நின்னடி
எ0 யுரகர் துயர மொழிப்போய் நின்னடி
வணங்குதல் லல்லது வாழ்த்தலென் ஞவிற்
கடங்கா தென்ற வாயிழை மூன்னர்ப்
போதி நீழற் பொருந்தித் தோன்று
நாதன் பாத நவைகெட வேத்தித்
எடு நீவ திலகை சேயிழைக் குரைக்குங்

சுஎ. தீமொழி - பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல் என்பன ; மொழிக்கு - சொல்லுக் கேளாதிருத்தற்கு.

சுஅ. வாய்மொழி - சத்தியம்.

சுஈ. நரகர்களிற்சிலர்க்குக் இலேசசாந்தி செய்வித்தற்பொருட்டு மன மிரங்கி ஒருஜாதகத்திற் புத்தன் நரகலோகத்திற்குச் சென்றுனென்பராத லின், இங்ஙனங்கூறினர்; "அருவினை சிலர்கெட வொருபெரு நரகிடை,யெரி சுடர் மரைமல ரெனவிடு மடியினை" வீர. யாப்பு. கக - உதாரணம்.

எ0. உரகர் - நாகர்; நாகர்களுக்குக் கருடனுலுண்டாகிய துன்பம் நீங் கும் பொருட்டு அவனுக்குத் தயாதர்மத்தை உபதேசஞ்செய்து அவனுல் அவர்களுக்கு அபிர்தங்கிடைக்கும்படி புத்தன் செய்தானென்பது ஒருஜாதக கதை. இதனைப் பின்னுள்ளசெய்யுட்களாலறிக; "மீதியல் கருடனை விடவர வொடுபகை விதிமுறை கெடவதம் வெளியுற வருளினை", "பொற்புடை நாகர்தம் துயரம் போக்கினை", "பைக்நாகர் குலமுய்ய வாயமிழ்தம் பகர்ந் தனையே", "ஆரமிழ்த மணிநாகர் குலமுய்ய வருளினையே, வார்சிறைப்புள் ளரையற்கும் வாய்மைநெறி பகர்ந்தனையே"(வீர. யாப்பு. கக - உதாரணங் கள்.) தயையைப் புலப்படுத்துதலேயே பயனுக நினைந்து **ஸ்ரீஹர்ஷகவி** யென்பவரால் வடமொழியிற் செய்யப்பட்டுள்ளதாகிய ஜீமூதவாகனன் சரி தமாயுள்ள நாகாநந்தமென்னு நாடகத்தை உற்றுநோக்கின், அஃது ஈண்டுக் கூறிய புத்தஜாதககதையின் வழிப்பட்டதாக யாவருக்கும் கன்குவிளங்கும்.

எக - உ. வாழ்த்தல் அடங்காது; இப்படியே "ஆயிர வாரத் தாழியந் திருந்திடி, நாவா யிரமிலே னேத்துவ தெவன்" (நி: கoச - நி) என்று மூன் னும்வந்திருத்தல்காண்க.

எச. புத்தனை நாதனென்றல் மரபு; இதனை, "நவையறு நாத னல்ல நம் பகர்வோர்" (உஅ: எக), "நாத னல்லறங் கேட்டலை விரும்பி" (உஅ: அக) என இந்நூலுள்ளே பின்வருவனவற்றுலுணர்க. புத்தர்களிற் சிலர் தேவர்களையும் நாதரென்பதுண்டு. நவை - குற்றம்.

எடு. சேயிழைக்கு உரைக்கும்-மணிமேகலைக்குத் தீவதிலகை சொல்லு வாள்.

குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉ
நாணணி களையு மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
அ0 பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோ
ரிசைச்சொ லளவைக் கென்ஞ நிமிராது
புன்மரம் புகையப் புகையழற் பொங்கி
மன்னுயிர் மடிய மழைவளங் கரத்தலி

இனிப் பசியின் கொடுமை கூறப்படுகின்றது.

"பசிப்பிணி யென்னும் பாவி" (அ0) என்பதனை 'அழிக்கும்' (எசு) என் பதுமுதலிய மூற்றுவினைகளோடு தனித்தனியே கூட்டுக.

எசு. குடிப்பிறப்பு அழிக்கும் - பசி, தன்னுற்பற்றப்பட்டாருடையஉயர் குடிப்பிறப்பைக்கெடுக்கும் ; அக்குடியிலிருந்த மூன்னோர்களுக்கில்லாத இழி ந்தசெயல்களை அவர்களிடத்து உளவாக்கலான் இவ்வாறு கூறப்பட்டது ; "தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக, நல்குர வென்னு நசை" (குறள். கoசாக.) விழுப்பங் கொல்லும் - சிறப்பினைக்கெடுக்கும்.

எள. கல்விப் பெரும்புணை விடூஉம் - கல்வியாகிய பெரிய தெப்பத்தை நீக்கும் ; "நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார், சொற்பொ ருள் சோர்வுபடும்" (குறள், கoசஉ), "பிறந்த குலமாயும் பேராண்மை மா யுஞ், சிறந்ததங் கல்வியு மாயும்" (நாலடி. உஅடு) என வருதல் காண்க.

எஅ. நாண் அணி களையும் - நாணுகிய ஆபரணத்தை நீக்கும்; அழகு செய்தலின், நாண் அணியெனப்பட்டது ; "அணியன்றே நாணுடைமை சான்றோர்க்கு" குறள். கoகச.

அ0. பண்பிற்குப் பண்பி இல்லையேனும் தன்னுற் சாரப்பட்டாரிடத் துள்ள எல்லா நன்மைகளையும் அழித்தற்கொடுமைபற்றிப் பசியைப் பாவி யென்றார்; இப்படியே "இன்மை யெனவொரு பாவி"(குறள். கo்உ) என்று வருதல் காண்க. அது - அப்பசியை.

அக. இசை - புகழ். அளவைக்கு - அளத்தற்கு. என் நா நிமிராது - எனது நா எழமாட்டாது. நிமிர்தல் - பேசுதற்கு முயறல்; உபகாரிகளின் புகழ் அளவுபடாதென்றபடி.

பசி யாரையும் வருத்தி வேறுபாடுறுவிக்குமென்பதற்கு உதாரணமாக விசுவாமித்திரமுனிவர் வறட்காலமொன்றில காயூன் தின்பதற்கு முயன்ற தைத் தீவதிலகை இனிச்சொல்லுவாள்.

அங. மழை வளம் கரத்தலின் - மழையாகிய செல்வம் மறைத்து போனமையால்.

(பி - ம்.) எஅ. 'நாணினேக்களையும்' அங. 'மழைவளங்கரப்ப'

னரசுதலை நீங்கிய வருமறை யந்தண
அரு னிருநில மருங்கின் யாங்கணுந் திரிவோ
னரும்பசி களைய வாற்றுவது காணுன்
றிருந்தா நாயூன் றின்ற தலுவோ
னிந்திர சிறப்புச் செய்வோன் முன்னர்
வந்து தோன்றிய வானவர் பெருந்தகை
கூ0 மழைவளந் தருதலின் மன்னுயி ரோங்கிப்
பிழையா விளையுளும் பெருகிய தன்றே
வாற்றுநர்க் களிப்போ ரறவிலை பகர்வோ
ராற்று மாக்க ளரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை

அசை. விசுவாமித்திரமுனிவர்.

அசு. அரும்பசி - நீர்த்தன்கரிய பசியை. ஆற்றுவது காணுன் - தனித் தற்குரிய உணவு யாதொன்றையும் காணுனுகி.

அள. விசுவாமித்திரமுனிவர் பசியின் கொடுமையால் நாயூன் தின்ப தற்கு முயன்றரென்பதை மணிமிநாதி, கo - ஆம் அத்தியாயம், கoஅ - ஆம் சுலோகத்திற் காண்க.

அஅ. இந்திரசிறப்பு - பலியிடுதல் (வைச்வதேவம்); இது மற்றைத் தேவர்களுக்கும் உரித்தெனினும் தலைமைபற்றி 'இந்திரசிறப்பு' எனப்பட் டது; உண்பதற்குமுன்பு இதனைச் செய்தல்வேண்டுமென்பது விதி.

அக. வானவர் பெருந்தகை - இந்திரன்.

கக. பிழையா விளையுள் - தப்பாதவிளைவு; "வேலி, யாயிரம் விளையுட் டாக" (பொருந. உசசு - எ); "வெள்ளமா ருது விளையுள்பெருக" மதுரை. கoக.

அஉ - கக. மழைவளங் கரத்தலின், அந்தணன் திரிவோன் காணுன் உறவோன் செய்வோன் முன்னர் வந்துதோன்றிய பெருந்தகை தருதலின், ஓங்கிப் பெருகியதன்றே.

கஉ. ஆற்றுநர்க்கு - பொறுக்கும் வன்மையையுடையோராகிய செல் வர்க்கு; ஆற்றுநர்க்களிப்போர் பயன் கருதிச் செய்வோராகின்றமையின், 'அறவிலைபகர்வோர்' என்றார். "இம்மைச் செய்தது மறுமைக் காமெனு, மறவிலை வாணிக ஞஅ யல்லன்" புறநா. கஉச.

கஉ. ஆற்றுமாக்கள்-தரித்திரர்; "ஏற்றகை மாற்றுமை யென்னுஞ் தாம்வரையார், தாற்றுதார்க் கீவதா மாண்கடன்" (நாலடி. கஅ.)

கச. மேற்று - மேலது.

கஉ - ச. வாழ்க்கை களைவோர் மேற்று.

கஉ - ச. இவ்வடிகளின் கருத்து "எமக்கேவோர் பிறர்க்கீவோர், பிறர்க் (பி - ம்.) அசை. 'அரசு நீங்கிய' அஅ.. 'இந்திரச்சிறப்பு' கo. 'ஓம்பி' கச. 'நெறிவழக்க'

கூரு மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லா
மூண்டி கொடித்தோ ருயிர்கொடித் தோரே
யுயிர்க்கொடை பூண்ட வுரவோ யாகிக்
கயக்கறு கல்லறங் கண்டனே யென்றலும்
விட்ட பிறப்பில்யான் விரும்பிய காதலன்
கஎ0 றிட்டி விடமூணச் செல்லுயிர் போவுழி
யுயிரொடு வேவே னுணர்வொழி காலத்து
வெயில்விளங் கமயத்து விளங்கித் தோன்றிய
சாது சக்கரன் றனேயா னூட்டிய
காலம் போல்வதோர் கனமயக் குற்றே

கோவார் தமக்கேபவென, வினைத்துரைத்தனன் யானுக" (புறநா. கசுஎ) என் பதில் வந்திருத்தல் காண்க.

கூரு. மண்டிணி ஞாலத்து - அணுக்கள் செறிந்த நிலவுலகத்தில்; "மண் டிணிந்த நிலனும்" புறநா. உ.

கூசு. ழ. புறநா. கஅ.

கூள. உயிர்க்கொடை - உயிரைக்கொடுத்தல். உரவோயாகி - வலிய அறிவினையுடையோயாகி.

கூஅ. கயக்கு - கயங்குதல் (கசங்குதல்); "கயக்கறு மாக்கள் கடிந்தனர் கோளாய்" (கசு : அரு) என்பர் பின்னும். 'கண்டனே' என்றது தெளிவுபற்றி. என்றலும் - என்று தீவதிலகை சொல்லலும்.

கூக. விட்டபிறப்பு - போனபிறப்பு. காதலன் - கணவனுகிய இரா குலன்.

கஎ0. திட்டிவிடமூண - திருஷ்டிவிஷமென்னும் பாம்புதீண்ட; மணி. க : சசு - ஆம் அடிக்குறிப்பைப்பார்க்க. உயிர்போவுழி - உயிர்போன விடத்தி.

கூக - கஎ0. காதலன் உயிர்போவுழி.

கஎக. உயிரொடு வேவேன் - அவன் பிரிவாற்றாது நீயிற்பாய்ந்து உயி ரொடு வேவாநிற்பேன். வேவேன், பெயர்.

கஎ0 - கஎக. மணி. கூ: சசு - ரு0.

கஎஉ. மணி. ரு: சு0; கஎ: உள. கஎசு. ஊட்டிய - உண்ணச்செய்த.

கஎச. கனமயக்குற்றேன் - கனவாகிய மயக்கத்தையடைந்தேன்.

கூக - கஎச. காதலன் உயிர்போவுழிவேவேன் உணர்வொழிகாலத்துக் கனமயக்குற்றேன்.

(பி - ம்.) கூக. 'பிறப்பின'

கo(ரு) ஞங்கதன் பயனே யாருயிர் மருந்தா
யீங்கிப் பாத்திர மென்கைப் புகுந்தது
நாவலொடு பெயரிய மாபெருந் தீவத்து
வித்தி னல்லறம் விளைந்த வதன்பயன்
றுய்ப்போர் தம்மனைத் துணிச்சித ருடுத்து
கஙo வயிறுகாய் பெரும்பசி யலைத்தற் கிரங்கி
வெயிலென மூளியாது புயலென மடியாது
புறங்கடை நின்று புன்கண் கூர்ந்துமுன்
னறங்கடை நில்லா தயர்வோர் பலரா
லீன்ற குழவி முகங்கண் டிரங்கித்
கஙரு தீம்பால் சுரப்போ டன்முலை போன்றே

கo(ரு). அதன் - அக்கஞலின்.

கo(ரு) - சு. உயிர் உடம்பினீங்கும் பொழுதுள்ள நினைப்பின்பயனே மறு பிறப்பில் அவ்வுயிர் அடையுமென்பது தொல்லாற்றுணிபாதலின் இங்ஙனங் கூறினுள்; (மணி. தச: கoக - ச.) இக்கருத்தை, "பிறப்பென்னும் பேதைமை" (நாடுஅ) என்கிற குறளுக்குப் பரிமேலழகரெழுதிய விசேடவுரையாலுமுணர்க.

கoஎ. சம்புத்தீவில்.

கoஅ. நல்லறத்தை வித்தி. பயன் - பயனே; என்றது பலவகைத் தாகிய செல்வத்தை.

கoஙு. துய்ப்போர் தம்மனை - அநுபவிக்கும் செல்வருடைய வீட்டில்; துணிச் சிதருடுத்து - கிழிந்த சீலைகளை உடுத்திக்கொண்டு. சிதர், சிதா எனவும் வழங்கும்.

ககக. முளியாது - வெறுக்காமல். புயலென மடியாது - மழை யென்று ஓரிடத்தில் தங்காமல்; மடிதல் - தங்குதல; "மல்லற் பேரூர் மடியின்" பெரும்பாண். உருச.

ககஉ. புறங்கடை நின்று - தலைவாயிலில் நின்றுகொண்டு. புன்கண் கூர்ந்து - துன்புமிகுந்து; "அகத்தாரே வாழ்வாரென் றுண்ணாது நோக்கிப், புகத்தாம் பெறுஅர் புறங்கடை பற்றி, மிகத்தாம் வருந்தி யிருப்பரே மேலைத் தவத்தாற் றவஞ்செய்யா தார்" நாலடி. ஙக.

ககஉ - ங. முன் அறங்கடை - முற்பிறப்பிற் செய்தபாவத்தால். நில்லாது - ஓரிடத்தில் நில்லாது. அறத்தினீக்கப்பட்டமையின், பாவம் அறங்கடையெனப்பட்டது; "அறன்கடை நின்றாரு ளெல்லாம்" குறள். கசஉ.

ககரு. சுரப்போள் - தாய்.

(பி-ம்.) கoஅ. 'வித்தியகல' ககஉ. 'நின்றுபுனகூர்ந்திரந்துமுனறங்'

நெஞ்சு வழிப்படூஉம் விஞ்சைப் பாத்திரத்
தகண்சுரைப் பெய்த வாருயிர் மருந்தவர்
மூகங்கண்டு சுரத்தல் காண்டல் வேட்கையே, னென
மறந்தே னதன்றிற நீயெடுத் துரைத்தனே
கஉ0 யறங்கரி யாக வருள்சுரந் தூட்டுஞ்
சிறந்தோர்க் கல்லது செவ்வனஞ் சுரவா
தாங்கன மாயினே யதன்பய னறிந்தனே
யீங்குநின் றெழுவா யென்றவ ளுரைப்பத்
தீவ திலகை தன்னடி வணங்கி
கஉ1 மாபெரும் பாத்திர மலர்க்கையி னேந்திக்
கோமகன் பீடிகை தொழுதுவலங் கொண்டு
வானூ டெழுந்து மணிமே கலைதான்
வழுவறு தெய்வம் வாய்மையி னுரைத்த
வெழுநாள் வந்த தென்மகள் வாரா ள்

ககசு. நெஞ்சுவழிப் படூஉம் - மனத்தின்வழியே யொழுகும். விஞ்சை-வித்தை.

ககள. சுரை - ஈண்டுப்பாத்திரத்தில் உள்ளீடில்லாது குழிந்தபாகம்.

ககள - அ. அவர் மூகங்கண்டு - மேற்கூறிய பசியாளர்களுடைய வாடிய மூகங்கண்டு. வேட்கை - விருப்பம். என - என்று மணிமேகலை சொல்ல.

ககக. அதன்திறம் - அப்பாத்திரத்தின் வரலாற்றை. அதன்றிறமறந் தேன்.

கஉ0. அறம்கரியாக - தருமமேசான்றாக. அருளாவது 'ஒன்றின் துயர் கண்டாற் காரணமின்றித் தோன்றும் இரக்கம்' என்பர் (டு) புறநானூற்று உரையாசிரியர் ; 'தொடர்புபற்றாது இயல்பாக எல்லாவுயிர்க்கண்மேலுஞ் செல்வது' என்பர் (குறள். உடு-ஆம் அதி. அவ) பரிமேலழகர்.

கஉக. (பாத்திரம்) சுரவாது.

கஉஉ. ஆங்கனமாயினே - அறங்கரியாக அருள்சுரந்தூட்டும் அத்தன்மையை யுடையாயாயினே. 'அவர்மூகங்கண்டு சுரத்தல் காண்டல் வேட்கையேன்' என்று (ககள) முன்பு கூறியதனால், 'அதன்பயனறிந்தனே' என்றாள்.

கஉங. அவள் - தீவதிலகை.

கஉசு. கோமகன் பீடிகை - புத்தனுடைய பாதபீடிகை.

கஉஅ. தெய்வம் - மணிமேகலாதெய்வம்.

(பி - ம்.) ககசு. 'பாத்திரமகன' ககஅ. 'சுரத்தில்வேட்கையே' கஉக. 'அல்லதீவளஞ்சுரவாது' கஉஉ. 'ஆங்கணமாயிழையதன்பய'

கஙூ0 வழுவா யுண்டென மயங்குவோண் முன்னர்
வந்து தோன்றி யவர்மயக் கங்களைந்
தந்தி லவர்க்கோ ரற்புதங் கூறு
மிரவி வன்ம ஞெருபெரு மகளே
துரகத் தானைத் துச்சயன் றேவி
கஙூரு யமுத பதிவயிற் றரிதிற் ரோன்றித்
தவ்வைய ராகிய தாரையும் வீரையு
மவ்வைய ராயினீர் நும்மடி தொழுதேன்
வாய்வ தாக மானிட யாக்கையிற்
றீவினை யறுக்குஞ் செய்தவ நுமக்கிங்
கசo கறவண வடிக டம்பாற் பெறுமின்
செறிதொடி நல்லீ ரும்பிறப் பீங்கிஃ
தாபுத் திரன்கை யமுத சுரபியெனு
மாபெரும் பாத்திர நீயிருந் தொழுமெனத்

கஙூ0. வழுவாய் - தப்புதல். என - என்று நினைத்து. மயங்குவோள் - சுதமதி.

கஙூக. சுதமதியோடு மாதவியையும் உளப்படுத்தி 'அவர்' என்றார்.

கஙூஉ. அந்தில் - அவ்விடத்து. அற்புதம் - ஆச்சரியம். கூறும் - மணி மேகலை சொல்லுவாள்.

கஉஎ - ஙூஉ. மணிமேகலைதான், மயங்குவோண் முன்னர் வந்து தோன்றிக் கலைந்து அவர்க்கு ஓர் அற்புதங்கூறும்.

கஙூச. தேவியென்றது சுதமதியை. கஙூங - ச. ழ. மணி. எ: கூஅ-கூ.

கஙூசு. தவ்வையர் - தமக்கைமார். கஙூஎ. அவ்வையர் - தாய்மார்.

கஙூஅ - கூ. வாய்வதாக - வாய்ப்புடைத்தாகுக. செய்தவம் நுமக்கு வாய்வதாகவென்க. "வாய்வ தாகுகின் மனப்பாட்டம்" (உக : களக) என்பர் பின்னும் ; " வாய்வதின் வந்த குரவை" (சிலப். கஅ: சஎ); " வாய்வதிற், றந்தையுந் தாயுந் தொழுதெழுக " ஆசார. நிற.

கசo - சக. உம்பிறப்பின்வரலாற்றை அறவணவடிகளிடம் அறிந்து கொள்ளுமின்.

கசக - ங. இஃது, ஆபுத்திரன் கையிலிருந்த அமுதசுரபியெனப் படுகின்ற மிகச்சிறந்துள்ள பாத்திரம் ; இதனை நீரும் தொழுமினென்று மணி மேகலை சொல்ல.

(பி-ம்.) கஙூ0. 'வழுவரலுண்டென மயங்குவோள்' கஙூச. 'துரகதத்' கஙூரு - சு 'அமுதவதிவயிற் ரோன்றியென், றவ்வையராகிய' கசo. 'அறவண ரடிகள்'

தொழுதன ரேத்திய தூமொழி யாரொடும்
கசருபழுதறு மாதவன் பாதம் படர்கே
மெழுகென வெழுந்தன ளிளங்கொடி தானென்.

கக.—பாத்திரம்பெற்றகாதை முற்றிற்று.

கசசு. தூமொழியார் - சுதமதியும் மாதவியும்.

கசருபழுது - குற்றம் ; இனி, "பழுதொழிக் தெழுந்திருந்தான்" (சிலப். கக: சுசு) என்பதில் 'பழுது'என்பதற்கு உடம்பென்றுஅடியார்க்கு நல்லார் பொருள்செய்திருத்தலால், இங்கே பழுதறுமாதவனென்பதற்கு உடற்பற்றெழிந்த அறவணவடிகளென்று பொருள்கூறினும் பொருந்தும் ; "செய்தவ யாக்கையின், மேலினே னுயினும் வீழ்கதிர் போன்றேன்" (உசு: கoக - உ) என்று அறவணவடிகள் கூறியதாகப் பின்பு கூறுதல்காண்க. படர்கேம் - செல்லுவேம்.

கசசு. இளங்கொடி - மணிமேகலை. இளங்கொடி, நீர் எழுகவென்று சொல்லி எழுந்தனளென்க.

க - கசசு. மணிபல்லவத்தில் தெய்வ நீங்கியபின்னர் மணிமேகலை தாழ்ந்து நோக்கித் திரிய, தீவதிலகை தோன்றி 'யார்நீ' என்றலும்,'கேளாய் என்வரவு ஈது, பயன் இது, அன்னுய், நீயார்' என்றலும், தீவதிலகைஉரைக்கும் ; அங்ஙனமுரைப்பவள், என்றுரைத்தலும், மணிமேகலை விரும்பிப் பீடிகையைத் தொழுது வணங்கிக் கூடி வலஞ்செய்து நிற்றலும், அவள்கையிற் பாத்திரம் புகுந்தது; புகுதலும், மகிழ்வெய்தி 'வாழ்த்தல் என்னுவிற்கடங்காது' என்றுள்; என்ற மணிமேகலையின் முன்னர்த் தீவதிலகை உரைக்கும் ; அங்ஙனமுரைப்பவள் 'கண்டனே' என்றலும், மணிமேகலை 'காண்டல் வேட்கையேன்' என அவளுரைப்ப, மணிமேகலை வணங்கி ஏந்தி வலங்கொண்டு எழுந்து மயங்குவோள் முன்னர் வந்துதோன்றிக் கனைந்து கூறும்; அங்ஙனங்கூறுகின்றவள், தொழுமென, தொழுதேத்திய அவரொடும், இளங்கொடி எழுந்தனளென விணைமுடிவுசெய்க.

பன்னிரண்டாவது

அறவணர்த்தொழுதகாதை.

[பன்னிரண்டாவது மணிமேகலை பாத்திரங்கொண்டு தன்னூர் அறவணர்த்தொழுதபாட்டு.]

ஆங்கவர் தம்மூட னறவண வடிகள்
யாங்குள ரென்றே யிளங்கொடி விஞ்சுஅய்
நரைமுதிர் யாக்கை நடுங்கா நாவி
னுரைமூ தாள னுறைவிடங் குறுகி
நு மைம்மலர்க் குழலி மாதவன் றிருந்தடி
மும்முறை வணங்கி முறையுளி யேத்திப்
புதுமலர்ச் சோலை பொருந்திய வண்ணமு
முதய குமரனுங் குற்றுரை செய்தது
மணிமே கலாதெய்வ மணிபல் லவத்திடை
கo யணியிழை தன்னை யகற்றிய வண்ணமு
மாங்கத் தீவகத் தறவோ ஞசன
நீங்கிய பிறப்பு நேரிழைக் களித்தது
மளித்த பிறப்பி ஞகிய கணவனைக்
களிக்கய னெடுங்கட் கடவுளிற் பெற்றதுங்
கரு தவ்வைய ராகிய தாரையும் வீரையும்

க. அவர் - சுதமதி மாதவி.

உ. இளங்கொடி-மணிமேகலை. விஞ்சுஅய் = விஞ்சி-கேட்டுக்கொண்டு.

ச. உரைமூதாளன் - அறவணவடிகள். குறுகி - அடைந்து.

ஙு - ச. மணி. உச: ஙுங - கoo; "நரைமூ தாளர்" புறநா. நுஉ.

நு. குழலி - மணிமேகலை. சு. முறையுளி - விதிப்படி.

எ. சோலை - உவவனம்.

கக - உ. ஆசனம் பிறப்பை அளித்ததும்.

கச. கடவுளின் - மணிமேகலாதெய்வத்தால்.

கரு - சு. வீரை மதுமயக்கத்தால் யாணைக்குமுன்னே சென்றும், (பி - ம்.) நு. 'குழலியர் மாதவன்' எ. 'சோலைப்பொருந்திய' ஙு. 'பிறப்பினுயிழை கணவனை'

வெவ்வினை யுருப்ப விளிந்துகே டெய்தி
மாதவி யாகியுஞ் சுதமதி யாகியுங்
கோதையுஞ் சாய னின்னெடுங் கூடின
ராங்கவர் தந்திற மறவணன் றன்பாற்
உ0 பூங்கொடி நல்லாய் கேளென் றுரைத்தது
முரைத்த பூங்கொடி யொருமூன்று மந்திரங்
தனக்குரை செய்துதா னேகிய வண்ணமுங்
தெய்வம் போயபின் றீவ திலகையு
மையெனத் தோன்றி யருளொடு மடைந்தது
உரு மடைந்த தெய்வ மாபுத் திரன்கை
வணங்குறு பாத்திரம் வாய்மையி னளித்தது
மாபுத் திரன்றிற மறவணன் றன்பாற்
கேளென் றுரைத்துக் கிளரொளி மாதெய்வம்
போகென மடந்தை போந்த வண்ணமு
கூ0 மாதவன் றன்னை வணங்கின ரூரைத்தலு
மணிமே கலையுரை மாதவன் கேட்டுத்
தணியா வின்பந் தலைத்தலை மேல்வரப்
பொற்றொடி மாதர் கற்றிறஞ் சிறக்க
வுற்றுணர் வாய்நீ யிவர்திற முரைக்கே
கூரு னின்னெடுந் தெய்வ னினக்கெடுத் துரைத்த

தாரை நிலாமுற்றத்தின்மேல் ஏறி வீழ்ந்தும் இறந்தமையால், 'சாரையும் வீரையும், வெவ்வினை யுருப்ப விளிந்து' (மணி. கஉ: சரு - அ) என்றார்.

கள - அ. பு. மணி. க0: எங - ச. ககூ. திறம் - வரலாறு.

உக. பூங்கொடி - மணிமேகலாதெய்வம். மூன்றுமந்திரம்: மணி. க0: அ0 - ஙக.

உச. ஐயெனத் தோன்றி - விரைவாகத்தோன்றி.

உரு. தெய்வம் - தீவதிலகை. உள - அ. மணி. கக: ருஉ.

உகூ. போக என - போவாயென்று சொல்ல.

மேல்வருவன அறவணவடிகளுடைய வார்த்தை.

கூஉ. தலைத்தலை மேல்வர: மணி. உ: ரு.

கூஙூ. மாதர், விளி. கற்றிறம் - நல்லகூறுபாடுகள்.

கூச. உரைக்கேன் - உரைப்பேன்,

(பி - ம்.) உசு. 'வணங்குபாத்திர' உஅ. 'கேளென்றுரைத்த' கூஙூ. 'பொற்றொடிமாதவா'

வக்கா ளன்றியு மருவிணை கழுஉ
மாதி முதல்வ னடியிணை யாகிய
பாதபங் கயமலை பரவிச் செல்வேன்
கச்சய மாளுங் கழற்கால் வேந்தன்
சுo றுச்சயன் றன்னையோர் சூழ்பொழிற் கண்டேன்
மாபெருந் தானை மன்ன நின்னெதிர்
தேவியர் தமக்குந் தீதின் றேவென
வழிதக வுள்ளமொ டரற்றின ளெதி
பொளியிழை மாதர்க் குற்றதை யுரைப்போன்
சரு புதுக்கோள் யானைமுன் போற்றது சென்று
மதுக்களி மயக்கத்து வீரை மாய்ந்தனூஉ
மாங்கது கேட்டோ ராமிய மேறித்
தாங்காது வீழ்ந்து தாரைசா வுற்றனூஉங்
கழிபெருந் துன்பங் காவல னுரைப்பப்
ரூo பழவினைப் பயனீ பரியலென் றெழுந்தே
ளுதிங் கூத்திய ரணியே போல
வேற்றே ரணியொடு வந்தீ ரோவென
மணிமே கலைமுன் மடக்கொடி யார்திறந்
தணிபொருண் மாதவன் சொல்லியு மமையான்

ஈகூ. அந்நாள் அன்றியும் - அந்நாளிற் சென்றதல்லாமலும்.

ஈஅ. பாதபங்கயமலை: மணி. கo: ஈக - அ.

ஈஅ - சo. செல்வேன் துச்சயனை ஓர் பொழிலிற் கண்டேன்.

சச. உற்றதை - உற்றதுன்பத்தை.

சரு. புதுக்கோள் யானை - புதிதர்கப் பிடித்துக்கொண்டுவரப்பட்ட யானை.

சள. அது - வீரைமாய்ந்தது. ஆமியம் - நிலாமுற்றம்.

சஈ. கழிபெருந் துன்பம் - மிகப்பெரியதுன்பம்; அவ்விருவரும் இறந்த பெரியதுன்பமுமாம் ; கழிதல் - நீங்குதல்.

சஙு - ஙு. மாய்ந்ததும் சாவுற்றதுமாகிய துன்பத்தைக் காவலனுரைப்ப.

ரூo. பரியல் - வருந்தாதே.

ருக - உ. " ஆங்கு கூத்தர்போ லாருயி ரொருவழிக், கூடிய கோலத் தொருங்குநின் றியலாது " சிலப். உஅ: கசுருு - ஙு.

ருச. அமையான் - தணியானாகி.

(பி - ம்.) ஈள. 'மாதவமுதல்வனடி' ஈஅ. 'பங்கயமலர்பரவிச்' சஉ. 'நீங்கின்றேவென' சஈ. 'ஆற்றனூஉ' சரு. 'யானையைப் போற்றுச்' சள. 'கேட்டாளரமிய' ருக. 'ஆகூத்தரணியே' ரூஉ. 'வேறேரணி'

ருரு பிறவியு மறவியும் பெற்றியி னுணர்ந்த
நறுமலர்க் கோதாய் நல்கினே கேளாய்
தரும தலிவன் றலைமையி னுரைத்த
பெருமைசா னல்லறம் பெருகா தாகி
யிறுதியி னற்கதி செல்லும் பெருவழி
சுஎ யறுகையு நெருஞ்சியு மடர்ந்துகண் ணடைத்தாங்குச்
செயிர்வழங்கு நீக்கதி திறந்து கல்லென்
றுயிர்வழங்கு பெருநெறி யொருதிறம் பட்டது
தண்பனி விழுங்கிய செங்கதிர் மண்டில
மூண்டென வுணர்த்த லல்ல தியாவதுந்
சுருி கண்டினிது விளங்காக் காட்சி போன்றது
சலாகை நுழைந்த மணித்துளை யகவையி
னுலாநீர்ப் பெருங்கட லோடா தாயினு
மாங்கத் துளைவழி யுகுநீர் போல
வீங்கு நல்லற மெய்தலு மூண்டெனச்
எஎ சொல்லலு மூண்டியான் சொல்லுத றேற்றார்

ருருி. அறவி - புண்ணியத்தோடு கூடியவழி.

ருசு. நல்கினே கேளாய் - உவந்து கேளாய்; நல்குதல் - உவத்தல்; "நல்கினு நல்கா னுயினும்" புறநா. அ0.

ருருி - சு. மணி. உக: கஅருி - சு.

ருஎ. தருமதலிவன - புத்தன்; மணி. ககூ: ஈ0.

ருஈ. இறுதியில்நற்கதி - நிருவாணம். பெருவழி - தருமம்.

சுஅ. அறுகை - அறுகம்புல. கண்ணடைத்தாங்கு - இடம் அடைக்கப்பட்டாற்போல.

சுஈ. செயிர் - குற்றம்.

சுஉ. உயிர்வழங்கு பெருநெறி - பிறந்திறக்கும் உயிர்களெல்லாம் போகும்வழி (சிலப். உஅ: களஈ - ச.) ஒருதிறம்பட்டது - ஒருவழிப்பட்டது.

சுஊ. செங்கதிர்மண்டிலம் - சூரியமண்டலம்.

சுச. யாவதும் - சிறிதும். ருஈ - சுருி. பெருவழி போன்றது.

சுசு. சலாகை - சிறிய நாராசம். அகவையின் - உள்ளிடத்தே.

எ0. யான்சொல்லலும் உண்டி. தேற்றார் - தெளியார்.

எ0 - எக. மக்கள் தேற்றாதலின்.

(பி - ம்.) ருஈ. 'இறுதிநற்கதி' சுஅ. 'படர்ந்து கண்ணடைத்' சுஈ - உ. 'நல்லென்றுயிர்' சுஊ. 'தன்மணிவிழுங்கிய' எ0. 'சொல்லுமூண்டியான்'

மல்லன்மா ஞாலத்து மக்களே யாதலிற்
சக்கர வாளத்துத் தேவ ரெல்லாந்
தொக்கொருங் கீண்டித் துடிதலோ கத்து
மிக்கோன் பாதம் விழுந்தன ரிரப்ப
எரு விருள்பரந்து கிடந்த மலர்தலை யுலகத்து
விரிகதிர்ச் செல்வன் ரோன்றின னென்ன
வீரெண் ணூற்றே டிரெட் டாண்டிற்
பேரறி வாளன் ரோன்றுமதற் பிற்பாடு
பெருங்குள மருங்கிற் சுருங்கைச் சிறுவழி
அ0 பிரும்பெரு நீத்தம் புகுவது போல
வளவாச் சிறுசெவி யளப்பரு நல்லற
மூளமலி யுவகையோ டியிர்கொளப் புகூஉங்
கதிரோன் ரோன்றுங் காலை யாங்கவ
னவிரொளி காட்டி மணியே போன்று

எங. தொக்கு - கூடி. துடிதலோகம் - துஷிதலோகம்; இஃது உலகம் மூப்பத்தொன் றற்குள் ஒன்பதாவது; மஹாராஜிகலோக முதலிய தெய்வலோகம் ஆறனுள் நான்காவது.

எச. மிக்கோன் - சிறந்ததேவன்; இவன் பெயர் பிரபாபாலனென்று சில புத்தநூலால் தெரிகின்றது.

எஉ - ச. மணி. ஙo: எ - கூ. எசு. செல்வன் - சூரியன்.

எரு - சு. புத்தன் தோற்றத்துக்குச் சூரியோதயத்தை உவமை கூறியிருத்தலை, (கo: கo - கக; கஉ: அரு - சு; உக: கசுரு - எ; உசு: சசு) இந்நூலிற் பலவிடத்தும் காண்க.

எஅ. பேரறிவாளன் - புத்தன். பிற்பாடு - பின்னுக; இஃது ஒரு சொல்; "பெண்ணணி கோலம் பெயர்ந்தபிற் பாடு" சிலப். கஙு: க.

எச - அ. இரப்பத் தோன்றும்.

எசு - அ. தோன்றினனென்னப் பேரறிவாளன் தோன்றுவான்.

எகூ. சுருங்கை - மதகு. சிறுவழி - சிறுவழியில்.

அo. நீத்தம் - வெள்ளம். அக. செவி - செவியில்.

அஉ. உயிர் உவகையொடு கொள்ள.

எசு - அஉ. சிறுவழியில் நீத்தம்புகுவதுபோலச் சிறுசெவியில் நல்ல தம்புகும்.

அங. காலை - காலத்தில். அச. மணி - சூரியகாந்தம்.

(பி - ம்.) எக. 'மக்க (ஸோதாபந்நசகிதாகாமிஅநாகாமிஅரஹந்தரென்னும் நால்வகை ஆரியர்) யாதலிற்' எங. 'துடிதபோகத்து' எரு. 'விண்பரந்துகிடந்த' எசு. 'விசித்திரச் செல்வன்' எகூ. 'சுருங்கிற் சிறுநெறி' அஉ. 'உளமலியுவகை' அங. 'காலையாங்கணவி'

அரு மைத்திருள் கூர்ந்த மனமாசு தீரப்
புத்த ஞாயிறு தோன்றுங் காலைத்
திங்களு ஞாயிறுந் தீங்குரு விளங்கத்
தங்கா ராண்மீன் றகைமையி னடக்கும்
வானம் பொய்யாது மாநிலம் வளம்படி
கூ0 மூனுடை யுயிர்க ளுறுதுயர் காணு
வளிவலங் கொட்கு மாதிரம் வளம்படி
நளியிரு முந்நீர் நலம்பல தருஉங்
கறவைகன் ருர்த்திக் கலநிறை பொழியும்
பறவை பயன்றுய்த் தூறைபதி நீங்கா
கூரு விலங்கு மக்களும் வெருஉப்பகை நீங்குங்
கலங்களுர் நரகரும் பேயுங் கைவிடுங்

அரு. மைத்து - கறுத்து.

மேல்வருவன, புத்தன் அவதரிக்குங் காலத்து உளவாகும் நற்குறிகள்.

அஎ. தீங்கு உருவிளங்க - தீமை உறுமல் விளங்க ; விரோதமில்லாம லிருக்கவென்றபடி.

அஅ. ராண்மீன் - நக்ஷத்திரங்கள். அகூ. வானம் - மேகம்.

கூ0. உடம்புமெலிந்த உயிர்கள் துயரைக்காண ; உடையுயிர், வினைத் தொகை. ஊனுடையுயிர் - மக்கள்முதலிய உயிருமாம்.

கூக. வளிவலம் கொட்கும் - காற்று வலமாகச் சுழலும் ; "வலமாதி ரத்தான் வளிகொட்ப" (மதுரை. ருை.) மாதிரம் - திசை ; மலையுமாம் ; "மாதிரங் கொழுக்க" மதுரை. கo.

கூஉ. நளி இரு முந்நீர் - நீர்செறிந்த பெரியகடல் ; "நளியிரு முந்நீர் நாவா யோட்டி" (புறநா. சுசு;) முந்நீர், எழுவாய். நலம்- "ஓர்க்கோலே சங்க மொளிர்பவளம் வெண்முத்த, நீர்ப்படு முப்பிணை கடைந்து" (சிலப். கo: கoஎ - மேற்) என்னும் வரிகள்.

கூரு. கறவை - கறத்தலையுடைய பசுக்கள்; கன்று ஊர்ந்தி - கன்றை உண்ணச்செய்து; கலம் நிறை பொழியும் - கறவைக்கலமும் அதனினின்றும் பால்சொரியும்சாலும் வழியும்படி பாலைப்பாழியும்; நிறை-சால ; "பீரிவர்பு பரந்த நீரறு நிறைமுதல்" (பதிற். கரு); "கல் றருத்தி மங்கையர் கலநிறை பொழிதர, நின்றமேதி" (சீவக. சுகூ.) கறவைகள் பொழியும்.

கூச. பறவைகள் நீங்கா. துய்த்து - அநுபவித்து; புசித்தென்றுமாம்.

கூடு. மிருகசாதியும் மனிதச்சாதியும் தம்முள் அஞ்சுதற்குக் காரண மாகிய பகைமையை ஒழியும்.

கூசு. அஞர் - துன்பம் ; அஞரை நரகச்சாதியும் பேய்ச்சாதியும் விட் டொழியும்.

(பி - ம்.) அரு. 'மனமாளகமூஉம்' அகூ. 'வளப்படும்' கூ0. 'உயிர்கள் விறுவ துயர்' கூக. 'வலங்கொள்கும்' கூடு. 'பெரும்பகைநீங்கும்'

கூனுங் குறளு மூமுஞ் செவிடு
மாவு மருளு மன்னுயிர் பெறுஅ
வங்காட் பிறந்தவ னருளறங் கேட்டோ
கoo ரின்னுப் பிறவி யிகந்தோ ராதலிற்
போதி மூலம் பொருந்திய சிறப்பி
னுதன் பாத நவைகெட வேத்துதல்
பிறவி தோறு மறவேன் மடக்கொடி
மாதர் நின்னுல் வருவன விவ்வு
கoரு சேது நிகழ்ச்சி யாவும் பலவுள
வாங்கவை நிகழ்ந்த பின்ன ரல்லது
பூங்கொடி மாதர் பொருளுரை பொருந்தா

கூள. ழ. சிலப். நு: ககஅ. கூன் - வளைவு ; ஈண்டு வளைவையுடைய வடிவத்திற்கு ஆகுபெயர். குறள் - குறுகியவடிவம்; மக்களுள் நீரக் குறியானைக் குறளனென்றும், அவனிற் சிறிது கெடியானைச் சிந்தனென்றும் கூறுவர் (தொல். செய். சூ. சo) ஆசிரியர் நச்சினார்க்கினியர் ; ஊமம் - ஊமை.

கூஅ. மா - விலங்குவடிவாகப் பிறப்பது. மருள் - அறிவின்றி மயங்கியிருப்பது. உயிர் - ஈண்டு மக்களுயிர்.

கூள - அ. கூன்முதலிய வடிவங்களை உயிர்கள் பெறமாட்டா. கூன்முதலிய ஆதனெடு குருட்டையும் மணிபோற் பிறப்பதாகிய பிண்டத்தை யுங கூட்டி எண்வகையெச்சமென்பர் ; இதனை, "சிறப்பில் சிதடு முறுப்பில் பிண்டமுங், கூனுங் குறளு மூமுஞ் செவிடு, மாவு மருளு மூளப்பட வாழ்நர்க், கெண்பே ரெச்ச மென்றிவை யெல்லாம், பேதைமை யல்ல தாகிய மில்லென" (புறநா. உஅ) என்பதனாலும், "குறளொடு செவிடு மூங்கை கூன்மருள் குருடு மாவே, யுறுமுறப் பில்லாப் பிண்ட மோகிய வெண்மெய் யெச்சம்" (சூடாமணி. கஉ : கூச) என்பதனாலும் உணர்க.

கூகூ. அருளறம், வினைத்தொகை ; தயாதருமமுமாம்.

கoo. இன்னு - துன்பம். இகந்தோர் - கடந்தோர்.

கoஉ. பாதம் - பாதத்தை. நவை - குற்றம்.

கoஉ - ங. ஏத்துதலில் மறவேன் ; மறவேனென்றுமாம்.

கoச. மாதர், விளி. இவ்வூர் - இவ்வூரில்.

கoரு. ழ. மணி. உக : ககo. ஏதுநிகழ்ச்சி யென்பதன் பொருளை மணி. ங : ச - ஆம் அடிக்குறிப்பிற்காண்க.

கoச - ரு. வருவனவாகிய ஏது நிகழ்ச்சி.

கoள. பொருளுரை - மெய்வார்த்தை; என்றது தருமோபதேச மொழிகளை; "பொய்யில் புலவன் பொருளுரை" (மணி. உஉ: சுக) ; "பொய்யில் காட்சியோர் பொருளுரை யாதலின்" சிலப். உஅ: ககூஅ.

(பி - ம்.) கூக 'பிறந்தவருளறங்' கoo. 'இகழ்வோராதலிற்' கoங-ச. 'மறவேன்யா னுமடக்கொடியாதலினமாதா மாதர்நின்னுல்'

யாதி முதல்வ னருந்துயர் கெடுக்கும்
பாதபங் கயமலர் பரசின ராதலி
கஅ0 னீங்கிவ ரிருவரு மிளங்கொடி நின்னே
டோங்குயர் போதி யுரவோன் றிருந்தடி
தொழுது வலங்கொண்டு தொடர்வினை நீங்கிப்
பழுதி னன்னெறிப் படர்குவர் காணு
யாருயிர் மருந்தா மமுத சரபியெனு
கஅரு மாபெரும் பாத்திர மடக்கொடி பெற்றனை
மக்க டேவ ரெனவிரு சார்க்கு
மொத்த முடிவி னோரை முரைக்கேன்
பசிப்பிணி தீர்த்த லென்றே யவருந்
தவப்பெரு நல்லறஞ் சாற்றின ராதலின்
கஉ0 மடித்த தீக்கொளிய மன்னுயிர்ப் பசிகெட
வெடுத்தனள் பாத்திர மிளங்கொடி தானென்.

கஉ.—அறவணர்த்தொழுதகாதை முற்றிற்று.

கஅ0அ. ஆதிமுதல்வன் - புத்தன். கஅகூ. பரசினர் - துதித்தார்.

கஅ0கூ. ஆதிமுதல்வனது பாதபங்கயமலர்.

கஅ0. இருவர் - மாதவி சுதமதியென்பவர். இளங்கொடி, விளி.

கஅக. உரவோன் - புத்தன் ; உரம் - அறிவு.

கஅகூ. பழுது இல் நன்னெறி - குற்றமில்லாத நல்லவழி ; இதனை, விசுத்திமார்க்கமென்பர். நெறி - நெறியில். படர்குவர் - செல்குவர்.

கஅகூ - கஉ. பரசினராதலின், இவரிருவரும் நின்னோடு உரவோனடியைத்தொழுது வலங்கொண்டு நீங்கிப்படர்குவர்.

கஅசூ. இருசார்க்கும் - இரண்டுபகுதிகட்கும்.

கஅஅ. நீர்த்தலாம். அவரும் - அறவண வடிகளும்.

கஅள - அ. ஓரறம் நீர்த்தலாம்.

கஅகஅ. தவப்பெரு நல்லறம் - மிகப்பெரிய நல்லதருமம்.

கஉ0. கொளிய - கொளுத்தினற்போன்ற.

கஉக. இளங்கொடி பாத்திரத்தை எடுத்தனள்.

க-கஉக. இளங்கொடி அவர்தம்முடன் அடிகள்யாங்குளரென்று வினவ அவ்வக் குறுகி மாதவனடியைவணங்கி ஏத்தி உரைத்தலும், கேட்டு அவரும் தவப்பெரு நல்லறம் சாற்றினராதலின், இளங்கொடி பாத்திரமெடுத்தனளென முடிக்க.

(பி - ம்.) கஅகூ. 'பங்கயமலர்' கஅஅ. 'அன்றேயாவரும்' கஉ0. 'மடித்த தீக்கதிமன்னுயிர்' கஉக. 'எடுத்த பாத்திரம்'

பதின்மூன்றுவது

ஆபுத்திரன் றிறமறிவித்தகாதை.

[பதின்மூன்றுவது மணிமேகலைக்கு அறவணர்
ஆபுத்திரன்றிறங்கூறியபாட்டு.]

மாபெரும் பாத்திர மடக்கொடிக் கருளிய
வாபுத் திரன்றிற மணியிழை கேளாய்
வார ணுசியோர் மறையோம் பாள
ரரண வுவாத்தி யபஞ்சிக னென்போன்
நு பார்ப்பனி சாலி காப்புக்கடை கழிந்து
கொண்டோற் பிழைத்த தண்ட மஞ்சித்
தென்றிசைக் குமரி யாடிய வருவோள்

உ. திறம் - வரலாற்றை.

ங. வாரணசி - காசி. மறையோம்பாளன் - வேதத்தைப்பாதுகாத்தலையுடையான்; அந்தணனென்றபடி. "வையங் கோட்டிலோர் மறையோம் பாளன்" (கந்து) என்பர் பின்னும்.

ச. ஆரண உவாத்தி - வேதம் ஓதுவிப்பவன்; இஃது உபாத்தியாய னென்னும் வடமொழிச்சிதைவு. வேதத்திற் சில பாகத்தையேனும் வேதாங் கங்களையேனும் ஜீவனத்தின் பொருட்டு ஓதுவிப்பவன் உபாத்தியாயன்; இதனை மனுஸ்மிருதி உ - ஆம்அத்தியாயம், கசக - ஆம் சுலோகத்திற் காண்க. இப்பெயர் தமிழ்நூல்களில் உவாத்தியன் உவாத்தியான் உவாத்திக னெனவும் வழங்கும். அபஞ்சிகன், காரணப்பெயர்; பங்கமில்லாதவனென் பது பொருள்.

நு. பார்ப்பனி சாலி - அவன்மனைவி சாலியென்பாள்; அந்தணர்களிற் கணவனைப் பார்ப்பானென்றும், மனைவியைப் பார்ப்பனியென்றும் கூறுதல் மரபு, "பார்ப்பான் றன்னெடு கண்ணிழற் றிருந்தவித், தீத்தொழி லாட்டி" (சு: கஉஉ - ங) என்றுமுன்பு வந்திருத்தல்காண்க. காப்புக் கடை கழிந்து - காவலின் எல்லையைக்கடந்து; வியபிசரித்தென்றபடி.

சு. கணவனுக்குப் பிழைசெய்தமையாலுண்டாகும் சிக்ஷைக்குப் பய ந்த. தண்டம் - சிக்ஷை; "கொண்டோற் பிழைத்த தண்டம் தூக்கி" பெருங். க. ஈசு: கருச.

நு - எ. மணி. நு: ஈள - அ. ஆடிய - ஆடுதற்பொருட்டு.

(பி - ம்.) உ. 'இழாய் கேளாய்' ங - கூ. 'வாருணசி யோர் மறைமேம் படுஞ்ஞான அகத்துத்தஞ்சிருள் யாமத்தீன்ற' ச. 'ஆரணவுவாத்திகன்'

கஙூ.—ஆபுத்திரன் றிறமறிவித்தகாதை. கசஙூ

சூன்முதிர் பருவத்துத் துஞ்சிரு ளியவிடை
யீன்ற குழவிக் கிரங்கா ளாகித்
கo தோன்றூத் தடவையி னிட்டன ணீங்கத்
தாயி றூவாக் குழவித்துயர் கேட்டோ
ராவந் தணிந்தாங் கதன்றுயர் தீர
நாவா னக்கி நன்பா லூட்டிப்
போகா தெழுநாட் புறங்காத் தோம்ப
கரு வயனங் கோட்டிலோர் மறையோம் பாள
னியவிடை வருவோ னிளம்பூதி யென்போன்
குழவி யேங்கிய கூஉக்குரல் கேட்டுக்
கழுமிய துன்பமொடு கண்ணீ ருகுத்தாங்

அ. துஞ்சிருள் - யாவரும் தூங்குதற்குக் காரணமாகிய இருளில்; செறிந்த இருளுமாம். இயவு இடை - வழியினிடத்தே.

கூ. குழவிக்கு - குழந்தைக்கு.

கo. தடவை-தோட்டம்; "தொடுப்பெறிந் தழுத துளர்படு தடவை" (பெரும்பாண். உoக); "தொய்யாது வித்திய துளர்படு தடவை" மலைபடு. கஉஉ.

கூ - கo. மணி. கசூ: அசு - எ.

கக. தூவாக்குழவி - உண்ணுதி குழந்தை. துயர் - பசித்துயரத்தால் ஒழியாமல் அழுது கூப்பிடும் ஒலி; ஆகுபெயர்; "தாயி றூவாக் குழவி போல, வோவாது கூஉநின் னுடற்றியோர் நாடே" புறநா. ச.

கஉ. ஆ - பசு. அதன்றுயர்-அக்குழந்தையின் பசித்துன்பம்.

கச. புறங்காத்தோம்ப - பாதுகாக்க; இவை ஒருபொருட்பன் மொழி. புறங்காத்தல் - பாதுகாத்தல்; "வழிபடு தெய்வ நின்புறங் காப்ப" (தொல். செய். சூ. கக o); "மெலிவில் செங்கோ னீபுறங் காப்ப" (புறநா. கூ.) இதனால் ஆபுத்திரனென்பது இவனுக்குப் பெயராயிற்று.

கரு. வயனங்கோடு - ஓரூர். மறையோம்பாளன்: மணி. கசூ: கூ.

கசு. வருவோன் - மனைவியுடன் வருவோன்; பின் "காதலி தன்னொடு கைதொழு தெடுத்த" (உo) என்பதனால் 'மனைவியுடன்' என்பது கொள்ளப்பட்டது. பூதியென்பது அவன் பெயர்; 'தாதை பூதியுந் தன்மனை கடிதர" (கoக) என்று இக்காதையிலேயே பின்பு வருதல் காண்க.

கஅ. கழுமிய - கலந்த; (புறநா. உருஅ.) கண்ணீர் - உவகைக்கண்ணீர்.

(பி - ம்.) அ. 'சூன்முதிருயக்கத்துத் துஞ்சிருள்யாம்த்து' கூ. 'இரங் னெளாகி' கo. 'இட்டனணீங்கித்' கஉ. 'அணைதாங்காங்கதன்றுயர் கெட' கரு. 'வய வனங் கோட்டில்,' 'வனயனங்கோட்டி'

காமக னல்ல னென்மக னென்றே
காதலி தன்னொடு கைதொழு தெடுத்து
நம்பி பிறந்தான் பொலிகநங் கிளையெனத்
தம்பதிப் பெயர்ந்து தமரொடுங் கூடி
மார்பிடை முந்நூல் வணியா மூன்னர்
நரவிடை நன்னூ னன்கன நவிற்றி
யோத்துடை யந்தணர்க் கொப்பவை யெல்லா
காத்தோலை வின்றி நன்கன மறிந்தபி
னப்பதி தன்னுளோ ரந்தணன் மனைவயிற்
புக்கோ னுங்குப் புலைசூழ் வேள்வியிற்
குரூஉத்தொடை மாலை கோட்டிடைச் சுற்றி
வெரூஉப்பகை யஞ்சி வெய்துயிர்த்துப் புலம்பிக்

கக. ஆ மகன் அலலன - பசுவினுடைய மகனலலன; பசுப பாது காத்ததனைக் கண்டோருதலின் இங்ஙனங்கூறினன்.

உ0. காதலி - மனைவி; கைதொழுது - அக்குழந்தையைத் தனக்குத் தந்தது தெய்வமென்றெண்ணி அத்தெய்வத்திற்கு அஞ்சலிசெய்து; "டழுதில் காட்சிப் பைந்தொடி புதல்வனைத், தொழுதனன் வாங்கி" (உரு: கஅக) என்று இந்நூலுள்ளே பின்புவருதல் காண்க.

உக. நம் இனை பொலிகவென்று. உஉ. பதி - ஊர்.

உங. மூந்நூல் - பூணுநூல். வணியா மூன்னரென்பது விரையக்கற் பித்தமை விளக்கி நின்றது.

உச. நன்னூல் - வேதம் வேதாங்கங்கள். நவிற்றி - நவிற்ற; நவிலுதல் - கூறி அடிப்படுதல்; "நல்லோர் குழீஇய நாநவி லவையத்து" (மலை படு. எஎ); "மறைநவி லந்தணர் நூலவும் படுமே" புறநா. க.

உரு. ஓத்து - வேதம்; "மறப்பினு மோத்துக் கொளலாகும்" குறள். கஙச.

உசு. காத்தோலை: மணி. உச: சுக; சிலப். கூ: சச.

உஅ. புலை சூழ் வேள்வியில் - அசுத்தமாகிய ஊன்தின்றலைக் கருதுகின்ற யாகசாலையில்; சூழ்தல் - கருதல். புலையும், வேள்வியும் ஆகுபெயர்.

உக. நிறம்பொருந்திய தொடுக்கப்பட்டமாலை கொம்பின்கண்ணே சுற்றப்பட்டு.

கூ0. வெரூஉப்பகை - அச்சத்தைத்தரும்பகை; வெரூஉ - அச்சம்; "வெரூஉப்பறை நூவலும் பரூஉப்பெருந் தடக்கை" (பொருந. எஎக.) யுலம்பி - வருத்தமுற்று; புலம்பு - வருத்தம்; "புலம்புவிட் டிருந்த புனிறில் காட்சி" மலைபடு. சகூ.

(பி - ம்.) உச. 'நன்னினிகவிற்றி' உரு. 'ஒப்புமை யெல்லாம்' உஎ. 'மணியிற் புக்கோ னுங்கப்புலைசூழ்வேள்வியில்' உக. 'குரூஉக்கொடி'

கொலைவில் வேட்டுவர் கொடுமர மஞ்சி
வலையிடைப் பட்ட மானே போன்றுங்
கஞ்சியின் றழைக்கு மாத்துயர் கண்டு
நெஞ்சுநடுக் குற்று நெடுங்கணீ ருகுத்துக்
கூடு கள்ள வினையிற் கடுந்துயர் பாழ்பட
நள்ளிருட் கொண்டு கடக்குவ னென்னு
மூள்ளங் கரந்தாங் கொருபுடை யொதுங்கி
யல்லிடை யாக்கொண் டப்பதி யகன்றோன்
கல்லத ரத்தங் கடவா நின்றுழி
சா0 யடர்க்குறு மாக்களொ டந்தண ரெல்லாங்
கடத்திடை யாவொடு கையகப் படித்தி
யாகொண் டிந்த வாரிடைக் கழிய
நீசமக னல்லாய் நிகழ்ந்ததை யுரையாய்
புலைச்சிறு மகனே போக்கப் படுதியென்

கூக. கொலை நவில் வேட்டுவர் - கொல்லுதலைச்செய்கின்ற வேடருடைய. கொடுமரம் - வில்.

கூங. அழைக்கும் ஆ துயர் - கூப்பிடுகின்ற பசுவின் துயரத்தை.

கூ0 - கூங. புலம்பிப் போன்று அஞ்சி நின்று அழைக்கும் ஆ.

உஅ - கூங. புக்கோன் ஆவினதுதுயரத்தைக் கண்டென்க.

கூடு. திருட்டுத்தொழிலால், பசுவினதுமிக்கதுன்பம்இல்லையாம்படி; கடுந்துயர் - மரணத்தின்பமுமாம்.

கூசு. நள்ளிருள் - செறிந்தவிருட்டு; "வெள்ளி முளைத்த நள்ளிருள் விடியல்" பொருந. எஉ.

கூள. உள்ளம் கரந்து - தன்னெண்ணத்தை மறைத்து.

கூஙு. கல்லதரத்தம் - பருக்கைக்கற்கள் பொருந்திய சின்னெறியையுடைய அருநெறி; "கல்லத ரத்தங் கடக்க" சிலப். கசு: நுள.

சா0. அடர்க் குறுமாக்களொடு - நெருக்குதலைச்செய்யும் அறிவில்லாதாரோடு; "ஒலித்தொருங் கீண்டிய ஓர்க்குறு மாக்களும்" (கடு: நுகூ) என்பர் பின்னும்; குறுமாக்கள்: கலி. அஉ.

சஙு. கடம் - அருநெறி.

சஉ. ஆ கொண்டு - பசுவைக் கைப்பற்றிக்கொண்டு; ஆரிடை - அரியவழி.

சஎ. ஊனிலிரும்பிப் பசுவைக்கவர்ந்தானென்று நினைந்து 'புலைச்சிறு மகனே' என்றார். போக்கப்படுதி - விலக்கப்படுவாய்.

(பி - ம்.) கூக. 'கொடுமரமஞ்சி' கூடு. 'களவினையாகியிக் கடுவினை பாழ்பட' கூஅ. 'ஆகொண்டப்பதி' சஉ. 'ஆகொணர்ந்த' சஙு. 'நீம கனல்லாய்' சஎ. 'புலைச்சிறமகனே போகப்படுதி'

சரு றலைக்கோ லதனு லறைந்தனர் கேட்ப
வாட்டிங்கின் றலைக்கு மந்தண ருவாத்தியைக்
கோட்டினிற் குத்திக் குடர்புய்த் துறுத்துக்
காட்டிடை கல்லாக் கதழ்ந்துகிளர்ந் தோட
வாபுத் திரன்ரு ஞங்கவர்க் குரைப்போ
ருo ஞேவன செய்யன்மி ஞெடிவன கேண்மின்
விடுநில மருங்கிற் படிபுல் லார்ந்து
நெடுநில மருங்கின் மக்கட் கெல்லாம்
பிறந்தகாட் டொட்டுஞ் சிறந்ததன் றீம்பா
லறந்தரு நெஞ்சோ டருள்சுரக் தூட்டு
ருரு மிதஞெடு வந்த செற்ற மென்னே
மூதுமறை யந்தணிர் முன்னிய துரைமோ

சரு. அலைக்கோல் - வருத்துதலைச்செய்யும் கோல்; அறைந்தனர் - அடித்தனராய்.

சசு. ஆட்டி அலைக்கும் -மிகவும் வருத்துகின்ற. இவை ஒரு பொருட் பன்மொழி.

சள. கோடு - கொம்பு. குடர் புய்த்துறுத்து - குடரைப்பிடுங்கி; "கோடுபுய்க் கல்லா தழக்கு நாடகேள்" (கலி. கூ அ); "புய்த்தெறி கரும் பின் விடுகழை" புறநா. உ அ.

சஅ. கதழ்ந்து கிளர்ந்தோட - விரைந்தெழுந்தோட; கதழ்தல்-விரைதல்; "தோயுங் கதழ்குருதி தோள்புடைப்ப" (பு-வெ. காஞ்சி. கசு.) கிளர்தல் - எழுதல்; "கால்கிளர்ந் தன்ன வேழம்" முருகு. அஉ.

மேல்வருவன ஆபுத்திரன் கூற்று.

ருo. ஞொடிவன - சொல்லுவனவற்றை.

ருக. மேய்தற்கு அரசனுல் விடப்பட்ட நிலத்தினிடத்தே தானே உண்டாகிய புல்லேமேய்ந்து. பசுக்கள் கவலையின்றி மேய்தற்கு அரசனுல் விடப்பட்டநிலம் கோலஞ்சாரபூமியெனப்படும்.

ருஉ. பிறத்தல், மக்களினை. நீம்பால் - இனியபால்.

ருஞ. இதஞெடு - இப்பசுவினிடத்து; உருபுமயக்கம். செற்றம் - பகைமை நெடுங்காலம் நிகழ்வது; முருகு. கஉ.

ருசு. முன்னியது - எண்ணியது. உரைமோ - உரையுமென்னும் ஏவற்பன்மை உயிர்மெய்கெட்டு ஓகாரம்பெற்று வந்தது; (நன் - வி. சூ. நசக.) எனவென்று ஒரு சொல் வருவிக்க.

(பி - ம்.) சரு. 'கேட்புழி' சஅ. 'கழிந்துகிளர்ந்தோட' ருo. 'ஞோவன செய்யே ஞெடியாது கேண்மோ', 'ஞோவல்செய்யல்' ருக. 'விடுபுலமருங்கு' ருஉ. 'தொட்டுச்சிறந்த நீம்பால்' ருசு. 'மூதுமொழி மாக்கண்மூன்யாது ரைமேர்'

பொன்னணி சேமி வலங்கொள்சக் கரக்கை
மன்னுயிர் முதல்வன் மகனெமக் கருளிய
வருமறை நன்னூ லறியா திகழ்ந்தனை
கூ0 தெருமர லுள்ளத்துச் சிறியை நீயவ்
வாமக ஞதற் கொத்தனை யறியா
நீமக னல்லாய் கேளென விகழ்தலு
மான்மக னசலன் மான்மகன் சிருங்கி
புலிமகன் விரிஞ்சி புரையோர் போற்று
கூரு நரிமக னல்லனே கேச கம்பள
னீங்கிவர் நுங்குலத் திருடி கணங்களென்
றேங்குயர் பெருஞ்சிறப் புரைத்தலு முண்டா
லாவொடு வந்த வழிகுல முண்டோ
நான்மறை மாக்கா ணன்னூ லகத்தென
எ0 வாங்கவர் தம்முளோ ரந்தண னுரைக்கு
மீங்கிவன் றன்பிறப் பியானறி குவனென

நுள. சேமி - சக்கரத்தின்பூடு ; வட்டமுமாம். வலம் - வெற்றி; வலப் பக்கமுமாம். சேமியையுடைய சக்கராயுதம்.

நுஅ. மன்னுயிர்முதல்வன் - திருமால். மகன் - பிரமன்.

கூ0. தெருமரல் - சுழற்சி. சிறியை - சிறுமையையுடையாய்.

சுக. நூற்பொருளையறியும் அறிவிலாயென்பார், 'ஆமக ஞதற் கொத்தனை' என்றார்; ''விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல், கற்றாரோ டேனை யவர்'' (குறள். சகo) என்று வருதல் காண்க.

சுஉ. இகழ்தலும் - அவ்வந்தணர் இகழ்ந்துபேசுதலும்.

மேல்வருவன ஆபுத்திரன் கூற்று.

சுஙூ. அசலனென்பவன் ஆனின்மகன் ; ஆன் - பசு. சிருங்கியென்ப வன் மானின் மகன்.

சுச. விரிஞ்சியென்பவன் புலியின்மகன். புரையோர் - மேலோர்.

சுரு. கேசகம்பளனென்பவன் கரியின் மகன்; அசிதகேசகம்பளரெ ன்றுஞ் ஒரு முனிவர்பெயர் பௌத்தநூல்களிற் காணப்படுகின்றது.

சுஅ - கூ. ஆவொடு - ஆவால். நன்னூலகத்து ஆவொடு வந்த அழி குலமுண்டோ ? இல்லையென்றபடி. முன்னம் 'ஆமக ஞதற் கொத்தனை' (சுக) என்று அந்தணர் இகழ்ந்ததற்குப் பரிகாரங்கூறின்றவனதலின், 'ஆவொடு 'வந்த வழிகுல முண்டோ' என்றார்.

எ0 - எக. இவன்பிறப்பை யான் அறிகுவனென்று ஓரந்தணன் உரைப் பான்.

(பி - ம்.) நுள.'வலங்கொளசதக்கை' நுஅ. 'எமக்களித்த' கூ0 'சிறி. யோய்நீயவ்' சுஙூ - ச. 'சிருங்கிப், புலிமகன்விருஞ்சி' சுரு. 'தேசிகம் பலின்' சுக. 'மாக்கணன்னூலக'

நடவை வருத்தமொடு நல்கூர் மேனியள்
வடமொழி யாட்டி மறைமுறை யெய்திக்
குமரி பாதங் கொள்கையின் வணங்கித்
எடு தமரிற் றீர்ந்த சாலியென் போடனை
யாது நின்னூர் நீங்கென் வரவென
மாமறை யாட்டி வருதிற மூரைக்கும்
வார ஞரியோர் மாமறை முதல்வ
ஞரண வுவாத்தி யரும்பெறன் மனைவியான்
அ0 பார்ப்பார்க் கொவ்வாப் பண்பி ஞழுகிக்
காப்புக்கடை கழிந்து கணவனை யிழந்தே
னெறிபய மூடைமையி னிரியன் மாக்களொடு
தெற்கட் குமரி யாடிய வருவேன்

எஉ. நடவை - வழி. நல்கூர் மேனியள் - இனைத்த உடம்பையுடையாள்.

எங. வடமொழி யாட்டி - பார்ப்பனி; இத்தூலில் (பி: சo-ஆம் அடியிற் பார்ப்பாரை வடமொழியாளரென்று கூறியிருத்தல் காண்க. மறை முறை யெய்தி - வேதவிதிப்படியே சென்று.

எச. குமரியாடப்போந்தோர், ஆங்குள்ள குமரித்தெய்வப் படிமத்தை வணங்குதல் மரபு.

எடு. தமரிற்றீர்ந்த - தனக்குச் சிறந்தோரினின்றும் நீங்கிய.

எச - டு. வணங்கித் தீர்ந்த சாலி. எசு. ஈங்கு வரவு என்னென.

எள. உரைக்கும் - உரைப்பாள்.

எஅ. வாரணஞ்சி=வாராணவீ - காசி; வடமொழியில் 'ஸித்தாந்த கௌழதி' என்னும் தூலின் அவ்யயீபாவப் பிரகரணத்தில், "யஸ்யசாயாமஃ" என்னும் ஸூத்ரவியாக்கியானத்தில் 'வாராணவீ' என்பதற்கு 'கல்லஜலத்துக்குத் தூரத்திலில்லாத நகரீ' என்று தத்துவபோதினியுரையின் ஆசிரியர் பொருள்செய்திருப்பதாகக் கூறுவர்.

எக. 'உவாத்தி' என்பது, "தவாஅக் காதலொடு தகையாழ் காட்டி, முவாத்தி யாதலின்" (க. சச: கஉo - உக) எனப் பெருங்கதையிலும் வந்திருத்தல் காண்க.

அo. ஒழுகி - நடந்து. அக. காப்புக்கடை கழிந்து : மணி. கஉ: டு.

அஉ. எறிபயம் - அடித்தலாலுண்டாகும் அச்சம். இரியல் மாக்கள் - கெடுதலுற்ற மாக்கள்; விளைந்துசெல்லுமாக்களென்றுமாம்.

அங. ஆடிய - நீராடும்பொருட்டு.

(பி - ம்.) அக. 'கவவினையிகழ்நேனை' அஉ. 'எற்பயமுடைமையின்', 'நெறிபயமுடைமையின்' அங. 'தெகைகட்குமரி', 'தக்கணகுமரி'

பொற்றேர்ச் செழியன் கொற்கையம் பேரூர்க்
அடு காவதங் கடந்து கோவல ரிருக்கையி
னீன்ற குழவிக் கிரங்கே ளுகித்
தோன்றுத் துடவையி னிட்டனன் போந்தேன்
செல்கதி யுண்டோ தீவினை யேற்கென்
றல்லலுற் றழுத வவண்மக னீங்கிவன்
கூ0 சொல்லுத றேற்றேன் சொற்பய மின்மையிற்
புல்ல லோம்பன்மின் புலைமக னிவனென
வாபுத் திரன்பின் பமர்ங்கை செய்து
மாமறை மாக்கள் வருங்குலங் கேண்மோ
முதுமறை முதல்வன் முன்னர்த் தோன்றிய
கூடு கடவுட் கணிகை காதலஞ் சிறுவ
ரருமறை முதல்வ ராந்தண ரிருவரும்
புரிநூன் மார்பீர் பொய்யுரை யாமோ

அசை. செழியன் - பாண்டியன். கொற்கை - பாண்டியர்களின் பழைய

அடு. கோவலர் - இடையர்.

அஎ. துடவை - தோட்டம். அசு - எ. மணி. கஉ: கூ - க0.

அஅ. தீவினையேற்குச் செல்கதியுண்டோ.

கூ0. பயம் - பிரயோசனம்; இன்மையிற் சொல்லுதறேற்றேன்.

கூக. புல்லலோம்பன்மின் - ஸ்பரிசித்தலீலச்செய்யாதொழிக. இவன் புலைமகன் - இவன் அசுத்தமுடைய மகன். புலை - வியபிசாரமுமாம்; இது மலைகாட்டுவழக்கு.

கூஉ. அமர்ங்கை - விரும்புஞ்சிரிப்பு.

கூஙு. கேண்மோ: கேளுமென்னும் ஏவற்பன்மை உயிர்கெட்டு ஓகாரம் பெற்றுவந்தது; நன் - வி. சூ. ஙுசக.

கூசு. முதுமறைமுதல்வன் - பிரஹ்மா.

கூடு. கடவுட்கணிகை - திலோத்தமை யென்பாள். சிறுவர்-பிள்ளைகள்.

கூசூ. முதல்வராகிய அத்தணரிருவரும். இருவர்-வஷிஷ்டர், அகஸ்தியர்.

கூடு - சூ. அத்தணரிருவரும் காதலஞ்சிறுவரென்க.

கூச - சூ. வஷிஷ்டரும் அகஸ்தியரும் திலோத்தமைபின் பிள்ளைக ளென்பதைப் பின்வரும் வாக்கியத்தாலுணர்க; 'வஷிஷ்டனும் அகஸ்திய னும், பிரஹ்மா திலோத்தமையென்னும் அப்ஸரஸைக்கண்டகாலத்திற் கல சத்து ஜனித்தனர்' நீல. சமய.

(பி - மி.) கூஉ. 'ஆபுத்திரன்ருனமாகை'

சாலிக் குண்டோ தவறென வுரைத்து
நான்மறை மாக்களோ நகுவன னிற்ப
கoo வோத லந்தணர்க் கொவ்வா னென்றே
தாதை பூதியுந் தன்மனை கடிதர
வாகவர் கள்வனென் றந்தண ருறைதருங்
கிராம மெங்கணுங் கடிஞையிற் கல்லிட
மிக்க செல்வத்து விளங்கியோர் வாழுங்
கoரு தக்கண மதுரை தான்சென் றெய்திச்
சிந்தா விளக்கின் செழுங்கலை நியமத்
தந்தின் மூன்றி லம்பலப் பீடிகைத்
தங்கினன் வதிந்தத் தக்கணப் பேரூ

கூஅ. தவறு - குற்றம். கூக. நகுவனன் - சிரிப்பவனுகி.

கoo. ஒவ்வான் - பொருந்தான்; என்றது ஆபுத்திரனை.

கoக. தாதை - தகப்பன். கடிதர - நீக்க.

கoங. கடிஞை-பிச்சைப்பாத்திரம். கல் இட--கல்லைப் போகட; உலகத்திற் கடிஞையிற் கல்லிடுவார் எக்காலத்தும் இலராகவும் இவனுக்கு இங்ஙன நிகழ்ந்ததேயென்று இரங்கிக் கூறினர்; 'கடிஞையிற் கல்லிடுவாரில்' என்பது ஒரு பழமொழி; இதனைப் பின்வரும் வெண்பாவாலுணர்க; "நினைத்த திதுவென்றந் நீர்மையை நோக்கி, மனத்ததிம் தீவர் மாண்டார் - புனத்த, குடிஞை யிரட்டுங் குளிர்வரை நாட, கடிஞையிற் கல்லிடுவா ரில்" பழ. உசசு.

கoரு. தக்கணமதுரை - தென்றிசைக்கணுள்ள மதுரை; என்றது கூடற்பதியை; தக்கணம், வடசொற்றிரிபு (சிலப். கச: அக) அடியார்க்கு நல்லாநுரையைப்பார்க்க.

கoசு. சிந்தாவிளக்கு - ஸரஸ்வதீதேவி; மணி. பதிகத்தின் சுo-ஆம் அடிக்குறிப்பைப்பார்க்க. நியமம் - கோயில்; ஸரஸ்வதீதேவியின் கோயிலாதலின், அதற்குக் கலைநியமமென்பது பெயராயிற்று; மணி. கச: கo - கக, கள - அ.

கoள. மூன்றில் அம்பலப்பீடிகை - சிந்தாதேவியின் கோயில்வாயிற் கணுள்ள மன்றினிடத்தில். அம்பலப்பீடிகை - அம்பலமாகியபீடிகை; அஃது உயர்த்துக்கட்டப்பட்டிருத்தலின், பீடிகையெனப்பட்டது; பீடிகையென் பதற்குக் கோயில்வாயிற்கணுள்ள பலிபீடமெனினும் பொருந்தும்; இங்ஙனங் கொள்ளுங்காற் பீடிகையையுடைய அம்பலமெனமாறுக.

கoஅ. தங்கினன் வதிந்து - தங்கி; ஒருபொருட்பன்மொழி. தக்கணப் பேரூர் - மதுரையில்.

(பி - ம்.) கoo. 'ஒவ்வாயென்றே' கoஉ. 'ஆங்கவர்கள்வ' கoங. 'கடி கையிற்கல்லிட'

ரையக் கடிஞை கையி னேந்தி
மையறு சிறப்பின் மனைதொறு மறுகிக்
காணர் கேளார் கான்முடப் பட்டோர்
பேணுந ரில்லோர் பிணிநடுக் குற்றோர்
யாவரும் வருகவென் றிசைத்துட னூட்டி
யுண்டொழி மிச்சிலுண் டோடுதலை மடித்துக்
கண்படை கொள்ளுங் காவலன் றனென்.

கஙூ.—ஆபுத்திரன்றிறமறிவித்தகாதை முற்றிற்று.

ககஂ. மை - குற்றம். மறுகி - சுழன்று.

ககக. காணர் - குருடர். கேளார் - செவிடர்.

ககஉ. பேணுநரில்லோர் - அகதிகள். பிணி - நோய்.

கஉக - உ. மணி. உஅ: உஉஉ - கூ.

ககஙூ. யாவரும் - மேற்கூறப்பட்ட காணர்முதலிய யாவரும். உடன் ஊட்டி - ஒருங்குண்ணச்செய்து; உடன் - உடனேயென்றுமாம்.

ககச. உண்டொழி மிச்சில் உண்டி - அவர்கள் உண்டொழிந்த மிகுதியை யுண்டி ; இது "விருத்தோம்பி, மிச்சின் மிசைவான்" (அறு) என்ற குறளின் பொருளைத் தழுவி வந்தவற்று காண்க. ஓடு - பிச்சைப்பாத்திரம். தலைமடித்து - தலையணையாகக்கொண்டு.

ககடு. கண்படை - உறக்கம். காவலன் - காத்தலையுடையவன்; என்றது ஆபுத்திரனை. காவலன் கண்படை கொள்ளுமென்க.

க - ககடு. அணியிழை, ஆபுத்திரன்றிறங்கேளாய்; பார்ப்பனி சாலி, கழிந்து அஞ்சி வருவோள் இரங்காளாகிக் குழவியை இட்டு நீங்க, ஆ கேட்டு அணைந்து நக்கி ஊட்டிப் போகாது ஓம்ப, பூதியென்போன் கேட்டு உருத்து என்மகனென்று எடுத்துப் பெயர்த்து கூடி நவிற்ற, அறிந்தபின் புக்கோன் ஆ துயர் கண்டி உற்று உருத்து உள்ளங்கரந்து ஒதுங்கி அக்ன்றேனைக் கட வாகின்றுழி அந்தணரெல்லாம் குறுமாக்களோடு சென்று கையகப்படுத்திக் கேட்ப, நல்லா குத்திப் புய்த்துறுத்து ஓட,ஆபுத்திரன் உரைப்போன்'உரை மோ' என, அந்தணரிகழ்ந்தலும், ஆபுத்திரன் 'நன்னாலகத்து ஆவொடு வந்த அழிகுலமுண்டோ' என ஓரந்தணனுரைக்கும்; அங்ஙனமுரைப்பவன் 'புல்லலோம்பன்மின்; புலைமகனிவன், என, ஆபுத்திரன் நகை செய்து 'சாலிக்குத்தவறுண்டோ' என்றுரைத்து நகுவனனிற்ப, பூதி ஒவ்வானென்றுகடிதர, சிராமமெங்கணுங்கல்லிட, காவலன் மதுரை சென்றெய்தி வதிந்து ஏந்தி மறுகி இரைத்து ஊட்டி மிச்சிலுண்டு மடித்துக் கண்படை கொள்ளுமென விணமுடிவுசெய்க.

(பி - ம்.) ககஉ. 'பேணினரில் லோர்' ககச. 'தலையடித்து','தலையெடித்துக்' ககடு. 'கரவேன்றனென்'

பதினொன்காவது

பாத்திரமபுகூறியகாதை.

[பதினொன்காவது மணிமேகலைக்கு அறவணர் அமிர்தசுரபியென்னும் பாத்திரம் சிந்தாதேவி ஆபுத்திரற்குக் கொடுத்தவண்ணங் கூறிய பாட்டு.]

ஆங்கவற் கொருநா ளம்பலப் பீடிகைப்
பூங்கொடி நல்லாய் புகுந்தது கேளாய்
மாரி நடுநாள் வல்லிருண் மயக்கத்
தாரிடை யுழந்தோ ரம்பல மீஇத்
நு துயில்வோன் றன்னைத் தொழுதன ரேத்தி
வயிறுகாய் பெரும்பசி மலைக்கு மென்றலு

க. ஆங்கவற்கு - ஆபுத்திரனுக்கு; ஆங்கவன், ஒருசொல்; "ஈங்கிவள்" (திருக்கீீ: கக) என்புழிப்போல. அம்பலப்பீடிகை - அம்பலத்தில். அம் பலம் - பலருஞ்சென்று தங்குதற்குரிய பொதுவிடம். இதுமன்றமெனவுங் கூறப்படும். அம்பலப் பீடிகை: மணி. கஉ: கo எ; கச: நுக.

உ. நல்லாயென்றது, மணிமேகலையை. புகுந்தது - நேர்ந்தது.

க - உ. அவற்குப் புகுந்ததைக் கேள்.

ஙு. மாரிநடுநாள் - மழைத்துளிகளையுடைய இடையாமத்தில். வல்லி ருண்மயக்கத்து - வலிய இருட்கலப்பில்; 'இருண்மயக்கத்து' என்றதனால், நடுநாள் இடையாமமாயிற்று; "புதையிருள்கூர், நெறியா ருருள்பெற நாநடு காளிடை நீந்துதுமே" (தஞ்சை. உகஙு) எனவருதல் காண்க.

ச. அரியவழியில் வருந்தி வந்தோராகிய கூத்தர்முதலியோர் அம்பலத் தை யடைந்து; கூத்தர்முதலியோர் வந்து தங்குமிடம் அம்பலமென்பதை, "மன்றில் வதியுநர் சேட்புலப் பரிசிலர்" (மலைபடு. சகஙூ) என்பதனு லுணர்க.

நு. துயில்வோன்றன்னை - ஆபுத்திரனை.

சு. மலைக்கும் - மாறுபடுத்தும்; வருத்துமென்றபடி, "மலைத்தல் போ கிய சிலைத்தார் மார்ப" (புறநா. கo); "வயிறுகாய் பெரும்பசி வருத்தும்" (கள: நுள) என்று பின்னும் வருதல் காண்க.

ச - சு. உழந்தோர் மீஇத் தொழுதேத்திப் பசி மலைக்குமென்றலு மென்க.

(பி - ம்.) ச. 'அம்பலம் வினுவய்' சு. 'மலையுமென்றலும்', 'அலைக்கு மென்றலும்'

மேற்றா ணல்லது வேற்றா ணில்லோ
ஞற்றுவது காணு ஞரஞ ரெய்தக்
கேளிது மாதோ கெடுகநின் றீதென
கo யாவரு மேத்து மிருங்கலே நியமத்துத்
தேவி சிந்தா விளக்குத் தோன்றி
யேடா வழிய லெழுந்திது கொள்ளாய்
நாடிவறங் கூரினுமிவ் வோடிவறங் கூராது
வாங்குநர் கையகம் வருந்துத லல்லது
கநி தான்றெலே வில்லாத் தகைமைய தென்றே
தன்கைப் பாத்திர மவன்கைக் கொடித்தலுஞ்
சிந்தா தேவி செழுங்கலே நியமத்து

எ. ஏற்றாண் - இரந்துண்ணுமுணவு. வேற்றாண் இல்லோன் - வேறு உணவில்லாத ஆபுத்திரன்.

அ. ஆற்றுவது காணுன் - உதவும்வழியைக் காணுஞகி. ஆற்றுதல் - உதவுதல்; "ஒருவீ ரொருவீர்க் காற்றுதிர்" (புறநா. நுஅ.) ஆர் அஞர் - நீர்த் தற்கரிய வருத்தம்.

இனி ஆபுத்திரன் வருத்தம் தீரும்படி அவனுக்குச் சிந்தாதேவி அமுத சுரபியென்னும் பாத்திரங்கொடுத்தமை கூறுவார்.

கூ. இதுகேள். நின் தீதுகெடுக.

கo. யாவரும் ஏத்தும் - எச்சமயத்தினரும் துதிக்கும். நியமம் - கோயில். கலிநியமம்: மணி. கஉ : கoசு.

கக. தேவியாகிய சிந்தாவிளக்கு.

கஉ. அழியல் - வருந்தாதே. இதுகொள்ளாய் - இப்பாத்திரத்தைக் கொள்.

கஙு. வறங்கூரினும் - வற்கடம் மிகினும். வறம் - வற்கடம்; "ஞாலம் வறந்தீரப் பெய்யக் குணக்கோர்பு, காலத்திற் றோன்றிய கொண்மூப் போல்" (கலி. அஉ.) வறங்கூராது - வறுமையுறாது.

கநி. தான் என்றது, பாத்திரத்தை. என்று - என்றுசொல்லி.

கச - நி. மணி. கக : சுசு - நிo ; கஉ : நி - கூ.

எ - கசு. இல்லோன் ஆரஞரெய்தச் சிந்தாவிளக்கு 'நின்றீதுகெடுக' எனத்தோன்றி 'கொள்ளாய், கூராது, தகைமையது' என்று பாத்திரத்தைக் கொடுத்தலும்.

மேல்வருவன, பாத்திரம்பெற்ற மகிழ்ச்சியால் ஆபுத்திரன் சிந்தாதேவியைத் துதிக்குந்துதிகள்.

(பி - ம்.) கூ. 'நின்றீய்மை' கஉ. 'ஏடாபரியலெழுந்திதுகேளாய்' கஙு. 'இவரோடுவறங்' கநி. 'தான்றெலேவறியாத்தகைமையது'

நந்தா விளக்கே நாமிசைப் பாவாய்
வானோர் தலைவி மண்ணோர் முதல்வி
யேனை யுற்ற விடர்களை வாயெனத்
தான்றொழு தேத்தித் தலைவியை வணங்கி
யாங்கவர் பசிதீர்த் தங்நா டொட்டு
வாங்குகை வருந்த மன்னுயி ரோம்பலின்
மக்களு மாவு மரஞ்சேர் பறவையுங்
தொக்குட னீண்டிச் சூழ்ந்தன விடாஅ
பழுமரத் தீண்டிய பறவையி னெழுஉ
மிழுமென் சும்மை யிடையின் றெலிப்ப

கஅ. நந்தாவிளக்கே - கெடாததீபமே ; மைவிளக்கு அழிதன் மாலைத் தாதலின், 'நந்தாவிளக்கே' என்றான் ; இது தெரிதருதேற்றவுவமையென்னு மலங்காரம். இவள் வாக்கின்மடந்தையாதலின், 'நாமிசைப் பாவாய்' என்றான்.

கள - உ0. அடுக்கிய விளிகளாற் சிந்தாதேவிபால் ஆபுத்திரனுக்குள்ள அன்பின் மிகுதி விளங்கும்.

உக. தொழுது - அஞ்சலிசெய்து. தலைவி - சிந்தாதேவி.

ங - உக. மணி. உரு : கஙஉ - நிங.

உங. வாங்குகை வருந்த: (மணி.ககஎ: சசு.)மன்னுயிர் என்றார், விலங்கு முதலியனவும் உண்பிக்கப்படுதல் நோக்கி. ஓம்பலின் - பாதுகாத்தலினாலே.

உச. மாவும் - விலங்குகளும்.

உரு. உடன் தொக்கு ஈண்டி - ஒருமிக்கச்சேர்ந்து திரண்டு. விடா - விடாவாய்.

உசு. பழுமரத்து ஈண்டிய - பழுத்தமரத்தின்கணே வந்துகூடிய. பறவையின் - பறவைபோல; (பொநந. சுசு ; பெரும்பாண். உ0 ; புறநா. கஎங; நாலடி. உ0உ; சீவக. அஉஅ.) எழுஉம் - எழுப்புகின்ற.

உள. சும்மை - ஒலி. இடையின்று - இடையீடில்லாமல். இடை - இடையீடு; "எய்த்த லறியா திடையின்றி" பு - வே. பொதுவியல். சு.

உச - எ. மணி. உஅ: உஉஉ - ஙஉ.

உ0 - உள. ஆபுத்திரன் கானவாயெனத் தொழுது ஏத்தி வணங்கி அந் நாள்தொட்டு அவர் பசிதீர்த்து ஓம்பலின் விடாவாய் எழுஉஞ் சும்மை இடை யின்றெலிப்பவென்க.

மேலே, ஆபுத்திரனுடைய புண்ணிய மிகுதியைத் தனது பாண்டி கம் பளநாடுக்கத்தாலறிந்த இந்திரன் அவனுக்கு வரங்கொடுத்தற்பொருட்டு விருத் தவேதியன் வடிவுகொண்டுவருதலைக் கூறுவார்.

(பீ - ம்.) உச. 'அருஞ்சிறைப்பறவையும்'

வீண்டிரீர் ஞாலத் திவன்செய லிந்திரன்
பாண்டு கம்பளர் துளக்கிய தாதலிற்
கூ0 றளர்ந்த நடையிற் றண்டுகா வூன்றி
வளைந்த யாக்கையோர் மறையோ னுகி
மாயிரு ஞாலத்து மன்னுயி ரோம்பு
மாருயிர் முதல்வன் றன்முன் ரேன்றி

உக. டாண்டு கம்பளம் - வெள்ளைக்கம்பளமாகிய ஆசனம். துளக்கியது - நடுங்கச்செய்தது.

உஅ - க. ஆபுத்திரன் அறச்செயல் இந்திரனுடைய பாண்டுகம்பளத்தை நடுங்கச்செய்தது. இப்பூவுலகில் தானம், சீலம் முதலியவற்றிற் சிறந்த பௌத்தருளரானாலும், அவர்களுக்கு ஏதேனும் துன்பமுளதானாலும் இந்திரனுடைய பாண்டுகம்பளம் நடுங்குமென்றும், அக்குறிப்பால் அவற்றை யறிந்துவந்து அவர்களுக்கு வேண்டிய வரங்களைக்கொடுத்தலும் நீங்குகளை ஒழித்தலும் இந்திரனுடைய கடப்பாடென்றும் தெரிகின்றது; புத்தருரும வொழுக்கினையுடைய வணிகனொருவன் கப்பல்கவிழப்பெற்றுக் கடலில்வருந்தியதைத் தனதுபாண்டுகம்பளத்தின் நடுக்கத்தாலறிந்த இந்திரன் அவ்வணிகனை அத்துன்பத்தினின்றுநீக்கிப் பாதுகாத்தனனென்று இந்நூல் உக-ஆம்காதையில் (கஉ - உசு) வருதல்காண்க; "நமி விமி என்பாரிருவர்குமாரர் தபச்சரணம்பண்ணியருளாநின்ற பகவானை யடைந்து நமஸ்கரித்துக் கந்தபுஷ்பாதிகளாற்பூசித்து நானாவித ஸ்தோத்திரங்களை அதிமதுரமாகப் பாடிநின்று விண்ணப்பம் செய்வார்:—பகவானே, தம்மாற் புத்திரபௌத்திராதி பந்துஜனங்களுக்கு வேறுவேறு இராச்சியம் கொடுக்கப்பட்டன; யாங்கள் அப்பொழுது சந்நிதமாயினமல்லேம்; இப்பொழுது எங்களுக்கு விபவங்களைப் பிரஸாதித்தருளவேண்டுமென்று நிர்ப்பந்தித்துநின்று துதிப்ப, இதனைத் தானேந்திரன் தனது ஆசனங்கம்பித்தலில் அறிந்து கடிதுவந்து மனுஷ்யரூபத்தைக்கொண்டு பருவதம்போலச் சலியாது எழுந்தருளிநின்ற பகவானது தரியாதிசயத்தினைக்கண்டு விஸ்மிதனுமாய் பிரதக்ஷிணம்பண்ணித் துதித்துக் குமாரர்களை நோக்கிச் சொல்லுவான்" என்று ஸ்ரீபுராணத்துள்ள முதலாவது விருஷ்பதீர்த்தங்கரர்புராணத்தில் வருதலால், இப்படியே தனது ஆசனநடுக்கத்தால் அறியவேண்டுவனவற்றையறிந்து கல்லுயிர்களுக்குச் செய்யவேண்டுவனவற்றை இந்திரன் செய்வானென்று கூறுதல் சைனசம்பிரதாயமென்றும் தெரிகின்றது.

கூ0-கூக. தளர்ந்தநடையின் - நடை தளர்தலால்; தண்டுகால்ஊன்றி - தான்பிடித்தத்தண்டினையே காலாகவூன்றி; (நாலடி. கச.) வளைந்த யாக்கை மறையோன் ஆகி-கூனிய உடம்பையுடைய வேதியனாகி; "தளர்ந்த நடையிற் றண்டுகா வூன்றி, வளைந்த யாக்கை மறையோன்" (சிலப். கடு: சசு - நி.) ஆகி ஊன்றியென்க.

கூக. ஆருயிர்முதல்வன் - ஆபுத்திரன்; "ஆருயி ரோம்புகன்" எனவும், (பி - ம்.) உக. 'பாணதெனப் பவனத தளகதிய' கூக. 'யாக்கைமறையோனி'

யிந்திரன் வந்தே னியாது நின்கருத்
கூடு துன்பெருந் தானத் துறுபயன் கொள்கென
வெள்ளே மகன்போல் விலாவிற கக்கீங்
கெள்ளினன் போமென் றெடுத்துரை செய்வோ
னீண்டுச் செய்வினே யாண்டுநுகர்ந் திருத்தல்
காண்டகு சிறப்பினுங் கடவுள ரல்ல
சுo தறஞ்செய் மாக்கள் புறங்காத் தோம்புநர்
கற்றவஞ் செய்வோர் பற்றற முயல்வோர்
யாவரு மில்லாத் தேவர்கன் ஞட்டுக்

"அருந்தே மாந்த வாருயிர் முதல்வனே" எனவும், இவனே (குகூ, சுஅ) இக் காதையிலேயே பின்பு கூறுதல்காண்க.

நகூ. யாதுநின்கருத்து - உன்னுடைய எண்ணம் என்ன.

கூடு. தானங்கள் பலவற்றுள்ளும் சிறந்தமையின், அன்னதானம் பெருந் தானமென்னப்பட்டது. உறுபயன் - மிக்கபிரயோசனம். கொள்க என - கொள்கவென்று இந்திரன்சொல்ல.

இனி, இங்ஙனங்கூறிய இந்திரனுக்கு ஆபுத்திரன் விடைபகர்ந்தது கூறுவார்.

நசு. வெள்ளேமகன் போல் - பயனில்லாத சொல்லியுடையவன்போல; "வெள்ளேக் கோட்டி" என்பதற்கு 'பயனில்உரைக்கோட்டி' (சிலப். கo: ககஅ) என்று பொருள்கூறுவர் அரும்பதவுரையாசிரியர்.

நஎ. எள்ளுதல் - இகழுதல். போம், ஏவற்பன்மை. செய்வோன், பெயர்.

நஅ. ஈண்டுச்செய்வினே - இவ்வுலகத்துச்செய்யும் புண்ணியங்களின் பயனே. ஆண்டு - அவ்விடத்தில்.

நஅ - கூ. நுகர்ந்திருத்தல் காண்டகு - அனுபவித்திருத்தலேச் செய்தன்ற. நுங்கடவுளரென்னுன், தனக்கு அவர் அயலென்னுங்கருத்தால்; "நின்றநின் கார்மயி னன்னேயும்" (திருச்சிற். எசு) என்புழிப்போல.

சo. புறங்காத்தோம்பல்: மணி. கசு: கச.

சஉ. யாவருமில்லா - அறஞ்செய் மாக்கள் முதலியோர்களில் ஒருவரு மில்லாத.

நஅ - சஉ. தேவருலகம் வினேட்பயனனுபவிப்போர்க்கேயன்றி அறஞ் செய் மாக்கள் முதலியோர்க்கு இடமன்றென்பதை, "பொலம்பூங் காவி னன்னுட் டோருஞ், செய்வினே மருங்கி னெய்த லல்லதை, யுடையோ ரீதலு மில்லோ ரிரத்தலும், கடவ தன்மையிற் கையற வுடைத்து" (புறநா. நஅ) எனவும், "ஈவாருங் கொள்வாரு மில்லாத வானத்து, வாழ்வாரே வன்க ணவர்" (குறள். கoருஅ. பரி. உ - ம்), எனவும், 'ஈவாரும் ஏற்பாருமின்றி எல்லாரும் ஒரு தன்மையராதலின் (ஒப்புரவு) புத்தேளுலகத்து அரிதா யிற்று' (குறள். உகசு. பரி) எனவும் வருவனவற்றாலுணர்க.

(பி - ம்.) நசு. 'வெள்ளேகள் போல விலாவிற' நஎ. 'போன்மென'

கிறைவ ளுகிய பெருவிறல் வேந்தே
வருந்தி வந்தோ ரரும்பசி கனிந்தவர்
சரு திருந்துமுகங் காட்டுமென் றெய்வக் கடிஞை
யுண்டி கொல்லோ வுடுப்பன கொல்லோ
பெண்டிர் கொல்லோ பேணுநர் கொல்லோ
யாவையீங் களிப்பன தேவர்கோ னென்றலும்
புரப்போன் பாத்திரம் பொழிந்தாண் சுரந்தீங்
ருo கிரப்போர்க் காணு தேமாந் திருப்ப
கிரப்பின் றெய்திய கீணில மடங்கலும்

சஉ - கூ. "யாவரு.....பெருவிறல் வேந்தே" என்பது இகழ்ச்சி.

சச. மூ. மணி. உகூ : காகூரு.

சச - ரு. வந்தோரரும்பசி - வந்தோருடைய பொறுத்தற்கரியபசியை. கனிந்து - நீக்கி. அவர் திருந்துமுகங்காட்டும்-அவருடைய இனியமுகத்தை யான் காணக்காட்டும்; என்றது அவர் திருந்துமுகங்காட்டும் என் தெய்வக் கடிஞையேயமையும் ; உன்னுற் கொடுக்கப்படுவன எனக்கு இன்பஞ்செய்யா வாகலின், அவை வேண்டாவென் றவாறு ; "ஈத்துவக்கு மின்பம்" (குறள். உஉஅ) என்று வருதல்காண்க. காட்டும், முற்று. தெய்வக்கடிஞையென் றுன், வாங்குகர் கையகம் வருத்தலல்லது தான் தொலேவில்லாத் தன்மைத் தாதலின்.

சஅ. ஈங்கு அளிப்பன - எனக்கு அளிப்பன ; ஈங்கு, தன்மையை யுணர்த்திற்று ; "ஒழிக காம மீங்கென" (சீவக. எஉ) என்புழிப்போல. தேவர்கோன், விளி.

சசு - அ. உன்னுலளிக்கப்படுவன உண்டி முதலியவற்றுள் யாவை யென்று ஆபுத்திரன் இந்திரனே இகழ்ந்துகூறலும்.

கூஎ - சஅ. எடுத்துரைசெய்வோன் என்றலுமென்க.

இனி, தன்னே ஆபுத்திரன் அவமதித்தானென்று இந்திரன் சினந்து அவன் அன்னதானஞ்செய்தற்கு இடமில்லையாகும்படி மழைபெய்வித்து நாட்டை வளப்படுத்தி இரப்பாரை இல்லையாக்கியமை கூறுவார்.

சகூ. புரப்போன்பாத்திரம் - உயிர்களைப் பாதுகாப்பவனுடைய பிச்சைப் பாத்திரம்.

ருo. ஏமாந்திருப்ப - ஆபுத்திரன் உண்பித்தற்கு ஆசையடைந்திருக்கும்படி ; "அருந்தே மாந்த நெஞ்சம்" (புறநா. கoக.) என்பழுமிருப்ப வெனினுமமையும்.

ருக. கிரப்பு- வறுமை.

(பி - ம்.) சச. 'அருந்துபசிகளைந்து' சகூ. 'பொழிந்துணசுரபபுபு'

பரப்பு நீராற் பல்வளஞ் சுரக்கென
வாங்கவன் பொருட்டா லாயிரங் கண்ணே
னேங்குயர் பெருஞ்சிறப் புலகோர்க் களித்தலும்
நிரு பன்னீ ராண்டு பாண்டிநன் னாடு
மன்னுயிர் மடிய மழைவள மிழந்தது
வசித்தொழி லுதவ மாநிலங் கொழுப்பப்
பசிப்புயி ரறியாப் பான்மைத் தாகலி
னருயி ரோம்புந ணம்பலப் பீடிகை
சுo யூணெலி யரவ மொடுங்கிய தாகி .
விடருந் தூர்த்தரும் விட்டேற் றூளரு

நிசு. ஆங்கவன் பொருட்டு - ஆபுத்திரன்பொருட்டு; ஆங்கவன், ஒரு சொல்.

நிச. அளித்தலும் - இந்திரன் கொடுத்தலும்.

நிo - நிச. ஏமாந்திருப்பப் பெருஞ் சிறப்பை இந்திரன் அளித்தலும்.

நிசு. மணி. உஅ: கநிள.

நிரு - சு. பன்னிரண்டுவருடம் மழை வளத்தை இழந்ததாகிய பாண்டி நாடு.

நிள. வசி - மழை; (மணி க: எக); வசித்தொழிலுதவ: மணி. உஅ: உசுங.

நிஅ. பசிப்பு - பசித்தல்.

நிரு - அ. பாண்டிநன்னாடு பான்மைத்தாகலின்.

நிக. ஆபுத்திரன் பலநாளிருந்து அறஞ்செய்தற்கிடனுயதுபற்றி அம்பலம் அவனதாக்கூறப்பட்டது. அம்பலப் பீடிகை: மணி. கசு:கoள; கச: க.

சுo. ஊணெலி அரவம் - மக்களும் பாவும் பறவையும் ஒருங்குவந்து சோற்றை உண்ணுதலால் ஒலிக்கும்ஒலி. ஒலியரவம், வினைத்தொகை.

சுக. விடர் - நீயுடையையுடைய காமுகர்; ஒரு வித்தையையுடையவ ரென்றுகூறுவர்பிரதாபருத்திரீயமென்னும் வடநூலாசிரியர். தூர்த்தர்-பரத்தையை நுகருங் காமுகர். விட்டேற்றூளர் - இகழ்ந்து கடுஞ்சொற்சொல்லுவோர். விடருந்தூர்த்தரும்: (மணி. கநி: சுo); "விடருந் தூர்த்தரும் விட்டேறுரைப்ப" (பெருங். க: சுநி: உஉசு), 'சிற்றினமாவது விடரும் தூர்த்தரும் சுருமுள்ளிட்டகுழி' (குறள். சசு. அவ) என்றும், 'நகைவகையராகிய கட்பினராவார் விடரும் தூர்த்தரும் வேழம்பரும்போன்று பலவகையால் நகுவித்துத் தாம் பயன்கொண்டு ஒழிவார்' (குறள். அகள) என்றும் பரிமேலழகரெழுதியிருக்கின்றனர். இவ்வடியிலுள்ள விடர்முதலிய மூன்று பெயர்களுள் மூன்றுவதாகிய விட்டேற்றூளரென்பதற்குச் சரியாக முறையே 'நடர்', 'வேழம்பர்' என்பனவற்றைப் பரிமேலழகர் அமைத்திருத்தலே நோக்குமிடத்து விட்டேற்றூளரென்பதற்கு நடரென்றேனும் வேழம்பரென்றே

(பி - மீ.) நிசு. 'வளங்கரந்தது' நிள - அ. 'வசிதொழிலுதவமாநிலங் கொழுப்பசியுயிர்' நிஅ - சுங. 'பான்மையதாக, வட்டும்'

நடவை மாக்களு நகையொடு வைகி
வட்டுஞ் சூதும் வம்பக் கோட்டியு
மூட்டா வாழ்க்கை முறைமைய தாக
சுடு வாபுத் திரன்ரு னம்பல நீங்கி
யூரூர் தோறு மூண்போர் விளைஅ
யாரிவ னென்றே யாவரு மிகழ்ந்தாங்
கருந்தே மாந்த வாருயிர் முதல்வனே
யிருந்தாய் நீயோ வென்பா ரின்மையிற்
எ0 றிருவின் செல்வம் பெருங்கடல் கொள்ள
வொருதனி வருஉம் பெருமகன் போலத்
தானே தமியன் வருவோன் றன்முன்

னும் பொருள்கொள்ளுதல் பொருத்தமுடைத்தெனத் தோற்றுகின்றது. இனிச் சுற்றத்தினின்றும், நட்பினின்றும் நீங்கிப் பிறரையும் அவ்வண்ணம் செய்விப்போனே விட்டேற்றி யென்றல் வழக்கின்கண் உண்மையின், விட்டேற்றாரென்பதற்கு அத்தன்மையையுடையோரென்று பொருள்கூறினும் பொருந்தும்.

சுஉ. நடவை - வழி. வைகி - (விடார் முதலியோர்) தங்குதலால்.

சுங. வட்டு - உண்டையுருட்டுதல்; "அரங்கின்றி வட்டாடி யற்றே" (குறள். சஅக); "கல்லாச் சிறுஅர் நெல்லிவட் டாடும்" (நற்றிணை, ங.) வம்பக்கோட்டி - பயனில் சொற்களைச் சொல்லுவோர் கூட்டம்; "புல்லா வெழுத்திற் பொருளில் வறுங்கோட்டி" (நாலடி. கடுடு); "வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழிமின்" சிலப். ங0: ககஅ.

சுச. மூட்டா வாழ்க்கை - குறையாத வாழ்க்கை; "மூட்டா வின் பத்து முடிவுல கெய்தினர்" சிலப். கடு: கசஎ.

நுங - சுச. பீடிகை ஒடுங்கியதாகி முறைமையதாகவென்க.

சுசு. உண்போர் விளைஅய் - உண்போரைவினவி.

சுஎ. இகழ்ந்து - இகழ்தலால்.

சுஅ. அருந்தேமாந்த-பிறர் உண்ண ஆசைப்பட்ட; (மணி. கஅ: எஉ; புறநா. கஅக.) ஆருயிர்முதல்வனே - ஆபுத்திரனே.

சுகூ. நீ இருந்தாயோவென்று வினவுவோரில்லாமையால்.

சுஎ - கூ. இகழ்தலால்இன்மையின். எ0. செல்வத்தைக்கடல்கொள்ள.

எக. பெருமகன் - அரசன்; "பெருநில முழுதாளும் பெருமகன்" சிலப். க: ஙக.

எஉ. உண்போர் பலரிடையேயிருந்தோன் இப்போது மிகத்தனிமை யுற்றனென்பார் 'தானே தமியன் வருவோன்' என்று ஆசிரியர் இரங்கிக் (பி - ம்.) சுசு. 'உண்போர்வினவ' சுஅ. 'இருந்தேமார்ந்த' எ0. 'செல்வமொருகடல்' எஉ. 'தமியேவருவோன்'

மாநீர் வங்கம் வந்தோர் வணங்கிச்
சாவக நன்னாட்டுத் தண்பெயன் மறுத்தலி
எறி னூறுயிர் மடிந்த தூரவோ யென்றலு
மமரர்கோ னூணையி னருந்துவோர்ப் பெறுது
குமரி மூத்தவென் பாத்திர மேந்தி
யங்கங் காட்டுப் புகுவதென் கருத்தென
வங்க மாக்களொடு மகிழ்வுட னேறிக்
அo கால்விசை கடுகக் கடல்கலக் குறுதலின்
மாலிதை மணிபல் லவத்திடை வீழ்த்துத்

கூறினர்; இப்படியே, "காடேக்து பூஞ்சாரல் கடத்தான் காலிற் கழ லானே", "கானம் வழங்கன் மேவிக் காலின் னேகி னுனே" (சீவக. கஉஉ, கசகஉ) எனத் திருத்தக்கதேவர் கடத்துசென்ற சீவகனைப்பற்றி இரங்கிக் கூறியிருத்தல் காண்க.

எo - எஉ. "நயனுடையா னெல்கூர்ந்தா னுதல் செயுநீர, செய்யா தமை கலா வாறு" (உகக) என்னும் குறளை இவ்வடிகளிற் பொருளோடு ஒப்பிடுக.

எசு. மாநீர் - கடல். வங்கம் - கப்பல்.

எச. தண்பெயல் மறுத்தலின் - தண்ணியமழை இல்லாது போன மையால்.

எறி. னூன் உயிர்மடிந்தது - உடம்போடு கூடியவுயிர் அவ்வுடம்பினின் றும் நீங்கிற்று. என்றலும் - என்று வங்கம்வந்தோர் கூறலும்.

எசு. இந்திரன்கட்டளையினால் உண்போரைப்பெறுமல்; ஆணையிற் பெறுதென்க. ஆணை-கட்டளை. வரங்கொடுத்தற்குவந்த இந்திரனை ஆபுத்தி ரன் மதியாததுபற்றி இந்திரன் கோபங்கொண்டு இரப்போர் இலராகும் வண்ணம் நாடுவளஞ்சுரக்கும்படி மழைபெய்வித்தமையின், இங்ஙனங்கூறி னர்; இதனை, இக்காதையில் கூச - ஆம் அடிமுதலியவற்றாலுணர்க.

எள. குமரிமூத்த என்பாத்திரம் - ஒருகன்னிப்பெண் வதிதேமூத்தாற் போன்ற எனதுபாத்திரம்; கொடுப்போருங் கொழுதுமேயன்றித் தானும் பயனிழந்து கழிந்த குமரியை ஈண்டு உவமைகூறினமையின், தானும் ஏற் பாருமேயன்றிப் பாத்திரமும் பயனிழந்து கழிந்ததேயென்று ஆபுத்திரன் இரங்கியவாறுயிற்று; "அற்றார்க்கொன் றுற்றுதான் செல்வ மிகுகலம், பெற் றூடமியண்மூத் தற்று" (குறள். கoo஧); குமரிமூத்த: (மணி. உஉ: கசகூ.) பாத்திரம் - பாத்திரத்தை.

எஅ. அங்கக்காடு, இவை ஒருசொன்னீர்மைய. என் கருத்தென - என தெண்ணமென்று ஆபுத்திரனினைந்து.

அo. கால் - காற்று. அக. இதை - கப்பற்பாய்.

(பி - ம்.) எச - அ. 'சாவகநன்னாட்டுப்புகுவது பொருளென, வங்க' அo. 'கால்விசைகடுக்கிகடல்'

தங்கிய தொருநாட் டானுங் கிழிந்தன
னிழிந்தோ னேறின னென்றிதை யெடுத்து
வழங்குநீர் வங்கம் வல்லிருட் போதலும்
அடு வங்கம் போயபின் வருந்துதய செய்தி
யங்கு வாழ்வோர் யாவரு மின்மையின்
மன்னுயி ரோம்புமிம் மாபெரும் பாத்திர
மென்னுயி ரோம்புதல் யானே பொறேஎன்
றவந்தீர் மருங்கிற் றணித்துய ருழந்தேன்
கூ0 சுமந்தென் பாத்திர மென்றனன் றெழுது
கோமுகி யென்னுங் கொழுநீ ரிலஞ்சியி
னேரியாண் டொருநாட் டோன்றென விடுவோ
னருளறம் பூண்டாங் காருயி ரோம்புக
ருளெனி லவர்கைப் புகுவா யென்றுங்
கூரி குண்ணு நோன்போ யிர்பதிப் பெயர்ப்புழி
யங்கா ளாங்கவன் றன்பாற் சென்றே
னென்னுற் றனையோ வென்றியான் கேட்பத்

அஉ. ஒருநாள் கப்பல் தங்கியது.

எக - அஉ. ஏறி ஆங்கு இழிந்தனன். அசு. அங்கு-மணிபல்லவத்தில்.

அள. ஓம்பும், முற்று. பாத்திரம் மன்னுயிரோம்புமென்க.

அக. இப்பாத்திரமடைதற்கு முற்பிறப்பில் மிக்க நல்வினைசெய்த நான் அதனையொழிந்து பின்னர்ச் சிறிது தீவினையுஞ்செய்தபக்கத்தானே தனித்துத் துயர்தையுழந்தேன்; சிலப். கச: உசு.

கூ0. பாத்திரம் சுமந்து என் - ஏற்போரில்லாத இவ்விடத்தில் இப் பாத்திரத்தை யான்சுமத்தலால் வரும்பயன் யாது ?

கூஉ. ஓர்யாண்டொருநாளென்றது, வைசாகசுத்தபௌர்ணிமையை.

கூங. அருளறம் - தயாதர்மம்; மணி. டு : எடு - ஆம் அடிக்குறிப்பிற் காண்க.

கூச. புகுவாயென்று - புகுவாயென்று சொல்லிப் பாத்திரத்தைக்கோ முகியில் விடுத்து.

கூடு. பட்டினிவிட்டிருத்தலாகிய விரதத்தால் உயிரை விடுகையில்; "உண்ணு நோன்போ யிர்பதிப் பெயர்த்ததும்" சிலப். உள: அங.

கூள. யானென்றது, அறவணவடிகள். என் உற்றனையோ -யாதுதன்ப மடைந்தாயோ ?

(பீ - மீ.) அஉ. 'தயங்கியதொருநாட்' அஅ. :'யானேபோற்றேன்' கூக. "என்னுமிக்கொழுநீர்" கூச. 'கைச்செல்வாயென்றுங்கு'

தன்னுற் றனபல தானெடித் துரைத்தனன்
குணதிசைத் தோன்றிக் காரிருள் சீத்துக்
கஂ0 குடதிசைச் சென்ற ஞாயிறு போல
மணிபல் லவத்திடை மன்னுடம் பிட்டுத்
தணியா மன்னுயிர் தாங்குங் கருத்தொடு
சாவக மாளுந் தலைத்தாள் வேந்த
னுவயிற் றுதித்தன னுங்கவன் றனென்.

கச.—*பாத்திரமரபுகூறியகாதை முற்றிற்று.

கூஅ. தன்னுற்றனபல - தன்னையடைந்த பலதுன்பங்களை.

கூகூ. சீத்து - நீக்கி.

கஂ0. தன்னைப் பரிதணிக்கப்படாத நிலைபெற்ற உயிரைப்பாதுகாக்கும் எண்ணத்துடன்.

கஂகூ. தாள் - முயற்சி. வேந்தன் - பூமிசந்திரன்.

கஂச. ஆங்கவன் - ஆபுத்திரன்.

கஂகூ -ச. ஆபுத்திரனைப்பெற்ற பசு மண்முகனென்னு முனிவனிடத்த தாயினும் பூமிசந்திரனுடைய நாட்டகத்ததாதலின், 'வேந்தனு' எனப்பட்டது.

கஂ0 - ச. உயிர் உடம்பினீங்குங் காலத்து அதனுல் யாதொன்றுபாவிக்கப்பட்டது அஃது அதுவாய்த்தோன்றுமென்பது எல்லா நூல்களுக்கும் ஒத்த துணிபாகலின், 'மன்னுயிர் தாங்குங் கருத்தொடு, ஆவயிற் றுதித்தனன்' என்றார்; குறள். கூடுஅ - பரி. உரை.

க - கஂச. உழந்தோர் மலைக்குமென்றலும், இல்லோன் அருளெய்த, சிந்தாவிளக்குத் தோன்றிப் பாத்திரங்கொடுத்தலும், ஆபுத்திரன் ஓம்பலின், விடாவாய் ஒலிப்ப, இந்திரன்கொள்கென, உரைசெய்வோன் 'யாவையீக் களிப்பன தேவர்கோன்' என்றலும், ஆயிரங்கண்ணோன் உலகோர்க்களித்தலும், பாண்டிமாதேவி பான்மைத்தாகலின், பீடிகை முறைமையதாக, ஆபுத்திரன்நீங்கி உண்போரைவினவி என்பாரின்யையின் வருவோன் தன்முன் வந்தோர் மடிந்ததென்றலும்; வங்கமேறி இழிந்தனன்; வங்கம் வல்லிருட் போதலும் துயரெய்தி விடுவோன் புகுவாயென்று உயிர்பதிப்பெயர்ப்புழிச் சென்றேன் கேட்ப உரைத்தனன்; அவன் ஆவயிற்றுதித்தனனென விசை முடிவு செய்க.

(பி - ம்.) கூஅ. 'தன்னுறுதுன்பம்' கூகூ. 'காரிருள்தீத்து' கஂகூ. 'தலைத்தார்வேந்தன்' * 'அமுதசுரபியென்னும் பாத்திரமரபு கூறியகாதை முற்றும்'

பதினெந்தாவது

பாத்திரங்கொண்டுபிச்சைபுக்ககாதை.

[பதினெந்தாவது மணிமேகலை பாத்திரங்கொண்டு பிச்சைக்குப் பெருந்தெருப்போய பாட்டு.]

இன்னுங் கேளா யிளங்கொடி மாதே
யங்ஙா ளவனை யோம்பிய கல்லாத்
தண்ணென் சாவகத் தவள மால்வரை
மண்முக னென்னு மாமுனி யிடவயிற்
பொன்னின் கோட்டது பொற்குளம் புடையது
தன்னலம் பிறர்தொழத் தான்சென் றெய்தி
யீ முன்ன மின்னுயிர்க் கெல்லாந்
தான்முலை சுரந்து தன்பா லூட்டலு
மூன்று காலமுந் தோன்றகன் குணர்ந்த
வாண்ற முனிவ னதன்வயிற் றகத்து
மழைவளஞ் சுரப்பவு மன்னுயி ரோம்பவு
முயிர்கா வலன்வந் தொருவன் றோன்றுங்
குடர்த்தொடர் மாலை பூண்பா னல்ல
னடர்ப்பொன் முட்டை யகவையி னெனைனப்

உ. அங்ஙாள்-சாலியென்பவள் ஈரம்றுபோகட்டுப்போனகாளில்; (மணி. கஙூ : கo.) அவனை -ஆபுத்திரனை.

ஙூ. சாவகம் - சாவகநாடு. ஙி. கோட்டது - கொம்பையுடையது.

உ - அ. கல்லா, மாமுனியிடத்திற் கோட்டதாய்க் குளம்புடையதாய்ச் சென்றெய்தி உயிர்க்கெல்லாம் தன்பாலூட்டலுமென்க.

கo. முனிவன் - மண்முகன். அதன் வயிற்றகத்து - அப்பசுவயிற்றில்.

கஉ. உயிர்காவலனுகிய ஒருவன் வந்து தோன்றுவான்.

கo - கஉ. அதன்வயிற்றகத்துத் தோன்றுமென்க.

கச. பொன் அடர்முட்டை அகவையினுன் - பொற்றகட்டாலாகிய முட்டையின் உள்ளிடத்துள்ளான். எனை - என்று மண்முகமுனிவன்சொல்ல.

கஙூ-ச. அங்ஙனந்தோன்றுவோன்குடர்மாலை பூண்பானல்லன், முட்டை

(பி - ம்.) ச. 'மன்முகனென்னு' அ. 'ஙாண்முலை சுரந்துதன்பா லூட்டலும்' கo. 'ஆன்வயிற்றகத்து' கச. 'ஆவயிற்றுன்', 'அகவையிற்றுன்'

கடு பிணிநோ யின்றியும் பிறந்தறஞ் செய்ய
மணிபல் லவத்திடை மன்னுயிர் நீத்தோன்
றற்காத் தளித்த தகையா வதனே
யொற்கா வுள்ளத் தொழியா ஞதலி
னுங்கவ் வாவயிற் றமரார்கண முவப்பத்
உ0 தீங்கனி காவ லோங்குமித் தீவினுக்
கொருதா னுகி யுலகுதொழத் தோன்றினன்
பெரியோன் பிறந்த பெற்றியைக் கேணீ
யிருநில வேனிலி லெரிகதி ரிடபத்
தொருபதின் மேலு மொருமூன்று சென்றபின்
உடு மீனத் திடைநிலை மீனத் தகவையிற்
போதித் தலைவனெடு பொருந்திய போழ்தத்து
மண்ணக மெல்லா மாரி யின்றியும்
புண்ணிய நன்னீர் போதொடு சொரிந்தது
போதி மாதவன் பூமியிற் றோன்றுங்
கூ0 கால மன்றியுங் கண்டன சிறப்பெனச்

அகவையினனென ; "குடர்த்தொடர் மாலை சூழா தாங்கோ, ரடர்ப்பொன் மூட்டையு ளடங்கிய வண்ணமும் " (உடு : எஉ - கூ) என்பர் பின்னும்.

கடு. பிணிநோயின்றியும் - பிணியாலுளதாகும் வருத்தம் இல்லாதிருக்கவும்.

கசு. உயிர் நீத்தோன் - உயிரைத்துறந்தவனுகிய ஆபுத்திரன்.

கடு - சு. நோயின்றியும் அறஞ்செய்தற்பொருட்டு உயிர் நீத்தோனென்க; " உண்ண நோன்போ டுயிர்பதிப் பெயர்ப்புழி" (கச : கூடு) என்று முன்பு வந்திருத்தல் காண்க.

கஎ. தகை - அழகு; தகுதியுமாம்.

கஅ. ஒற்கா - தளராத; இஃது ஒல்காவென்பதன் விகாரம்; "ஒல்க வுள்ளமொ டொருபுடைத் தழீஇ" புறநா. கஉடு.

கசு - உக. நீத்தோன் அவ்வாவயிற்றுத் தோன்றினன்.

உஉ. பெற்றி - பேறு. உஉ - சு. ழ. மணி. கக: சo.

உக - சு. போழ்தத்துத் தோன்றினனெனவியையும்.

உகூ. போதிமாதவன் - புத்தன். கூo. சிறப்புக்கள் காரணப்பட்டன.

உகூ - கூo. புத்தன் தோன்றுங்காலத்து உளவாகுஞ் சிறப்புக்களை, மணி. கஉ : அசு - ஆம் அடி முதலியவற்றிற் காண்க.

(பி - ம்.) கஎ. 'தகையாத்தகுதி' உஉ. 'பெற்றியதுகேள்' உகூ. 'எறி கதிரிடபத்' உகூ. 'போதி நாதன்'

சக்கர வாளக் கோட்டம் வாழு
மிக்க மாதவர் விரும்பினர் வியந்து
கந்துடை நெடுநிலைக் கடவு ளெழுதிய
வந்திற் பாவை யருளு மாயிடை
நடு னறிகுவ மென்றே செறியிருட் சேறலு
மணிபல் லவத்திடை மன்னுயிர் நீத்தோன்
றணியா வுயிருயச் சாவகத் துதித்தன
னுங்கவன் றன்றிற மறவண னறியுமென்
றீங்கென் னுவை வருத்திய திதுகேண்
சம மண்ணுள் வேந்தன் மண்மூக னென்னும்
புண்ணிய முதல்வன் றிருந்தடி வணங்கி
மற்களை யில்லேன் மாதவ னருளாற்
பெற்றேன் புதல்வனை யென்றவன் வளர்ப்ப
வரைசாள் செல்வ மவன்பா லுண்மையி
சரு னிரைதார் வேந்த னுயின னவன்முன்
றுறக்க வேந்தன் றுய்ப்பிலன் கொல்லோ
வறக்கோல் வேந்த னருளிலன் கொல்லோ
சுரந்து காவிரி புரந்துநீர் பரக்கவு
நலத்தகை யின்றி நல்லுயிர்க் கெல்லா

நச. அந்தில் - அவ்விடத்து; ''அந்தி லரங்கத் தகன்பொழி லகவயின்'' சிலப். கக: சு.

உள - நடு. நீர்சொரிந்தது, சிறப்புக்கண்டனவென்று மாதவர் வியந்து அறிகுவமென்று பாவைபாற் செறியிருளிற் செல்லுதலுமென்க.

நக. என்னுவை வருத்தியதென்றது, முனிவர்களுக்கு ஆபுத்திரன்வர லாற்றை யான் சொல்லும்படி அப்பாவை செய்த தென்றவாறு.

சம. வேந்தன் - பூமிசந்திரன்.

சரு. நிரைதார், வினைத்தொகை. அவன்முன் - ஆபுத்திரன்முன். இதுகாறும் ஆபுத்திரன்றி,ரை கூறப்பட்டது.

சசு. துறக்கவேந்தன் - இந்திரன். துய்ப்பு இலன் கொல்லோ - அவி யுகர்ச்சி இலனையனே?

(பி - ம்.) நக. 'கோட்டக வாழு' நள. 'தணியாதுயருறுசாவகத்து' சக. 'திருந்தடிபொருந்தி' சஎ. 'அவன்வயினுண்மையி' சசு. 'துப் பிலன் கொல்லோ' சஅ. 'புரிந்து நீர்க்காக்கவும்'

நி0 மலத்தற் காலை யாகிய தாயிழை
வெண்டிரை தந்த வமுதை வாளே
ருண்டொழி மிச்சிலை யொழித்துவைத் தாங்கு
வறளே லிலகின் வான்றுயர் கெடுக்கு
மறளே டொழித்த லாயிழை தகாதென
நிரு மாதவ னுரைத்தலு மணிமே கலைதான்
ரூயர் தம்மொடு தாழ்ந்துபல வேத்திக்
கைக்கொண் டெடுத்த கடவுட் கடிஞையொடு
பிக்குணிக் கோலத்துப் பெருந்தெரு வடைதலு
மொலித்தொருங் கீண்டிய வூர்க்குறு மாக்களு
சுo மெலித்துகு நெஞ்சின் விடருந் தூர்த்தருங்

நி0. அலத்தற்காலை ஆகியது - வறுமைக்காலம் உண்டாயிற்று.

சசு - நி0. இப்படியே "செங்கோல் கோடியோ.....அறியேன்" (உஅ: கஅஅ - கக) என்று பின்வருதல் காண்க.

நிஉ. ஒழித்து வைத்தாங்கு - பயன்படுத்தாதுவைத்தாற்போல. மிச்சில் - மிகுதி.

நிங. வறன் ஓடு உலகு - வற்கடமான காலம்ப ரந்தவுலகம்; "வறளோ டின் வையகத்து வான்றருங் கற்பினுள்" கலி. கசு.

நிச. அறளொடொழித்தல் - அமுதசுரபியைப்பயன்படுத்தாதுவைத்தல்.

நிங - ச. மணி. உக: கநிஎ - அ. நிரு. மாதவன் - அறவணவடிகள்.

நிசு. தாயர் - மாதவி, சுதமதி. நிஎ. கடிஞை - பிச்சைப்பாத்திரம்.

நிஅ. பிக்குணிக்கோலத்து - பிக்குணிக்கோலத்துடன்; துறக்தோர்களில் ஆண்பாலாரைப் பிக்ஷுக்களென்றும், பெண்பாலாரைப் பிக்ஷுணிகளென்றுங்கூறுதல் பௌத்தசம்பிரதாயம்; கோலம் - வேடம்.

நிரு - அ. மணிமேகலை ஏத்திக் கடிஞையொடு கோலத்தோடு பெருந்தெருவடைதலுமென்க.

இனிப் பெருந்தெருவில் பிச்சைக்குப் போந்த மணிமேகலையின் பிக்குணிக் கோலத்தைக் கண்டோருடைய மனவருத்தத்தைக்கூறுவார்.

நிகூ. குறுமாக்கள் - அறிவில்லாத சிறியர்; "அடர்க்குறு மாக்கள்" (கஉ: சo) என்றார் முன்னும்; "ஊர்க்குறுமாக்கள்" (புறநா. கூச.)

சுo. மெலிந்து, மெலித்தென்றுயதுவிகாரம். விடருந் தூர்த்தரும்: மணி. கச: சுக.

(பி - ம்.) நிஉ. 'ஒளித்துவைத்தாங்கு' நிகூ. 'ஒளித்தொருங் கீண்டிய' சுo. 'விடமருந்தூர்த்தரும்'

கரு.—பாத்திரங்கொண்டு பிச்சைபுக்ககாதை.சுஎ

கொடிக்கோ சம்பிக் கோமக ஞகிய
வடித்தேர்த் தானை வத்தவன் றன்னை
வஞ்சஞ் செய்துழி வான்றோ விடூஇய
வுஞ்சையிற் ரோன்றிய யூகி யந்தண
சுரு னுருவுக் கொவ்வா வுறுநோய் கண்டு
பரிவுறு மாக்களிற் ரும்பரி வெய்தி
யுதய குமர னுளங்கொண் டொளித்த
மதுமலர்க் குழலாள் வந்து தோன்றிப்
பிச்சைப் பாத்திரங் கையி னேந்தியது
எ0 திப்பிய மென்றே சிந்தைநோய் கூர
மணமனை மறுகின் மாதவி யின்ற

சுக. கோசம்பி - கௌசாம்பிநகரம்; இது, முதலிற் குசாம்பனென் பவனுற் செய்யப்பட்டதாதலின் இப்பெயர்பெற்றதென்பர்; பாகதம்; "கொடியணி நெடுமதிற் கொடிக்கோ சம்பி" (பெருங். க: நிசு: எசு.) கோ மகனுகிய - அரசனுகிய.

சுஉ. வடி - திருத்தம்; "வானுட்கும் வடி நீண்மதில்" (புறநா. கஅ.) வத்தவன் - வத்ஸதேசத்தரசனுகிய உதயணன்; "வயங்குக குமரன் வத்தவர் கூரைப்ப" பெருங். க: சசு: அசு.

சுஉ - சூ. வத்தவன்றன்னை வஞ்சஞ் செய்துழி - (தனக்குத் திடீரெனொ டாததுபற்றிச் சினந்து சாலங்காயனனென்னும் தன்மந்திரியால் யந்திரயானை யைக்காட்டி வஞ்சமாகப்பிடிப்பித்துப் பிரச்சோதனனென்னு மரசன்) உத யணனைச் சிறைப்படுத்தியபொழுது.

சுச. உஞ்சையில் - உச்சயினிநகரத்தில்; இஃது அவந்திநாட்டிலுள் ளது; பிரச்சோதனனுடைய இராசதானி; இதையே அவந்தியென்றும் வழங் குவர். தோன்றிய - வேற்றுருவங்கொண்டு தோன்றிய; யூகியந்தணன் பிரமசுந்தர யோகியென்பவருடைய குமாரன்; உதயணனுடைய மந்திரிகள் ளொருவன்.

சுசு. பரிவுறுமாக்களில் - துன்பமுற்ற சனங்களைப்போல.

சுக - சூ. பிரச்சோதனன் உதயணனை வஞ்சித்துச் சிறைப்படுத்திய பொழுது அவனைச் சிறைமீட்டற்கு யூகியென்பவன் மாறுவடிவங்கொண்டு உச்சயினிநகரப்பெருந்தெருவையடைந்ததும், அவனைக்கண்டோர் பலரும் பரிவுற்றுச் சூழ்ந்ததுமாகியவிவற்றை உதயணகுமாரகாவியத்திலுள்ள உஞ் சைக்காண்டத்தாலுணர்க.

எ0. திப்பியம் - ஈண்டு ஆச்சரியமென்னும் பொருளைத்தந்து நின்றது. சிந்தைநோய்கூர - மனவருத்தமிக; சிந்தை - சித்தாகுலம்; "என்றுண் டாங் கொல்லினிக் கட்படு நாளெனுஞ் சிந்தையே" சீவக. ககடுக.

நிகூ- எ0. குறுமாக்களும் விடரும் தூர்த்தரும், மாக்களிற் பரிவெய்தி, குழலாள் தோன்றி ஏந்தியது திப்பியமென்று நோய்கூரவென்க.

வணிமலர்ப் பூங்கொம் பகமலி யுவகையிற்
பத்தினிப் பெண்டிர் பண்புட னிடீஉம்
பிச்சை யேற்றல் பெருந்தக வுடைத்தெனக்
எடு குளனணி தாமரைக் கொழுமலர் நாப்ப
ணெருதனி யோங்கிய திருமலர் போன்று
வான்றரு கற்பின் மனையுறை மகளிரிற்
ரூன்றனி யோங்கிய தகைமைய ளன்ரே
வாதிரை நல்லா ளவண்மனை யிம்மனை
அ0 நீபுகல் வேண்டு நேரிழை யென்றனள்
வடதிசை விஞ்சை மாநகர்த் தோன்றித்
தென்றிசைப் பொதியிலோர் சிற்றியாற் றடைகரை
மாதவன் றன்னுல் வல்வினை யுருப்பச்
சாவம் பட்டுத் தனித்துய ருறூஉம்

எஉ. பூங்கொம்பு - மணிமேகலை.

எஉ - சு. பூங்கொம்பு பத்தினிப்பெண்டிர் இடீம் பிச்சையேற்றல் பெருந்தகவுடைத்தெனக்கூற.

எடு - சு. மணி. சு : அ - கூ.

எள. வான்றருகற்பு - மழையைப் பெய்விக்குங்கற்பு ; " ஆங்கவை யொழிகுவை யாயி ஞயிழை, யோங்கிரு வானத்து மழையுரின் மொழியது" (உஉ : சுஅ - கூ) என்று பின்வருதல்காண்க; "தெய்வக் தொழாஅள் கொழு நற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யு மழை" (குறள். நிடு); "வதனே டின் வையகத்து வான் தருங் கற்பினுள்" கலி. கசு.

எசு - கூ. திருமலர்போன்று ஆதிரைகல்லாள் தான் தனியோங்கிய தகைமையளன்ரேவென்க.

அக. வடதிசை விஞ்சைமாநகர் - வடதிசையிலுள்ள வித்தியாதர நகர மாகிய காஞ்சனபுரத்தில்.

அஉ. பொதியில் - பொதியின்மலை.

அங. வல்வினையுருப்ப - வலியதீவினையழல ; உருப்ப - தோன்றவென் றுமாம்.

அங - சு. மாதவன் றன்னுற் சாபம்பட்டு.

(பி - ம்.) எஉ. 'பூங்கொடியகமலி' எள. 'வான்தருநிறப்பின்' எஅ. 'தனியோகியதகைமை' எகூ. 'நல்லாளகன்மனை' அஉ. 'தென்றிசைமருங்கினுள்' அங. 'மாதவன் றன்முன்'

அடு வீவில் வெம்பசி வேட்கையொடு திரிதருங்
காயசண் டிகையெனுங் காரிகை தானென்.

கடு.—பாத்திரங்கொண்டு பிச்சைபுக்ககாதை முற்றிற்று.

அசு. காரிகை - பெண்.

அக - சு. தோன்றி அடைகரையில் மாதவனைச் சாபம்பட்டுத் திரிதருங் காயசண்டிகையெனுங் காரிகையென்க; மணி. கள: உக - எசு; உ0:உஉ-சு.

அ0 - அசு. என்றனள் காயசண்டிகையெனுங்காரிகையென்க.

க - அசு. "மாதே, கேளாய்; நல்லா சென்றெய்தி ஊட்டலும், முனிவன் 'ஒருவன்றேன்றும் ; அவன் பூண்பானல்லன் ; அகவையினன்' என, நீத்தோன் ஒழியானதலின், ஒருதானாகிப் போழ்ததத்துத் தோன்றினன் ; அப் போழ்ததது னன்னீர் போதொடு சொரிந்தது ; மாதவர் வியந்து அறிகுவ மென்று பாவைபாற்சேறலும் அஃது 'அறவணஅடியும்' என்று என்னுவை வருத்திற்று ; இதுகேள் ; மண்ணுள்வேந்தன் வணங்கிப் பெற்றேனென்று வளர்ப்ப, உண்மையின், அவன் வேந்தனாயினன் ; அலத்தற்காலை ஆகியது ; ஒழித்தல் தகாது" என மாதவனுரைத்தலும், மணிமேகலை தாயொடு தாழ்ந்தேத்திக் கடிஞையொடு கோலத்தொடு பெருந்தெருவடைதலும், மாக்களும் விடரும் தூர்த்தரும் பரிவெய்தி திப்பியமென்று நோய்கூர, 'பூங்கொம்பு பெருந்தகவுடைத்து' என அதுகேட்டுக் காரிகை, 'நீ புகல்வேண்டும்' என் றனளென வினைமுடிவுசெய்க.

பதினாறுவது

ஆதிரைபிச்சையிட்டகாதை.

[பதினாறுவது மணிமேகலைக்கு ஆதிரையென்னும் பத்தினிப்பெண்டிர் பாத்தூணீத்தபாட்டு.]

ஈங்கிவள் செய்தி கேளென விஞ்சையர்
பூங்கொடி மாதர்க்குப் புகுந்ததை யுரைப்போ

க. ஈங்கிவள், ஒருசொல (திருச்சிற். கக.) இவள் - ஆதிரை.

க - உ. விஞ்சையர்பூங்கொடி - காயசண்டிகை. மாதர்க்கு - மணிமேகலைக்கு; ஆதிரைக்கென்றுமாம். மாதர்க்கு உரைப்போளென்க. புகுந்ததை- (ஆதிரைக்குச்) சம்பவித்ததை.

(பி - ம்.) க. 'ஈங்கென்செய்தி'

ளாதிரை கணவ ஞயிழை கேளாய்
சாதுவ னென்போன் றகவில ஞகி
நு யணியிழை தன்னே யகன்றனன் போகிக்
கணிகை யொருத்தி கைத்தூ ணல்க
வட்டிஞஞ் சூதினும் வான்பொருள் வழங்கிக்
கெட்ட பொருளின் கிழமே நுதலிற்
பேணிய கணிகையும் பிறர்நலங் காட்டிக்
கo காண மிலியெனக் கையுதிர்க் கோடலும்
வங்கம் போகும் வாணிகர் தம்முடன்
றங்கா வேட்கையிற் ருனுஞ் செல்வுழி
ருளியிரு முந்நீர் வளிகலன் வெளவ
வொடிமரம் பற்றி யூர்திரை யுதைப்ப
கரு நக்க சாரணர் நாகர் வாழ்மலைப்

ஈ - ச. கணவன் சாதுவனென்போன்.

நு. ஆதிரையைப் பிரிந்துசென்று.

சு. கணிகை - வேசை. கைத்தூண் - (நீய) ஒழுக்கத்தால் வந்த உணவு; கை - ஒழுக்கம்; "கடவ தன்றுநின் கைத்தூண் வாழ்க்கை" (சிலப். கரு: நுஎ.) கலகவெர்பதன்பின் 'உண்டு' என்று ஒருசொல் வருவிக்க.

எ. வட்டியும் சூதினும் - வட்டாடலிலும் சூதாடலிலும்; (மணி. கச: சுஈ.) வழங்கி - கொடுத்து.

அ. கணிகைக்கும் வட்டிக்கும் சூதிற்கும் கொடுக்கப்படுதல்பற்றி, 'கெட்டபொருள்' என்றார். பொருளின்கிளே - பொருளின்பகுதிகள்.

கo. காணமிலி - பொன்னில்லாதவன். கையுதிர்க்கோடலும்: உம், உடனிகழ்ச்சி; 'நீயெனப் பேச லோடும்.....மயங்கி வீழ்ந்தான்" (சீவக. ஈஅக) என்புழிப்போல. கையுதிர்க்கோடல்: மணி. ஈ : கoக; (நி: நுநி.

அ - கo. கேடுறுதலிற் கையுதிர்க்கோடலுமென்க.

கக. வாணிகர் - வியாபாரிகள்.

கஉ. தங்கா வேட்கை - பலவிடத்தும் செலலவேண்டுமென்ற விருப் பம். தாமென்றது, சாதுவனே.

கஈ. வளி - காற்று. கலன் - கப்பல். காற்றுக் கப்பல் கவிழ.

கச. ஒடிமரம் - பாய்மரத்தின் ஒடிந்ததுண்டம்; "கூம்பிற்ற துண்டந் தழுவிக் கிடந்தான்" (சீவக. நுகஈ.) உதைப்ப - செலுத்த ; " ஓடுந் திரைக ளுதைப்ப வுருண் டேருண்டு " சீவக. நுகசு.

கநி. ழ. மணி. கசு: ஈசு. நாகரென்பதன் பொருளை, மணி. அ: நுச - ஆம் அடிக்குறிப்பிற் பார்க்க. உடையில்லாமற் சஞ்சரிப்பவராதலின், நாகர், 'நக்கசாரணர்' னெப்பட்டார். நக்கம்=நக்கம் - திருவாணம். சாரணராகிய நாகர்.

பக்கஞ் சார்ந்தவர் பான்மைய ஞயின
ஞவாய் கேடிற நன்மரம் பற்றிப்
போயினன் றன்னே யிருயப் போந்தோ
ரிடையிருள் யாமத் தெறிதிரைப் பெருங்கட
உ0 லுடைகலப் பட்டாங் கொழிந்தோர் தம்மூடன்
சாதுவன் ருனுஞ் சாவுற் ருனென
வாதிரை நல்லா ளாங்கது தான்கேட்
டீரீ ரேயோ வொள்ளழ லீமங்
தாரீ ரோவெனச் சாற்றினள் கழறிச்
உடு சுடலைக் கானிற் ரெடுகுழிப் படித்து
மூடலை விறகின் முளியெரி பொத்தி
மிக்கவென் கணவன் வினைப்பய னுய்ப்பப்
புக்குழிப் புகுவே னென்றவள் புகுதலும்

கசு. பான்மை - பகுதித்தன்மை; மணி. கூ: ஈகூ.

கூ - கசு. கணவன் சாதுவனென்போன், அவன் ஆகிப் போகி உண்டி வழங்கிச் செல்வுழி வெளவுதலாற் பற்றிச் சார்ந்து அவர்பான்மையனுயினனென்க.

சாதுவன் கடலில் இறந்தானென்று கேட்ட ஆதிரையின்செய்தியை இனிக் கூறுவார்.

கஅ. போயினன் - சாதுவன். உய்ய - பிழைக்க.

கசு. இடையிருள்யாமத்து - இருளையுடைய இடையாமத்தில்; யாமம்-இரவு; "யாம மும்பக லும்மறி யாமையால்" சீவக. கஈடு.

உ0. மணி. கஅ : சுச ; சிலப். கடு : உஅ - கூ. உடைகலப்பட்டு - உடைந்தகப்பலில் அகப்பட்டு. ஒழிந்தோர் - இறந்தோர்.

உக. என - என்று சொல்ல. கஅ - உக. போந்தோர் சாவுற்றனென.

உஈ. ஈமம் - பிணஞ்சுடுதற்கு அடுக்கும் விறகடுக்கு ; மயானமுமாம்.

உச. தாரீர் - தருவீர்.

உடு. சுடலைக்கான் - மயானம். படித்து - செய்து. தொடுகுழிப்படித்தல்: மணி. சு: சுசு.

உசு. மூடலைவிறகு - மூறுக்கண்ட விறகு; "மூடலை யாக்கை முழுவலி மாக்கள்" (பெரும்பாண். சுக.) பொத்தி - மூட்டி; "நீயழற் பொத்தி" (உ: டுஈ) என்றுர் முன்னும்.

உஎ. உய்ப்ப - செலுத்த.

உஅ. புக்குழி - புக்கவிடத்து. அவள் - ஆதிரை.

கஅ - உஅ. போந்தோர் ஒழிந்தோர் தம்முடன் சாதுவனும் சாவுற்றனென, நல்லாள் அதுகேட்டுக் கழறிப் படித்துப் பொத்தி அதிற்புகுதலுமென்க.

படித்துடன் வைத்த பாயற் பள்ளியு
முடித்த கூறையு மொள்ளெரி யுருஅ
தாடிய சாந்தமு மசைந்த கூந்தலிற்
சூடிய மாலையுந் தொன்னிறம் வழாது
விரைமலர்த் தாமரை யொருதனி யிருந்த
திருவின் செய்யோள் போன்றினி திருப்பத்
தீயுங் கொல்லாத் தீவினை யாட்டியேன்
யாது செய்கே னென்றவ ளேங்கலு
மாதிரை கேளுன் னரும்பெறற் கணவனை
யூர்திரை கொண்டாங் குய்ப்பப் போகி
நக்க சாரணர் நாகர் வாழ்மலைப்
பக்கஞ் சேர்ந்தனன் பல்லியாண் டிராஅன்
சந்திர தத்த னெனுமோர் வாணிகன்
வங்கந் தன்னெடும் வந்தனன் றோன்று
நின்பெருந் துன்ப மொழிவாய் நீயென
வந்தாங் தோன்றி யசரீரி யறைதலு
மையரி யுண்க ணழுதுயர் நீங்கிப்
பொய்கைபுக் காடிப் போதுவாள் போன்று
மனங்கவல் வின்றி மனையகம் புகுந்தென்
கண்மணி யனையான் கடிதீங் குறுகெனப்
புண்ணிய மூட்டாள் பொழிமழை தருஉ

உகூ. பாயற்பள்ளி - படுக்கையிடம்.

ஈ0. உறுதி - உறுமல். ஈக. ஆடிய - பூசிய.

ஈஉ. வழாது - வழுவாமல். ஈங. தாமரை - தாமரைமலரில்.

ஈச. திருவின்செய்யோள் - திருமகள்; மணி. டுஃ சு.

ஈசூ. யாதுசெய்கேன் - என்னசெய்வேன் ? அவள் - ஆதிரை.

ஈள. அரும்பெறற்கணவன் - பெறுதற்கரியகணவன்.

சச. அந்தரம் - ஆகாயம். அசரீரி - அருவமாய் எங்கும் நிறைந்துள்ள முதற்றெய்வம்.

சசூ. போதுவாள் - வருவாள்.

சள. கவல்வு - கவலையடைதல். மனையகம் - மனையிடம்.

சஅ. கண்மணிமனையான் -கணவன்; (சிலப்.க:எடு.) உறுகவென்று.

சக. முட்டாள் - வழுவாளாய்; "புண்ணியமுட்டா" பட்டினப். உ0ச.

(பி - ம்.) உகூ. 'படுத்துடனமைத்தபாவனைப்பள்ளியும்' ஈஅ. 'கொண்டாங்குயிருயப்போகி' சச. 'அந்தரத்தொன்றி' சடு. 'அழியாநீங்கி', 'அழியாதுநீங்கி'

நிo மரும்பெறன் மரபிற் பத்தினிப் பெண்டிரும்
விரும்பினர் தொழூஉம் வியப்பின ளாயின
ளாங்கவள் கணவனு மலிலீ ரடைகரை
யோங்குயர் பிறங்க லொருமர நீழன்
மஞ்சுடை மால்கட வுழந்தநோய் கூர்ந்து
நிருு துஞ்சுதயில் கொள்ளவச் சூர்மலி வாழு
ருக்க சாரணர் நயமிலர் தோன்றிப்
பக்கஞ் சேர்ந்து பரிபுலம் பினனிவன்'
ரூனே தமியன் வந்தன னளிய
னூனுடை யிவ்வுடம் புணவென் றெழுப்பலு
சுo மற்றவர் பாடை மயக்கரு மரபிற்
கற்றன ஞதலிற் கடுந்தொழின் மாக்கள்
சுற்று நீங்கித் தொழுதுரை யாடி
யாங்கவ ருரைப்போ ரருந்திறல் கேளா
யீங்கெங் குருமக னிருந்தோ னவன்பாற்
சுருு போந்தரு ணீயென வவருடன் போகிக்

நிo. பெண்டிரும்: உம்மை, உயர்வு சிறப்பு.

நிக. வியப்பு - ஆச்சரியம். (ஆதிரை) வியப்பினளாயினள்.

மேலே சாதுவன் செய்திகூறுவார்.

நிஉ. கணவனும் - சாதுவனும். நிங. பிறங்கல் -மலை. நீழல் -நிழலில்.

நிச. நோய் கூர்ந்து - வருத்தமிகுந்து.

நிநி. துஞ்சுதயில்கொள்ள—(சாதுவன்) மிக்க நித்திரைகொள்ள. சூர் - அச்சம்.

நிசு. நயமிலர் - இனிமையில்லாதவர்.

நிள. பரிபுலம்பினன் - இவன் மிகவும் வருந்தினன்; "பக்க நீங்குமின் பரிபுலம் பினரென" (சிலப். கo: உஉசு); "பரிபுலம் பலைத்தும் வருத்தம் வீட" மலைபடு. சகூள.

நிகூ. எழுப்பலும் - சாதுவனை எழுப்பலும்.

சுo. அவர்பாடை - நாகர்களுக்குரிய பாஷையை.

சுக. கடுந்தொழின்மாக்கள் - நாகர்.

சுங. அருந்திறல் - பெறுதற்கரிய திறலையுடையாய்.

சுச. இருந்தோன், முற்று. சுநி. எனை - என்று நாகர்சொல்ல.

(பி - ம்.) நிங. 'ஓங்கியபிறங்கல்' நிச. 'மாக்கடவுழந்த' சுo. 'பாடையின்மயக்கற', 'மயக்குறு'

கள்ளடு குழிசியுங் கழிமூடை நாற்றமும்
வெள்ளென் புணங்கலும் விரவிய விருக்கையி
லெண்குதன் பிணவோ டிருந்தது போலப்
பெண்டிட னிருந்த பெற்றி நோக்கிப்
எ0 பாடையிற் பிணித்தவன் பான்மைய னுகிக்
கோடியர் மாநிழற் குளிர்ந்த பின்னவ
னீங்குநீ வந்த காரண மென்னென
வாங்கவற் கேகட வுற்றதை யுரைத்தலு
மருந்துத லின்றி யகலிட லுழந்தோன்
எரு வருந்தின னளியன் வம்மின் மாக்கா
ணம்பிக் கினையளோர் நங்கையைக் கொடுத்து
வெங்களு மூணும் வேண்டுவ கொடுமென
வவ்வுரை கேட்ட சாதுவ னயர்ந்து
வெவ்வுரை கேட்டேன் வேண்டே னென்றலும்
அ0 பெண்டிரு முண்டியு மின்றெனின் மாக்கட்

சுசு. குழிசி - பானை. கழிமூடைநாற்றமும் - மிக்க புலால்நாற்றமும்.

சுஎ. உணங்கல் - வற்றல்.

சுஅ. எண்கு - கரடி. பிணவு - பெண்கரடி; "பன்றி புல்வாய்" (தொல். மரபு. நூஅ) என்னும் சூத்திரத்தில் 'ஒன்றிய' என்றதனால், பிண வென்பது கரடிக்குங் கொள்ளப்பட்டது.

சுக. பெண்டு - மனைவி.

எ0. பாடையிற்பிணித்து - பாசையினாலே வயமாக்கி.

எக. கோடி - இவர்; நிழல் - நிழலில். அவன் - நாகர்களுடைய குரு மகன்.

எஉ. வந்தகாரணமென்னென - வந்தது யாதுகருதியென்று கேட்ப. வந்தகாரணம்:சிலப். க0: கசுசு.

எங. அவற்கு - குருமகற்கு.

எரு. அளியன் - அளிக்கத்தக்கான்; "அளியன் றானே முதுவா யிரவ லன்" புறந. உசஎ.

எஎ. என - என்று குருமகன் சொல்ல.

எரு - எ. மாக்காள், நம்பிக்கு வேண்டுவகொடுமென.

எஅ. அயர்ந்து - கவலையுற்று.

அ0. உண்டி - உணவு. இன்றெனின் - இல்லையாயின்.

(பி - ம்.) சுஉ. 'தொழுதுரையாடலும்' எக. 'குளிர்ந்தவன்பினன்' எங. 'ஆங்கவனகலிட' எசு. 'நங்கையைக்கொடுமின்'

குண்டோ ஞாலத் தறுபய னுண்டெனிற்
காண்குவம் யாங்களுங் காட்டுவா யாகெனத்
தூண்டிய சினத்தினன் சொல்லெனைச் சொல்லு
மயக்குங் கள்ளு மன்னுயிர் கோறலுங்
அடு கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்
பிறந்தவர் சாதலு மிறந்தவர் பிறத்தலு
மூறங்கலும் விழித்தலும் போன்ற துண்மையி
னல்லறஞ் செய்வோர் நல்லுல கடைதலு
மல்லறஞ் செய்வோ ருருகா கடைதலு
கூ0 முண்டென வுணர்தலி னுரவோர் களைந்தனர்
கண்டனை யாகெனக் கடுகுகை யெய்தி
யுட்ம்புவிட் டோடு முயிருருக் கொண்டோ
ரிடம்புகு மென்றே யெமக்கீங் குரைத்தா
யவ்வுயி ரெவ்வணம் போய்ப்புகு மவ்வகை
கூடு செவ்வன மூரையெனச் சினவா திதுகே
ளுற்றதை யுணரு முடலுயிர் வாழ்வுழி

அக. உறுபயனுண்டோ. அஉ. காண்குவம் - அறிவேம்.

அங. சினத்தினன் சொல்லெனை - கோபமுடையவனுப், சொல்வா யென்று நாகருடைய குருமகன்கேட்ப. சொல்லும் - (சாதுவன்) சொல்லு வான்.

அடு. கயக்கு - கயங்குதல்; "கயக்கறு மல்லறம்" (கக: கஅ) என்றுர் முன்னும்.

அச - டு. கள்ளையும் கொலையையும் அறிவுடையோர் நீக்கினர்.

அசு - எ. இவ்வடிகள், "உறங்குவது போலுஞ் சாக்காடுறங்கி, விழிப் பது போலும் பிறப்பு" (நஉக) என்னும் குறளின் பொருளைத் தழுவி வந் திருத்தல் காண்க.

அகூ. அல்லறம் - பாவம்; அறமல்லாததென்றபடி.

கூ0. உரவோர் - அறிவுடையோர்.

அள - கூ0. உண்மையின், உணர்தலின் உரவோர் களைந்தனர்.

கூக. கண்டனையாக - அறிந்தாயாகுக. என - என்று சாதுவன் சொ ல்ல. கடுகுகை - பெருஞ்சிரிப்பு.

கூடு. செவ்வனம் - நேரே; "திருவிரி பூம்பொழிற் செவ்வனஞ் சேர் ந்து" (சீவக. டுகடு.) என - என்று குருமகன்சொல்ல.

கூசு. உயிர்வாழ்வுழி உடல் உற்றதையுணரும்.

(பி - ம்.) அக. 'உண்டோமாக்கட்குறுபய' அங - சு. 'சொல்லலு மயக்கும்'

மற்றைய வுடம்பே மன்னுயிர் கீங்கிடிற்
றடிந்தெரி யூட்டினுந் தானுண ராதெனி
னுடம்பிடைப் போனதொன் றுண்டென வுணர்நீ
போனர் தமக்கோர் புக்கிலுண் டென்ப
தியானே வல்லே னியாவரு மூணர்குவ
ருடம்பீண் டொழிய வுயிர்பல காவதங்
கடந்துசேட் சேறல் கனவினுங் காண்குவை
யாங்கனம் போகி யவ்வுயிர் செய்வினை
பூண்ட யாக்கையிற் புகுவது தெளிநீ
யென்றவ ணுரைத்தலு மெரிவிழி நாகனு
நன்றறி செட்டி நல்லடி வீழ்ந்து
கள்ளு மூனுங் கைவிடி னிவ்வுடம்
புள்ளுறை வாழுயி ரோம்புத லாற்றேன்
றமக்கொழி மரபிற் சாவுறு காறு
மெமக்கா நல்லற மெடுத்துரை யென்றலு
நன்று சொன்னாய் நன்னெறிப் படர்குவை
யுன்றனக் கில்லு நெறியற மூரைக்கே
னுடைகல மாக்க ளுயிருய்ந் தீங்குறி
னடுதொழி லொழிந்தவ ராருயி ரோம்பி

கூஅ. தடிந்தது - வெட்டி. கoo. புக்கில - புகுமிடம்.

கoஉ. காவதம் - காதம். கoங. சேண் - நெடுந்தூரம்.

கoஉ - ஙு. உயிர்சேறல கீனவினுங் காண்குவை.

கoச - ஞி. உயிர் புகுவது.

கoசு. அவன் - சாதுவன். கoஎ. நன்று - தருமம்.

ககo. தமக்கொழிமரபின் - தமக்கென்றேநீர்ந்தமுறைமையினேயுடைய.

ககo - கக. மரபினேயுடைய நல்லறமென்க.

கoசு - கக. நாகனும் எடுத்துரையென்றலும்.

ககஉ. படர்குவை - செல்வாய்.

ககங. ஒல்லும்நெறி - இயலும் வழி; இவ்வடி, "ஒல்லும் வகையா னறவினே யோவாதே, செலலும்வா யெல்லாஞ் செயல்" (ஙூ) என்ற குறளின் கருத்தைத்தழுவி வந்தவாறு காண்க.

ககஞி. அடிதொழில் - கொல்லுந்தொழில்.

(பி - மீ.) கoஎ. 'நன்னெறிச்செட்டி தன்னடி' ககo- கக. 'என்றனைக் கொழிய தேமுறு மேகநாகன்றிநல்லற' ககஉ. 'நன்றிது சொன்னாய்'

மூத்துவிளி மாவொழித் தெவ்வுயிர் மாட்டுங்
தீத்திற மொழிகெனச் சிறுமக னுரைப்போ
னீங்கெமக் காகு மிவ்வறஞ் செய்கே
மாங்குனக் காகு மரும்பொருள் கொள்கெனப்
கஉ0 பண்டும் பண்டுங் கலங்கவிழ் மாக்களை
யுண்டே மவர்த முறுபொரு ளீங்கிவை
விரைமர மென்றுகில் விழுநிதிக் குப்பையோ
டிவையிவை கொள்கென வெடித்தனன் கொணர்ந்து
சந்திர தத்த னென்னும் வாணிகன்
கஉ டு வங்கஞ் சேர்ந்ததில் வந்துட னேறி
யிங்ஙகர் புகுந்தீங் கிவளொடு வாழ்ந்து
தன்மனை நன்பல தானமுஞ் செய்தன
ளுங்கன மாகிய வாதிரை கையாற்
பூங்கொடி நல்லாய் பிச்சை பெறுகென
கஙo மனையகம் புகுந்து மணிமே லேதான்
புனையா வோவியம் போல நிற்றலுங்
தொழுதுவலங் கொண்டு துயரறு கிளவியோ
டமுத சுரபியி னகன்சுரை நிறைதரப்

ககசு மூத்துவிளிமா - முதுமையுற்று இறக்கும் விலங்குகள்.

ககள. தீத்திறம் - கொலை. என - என்று சாதுவன் சொல்ல.

கஉஉ. விரைமரம் - சந்தனம் அகில் முதலியன.

கஉஙூ. எனை - என்று நாகன் சொல்ல.

ககள - உங. உரைப்போன் இவையிவை கொள்கென்வென்க.

கஉடு. வங்கஞ்சேர்ந்ததில் - சேர்ந்த கப்பலில்.

கஉஅ. ஆங்கனமாகிய - அத்தன்மையை உடையளாகிய.

உ - கஉக. உரைப்போள் பிச்சை பெறுகெனவென்க.

கஙக. பிச்சைவாங்கும்பொழுது துறவறத்தினர் மௌனமாக நிற்க வேண்டுமென்பது விதியாதலின், 'புனையா வோவியம் போல நிற்றலும்' என்றார். புனையா வோவியம்: மணி. உஉ: அஅ.

கஙo - ஙக. மணிமேகலைதான் நிற்றலும்.

கஙஙூ. அகன்சுரை: மணி. ககஃ ககள.

(பி - மீ.) கஉo. 'பண்டுபண்டீங்குக்கலங்' கஉஅ. 'ஆயிழைகையாற்' கஙஙூ. 'சுரபியினகனசுரை'

பாரக மடங்கலும் பசிப்பிணி யறுகென
கரு வாதிரை யிட்டன ளாருயிர் மருந்தென்.

கசு.—ஆதிரை பிச்சையிட்டகாதை முற்றிற்று.

கருரு. ஆருயிர்மருந்து - அன்னம்.

கரூ - ரு. நிறைதர இட்டனளென்க.

க - கருரு. உரைப்போள், 'ஆங்கனமாகிய ஆதிரைகையாற் பிச்சை பெறுக' என்று சொல்ல, மணிமேகலை மனையகம் புகுந்து நிற்றலும், ஆதிரை தொழுது வலங்கொண்டு ஆருயிர் மருந்திட்டனளென முடிக்க.

பதினேழாவது

உலகவறவிபுக்ககாதை.

[பதினேழாவது மணிமேகலை
காயசண்டிகையென்னும் விச்சாதரிவயிற்று யானைத்தீயவித்து
அம்பலம்புக்கபாட்டு.]

பத்தினிப் பெண்டிர் பாத்தூ ணேற்ற
பிச்சைப் பாத்திரப் பெருஞ்சோற் றமலை
யறத்தி னீட்டிய வொண்பொரு ளறவோன்
றிறத்து வழிப்படூஉஞ் செய்கை போல

க. பத்தினிப்பெண்டிர் - ஆதிரை. பாத்தூண் - (இயல்புடைய மூவர் முதலாயினர்க்கும் தென்புலத்தார்முதலிய மால்வர்க்கும்) பகுத்துக்கொடுத்து உண்ணப்படும் உணவு; பாத்தல் - பகுத்தல்; இதனால், ஆதிரையின் இல்வாழ்க்கைநலம் கூறப்பட்டது; "பழியஞ்சிப் பாத்தூண் ணுடைத்தாயின் வாழ்க்கை, வழியெஞ்ச லெஞ்ஞான்று நில்" (குறள். சசு.) பெண்டிரது பாத்தூண்.

உ. அமுதசுரபியிலுள்ள பெரிய சோற்றுத்திரளை; அமலை - சோற்றுத்திரளை; "அமலைக் கொழுஞ்சோறு" புறநா. கூசு.

க - உ. ஏற்ற பாத்திரம்.

ங. அறத்தின் ஈட்டிய -நல்வழியே சம்பாதித்த. ஒண்பொருள்: குறள். எசுo.

ஙூ - சு. அறவோன் திறத்து வழிப்படூஉம் செய்கை போல - அறவோனிடத்துப் பெருகுதலுறுஞ் செய்கையைப்போல; அறவோன் - சற்பாத்திரம் (பி - ம்.) க. 'பாத்தூணீய்த்த'

நு வாங்குகை வருந்த மன்னுயிர்க் கவித்துத்
தான்றெரீஇ வில்லாத் தகைமை நோக்கி
யாஅத் தீநோ யகவயிற் படக்கிய
காயசண் டிகையெனுங் காரிகை வணங்கி
நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி
கo யடலரு மூக்கீ ரடைத்த ஞான்று
குரங்குகொணர்ந் தெறிந்த நெடுமலை யெல்லா
மணங்குடை யளக்கர் வயிறு புக்காங்
கிட்ட தாற்றுக் கட்டழற் கடும்பசிப்
பட்டே னென்றன் பழவினைப் பயத்தா

ரம். தானப்பொருள் பாத்திரத்தில் பெருமைக்குத்தக்கபடி பெருகுதலுறுமென்பதை, "விருந்திற், றுணைத்துணை வேள்விப் பயன்" (குறள். அஎ), "அறப்பயனும், தான்சிறி தாயினுந் தக்கார்க்கப் பட்டக்கால், வான்சிறிதாப் போர்த்து விடும்" (நாலடி. நஅ) எனவருவனவற்றாலுணர்க.

சு. தகைமையை (காயசண்டிகை) நோக்கி.

உ - சு. ஒண்பொருள் வழிப்படுஉஞ்செய்கைபோலப் பெருஞ்சோற் றமலைதான் தொலைவில்லாத்தகைமையை நோக்கியென்க.

எ. யாஅத்தீநோய் - பஸமகவியாதி.

அ. காரிகை மணிமேகலையைவணங்கி.

கூ. நெடியோன் - திருமால். மயங்கி - பருவதமுனிவரும் நாரதமுனிவரும் அம்பரீடனுக்கிட்டசாபமாகிய அந்தகாரத்தைத் தான் ஏற்றுக்கொண்டமையால் மயக்கமுற்று. தோன்றி - இராமனுக அவதரித்து. நெடியோன் நிலமிசைத் தோன்றிமயங்கியெனமாற்றுக. திருமால் இராமனுக அவதரித்தபொழுது, முற்கூறிய சாபாந்தகாரத்தால் மயக்கமுற்றிருந்தா ரென்பதைப் பின்வருஞ் செய்யுளாலுணர்க; "கண்ணி யங்குழாய்க் கமலலோசனன்றய ரதற்கு, மண்ணு நன்மக னெனியே வந்தன னுதித்து, முன்னை யந்தக ரத்தினுன் மூடிடப் பட்டுத், தன்னை மாயலென் றறிந்திடா துறைந்தனன் சார்ந்தே" (இலிங்க. உத்தர். அம்பரீடன் ஆழிகாத்தவத்தியாயம், அறு.)

கo. மூக்கீர் - கடல. அடைத்த ஞான்று - இலங்காநகரஞ்செல்ல அடைத்தநாளில்.

கஉ. அணங்கு - வருத்தம்; தெய்வத்தன்மையுமாம். அளக்கர் - கடல். புக்காங்கு - புகுந்தாற்போல.

கக - உ. மலையெலலாம் அளக்கர் வயிறுபுக்காங்கென்க.

கங. இட்டது ஆற்று - இட்டபொருளால் தணியாத.

கச. பட்டேன் - அடைந்தேன். வினைப்பயத்தாற் பட்டேனென்க.

(பி - ம்.) நு - சு. 'அளிக்கத்தான்' கூ. 'நெடுமான்மயங்கி'

கரு லன்னை கேணீ யாருயிர் மருத்துவி
துன்னிய வென்னெய் துடைப்பா யென்றலு
மெடுத்த பாத்திரத் தேந்திய வமுதம்
பிடித்தவள் கையிற் பேணினள் பெய்தலும்
வயிறுகாய் பெரும்பசி நீங்கி மற்றவ
உo யெர நீங்கித் தொழுதன ளுரைக்கு
மாசில் வாலொளி வடதிசைச் சேடிக்
காசில்காஞ் சனபுரக் கடிநக ருள்ளேன்
விஞ்சையன் றன்னெடென் வெவ்வினை யுருப்பத்
தென்றிசைப் பொதியில் காணிய வந்தேன்
உரு கடிவர லருவிக் கடும்புனல் கொழித்த
விடிமணற் கானியாற் றியைந்தொரு கிருந்தேன்

கரு. ஆருயிர் மருத்துவி - அரிய உயிரைப் பாதுகாக்கும் மருந்தை யுடையாய்; ஆருயிர்மருந்து - அன்னம்.

கசு. துன்னிய - நெருங்கிய. என்னெய் - எனது பஸ்மக வியாதியை. என்றலும் - என்று காயசண்டிகை சொல்லலும்.

சு - கசு. காரிகை, நோக்கி வணங்கி 'என்னெய் துடைப்பாய்' என்றலு மென்க.

கஎ. அமுதம் - அன்னத்தை.

கஅ. அவள்கையில் - காயசண்டிகையின்கையில். பிடித்துப்பெய் தலும்.

கக. அவள் - காயசண்டிகை. உo. தொழுது உரைப்பாள்.

ககூ - உo. அவள் நீங்கி நீங்கித்தொழுது உரைக்கும்.

உக. வாலொளி - வெள்ளிய ஒளி. சேடி - வித்தியாதரருலகு. சேடி வெள்ளிமலைக்கண் உள்ளதாதலின், அதற்கு வாலொளி கூறப்பட்டது; "வெள்ளி யால்வரை வியன்பெருஞ் சேடி" சிலப். சு: க.

உஉ. காசு - குற்றம். காஞ்சனபுரமாகிய காவலையுடைய நகரம்.

உங. விஞ்சையன் - கணவனாகிய வித்தியாதரன். உருப்ப - தோற்ற; அழலவெண்ணுமாம்.

உச. பொதியில் - பொதியின்மலை. காணிய - காணுதற்கு.

உஙூ - ச. விஞ்சையனெடு வந்தேன்.

உரு. கடிவரல் - விரைந்துவருதல். கொழித்த - தெள்ளிய.

உசு. கான்யாறு - காட்டாறு. ஒருங்கிருந்தேன் - கணவனுடனிருந் தேன்.

உச - சு. வந்தேன் கான்யாற்றிருந்தேனென்க.

(பி - மீ.) கசு.'துன்னியவெந்நோய்' உஉ. 'காஞ்சனக்கடிநகர்', 'காஞ் சனபுரநகர்' உச. 'காணியவருவேன்'

புரிநூன் மார்பிற் றிரிபுரி வார்சடை
மரவுரி யுடையன் விருச்சிக னென்போன்
பெருங்குலைப் பெண்ணைக் கருங்கனி யினையதோ
கூ0 ரிருங்கனி நாவற் பழமொன் றேந்தித்
தேக்கிலை வைத்துச் சேணுறு பரப்பிற்
பூக்கமழ் பொய்கை யாடச் சென்றோன்
றீவினை யுருத்தலிற் செருக்கொடு சென்றேன்
காலா லந்தக் கருங்கனி சிதைத்தே
கூடு ணுண்டல் வேட்கையின் வருஉம் விருச்சிகன்
கண்டன னென்னைக் கருங்கனிச் சிதைவுடன்
சீர்திகழ் நாவலிற் றிப்பிய மான
தீரா முண்டி லொருகனி தருவ
தக்கனி யுண்டோ ராறீ ராண்டு
சூ0 மக்க ளியாக்கையின் வரும்பசி நீங்குவர்
பன்னீ ராண்டி லொருநா ளல்ல

உஎ. புரிநூல் - முப்புரிநூல். திரிபுரிவார்சடை - திரித்து முறுக்கிய நீண்டசடை.

உஅ. மரவுரியுடையன் - வற்கலையாகிய ஆடையையுடையன். உடைய ஞகிய விருச்சிகனென்போன்.

உகூ. பெண்ணை -பனை. கருங்கனி -கரியகனி; பெரியகனியென்றுமாம்.

கூ0. இருமை - பெருமை. நாவல் - சம்புமரம்.

கூக - உ. சேண்நாறுபூ ; சேண் - நெடுந்தூரம். பரப்பினையுடைய பொய்கை. ஆட - நீராட.

உஅ - கூஉ. விருச்சிகனென்போன், நாவற்பழமொன்றையேந்தி வைத்துப் பொய்கையாடச் சென்றேனுகவெனக.

கூகூ. உருத்தலின் - பயன்கொடுப்பத்தோற்றுதலினுல். செருக்கு - களிப்பு.

கூங - ச. உருத்தலிற் சென்று காலால் அந்தக்கனியைச்சிதைத்தேன்.

கூடு. வேட்கை - விருபபம்.

கூசு. கருங்கனிச்சிதைவுடன் என்னைக் கண்டனன்.

மேல்வருவன விருச்சிகன்கூற்று.

கூஎ. திப்பியம் - தெய்வலோகத்திலிருந்து உண்டாயது. திவ் - தெய் வலோகம்; மணி. எ: கூஏ.

கூஅ. ஆண்டு - வருடம். கூக - சூ0. உண்டோர் பசியை நீங்குவர்.

(பி - ம்.) கூக. 'வைத்துச்செலுற்றுப்பரப்பிற்' கூஎ - அ. 'திப்பிய மாகிய வீராறு'

துண்ணு நோன்பினே னுண்கணி சிதைத்தா
யந்தரஞ் செல்லு மந்திர மிழந்து
தந்தித் தியாற் றனித்துய ருழந்து
சடு மூங்கா லாண்டின் முதிர்கனி நானீங்
குண்ணு நாளுன் னுறுபசி களைகென
வங்கா ளாங்கவ னிட்ட சாப
மிங்நாள் போலு மிளங்கொடி கெடுத்தனே
வாடுபசி யுழந்து மாமுனி போயபின்
நுo பாடிமி ழருவிப் பயமலை யொழிந்தெ
னலவலைச் செய்திக் கஞ்சின னகன்ற
விலகொளி விஞ்சயன் விழுமமோ டெய்தி
யாரணங் காகிய வருந்தவன் றன்னைற்
காரண மின்றியுங் கடுகோ யுழந்தனே
நுடு வாளா டெழுகென மந்திர மறந்தே

சஉ. நோன்பு - விரதம். சிதைத்தாய் - அழித்தாய்.

சங. மந்திரத்தை இழந்து.

சச. தந்தித்தீ - பஸ்மகவியாதியென்று வழங்குகிற யானைத்தீயென்னும் நோய்; (சீவக. கூகூசு.) தனித்துயர் - ஒப்பற்றதுன்பம்.

சடு. மூங்காலாண்டு - பன்னிரண்டுவருடம்.

சசு. உறுபசி -மிக்க பசியை. களைகென - நீக்குகவென்று.

சஎ. அவன் - விருச்சிகன். சாபம் - சாபத்தை; சாபத்தின் முடிவெல்லையாகிய நாளென்றுமாம் ; ஆகுபெயர்.

சஎ - அ. இளங்கொடி, சாபத்தைக் கெடுத்தனே.

சகூ. உழந்து - வருந்தி. முனி - விருச்சிகன்.

நுo. ஒலி முழங்குகின்ற அருவியாலுண்டாகிய பிரயோசனத்தையுடையபொதியின்மலையை. பாடிமிழ் : புறநா. சகூ.

நுக. அலவலைச்செய்திக்கு - மனத்திற்றோற்றியதை ஆராயாதுசெய்த (என்) செய்கைக்கு ; "அலவலைவன் தப்பூச்சி காட்டுகின்றான்" (உ. க : உ;) "பலபல நாழஞ் சொல்லிப் பழித்த சிசுபாலன் றன்னை, யலவலைமைதவிர்த்த வழகன்" (ச: கூ. நு.) எனப் பெரியாழ்வார் திருமொழியில் வருதல் காண்க. இஃது அலவலைமையென்றும் வழங்கும்.

நுஉ. விழுமம் - துன்பம். நுங. ஆணைங்கு - அரியதெய்வத்தன்மை.

நுங - ச. அருந்தவன்றன்னைற் கடுகோயுழந்தனே.

நுடு. வாளாடு எழுக என - வானிடத்து எழுவாயென்று வித்தியாதரன் சொல்ல.

(பி - மீ.) சசு. 'உறுதுயர்' சகூ. 'உழந்தமாமுனி' நுo - நுஉ. 'ஒழித்தே, னவலக்கவலை செய்வினையஞ்சி, யிலகொளி'

ஞானுயிர் நீங்கு முருப்பொடு தோன்றி
வயிறுகாய் பெரும்பசி வருத்துமென் றேற்குத்
தீங்கனி கிழங்கு செழுங்காய் கல்லன
வாங்கவன் கொணரவு மாற்றே னுக
சுஎ நீங்க லாற்ரு னெடுந்துய ரெய்தி
யாங்கவ னுங்கெனக் கருளொடு முரைப்போன்
சம்புத் தீவினுட் டமிழக மருங்கிற்
கம்ப மில்லாக் கழிபெருஞ் செல்வ
ராற்ரு மாக்கட் காற்றுந்துணை யாகி
சுடு நோற்ரோ ருறைவதோர் நோனக ருண்டாற்
பலநா ளாயினு நிலனெடு போகி
யப்பதிப் புகுகென் றவனருள் செய்ய
விப்பதிப் புகுந்தீங் கியானுறை கின்றே
னிந்திர கோடணை விழவணி வருநாள்

நுசு. உடம்பினின்றும் உயிர்நீங்குதற்குக் காரணமாகிய வெப்பத் தோடு.

நுஎ. வயிறுகாய் பெரும்பசி : (மணி. கச : சு.) வருத்துமென்றேற்கு-வருத்துமென்ற என்பொருட்டு.

நுஅ. நீங்கனி - இனியபழம். கல்லனவென்பதை ஒவ்வொன்றோடுங் கூட்டுக.

நுக. ஆற்றேனுக - பசிதணியேனுக. சுக. அவன் - வித்தியாதரன்.

சுஉ. தமிழகமருங்கில் - தமிழ்நாட்டில்; "இமிழ்கடல் வரைப்பிற் றமிழக மறிய" சிலப். க :கூஎ.

சுங. கம்பம் - நடுக்கம். கழிபெருஞ் செல்வர் - மிகப்பெரிய செல்வத்தையுடையர்.

சுச. ழ.மணி. கக: கூநு. ஆற்றுமாக்கள் - வறிஞர்.

சுடு. நோற்ரோர் - முற்பிறப்பில் தவஞ்செய்தோர். நோன் நகர் - வலிமையையுடையநகர் ; நோன் - வலி ; " சாப நோன்ஞாண் " (புறநா. கச) நகர் - காவிரிப்பூம்பட்டினம்.

சுஙூ - நு. செல்வர் நோற்ரோர், ஆகி உறைவதோர் நகரென்க.

சுசு. பலநாள் ஆயினும் - ஆகாயவழியே செல்லக்கூடாமையாற் பல நாள் ஆகுமாயினும். நிலனெடுபோகி - பூமியில் நடந்துசென்று.

சுஎ. அவன் - வித்தியாதரன்.

(பி - ம்.) நுஎ. 'என்றேற்கவன்' சுச. 'அருந்துணையாகிய' சுசு. 'நிலை நாடுபோகி'

எ0 வந்து தோன்றியிம் மாநகர் மருங்கே
யென்னுறு பெரும்பசி கண்டன னிரங்கிப்
பின்வரும் யாண்டவ னெண்ணினன் கழியுங்
தணிவில் வெம்பசி தவிர்த்தனே வணங்கினேன்
மணிமே கலையென் வான்பதிப் படர்கேன்

எரு றுக்கங் துடைக்குங் துகளறு மாதவர்
சக்கர வாளக் கோட்டமுண் டாங்கதிற்
பலர்புகத் திறந்த பகுவாய் வாயி
லுலக வறவி யொன்றுண் டதனிடை
யூரூ ராங்க ணுறுபசி யுழந்தோ

அ0 ராரு மின்மையி னரும்பிணி யுற்றோ
ரிடுவோர்த் தேர்ந்தாங் கிருப்போர் பலரால்
வடிவாழ் கூந்த லதன்பாற் போகென்
றுங்கவள் போகிய பின்ன ராயிழை
யோங்கிய வீதியி லொருபுடை யொதுங்கி

அரு வலமுறை மும்முறை வந்தனே செய்தவ்
வுலக வறவியி லொருதனி யேறிப்
பதியோர் தம்மொடு பலர்தொழு தேத்து
மூதியோள் கோட்ட மும்மையின் வணங்கிக்

எ0. இம்மாநகர் மருங்கே வந்துதோன்றியென்க.
எஉ. கழியும் - நீங்குவான்.

எச. மணிமேகலை, விளி. வான்பதிப்படர்கேன் - சிறந்த ஊராகிய காஞ்சனபுரத்திற்குச் செல்வேன்.

எரு. துக்கம் - பிறப்புமுதலியன; நால்வகைச் சத்தியங்களுள் துக்கம் முதலாவது.

எள - அ. ழ. மணி. எ: கூஉ - கூ. அதனிடை - அவ்வுலகவறவியில்.
எசு - அ. ஆங்கதில் ஒன்றுண்டு.

அ0. ஆருமின்மையின் - பாதுகாப்போர் ஒருவரும் இல்லாமையினாலே.
எஅ - அக. அதனிடை இருப்போர் பலர்.
அஉ. வடி - வகிர்; 'வடிவாழ் கூந்தல்' என்றது மணிமேகலையை.
அங. ஆயிழை - மணிமேகலை.

அரு. வலமுறையாக மூன்றுமுறை வந்து பணிந்து; 'வந்து' என்றுஒரு சொல் வருவிக்க.

அச. மூதியோள்கோட்டம் -சம்பாபதிகோயில். மும்மையின்வணங்கி - மனம் வாக்குக் காயங்களால் வணங்கி; மூன்றுமுறை வணங்கி யென்றுமாம்.

(பி - ம்.) அச. 'ஒருபடைபோகி' அச. 'முறைமையின்வணங்கி'

கந்துடை நெடிலோக் காரணங் காட்டிய
கூ0 தந்துணைப் பாவையைத் தான்றொழு தேத்தி
வெயில்சுட வெம்பிய வேய்கரி கானத்துக்
கருவி மாமழை தோன்றிய தென்னப்
பசிதின வருந்திய பைதன் மாக்கட்
கமுத சுரபியோ டாயிழை தோன்றி
கூடு யாபுத் திரன்கை யமுத சுரபியிஃ
தியாவரும் வருக வேற்போர் தாமென
வூணெலி யரவத் தொலியெழுந் தன்றே
யாணர்ப் பேரூ ரம்பல மருங்கென்.

கள.—உலகவறவிபுக்ககாதை முற்றிற்று.

கூ0. மணிமேகலையொடு மற்றையோரையும் உளப்படுத்தி, 'தந்துணைப் பாவை' என்றார்.

கூக. வேய்கரிகானம் - மூங்கில்கரிந்தகாடு. கூஉ. பைதல் - துன்பம்.

கூசு. ஏற்போராகிய யாவரும் வருகவென்று மணிமேகலைசொல்ல.

கூள. எழுந்தன்று - எழுந்தது. கூஅ. யாணர் - புதுவருவாய்.

கூள - அ. அம்பலமருங்கு ஒலியெழுந்தன்றென்க.

க - கூஅ. காயசண்டிகையெனுங்காரிகை, நோக்கி வணங்கி, 'என்னேய் துடைப்பாய்' என்றலும், மணிமேகலை பெய்தலும், அவள் பசிநீங்கித் தொழுது உரைக்கும்; அங்ஙனம் உரைப்பவள், 'அதன்பாற்போக' என்று கூறிப் போயபின்னர், ஆயிழை ஒதுங்கி வந்து வந்தனைசெய்து ஏறி வணங்கித் தொழுதேத்தித் தோன்றி 'ஏற்போர்யாவரும்வருக' என, அம்பலமருங்கு ஒலியெழுந்தனென வினைமுடிவுசெய்க.

(பி - ம்.) கூ0.' தன்றுணைப்பாவை' கூசு. 'இரப்போர்தாமென'

பதினேட்டாவது

உதயகுமரன் அம்பலம்புக்ககாதை.

[பதினேட்டாவது மணிமேகலை அம்பலமடைந்தமை சித்திராபதி உதயகுமரனுக்குச்சொல்ல அவன் அம்பலம்புக்கபாட்டு.]

ஆங்கது கேட்டாங் கரும்புண் ணகவயிற்
நீத்துறு செங்கோல் சென்றுசுட் டாங்குக்
கொதித்த வுள்ளமொடு குரம்புகொண் டேறி
விதுப்புறு நெஞ்சினள் வெய்துயிர்த்துக் கலங்கித்
நு தீர்ப்பலிவ் வறமெனச் சித்திரா பதிதான்
கூத்தியன் மடந்தையர்க் கெல்லாங் கூறுங்
கோவல னிறந்தபின் கொடுந்துய ரெய்தி
மாதவி மாதவர் பள்ளியு ளடைந்தது

க. ஆங்கதுகேட்டு - மணிமேகலை பிக்குணிக் கோலம்பூண்டு பிச்சை யேற்று யாவருக்கும் உணவு கொடுத்தலைக்கேட்டு. ஆங்கு - அப்பொழுதே.

உ. நீத்துறுசெங்கோல் - நீதியின்கண் பழுக்கக் காய்தலுற்ற செவ்விய கோல். சுட்டாங்கு - சுட்டாற்போல்.

ஈ. குரம்பு கொண்டு ஏறி -வரம்பை இடம்கொண்டெழுந்து; என்றது வரம்பு கடந்தென்றபடி; "குரம்பெழுந்து குற்றங்கொண் டேறார்" நாலடி. கடுஈ.

ச. விதுப்புறு - நடுக்கமுற்ற; விரைதலுற்ற வென்றுமாம்.

ஞ. தீர்ப்பலி இவ்வறமென - மணிமேகலைகொண்ட இவ்வறத்தைத் தீர்த்து விடுவேனென்று எண்ணி. சித்திராபதி - மாதவிதற்றாய்.

சு. எல்லா நாடகக்கணிகைகளுக்கும் சொல்லுவாள்.

க - சு. அதுகேட்டு ஏறி நெஞ்சினளாய் வெய்துயிர்த்துக் கலங்கி இவ் வறத்தைத் தீர்ப்பலென்று எண்ணிக் கூத்தியன் மடந்தையர் எல்லாருக்கும் சித்திராபதி கூறுவாள்.

மேல்வருவன சித்திராபதிவார்த்தை.

அ. மாதவர்பள்ளியுள் - சங்கத்தாரான அறவணவடிகளுடைய உறை விடத்து. பள்ளி - முனிவருறைவிடம்; சீலப். ஞ: களஈ.

எ - அ. கோவலனிறந்தமைகேட்டு மாதவி அறவணவடிகளிடம் புகுந்து துறவுபூண்டமையை, "ஈங்கிம் மாதவ ருறைவிடம் புகுந்தேன், மற

(பி - ம்.) க. 'புண்ணுக்கையிற்' ஈ. 'குரங்கொண்டெழுந்து', 'குரம்பு கொண்டெழுந்து' எ. 'நிறைந்தபின்'

ஙகுதக் கன்றே ஙன்னெடும் பேரூ
கo ரிதுதக் கென்போர்க் கெள்ளுரை யாயது
காதலன் வீயக் கடிந்துய ரெய்திப்
போதல் செய்யா வுயிரொடு புலந்து
ஙளியிரும் பொய்கை யாடிஙர்போல
மூளியெரிப் புகூஉ முதுகுடிப் பிறந்த
கரு பத்தினிப் பெண்டி ரல்லேம் பலர்தங்
கைத்தூண் வாழ்க்கை கடவிய மன்றே
பாண்மகன் பட்டுழிப் படூஉம் பான்மையின் ல்
யாழினம் போலு மியல்பின மன்றியு

வண ணீத்த மாசறு கேள்வி, யதவ ர வடிக ளடிமிசை வீழ்ந்து.....உர வோ ரருளினன்" (உ: ருகூ - சுகூ) என வயங்தமாலைக்கு மாதவி கூறியதாக இந்நூலிலும், "மற்றது கேட்டி மாதவிமடன்தை,.....கோதைத் தாமஞ் குழலொடு களைந்து, போதித் தானம் புரிந்தறங் கொள்ளவும்" (உள: கoகூ-அ), "போதியிற்கீழ் மாதவர்முன் புணர்யதா னம்புரிந்த, மாதவி தன்றுறவுங் கேட்டாயோ தோழீ" (உக: "காதலன்றன்") எனச் சிலப்பதிகாரத்தும் வருவனவற்றை யுணர்க.

கூ. ஙகுதக்கன்று - சிரிக்கத்தக்கது. பேரூர் - பேருரில்.

அ - கூ. அடைந்தது ஙகுதக்கன்று.

கo. இது தக்கு எள்றோர்க்கு - இச்செய்கை தகுதியுள்ளதென்று சொல்லும் அறிஞர்க்கு; தக்கது, விகாரம். எள்ளுரை - இகழ்ச்சியுரை.

கள. போதல்செய்யா - நீங்காத. புலந்து - வெறுத்து.

கக - உ. மணி. உ: ஙஅ - கூ.

கங். ஙளி இரும்பொய்கை- குளிர்ந்த பெரியகுளம். ஆடிஙர்-ஆடுவோர்.

கஙூ - சு. மணி. உ : சருி.

கக - ருி. காதலன்வீயத் துயரெய்திப் புலந்து எரிபுகும் பத்தினிப் பெண்டிரலலேம் யாம்.

கருி - சு. பலருடைய கையதாகிய உணவை உண்டுவாழ்தலில் உரிமையையுடையேம்.

கள. பாண்மகன் - பாணன். பட்டுழி - இறந்தவிடத்து.

கஅ. இயல்பினம் - இயல்பையுடையேம்.

கள - அ. பாண்மகனையும் யாழையும் உவமைகூறினள், நாடகக்கணிகையாதலின்.

(பி - ம்.) கo. 'தக்கென்றவர்க்கெள்ளுரை' கள. 'போதல்செல்லாவுயிரொடுபுலர்ந்து'

நறுந்தா துண்டு நயனில் காலை
வறும்பூத் துறக்கும் வண்டு போல்குவம்
வினையொழி காலைத் திருவின் செல்வி
யனையே மாகி யாடவர்த் துறப்பேக்
தாபதக் கோலந் தாங்கின மென்ப
தியாவரு நகூஉ மியல்பின தன்றே
மாதவி யீன்ற மணிமே கலைவல்லி
போதவிழ் செவ்வி பொருந்துதல் விரும்பிய
வுதைய குமரனு மூலகாள் வண்டின்
சிதையா வுள்ளஞ் செவ்விதி னருந்தக்
கைக்கொண் டாங்கவ ளேந்திய கடிஞையைப்
பிச்சை மாக்கள் பிறர்கைக் காட்டி
மற்றவன் றன்னொன் மணிமே கலைதனைப்
பொற்றோர்க் கொண்டு போதே னெனிற்

கசு. நயன் - பசை ; என்றது செல்வத்தை.

உ0. வறும்பூ - தேனில்லாதபூ. இங்கே பரத்தையர்க்கு வண்டை உவமை கூறியதுபோல, "வண்டிற் றுறக்குங் கொண்டி மகளிரை" (க0சு) என்று இக்காதையிலேயே பின்னும் கூறுதல்காண்க.

உக. வினை - நல்வினை.

உக - உ. "தவந்தீர் மருங்கிற் றிருமகள் போலப், பயந்தீர் மருங்கிற் பற்றுவிட் டோரீஇ, யிட்டதை யுண்ணு நீலம்போல,வொட்டிடத் தொட்டு முறுதி வாழ்க்கையுட், பத்திமை கொள்ளார்" (பெருங். க. சுரு; கசுஎ-சக); "புண்ணிய முலந்தபின் பொருளி லார்களைக், கண்ணிலர் துறந்திடும்..... வண்ணமே" சூளா. முத்தி. கரு.

உசு. தாபதக்கோலம் - விதவைக்கோலம்; பிக்குணிக்கோலமுமாம்.

உச. நகூஉம் இயல்பினது - பழிக்கும் இயல்பையுடையது.

உசு. செவ்வி - சமயம்.

உஎ. உதயகுமரனை இங்கே வண்டாகக்கூறியதுபோல, "உதய குமரனெனு மொருவண் டுணீஇய, விரைவொடு வந்தேன்" (சு0 - சுக) என்று சித்திராபதிகூறியதாக இக்காதையிலேயே பின்னும்கூறுவர்;"பெண்டிர்நலம் வெளவித் தண்சாயற் றுதண்ணும், வண்டிற் றுறப்பான் மலி" (கலி. ச0) என்று தலைமகனை வண்டாகக் கூறியிருத்தல்காண்க.

உஅ. சிதையாவுள்ளம் - வேறுருன்றல் அழியாதவுள்ளம்.

உகூ. கடிஞை - பிச்சைப்பாத்திரம். நகூ. அவன் - உதயகுமரன்.

நகூஉ. போதேனெனில் - வாரேனெயின்.

(பி - ம்.) உக. 'விலையொழிகாலை' உசு. 'செவலினபொருந்தல்'

சுடுமண் ணேற்றி யரங்குசூழ் போகி
வடிவொடு வாழு மடந்தையர் தம்மோ
ரனையே ணெகி யரங்கக் கூத்தியர்
மனையகம் புகாஅ மரபின னென்றே
வஞ்சினஞ் சாற்றி நெஞ்சுபுகை யுயிர்த்து
வஞ்சக் கிளவி மாண்பொடு தேர்ந்து
செறிவளை நல்லார் சிலர்புறஞ் சூழக்
குறுவியர் பொடித்த கோலவாண் முகத்தள்
கடுந்தேர் வீதி காலிற் போகி
யிளங்கோ வேந்த னிருப்பிடங் குறுகி
யாய வண்டொடி தேனின மார்க்குந்
தருமணன் ஞெமிரிய திருநா ரெருசிறைப்

சுடுமண் - செங்கல். அரண் - குற்றம்.

சுடுமண் - ரு. மடந்தையர் தம்மோரனையேனெகி - மடந்தையரை ஒப்பே னெகி; ஓர், இடைச்சொல்.

சுடுமண் - ரு. பதியிலாரிற் குடிக்குற்றப்பட்டாரை ஏழு செங்கற்சுமத்தி அரங்குசூழ்வித்துப் புறத்துவிடுதல் மரபாதலின் சித்திராபதி இங்ஙனம் சப தஞ்செய்வாளாயினள்; இதனை, "சுடுமண ணேறு வடிநீங்கு நிதப்பின்" (சிலப். கச: கசசு) என்பதனாலும், அதன் விசேடவுரைகளாலும்உணர்க.

நெஞ்சினம் - சபதம். நெஞ்சுபுகையுயிர்த்து - மனங்கொதித்து; "செங்கண் சிவந்து நெஞ்சுபுகை யுயிர்த்து" (அ: நுஅ) என்பதும் காண்க.

எ - நெஞ்சு. கூறுகின்ற சித்திராபதி, 'மாதவி பள்ளியுளடைந்தது நகுதக் கன்று; அஃது எள்ளுரையாயது; யாம் பத்தினிப் பெண்டிரல்லேம்; வாழ்க் கைகடலியமன்றே; இயல்பினம்; அன்றியும் வண்டுபோல்குவம்; துறப் பம்; தாங்கொளமென்பது நகுமியல்பினது; ஆதலால், மணிமேகலையைப் பொற்றேர்க்கொண்டு போதுவேன்; அங்ஙனம் போதேனுயின் மரபினன்' என்று வஞ்சினஞ் சாற்றியென்க.

நெஅ. இளவியைத்தேர்ந்து.

சஎ. லியர் - வேர்வை. பொடித்த - தோன்றிய.

சஉ. இளங்கோ வேந்தன் - உதயகுமரன்.

சஙு. வண்டும்தேனும் நல்லமணத்தே செல்வனவாதலின், இங்கே சேர்த்துக்கூறப்பட்டன; இதனை, "மங்கைநலலவர்" (சீவக. அகூஉ) என்னும் செய்யுளுரையாலுணர்க.

சசு. தரு மணல் ஞெமிரிய - கொண்டுவந்திட்ட மணல்பரக்க; "தரு (பி - ம்.) நெஅ. 'மடந்தையர் தம்மோடு' நெரு. 'ஆடற்கூத்தியர்' நெசு. 'மரபினளன்றென' சசு. 'திருமணன்ஞெமரிய'

சரு பவழத் தூணத்துப் பசும்பொற் செஞ்சுவர்த்
திகழொளி நித்திலச் சித்திர விதானத்து
விளங்கொளி பரந்த பளிங்குசெய் மண்டபத்துத்
துளங்குமா ஹூர்த்தூ மலர்ப் பள்ளி
வெண்டிரை விரிந்த வெண்ணிறச் சாமரை
நிo கொண்டிரு மருங்குங் கோதையர் வீச
விருந்தோன் றிருந்தடி பொருந்திநின் றேத்தித்
திருந்தெயி றிலங்கச் செவ்வியி னக்கவன்
மாதவி மணிமே கலையுட னெய்திய
தாபதக் கோலந் தவறின் றேவென
நிரு வரிதுபெறு சிறப்பிற் குருகுகரு வுயிர்ப்ப

மணன் ஞெமிரிய திருநகர் முற்றதது'' (நெடுநல். கo; பெருங். க. சள: ககள.) ஒருசிறை - ஒருபக்கம்.

சரு. பவழத்தூணம் - பவளத்தாலாகிய தூண. ''பவளத் திரள்காற் பைம்பொன் வேதிகை'' சிலப். நு: கசஅ.

சசு. நித்திலம்-முத்து ; என்றது, முத்தாலாகிய சலலியையும் தூக்கினையும். சித்திரவிதானம் - சித்திரங்களையுடையை மேற்கட்டி ; '' தவள நித்திலத் தாமம் தாழ்ந்த, கோணச் சந்தி மாண்வினை விதானத்து'' (ககu: ககஉ - ஈ) என்பர் பின்னும் ; '' ஓவிய விதானத் துரைபெறு நித்திலத்து, மாலைத் தாமம் வளையுட னுற்றி'' சிலப். ஈ: ககக - உ.

சரு - எ. தூணத்தினையும் சுவரினையும் விதானத்தினையுமுடைய மண்டபமென்க.

சஅ. துளங்கும் மால் ஹூர்த்தி - ஒளி அசைதலையுடைய சிங்காதனம். ஹூர்த்தி - ஏறுதற்கிடமாகவுள்ள ஆசனமெனலும்பொருளது. பள்ளி - இடம்.

சகo.வெண்டிரைவிரிந்த - வெள்ளிய அலைகள் போலேவிரிந்த. சாமரை-சாமரையை.

நிo. கோதையர் - மகளிர். சகo - நிo. சாமரையைக் கோதையர் வீச.

நிக. இருந்தோன் - உதயகுமரன். ஏத்தி - ஏத்த.

சள - நிக. மண்டபத்துப் பள்ளியில் இருந்தோனென்க.

நிஉ. நக்கு - சிரித்து. அவன் - உதயகுமரன்.

நிச. தாபதக்கோலம் - தவவேடம் ; என்றது பிக்குணிக்கோலத்தை. தாபதர் - தவமுடையவர். எனா - என்று உதயகுமரன் கேட்ப.

நிஉ - ச. அவன் நக்குத் தாபதக் கோலம் தவறின்றேவென.

மேல்வருவன சித்திராபதிகூற்று ; உதயகுமரன் இருந்தவிடம் அவைக்களமாதலின் மணிமேகலைசெய்தியைச் சிலேடையாற் கூறுவாள்.

நிநி. குருகு கரு வுயிர்ப்ப - பறவைகள் ஈனும்வண்ணம்; மாதவிபெற. (பி - ம்.) சள. 'ஒளிவிரிந்த பளிக்குமண்டபத்து'

வொருதனி யோங்கிய திருமணிக் காஞ்சி
பாடல்சால் சிறப்பிற் பரதத் தோங்கிய
நாடகம் விரும்ப நன்னலங் கவினிக்
காமர் செவ்விக் கடிமல ரவிழ்ந்த
சுo உதைய குமரனெ னுமொருவண் ணிணீஇய
விரைவொடு வந்தேன் வியன்பெரு மூதூர்ப்
பாழ்ம்ம் பறந்தலை யம்பலத் தாயது
வாழ்கநின் கண்ணி வாய்வாள் வேந்தென
வோங்கிய பௌவத் துடைகலப் பட்டோன்

நிசு. திருமணிக்காஞ்சியென்பதற்கு அழகிய கரியகாஞ்சிமரமென்றும், அழகிய மணிமேகலையென்றும் பொருள்கொள்க. மேகலைக்குக் காஞ்சி யென்று பெயருளதாதல், "எதிரூன் றுதலு நிலையின் மையுமா, மணிமே கலையு மொருமாப் பெயருங், கருதுங் காஞ்சி யென்னும் கட்டுரை" என்னும் நிவாகரச் நத்திரத்தாலும், "ஒருமாப் பெயரு மோரிசைப் பெயருங், கச்சிப் பதியுமே கலையுங் காஞ்சி" என்னும் பிங்கலச் நத்திரத்தாலும்துணி யப்படும்.

நிஎ. பரதமென்பதற்குப் பரதகண்ட மென்றும்நாடக நூலென்றும் பொருள் கொள்க.

நிஅ. நாடகம் - நாடகளினிடமும், ஆடலும். நாடகம் இவளாற் சிறப் பெய்துமாகலின், "நாடகம் விரும்ப" என்றார்; 'நாடக மேத்து நாடகக் கணிகை' (சிலப். பதி. கநி) என்றுவருதல் காண்க.

சுo. 'உதைய குமரனெனு மொருவண்டு' என்றது முன்னிலைப்புறம் ; அஃதாவது முன்னிலையாய் நிற்கின்றவரை நோக்கிப் பிறரைக் கூறுமாறு போலக் கூறுதல். உணீஇய - உண்ணும்பொருட்டு ; உண்ணுதல் - மிசை தலும், அனுபவித்தலும்.

சுஉ. பாழ்ம் பறந்தலை அம்பலத்து - பாழிடமாகிய புறங்காட்டைச் சார்ந்த உலகவறவியினிடத்து; பறந்தலை - புறங்காடு; "கள்ளியம் பறந்தலை யொருசிறை யல்கி" புறநா. உசo.

நிசு - சுஉ. காஞ்சி, நலங்கவினிக் கடிமலரவிழ்ந்தது; அதனை உதய குமரனுகிய வண்டு உண்ணும்பொருட்டு வந்தேன் ; அக்காஞ்சி அம்பலத் தாயதென்க.

சுக. கண்ணி - தலைமாலை; "கண்ணி கார்நறுங் கொன்றை" (புறநா. க.) நின்கண்ணி வாழ்கவென்றல் மாபு ; "தாமரை யுறையுஞ் செய்யாள், வழுவினூர் தம்மைப் புல்லாள் வாழ்கநங் கண்ணி மாதோ"(சீவக. கஅகo.) என - என்று சித்திராபதிசொல்ல.

சுசு. பௌவம் - கடல். உடைகலப் பட்டோன் - கப்பல் உடையப் பட்டோன் ; "உடைகலப் பட்டாங் கொழிந்தோர் தம்முடன்" (கசு:உo) என்றார் முன்னும் ; "உடைகலப் பட்ட வெங்கோன்" சிலப். கடு:உக.

(பி - ம்) நிஅ. 'நன்னயம்' சுஉ. 'பாஅழம்'

சுரு வான்புணை பெற்றென மற்றவட் குணர்ப்போன்
மேவிய பளிங்கின் விருந்திற் பாவையிஃ
தோவியச் செய்தியென் றெழிலேன் முன்னர்க்
காந்தளஞ் செங்கை தளைபிணி விடாஅ
வேந்திள வனமுலை யிறைகொரித் ததூஉ
எ0 மொத்தொளிர் பவளத் துள்ளொளி சிறந்த
முத்துக்கூர்த் தன்ன முள்ளெயிற் றமுத
மருந்தே மாந்த வாருயிர் தளிர்ப்ப
விருந்தின் மூர லரும்பிய தூஉ
மாயிதழ்க் குவளை மலர்புறத் தோட்டிக்
எரு காய்வேல் வென்ற கருங்கய னெடுங்க

சுரு. வான்புணை - சிறந்ததெப்பம். அவட்கு - சித்திராபதிக்கு.

மேல்வருவன உதயகுமரன் கூற்று.

சுசு. பளிங்கின் - பளிக்கறையின் கணுள்ள. விருந்திற் பாவை இஃது - புதுமைபினையுடைய பாவையாகிய இது.

சுஎ. ஓவியச்செய்தியென்று - சித்திரச் செய்கையென்று.

சுசு - எ. மணிமேகலை தன்னைக்கண்டு அஞ்சிப் பளிக்கறையிற்புகுந்த பொழுது அவளைச் சித்திரமென்று தான் எண்ணியிருந்ததாக உதய குமரன் கூறினன்; "தாழொளி மண்டபம்.....எத்திறத் தாணின் னிளங் கொடி யுளையென" (சிறு: க - கஉ) என்று முன்பு வத்திருத்தல்காண்க.

சுஅ. தளைபிணி - கட்டியகட்டு; தளைதல் - கட்டுதல். விடா - விடா வாய்.

சுஅ - கூ. செங்கைகள் பிணிவிடாவாய் மூலையை இறையளவு நெரித்த செய்கையும்; இறை - சிறிது.

எ0. பவளமென்றது, வாயை.

எக. முத்துக்கூர்த்தன்ன - முத்துக்கள் கூர்மையுற்றாலொத்த. எயிறு - பல்.

எஉ. அருந்த ஏமாந்த - உண்ணுதற்கு ஆசைப்பட்ட; "அருந்தே மாந்த வாருயிர் முதல்வனே"(கசு: சுஅ) என்றார் முன்னும்.

எக - உ. "முள்வா யெயிற்றா றமுதம் முனியாது மாந்திக், கொள் ளாத வின்பக் கடற்பட்டனன்" சீவக. சகக.

எங. விருந்தின்மூரல் - புதிய இளநகை. அரும்புதல் - தோற்றுதல்.

எக - ங. எயிற்றமுதத்தையுண்ண ஆசையுற்ற எனதுயிர்செழிப்புறும் வண்ணம் புன்முறுவல் செய்ததும்.

எச. மாயிதழ் - கரிய இதழ்.

(பி - ம்.) சுரு. 'முலையிதழெறித்ததூஉ'

நறிவுபிறி தாகிய தாயிழை தனக்கெனச்
செவியகம் புகூஉச் சென்ற செவ்வியும்
பளிங்குபுறத் தெறிந்த பவளப் பாவையென்
னுளங்கொண் டொளித்தா ளுயிர்க்காப் பிட்டென்
அ0 றிடையிருள் யாமத் திருந்தேன் முன்னர்ப்
பொன்றிகழ் மேனி யொருத்தி தோன்றிச்
செங்கோல் காட்டிச் செய்தவம் புரிந்த
வங்கவ டன்றிற மயர்ப்பா யென்றன
டெய்வங் கொல்லோ திப்பியங் கொல்லோ
அரு வெய்யா மையலேன் யானென் றவன்சொலச்
சித்திரா பதிதான் சிறுகை யெய்தி
யத்திறம் விடுவா யரசிளங் குருசில்

எசு. பிறிதாகியது - வேறுபட்டது. ஆயிழைதனக்கு - மணிமேகலைக்கு.

எள. புகூஉ - புகுந்து. செவ்வி - அழகு.

எச - எ. ஒட்டி வென்ற கண்கள் ஆயிழைக்கு அறிவுபிறிதாகிய தென்று குறிப்பித்துச் செவிக்கண்ணே சென்ற செவ்வியும்.

எஅ. பளிங்கு - உவவனத்திலுள்ள பளிக்கறை. பாவை- மணிமேகலை.

எக. கொண்டு - நெரித்ததூஉம் அரும்பியதூஉம் செவ்வியும் ஆகிய இவற்றைக் கொண்டு. உயிர்க்காப்பிட்டு - உயிரைக் காத்தல்செய்து.

எஅ - கூ. பாவை கொண்டு உயிர்க்காப்பிட்டு என்னுளத்து ஒளித்தா ளென்க.

அ0. இருந்தேன் முன்னர் - துயிலாதிருந்தேனுடைய முன்பு; ''பொங்குமெல் லமளியிற் பொருந்தா திருந்தேனுன், முன்னர்த் தோன்றி'' (எ: சு-எ) என்று முன்பு வந்திருத்தல்காண்க.

அக. ஒருத்தியென்றது, மணிமேகலா தெய்வத்தை.

அங. அயர்ப்பாய் - மறப்பாய். அஉ - ங. மணி. எ: அ - கச.

அ0 - அங. இருந்தேன்முன்னர் ஒருத்திதோன்றிக் காட்டி அவள் திறம் அயர்ப்பாயென்றனளென்க.

அச. என்றவள் தெய்வமோ! தெய்வலோகத்திற்றோன்றியபொருளோ!

அரு. எய்யா மையலேன் - இன்னதென்று அறியாதமயக்கமுடை யேன்; எய்த்தல் - அறிதல்.

அள. அத்திறம்விடுவாய் - 'அங்கவ டன்றிற மயர்ப்பாய்' என்று நின் கனவிற் றோன்றிய ஒருத்தி கூறிய அதனை விடுவாயாக.

(பி - ம்.) எள - அ. 'செவிகுறுக்குறூஉச் சென்ற செவ்வியும், பசும் பொற்'

காமக் கள்ளாட் டிடைமயக் குற்றன
தேவர்க் காயினுஞ் சிலவோ செப்பின்
கூ0 மாதவன் மடந்தைக்கு வருந்துது யரெய்தி
யாயிரஞ் செங்க ணமரர்கோன் பெற்றது
மேருக் குன்றத் தூருநீர்ச் சரவணத்
தருந்திறன் முனிவர்க் காரணங் காகிய
பெரும்பெயர்ப் பெண்டிர் பின்புளம் போக்கிய
கூடு வங்கி மனியா ளவரவர் வடிவாய்த்
தங்கா வேட்கை தனியவட் டணித்தனூஉங்
கேட்டு மறிதியோ வாட்டிறற் குருசில்

அஅ. மயக்குற்றன - மயங்கிச்செய்த செய்திகள்.

அகூ. செப்பிற் சிலவோ, பலவுள்ளனவென் றபடி.

உதயகுமரனுக்குத் துணிவு பிறத்தற்பொருட்டு இந்திரன் அகல்யையை விரும்பியது முதலியவற்றைச் சித்திராபதி கூறுவாள்.

கூ0. மாதவன் மடந்தை - கௌதமன் மனைவியாகிய அகல்யை.

கூ0 - கூக. இந்திரன் கௌதமமுனிவர் மனைவியாகிய அகல்யையை விரும்பிச் சேர்ந்து அம்முனிவர்சாபத்தால் ஆயிரங்கண் பெற்றனென்பது புராணகதை.

கூஉ. மேருக்குன்றத்து - இமயமலையினிடத்து ; "இமையவில் வாங்கிய" (கலி.கூஅ.) ஊரும் நீர்ச் சரவணத்து - பரந்த நீரையுடைய சரவணத்தில் ; சரவணம் - தருப்பைக்காட்டினையுடையதொருபொய்கை.

கூஎ. முனிவர் - ஸப்தரிஷிகள்.

கூச. பெரும்பெயர்ப்பெண்டிர் - பெரியபுகழையுடைய மனைவியர்.

கூடு. அங்கி மனையாள் - அக்கினிதேவன் மனைவியாகிய ஸ்வாகாதேவி. அவரவர்வடிவாய் - அவ்வம்முனிபத்தினிகளின் வடிவமாய்.

கூசு. வேட்கை - விருப்பம். அவண் - அவ்விடத்து.

கூஉ - சு. முன்னொருகாலத்தில் அக்கினிதேவன் ஸப்தரிஷிகளுடைய மனைவிகள்விரும்பி அந்தச் சந்தாபம் பொறுக்கமாட்டாமற் காட்டுக்குப் போனபொழுது அவன் எண்ணத்தை யறிந்த ஸ்வாகாதேவி அம்முனிவரெழுவர் மனைவிகளுள் அருந்ததியொழிந்தோருடைய வடிவத்தை முறையே யெடுத்து வேறுவேறு காலங்களிற் சேர்ந்து அவன் வேட்கையைத் தணித்தாளென்று ஸ்ரீவியாஸபாரதத்துள்ள ஆரணியபர்வத்தில் உசச - சூ ஆம் அத்தியாயங்களால் தெரிகின்றது.

(பி - ம்.) அஅ.'உற்றென்' அகூ. 'செப்புவனன்' கூஉ. 'சூன்றத்தோரு நீர்ச்சரவணத்' கூசு. 'வேட்கையவன் றணித்தனூஉம்'

கன்னிக் காவலுங் கடியிற் காவலுக்
தன்னுறு கணவன் சாவுறிற் காவலு
நிறையிற் காத்துப் பிறர்பிறர்க் கூணது
கொண்டோ னல்லது தெய்வமும் பேணுப்
பெண்டிர்தங் குடியிற் பிறந்தா ளல்ல
ணுடவர் காண நல்லரங் கேறி
யாடலும் பாடலு மழகுங் காட்டிச்
சுருப்புநாண் கருப்புவி லருப்புக்கணை தூவச்
செருக்கய னெடுங்கட் சுருக்குவலைப் படுத்துக்
கண்டோர் நெஞ்சங் கொண்டகம் புக்குப்
பண்டோர் மொழியிற் பயன்பல வாங்கி

கூஅ. கன்னி - கன்னிப்பருவம். கடி - கலியாணம்.

க00. நிறை - நெஞ்சைக்கற்புநெறியில் நிறுத்தல்; "நிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர், நிறைகாக்குங் காப்பே தலை" (குறள். நிஎ) என்று வருதல்காண்க. பிறர்க்காணது - அயலாரைப் பாராமல்.

க0க. கொண்டோன் - கணவன்; மணி. கசு: சு.

க0உ. பெண்டிர் - குலமகளிர்.

க0க - உ. "தெய்வக் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்" குறள். நிருி.

க0சு. நல்லரங்கு - எழுகோலகலத்தினையும் எண்கோல்நீளத்தினை யும் ஒருகோல்குறட்டியரத்தினையும் வாய்தலிரண்டினையுமுடைய அரங்கு; சிலப். சு: க0க - நி.

க0ச. கூத்தும்பாட்டும் அழகும் ஆகியவிவற்றைப் புலப்படுத்தி; "ஆட லும் பாடலு மழகு மென்றிக், கூறிய மூன்றி னென்றுகுறை படாமல்" (சிலப். சு: அ-சு); "அழகுகூத் தாடு கின்றாள்" சீவக. கஉருச.

க0நி. சுரும்பு - வண்டு; விகாரம். அருப்புக்கணை - மொட்டறு மலரா கிய அம்பு; அரும்பு, விகாரம்; "கருப்பு வில்லியை யருப்புக்கணை மைந்தனை" (உ0: கூஉ), "கருப்பு வில்லி யருப்புக்கணை தூவ" (உநி: கூ0) என இவ்வா துள்ளே பின்புவருதல் காண்க.

க0சு. சுருக்குவலை - ஒருவகைவலை. படுத்து-அகப்படுத்திக்கொண்டு.

க0எ. அகம் - வீடு.

க0அ. பயன்பல - பொருள் அணிகலம் ஆடை முதலியன.

(பி - ம்.) க0நி - சு. 'கனைதூயச்செருக்கி' க0அ. 'பண்டொடா மொழியின்'

வண்டிற் றுறக்குங் கொண்டி மகளிரைப்
ககo பான்மையிற் பிணித்துப் படிற்றுரை யடக்குதல்
கோன்முறை யன்றே குமரற் கென்றலு
முதைய குமர னுள்ளம் பிறழ்ந்து
விரைபரி மெடுந்தேர் மேற்சென் றேறி
யாயிழை யிருந்த வம்பல மெய்திக்
ககரு காடமர் செல்வி கடிப்பசி களைய
வோடுகைக் கொண்டிநின் றூட்டுநள் போலத்
தீப்பசி மாக்கட்குச் செழுஞ்சோ றீத்துப்
பாத்திர மேந்திய பாவையைக் காண்டலு
மிடங்கழி காமமோ டடங்கா ஞெகி

கoக. வண்டின் - தேனைக்கொண்டு மலரைத்துறக்கும் வண்டுபோல; வண்டு, பரத்தையர்க்குவமை; "கறுத்தா திண்டி ருயனில காலை, வறும்பூத் துறக்கும் வண்டு போல்குவம்" (ககூ - உo) என்று இக்காதையிலும், "பருகு வாரிற் புல்லிப் பயங்கண் மாறத் துறக்கு, முருகு விம்மு குழலார் போல மொய்கொ டும்பி, யுருவப் பூங்கொம் பொசியப் புல்லித் தீர்தேன் பருகி, யருகு வாய்விட் டார்ப்ப வண்ணம் மெல்லச் சென்றூன்" (கசஉ) என்று சீவகசிந்தாமணியிலும் வந்திருத்தல் காண்க. கொண்டி மகளிர் - பொருள் கொள்ளுதலையுடைய பரத்தையர்; கொண்டி - கொள்ளையுமாம்; "நெஞ்சு நடுக்குறூஉக் கொண்டி மகளிர்" மதுரை. நுஅசு.

ககo. படிற்றுரை - பொய்வார்த்தை.

ககக. கோன்முறை - செங்கோன்முறை. என்றலும் - என்று சித்திரா பதி கூறலும்.

ககஉ. உள்ளம் பிறழ்ந்து - மனம் வேறுபட்டு.

ககசு. விரைபரி, விணைத்தொகை.

ககச. ஆயிழை - மணிமேகலை. அம்பலம் - உலகவறவி.

ககரு. காடமர்செல்வி -தர்க்கை; "காடமர் செல்வி கழிபெருங் கோட் டமும்" (அ: நுசு) என்றார் முன்னும். கடிப் பசி களைய - பேய்களின் பசி யைத் தணிவித்தற்பொருட்டு.

ககரு - அ. ஊட்டுதலாகிய காடமர் செல்விபோலவென இயைக்க.

ககள - அ. பாத்திரமேந்தி மாக்கட்குச் செழுஞ்சோறீத்தபாவை - மணிமேகலை. காண்டலும் - உதயகுமரன் கண்டவுடன்.

ககசு. இடங்கழிகாமம் - வரம்பின்றிப் பெருகியகாமம்; இராகவேக மென்பாரு மூளர்;(மணி. கo: உஉ); "இடங்கழி நெஞ்சத் தினமை யானே" சிலப். உசு: சுஎ.

(பி - ம்.) ககஉ. 'உள்ளகம் பிறழ்ந்து' ககரு. 'களைஇய' ககசு -எ. 'ஊட்டுவள்போல...தீப்பலிமாக்கட்கு'

கஉ0 யுடம்போ டென்ற னுள்ளகம் புகுந்தென்
னெஞ்சங் கவர்ந்த வஞ்சக் கள்வி
நோற்றாண் வாழ்க்கையி னெஞ்சிதவந் தாங்கி
யேற்றாண் விரும்பிய காரண மென்னெனத்
தானே தமிய ணின்றோண் முன்னர்
கஉரு யானே கேட்ட லியல்பெனச் சென்று
நல்லா யென்கொ னற்றவம் புரிந்தது
சொல்லா யென்று துணிந்துடன் கேட்ப
வென்னமர் காதல னிராகுல னீங்கிவன்
றன்னடி தொழுதலுந் தகவென வணங்கி
கஙு0 யறைபோய் நெஞ்ச மவன்பா லணுகினு
மிறைவளை முன்கை யீங்கிவன் பற்றினுந்
தொன்று காதலன் சொல்லெதிர் மறுத்த
னன்றி யன்றென நடுங்கினண் மயங்கிக்
கேட்டது மொழிவேன் கேள்வி யாளரிற்

கஉக. கள்வி - மணிமேகலை.

கஉஉ. நோற்றாண் வாழ்க்கை - விரதங்களாற் பட்டினிவிட்டுண்ணு தலியுடையவாழ்க்கை; வாழ்க்கை, தவத்திற்கு அடை. கொசிதவம் - நுண்ணியதவம்; "நோற்றுணல் யாக்கை கொசிதவத்தீர்" சிலப். கo: உஉங.

கஉங. ஏற்றாண் - இரந்துண்ணுமுணவு.

கஉச - ரு. என்னெனக் கேட்டல் இயல்பென்று உதயகுமரன் சென்று.

கஉசு. நற்றவம் புரிந்தது என்கொல்.

கஉஎ. கேட்ப - உதயகுமரன் கேட்ப.

கஉஅ. என்னமர் காதலன் இராகுலன் - இவன் என்னே விரும்பிய கணவனுகிய இராகுலனுவான்; என்றது பழம்பிறப்பின் செய்தி கூறியபடி.

கஉக. வணங்கி - மணிமேகலை வணங்கி.

கஙo. அறைபோய் - ஓட்டைபோய். நெஞ்சம் அறைபோய் அவன் பால் அணுகினுமென்க.

கஙஉ. தொன்று - பழைமை. கஙங. நன்றியன்று - நன்மையன்று.

கஙச. கேட்டது மொழிவேன் - நீ கேட்டதற்கு விடை கூறுவேன்.

(பி - ம்.) கஉக. 'வஞ்சக்கிளவி' கஉங. 'காரணம்யாதெனை' கஉசு. 'நல்லாயெனக்கோநற்றவம்புரிந்தது' கஉஎ. 'துணிந்துடன்கேட்ப'

கசுடு ரோட்ட செவியைநீ யாகுவை யாமெனிற்
பிறத்தலு மூத்தலும் பிணிப்பட் டிரங்கலு
மிறத்தலு முடைய திடும்பைக் கொள்கல
மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து
மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்
கசஂ மண்டமர் முருக்குங் களிறனை யார்க்குப்
பெண்டிர் கூறும் பேரறி வுண்டோ
கேட்டனை யாயின் வேட்டது செய்கென
வாட்டிறற் குருசிலை மடக்கொடி நீங்கி
மூத்தை மூதல்வி முதியா ளிருந்த

அவன் கேட்டது, முன்பு 'நல்லா யென்கொ னற்றவம் புரிந்தது' (கஅ:கஉசு) என்பதனாலுணரப்படும். கேள்வியாளரின் - கேள்வியாளர்களால்.

கசுடு. நீ துலக்கப்பட்ட செவியையுடையாயாயின்.

கசுச - டு. எனின்மொழிவேனென இயையும். இதில், "கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற், றோட்கப் படாத செவி" (சகஅ) என்னும் குறளின் பொருள் அமைந்திருத்தல் காண்க.

மேல்வருவன மணிமேகலை கூற்று.

கசுள. இடும்பை - துன்பம். கசுஅ. யாக்கையாகிய இது.

கசுசு - அ. இஃது உடையது கொள்கலம் என்க. இவ்வடிகளிற் போலவே, "வினையின் வந்தது வினைக்குவியா வாயது, ...மிக்கோ யிதனைப் புறமறிப் பாராய்" (சு: ககசு - உக) என்று இந்நூலுள்ளே முன்னும் மக்கள் யாக்கையை இழித்துக் கூறியிருத்தல் காண்க.

கசுசு. நல்லறம் - தயாதருமம்.

கசஂ. மண்டு அமர் முருக்கும் களிறு - மிக்குச் செல்லுகின்றபோரை அழிக்கும்யானை.

கசஃக. உண்டோ - இல்லையென்றபடி.

கசஂ - சக. 'களிறனையார்க்குப் பெண்டிர் கூறும் பேரறி வுண்டோ' என்றது முன்னிலைப்புறம்; இப்படியே, "இளமை காணி முதுமை யெய்தி, ...செறிவினை மகளிர் செப்பலு முண்டோ" (சு:கஎ-கஅ) என்று உதயகுமரனோக்கிச் சுதமதிகூறியதாக இந்நூலில் முன்பு கூறியிருத்தல் காண்க.

கசஉ. வேட்டது - விரும்பியது.

கசஙு. குருசில - உதயகுமரனை. மடக்கொடி - மணிமேகலை.

கசஙு. முதியாள் - சம்பாபதி.

(பி - ம்.) கசஂ. 'மண்டலமாடுங்களிறு', 'மண்டமரடுங்களிறு'

கசடு குச்சரக் குடிகை தன்னகம் புக்காங்
காடவர் செய்தி யறிகுநர் யாரெனத்
தோடலர் கோதையைத் தொழுதன ளேத்தி
மாய விஞ்சை மந்திர மோதிக்
காயசண் டிகையெனுங் காரிகை வடிவாய்
கடுக மணிமே கலைதான் வந்து தோன்ற
வணிமலர்த் தாரோ னவள்பாற் புக்குக்
குச்சரக் குடிகைக் குமரியை மரீஇப்
பிச்சைப் பாத்திரம் பெரும்பசி யுழந்த
காயசண் டிகைதன் கையிற் காட்டி
கருடு மாயையி னெளித்த மணிமே கலைதனை
யீங்கிம் மண்ணீட் டியாரென வுணர்கே
னுங்கவ ளிவளென் றருளா யாயிடிற்
பன்ன ளாயினும் பாடு கிடப்பே

கசடு. குச்சரக்குடிகை [=கூர்ச்சரகுடிகா] - கூர்ச்சரதேசத்துப் பணியமைந்த சிறிய கோயில். கூர்ச்சரதேசம் சிற்பத்திற் பெயர் பெற்றதென்பர்; "குச்சரக் குடிகைக் குமரியை மரீஇ" (கடுஉ) என்று இக்காதையிலேயே பின்னும் வரும்; கூர்ச்சரமென்பது குஜராமென்று கன்னடபாஷையில் வழங்கப்படுகின்றது.

கசசு. அறிகுநர் - அறிவோர். கசள. கோதை - சம்பாபதி.

கசஅ. மந்திரம் - மணிமேகலாதெய்வம் உபதேசித்த (வேற்றுரு எய்தவிக்கும்) மந்திரம்; மணி. கo: அ0.

கசகூ. காரிகை - பெண்.

கசகூ.- கடுo. மணிமேகலை காரிகை வடிவாய் வந்துதோன்றவென்க.

கடுக. தாரோன் - உதயகுமரன். அவளென்றது, காயசண்டிகை வடிவுகொண்டு நின்ற மணிமேகலையை.

கடுஉ. குமரி - சம்பாபதி.

மேல்வருவன உதயகுமரன் கூற்று.

கடுஙூ - ச. பாத்திரத்தைக் கையிற் காட்டியென்க.

கடுசு. மண்ணீடு -சுதையாற் செய்யப்பட்ட பாவை; (மணி. சு: சஎ.) மண்ணீடுகளுளென ஏழனுருபுவிரிக்க.

கடுஅ. பாடு - படுக்கை; பாடுகிடப்பேன் - வரங்கிடப்பேனென்று பொருள் கூறுவர் அடியார்க்குநல்லார்; "பாசண்டச் சாத்தற்குப் பாடுகிடந்தாளுக்கு", "பாசண்டன்பாற் பாடு கிடந்தாட்கு" சிலப். கூ: கடு; ஙo: எஅ.

(பி - மீ.) கசடு. 'குஞ்சக்குண்டிகை' கசகூ. 'காயசண்டிகை வடிவாய்க் காரிகை'

னின்னுங் கேளா யிமையோர் பாவாய்
கசுo பவளச் செவ்வாய்த் தவளவா ணகையு
மஞ்சனஞ் சேராச் செங்கய னெடுங்கணு
மூரிந்துகடை நெரிய வரிந்தசிலைப் புருவமுங்
குவிமுட் கருவியுங் கோணமுங் கூர்துணைக்
கவைமுட் கருவியு மாகிக் கடிகொளக்
கசுரு கல்விப் பாகரிற் காப்புவலை யோட்டி
வல்வா யாழின் மெல்லிதின் விளங்க
முதுக்குறை முதுமொழி யெடுத்துக் காட்டிப்

கருகூ. இமையோர் பாவாய் - தேவர்களுடைய தலைவி; 'பவமறுவித்த வாஞ்ஞர் பாவாய்' (உரு: கசஎ) என்று இந்நூலிற் சிந்தாதேவியைப் பின்பு கூறுதல் காண்க.

இனி, உதயகுமரன் மணிமேகலையின் நகைமுதலியவற்றால் தான்வலை யழிந்து அவளுக்கு வயமாயினமை கூறுவான், தன்னை யானையாகவும் அவள் நகைமுதலியவற்றை யானையையடக்கி வயமாக்குங்கருவிகளாகவும் உரு வகஞ்செய்து கூறுகின்றான்.

கசுக. 'அஞ்சனஞ் சேரா' என்றதனாற் கண்ணுக்கு மையெழுதாமை தெளியப்படும்.

கசுஙூ. கோணம் - தோட்டியென்னுங்கருவி; "கோணந் தின்ற வடு வாழ் முகத்த" மதுரை. நருஉ.

கசுச. கவைமுட்கருவி - கவைத்த முள்ளையுடைய பரிக்கோல்; "கவை முட் கருவியின் வடமொழி பயிற்றிக், கல்லா வினைஞர் கவளங் கைப்ப" (முல்லை. நருi - சு.) கடிகொள - காவல்கொள்ள.

கசுஙூ - ச. குவிமுட் கருவிமுதலிய மூன்றும் யானையையடக்கும் கருவி விசேடங்கள்; "அரைமதி யிரும்பொடி கவைமுட் கரீஇ, பீலி சுற்றிய வேணு வெண்காழ், யானை" பெரும். க: ஙூஉ: கசு - அ.

கசுo- சுச. நகை குவிமுட்கருவியும், கண் கோணமும், புருவம் கவை முட் கருவியுமாகிக் கடிகொளவென வியைக்க; இது நிரனிறை.

கசுரு. கல்வியாகிய பாகர்களாற் காத்தலாகிய வலையைப்போக்கி; "மடங்கெழு நோக்கின் மதிமுகந் திறப்புண், டிடங்கழி நெஞ்சத் திளமை யானை, கல்விப் பாகன் கையகப் படாஅ,தொல்கா வள்ளத் தோடு மாயினும்" (சிலப். உஙூ: நசு- கூ) என்றதிற் கல்வியைப் பாகனுக உருவகஞ்செய்திருத்தல் காண்க.

கசுள. முதுக்குறைமுதுமொழி - பேரறிவைப் புலப்படுத்தியமொழி; என்பது, "பிறத்தலு முத்தலும்" என்றது முதலியவற்றை.

கசுசு - எ. யாழோசைபோல இனிமையாக மொழிகளை எடுத்துக்காட்டி; யானை யாழிற்கு வயமாகுமாதலின், இங்ஙனம் கூறினான்; இதனை, "காழ்வரை நில்லாக் கடுங்களிற் றிருத்தல், யாழ்வரைத் தங்கி யாங்கு"

கஅ.—உதயகுமரன் அம்பலம்புக்ககாதை. உ0க

புதுக்கோள் யானை வேட்டம் வாய்த்தென
மூதியா ளுன்றன் கோட்டம் புகுந்த
களo மதிவாண் முகத்து மணிமே கலைதனை
யொழியப் போகே னுன்னடி தொட்டே
னிதுகுறை யென்றன னிறைமகன் றனென்.

கஉ.—உதயகுமரன் அம்பலம்புக்ககாதை முற்றிற்று.

(கலி. உ), "அணியிழை மகளிரும் யானையும் வணக்கு, மணியொலி வீணை" (பெருங். க. சுருபு: கoo - கoக), "இசையினி லிவட்குத் தோற்றும் யானை பால் வேறு மென்னி, னிசைவ தொன் றன்று கண்டீர்" (சீவக. எசஅ), "ஐம்புல வேழத்தின் வெந்தொழில் வீயக், கருணை வீணைக் காமுறத் தழீஇ" (ஞானமிர்தம், ச), "மகரயாழ் வல்லமைந்த னெருவனைக் கண்ட மத்தப், புகர் முகக் களிற்றின்" (மேருமந்தர. வச்சிராயுத. சுக) என்பனவற்றாலறிக.

கசு அ. புதிதாகக் கொள்ளப்படும்யானை வேட்டையில் அகப்பட்ட தென்றுகருதி. புதுக்கோள்யானை: சுறுந். கஉசு.

கசுசு. மூதியாள், விளி.

களக. அடிதொடுதல் - ருளுறவுகளுள் ஒன்று; இதனைப் பின்வருவனற் றாலுணர்க: "நம்மு, ணுமுசாஅங் கோனடி தொட்டேன்" (கலி. கூச), "அடல்வலி யெயினர்நி னடிதொடு கடனிது", "அடிதொடு படிகடனிது" சீலப். கஉ: "சூடரொடு", "துடியொடு."

களஉ. இதுகுறை - இஃது எனக்கு வேண்டுங்காரியம்; குறை - காரி யம்; "முறைவேண்டு நர்க்குங் குறைவேண்டு நர்க்கும், வேண்டுப வேண்டுப வேண்டினர்க் கருளி" (பெரும்பாண். சசசுஉ-ச.) இறைமகன்-உதயகுமரன்.

க - களஉ. சித்திராபதி, அதுகேட்டு ஏறி வெய்துயிர்த்துக் கலங்கித் தீர்ப்பலென்று கூத்தியன் மடந்தையரெல்லார்க்குங்கூறும்; அங்ஙனங்கூறு கின்றவள் வஞ்சினஞ்சாற்றி உயிர்த்துத் தேர்ந்து போகிக்குறுகிப் பொருந்தி நின்று ஏத்த அவன் 'தவறின்றே' என, அவள், 'வேற்றே, நின்கண்ணி வாழ்க; காஞ்சி அம்பலத்தாயது' என, அதுகேட்டு அவட்கு உரைப்போன் 'எய்யாமையலேன்' என்று சொல்ல, சித்திராபதி சிறுகை யெய்தி, 'படிற் றுரை யடக்குதல் கோன்முறையன்றே குமரற்கு' என்றலும், உதயகுமரன் உள்ளம் பிறழ்ந்து ஏறி எய்திக் காண்டலும் அடங்காளுங்கிச் சென்று துணிந்து கேட்ப, அவள் வணங்கி நடுங்கி மயங்கி, 'வேட்டதுசெய்க' என்று கூறி நீங்கிப் புக்குத் தொழுது ஏத்தி ஓதிக் காயசண்டிகை வடிவாய் வந்து தோன்ற, தாரோன் புக்கு மீஇ 'இதுகுறை' என்றனனென வினை முடிவு செய்க.

(பி - ம்.) 'புதுக்கோட்டியானை'

பத்தோன்பதாவது

சிறைக்கோட்டமறக்கோட்டமாக்கிய காதை

[பத்தோன்பதாவது மணிமேகலை காயசண்டிகைவடிவாய்ச் சிறைக்கோட்டம்புக்குச் சிறைவீடுசெய்து சிறைக் கோட்டம் அறக்கோட்டமாக்கிய பாட்டு.]

முதியா டிருந்தடி மும்மையின் வணங்கி
மதுமலர்த் தாரோன் வஞ்சினங் கூற
வேடவிழ் தாரோ யெங்கோ மகண்மு
ஞடாது துணிந்து நாகல்கூர்ந் தனையென
(நி) வித்தக ரியற்றிய விளங்கிய கைவினைச்
சித்திர மொன்று தெய்வங் கூறலு
முதிய குமர னுள்ளங் கலங்கிப்
பொதியறைப் பட்டோர் போன்றுமெய் வருந்தி

க. முதியாள் - சம்பாபதி. மும்மை - மனம் வாக்குக் காயங்கள்.

உ. தாரோன் - உதயகுமரன். வஞ்சினம் - சூளுறவு; அஃது 'உன்னடி தொட்டேன்' (மணி. கஅ: களக) என்றது.

மேல்வருவன தெய்வத்தின் கூற்று.

ச. நாடாது துணிந்து - ஆராயாது துணிவுற்று. நாகல்கூர்ந்தனை - நாறுமையுற்றாய்; என்றது, "எண்ணித் துணிக கருமம் துணிந்தபி, னெண்ணுவ மென்ப திழுக்கு" (குசுஎ) என்னும் குறளின் பொருளைத் தழுவிவந்த வாறு காண்க; மணி. கo : கூச.

ஞ. வித்தகர்-சிற்பாசாரிகள்; "வித்தக ரியற்றிய, கண்கவ ரோவியம்" (கூ : கசo - கக), "வித்தக ரியற்றிய விளங்கிய கைவினைச், சித்திரச் செய்கை" (கூ: ககஎ - அ) என முன்பு வந்திருத்தல்காண்க; "வித்தக ரியற்றிய விளங்கிய கோலத்து" சிலப். உஅ: உஉக.

சு. ஒன்றுதெய்வம் - பொருந்திய தெய்வம்.

ச - சு. நல்கூர்ந்தனையெனக் கூறலுமென்க.

அ. பொதியறை - துவாரமில்லாத கீழறை (மணி. ச: கoஞ்); "போதார் பிறவிப் பொதியறையோர்" சிலப். கo : ககக.

(பி - ம்.) க. 'மூதைமையின்வணங்கி'

யங்கவ, டன்றிற மயர்ப்பா யென்றே
க0 செங்கோல் காட்டிய தெய்வமுந் திப்பியம்
பையர வல்குல் பலர்பசி களையக்
கையி லேற்கிய பாத்திரந் திப்பிய
முத்தை முதல்வி யடிபிழைத் தாயெனச்
சித்திர முரைத்த வித்தூஉந் திப்பிய
கரு மிந்நிலை யெல்லா மிளங்கொடி செய்தியிற்
பின்னறி வாமெனப் பெயர்வோன் றன்னை
யகல்வாய் ஞால மாரிரு ளுண்ணப்
பகலர சோட்டிப் பணையெழுந் தார்ப்ப
மாலை நெற்றி வான்பிறைக் கோட்டு

கூ. அவள் - மணிமேகலை. அயர்ப்பாய - மறப்பாய்.

க0. செங்கோல் காட்டிய - செங்கோன்முறையை எடுத்துக்காட்டிய. தெய்வமுமென்றது, மணிமேகலாதெய்வத்தை; உம்மை, எதிரதுதழீஇயது. திப்பியம்: மணி. எ: கூ.

கூ-க0. உதயகுமரனுக்கு மணிமேகலாதெய்வம் செங்கோன்முறையை எடுத்துக்காட்டி, மணிமேகலை திறத்தை நீ மறப்பாயென்று கூறியதனை; "கோனிலை திரிந்திடிற் கோணிலை திரியும்.....அவன்வயி னுரைத்தபின்" (எ: அ - கச), "பொன்றிகழ் மேனி யொருத்தி தோன்றி.....அங்கவ டன்றிற மயர்ப்பா யென்றனள்" (கஅ:அக - கூ) என இந்நூலுள்ளே முன்புவந்த வாற்றலுணர்க.

கக - உ. கனைய ஏந்திய பாத்திரம்.

கங. முத்தைமுதல்வி: (மணி. கஅ: கசச.) பிழைத்தாய்-தவறுசெய்தாய்.

கச. 'இதூஉம் - இதுவும்.

கடி. இந்நிலையெல்லாம் - செங்கோல்காட்டிய தெய்வமுதலிய மூன்றன் வரலாற்றையும். இளங்கொடி - மணிமேகலை.

கசு. பெயர்வோன்றன்னை - பெயர்த்துசெல்லும் உதயகுமரனை.

இனி இராத்திரியை யானையாக உருவகித்துக் கூறுவார்.

கஅ. பகல் அரசு - சூரியனுகிய அரசனை. பணை - பறை; யானை செல்லுங்கால் அதன்வரவை எல்லார்க்கும் தெரிவித்தற்குப் பணைமுழங்கும்; "வெரூஉப் பறை நுவலும் பருஉப்பெருந் திடக்கை, வெரூவரு செலவின் வெகுளி வேழம்" பொருந. கஎக - உ.

கஙூ. மாலை நெற்றி - அந்திக்காலமாகிய நெற்றி; பிறைக்கோடு - பிறையாகிய தந்தம்.

(பி - ம்.) கக. 'பசிகெடுப்ப' கடி. 'உன்னிலை யெலலாமிளங்கொடி செய்தியாயிற்'

உ0 நீல யானை மேலோ ரின்றிக்
காமர் செங்கை நீட்டி வண்டுபடு
பூகாறு கடாஅஞ் செருக்கிக் கால்கிளர்ந்து
நிறையழி தோற்றமொடு தொடர முறைமையி
னகர நம்பியர் வரையோர் தம்மூடன்
உரு மகர வீணையின் இனிகரம்பு வடித்த
விளிபுண ரின்சீ ரெஃகுளங் கிழிப்பப்
பொருஅ நெஞ்சிற் புகையெரி பொத்திப்

உ0. நீலயானை - கரியநிறத்தையுடைய (இராத்திரியாகிய) யானை. மேலோர் -பாகர்; "மேலோரின்றி" (சு: கூடு) என்றார் முன்னும்; "மேலோர் வீசி" மதுரை. கூஅக.

உக. காமர் செங்கை - விருப்பமாகிய துதிக்கை.

உஉ. பூகாறுகடாம் - ஏழிலைப்பாலை மலரினது மணநாறுகின்றமதம்; இதனை, "பாத்த யானையிற் பதங்களிற் படுமத நாறக், காத்த வங்குச நிமிர்க திடக் கால்பிடித் தோடிப், பூத்த வேழிலைப் பாலையைப் பொடிப்பொடி யாக்கக், காத்தி ரங்களாற் றலத்தொடுங் தேய்த்ததோர் களிறு" (கம்ப. வரை. சு) என்னுஞ் செய்யுளாலுணர்க; செருக்கி - களித்து. கால்கிளர்ந்து - காற்றைப்போலே எழுந்து; "கால்கிளர்ந் தன்ன வேழம்" முநாநு. அஉ.

உக - கூ. பெயர்வோன்றன்னை நீலயானை தொடரவெனவியைக்க; இரவுவரவென்றபடி.

உச. நம்பியர் - காதலஞ்செல்வர்; "கறுஞ்சாந் தகலத்து நம்பியர்" (சிலப். கச: க00.) வரையோர் - மகளிர்.

உரு. மகரவீணை - மகரயாழ்; இது நால்வகையாழ்களுள் ஒன்று; பதினேழுநரம்புகளையுடையது. இனிகரம்பு - குரல், இளி, துத்தம், விளரி, கைக்கிளையென்னும் ஐந்துமாம்; இதனை, "இனியெனப் படுவ இளக்குங் காலைக், குரலே யிளியே துத்தம் விளரி, கைக்கிளை யெனவைந் தாகு மென்ப" (சிலப். அ: கூ - ச. மேற்) என்பதனாலுணர்க. வடித்தல் - 'சுட்டு விரலும் பெருவிரலுங் கூட்டி நரம்பை அகமும்புறமும் ஆராய்தல்' (சிலப்.ப. உ0ச) என்பர் அரும்பதவுரையாசிரியர்; 'நரம்பை உருவுதல்' (பொநாநு. உகூ) என்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

உசு. இளி - இசை; ஏழுநரம்பினுள் ஒன்றன் பெயராயிருந்தும் எல்லாப்பண்ணிற்கும் இஃது அடிமணையாதலின், ஈண்டு இப்பொருளைத் தந்து நின்றது. சீர் - தாளவறுதி. எஃகு - வேல். சிராகிய எஃகு உளத்தைக் கிழிப்ப.

உள. எரிபொத்தி - (காமமாகிய) தீ மூட்டப்பட்டு.

(பி - ம்.) உச. 'நகரம்பிரியாவினையோர்'

பரூஅக் குருகி னுயிர்த்தவன் போயபி
னுறையுட் குடிகை யுள்வரிக் கொண்ட
மறுவில் செய்கை மணிமே கலைதான்
மாதவி மகளாய் மன்றந் திரிதரிற்
காவலன் மகனே கைவிட லீயான்
சாய்பசி யாட்டி காயசண் டிகையெனை
வூர்முழு தறியு முருவங் கொண்டே
யாற்ரு மாக்கட் காற்றுந் துணையாகி
யேற்றலு மிடுதலு மிரப்போர் கடனவர்
மேற்சென் றளித்தல் விழுத்தகைத் தென்றே
நூற்பொரு ளுணர்ந்தோர் நுனித்தன ராமென
மூதியாள் கோட்டத் தகவயி னிருந்த
வழுத சுரபியை யங்கையின் வாங்கிப்
பதியகந் திரிதரும் பைந்தொடி நங்கை

உஅ. பரூஅக்குருகின் உயிர்த்து - கொலையன் உலைமூக்குப்போலே யுயிர்த்து; பரூஅகருகு, வெளிப்பட்டு; கருவூரைப் பூவாவஞ்சியென்றும், குதிரைமலையை ஊராக்கு திரையென்றும், குழிஞ்சிப்பண்ணைக் கொய்யாக் குழிஞ்சியென்றும், நாஞ்சிற்மலையை உழாநாஞ்சிலென்றும் நூல்களில வழங்குதல் காண்க; "ஊதுலைக் குருகி னுயிர்த்து" (உ: சாத) என்றார் மூன்னும்.

கசு - உஅ. பெயர்வோன் றன்னை நீலயானைதொட, ஏராகிய எஃகு உளங்கிழிப்ப எரிபொத்தி உயிர்த்து அவன் போயபினெனக.

இனி, மணிமேகலை உதயகுமரனுக்கு அஞ்சிக் காயசண்டிகை வடிவத்துடன் பிச்சையிடுதற்கு வெளிப்படு வந்தமை கூறுவார்.

உக. உறையுட் குடிகை - இருப்பிடமாகிய சிறிய கோயிலில். உள்வரிக் கொண்ட - வேற்றுருவங்கொண்ட; உள்வரியாவது பாண்டவர் விராடநகரத்துப்பிறிதுருவங்கொண்டாற்போல்வது (அ: அசு - கூ) என்பா அடியார்க்கு நல்லார்; சிருத்திரிமவேடம் (நூ: உகசு) என்றும், வடிவமறைத்தல் (அ: அநு - கூ) என்றுங் கூறுவர் சிலப்பதிகார அரும்பத வுரையாசிரியர்.

உக. 'மாதவிமகளாய்' என்பது முதலியன மணிமேகலையின் உட்கோள். மன்றம் - உலகவறவி.

உஉ. காவலன்மகன் - உதயகுமரன். கைவிடலீயான் - கைவிடான்.

உநூ. மூ. மணி. கஎ: ஙசு.

உசூ - அ. வாங்குதலும் கொடுத்தலும் இரப்போர்கடனுமாதலின், அவர் எவ்விடத்திலும் எளிது சென்று கொடுத்தல் சிறப்புடைத்தென்று நூற்பொருளுணர்ந்தோர் ஆராய்ந்து சொன்னரெனப்படுகருதி.

சஅ. வாங்கி - கொண்டு. சக. நங்கை - மணிமேகலை.

(பி - ம்.) சக. 'பைந்தொடி மடமகள்'

யதிர்கழல் வேந்த னடிபிழைத் தாரை
யொறுக்குந் தண்டத் துறுசிறைக் கோட்டம்
விருப்பொடும் புகுந்து வெய்துயிர்த்துப் புலம்பி
சடு யாங்குப் பசியுறு மாருயிர் மாக்களை
வாங்கு கையகம் வருந்தநின் றூட்டலு
மூட்டிய பாத்திர மொன்றென வியந்து
கோட்டங் காவலர் கோமகன் றனக்கிப்
பாத்திர தானமும் பைந்தொடி செய்தியும்
நிo யாப்புடைத் தாக விசைத்துமென் றேகி
நெடியோன் குறளுரு வாகி நிமிர்ந்துதன்
னடியிற் படியை யடக்கிய வந்நா
ணீரிற் பெய்த மூரி வார்சிலை
மாவலி மருமான் சீர்கெழு திருமகள்

சஉ. பிழைத்தாரை - பிழை செய்தாரை.

சஙு. தண்டத்து - தண்டத்தினையுடைய. சிறைக்கோட்டம் - சிறைச் சாலை.

நo - சஙு. மணிமேகலை, துனித்தனராமென வாங்கிப் புகுந்து நின்று மாக்களை யூட்டலுமென்க.

இவள் பலரையும் உண்பித்தல கண்ட கோட்டங்காவலர் வியப்புற்றுச் சென்று அரசனுக்குத் தெரிவித்தல் இனிக் கூறப்படும்.

நிo. யாப்புடைத்தாக - உறுதியுடைத்தாக. இசைத்தும் - சொல்லு வேம்.

சள - நிo. கோட்டங்காவலர் வியந்து தானமும் செய்தியும் கோமக னுக்கு இசைத்துமென்றேகியென்க.

நிக. திருமாலவாமனனுகிப்பேருருவங்கொண்டு.

நிஉ. அடக்கிய - அடக்க. அங்காலில்; அடக்கிய அங்காளெனவியைத் துப் பெயரெச்சத்தொடராக்கினுமமையும்.

நிஙு. நீரிற் பெய்த - நீருடன் பூமியைக்கொடுத்த; பூமியைத் தாரை வார்த்துக் கொடுத்தவென்றபடி.

நிஉ - ஙு. அடக்கிய நீரிற் பெய்தவெனவியைக்க.

நிச. மாவலி மருமான் மகள் - மகாபலியின் வழித்தோன்றலாகிய அர சனுடைய மகள்; அரசன்பெயர் புலப்படவில்லை.*

* மகாபலியின் பரம்பரையரசர் யாரென்று விளுவியபொழுது இராசாங் கத்தச்சிலாசாசன பரிசோதகர்களுள் ஒருவராகஇருந்த ஸ்ரீ வி. வேங்கை (பி - ம்.) நிஉ - ஙு. 'அன்னளாங்கதுபெய்தி'

நிரு சீர்த்தி யென்னுந் திருத்தகு தேவியொடு
போதவிழ் பூம்பொழில் புகுந்தனன் புக்குக்
கொம்பர்த் தும்பி குழலிசை காட்டப்
பொங்கர் வண்டின ரல்லியாழ் செய்ய
வரிக்குயில் பாட மாமயி லாடும்

நிரு. சீர்த்தியென்று பெயர் கூறப்படும் செலவமிக்க தேவியுடன்.

நிசு. போது - மலரும் பருவமுள்ள அரும்பு.

நிள. குழல் - வேய்ங்குழல். நிஅ. பொங்கர் - சோலை.

நிள - அ. இவ்வடிகளித்போலவே, "குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட, மாமலே வண்டின ரல்லியாழ் செய்ய" (சு: கூ - சு) என்று முன்பு வந்திருத்தல் காண்க.

நிக. வரி - வரிப்பாட்டு; கீற்றுமாம்.

யாவர்கள் அன்புடன் எழுதியனுப்பியவிடை வருமாறு :—"பாணவம்சத்து அரசர்கள் மகாபலியின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள்; அவர்களின் கல்வெட்டுக்கள், வட ஆர்க்காடு ஜில்லா வேலூருக்கடுத்த திருவல்லமென்கிற கிராமத்திலும், மைஸூர் ஸம்ஸ்தானத்தில் குல்கான்பொடே என்கிற ஊரிலும் கிடைத்திருக்கின்றனர்; 'புவிவுலகிலும் தொழப்பட்டவனும் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் தலைவனுமிருக்கின்ற பரமேசுவருக்கு வாயில்காக்கும்படியாக நியமிக்கப்பட்ட மகாபலிதலத்தைச் சேர்ந்தவன்' என்று சிலபாணவரசர்கள், தங்களுக்குரிய கலவெட்டுக்களிற் சிறப்பிக்கப்பட்டிருக்கிறார்கள். பாணகுலத்தைச்சேர்ந்த செப்புப் பட்டயங்கள் இரண்டுண்டு. அவற்றில் ஒன்று, சீதம்பரம் கனகஸபையின் முகட்டைப் பொன்வேய்ந்த பராந்தகனென்று சொல்லப்பட்ட வீரநாராயணச்சோழன் பாணவம்சத்தை நின்மூலந்தேய்து அவர்களின் நாட்டைக் கங்கவம்சத்தைச்சேர்ந்த அத்திமல்லனென்ற அரசனுக்குக் கொடுத்ததாகச் சொல்லுகின்றது. இந்த வீரநாராயணன் கி. பி. 10-ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் ரிவித்திருந்தான். மற்றொரு செப்புப்பட்டயத்திற் கீழே எழுதப்பட்டிருக்கும் வம்சாவலி கிடைத்தது: பலி, அவன் மகன் பாணன், அவன் குலத்திற்பிறந்தவன் பாணாதிராசன், இவ்வம்சத்தைச்சேர்ந்த அநேக அரசர்கள் மரித்தபிறகு இருங்கோன் ஜயநந்திவர்மன் (இவன் ஆந்திரதேசத்திற்கு மேற்கிலிருந்த நாட்டை ஆண்டவன்), அவன் மகன் முதலாம் விசயாதித்தன், அவன்மகன் ஜகத்தேகமல்லனென்கிற மல்லதேவன், அவன்மகன் பாணவித்தியாதரன், அவன் மகன் பிரபுமேருதேவன், அவன் மகன் முதலாம் விக்கிரமாதித்தன், அவன் மகன் புகழ்விப்பவர்கண்டனென்கிற இரண்டாம் விசயாதித்தன், அவன் மகன் விசயபாகுவென்று கூறப்பட்ட இரண்டாம் விக்கிரமாதித்தன் (இவன் கிருஷ்ணராஜனென்ற அரசனுக்கு கேசன்.) இந்த அரசர்களின்காலம் தெரியவில்லே".

(பி - ம்.) நிரு. 'சீதரதகையெனும்', 'சீதாதிகையெனும்' நிசு. 'பொருந்தினள்புக்கு', 'புகுந்தனள்புக்கு' நிள. 'கொம்பலாதகுழலிசைகாட்ட'

சு० விரைப்பூம் பந்தர் கண்டுளஞ் சிறந்தும்
புணர்துணை நீங்கிய பொய்கை யன்னமொடு
மடமயிற் பேடையுந் தோகையுங் கூடி
யிருசிறை விரித்தாங் கெழுந்துடன் கொட்பன
வொருசிறைக் கண்டாங் குண்மகிழ் வெய்தி
சுரு மாமணி வண்ணனுந் தம்முனும் பிஞ்ஞையு
மாடிய குரவையிஃ தாமென நோக்கியுங்
கோங்கலர் சேர்ந்த மாங்கனி தன்னைப்
பாங்குற விருந்த பல்பொறி மஞ்ஞையைச்
செம்பொற் றட்டிற் றீம்பா லேந்திப்
எ० பைங்கிளி யூட்டுமோர் பாவையா மென்று

(நி-ள) சு०. காட்டைச் செய்யப் பாட ஆடும்பந்தர்களைப் உளஞ்சிறந்து மென்க.

சுக. துணை - பெண்ணன்னம். சுஉ. தோகை - ஆண்மயில்.

சுங. கொட்பன - சுழலுவனவற்றை. சுச. ஒருசிறை - ஒருபக்கம்.

சுரு. மாமணிவண்ணர் - கண்ணன். தம்முன் - பலதேவர். பிஞ்ஞை - நப்பின்னை.

சுசு. ஆடிய - (துவராபதியில் எருமன்றத்தே அக்காலத்து) ஆடிய. குரவை - கைகோத்தாடுங்கூத்து ; இதனை, வரிக்கூத்தின் ஒருறுப்பென்றும், வினைதக்கூத்து ஆறினுள்ளென்றும் (சிலப். கூ: கஉ) கூறுவர் அடியார்க்கு நல்லார்.

சுரு - சு. கண்ணபிரான் பலதேவரும் நப்பின்னையுமாகிய மூவரும் துவராபதியில் எருமன்றத்தே குரவைக்கூத்து ஆடியதனை, "மாயவன்தம் முன்னினெனும் வரிவினைக்கைப் பின்னையொடுங், கோவலர்தஞ் சிறுமியர்கள் குழற் கோதை புறஞ்சோர, வாய்வளைச்சீர்க் கடிபெயர்த்திட் டசோதையார் தொழுதேத்தத், தாதெருமன் றத்தாடுங் குரவையோ தகவுடைத்தே" (சிலப்.ப. சசஎ) என்பதனாலுணர்க.

சுக - சு. அன்னத்திற்குப் பலதேவரும், மயிற்பேடைக்கு நப்பின்னையும், தோகைக்குக் கண்ணனும் உவமைகள். கொட்பனவற்றைக் கண்டு மகிழ்வெய்திக் குரவையிஃதாமென நோக்கியுமென்க.

சுஎ. கோங்கலர் - கோங்கம்பூ. சுஅ. மஞ்ஞை - மயில்.

எ०. பாவை - பெண். என்றும் - என்று கருதியும்.

சுஎ - எ०. கோங்கலர்க்குப் பாலையுடைய பொற்றட்டும், மாங்கனிக் குக்கிளியும், மயிலுக்குப் பெண்ணும் உவமைகள்.

(பி - ம்.) சு०. 'சிறந்து' சுக. 'அனமொடும்' சுஉ. 'பேடையுஞ் சேவலுங்கூடி' சுச. 'சிறை கண்டா.....வெய்திய' சுரு. 'பின்னையும்' சுசு. 'குரவையிதாமென' எ०. 'ஊட்டுமோபாவை'

மணிமலர்ப் பூம்பொழி லகவயி னிருந்த
பிணவுக்குரங் கேற்றிப் பெருமதர் மழைக்கண்
மடவோர்க் கியற்றிய மாமணி யூசல்
கடிவ னூக்குவது கண்டுகை யெய்தியும்
எடு பாசிலை செறிந்த பசுங்காற் கழையொடு
வால்வீ செறிந்த மராஅங் கண்டு
நெடியோன் மூன்றெடு நின்றன னுமெனத்
தொடிசேர் செங்கையிற் றெழுதுகின் றேத்தியு
மாடற் கூத்திலே டவிநயக் தெரிவோர்
அ0 காடகக் காப்பிய நன்னூ னுனிப்போர்
பண்ணியாழ் நரம்பிற் பண்ணுமுறை நிறுப்போர்

எஉ. பிணவுக்குரங்கு - பெண்குரங்கு ; "பன்றி புல்வாய் காயென மூன்று, மொன்றிய வென்ப பிணவென் பெயர்க்கொடை" (தொல். மரபு. நிஅ) என்னும் சூத்திரத்தில் 'ஒன்றிய' என்றதனுற் 'பிணவு' என்பது குரங்குக்கும் கொள்ளப்பட்டது.

எங. மடவோர்க்கு - மகளிர்க்கு.

எச. கடிவன் - ஆண்குரங்கு; "குரங்கி னேற்றினைக் கடிவ னென்றலும்" (தொல். மரபு. சூ. சுஅ.) ஊக்குவது - செலுத்துதலை.

எக - ச. கடிவன், பிணவுக்குரங்கை யேற்றி ஊசலை ஊக்குவதுகண்டு நகையெய்தியுமென்க.

எடு. கழை - மூங்கில்.

எசு. வால்வீ - வெள்ளியமலர். மராம் - வெண்கடம்பு.

எள. நெடியோன் - கண்ணன். மூன் - தமையன் ; என்றது பல தேவரை.

எடு - எ. கழைக்குக் கண்ணனும் வெண்கடம்பிற்குப் பலதேவரும் உவமைகள்.

எஅ. தொடி - வீரவளை; "தொடித்தோட்கை துடிப்பாக" மதுரை. ஙச.

எங. அவிநயம் - கதைதழுவாதே பாட்டுக்களின் பொருள்தோன்றக் கைகாட்டி அபிநயிப்பது.

அ0. நாடகம் - கதைதழுவிவருங்கூத்து. காப்பியம் - காவ்யம். நாடகக்காப்பியமாகிய நன்னூலென்க. நுனிப்போர் - கூர்ந்து ஆராய்வோர் ; "நூற்பொரு ளுணர்ந்தோர் நுனித்தனர்" (ஙஅ) என இக்காதையிலேயே முன்பு வந்திருத்தல் காண்க.

அக. பண்களையுடைய வீணைநரம்புகளிற் பண்களை முறையே நிறுத்துவோர்.

(பி - ம்.) எஉ. 'பெருந்தாமரைக்கண்' எச. 'கண்மெழிவெய்தியும்' எடு. 'காலிக்களையொடு'

தண்ணுமைக் கருவிக் கண்ணெறி தெரிவோர்
குழலொடு கண்டங் கொளச்சீர் நிறுப்போர்
பழுநிய பாடல் பலரொடு மகிழ்வோ
அரு ராரம் பரிந்த முத்தந் கோப்போ
ரீரம் புலர்ந்த சாந்தந் திமிர்வோர்
குங்கும வருணங் கொங்கையி னிழைப்போ
ரஞ்செங் கழுநீ ராயிதழ் பிணிப்போர்
ரன்னெடுங் கூந்த னறுவிரை குடைவோர்
கூo பொன்னி னுடியிற் பொருந்துபு நிற்போ
ராங்கவர் தம்மோ டகலிரு வானத்து
வேந்தனிற் சென்று விளையாட் டயர்ந்து

அஉ. தண்ணுமைக்கருவி - மத்தளம் ; இதனை உத்தமத்தோற்கருவி யென்பர். கண்ணெறிதெரிவோர் - அதன் முகத்தில் அடித்தலையாராய்வோர்; கண் - வாத்தியங்களின் முகம்; "பண்ணமை முழவின் கண்ணெறி யறிந்து" சிலப். கூ: கூக.

அங. குழலொடு கண்டம் கொள - வேய்ங்குழலோடு மிடற்றுப்பாடல் பொருந்தும் வண்ணம். சீர் - தாளவறுதி.

அச. பழுநிய பாடல் - முற்றுப்பெற்ற இசைப்பாடல். மகிழ்வோர் - மகிழ்ந்துபாடுவோர்.

அரு. ஆரம் பரிந்தமுத்தம் -ஆரம் அறுபடுதலாற் சிந்தியமுத்துக்கள்.

அசு. புலர்ந்த சாந்தம் - உலர்ந்த சந்தனம்.

அள. குங்குமவருணம் - சிவந்ததொய்யிற்குழம்பு. இழைப்போர் - எழுதுவோர்.

அஅ. ஆயிதழ்பிணிப்போர் - அழகிய இதழைக்கட்டுவோர்.

கூo. ஆடி - கண்ணாடி.

எக -கூக. தெரிவோரும், தூனிப்போரும், நிறுப்போரும்,தெரிவோரும், நிறுப்போரும், மகிழ்வோரும், கோப்போரும், திமிர்வோரும், இழைப்போரும், பிணிப்போரும், குடைவோரும், நிற்போருமாகிய அவர்களோடென்க.

கூக - உ. வானத்து வேந்தனில் - இந்திரன்போல; "வேந்தன் மேய தீம்புன லுலகமும்" (தொல். அகத். சூ. நிரு), "வேந்தனும் வேந்து கெடும்" (குறள். அகக) என வருதலால், வேந்தனென்றதற்கே இந்திரனென்று பொருள்கூறினும் இழுக்காது. விளையாட்டயர்ந்து - விளையாட்டை விரும்பிச்செய்து.

(பி - ம்.) அச. 'பழனிப்பாடல்பலவொடுமகிழ்வோர்' அரு - அ. 'கோப்போர், செங்ழுநீராற் சேயிதழ் பிணைப்போர்' அக. 'கூந்தனறுவிரை' கூo. 'பொன்னனியாடி', 'பொன்னணியாடியின்'

குருந்துந் தளவுந் திருந்துமலர்ச் செருந்தியு
முருகுவிரி முல்லையுங் கருவிளம் பொங்கரும்
பொருந்துபு நின்று திருந்துநகை செய்து
குமுங்கா னகுலமு நெடுஞ்செவி முயலும்
பிறழ்ந்துபாய் மானு மிறும்பகலா வெறியும்
வம்மெனக் கூஉய் மகிழ்துணை யொடுதன்
செம்மலர்ச் செங்கை காட்டுபு நின்று
மன்னவன் ருனு மலர்க்கணை மைந்தனு
மின்னிள வேனிலு மிளங்காற் செல்வனு
மெந்திரக் கிணறு மிடுங்கற் குன்றமும்
வந்துவீ ழருவியு மலர்ப்பூம் பந்தரும்
பரப்புநீர்ப் பொய்கையுங் கரப்புநீர்க் கேணியு
மொளித்துறை யிடங்களும் பளிக்கறைப் பள்ளியும்
யாங்கணும் நிரிந்து தாழ்ந்துவீழ் யாடி

கூசு. தளவு - செம்முல்லை. செருந்தி - ஒருமரம்; இது செருத்தென வும் வழங்கும்.

கூச. முருகு - வாசனை. கருவிளை - ஒருமரம்; "அந்தண் ணிதழுஞ் சந் தனக் குழையுங், கருவிளங் கோடும்" (பெருங். க.சக:கூஉ - கூ.) பொங்கர் - சோலை; கிளையுமாம்.

கூசு. நகுலம் - கீரி. கூஎ. இறும்பு - குறுங்காடு. வெறி - ஆடு.

கூஅ. வம்மெனக்கூஉய் - வாருமென்றழைவி; வாருமென்றது 'வம்' என நின்றது; "கதுமெனக் கரைந்து வம்மெனக் கூஉய்" (பொருந. கஅக.) மகிழ் துணை - இராசமாதேவி.

கூக. காட்டுபு - காட்டி. கஅஅ. மலர்க்கணை மைந்தன் - மன்மதன்.

கஅக். இன்னிள வேனில்: (சிலப். அ: குஎ.) இனிய இளவேனிற்பரு வம்; அஃதாவது சித்திரைவைகாசி மாதங்கள். இளங்காற் செல்வன் - தென்றற்காற்றுகிய செல்வன்; "சிறுகாற் செல்வன் மறுகிற் றூற்ற" சிலப். ச: கஅ.

கஅஉ. எந்திரக்கிணறு - நீரை நிறைக்க வேண்டுமாயின் நிறைத்துப் போக்கவேண்டுமாயிற் போக்குதற்குரிய கிணறு. இடுங்கற்குன்றம் - செய் குன்று.

கஅச. கரப்புநீர்க்கேணி - மறைதலையுடைய நீரையுடைய கிணறு; இதனை அந்தக்கேணியென்பர்.

கஅடு. பளிக்கறை - பளிங்கறை. பள்ளி - இடம்.

கஅசு. யாங்கணும் -கிணறும் குன்றமும் அருவியும் பந்தரும் பொய்கை (பிழை ம்.) கூசு. 'குருகுருதளவு திருமலர் சொரிந்து', 'குருகுருந்தளவுந் திருமலர்ச் செருந்தியும்' கூஎ. 'வரும்புகயாவெறியும்', 'இரும்பகவாவெறி கஅஉ. 'இடுதற்குன்றமும்' கஅச. 'கரப்புநீர்க்கணியு'

மகத விணைஞரு மராட்டக் கம்மரு
மவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடிக்
ககo கொண்டினி தியற்றிய கண்ணவர் செய்வினைப்
பவளத் திரள்காற் பன்மணிப் போதிகைத்
தவள நித்திலத் தாமந் தாழ்ந்த
கோணச் சந்தி மாண்வினை விதானத்துத்
தமனியம் வேய்ந்த வகைபெறு வனப்பிற்
ககடு பைஞ்சேறு மெழுகாப் பசும்பொன் மண்டபத்

யும் கேணியும் இடங்களும் பள்ளியுமாகிய எவ்விடத்தும். திரிந்து - மன்ன வன்முனும் மைந்தனும் வேனிலும் செல்வனுந் திரிந்து.

கoஉ - சு. இவ்வடிகளிற்போலவே, "அந்தக்கேணியு மெந்திரக் ஙிண றுங்,தண்பூங் காவுந் தலைத்தோன் தருவிய, வெண்சுதைக் குன்றெடு வேண் டுவ பிறவு, மிமையோர்க் கியற்றிய விளையாட் டிடத்த, சித்திரப் பூமி வித்தக கோக்கி" (பெருங். க. நக: நூ-எ), "டளிக்கதைப் பூமியும் பன்தெறி களத்து,மணிக்கயிற் றூசன் மறலிய விடத்துங்,கொய்ம்மலர்க் காவும் பொய் கைக் கரையு, மந்தக் கேணியும் வந்துபெயர் கூவி" (பெருங். க. நச: ககடு - அ) என வருதல்காண்க.

கoஎ. மகதவினைஞர் - மகதநாட்டுப்பிறந்த இரத்தினவேலைக்காரர். மராட்டம் - மகாராஷ்டிரதேசம்.

கoஅ. அவந்தி - அவந்திதேசம். யவனம் - யவனதேசம்.

கoஎ - அ. மகததேசத்துப் பிறந்த இரத்தினவேலைக்காரர் முதலி யோர் தொழிலிற் பெயர்பெற்றவரென்பதை, "யவனத் தச்சரு மவந்திக் கொல்லரு, மகதத்துப் பிறந்த மணிவினைக் காரரும், பாடலிப் பிறந்த பசும் பொன் வினைஞருங், கோசலத் தியன்ற வோவிய தொழிலரும், வத்த நாட்டு வண்ணக் கம்மரும்" (பெருங். க. நுஅ: சo - சச) என்பதனாலுணர்க.

கoஎ - கூ. மேற்கூறிய மகதவினைஞர் முதலியோர் தண்ணிய தமிழ் நாட்டிற்பிறந்த வேலைக்காரருடனேகூடி.

ககஉ. நித்திலத்தாமம் - முத்துமாலை.

ககங. கோணச்சந்தி - கோணமாகியசந்தி; "சந்திக் கோணமு மந்திர வாணியும்" (பெருங். க. நுஅ: நுக.) விதானம் - மேற்கட்டி.

ககச. தமனியம் - பொன்.

ககநி. பைஞ்சேறு மெழுகா - ஆப்பியால் மெழுகப்படாத; "பைஞ் சேறு மெழுகிய படிவ நன்னகர்" (பெரும்பாண். உகூஅ); சந்தனத்தால் மெழுகியவென்றபடி; "மங்கல வெள்ளை வழித்துமுத் தீர்த்தபின்" (சீவக. கசஎஎ) எனவருதல் காண்க.

(பி - ம்.) கoஎ. 'மாட்டக்கம்மரும்' ககநி. 'செம்பொன்மண்டபத்தி'

திங்திர திருவன் சென்றினி தேறலும்
வாயிலுக் கிசைத்து மன்னவ னருளாற்
சேய்நிலத் தன்றியுஞ் செவ்வியின் வணங்கி
யெஞ்சா மண்ணைசை இகலுளர்த் துரப்ப
கஉ0 வஞ்சியி னிருந்து வஞ்சி சூடி
மு,ரஞ்செவி யாணையுர் தேரு மாவு
மறங்கெழு கெடுவாள் வயவரு மிடைந்த
தலைத்தார்ச் சேணையொடு மலைத்துத் தலைவந்தோர்

ககசு. இந்திரதிருவன் - இந்திரச்செல்வமுடைய அரசன்.

ருக - ககசு. இந்திரதிருவன், தேவியொடுபுக்குக் கண்டு உளஞ்சிறக் தும் கோக்கியும் பாவையாமென்றும் நகையெய்தியும் ஏத்தியும் அவர்தம் மோடுசென்று அயர்ந்து பொருந்துபுன்று நகைசெய்து கூஉய்க் காட்டுபு ன்று யாங்கணுர்திரிந்து விளையாடி மண்டபத்து அவன் சென்று இனிது ஏறலுமென்க.

ககள. வாயிலுக்கு இசைத்து - வாயில் காவலர்க்குத் தெரிவித்து. அரு ளால் - கட்டளையால்.

ககஅ. சேய்நிலத்தன்றியும் - தூரமான இடத்தே தாம் ன்றதல்லா மலும். செவ்வியின் - சமயத்தில்.

சஅ - ககஅ. கோட்டங்காவலர் இசைத்துமென்றேகி இசைத்து வணங்கியெனக் கூட்டுக.

ககஙூ. குறையாத மண்ணைவிரும்பி மாறுபாடு உள்ளத்தைச்செலுத்த.

கஉ0. வஞ்சியின் இருந்து - கருஞூரிலிருந்து. வஞ்சி சூஉ - வஞ்சிப் பூ மாலையைச்சூடி; "பூவா வஞ்சியிற் பூத்த வஞ்சி,வாய்வா ணெடுந்தகை மணி முடிக் கணிந்து" (உசு: ரு0 - ருக) என்று சிலப்பதிகாரத்தும் கூறப்பட்டி ருத்தல் காண்க.

ககஙூ - உ.0. இதனை, "எஞ்சா மண்ணசை வேத்தனை வேந்த, னஞ்சு தகத் தலைச்சென் றடல்குறித் தன்றே" (தொல். புறத். சூ. எ), "வாடா வஞ்சித்தலைமலைந்து, கூடார்மண் கொளல்குறித் தன்று", "வஞ்சி வணங்கார் வணக்கிய வண்டார்ப்பக், குஞ்சி மலைந்தானெங் கோ" (பு - வெ. வஞ்சி. க) என வருவனவற்றுடனுணர்க.

கஉக. முறஞ்செவி யாணை - முறம் போலும் காதுகளையுடையயானை; "முறஞ்செவி வாரணம்" சிலப். கo: உசஎ.

கஉஉ. மறம் - ஆண்மை. வயவர் - வீரர்.

கஉங. தலைத்தார்ச்சேணையொடு-முதன்மையாகிய தூசிப்படையோடு; (சிலப். உசு: அo.) மலைத்து - மாறுபட்டு. தலைவந்தோரென்றது, சேர

(பி - ம்.) ககசு. 'சிறவனேறினெனன்றலும்' ககங. 'எஞ்சார்மண்ண சைமேலுலந்துரப்ப' கஉக - உ. 'மாவு, மறங் கெழுகெடுவாள் மறவரும்'

சிலைக்கய னெடுங்கொடி செருவேற் றடக்கை
கஉடு யார்புனை தெரிய லிளங்கோன் றன்னற்
காரியாற்றுக் கொண்ட காவல் வெண்குடை
வலிகெழு தடக்கை மாவண் கிள்ளி
யொளியொடு வாழி யூழிதோ றூழி
வாழி யெங்கோ மன்னவர் பெருந்தகை
கஉ0 கேளிது மன்னே கெடுகநின் பகைஞர்
யானைத் தீநோய்க் கயர்ந்துமெய் வாடியும்
மாநகர்த் திரியுமோர் வம்ப மாத
ரருஞ்சிறைக் கோட்டத் தகவயிற் புகுந்து
பெரும்பெயர் மன்ன நின்பெயர் வாழ்த்தி
கஉடு யையப் பாத்திர மொன்றுகொண் டாங்கு

பாண்டியர்களே; பின் "சிலைக்கய னெடுங்கொடி" என்று வருதலால இங்ஙனங் கொள்ளப்பட்டது.

கஉச. சிலைக் கயல் நெடுங்கொடி - சேரனுடைய வில்கொடியையும், பாண்டியனுடைய கயற்கொடியையும்.

கஉடு. ஆர் - ஆத்தி; இது சோழர்களுக்கு உரிய அடையாளமாகலை. இளங்கோன் - தம்பி; இவன் யுவராசாவாக இருத்தலின், 'இளங்கோன்' என்றார் போலும்.

கஉசு. காரியாறு - ஒருநதியின்பெயர். இதனை, 'காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி' (புறநா. சஎ), "செல்கதிரழல் வளிப்பார்த்த திருக்காரிக் கரைபணிந்து" (பெரிய. திருநா. கூகஉ) என வருவனவற்றாலுணர்க. பெரும் போர்புரிவோர் ஆற்றிடையே அது செய்தல் இயலபு; "உடன்றுமேல் வந்த வாரிய மன்னரைக், கடும்புனற் கங்கைப் பேர்பாற்று வென்றோய்" சிலப். உஅ: கஉ0 - உக.

கஉஎ. மாவண்கிள்ளி, விளி; இஃது அரசன் பெயர்.

கஉஏ - எ. வம்தோருடைய கொடிகளை இளங்கோனுற் காரியாற்றுக கொண்ட மாவண்கிள்ளியென்க.

கஉஅ. ஒளி - உதயகாலத்திற்கவும் உலகங்காக்கின்ற அரசரிடத்துள்ள கடவுட்டன்மை; "இனைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற, வொளியோ டொழுகப் படும்" (குறள். சுகூஅ); "உறங்கு மாயினு மன்னவன் றன்னெளி, க்றங்கு தெண்டிரை வையகங் காக்குமால்" சீவக. உசஅ.

கஉக. அயர்ந்து - கவலையுற்று.

கஉஉ. வம்பமாதர் - காயசண்டிகை; வம்பு - புதுமை.

கஉச. பெரும்பெயர் - மிக்க புகழ்; பெரும்பெயர்மன்னன்: சிலப். கஉ:' கஉஅ.

(பீ-ம்.) கஉஅ. 'ஒலியொடுவழாஅதூழி' கஉசு. 'வாழியெங்கோவாழிய பெருந்தகை'

மொய்கொண் மாக்கண் மொசிக்கவுண் ணரந்தன
ரூழிதோ றூழி யுலகங் காத்து
வாழி யெங்கோ மன்னவ வென்றலும்
வருக வருக மடக்கொடி தானென்
கசo றருள்புரி நெஞ்சமொ டரசன் கூறலின்
வாயி லாளரின் மடக்கொடி தான்சென்
றுய்கழல் வேந்த னருள்வா ழியவெனத்
தாங்கருந் தன்மைத் தவத்தோய் நீயார்
யாங்கா கியதிவ் வேற்திய கடிஞையென்
கசரு றரசன் கூறலு மாயிழை யுரைக்கும்
விரைத்தார் வேந்தே நீநீடு வாழி
விஞ்சை மகள்யான் விழவணி மூதார்
வஞ்சந் திரிந்தேன் வாழிய பெருந்தகை
வானம் வாய்க்க மண்வளம் பெருகுக
கருo தீதின் றுக கோமகற் கீங்கி
தையக் கடிஞை யம்பல மருங்கோர்

கசு. மொய் - நெருக்கம். மொசிக்க - உண்ண; "மையுண் மொசித்த வொக்கலொடு" புறநா. கூசு.

கசஉ - சு. மாதர் புகுந்து வாழ்த்திக் கொண்டு ஊண்சுருங்கினள்.
கசஅ. என்றலும் - என்று கோட்டங் காவலர் கூறலும்.

கசள - அ. சீலப். கச: கரு - சு; உரு: கஅக - உ; உள: கசங்-சo; உஅ: கஅரு - சு.

கசக. மடக்கொடி வருக வருகவென்று.
கசக. வாயிலாளரின் - வாயிலாளர்களால்.
கசஉ. வாழியவென - வாழ்கவென்று மணிமேகலைசொல்ல.

மேல்வருவது அரசன் கூற்று.
கசச. நீ ஏந்திய இப்பாத்திரம் எங்கே கிடைத்தது.

மேல்வருவன மணிமேகலைகூற்று.

கசள. விஞ்சைமகளென்பதற்கு வித்தையையுடைய மகளென்றும் வித்தியாதரமகளென்றும் இருபொருள்கொள்க. பின்வருவனவும்இப்படியே ஏற்பப்பொருள்கொள்ளுதற்குரியவை.

கசசு. வானம் - மழை. கருo. கோமகற்குத் தீதின்றுகுக.

கருo - ருக. ஈது ஐயக்கடிஞை - இது பிச்சைப்பாத்திரம்.

(பி - ம்.) கசு. 'மூசிக்க', 'பொசிக்க' கசஉ. 'தாள்வாழிய' கசக. 'தவத்தீர்நீர்' கசரு. 'அரசுகூறலும்' கசசு. 'விரைதார் வேற்தேநீடூழி' கருo - ருக. 'கோமகன்தனக்கிங், கைய கடிஞை'

தெய்வந் தந்தது திப்பிய மாயது
யானைத் தீநோ யரும்பசி கெடுத்த
தானுடை மாக்கட் குயிர்மருந் தாதுவென
யான்செயற் பாலதென் னிளங்கொடிக் கென்று
வேந்தன் கூற மெல்லிய லுரைக்குஞ்
சிறையோர் கோட்டஞ் சீத்தரு ணெஞ்சத்
தறவோர்க் காக்கு மதுவா ழியரென
வருஞ்சிறை விட்டாங் காயிழை யுரைத்த
பெருந்தவர் தம்மாற் பெரும்பொரு ளெய்தக்
கறையோ ரில்லாச் சிறையோர் கோட்ட
மறவோர்க் காக்கின னரசாள் வேந்தென்.

சசூ.—சிறைக்கோட்டமறக்கோட்டமாக்கியகாதை முற்றிற்று.

கடுஉ. திப்பியமாயது -தெய்வலோகத்திருந்து உண்டாகிய பொருளா வுள்ளது.

கடுசி. உடம்பு மெலிந்தவர்களுக்கு உயிரைக்கொடுக்குமருந்து. என - என்று மணிமேகலை சொல்ல.

கடுஎ - அ. சிறைச்சாலையை இடித்துத் தூய்மைசெய்து அவ்விடத்தை அருள்பொருந்திய மனத்தையுடைய முனிவர்களுக்கு உரிய இடமாகச் செய்யுமதுவே நீ செயற்பாலதென்று மணிமேகலை சொல்ல.

கசுo. பெரும்பொருள் - அறம் ; ஞானமுமாம்.

கசுக. கறையோர் - கடமை கொடுப்போர். இல்லாக்கோட்ட மென்க; என்றதனால், அரசன் கறைவீடுசெய்த செங்கோன்முறையையுடையனென்ற வாறுயிற்று; இதனை, "சிறைப்படு கோட்டஞ் சீமின் யாவதுங், கறைப்படு மாக்கள் கறைவீடு செய்ம்மி, னிடுபொரு ளாயினு, மடுபொரு ளாயினு, முற்றவர்க் குறுதி பெற்றவர்க் காமென, யானை யெருத்தத் தணிமுர சிரீஇக், கோன்முறை யறைந்த கொற்ற வேந்தன்", "சிறையோர் கோட்டஞ் சீமின் யாங்கணுங், கறைகெழு நாடு கறைவீடு செய்ம்மென" (சிலப். உசு : கஉசு - சுக ; உஅ : உoசு - சி) ; "அதம்பியை முகத்து ணேக்கி, யூர்பிணி கோட்டஞ் சீப்பித் தறுதல ணுண்ட நாட்டைப், பார்பிணி கறையி னீங்கப் படாமுர சறைவி யென்றான்" (சீவக. உசுஎஉ) என்பனவற்றாலறிக.

கடுகசுஉ. தாரோன் வணங்கிக் கூறத்தெய்வங் கூறலும், உள்ளங்கலங்கி வருந்தி அறிவாமெனப் பெயர்வோன்றன்னை நீலயானை தொடர ஏஃகு ளகன்

(பி - ம்.) கடுஉ. 'தெய்வந்தந்து திபைபியமாயது' கடுசி. 'மானிட மாக்க ளுயிர்மருந்தி' கடுசு. 'வேந்தன் கூறி' கடுஎ. 'கோட்டஞ் சிதைத்து' கடுஅ. 'அறவோர் காக்குமதிவாழிய ' கடுசு. 'அருஞ்சிறைவிடுத்தாயிழை தானென' கசுஉ. 'மறவோர் நகாகனினளாசாள'

இழிப்ப அவன் பொத்தி உயிர்த்துப் போயபின், மணிமேகலை துனித்தனென்று கருதி வாங்கிக் கோட்டம்புகுந்து மாக்களை ஊட்டலும், காவலர் வியந்து கோமகனுக்கு இசைத்துமென்றேகி, திருவன் சென்று ஏறலும், வாயிலுக்கிசைத்து வணங்கி, 'மன்னவ, வம்பமாதர் ஊண் சுரத்தனள்' என்றலும், 'வருகவருக' என்று அரசன்கூறலின், மடக்கொடி வாயிலாளரிற் சென்று 'நின் அருள்வாழிய' என, 'யாங்காகியது' என்று அரசன் கூறலும், ஆயிழையுரைக்கும்; அங்ஙனமுரைப்பவர் 'உயிர்மருந்து இது' என, 'யான் செயற்பாலது என்' என்று வேந்தன்கூற, மெலியல் உரைக்கும்; அங்ஙனம் உரைப்பவள் 'நீ செயற்பாலது அறவோர்க்கு ஆக்குமது' என, வேந்து பெரும்பொருளெய்துதற்குக் கோட்டத்தை அறவோர்க்கு ஆக்கினனென விணைமுடிவு செய்க.

இருபதாவது

உதயகுமரனைக் காஞ்சனன் வாளாலெறிந்தகாதை.

[இருபதாவது மணிமேகலை காயசண்டிகைவடிவெய்த்க் காயசண்டிகை கணவனுகிய காஞ்சனனென்னும் விச்சாதரன் வந்து காயசண்டிகையாமெனக்கருதி அவள் பின்னிலைவிடா உதயகுமரனைப் புதையிருட்கண் உலகவறவியில் வாளாலெறிந்துபோன பாட்டு.]

அரச ஞணையி னுயிழை யருளா
னிரயக் கொடுஞ்சிறை நீக்கிய கோட்டக்
தீப்பிறப் பழுந்தோர் செய்வினைப் பயத்தான்
யாப்புடை நற்பிறப் பெய்தினர் போலப்
நு பொருள்புரி நெஞ்சிற் புலவோன் கோயிலு

உ. நிரயக் கொடுஞ்சிறை - நரகவேதனையைச்செய்யும் கொடியசிறை. கோட்டம் - அறை.

ஊ. தீப்பிறப்பழுந்தோர் - கொடிய பிறவியிற்பிறந்து வருந்தினோர்.

ச. யாப்பு - பொருத்தம்.

நு. பொருள்புரிநெஞ்சிற் புலவோன் - சத்தியம் நான்கினையும் விரும்பிய நெஞ்சினையுடைய புத்தன் ; பொருள் - சத்தியம்.

(பி - ம்.) ஊ. 'செய்தவம் பயந்தநால்', 'செய்ததவப்பயத்தால்' ச. 'எய்தினபோல'

மருள்புரி நெஞ்சத் தறவோர் பள்ளியு
மட்டிற் சாலையு மருந்தினர் சாலையுங்
கட்டுடைச் செல்வக் காப்புடைத் தாக
வாயிழை சென்றதூஉ மாங்கவ டனக்கு
கo வீயா விழுச்சீர் வேந்தன் பணித்ததூஉஞ்
சிறையோர் கோட்டஞ் சீத்தரு ணெஞ்சத்
தறவோர் கோட்ட மாக்கிய வண்ணமுங்
கேட்டன ஞகியத் தோட்டார் குழலியை
மதியோ ரெள்ளினு மன்னவன் காயினும்
கரு பொதியி னீங்கிய பொழுதிற் சென்று
பற்றினன் கொண்டென் பொற்றே ரேற்றிக்
கற்றறி விச்சையுங் கேட்டவ ளுரைக்கு
முதுக்குறை முதுமொழி கேட்குவ னென்றே

சு. அறவோர் - பௌத்தமுனிவர்; "அறவோர் பள்ளியு மறனெம் படையும்" (சிலப். நிர: களக), "அருணெஞ்சத், தறவோர் கோட்டம்" (கக - உ) என்று இக்காதையிற் பின்பு கூறுதல் காண்க.

எ. அட்டிற்சாலை - மடைப்பள்ளி; அருந்தினர்சாலை - போசனசாலை.

அ. கட்டு - உறுதி. காப்பு உடைத்தாக - காவலியுடையதாக.

உ - அ. கோட்டம் காப்புடைத்தாகவென இயைக்க.

கூ. ஆயிழை - மணிமேகலை.

கo. வீயாவிழுச்சீர் - மாறுத சிறந்த கீர்த்தி. பணித்தது - சொல்லியது; அது, "யான்செயற் பாலதெ னிளங்கொடிக்கு" (மணி. ககூ: கருரு) என்றது.

கக - உ. அருணெஞ்சத் தறவோர்: மணி. உo: சு.

கஙூ. கேட்டனனகி - (உதயகுமரன்) கேட்டு. தோடார்குழலி, தோட்டார்குழலியென விகாரம்; சிலப். ப. சoக.

கச. மதியோர் எள்ளினும் - அறிவுடையோர் இகழ்வாராயினும். காயினும் - கோபித்தாலும்.

கரு. பொதியில்=பொது இல் - அம்பலம்.

கசு. பற்றினன்கொண்டு - பிடித்துக் கொண்டு.

கள. விச்சை - வித்தை; உம்மை, இறந்தது தழீஇயது.

கஅ. முதுக்குறை முதுமொழி: மணி. கஅ: கசுள; உo: எச.

(பி - ம்.) கூ. 'சென்றதுமாங்' கக-உ. 'சிறையோர் நீங்கிச் சிறையோர் கோட்ட, மறவோர் கோடட' கஙூ. தோட்டலர் குழலியை' கரு. 'நீங்கிப் பொழுதிற்' கள. 'கற்றறி விஞ்சையும்' கஅ. 'முதுக்குறை மொழியுங் கேட்குவன்'

மதுக்கமழ் தாரோன் மனங்கொண் டெழுந்து
உ0 பலர்பசி கூர்யப் பாவைதா ஞெதுங்கிய
வுலக வறவியி னூடுசென் றேறலு
மழைசூழ் குடுமிப் பொதியிற் குன்றத்துக்
கழைவளர் கான்யாற்றுப் பழவினைப் பயத்தான்
மாதவன் மாதர்க் கிட்ட சாப
உரு மீரா ருண்டு வந்தது வாராள்
காயசண் டிகையெனக் கையற வெய்திக்
காஞ்சன னென்னு மவடன் கணவ
ஞெங்கிய மூதூ ருள்வந் திழிந்து
பூத சதுக்கமும் பூமலர்ச் சோலையு
ங0 மாதவ ரிடங்களு மன்றமும் பொதியிலுங்

கக. தாரோன் - உதயகுமரன். உக. ஊடு - உள்ளே.

கூ - உக. சென்றதூஉம் பணித்ததூஉம் வண்ணமும்கேட்டு எள்ளினும் காயினும் சென்று குழலியைப்பற்றிக்கொண்டு ஏற்றிக் கேட்டுக் கேட்குவ னென்று மனங்கொண்டு தாரோன் எழுந்து சென்று ஏறலுமென்க.

மேலே, காஞ்சனன் காயசண்டிகையைத் தேடிப்போந்ததும், உதய குமரனைக் கொன்றதும் கூறப்படும்.

உஉ. பொதியிற்குன்றம் - பொதியின்மலை.

உங. கழை - மூங்கில். யாற்று - ஆற்றில். உச. மாதவன் - விருச்சிகன். மாதர்க்கு - காயசண்டிகைக்கு.

உடு. ஈராருண்டு - பன்னிரண்டுவருடம்.

உசு. கையறவு - செயலறுதல். உடு - சு. காயசண்டிகை வாராள்.

உஅ. மூதூர் - காவிரிப்பூம்பட்டினம். இழிந்து - இறங்கி; என்ற தனால், காஞ்சனன் ஆகாய கமனமுடையனென்பது பெறப்பட்டது; "விஞ் சையன் போயினன் விலங்குவிண் படர்ந்தென்" (கஉங) என்று இக்காதையிற் பின்வருதல் காண்க.

உசு. பூதசதுக்கம் - தவவேடத்தில் மறைந்துநின்று அத்தவத்திற்கு இழுக்கானவற்றின்கணழுகும் பொய்வேடத்தார்முதலிய அறுவகையோரை யும் பாசத்தாற்கட்டி அடித்துண்ணும் பூதம் நிற்றற்கிடமாகிய சதுக்கம்; சதுக்கம் - நாற்சந்தி; "தவமறைந்தொழுகும்.....பூதம் புடைத்து ணும் பூத சதுக்கமும்" (டு:கஉஅ - ஙச) என்று சிலப்பதிகாரத்து வருதல் காண்க; பூ - பொலிவு.

ங0. மன் றம்-ஊருக்குநடுவாய் எல்லாருமிருக்கு மரத்தடி; "மன்றமும் பொதியிலும்" புறநா. உசு.

(பி - ம்.) உ0. 'கனிஇயபாவைதாஞெடுங்கிய' உசு. 'மாதவனமாற் கிட்ட' உஅ. 'வந்துபுகுந்து' உங. 'பூதச்சதுக்கமும் பூமரச் சோலையும்'

தேர்ந்தனன் றிரிவோ னேந்திள வனமுலை
மாந்தர் பசிநோய் மாற்றக் கண்டாங்
கின்றுகின் கையி னேந்திய பாத்திர
மொன்றே யாயினு முண்போர் பலரா
நடு லானைத் தீநோ யரும்பசி கூளிய
வான வாழ்க்கைய ரருளினர் கொல்லெனப்
பழைமைக் கட்டுரை பலபா ராட்டவும்
விழையா வுள்ளமொ டவன்பா னீங்கி
யுதைய குமரன் றன்பாற் சென்று
சஅ0 நரைமூ தாட்டி யொருத்தியைக் காட்டித்
தண்ணறல் வண்ணந் திரிந்துவே ருகி
வெண்மண லாகிய கூந்தல் காணுய்
பிறைநுதல் வண்ணங் காணு யோநீ
நரைமையிற் றிரைதோற் றகையின் ருயது
சடு விறல்விற் புருவ மிவையுங் காணு
யிறவி னுணங்கல் போன்றுவே ருயின
கழுநீர்க் கண்காண் வழுநீர் சுமந்தன
குமிழ்மூக் கிவைகா ணுமிழ்சீ யொழுக்குவ
நிரைமுத் தனைய நகையுங் காணுய்

நக. தேர்ந்து திரிவோன் - காஞ்சனன்.

நஉ. கண்டு - (காஞ்சனன்) கண்டு.

மேல்வருவன காஞ்சனன் கூற்று.

நடு. நோய் - பஸ்மகவியாதி. நசு. வானவாழ்க்கையர் - தேவர்.

நடு - சு. கூளிய அருளினர்கொல்.

நஎ. பலபாராட்ட - பலவற்றைக்கூறிப் பாராட்ட.

நஅ. அவன் - காஞ்சனன்.

சஅ. நரைமூதாட்டி - நரையையும் மூதுமையையுமுடையவள்.

சக. 'தண்ணறல் வண்ணம்' என்பது முதலியன மணிமேகலைகூற்று. அறல் - கருமணல்.

சச. நரைமை - வெண்மை.

சசு. இறவின் உணங்கல் - இருள்மீனின்வற்றல்.

சகூ. நகை - பல்.

(பி - ம்.) சக. 'தண்ணலவண்ணந்திரித்து வேறுகிய' சஉ. 'கூந்தலுங் காணுய்' சஜ. 'நரைமயிற்றினர் தோறறுகையின' சஅ. 'ஒழுகுவ', 'ஒழுகுவன' சகூ. 'பல்லுங்காணுய்'

நி0 சுரைவித் தேய்ப்பப் பிறழ்ந்துவே ரூயின
விலவிதழ்ச் செவ்வாய் காணு யோநீ
புலவுப் புண்போற் புலால்புறத் திடுவது
வள்ளைத் தாள்போல் வடிகா திவைகா
ணுள்ளுன் வாடிய வுணங்கல் போன்றன
நிநி விறும்பூது சான்ற மூலையுங் காணுய்
வெறும்பை போல வீழ்ந்துவே ரூயின
தாழ்ந்தொசி தெங்கின் மடல்போற் றிரங்கி
வீழ்ந்தன விளவேய்த் தோளுங் காணுய்
நரம்பொடி விடுதோ லுகிர்த்தொடர் கழன்று
சுo திரங்கிய விரல்க ளிலையுங் காணுய்
வாழைத் தண்டே போன்ற குறங்கிணை
தாழைத் தண்டி னுணங்கல் காணு
யாவக் கணைக்கால் காணு யோநீ
மேவிய நரம்போ டென்புபுறங் காட்டுவ
சுநி தளிரடி வண்ணங் காணு யோநீ
மூளிமுதிர் தெங்கி னுதிர்கா யுணங்கல்
பூவினுஞ் சாந்தினும் புலான்மறைத் தியாத்துத்
தூசினு மணியினுந் தொல்லோர் வகுத்த
வஞ்சந் தெரியாய் மன்னவன் மகனென

நி0. சுரைப்பழத்தின்விதை பல்லுக்கு உவமையாதலை, ''சுரைவித்துப் போலுந்தம் பல்'' (நாலடி. கூகடு) என்பதனாலுமுணர்க.

நிஉ. புலவு - புலால்நாற்றம்.

நிங. வள்ளைத்தாள் - வள்ளைத்தண்டு. வடிகாது - வடிந்தகாது.

நிநி. இறும்பூது - அதிசயம்; ''இறும்பூது போலுமஃ தறிந்தரு ணீயென'' சிலப். பதி. கூ.

நிள. திரங்கி - திரைந்து. நிகூ. உகிர்த்தொடர் - நகத்தின்தொடர்ச்சி.
சுக. குறங்கு - தடை. இணை - இரண்டு. சுங. ஆவம் - அம்புக்கூடு.
சுசு. மூளிமுதிர்தெங்கு - உலர்ந்த முதிர்ந்த தென்னை.

சுள. ''பூவினவ நீங்கிற் புலால்புறத் திடுவது'' (சு: ககசு) என்றுர் முன்னும்.

சுகூ. தெரியாய் - தெரிந்துகொள்வாய்.

(பி - மீ.) நிங. 'வடிந்தகாது' நிநி. 'சான்றமூலையிவைகாணுய்' நிஅ. 'தோளிவைகாணுய்' நிகூ. 'உகிரொடு கழன்று' சுங. 'காலிவையுங் காணுய்' சுள. 'புலான்மறுத்தியார்த்து'

எ0 விஞ்சை மகளாய் மெல்லிய லுரைத்தலுந்
தற்பா ராட்டிமென் சொற்பயன் கொள்ளாள்
பிறன்பின் செல்லும் பிறன்போ லேக்கு
மதுக்கம ழலங்கன் மன்னவன் மகற்கு
மூதுக்குறை முதுமொழி யெடுத்துக் காட்டிப்
எரு பவளக் கடிகையிற் றவளவா ணகையுங்
குவளைச் செங்கணுங் குறிப்பொடு வழாஅ
லீங்கிவன் காதல ஞதலி னேந்திழை
யீங்கொழிந் தனளென விகலெரி பொத்தி
மற்றவ ளிருந்த மன்றப் பொதியிலுட்
அ0 புற்றடங் கரவிற் புக்கொளித் தடங்கினன்

எ0. விஞ்சைமகளாய் - காயசண்டிகையாய். மெல்லியல் - மணிமேகலை.

மேல்வருவது காஞ்சனன்செய்தி.

எஉ. பிறனென்றது, உதயகுமரனை. இங்கே பிறன்பின் செல்லுமென்றதுபோல, "எண்ணிப்பத் தங்கையிட்டா லிந்திரன் மகளு மாங்கே, வெண்ணெய்க்குன் றெறியுற் றுற்போன் மெலிக்துபின் னீற்கு மன்றே" (கடுகூஎ) என்று சீவகசிந்தாமணியிலும் வந்திருத்தல்காண்க.

எச. ழ. மணி. கசு: கசுஎ.

எடு. பவளக்கடிகை - பவளத்துண்டம்; என்றது உதட்டினை.

எசு. குறிப்பு - இங்கிதம்.

எடு - சு. இவ்வடிகளின் பொருளோடு, "ஒத்தொளிர் பவளத் துள் கொளி சிதர்ந்த.....உளங்கொண் டொளித்தா ளுயிர்க்காப் பிட்டு" (கசு: எ0 - எக) என்ற உதயகுமரன் கூறியவாக்கியம் ஒப்புநோக்கற்பாலது.

எஎ. இவனென்றது, உதயகுமரனை. காதலன் - ஆசாரியகன்.

எஅ. ஈங்கு ஒழிந்தனள் - இவ்விடத்திலேயே தங்கிவிட்டாள்; என் னேத்தவிர்ந்தாளென்றுமாம்; ஈங்கு, தன்மையையுணர்த்துதலே "ஈங்களிப் பன" (மணி. கச: சஅ) என்பதிற்காண்க. இகல் - மாறுபாடு.

எக. மன்றப்பொதியில் - மன்றமாகியபொதியில்; இருபெயரொட்டு; இப்படியே, "மன்றப் பொதியிற், கந்துடை நெடுநிலைக் கடவுட் பாவை" (உக: சு - எ) என்றுபின்னும்வரும்.

அ0. இங்கே காஞ்சனனுக்குப்பாம்பை உவமைகூறியதற்கேற்ப, "வேக வெந்தீ நாகங் கிடந்த, போகுயர் புற்றினை புகுவான் போல", "வெஞ்சின வரவ நஞ்செயி றரும்பத், தன்பெரு வெகுளியி னெழுந்தபை விரித்தென,

(பி - ம்.) எ0. 'மெல்லியலுரைக்கத்' எஉ. 'பிறர்பின்செல்லினும் பிறர்போல்' எச. 'எடுத்துக்காட்டப்' எடு. 'பவளக் கடிகையும்' எஅ. 'ஆங்கொழிந்தனளென வகையெரி' எக. 'பொதியிற்'

காஞ்சன னென்னுங் கதிர்வாள் விஞ்சைய
னுங்கவ ளுரைத்த வரசிளங் குமரனுங்
கனையா வேட்கை கையுதிர்க் கொள்ளான்
வனசேர் செங்கை மணிமே கலையே
அநு காயசண் டிகையாய்க் கடிஞை யேந்தி
மாய விஞ்சையின் மனமயக் குறுத்தன
ளம்பல மருங்கி லயர்ந்தறி வுரைத்தவிவ்
வம்பலன் றன்னெடிவ் வைகிரு ளொழியா
ளிங்கிவள் செய்தி யிடையிருள் யாமத்து
கூ0 வந்தறி குவனென மனங்கொண் டெழுந்து
வான்றேர்ப் பாகனை மீன்றிகழ் கொடியனைக்
கருப்பு வில்லியை யருப்புக்கணை மைந்தனை
யுயாவுத் துணையாக வயாவொடும் போகி
யூர்துஞ் சியாமத் தொருதனி யெழுந்து
கூஙு வேழம் வேட்டெழும் வெம்புலி போலக்
கோயில் கழிந்து வாயி னீங்கி
யாயிழை யிருந்த வம்பல மணைந்து

விருந்தோனெழுந்து" (கூஅ - கூ, கo௫-கூ) என இக்காதையிலேயே பின்பும் கூறுதல்காண்க.

அஉ. அவள் - மணிமேகலை. அங. கையுதிர்க்கொள்ளான் - நீக்கான். மேல்வருவன உதயகுமரனுட்கோள்.

அசு. மாயவிஞ்சையின் - மாயவித்தையினுல்.

அஎ. அயர்ந்து - வருந்தி ; மறந்தென்றுமாம். அறிவுரைத்த - பழமைக்கட்டுரை பல பாராட்டிய.

அஅ. வம்பலன் - அயலான். வைகிருள் - வைகறைப்பொழுது.

கூக. வான்றேர் - ஆகாயத்திலுலவும் தென்றற்காற்றுருய தேர்.

கூஉ. மணி. கஅ: கo஫; உ஫: கூo ; "மைதுழா தெடுங்கணர் மனத்துட் காமனு, ரைதுலாங் கவர்கணை யரும்பு வைத்தவே" கூளா. குமார.டு.

கூங. உயாவுத்துணையாக - வினவுத்துணையாக ; கொண்டென்று ஒரு சொல் வருவிக்க ; தனியேசென்றனென்றபடி. வயா - வேட்கை மிகுதி; "வயாவென் னிளவி வேட்கைப் பெருக்கம்" தொல். உரி. கூ. எங.

கூச. போயவன் நடுஇரவில் மீட்டும் எழுந்து வந்தான்.

(பி - ம்.) அஉ -ங. 'உரைத்த வலர்தார் வேந்தனும், கனையாவேட்கை யிற் கைவிதிற் கொள்ளா' அஅ. 'வம்பலன் றனனெடவை கிருளொளியான்' அசு. 'ஈங்கிவைசெய்தி' கூக. 'பாகன்மீள்' கூங. 'உயிர்த்துணையாகவயர்ப் பெடும்', 'உற்றணையாகவயாவொடும்'

வேக வெந்தீ நாகங் கிடந்த
போகுயர் புற்றஃ புகுவான் போல
வாகந் தோய்ந்த சாந்தல ருமுத்த
வூழடி யிட்டத னுள்ளகம் புகுதலு
மாங்குமுன் னிருந்த வலர்தார் விஞ்சைய
னீங்கிவன் வந்தன னிவள்பா லென்றே
வெஞ்சின வரவ ருஞ்செயி றரும்பத்
தன்பெரு வெகுளியி னெழுந்துபை விரித்தென
விருந்தோ னெழுந்து பெரும்பின் சென்றவன்
சுரும்பறை மணித்தோ ணிணைய வீசிக்
காயசண் டிகையைக் கைக்கொண் டந்தரம்
போகுவ லென்றே யவள்பாற் புகுதலு
மெடுநிலைக் கந்தி னிடவயின் விளங்கக்
கடவு ளெழுதிய பாவையாங் குரைக்கு

கூஅ. தீ - விடம்.

கூக. போகுயர்புற்றஃ - மிகவுயர்ந்த புற்றின்துவாரம்.

கூஅ - க. மணி. உ0: அ0, கஅ - ரு.

கஅ0. சாந்து - சந்தனம். அலருறுத்த- பலாறியச்செய்ய.

கஅக. ஊழ் அடியிட்டு -முறையே அடிவைத்து; "ஊழடி முட்டம்" (குறிஞ்சி. உரிஅ.) அதன் உள்ளகம் - அம்பலத்தினுள்ளிடம்.

கஅங. என்று - என்றுகருதி.

கஅச. ருஞ்ச எயிறு அரும்ப - விடத்தைப் பல் வெளிப்படுத்த; விடத்தையுடைய பல்தோன்றவென்றுமாம்.

கஅரு. பை - படம். கஅச - ரு. மணி. உ0: அ0, கூஅ - க.

கஅசு. இருந்தோன் - காஞ்சனன்.

கஅள. சுரும்பு அறை மணித் தோள் - மலையை யொத்த அழகிய தோள்; சுரும்பு - மலை. அறை, உவமவுருபு.

கஅக. போகுவல் - போவேன்.

கஅஉ - கூ. விஞ்சையன் இருந்தோன், இவன் இவள்பால் வந்தன னென்று எழுந்து சென்று வீசிப் போகுவலென்று புகுதலு மென்க.

கஅ0. கந்து - தூண்.

கஅக. கடவுள் எழுதிய - மயனைப் பண்ணப்பட்ட; "மயனெனக் கொப்பா வகுத்தி பாவையி, னீங்கேன்" (மணி. உக : கஙஉ - ங) என்று பின்வருதல் காண்க.

(பி - ம்.) கூக. 'போயபுற்' கஅங. 'ஈங்குவந்தனன்' கஅள. 'தோள் வீச' கஅ0. 'கந்தினிடவயின்' கஅக. 'பாவயர்க்குரை'

மணுக லணுகல் விஞ்சைக் காஞ்சன
மணிமே கலையவண் மறைந்துரு வெய்தினள்
காயசண் டிகைதன் கடும்பசி நீங்கி
ககடு வானம் போவுழி வந்தது கேளா
யந்தரஞ் செல்வோ ரந்தரி யிருந்த
விந்த மால்வரை மீமிசைப் போகார்
போவா ருளரெனிற் பொங்கிய சினத்தள்
சாயையின் வாங்கித் தன்வயிற் றிடீஉம்
கஉ0 விந்தங் காக்கும் விந்தா கடிகை
யம்மலை மிசைப்போ யவள்வயிற் றடங்கினள்
கைம்மை கொள்ளேல் காஞ்சன விதுகே
ளுநம்வினை வந்திங் குதய குமரனை
யாருயி ருண்ட தாயினு மறியாய்

மேல்வருவனை கந்திற்பாவை காஞ்சனனை நோக்கிக் கூறும் கூற்று.

ககஉ. அணுகல் அணுகல் - அணுகாதே அணுகாதே.

ககச - டு. தன்பசி நீங்கிக் காயசண்டிகை வானம்போவுழி அவளுக்கு வந்த துன்பத்தைக்கேள்.

ககசு. அந்தரஞ் செல்வோர் - தேவர். அந்தரி - துர்க்கை.

ககஎ. விந்தமால்வரை - விந்தியமலை.

ககசு - எ. விந்திய மலையிலிருத்தல் பற்றித் துர்க்கைக்கு விந்திய வாஸினி யென்றும் ஒரு பெயருண்டு.

ககஅ - உ0. விந்தமலையைப் பாதுகாக்கும் விந்தாகடிகை யென்பவள், யாரேனும் மேற் போவாராயின் மிக்க கோபத்தையுடையளாய்ச் சாயையினால் அவர்களை இழுத்துத் தன்வயிற்றிலிடுவள் ; பிரம்மதேவரிடம் வரம்பெற்ற ஸிஷ்டமிகை யென்னுமரக்கி இலங்கைக்குச் சென்ற அநுமானை நிழலாலி ழுத்துத் தடைப்படுத்தியதாக ஸ்ரீமத் வான்மீகிராமாயணம், சுந்தரகாண்டத்தால் தெரிகின்றது.

கஉக. (காயசண்டிகை) விந்தாகடிகையின் வயிற்றிலடங்கினள்.

கஉஉ. கைம்மை கொள்ளேல் - சிறுமையைக் கொள்ளாதே ; சிறுமையென்றது ஆராயாது செய்தலை. இனி, உதயகுமரன் மணிமேகலையுடைய பழம் பிறப்பின்னாயக னென்பதனை ஞானத்தாலறிந்த கந்திற்பாவை அவன் இறந்தது பற்றி, மணிமேகலையை அமங்கலையாக நினைந்து அவனைக் கொள்ளாதேயென்று கூறிற்றென்றலுமாம்; கைம்மை - அமங்கலை.

கஉஙு - ச. மடைத்தொழில் செய்வோனை முற்பிறப்பில் வெட்டிய

(பி - ம்.) ககஉ. 'விஞ்சையர் காஞ்ச' ககஙு. 'மற்றுருவெய்தினள்' ககஎ. 'மீமிசைச்செல்லார்' ககஅ. 'சினத்தாள்' ககசு - உ0. 'சாகையின்,,, தகையையிற்றழூஉ, மந்தம்'

கஉரு வெவ்வினை செய்தாய் விஞ்சைக் காஞ்சன
வவ்வினை நின்னையு மகலா தாங்குறு
மென்றிவை தெய்வங் கூறலு மெழுந்து
கன்றிய வெஞ்சிற் கடிவினை யுருத்தெழ
விஞ்சையன் போயினன் விலங்குவிண் படர்ந்தென்.

உ0.—உதயகுமரனைக்காஞ்சனன் வாளாலெறிந்தகாதை முற்றிற்று.

பாவம் உதயகுமரனை வெட்டுண்ணச் செய்தது; ஆனலும் ஆராயாது செய்தலின் நீ அறியாய்; இவ்வரலாற்றை, மணி. உக - ஆம் காதை, சள - ஆம் அடிமுதலியவற்றுலும் உங - ஆம்காதை, அஉ - ஆம் அடிமுதலிய வற்றுலும் உணர்க.

கஉஅ. கடிவினை - உதயகுமரனைக் கொன்றபாவம்.

கஉக. விலங்கு - குறுக்காக.

க-கஉக. கோட்டம் காப்புடைத்தாக, தாரோன் கேட்டு மனங்கொண்டு எழுந்து சென்று ஏறலும், கணவன் கையறவெய்தி வந்து இழிந்து தேர்ந்து திரிவோனுய்க் கண்டு பலபாராட்டவும், நீங்கிச் சென்று காட்டி மெல்லியல் உரைத்தலும், விஞ்சையன் புக்கு ஒளித்து அடங்கினன்; அரசிளங்குமரனும் கொள்ளான் மனங்கொண்டு எழுந்துபோகி எழுந்து கழிந்து நீங்கி அணைந்து புகுதலும், விஞ்சையன், எழுந்து சென்று வீசிப்புகுதலும், பாவை உரைக்கும்; அங்ஙனம் உரைப்பது கூறலும், விஞ்சையன் எழுந்து படர்ந்து போயினனென வினைமுடிவு செய்க.

(பி - ம்.) கஉக. 'விளங்குவிண்'

இருபத்தோன்றுவது
கந்திற்பாவை வருவதுரைத்தகாதை.

[இருபத்தோன்றுவது மணிமேகலை உதயகுமரன்மடிந்ததுகண்டு உறுதியுரைத்த, நெடுநிலைக்கந்தின் நின்றபாவை வருவதுரைத்து அவண் மயக்கொழித்தபாட்டு.]

கடவு ளெழுதிய நெடுநிலைக் கந்தின்
குடவயி னமைத்த நெடுநிலை வாயின்

க. கடவுள் எழுதிய - தவதிகனையொத்த பாவையை (மயன்) பண்ணின; "கடவுட் பாவை" (எ) என்பர் பின்னும்.

உ. குடவயின் - மேற்றிசை யிடத்தே.

(பி - ம்.) உ. 'அமைத்த நெடுநிலை'

முதியாள் கோட்டத் தகவயிற் கிடந்த
மதுமலர்க் குழலி மயங்கின ளெழுந்து
ருி விஞ்சயன் செய்தியும் வென்வேல் வேந்தன்
மைந்தற் குற்றது மன்றப் பொதியிற்
கந்துடை நெடுநிலைக் கடவுட் பாவை
யங்கவற் குரைத்த வற்புதக் கிளவியுங்
கேட்டன ளெழுந்து கெடுகவிவ் வுருவெனத்
க0 தோட்டலர் குழலி யுள்வரி நீங்கித்
திட்டி விடமுண நின்னுயிர் போகாட்
கட்டழ லீமத் தென்னுயிர் சுட்டே
னுவவன மருங்கி னின்பா லுள்ளந்
தவிர்விலே ஞதலிற் றலைமக டோன்றி
கரு மணிப்பல லவத்திடை யென்னையாங் குய்த்துப்

கூ. முதியாள் கோட்டம் - சம்பாபதி கோயில்.

க - கூ. இவ்வடிகளால் சம்பாபதிகோயில், கந்திற்பாவைக்கு மேற் றிசையிலுள்ளதென்று தெரிகின்றது.

ச. குழலி - மணிமேகலை.

ருி. விஞ்சையன் - காஞ்சனன். வென் - வெற்றி ; "வென்வே லாட வன்" பு - வெ. வஞ்சி. உச.

சு. மைந்தற்கு - உதயகுமரனுக்கு. மன்றப்பொதியில்: மணி.உ0:எகூ.

எ. கந்திற்பாவை.

அ. அங்கவற்கு - காஞ்சனனுக்கு. அற்புதம் - ஆச்சரியம்.

கூ. இவ்வுருக்கெடுகவென்று.

க0. குழலி, சுட்டு. உள்வரிநீங்கி - மறைந்தவேடமொழிந்து ; என்றது, காயசண்டிகையின் வடிவமொழிந்தென்றபடி.

இனி, உதயகுமரனைக்குறித்து மணிமேகலை புலம்புதல் கூறப்படும்.

கக. திட்டிவிடம் - கண்ணில் விடமுடையதோர் பாம்பு (மணி. கூ: சகூ); இதனைப் பாம்புகளுக்கு அரசென்றும் கூறுவர்.

கஉ. கட்டழல் - மிக்கநெருப்பு. ஈமம் - மயானம்.

கக - உ. இவ்வடிகளாற் போனபிறப்பின்செய்தி கூறினள்.

கச. தலைமகள் - மணிமேகலாதெய்வம்.

கஙூ - ச. உவவனத்திற் கண்டபொழுது உதயகுமரன்பால் மணிமே கலைக்குக் காதலிருந்ததென்பதை, "புதுவோன் பின்றைப் போனதென் னெஞ்ச, மிதுவோ வன்னாய் காமத் தியற்கை" (ருி: அக - கூ0), "அவன்பா லுள்ள, நீங்காத் தன்மை நினக்குமுண் டாகலின்" (க0: சச - ருி) என முன்வந்திருத்தலாலுணர்க.

(பி -ம்.) ருி. 'வெள்வேல்' க0. 'தோட்டார்குழலி' கக. 'விடமுண்டு'

பிணிப்பறு மாதவன் பீடிகை காட்டி
யென்பிறப் புணர்ந்த வென்மூற் றோன்றி
யுன்பிறப் பெல்லா மொழிவின் றுரைத்தலிற்
பிறந்தோ ரிறத்தலு மிறந்தோர் பிறத்தலு
மறந்தரு சால்பு மறந்தரு துன்பமும்
யானினக் குரைத்துநின் னிடர்வினை யொழிக்கக்
காயசண் டிகைவடி வானேன் காதல
வைவாள் விஞ்சையன் மயக்குறு வெகுளியின்
வெவ்வினை யுருப்ப விளிந்தனை யோவென
விழுமக் கிளவியின் வெய்துயிர்த்துப் புலம்பி
யழுதன ளேங்கி யயாவுயிர்த் தெழுதலுஞ்
செல்லல் செல்லல் சேயரி நெடுங்க
ணல்லியந் தாரோன் றன்பாற் செல்ல
னினக்கிவன் மகனுத் தோன்றிய தூஉ
மனக்கினி யாற்குநீ மகளாய தூஉம்

கசு. பிணிப்பறு மாதவன் - புத்தன்; பிணிப்பு - பற்று; "பிணிப் பறுத் தோர்தம் பெற்றி யெய்தவும்" சிலப். கடை: கoo.

கச - அ. தலைமகள் தோன்றி உய்த்துக் காட்டித் தோன்றி உரைத் தலினென்க.

உo. சால்பு - அமைதி; இன்பமுமாம். மறம் - பாவம்.

கக - உo. மணி. உக: ககங; சிலப். ஈo: கஈ - அ - கூ.

உச. உருப்ப - கோபிக்க. விளிந்தனையோ - இறந்தாயோ.

உஈ - ச. உருப்ப வெகுளியின் விளிந்தனையோ.

உஙி. விழுமக்கிளவி - துன்பத்தைப் புலப்படுத்தும் சொற்கள்.

உசு. அயாவுயிர்த்து - நெட்டுயிர்ப்புக்கொண்டு. எழுதலும் - மணி மேகலை எழுதலும்.

மேல், மணிமேகலையைநோக்கிக் கந்திற்பாவை கூறுதலைச் சொல்லுவார்.

உஎ. செல்லல் செல்லல் - போகாதே போகாதே. சேயரிநெடுங்கண், விளி.

உஅ. அல்லி - அகவிதழ். தாரோன் - உதயகுமரன்.

உகூ. மகனு - கணவனுக; "நோதக வுண்டோ நும்மக ளூர்க்கு" (சிலப். கசு: கஎ) எனக் கணவனை மகளுரென்று கூறியிருத்தல் காண்க.

ஈo. மனக்கினியாற்கு - உதயகுமரனுக்கு. மகளாயதூஉம் - மனைவி யானதும்.

(பி - ம்.) கசு. 'பிணிப்புமாதவன்' உஉ. 'காதலன்' உகூ. 'தலைமக ளுய்த்தோன்றியதூஉம்'

பண்டும் பண்டும் பல்பிறப் புளவாற்
கண்ட பிறவியே யல்ல காரிகை
தடுமாறு பிறவித் தாழ்தரு தோற்றம்
விடுமாறு முயல்வோய் விழுமங் கொள்ளே
ஈடு லென்றிவை சொல்லி யிருந்தெய்வ முரைத்தலும்
பொன்றிகழ் மேனிப் பூங்கொடி பொருந்திப்
பொய்யா நாவொடிப் பொதியிலிற் பொருந்திய
தெய்வ நீயோ திருவடி தொழுதேன்
விட்ட பிறப்பின் வெய்துயிர்த் தீங்கிவன்
சா நீட்டி விடமுணச் செல்லுயிர் போயது
நெஞ்சு நடுங்கி நெடுந்துயர் கூரயான்
விஞ்சையன் வாளி னிவன்விளிந் ததூஉ
மறிதலு மறிதியோ வறிந்தனே யாயிற்
பெறுவேன் றில்லநின் பேரரு ளீங்கென

ஈஉ. நீ அறிந்துகொண்ட முற்பிறப்பில் மட்டுமல்ல ; காணுதல் - அறிதல்.

உக - ஈஉ. தோன்றியதூஉம் ஆயதூஉம் கண்டபிறவியேயல்ல ; பண்டும் பண்டும் பல்பிறப்புளவாலென இயையக்க.

ஈஈ. தாழ்தரு - தங்குகின்ற ; அழுந்துகின்ற வென்றுமாம்.

ஈச. விழுமம் - துன்பம்.

ஈடு. சொல்லியுரைத்தல் - கூறிவிளக்குதல் ; "அறைத்தனர் சாற்றும்" (சிலப். கo: கஈ) என்புழிப்போல.

ஈசு. பூங்கொடி - மணிமேகலை.

மேல், மணிமேகலையின்வினவும், கந்திற்பாவைகூறும் விடையும் கூறப்படும்.

ஈக. விட்டபிறப்பு - போனபிறப்பு. இவன் - உதயகுமரன்.

ஈக - சo. இவன் உயிர்போதற்குக்காரணமாகிய நீவினையையும்.

சக. யான் நெடுந்துயர் கூர ; கூர - பிக.

சஉ. விளிந்ததூஉம் - இறந்ததற்குக் காரணமாகிய தீவினையையும்.

சஈ. அறிதலுமறிதியோ - அறிதலும் செய்தியோ ; இஃது, "உண்ணலு முண்ணேன் வாழலும் வாழேன்" (கலி. உஈ) என்பதுபோல நின்றது.

சச. நினது பெருங்கருணையை யான் இவ்விடத்துப் பெறுவேன் ; என்றது, நீகூறும் விடையைக் கேட்கும் விருப்பமுடையே னென்றவாறு. என - என்ற மணிமேகலை சொல்ல.

(பி - ம்.) ஈஉ. 'பிறவை யெல்லாங் காரிகை' ஈஎ. 'பொதியிற்றோன்றிய' சச. 'பெறுவனேன தில்லநின்'

சரு வையரி நெடுங்க ணுயிழை கேளெனத்
தெய்வக் கிளவியிற் றெய்வங் கூறுங்
காயங் கரையெனும் பேரியாற் றடைகரை
மாயமின் மாதவன் வருபொரு ளுரைத்து
மருளுடை மாக்கண் மனமாசு கழுஉம்
நிo பிரம தருமனைப் பேணினி ராகி
யடிசிற் சிறப்பியா மடிகளுக் காக்குதல்
விடியல் வேலை வேண்டின மென்றலு
மாலை நீங்க மனமகிழ் வெய்திக்
காலை தோன்ற வேலையின் வருஉ

சரு. ஆயிழை, விளி. சசு. தெய்வம் - கருத்பாவை.

சள கரை - கரையில்.

சஅ. மாதவன் வருபொருள் - புத்தன் அவதரித்தலை. உலகத்திற் பாவங்கள் அதிகரித்த காலந்தோறும் அப்பாவங்களைப் போக்கி அருளறத்தை நிலைநிறுத்தி உயிர்களை நிருவாணமடைவித்தற் பொருட்டுப் புத்தாவதார முண்டென்பது பௌத்தநூற்றுணிபு; "ஈரெண் ணூற்றே டிரெட்டாண்டிற், பேரறி வாளன் றோன்றும்" (கஉ: எஎ- அ), "மதவிரு ளிரிய மன்னுயி ரேமுற, வதவெயில் விரித்தாங் களப்பி லிருத்தியொடு, புத்த ஞாயிறு தோன்றுங் காறும்" (உக: கசுரு - எ), "புலவன் முழுதும் பொய்யின் றுணர்ந்தோ, லுலகுயக் கோடற் கொருவன் றோன்று, மந்நா ளனைநறுங் கேட்டோ ரலல, தின்னுப் பிறவி யிழுக்குரி லலே" (உரு: சரு- அ), "கரவரும் பெருமைக் கபிலையம் பதியி, னளப்பரும் பாரமிதை யளவின்று நிறைத்துத், துளக்கமில் புத்த ஞாயிறு தோன்றி" (உசு: சச - சு) என இந்நூலுள்ளே பலவிடத்தும் வருதல காண்க.

சசு. மருளுடை மாக்கள் - மயக்கத்தையுடைய மனிதர். மனமாசு - காமவெகுளி மயக்கங்கள்; "வெஃகல் வெகுளல் பொய்லாக் காட்சியென், றுள்ளத் தின்னி லுருப்பன மூன்றும்" (ஈo: எo - எக) என்பதனுணர்க. கழுஉம் - கழுவும்.

நிக. அடிகளுக்கு அடிசிற்சிறப்பு ஆக்குதலென்க.

நிஉ. விடியல்வேலை - காள்வெயிற்காலம்; வைகறைப்பொழுதெனினும் பொருந்தும்.

நிக - உ. அடிகளுசகு அடிசிற் சிறப்பு விடியல்வேலையாக்குதல் வேண்டினமென்று மடையனை நோக்கிக் கூறுதலும்.

சள -நிஉ. அடைகரையில் உரைத்துக் கழுஉம் பிரமதருமனைப பேணி விடியல்வேலையில் ஆக்குதலை வேண்டினமென்றலு மென்க.

நிஈ. மாலை - இரவு. நிச. காலை - காள்வெயிற்காலை. வருஉ - வந்து.

(பி - ம்.) சஅ. 'ஆய்மனமாதவன்' நிக. 'அடிசிற் சிறபியாடுதலுக்காக தலை' நிஈ. 'மாலைநீங்கி'

உக.—கந்திற்பாவை வருவதுரைத்தகாதை. உஉக

நுடை தைத்திறத் திழுக்கி நல்லடி தளர்ந்து
மடைக்கலஞ் சிதைய வீழ்ந்த மடையனைச்
சீல நீங்காச் செய்தவத் தோர்க்கு
வேலை பிழைத்த வெகுளி தோன்றத்
தோலுந் தலையுந் துணித்துவே ருக
சுஐ வாளிற் றப்பிய வல்வினை யன்றே
விராமலர்க் கூந்தன் மெல்லிய னின்னே
டிராகுலன் றன்னை யிட்டக லாதது
தலைவன் காக்குந் தன்பொருட் டாகிய

நுடை. நுடைத்திறத்து இழுக்கி - நுடைவகையால் வழுக்கி.

நுசு. மடைக் கலம் - சோற்றுப்பாத்திரம். மடையர் - சமையற்காரன்.

நுள. சீலம் - பஞ்சசீலம்; தசசீலமுமாம்; கொல்லாமை (அஹிம்ஸை), பொய்சொல்லாமை (ஸத்தியம்), களவின்மை (அஸ்தேயம்), காமமின்மை (பிரமசரியம்), இரவாமை (அலங்கிரகம்) என்னும் இவை பஞ்சசீலம்; இவ்வைத்தனோடு உயர்ந்த ஆசனத்து இருத்தல் இடத்தலின்மை, சந்தனம் மாலை முதலியன தரியாமை, பொன்வெள்ளிகளைத் தீண்டாமை, பாடலாடல் விரும்பாமை, உதயத்திற்கு முன்பு புசியாமை என்னும் ஐந்தும்சேரத் தசசீலமாம். பஞ்சசீலத்துள், இரவாமை நின்ற நீலக்கதத்தின்கண் கள்ளுண்ணாமையைச் சேர்த்துக்கூறுவாருமுளர்; (நீல. சமய.) கொல்லாமை, திருடாமை, வியபிசரியாமை, பொய்கூறாமை, கள்ளுண்ணாமை யென்னுமிவை பஞ்சசீல மென்றும், இவை இல்லறத்தார் எல்லோர்க்கும் உரியனவென்றும், இவ்வைத்தனோடு இரவில் தூய்மையில்லாத உணவைப்புசியாமை, சந்தன முதலிய மணமுள்ள பொருள்களை உபயோகியாமை, தரையிற் பாய்மேலே படுத்தல் என்னும் மூன்றுஞ்சேர அஷ்டாங்கசீலமென்றும், இவை இல்லறத்தாரில் நிஷ்டாபரர்களுக்கே யுரியனவென்றும், இவ்வெட்டனோடு நாட்டியம் கானமுதலியவற்றை விரும்பாமை, பொன்வெள்ளிகளைத்தொடாமை யென்னும் இவ்விரண்டும்சேரத் தசசீலமென்றும், இப்பத்தும் துறவிகளுக்கே யுரியனவென்றும், இப்பத்தில் வியபிசரியாமை நின்றவிடத்திற் பிரமசரியம் கூறப்படுமென்றும் தார்மிகசூத்திரமென்னும் பௌத்தநூல்கூறும்.

நுஅ. பிழைத்தவெகுளி - தவறியசமையால்வந்தகோபம்.

சுஐ. தப்பிய - வெட்டிய. சுக. மெல்லியல், விளி.

நுசு - சுஉ. இப்படியே, "மடைக்கலஞ் சிதைய வீழ்ந்தமடையனை, யுடற்றுணி செய்தாங் குருத்தெழும் வல்வினை, நஞ்சுவிழி யரவி னல்லுயிர் வாங்கி, விஞ்சையன் வாளால் வீட்டிய தன்றே" (உசு: அஉ - நு) என்று இராசமாதேவியை நோக்கி மணிமேகலை கூறியதாகப் பின்புவருதல் காண்க.

சுசு. தலைவன் - கடவுள். காக்கும் - காப்பான்; தமிட்டாரெனற்பாடி.

சுசு - ச. வினையைத் தலைவன்காக்குமென்போர்அறியாரென இயைக்க;

(பி - ம்.) நுள. 'நீக்காத் தேசத்தோர்க்கு' சுக. 'விராக்கூந்தல்'

வவல வெவ்வினை யென்போ ரறியா
சுரு ரறஞ்செய் காத லன்பினி னுயிறு
மறஞ்செய் துளதெனின் வல்வினை யொழியா
தாங்கவ் வினைவந் தணுகுங் காலைத்
தீங்குறு மூயிரே செய்வினை மருங்கின்
மீண்டுவரு பிறப்பின் மீளினு மீளு
எ0 மாங்கவ் வினைகா ணுயிழை கணவனை
யீங்கு வந்திவ் விடர்செய் தொழிந்த
தின்னுங் கேளா யிளங்கொடி நல்லாய்
மன்னவன் மகற்கு வருந்துதுய ரெய்தி
மாதவ ருணர்த்திய வாய்மொழி கேட்டுக்
எரு காவல னின்னையுங் காவல்செய் தாங்கிடு
மீடுசிறை நீக்கி யிராசமா தேவி
கூட வைக்குங் கொட்பின ளாகி
மாதவி மாதவன் மலரடி வணங்கித்

செய்தவன் நுகர்ந்தாலன்றி வினை தொலையாதென்றவாறு.

சுசு. மறம் செய்துளதெனின் - பாவம் செய்யப்பட்டிருப்பின். வல்வினை, சுட்டு.

சுஅ. தீங்கு - துன்பம்.

எ0. அவ்வினை - மடையனை வெட்டியடாவம். கணவனை - உதயகுமரனை.

எ0 - எக. அவ்வினைஈங்குவந்துஉன்கணவனை இவ்விடர்செய்தொழிந்ததென்க.

இனி, மணிமேகலைக்குப்பின்வருவனவற்றைக் கற்றிப்பாவைத்தெய்வம் கூறுதல் கூறப்படும்.

எங. மகற்கு - உதயகுமரன் இறந்ததற்காக.

எச. உணர்த்தியவன் ஒருவனுயிலும் உரைக்கவந்தோர் பலராதலின் 'மாதவருணர்த்திய' என்றார். வாய் - உண்மை.

எடு. காவல்செய்தாங்கிடும் - சிறையில் வைப்பான்.

எசு. இராசமாதேவி - பட்டத்துத்தேவி.

எள. கொட்பு - கொள்கை. எஅ. மாதவன் - அறவணவடிகள்.

(பி - ம்.) சுடு. 'அறஞ்செய்த காதலனன்பின' சுள. 'ஆங்கவெவ்வினை வந்தெனதுங்காத்' எங. 'வருதுயரெய்தி' எச. 'மாதவருரைத்த', 'மாதவ ருணர்த்த' எடு. 'காதலிந்நின்னையுங் காவல்செய்தீங்கிடும்'

தீது கூறவவ டன்ஞெடுஞ் சேர்ந்து
அ0 மாதவ னுரைத்த வாய்மொழி கேட்டுக்
காதலி னின்னேயுங் காவ னீக்குவ
ளரைசாள் செல்வத் தாபுத் திரன்பாற்
புரையோர்ப் பேணிப் போகலும் போகுவை
போனு லவனெடும் பொருளுரை பொருந்தி
அரு மாநீர் வங்கத் தவனெடு மெழுந்து
மாயமில் செய்தி மணிபல் லவமெனுங்
தீவகத் தின்னுஞ் சேறலு முண்டாற்
றீவ திலகையிற் றன்றிறங் கேட்டுச்
சாவக மன்னன் றன்னு டடைந்தபின்

எசு. தீது - மணிமேகலை சிறையில் வைக்கப்பட்டிருத்தல்.

அ0. வாய்மொழி - உண்மைமொழி; சிலப். கo: ககஉ.

எசு - அக். இராசமாதேவி நீக்கி - வைக்குங்கொட்பினளாகிக் கேட்டு நின்னேக்காவல் நீக்குவளென்க.

அஉ. ஆபுத்திரனென்றது, புண்ணிய ராசனே ; இது, "நாக புரமிது நன்னக ராள்வோன், பூமிசந் திரன்மகன் புண்ணிய ராசன்" (உசு: கசுக - எ0) என்று தருமசாவகன் மணிமேகலைக்குக் கூறியவாற்றலுணரப்படும் ; புண்ணியராசனே ஆபுத்திரனென்றே இந்நூலிற் பெரும்பாலும்வழங்குவர்.

அங. புரையோர் - சங்கத்தார் ; புரை - உயர்ச்சி. போகலும் போகுவை - போகுதலையுஞ்செய்வை.

அச. பொருளுரை - தருமபதம்; "பொய்யில்புலவன் பெர்ருளுரை" (மணி. உஉ: சுக); எல்றது, நாகபுரத்தின் பக்கத்தாகிய சோலையிலுள்ள தருமசாவகன் ஆபுத்திரனுக்குக்கூறும் உபதேசமொழிகளைக் குறித்து நின்றது. பொருந்தி - கேட்டு. அம்மொழிகளாவன, "அறனு மறனு மனித்தமு நித்தத், திறனுந் துக்கமுஞ் செல்லுயிர்ப் புக்கிலுஞ், சார்பிற் றோற்றமுஞ் சார்பறுத் தையு, மாரிய னமைதியும்" (உரு: கூ - சு) என்பவைகள்.

அரு - எ. மணிமேகலை நாகபுரத்திலிருந்து ஆகாயவழியேபோந்து மணிபல்லவத்தையடைந்தாளென்றும், ஆபுத்திரன் கப்பல்வழியேவந்து அத்தீவத்தை அடைந்தானென்றும், உரு - ஆம் காதை உக - ஆம் அடிமுதலிய வற்றாலும், கஉச - ஆம் அடிமுதலியவற்றாலும் விளங்குதலால், 'வங்கத் தவனெடு மெழுந்து' என்பதற்குப் பின்பு கப்பலேறி மணிபல்லவத்தையடைவோனாகிய ஆபுத்திரனிம்மு நீங்கி ஆகாயவழியேயெழுந்தெனப் பொருள் கொண்டு எழுந்து சேறலுமுண்டெனவியைக்க. வங்கத்தவனெடுமென்பது, ஐந்தாவதன் மயக்கம்.

அசு. சாவகமன்னன் - சாவகநாட்டரசனாகிய ஆபுத்திரன்.

(பி - ம்.) அங. 'போக்கலும்போக்கும்', 'போகினும் போகுவை' அரு. 'அவனெடுமேறி'

கூ0 ஞங்கத் தீவம்விட் டருந்தவன் வடிவாய்ப்
பூங்கொடி வஞ்சி மாநகர் புகுவை
யாங்கந் நகரத் தறிபொருள் விளைவு
மோங்கிய கேள்வி யுயர்ந்தோர் பலரா
லிறைவ னெங்கோ னெவ்வுயி ரனைத்து
கூடு முறைமையிற் படைத்த முதல்வனென் போர்களுந்
தன்னுரு வில்லோன் பிறவருப் படைப்போ
னன்னே னிறைவ னுகுமென் போர்களுந்
துன்ப நோன்பித் தொடர்ப்பா டறுத்தாங்
கின்ப வுலகுச்சி யிருத்துமென் போர்களும்
கஅ0 பூத விகாரப் புணர்ப்பென் போர்களும்
பல்வேறு சமயப் படிற்றுரை யெல்லா
மல்லியங் கோதை கேட்குறு மந்நா
ளிறைவனு மில்லை யிறந்தோர் பிறவா
ரறனே டென்னை யென் றறைந்தோன் றன்னைப்
கஅடு பிறவியு மறவியும் பெற்றியி னுணர்ந்த
நறுமலர்க் கோதை யெள்ளினை நகுதி

கூ0. தீவம் - மணிபல்லவம்.

கூக. வஞ்சிமாநகர் - கருவூர் ; இது சேரர்களுடைய இராசதானி ; மலைகாட்டிலுள்ளது.

கூச - டு. படைத்த முதல்வனே இறைவன் எங்கோன் என்போர் களுமென்க ; இவர்கள் பிரஹ்மவாதிகள் ; "பேருல கெல்லாம் பிரம வாதி யோர், தேவ னிட்ட முட்டை யென்றனன்" (உள: கூசு - எ) என்றுவருதல் காண்க. இவர்களை இரணியகருப்பவாதிகளென்றுங்கூறுவர்.

கூசு - எ. என்போர்கள் அத்துவைத வாதிகள்.

கூஅ. நோன்பு - கன்மங்கள். இத்தொடர்ப்பாடு - இத்தப்பத்தங்கள்.

கூஅ - கூ. நோன்பு அறுத்து இருத்துமென்போர்கள் - கர்மப்ரஹ்ம வாதிகள்.

கஅ0. புணர்ப்பென்போர்கள் - பூதவாதிகள்.

கூச - கஅ0. இவ்வடிகளிற்கூறிய சமய இலக்கணங்களுட் சிலவும், இன்னும் பலவும் இந்நூல் உள - ளும் காதையால் விளக்கவுரைப்படும்.

கஅக. படிற்றுரை - பொய்ம்மொழி.

கஅச. அறனேடு என்னை - தருமத்தால்வரும் பயன்யாது ? அறைந் தோன் - பூதவாதி.

கஅடு. அறவி - தருமத்தோடு பொருந்தியவழி.

கஅசு. எள்ளினை நகுதி - இகழ்ந்துசிரிப்பாய்.

(பி - ம்) கூசு. 'தானுருவில்லோன்' கூஅ. 'நோன்பிற்றொடர்ப்பாடு' கஅகூ. 'இல்லைபிறவிறந்தோர் பிறவார்'

யெள்ளினே போலு மிவ்வுரை கேட்டிங்
கொள்ளிய துரையென வுன்பிறப் புணர்த்துவை
யாங்குநிற் கொணர்ந்த வருந்தெய்வ மயக்குக்
ககஎ காம்பன தோளி களுமயக் குற்றனே
யென்றவ னுரைக்கு மிளங்கொடி நல்லா
யன்றென் றவன்முன் னயர்ந்தொழி வாயலே
தீவினே யுறுதலுஞ் செத்தோர் பிறத்தலும்
வாயே யென்று மயக்கொழி மடவாய்
ககடு வழுவறு மரனு மண்ணுங் கல்லு
மெழுதிய பாவையும் பேசா வென்ப
தறிதலு மறிதியோ வறியாய் கொல்லோ
வறியா யாயி னுங்கது கேளாய்
மூடித்துவரு சிறப்பின் மூதூர் யாங்கணுங்
கஉஎ கொடித்தேர் வீதியுந் தேவர் கோட்டமு
மூதுமர விடங்களு முதுநீர்த் துறைகளும்
பொதியிலு மன்றமும் பொருந்துபு நாடிக்
காப்புடை மாநகர்க் காவலுங் கண்ணி
யாப்புடைத் தாக வறிந்தோர் வலித்து
கஉடு மண்ணினுங் கல்லினு மரத்தினுஞ் சுவரினுங்
கண்ணிய தெய்வதங் காட்டுநர் வகுக்க
வாங்கத் தெய்வத மவ்விட நீங்கா

கஎ-ஏ. அறைந்தோன்றன்னை இவ்வுரைகேட்டுஎள்ளினைநகுதிபோலும்.

ககஉ. அயர்ந்தொழிவாயலை - மறந்தொழியாய்.

ககங. மணி. உக: ககூ - உ஦.

ககச. வாயே - உண்மையே. ககடு - சு. மணி. உக : கஉடு - சு.

ககள. அறிதலுமறிதியோ - அறிதலும் செய்தியோ.

கஉ஦. தேவர் கோட்டம் - தேவர்கோயில்.

கஉக. மூதுமரம் - பழையமரம்.

கஉங. காவலுங்கண்ணி - காவலையுங் கருதி.

கஉச. யாப்புடைத்தாக - உறுதியுடைத்தாக. வலித்து - எண்ணி.

கஉசு. தெய்வதங்காட்டுநர் - தெய்வத்தை நிறுத்துவோர்.

(பி - ம்.) கஎள. 'போலுமென்னுரை கேட்டீங்கு' கஎஅ. 'பிறப்புரைக்குவை' ககஎ. 'காம்பிணைத்தோளி' ககஉ. 'அன்றவன் றன்முன்' ககங. 'சென்றோர்' ககச. 'மடக்கொடி மடவாய்' ககங. 'வரும்பிறப்பின்' கஉச. 'அறிந்தோரியற்றி' கஉசு. 'கண்ணியவருவங்காட்டுநர்வகுத்த'

வூன்கணி ஞர்கட் குற்றதை யுரைக்கு
மென்றிறங் கேட்டியோ விளங்கொடி நல்லாய்
கஙூ0 மன்பெருந் தெய்வ கணங்களி னுள்ளேன்
றுவதிக னென்பேன் மூன்றுமுதிர் கந்தின்
மயனெனக் கொப்பா வகுத்த பாவையி
னீங்கேன் யானென் னிலையது கேளாய்
மாந்த ரறிவது வானவ ரறியா
கஙூரு ரோவியச் சேனனென் னுறுதுணைத் தோழ
னுவதை யிங்ஙகர்க் காருரைத் தனரோ
வவனுடன் யான்சென் றுடிட மெல்லா
மூடனுறைந் தார்போ லொழியா தெழுதிப்
பூவும் புகையும் பொருந்துபு புணர்ந்து
கசஂ0 நாகனி வருந்தவென் னலம்பா ராட்டலின்
மணிமே கலையான் வருபொரு ளெல்லாங்
துணிவுட னுரைத்தே னென்சொற் றேறெனத்
தேறே னல்லேன் நெய்வக் கிளவிக
ளீறு கடைபோக வெனக்கரு ளென்றலுங்

கஉஅ. ஊன்கணினர்கட்கு - மானிடர்களுக்கு ; சீவக. ருசை.

மேல்வருவன, மணிமேகலைக்குத் தானுவரலாற்றைக் கந்திற்பாவை கூறுங் கூற்று.

கஙூ. துவதிகனென்பேன் - துவதிகனென்று பெயர்கூறப்படுவேன். தொன்று முதிர் கந்து - பழைமை முதிர்ந்த தூண்.

கஙூஉ. மயன் - தெய்வத்தச்சன்; அசுரத்தச்சனென்றுங்கூறுவர்; கந்திற்பாவை இருத்தற்கிடமாகிய சக்கரவாளக்கோட்டமும் மயனுற்செய்யப்பட்டதென்று இந்நூல் கஙஉ-ஆம் அடிமுதலியவற்றால் தெரிகின்றது.

கஙூரு. ஓவியச்சேனன் - சித்திரசேனன்.

கஙூள. அவனுடன் - சித்திரசேனனுடன். ஆடிடம் - விளையாடுமிடம்.

கசஉ. தேறென - தெளிவாயென்று கந்திற் பாவை சொல்ல.

மேல்வருவன மணிமேகலை கூற்று.

கசஙூ. தெய்வக்கிளவிகளைத் தேறேனல்லேன்; தெளிவேனென்றபடி.

கசச. ஈறு கடைபோக - மரணம் இறுதியாக ; "கடைபோகச் செல்வமுய்த் தார்" (நாலடி. கஙக.) என்றலும் - என்று மணிமேகலை சொல்லலும்.

மேல் வருவன கந்திற்பாவை கூற்று.

(பி - ம்.) கஙூஉ. 'பாவையை' கஙூரு. 'ஓவிய சேனன்' கஙூஙூ.'பொருந் துவகொணர்ந்து' கசஂ0. 'நாகலம்வருந்தவென்னலம்' கசஙூ. 'மணிமேகலைக் குவரு' கசச. 'ஈறுபிர் கடைகொளெனக்குறையென்றலும்'

உக.—கந்திற்பாவை வருவதுரைத்தகாதை. உஙள

கசடு துவதிக னுரைக்குஞ் சொல்லனுஞ் சொல்லுவேன்
வருவது கேளாய் மடக்கொடி நல்லாய்
மன்னுயிர் நீங்க மழைவளங் கரந்து
பொன்னெயிற் காஞ்சி நகர்கவி னழிய
வாங்கது கேட்டே யாருயிர் மருந்தா
கடுo யீங்கிம் முதியா னிடவயின் வைத்த
தெய்வப் பாத்திரஞ் செவ்விதின் வாங்கித்
தையனிற் பயந்தோர் தம்மொடு போகி
யறவணன் முனு மாங்குள னுதலிற்
செறிதொடி காஞ்சி மாநகர் சேர்குவை
கடுடு யறவண னருளா லாய்தொடி யல்லூர்ப்
பிறவண மொழிந்துநின் பெற்றியை யாகி
வறனே லுலகின் மழைவளந் தருஉ
மறனே டேந்தி யாருயி ரோம்புவை
யாய்தொடிக் கவ்வு நறனெடி தோன்று
கசுo மேது நிகழ்ச்சி யாவும் பலவுள
பிறவற மூரைத்தோர் பெற்றிமை யெல்லா
மறவணன் றனக்குநீ யுரைத்த வந்நாட்
டவமுந் தருமமுஞ் சார்பிற் நோற்றமும்

கசடு. உரைக்கும், முற்று. சொல்லனுஞ்சொல்லுவேன் - யான் சொல்லுதலேயுஞ் செய்வேன்.

கசஎ. நீங்கக் கரந்து - நீங்கும்படி மறைத்து.
கடுo. முதியாள் - சம்பாபதி.
கடுஉ. நிற்பயந்தோர் - மாதவியும் சுதமதியும்.
கடுங. ஆங்கு - காஞ்சிநகரில். கடுச. செறிதொடி, விளி.
கடுஞ - ச. ஆங்குளனுதலிற் சேர்குவை.
கசசு - டுச. அதுகேட்டு வாங்கிக் காஞ்சிமாநகர் சேர்குவையென்க.
கடுசு. பிறவணமொழிந்து - வேற்றுமதப்பற்றொழிந்து.
கடுஎ. வறன் ஓடி உலகில் - வறட்காலம் பரந்த உலகத்தில்.
கடுஅ. அறனெடு - அமுதசுரபி. கடுஎ - அ. மணி. கடு : டுங - ச.
கசுக. பிறவறமூரைத்தோர் - வஞ்சி நகரத்தில் மற்றைச் சமயதருமங் களைச் சொன்னோருடைய.
கசுங. சார்பு - துவாதசாந்தானம்; அவை, "பேதைமை செய்கை யுணர்வே யருவுரு,வாயி னூறே நுகர்வே வேட்கை,பற்றே பவமே தோற்றம்

(பி - ம்.) கடுடு. 'அருளவாய்கொடி' கடுஎ. 'மறனேடுலகின்' கசுo. 'ஏதுக்கு நிகழ்ச்சி'

பவமறு மார்க்கமும் பான்மையி னுரைத்து
கசுடு மறவிரு ளிரிய மன்னுயி ரேமுற
வறவெயில் விரித்தாங் களப்பி லிருத்தியொடி
புத்த ஞர்யிறு தோன்றுங் காலுஞ்
செத்தும் பிறந்துஞ் செம்பொருள் காவா
வித்தல நீங்கே னிளங்கொடி யானுங்
களஎ தாயரு நீயுந் தவறின் றுக
வாய்வ தாகநின் மனப்பாட் டறமென
வாங்கவ னுரைத்தலு மவன்மொழி பிழையாய்
பாங்கிய னல்லறம் பலவுஞ் செய்தபின்
கச்சி மூற்றத்து நின்னுயிர் கடைகொள
களடு வுத்தர மகதத் தறுபிறப் பெல்லா
மாண்பிறப் பாகி யருளற மொழியாய்

வினைப்பய, னிற்றென வகுத்த வியலபீ ராறும்'' (மணி. உசை :கஎடு - அ ; ஈஎ: சடு - அ) என்பன.

கசுசை. பவம் - கருமங்களின் கூட்டம் ; ''பவமெனப் படுவது கரும வீட்டம்'' (ஈ.எ : ஊஈ) என வருதல் காண்க.

கசுடு. மறவிரு ர் - பாவமாகிய இருட்டு. ஏமுற - நிருவாணமாகிய இன்பத்தை அடையும்படி ; ஏமம் - இன்பம்.

கசுசு. இருத்தி - அணிமாதியோகசித்திகளெட்டும் ; ''எத்திறத் தார்க்கு மிருத்தியுஞ் செய்குவம்'' (உசு : சுக) என்று பின்னும் வருதல் காண்க ; சித்தி எண்பத்தொன்பதென்று கூறுதலுமுண்டு ; ''எண்பத் தொன் பதுசித்தி யியல்பினு ளுளவென்று, பண்பொத்த மூண்பொருளைப் பாரறியப் பகர்ந்தனையே'' என்பது வீர. யாப்பு. கக - உதாரணம்.

கசுஎ. தோன்றுங்காறும் - தோன்றுமளவும்.

கசுஅ. செம்பொருள் - தருமம் ; மெய்யுணர்ந்தார் நெஞ்சிற்கெல்லாம் செம்மையுடைத்தாய்த் தோன்றலின், இப்பெயர்பெற்றது ; ''செம் பொருள் கண்டார்வாய்ச் சொல்'' (குறள். ஙக.) காவா - காத்து.

கசுக. இத்தலம் - இக்காஞ்சி நகரத்தை. களக. அறம் வாய்வதாக.

களஉ. அவன் - அறவணன். பிழையாய் - தப்பாயாய்.

கசுச - எஉ. அவன் உரைத்து நின் மனப்பாட்டறம் வாய்வதாகவென வுரைத்தலும்.

களங. கல்லறம் - காருணியம்.

களச. கச்சிமூற்றம் - காஞ்சிநகரிடம் ; ''வஞ்சிமூற்றம்'' (சிலப். உடு: ஈ, ஈச.) கடை - முடிவு.

களடு. உத்தரமகதம் - வடமகதநாடு.

களஎ. ஒழியாய் - நீங்காயாய்.

(பி - மீ.) கசுசை. 'வேயறுமார்க்கமும்' கசுஅ. செம்பொருளிகவாய்' கசுக. ' இத்திற நீங்கேன் ' களங. 'வாங்கிய நல்லறம்பலவுஞ்' களடு. 'புத்தமலகதனபிறப்'

மாண்பொடு தோன்றி மயக்கங் கூர்ந்து
பிறர்க்கற மருளும் பெரியோன் றனக்குத்
தலேச்சா வகனுய்ச் சார்பறுத் துய்தி
கஅ0 யின்னுங் கேட்டியோ நன்னுதன் மடந்தை
பூங்க ணேங்கிய வரவோன் றன்னே
வாங்குதிரை யெடுத்த மணிமே கலாதெய்வஞ்
சாது சக்கரற் காரமு தீத்தோ
யீது நின்பிறப் பென்பது தெளிந்தே
கஅரு யுவவன மருங்கி னின்பாற் ரூன்றி
மணிபல் லவத்திடைக் கொணர்ந்தது கேளெனத்
துவதிக னுரைத்தலுந் துயர்க்கட னீங்கி
யவதி யறிந்த வணியிழை நல்லாள்
வலேயொழி மஞ்ஞையின் மனமயக் கொழிதலு
கசூ0 முலகுதுயி லெழுப்பினன் மலர்கதி ரோனென்.

உக.—கந்திற்பாவை வருவதுரைத்தகாதை முற்றிற்று.

களு. தலேச்சாவகனுய் - முதன்மாணுக்கனுய். சாவகர்=ஸ்ராவகன் - கேட்பவன்; "தருமசாவகன் றன்னடி வணங்கி" (உரு: உ) என்பர் பின்னும்; சார்பு - பன்னிருதானம்; (மணி. ஈ0: சரு - அ.) உய்தி - பிழைப்பாய்.

கஅக. உன்குலத்தில் மூர்ப்பு அரத்தால் உபசரிக்கப்பெற்றிருந்த அறிவுடையோனுகிய ஒருவனே; னுங்கண் - முன்பு; "னுங்கெயி லெறிந்தநின் னுங்கணேர் நினேப்பின்" (புறநா. ஈக); "போந்தைக் கண்ணிநின் னுங்கணேர் மருங்கிற், கடற்கடம் பெறிந்த காவலன்" சிலப். உ அ: கூசு - ரு).

கஅஉ. நிரை எடுத்த - அழுந்தி இறவாவண்ணம் கடலினின்றும் எடுத்த. எடுத்தகதையை, சிலப்பதிகாரம், சரு: உ அ - ஆம் அடி முதலிய வற்றிற்காண்க.

கஅங. சாதுசக்கரற்கு - சாதுசக்கரனென்னுமுனிவனுக்கு.

கஅச. ஈது - இத்தன்மையையுடையது.

கஅஅ. அவதி - எல்லே. கசூ0. மலர்கதிரோன், வினேத்தொகை.

க - கசூ0. குழலி எழுத்து கேட்டு எழுந்து நீங்கி வெய்துயிர்த்துப் புலம்பி அழுதேங்கி அயாவுயிர்த்தெழுதலும், இருந்தெய்வம் உரைத்தலும், னுங்கொடி பொருந்தி 'கின்பேரருள் பெறுவேன்' என, தெய்வங்கூறும்; அங்ஙனங்கூறுந் தெய்வம் 'எல் சொற்றேறு' என, மணிமேகலே 'எனக்கு அருள்' என்றலும் துவதிகனுரைக்கும்; அங்ஙனமுரைக்குந் துவதிகன் உரைத்தலும், நல்லாள்நீங்கி மயக்கொழிதலும், கதிரோன் துயிலெழுப்பினனென விணமுடிவுசெய்க.

(டி - ம்.) களஅ. 'அறமொழியும் பெரியோள்' களகூ. 'சாவறுத்துய்தி'

இருபத்திரண்டாவது

சிறை செய்காதை.

[இருபத்திரண்டாவது மணிமேகலை போருட்டால் மடிந்தான்
உதயகுமரனென்பது மாதவர்வாய்க்கேட்ட மன்னவன்
மணிமேகலையை மந்திரியாகிய சோழிகவேளதியாற்
காவல்கோண்டபாட்டு.]

கடவுண் மண்டிலங் காரிருள் சீப்ப
நெடுநிலைக் கந்தி னின்ற பாவையொடு
முதியோள் கோட்டம் வழிபடல் புரிந்தோ
ருதய குமரற் குற்றதை யுரைப்பச்
சாதுயர் கேட்டுச் சக்கர வாளத்து
மாதவ ரெல்லா மணிமே கலைதனை
யிளங்கொடி யறிவது முண்டோ விதுவெனத்
துளங்கா தாங்கவ ளுற்றதை யுரைத்தலு
மாங்கவ டன்னை யாருயிர் நீங்கிய
வேந்தன் சிறுவனெடு வேறிடத் தொளித்து
மாபெருங் கோயில் வாயிலுக் கிசைத்துக்
கோயின் மன்னனைக் குறுகினர் சென்றீங்
குயர்ந்தோங் குச்சி யுவாமதி போல

க. கடவுண்மண்டிலம் - சூரியன். கூ. முதியோள் - சம்பாபதி.

உ - ச. பாவையொடு கோட்டத்தை வழிபடல்புரிந்தோர் உற்றதை முனிவர்க்கு உரைப்ப.

டு. சாதுயர் - உதயகுமரனிறந்ததன்பம்; மணி. கூ: சுடு.

சு. மணிமேகலையைநோக்கி.

எ. இளங்கொடி - மணிமேகலை; விளி. இது - உதயகுமரனிறந்தது. என - என்று முனிவர்கேட்ப.

டு - எ. மாதவரெல்லாம் மணிமேகலையைநோக்கி இதனை நீ அறிவது முண்டோவென.

அ. துளங்காது - நடுங்காது.

இனி, சக்கரவாளக் கோட்டத்துள்ள முனிவர் அரசனையடைந்து உதய குமரன் இறந்தது மொழிதல் கூறப்படும்.

கக. வாயில் - வாயில்காப்போர். கஉ. சிலப். உ0: சள.

கஙூ. உவாமதி - பூர்ணசந்திரன்.

நிவந்தோங்கு வெண்குடை மண்ணக நிழற்செய
கடு வேலுங் கோலு மருட்கண் விழிக்க
தீதின் றுருள்கரீ யேந்திய திகிரி
னினக்கென வரைந்த வாண்டுக ளெல்லா
மனக்கினி தாக வாழிய வேந்தே
யின்றே யல்ல விப்பதி மருங்கிற்
உ0 கன்றிய காமக் கள்ளாட் டயர்ந்து
பத்தினிப் பெண்டிர் பாற்சென் றணுகியு
நற்றவப் பெண்டிர் பின்னுளம் போக்கியுங்
தீவினை யுருப்ப வுயிரீறு செய்தோர்
பாராள் வேந்தே பண்டும் பலரான்
உரு மன்மருங் கறுத்த மழுவா ணெடியோன்
றன்மூன் றேன்ற றகாதொளி ரீயெனக்.
கன்னி யேவலிற் காந்த மன்னவ
னிங்ஙகர் காப்போர் யாரென நினை இ

கச. செய, வியங்கோள்.

கசு. திகிரி தீதின்று உருள்க ; தீது - இடையூறு.

கஎ. வரைந்த - எல்லையிட்ட.

கஅ. இனிது - பன்மையொருமைமயக்கம்.

காமமிகுதியாற் கொலையுண்ட உதயகுமரன்பொருட்டு வருந்தா வண்ணம், முற்காலத்து அங்ஙகரத்திற் காமமிகுதியால் தீங்கிழைத்துக் கொலையுண்ட இருவருடைய சரித்திரங்களை அம்முனிவர்களுள் ஒருவர் அரசனுக்குக் கூறுதல் மேற்கூறப்படும்.

உ0. கன்றிய - அடிப்பட்ட ; "காமமே கன்றி நின்ற" (சீவக. உக0.) அயர்ந்து - செய்து. காமக்கள்ளாட்டு: மணி. கஅ : அஅ; உரு : கூக.

உஉ. நற்றவப் பெண்டிர் - நல்ல தவஞ்செய்யுமகளிர் ; நற்றவம் - வீடு பெறுதற்குச் செய்யுந் தவமுமாம் ; "நற்றவஞ்செய் வார்க்கிடந் தவஞ் செய் வார்க்கு மஃதிடம்" சீவக. எஎ.

உசு. பண்டும், உம்மைஎதிரதுதழீஇய எச்சப்பொருளது.

உரு. மன்மருங்கறுத்த - இராசகுலத்தை இல்லையாக்கின ; "சூர் மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி" (முருகு. உஎடு.) மழுவாணெடியோன் - பரசுராமன் ; மதுரை. சடுடு.

உஎ. கன்னி - தார்க்கை ; சம்பாபதியுமாம். காந்தமன்னவன் - காந்தனென்னும் பெயரையுடைய அரசன்.

உஅ. இங்ஙகரென்றது, காவிரிப்பூம்பட்டினத்தை. நினை இ - நினைந்து. (பி - ம்.) உசு. 'தகாதொழி'

நாவலந் தண்பொழி னண்ணர் நடுக்குறக்
கூ0 காவற் கணிகை தனக்காங் காதல
னிகழ்ந்தோர் காயினு மெஞ்சுத லில்லோன்
ககந்த னுமெனக் காதலிற் கூஉ
யரசா ளுரிமை நின்பா லின்மையிற்
பாசு ராமனின் பால்வந் தணுகா
கூநு னமர முனிவ னகத்தியன் றனது
துயர்நீங்கு கிளவியின் யான்றோன் றளவுங்
ககந்தன் காத்தல் காகந்தி யென்றே
யியைந்த நாம மிப்பதிக் கிட்டீங்
குள்வரிக் கொண்டவ் வுரவோன் பெயர்நாட்
சo டெள்ளுநீர்க் காவிரி யாடினள் வருஉம்
பார்ப்பனி மருதியைப் பாங்கோ ரின்மையின்

உகூ. நாவலந்தண்பொழில - சம்புத்தீவில். நண்ணர் - பகைவர்.

கூ0. காவற்கணிகை - - காஞ்சித்தாடுங்கூத்தி ; இராக்கடவேசையென்பர் (நு : நo) சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர் ; இவள் அரசன் காமக்கிழத்திபோலும். காதலன் - மகன்.

கூக. எஞ்சுதல் - குறைதல்.

உகூ - கூக. நண்ணர் இகழ்ந்தோராய் நடுக்குறக்காயினும் எஞ்சுதலில்லோன்.

கூஉ. ககந்தனுமென - ககந்தன் காத்தற்குரியனுவானென்று நினைந்து. கூஉய் - அழைத்து.

கூ0 - கூஉ. காதலனும் எஞ்சுதலில்லோனுமாகிய ககந்தனென்க.

மேல்வருவது, ககந்தனே நோக்கி அரசன் கூறுங் கூற்று.

கூகூ. ககந்தன் கணிகைமகனுதலின், அவன்பால் அரசவுரிமை இலதாயிற்று.

கநு. அமரமுனிவனுகிய அகத்தியன்.

கநு - சு. இம்மன்னவன் அகத்தியமுனிவர்பாற் பத்திமையுடையனுதலே, "கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட, வமர முனிவ னகத்தியன் றனது, குறகங் கவிழ்த்த காவிரிப் பாவை" (மணி. பதி. கo - கஉ) என் பதனுலுணர்க.

கூஎ. ககந்தன், அண்மைவினி. காத்தல், வியங்கோள் ; 'என்றுகூறி' என வருவிக்க.

கூகூ. உள்வரிக்கொண்டு - வேற்றுருவங்கொண்டு. நாள் - நாளில்.

இனிக் கூறப்படுவது, பத்தினிப்பெண்டிர்பாற் சென்றணுகித் தீங்குற்றோன் கதை.

(பி - ம்.) கூக. 'இகந்தோர்க்காயினும்' கூஎ. 'ககந்தன்காத்தலின்'

யாப்பறை யென்றே யெண்ணின ஞகிக்
காவிரி வாயிலிற் ககந்தன் சிறுவ
னீவா வென்ன நேரிழை கலங்கி
சருு மண்டிணி ஞாலத்து மழைவளந் தரூஉம்
பெண்டி ராயிற் பிறர்நெஞ்சு புகாஅர்
புக்கேன் பிறனுளம் புரிநூன் மார்பன்
மூத்தீப் பேணு முறையெனக் கில்லென
மாதுய ரெவ்வமொடு மனையகம் புகாஅள்
நுo பூத சதுக்கம் புக்கனண் மயங்கிக்
கொண்டோற் பிழைத்த குற்றந் தானிலேன்
கண்டோ னெஞ்சிற் காப்பெளி தாயினேன்
வான்றரு கற்பின் மனையறம் பட்டேன்
யான்செய் குற்றம் யானறி கில்லேன்
நுரு பொய்யினே கொல்லோ பூத சதுக்கத்துத்
தெய்வ நீயெனச் சேயிழை யரற்றலு
மாபெரும் பூதந் தோன்றி மடக்கொடி

சஉ. யாப்பறை - உறுதியற்றவள்.

சஙு. காவிரி வாயிலில் - காவிரிக்கரையில் திருமுகத்துறைகழிகின்ற வாயிலில் ; " காவிரி வாயிற் கடைமுகங் கழிந்து " சிலப். கo : ஙங.

சச. என்ன - என்றுகூற. நேரிழை - மருகி. சரு. புறநா. உ.

சள. பிறனுளம்புக்கேனெனல்க. இக்கருத்தைத்தழுவி, " நீதிலாவட மீன் " (சிலப். க: உள) என்பதில், ' நீது ' என்பதற்கு 'பிதர்நெஞ்சு புகுதல்' என்று அடியார்க்குநல்லார் பொருள்செய்திருத்தல் காண்க. புரிநூன் மார்பனென்றது, தன் கணவனுகிய அத்தணனை.

சஙு. மாதுயரெவ்வம் - மிக்க துன்பம் (மணி. கo: சுஉ.) புகாஅள் - புகாளாய்.

நுo. பூதசதுக்கம்-தவமறைந்தொழுகுந்தன்மையிலாளர் முதலிய அறு வகையினரைப் பாசத்தாற்கட்டிப் புடைத்துண்ணும் பூதநிற்றலையுடைய சதுக்கம்; சதுக்கம் - நாற்சந்தி ; பூதசதுக்கத்திற் வரலாற்றைச் சிலப்பதி காரம், நு: கஉ - ஆம் அடிமுதலியவற்றுணர்க.

நுக. கொண்டோன் - கணவன். நுஉ. கரப்பு - ஒளித்தல்.

நுங. வான்தருகற்பு - மழையைத்தரும் கற்பு. மனையறம் பட்டேன் - இல்லறத்திற்குத் துணையாக நிற்றலை ஒழிகதேன்.

நுச. யானறிகில்லேன் - யாஅறியேன்.

நுரு. பொய்யினேகொல்லோ - பொய்ம்மையையுடையாயோ.

நுரு - சு. நீ இல்லையாயினையோ. நுள. பூதம் - சதுக்கப்பூதம்.

(பி - ம்.) சஉ. 'எள்ளினஞகி' நுள. 'மாபெரும்தெய்வம்'

நீகே ளென்றே நேரிழைக் குரைக்குந்
தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
சுo பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்
பிசியு நொடியும் பிறர்வாய்க் கேட்டு
விசிபிணி முழவின் விழாக்கோள் விரும்பிக்
கடவுட் பேணல் கடவியை யாகலின்
சுரு மடவர லேவ மழையும் பெய்யாது
நிறையுடைப் பெண்டிர் தம்மே போலப்
பிறர்நெஞ்ச சுடேஉம் பெற்றியு மில்லை
யாங்கவை யொழிகுவை யாயி ஞயிழை
யோங்கிரு வானத்து மழையுணின் மொழியது
எo பெட்டாங் கொழுகும் பெண்டிரைப் போலக்
கட்டா துன்னையென் கடிந்தொழிற் பாச
மன்முறை யெழுகாள் வைத்தவன் வழுஉம்
பின்முறை யல்ல தென்முறை யில்லை

நிகை - சுo. குறள். நிரு.

சுக. பொய்யில்புலவன் - திருவள்ளுவர். பொருளுரை - பொருளை யுடைய சொல்; தருமவார்த்தையுமாம். தேறாய் - தெளியாயாய்; சீலப். உசு: சுசு.

சுஉ. பிசி - பிதிர் (புதிர்); பொய்யுமாம். நொடி - விடுகதை.

சுங. விசிபிணிமுழவின் விழா - கட்டப்பட்ட கட்டினையுடைய முழ வினையுடைய விழா.

சுச. கடவியையாகலின் - கடப்பாடாக வுடையையாகலின்.

சுரு. மடவரல், முன்னிலைப்பெயர்.

சுசு. நிறை - நிறுத்தல். பெண்டிர் தம்மேபோல -பெண்டிரைப்போல.

சுஎ. பெற்றியுமில்லை - தன்மையுமில்லை.

சுநு - எ. மணி. உஉ: சுரு - சு.

சுஅ. அவை - பிசியும் நொடியும் கேட்டலும், விழாக்கோள்விரும் பலும், கடவுட்பேணலும்.

எo. பெட்டாங்கு - விரும்பியவண்ணம். பெண்டிரைப்போல - பெண் டிரைக்கட்டுவதுபோல.

எஉ. எழுகாள் - ஏழுகாளாம். வைத்து: சொன்னடை; அரசன் முறையாக ஏழுகாள் பொறுத்திருந்து என்றுமாம். வழுஉம் - தவறும்.

(பி - ம்.) நிகை. 'தொழுமவள்' சுஉ. 'கேட்டும்' சுங. 'விரும்பியும்'

மிக்கெழு காளி விளங்கொடி கின்பால்
எடு வாங்கா நெஞ்சின் மயரியை வாளாற்
ககந்தன் கேட்டுக் கடிதலு முண்டென
விகந்த பூத மெடித்துரை செய்ததப்
பூத முரைத்த காளா லாங்கவன்
முதை வாளாற் றடியவும் பட்டன
அ0 னின்னுங் கேளா யிருங்கட லுடித்த
மண்ணுள் செல்வத்து மன்னவ ரேறே
தரும தத்தனுந் தன்மா மன்மகள்
பெருமதர் மழைக்கண் விசாகையும் பேணித்
தெய்வங் காட்டிக் திப்பிய வோவியக்
அடு கைவினை கடந்த கண்கவர் வனப்பினர்
மைத்துனன் முறைமையால் யாழோர் மணவினைக்
கொத்தன னென்றே யூர்முழு தலரெழப்
புணியா வோவியம் புறம்போந் தென்ன
மணியக நீங்கி வாணுதல் விசாகை
கo யுலக வறவியி னூடுசென் றேறி
யிலகொளிக் கந்தி னெழுதிய பாவா
யுலகர் பெரும்பழி யொழிப்பாய் நீயென
மாகத முள்ளீர் மழைதரு மிவளென

எடு. மயரி - மயக்கமுடையான். எச - சு. எழுகாளிற்கடிதலுமுண்டு.

எள. இகந்தபூதம் - (நீமையைக்) கடந்தபூதம்.

எஅ. காளால் - காளில். அ0 - அக. புறநா. கூசுகூ.

இனிக்கூறப்படுவது, நற்றவப்பெண்டிர் பின்னுளம்போக்கித் தீங்குற்ற கதை.

அஉ - நி. தருமதத்தனும் விசாகையும் வணப்பினர்.

அசு. யாழோர்மணவினைக்கு - காந்தருவவிவாகத்திற்கு.

அள. ஒத்தனர் - இயைந்தனர்.

அஅ. புணியாவோவியம் - வண்ணங்களைக்கொண்டெழுதாதவடிவைக் ட்டினசித்திரம்; "புணியா வோவியங் கடுப்ப" (நெடுநல். கசள); செகையழகு யாதொன்றும் இன்மையின், இங்ஙனங்கூறினர்.

கo. ணுடி - உள்ளே. கூஉ. என - என்று விசாகைவேண்ட.

கூகூ. இவள் மழையைத் தருவாளொன்று.

(பி - ம்.) அள. 'ஒத்தனரென்றே' கo. 'ணுடிவக்தேறி'

நாவுடைப் பாவை நங்கையை யெடுத்தலுக்
கூடு தெய்வங் காட்டித் தெளித்திலே னுயின்
மைய லூரோ மனமா சொழியாது
மைத்துனன் மனையாண் மறுபிறப் பாகுவே
னிப்பிறப் பிவனெடுங் கூடே னென்றே
நற்றுய் தனக்கு நற்றிறஞ் சாற்றி
கoo மற்றவள் கன்னி மாடத் தடைந்தபின்
றருமத் தத்தனுந் தந்தையுந் தாயரும்
பெருநகர் தன்னைப் பிறகிட் டேகித்
தாழ்தரு துன்பந் தலையெடுத் தாயென
நாவுடைப் பாவையை நலம்பல வேத்தி
கoடு மிக்கோ ருறையும் விழுப்பெருஞ் செல்வத்துத்
தக்கண மதுரை தான்சென் றடைந்தபின்
றருமத் தத்தனுந் தன்மா மன்மகள்
விரிதரு பூங்குழல் விசாகையை யல்லது
பெண்டிரைப் பேணே னிப்பிறப் பொழிகெனக்
ககo கொண்ட விரதந் தன்னுட் கூறி
வாணிக மரபின் வருபொரு ளீட்டி
நீணிதிச் செல்வனுய் நீணில வேந்தனி
னெட்டிப் பூப்பெற் றிருமுப் பதிறதியாண்

கூச. நாவுடைப்பாவை - கருத்பாவை (மணி. உஉ: கூச.) எடுத்தல்- உயர்த்தல்.

கூஎ. மறுபிறப்பில மைத்துனன் மனையியாவேன். மைத்துனனென்றது தருமதத்தனை.

கூக. நற்றிறம் - விரதம். கoo. அவள் - விசாகை.

கoஉ. பெருநகர் - காவிரிப்பூம்பட்டினம். பிறகிட்டு - பின்வைத்து.

கoங. தலையெடுத்தாய் - நீக்கினாய்.

கoசு. தக்கணமதுரை - கூடல (மணி. உஉ: கஉக); தக்கணம், பாகதச்சிதையு.

கoஎ. தருமதத்தனும்: உம்மை, இறந்தது தழீஇயது.

ககo. கொண்ட - மேற்கொண்ட.

ககக. வாணிகமரபு - கொள்வது மிகையும் கொடுப்பது குறையுமாகா மல் ஒப்பநாடிச்செய்தல்.

ககங. எட்டிப்பூப்பெற்று - அரசனற் கொடுக்கப்படும் எட்டிப்பட்டத் திற்குரிய பூவைப்பெற்று, இதன்வரலாற்றை இந்நூல சு: நிஅ - ஆம் அடிக்குறிப்பிற் பார்க்க. இருமுப்பதிற்றியாண்டு-அறுபதுவருடம்; என்றதனி, அவன்பிராயத்தை; "ஆறைந திரட்டி யாண்டினைக் காயது" (கஉசு) என்று பின்பு விசாகைகூறுதலை காண்க.

டொட்டிய செல்வத் துயர்ந்தோ ஞயின
கசடு னந்த ணுள ளொருவன் சென்றீங்
கென்செய் தனையோ விருடிதிச் செல்வ
பத்தினி யில்லோர் பலவறஞ் செய்யினும்
புத்தே ளுலகம் புகாஅ சென்பது
கேட்டு மறிதியோ கேட்டனை யாயி
கஉ0 னீட்டித் திராது கின்னக ரடைகெனத்
தக்கண மதுரை தான்வறி தாக
விப்பதிப் புகுந்தன னிருநில வேந்தே
மற்றவ னிவ்வூர் வந்தமை கேட்டுப்
பொற்றொடி விசாகையு மனைப்புறம் போந்து
கஉ சு நல்லா ணுணுள் பல்லோர் நாப்ப
ணல்லவை கடிந்த வவன்பாற் சென்று
நம்மூணு மறிந்தில நம்மை முன்ஞண்
மம்மர் செய்த வனப்பியாங் கொளித்தன
வாறைங் திரட்டி யாண்டினக் காயதென்
கஉ0 ஞறைங் கூந்தலு நரைவிரா வுற்றன
விளமையுங் காமமும் யாங்கொளித் தனவோ
வுளனில் லாள வெனக்கீங் குரையா
யிப்பிறப் பாயினீயா னின்னடி யடையே
னப்பிறப் பியானின் னடித்தொழில் கேட்குவ

கசஉ. ஒட்டிய - நீராத.

கo எ - கச. தருமதத்தனும் கூறி ஈட்டிப் பெற்று உயர்ந்தோனுயின னென்க.

கஉ0. அடைக என - அடைவாயென்று அத்தணுளன் கூற.

கஉஉ. புகுந்தனன் - தருமதத்தின் புகுந்தனன்.

கஉசு. அல்லவை - பொய்முதலியன.

மேல் வருவது விசாகைகூற்று.

கஉஅ. மம்மர் - மயக்கம். வனப்பென்றது இருவருடைய அழகையும்.

கஉ0. நாறைங்கூந்தல்: சிலப். கo: சாங.

கஉக - நo. என் கூந்தலும் - எனது கூந்தலும். கூந்தல் - மயிர்மாத் திரையாய் ஐவகையுமுணர்த்தலின், 'நரைவிரா வுற்றன' என்று பன்மை கூறினர்;"வண்ணப்போ தருச்சித்து மகிழ்வானைத் தகையவே" சீவக. கசுச.

கஉச. அப்பிறப்பு - மறுபிறப்பு.

(பி - ம்.) கஉக. 'யாங்குகுத்தனவோ'

கஉடு னிளமையு நில்லா யாக்கையு நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமு நில்லா
புத்தே ளுலகம் புதல்வருந் தாரார்
மிக்க வறமே விழுத்துணை யாவது
தானஞ் செய்யெனத் தருமதத் தனுவு
கசஂ மாமன் மகள்பால் வான்பொருள் காட்டி
யாங்கவ னவளுடன் செய்த நல்லற
மோங்கிரு வானத்து மீனினும் பலவாற்
குமரி மூத்தவக் கொடுங்குழை நல்லா
ளமர னருளா லகனக ரிடேஉம்
கசடு படுபழி நீங்கிப் பல்லோர் நாப்பட்
கொடிமிடை வீதியின் வருவோள் குழன்மேன்
மருதி பொருட்டான் மடிந்தோன் றம்முன்
கருகிய நெஞ்சினன் காமங் காழ்கொளச்
சுரியிரும் பித்தை சூழ்ந்துபுறந் தாழ்ந்த
கடிஂ விரிபூ மாலை விரும்பினன் வாங்கித்

கஉடு - சு. "இளமையுஞ் செல்வமும் யாக்கையு நில்லா' சீலப். கூஂ: ககூக.

கஉள. புத்தேளுலகம் - தேவருலகம்.

கஉக. தானஞ்செய்யென - தானஞ்செய்யென்று விசாகைசொல்ல.

கசஂ. மாமன்மகள் - விசாகை; மணி. உஉ: கஅசு.

கசஉ. குமரிமூத்த - கன்னிப்பெண்ணைக்கிருந்து வறிதே மூப்புற்ற; "குமரி மூத்தவெண் பாத்திரம்" (கசா: எஎ) என ஆபுத்திரன் கூறியதாக முன்னும் கூறியிருத்தல் காண்க. நல்லாள் - விசாகை.

கசச. அமரன் அருளால் - கந்திற்பாவையிலுள்ள துவதிகனென்னும் தேவனுடைய கருணையால்.

கசடு. படுபழி - மைத்துனன் முறையால் யாழோர் மணவினைக்கு ஒத்தனரென்று ஊர்கூறிய பொய்ப்பழி.

கசடு - சு. நாப்பண்வருவோள் - விசாகை.

கசள. மருதி - முற்கூறிய பார்ப்பனி மருதி. தம்முன் - தமையன்.

கசஅ. கருகிய நெஞ்சு - இருண்ட நெஞ்சு. காழ்கொள - வயிரங் கொள்ள (மணி. நி: உ0.) காழ்கொளக் கருகிய நெஞ்சினனென்க.

கசக. சுரியிரும்பித்தை - சுரித்த கரிய தன் குடுமியில்; "சுரியிரும்பித்தை பொலியச்சூட்டி" பொருந. கசு0:

கடிஂ. மாலையை விரும்பி வாங்கி.

(பி - ம்.) கஉடு. 'நில்லாது'

தொல்லோர் கூறிய மணமீ தாமென
வெல்லவிழ் தாரோ னிடுவான் வேண்டி
மாலே வாங்க வேறிய செங்கை
நீலக் குஞ்சி நீங்கா தாகலி
கருடு னேறிய செங்கை யிழிந்தில திந்தக்
காரிகை பொருட்டெனக் ககந்தன் கேட்டுச்
கடிஞ்சினந் திருகி மகன்றுயர் நோக்கான்
மைந்தன் றன்னே வாளா லெறிந்தன
னூழிதொ றூழி யுலகங் காத்து
கசுஐ வாழிய வெங்கோ மன்னவ வென்று
மாதவர் தம்மூளோர் மாதவன் கூறலும்
வீயா விழுச்சீர் வேந்தன் கேட்டன
னின்றே யல்ல வென்றெடுத் துரைத்து
ஈன்றறி மாதவிர் நலம்பல காட்டினி
கசுடு ரின்று மூளதோ விவ்வினே யுரைமென
வென்றி நெடுவேல் வேந்தன் கேட்பத்
தீதின் றுக செங்கோல் வேந்தென
மாதவர் தம்மூளோர் மாதவ னுரைக்கு
முடிபொரு ளுணர்ந்தோர் மூதூர் புலகிற்
கஎ0 கடியப் பட்டன வைந்துள வவற்றிற்

கருஉ. எல் - வினாக்கம். இடுவான் வேண்டி - இடவிரும்பி.

கருங. வாங்க - கொள்ளுதற்பொருட்டு.

கருச். நீலக்குஞ்சி - கருமையையுடைய குடுமி; நீலம் - கருமை; "நீலயானை மன்னவன்" சீவக. கசஅ.

கருங - சு. கை நீங்காதாகலி ர்.

கருடு - சு. விசாகைக்குச் சூட்டுதற்பொருட்டு மாலேவாங்குதற்கு ஏறியகை குஞ்சியினின்றும் இழிந்திலதென்று ககந்தன் கேட்டு.

கருள. சினந்திருகி - கோபமுறுகி; "காய்சினம் திருகிய கடுந்திறல் வேனில்" (பெரும்பாண். கூ.) நோக்கான்-நோக்கானாய்; இதுநோக்கல்நோக்கம்.

கருக - சுo. மு. மணி. கசு: கசுள - அ. கசுஉ. வீயா - மாறாத.

கசுங. 'இன்றேயல்ல' என்பதனை இக்காதையில் கசு - ஆம் அடியிற் காண்க.

கசுடு. உரைமென = உரையுமென - சொல்லுமென்று.

கசுள. வேந்தே, செங்கோல் தீதின்றுகவென்று.

கசுஅ. உரைக்கும் - உரைப்பான்.

கசுக. முடிபொருள் உணர்ந்தோர் - பாமார்த்ததத்துவஞானிகள்.

கஎ0. கடியப்பட்டன - விலக்கப்பட்டன. ஐந்தாவன : கள், பொய்,

கள்ளும் பொய்யுங் களவுங் கொலையுங்
தள்ளா தாகுங் காமந் தம்பா
லாங்கது கடிந்தோ ரல்லவை கடிந்தோ ரென
நீங்கின ரன்றே நிறைதவ மாக்க
களரு ணீங்கா ரன்றே நீணில வேந்தே
தாங்கா ரகங் தன்னிடை யுழப்போர்
சேயரி நெடுங்கட் சித்திரா பதிமகள்
காதல னுற்ற கடுந்துயர் பொரூஅண்
மாதவி மாதவர் பள்ளியு ளடைந்தனண்
கஅ0 மற்றவள் பெற்ற மணிமே கலைதான்
மூற்ரு முலையினண் முதிராக் கிளவியள்
செய்குவன் றவமெனச் சிற்றிலும் பேரிலு
மையங் கொண்டிண் டம்பல மடைந்தன
ளாங்கவ ளவ்வியல் பினளே யாயினு
கஅரு நீங்கா னவனே நிழல்போல் யாங்கணுங்
காரிகை பொருட்டாற் காமங் காழ்கொள

களவு, கொலை; காமமென்பன ; "கள்ளும் பொய்யுங் காமமுங் கொலையு, முள்ளக் களவுமென் றுரவோர் துறந்தவை" (உசா: எ - அ) என்பர் பின்னும் ; அவற்றில் - அவ்வைந்தனுள்ளே.

களக - உ. காமம், கள்முதலிய நான்கினையும் நீக்காது ; என்றது, காம முடையோர் மற்றை நான்கு குற்றத்தையும் உடையராவரென்றபடி.

களங. ஆங்கது - அத்தன்மையதாகிய காமத்தை. அல்லவை கடிந் தோர் - அல்லாத கள்முதலியவற்றையுங் கடிந்தோராவார்.

களச. நீங்கினரன்றே - அக்காமத்தை நீங்கினரேரே.

களசு. உழப்போர் - வருத்துவோர்.

களரு - சு. நீங்காரே நரகத்தில் துன்பமநுபவிப்போராவார். மேல் உதயகுமரன்செய்திகூறப்படும்.

களஅ. காதலனுற்ற கடுந்துயர் - கோவலன் கொலையுண்டிறந்தது.

களசு. மாதவர்பள்ளியுள் - சங்கத்தாரான அறவண வடிகளுடையவிடத்தில்.

களஅ - கூ. மணி. உ: நிகூ - சுகூ; கஅ: எ - அ.

களஎ - கூ. மகனாகியமாதவி பள்ளியுளடைந்தனள்.

கஅ0. அவள் - மாதவி. கஅஉ. தவம் செய்குவனென்று.

கஅங. ஐயம் - பிச்சை. அம்பலம் - உலகவுரவி.

கஅரு. அவனே நிழல்போல் யாங்கணும் நீங்காளுய்.

கஅசு. காரிகைபொருட்டு - மணிமேகலைபொருட்டு. காழ்கொள முற்ற; மணி. உஉ: கசஅ.

(பி - ம்.) களங. 'அவைகடிந்தோரென' களசு. 'அடைதலும்'

வாரிரு ளஞ்சா னம்பல மடைத்தனன்
காயசண் டிகைவடி வாயினள் காரிகை
காயசண் டிகையு மாங்குள ளாதலிற்
ககூ0 காயசண் டிகைதன் கணவ னுகிய
வாய்வாள் விஞ்சைய னெருவன் ரேன்றி
யீங்கிவள் பொருட்டால் வந்தன னிவனென
வாங்கவன் றீவினை யுருத்த தாகலின்
மதிமருள் வெண்குடை மன்ன நின்மக
ககூடு னுதய குமர னெழியா னுக
வாங்கவ டன்னை யம்பலத் தேற்றி
யோங்கிருள் யாமத் திவனையாங் குய்த்துக்
காயசண் டிகைதன் கணவ னுகிய
வாய்வாள் விஞ்சையன் றன்னையுங் கூஉய்
உ00 விஞ்சை மகள்பா லிவன்வந் தனனென
வஞ்ச விஞ்சையன் மனத்தையுங் கலக்கி
யாங்கவன் றன்கை வாளா லம்பலத்
தீங்கிவன் றன்னை யெறிந்தென் றேத்தி
மாதவர் தம்முளோர் மாதவ னுரைத்தலுஞ்
உ0டு சோழிக வேனுதி தன்முக நோக்கி

கஅள. அஞ்சானுகி அம்பலமடைத்தனன்.
கஅஅ. காரிகை - மணிமேகலை. கஅக. உளள் - உள்ளாள்.
ககக. வாய்வாள் - தப்பாத வாள்.
ககஉ. இவள்பொருட்டு - காயசண்டிகையின் பொருட்டு.
ககங. அவன் - உதயகுமரன்; காஞ்சனனுமாம்.
ககச. மருள், உவமவுருபு; மணி. ச: உள.
ககசு. அவள் தன்னை - மணிமேகலையை.
ககள. இவனை - உதயகுமரனை. உ00. விஞ்சைமகள் - காயசண்டிகை.
உ0ங. எறிந்தது - (அதிதீவினை) வெட்டியது.

உ0டு. ஏனுதியென்பது வேந்தனுற் கொடுக்கப்படும் பட்டப்பெயர் களுளொன்று; இதனை, 'மாராயம் பெற்ற கெடுமொழி யானும்' (தொல். புறத். சூ. அ) என்பதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதியவுரையா லும், அதில் "போர்க்கட லாற்றும் புரவித்தேர்ப் பல்படைக்குக், கார்க்கடல் பெற்ற கரையன்றே - போர்க்கெல்லாந், தானுதி யாகிய தார்வேந்தன் மோ திரஞ்சே, ரேனுதிப் பட்டத் திவன்" என்று அவர் எடுத்துக்காட்டிய பழம் பாட்டாலுமுணர்க; பெரியபுராணத்துக் கூறப்பட்டுள்ள திருத்தொண்டர் களுள் ஒருவர்க்கு ஏனுதிநாதநாயனரென்ற திருநாமம் இதுபற்றியேவந்த

(பி - ம்.) ககச. 'மதிமருணெடுங்குடை'

யான்செயற் பால தினங்கோன் றன்னேத்
தான்செய் ததனுற் றகவிலன் விஞ்சையன்
மாதவர் நோன்பு மடவார் கற்புங்
காவலன் காவ லின்றெனி னின்றுண்
உகo மகனே முறைசெய்த மன்னவன் வழியோர்
துயர்வினே யாளன் மீருன்றின னென்பது
வேந்தர் தஞ்செவி யுறுவதன் முன்ன
மீங்கிவன் றன்னேயு மீமத் தேற்றிக்
கணிகை மகளேயுங் காவல்செய் கென்றன
உகடு னணிகிளர் நெடுமுடி யரசாள் வேந்தென்.

உஉ.—சிறைசெய்காதை முற்றிற்று.

குடிப்பெயர்போலும்; 'ஆழிதொடடான்' என்பதற்கு, 'ஏறுதிமோதிரஞ் செலித்த சேனபதி' (சீவக. உகசுஎ) என்று ஆசிரியர் நச்சினர்க்கினிய ரெழுதியிருக்கின்றனர். மேற்கூறியவாற்றலும், இக்காதையின் தலைப்பில் 'மகதிரியாகிய சோழிகவேனதி' என்றிருத்தலாலும் 'சோழிகவேனதி' என் பதற்குச் சோழனுடைய (ஏறுதிமோதிரஞ்செலித்த) சேனபதியும் மந்திரியு மாகிய ஒருவனென்று பொருளாகொள்ளுதல் பொருத்தமுடைத்து.

உoஎ. விஞ்சையன் தகவிலன் - காஞ்சனன் தகுதியில்லாதவனுயினுன்.

உoசு - எ. யான் செயற்பாலதைத் தான் செய்ததனுலென்க.

உoஅ - கூ. காவலின்றெனினும், நோன்புமின்று, கற்புமின்று; "அருங் திறலரசர் முறைசெயி னலலது,பெரும்பெயர்ப் பெண்டிர்க்கு கற்புச் சிற வாது" சிலப். உஅ: உoஎ - அ.

உகo. மகனே முறைசெய்த மன்னவன் - கர்ணபரம்பரையிழந்த பசுவின்துய ரைத் தீர்த்தற்குத் தன்மகனேக்கிடத்தி அவன் மார்பிலே ருேலைசெலுலும்படி தேரையூர்ந்த மனுவேந்தன்; இதனே, "மேலைக், கறவைக்கன் றூர்ந்தானேத் தானதையு மூர்ந்தான்" (பழ. கூஉ), "வாயிற் கடைமணி நடுகா நடுங்க,வாவின் கடைமணி யுருநீர் நெஞ்சுடத் தான்ற, னரும்பெறற் புதல்வனே யாழியின் மடித்தோன், பெரும்பெயர்ப் புகாரென் பதியே" (சிலப். உo: நிஉ - சு), "கறவை முறைசெய்த காவலன்கா ணம்மான்ை" (மெி.உக:"புதவு நிறை"), "மருளும் பசுவொன்றின் மம்மர்நோய் நீர், வருளுக திருத்தே ருவோன்" (குலோத்துங்கசோழருலா) என்பவற்றலும் பெரியபுராணத்தில் திருவா ரூர்ச் சிறப்பாலுமுணர்க.

உக. துயர்வினே - நோவினே. உகஉ - கூ. முன்னம் ஏற்றி.

உகசு. கணிகைமகள் - மணிமேகலை.

க - உகநி. மண்டிலம் சீப்பப் புரிகுதோர் உரைப்பக்கேட்டுமாதவரெல் லாம் மணிமேகலையைநோக்கி, 'இதனே நீயறிவதுமுண்டோ' என, அவள் உரைத்தலும், அவனேச் சிறுவனெடு வேறிடத்தொளித்து இசைத்துச் சென்று சூழகி ஒரு மாதவனுரைத்தலும், கேட்டு வேறதன் 'உரையும்' என, ஒருமாதவனுரைக்கும்; அங்ஙனமுரைக்குமாதவன் ஏத்தி உரைத்தலும், வேந்து காவல்செய்கென்றனனென வினமுடிவுசெய்க.

இருபத்துமூன்றுவது

சிறைவிடு காதை.

[இருபத்துமூன்றுவது மணிமேகலை சிறைவீடுசெய்த இராசமா தேவி குறைகொண்டிரப்பச் சீலங்கொடுத்தபாட்டு.]

மன்னவ னருளால் வாசந் தவையெனு
நன்னெடுங் கூந்த னரைமூ தாட்டி
யரசற் காயினுங் குமரற் காயினுங்
திருநிலக் கிழமைத் தேவியர்க் காயினுங்
கட்டுரை விரித்துங் கற்றவை பகர்ந்தும்
பட்டவை துடைக்கும் பயங்கெழு மொழியின
ளிலங்கரி நெடுங்க ணிராசமா தேவி
கலங்கஞ ரொழியக் கடிதுசென் றெய்தி
யழுதடி வீழா தாயிழை தன்னைத்
தொழுதுமுன் னின்று தோன்ற வாழ்த்திக்
கொற்றங் கொண்டு குடிபுறங் காத்துச்

உ. நரைக்கூந்தல் - வெண்மையையுடைய கூந்தல்.

ஈ - ச. ஆயினுமென்பது, விகற்பப்பொருளோத்தருவதோரிடைச்சொல்; எண்ணிடைச்சொல்லுமாம்.

ரு. கட்டுரை - பொருள் பொதிந்த சொல்.

சு. பட்டவை - உண்டாஎன துன்பங்கள். பயம் - பிரயோசனம்.

ரு - சு. விரித்தும் பகர்ந்தும் துடைக்கு மொழியினள்.

அ. கலங்கஞர் - கலங்குதற்குக் காரணமாகிய துன்பம். கடிது சென்று - விரைவாகச் சென்று.

க - அ. வாசந்தவையெனுமூதாட்டி, மொழியினள், தேவியது அஞ ரொழிய மன்னவனருளாற் கடிதுசென்றெய்தியென்க.

கo. தொழுது - அஞ்சலிசெய்து.

கக. கொற்றங்கொண்டு - அரசவுரிமையைக்கொண்டு; "கொற்றங் கொண்டு கோலினி தோச்சென" (பெருங். உ. ரு: எங.) குடிபுறங்காத்து - குடிகளைப் பிறர் கலியாமற் பாதுகாத்து; "குடிபுறங்காத்தோம்பி" குறள். ருசகூ.

(பி - ம்.) சு. 'பட்டது துடைக்கும்' கூ. 'அழுதனடிவீழ்ந்து'

செற்றத் தெவ்வர் தேளந்தம தாக்கியுங்
தருப்பையிற் கிடத்தி வாளிற் போழ்ந்து
செருப்புகன் மன்னர் செல்வுழிச் செல்கென
கரு மூத்து வீளிதலிக் குடிப்பிறந் தோர்க்கு
நாப்புடை பெயராது நாணுத்தக வுடைத்தே
தன்மண் காத்தன்று பிறர்மண் கொண்டன்
றென்னெனப் படுமோ நின்மகன் மடிந்தது
மன்பதை காக்கு மன்னவன் றண்மூன்

கஉ. செற்றம் - பகைமை நெடுங்காலம்நிகழ்வது. தெவ்வர் - பகைவர்.

கஙு. தருப்பையிற்கிடத்தி - பரப்பியதருப்பைப்புல்லிற் கிடத்தி. போழ்ந்து - பிளந்து.

கசு. செருப்புகல் மன்னர் - போரின்கண்ணேபுக்குப் போர்செய்து வீழ்தலேயுடைய அரசர். செல்வுழிச் செல்க என - செல்லுமுலகத்திலே செல்கவென்று அந்தணர் கூறும் வண்ணம்.

கடு. மூத்துவிளிதல் - மூப்புற்று இறத்தல். இக்குடி - சோழபரம் பரை.

கஙு - டு. போரிலிறவாமல் மூதுமையுற்று நோயால் இறந்த அரசரு டம்பை அந்தணர் தருப்பைப்புல்லிற்கிடத்தி, தமது ஆண்மையே பற்றுக் கோடாக யுத்தத்திலேயிறந்த அரசர்செல்லும் உலகத்திலே இவர்செல்க வென்று அவ்வுடம்பை வாளாற் பிளந்து அடக்குதல மரபாதலின்,இவ்வனங் கூறினர் ; இப்படியே, " ஓடான் மீஇய பீடின் மன்னர்,.....திறம்புரி பசும்புற் பரப்பினர் கிடப்பி, மறங் கரதாக நல்லமர் வீழ்ந்த, நீள்கழன் மற வர் செல்வுழிச் செல்கென, வாள்போழ்ந் தடக்கலு முய்த்தனர் " (புறநா. கஙு); "மூப்பினும் பிணியினும் இறவாது அமர்ககளத்து வீழ்ந்தோரே துறக்கம்பெறுவர்" (தொல். அகத். சூ. சச; அகநா. சுக) என வகுரைத் தல் காண்க.

கசு. நாப்புடை பெயராது - இதனைக் கூறுதற்கு எனது நாவானது புடை பெயரமாட்டாது. நாணுத்தகவுடைத்து- நாணுந்தகுதியையுடைத்து; " மலைத்தனை யென்பது நாணுத்தக வுடைத்தே " புறநா. கூசு.

கஉ - சு. தமதாக்கியும் மூத்துவிளிதல் ! இக்குடிப்பிறந்தோர்க்கு நாணுத்தகவுடைத்து.

கள - அ. நின்மகன் மடிந்தது தன் மண் காத்தமையாலன்று ; பிறர் மண் கொண்டமையாலுமன்று ; காமத்தால் ; அவ்விறப்பு யாதென்று கூறப்படும்.

கஙு. மன்பதை - உயிர்ப்பன்மை.

(பி - மீ.) கஉ. 'செற்றதெவ்வர்தேயந்தமது' கசு. ' நாணுத்தக வுடைத்தென'

உ0 முன்பங் கொள்ளே லென்றவள் போயபின்
கையாற் முள்ளங் கரந்தகத் தடக்கிப்
பொய்யாற் முழுக்கங் கொண்டுபுற மறைத்து
வஞ்சஞ் செய்குவன் மணிமே கலையையென்
றஞ்சி லோதி யரசனுக் கொருகாட்
உரு பிறர்பின் செல்லாப் பிக்குணிக் கோலத்
தறிவு திரிந்தோ னரசிய முனிலன்
கரும்புடைத் தடக்கைக் காமன் கையற
வரும்பெற லிளமை பெரும்பிறி தாக்கு
மறிவு தலைப்பட்ட வாயிழை தனக்குச்
கூ0 சிறைதக் கன்று செங்கோல் வேந்தனச்

உ0. கொள்ளேல் - கொள்ளாதே. அவள் - வாசந்தவை.

இராசமாதேவி, அரசனேயடைந்து மணிமேகலையைச் சிறைமீட்டு உடன்கொண்டு சென்று தன் காவலில்வைத்து வஞ்சித்தல் இனிக்கூறப் படும்.

உக. கையாற்முள்ளங்கரந்து - செயலறவினையுடைய உள்ளத்தை மறைத்து ; என்றது புத்திரசோகத்தை வெளிப்படுத்தாமலென்றபடி.

உஉ. பொய்யாற்முழுக்கங் கொண்டு - பொய்வழிக்கண் ஒழுகுதலைக் கொண்டு. புறமறைத்து - புறத்தே தோன்றுமல் மறைத்து ; என்றது மணிமேகலையை வஞ்சித்தற்கெண்ணிய தனது நீயவெண்ணத்தை ஒரு வாற்றானும் வெளிப்படுத்தாமலென்றபடி.

உங. மணிமேகலையை வஞ்சஞ்செய்குவேனென்று கருதி.

உச. அஞ்சிலோதி - அழகிய சிலவான கூந்தலையுடைய இராசமா தேவி.

உரு. கோலத்து - வேடத்தைக்கண்டு.

உசு. அறிவுதிரிந்தோன் - அறிவு வேறுபட்ட உதயகுமரன்.

உஎ. கையற - செயலற.

உஅ. இளமை - இளமையை. பெரும்பிறிதாக்குதல் - பயன்படாது கெடச்செய்தல்.

உஎ - அ. கையறப் பெரும்பிறிதாக்குமென்க.

உகூ. தலைப்பட்ட - நேர்பட்ட; முதன்மைப்பட்டவென்றுமாம்.

கூ0. தக்கன்று - தக்கதன்று; விகாரம். வேந்து, அண்மைவிளி. எனஎன்று இராசமாதேவி சொல்ல.

உச - கூ0. அஞ்சிலோதி ஒருநாள் அரசனுக்குச் சிறைதக்கன்றெனவென்க.

(பி - ம்.) உசு. 'அறவியதிரிந்தோன்'

சிறப்பின் பாலார் மக்க ளல்லார்
மறப்பின் பாலார் மன்னர்க் கென்ப
தறிந்தனை யாயினிவ் வாயிழை தன்னைச்
செறிந்த சிறைநோய் தீர்க்கென் றிறைசொல
வென்னே டிருப்பினு மிருக்கவிவ் விளங்கொடி
தன்னே டெடுப்பினுந் தகைக்குந ரில்லென்
றங்கவ டனைக்கூ வயடன் னோடி
கொங்கவிழ் குழலாள் கோயிலுட் புக்காங்
கறிவு திரித்திவ் வகனக ரெல்லா
மெறிதரு கோலம்யான் செய்குவ லென்றே
மயற்பகை யூட்ட மறுபிறப் புணர்ந்தா
ளயர்ப்பது செய்யா வறிவின ளாகக்

உக - உ. சிறப்பின்பாலார் மக்கள் - கல்விமுதலியவிசேடமுடைய வர்கள் புதல்வர். அல்லார் மறப்பின்பாலார்- அல்லாதவர்கள் மறத்தற்குரிய வர். என்பது - என்று பெரியோர்கூறுதலே; இவ்விடிகளின் கருத்து, "உற் றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்,.....ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளு, மூத்தோன் வருக வென்னு தவரு, ளறிவுவடை யோனு தரசுஞ் செல் லும், வேற்றுமை தெரிந்த காற்பாலுள்ளுங், தீப்பா லொருவன் கற்பின், மேற்பா லொருவனு மவன்கட் படுமே" (புறநா.கஅஉ) என்பதன் பொருளே யும், "அரம்போலும்" (குறள். உஉஎ) என்பதன் பொருளையும் ஒருவாறு தழுவி வந்திருத்தல்காண்க.

உஉ. ஆயிழை - மணிமேகலை.

உச. சிறைநோய் - சிறைத்துன்பம். தீர்க்கென்று - தீர்க்கவென்று. இறை - அரசன்.

உசு. தன் னோ டெடுப்பினும் - தனக்குரிய ஓட்டையேந்திப் பிச்சைக்குப் புகுவாளாயினும். தகைக்குநர் இல் - தடுப்பவர்களில்லை; "அணித்தகை யுடம்பு" (சீவக. கஎஉ.) என்று - என்றுகூறி.

உஎ. அவடனைக்கூஉய் - மணிமேகலையை யழைத்து.

உஅ. குழலாள் - இராசமாதேவி.

உஎ - அ. குழலாள் அவளோடு கோயிலுட்புக்கு.

உஉ. அறிவுதிரித்து - அறிவைமருட்டால் வேறுபடச்செய்து ; பித்தாக் கியென்றபடி.

சஅ. எறிதருகோலம் - அடிக்குங்கோலத்தை; கல்லெறியுங் கோலத்தை யென்றுமாம். செய்குவலென்று - இவளுக்குச் செய்வேனென்று கருதி.

சக. மயற்பகையூட்ட - பித்தேறுதற்குக் காரணமாகிய மருந்தை யூட்ட; "வஞ்ச மூண்டு மயற்பகை யுற்றோர்" (சிலப். ஙி: கஉ.) உணர்ந் தாள் - மணிமேகலை.

சஉ. அயர்ப்பது - மறப்பது.

சக - உ. "மயற்பகை யூட்டினே மறுபிறப் புணர்ந்தே, னயர்ப்பது

கல்லா வினோஞ ஞெருவனேக் கூஉய்
வல்லாங்குச் செய்து மணிமே கலைதன்
சரு னீணவள ரிளமூலை யேந்தெழி லாகத்துப்
புணர்குறி செய்து பொருந்தின னென்னும்
பான்மைக் கட்டுரை பலர்க்குரை யென்றே
காணம் பலவுங் கைந்நிறை கொடுப்ப
வாங்கவன் சென்றவ் வாயிழை யிருந்த
நுo பாங்கி லொருசிறைப் பாடுசென் றணைதலுங்
தேவி வஞ்ச மிதுவெனத் தெளிந்து
நாவியன் மந்திர நடுங்கா தோதி
யாணமை கோலத் தாயிழை யிருப்பக்
காணம் பெற்றோன் கடிந்துய செய்தி
நுரு யரச ருரிமையி லாடவ ரணுகார்

செய்யா வறிவினே ஞரினேன்'' (கூஉ - ங) என்பது பின்பு வருதல்காண்க. உணர்த்தான் அறிவினனாக.

சச. வல்லாங்குச்செய்து - வல்லபடி செய்து ; ''வடியா நாவின் வல்லாங்குப் பாடி'' புறநா. சஎ.

சஅ. காணம் - பழங்காசு (சீவக. ககஎ-உரை.) கைந்நிறைகொடுப்ப - கைந்நிறையக்கொடுப்ப; நிறை,விகாரம்; 'நிலகெளி பரந்த வன்றே' (சீவக. சகூங) என்பதில் 'கெளி' என்பதுபோல.

சகூ - அ. ஒருவனேக்கூஉய், 'வல்லாங்குச் செய்து புணர்குறிசெய்து பொருந்தினனென்னும் கட்டுரையைப் பலர்க்கும் உரை' என்றுகூறிக் காணம்பலவும் கொடுப்பவெனக.

சகூ. ஆயிழை - மணிமேகலை.

நுo. பாங்கில் ஒருசிறைப் பாடு - அழகில்லாத ஒரு பக்கத்திலிடத்தே; பக்கத்துள்ள ஒரு காவிடத்தென்றுமாம்.

சகூ - நுo. அவன்சென்று பாடுசென்றணைதலுமென்க.

நுக. தேவி - இராசமாதேவி. இது - இப்பொருளன் வந்தது.

நுஉ. நாவியன் மந்திரம் - நாப்புடை பெயரும காலிலே உச்சரிக்கப்படும் மந்திரம்; என்றது வேற்றுருவெய்துவிக்கும் மந்திரத்தை; ''ஆறெழுத் தடக்கிய வருமறைக் கேள்வி, நாவிய னடங்கிய காலிலப் பாடி'' புறநா. கஅசு- எ.

நுக - ஙூ. ஆயிழை இது தேவிவஞ்சமெனத்தெளிந்து மந்திரத்தை ஓதிக்கோலத்துடனிருப்பவெனக.

நுநு. அரசருரிமையில் ஆடவரணுகார் - அரசருடைய தேவிமாரிருக்கும் அந்தப்புரத்தில் ஆண்மக்கள் குறுகார்; ''ஆடவர் சூழுகா வருங்கடி வரைப்பின்'' (நெடுநல். கoஎ); அந்தப்புரத்தை, 'குழைமுகப்புரிசை' (சீவக. உஎடு) என்பர் திருத்தக்கதேவர்.

(பி - ம்.) நுஙூ. 'ஆண்மைக்'

நிரயக் கொடுமக ணிணைப்பறி யேனென்
றகநகர் கைவிட் டாங்கவன் போயபின்
மகணேநோய் செய்தாளை வைப்ப தென்னென்
றுய்யா நோயி னூணெழிற் கனலெனப்
சுரு பொய்க்கோய் காட்டிப் புழுக்கறை யடைப்ப
வூணெழி மக்திர முடைமையி னந்த
வாணுதன் மேனி வருந்தா திருப்ப
வையென விம்மி யாயிழை நடுங்கிச்
செய்தவத் தாட்டியைச் சிறுமை செய்தே
சுருஎ னென்மகற் குற்ற விடுக்கண் பொருது
பொன்னே ரணியாய் பொறுக்கென் றனடொழு

நுசு. நரகத்தையடைதற்குரிய கொடுமையையுடைய இவளது தீய வெண்ணத்தை நானறிந்திலேனெனக் கருதி ; இராசமாதேவி வியபிசரிக்குங் கருத்துடையாளென்று புவிவிளோ ர் கருதினும்போலும்.

நுஎ. அகநகர் - அந்தப்புரம்.

நுசு - எ. காணம்பெற்றேன், துயரெய்தி அறியேனென்று கைவிட்டுப் போயபினென்க.

சுசு - நுஎ. மணி. உரு : சுசு - நு.

நுஅ. உதயகுமரனுக்குக் காமநோயை உண்டாக்கிக் கொல்லுவித்த இவளேயிருடன் லவத்தல நமதன்பிற்கு யாதுபயனென்று இராசமாதேவி கருதி; வைத்தல் - வஞ்சித்தலுமாம்.

நுசு. உய்யாநோயின் - உயிரைத்தாங்கியிராமைக்குக் காரணமாகிய நோயினால் ; மருந்தாற் போக்கவொண்ணாத நோயினலென்றுமாம்.

சுo. புழுக்கறை - புழுங்கச்செய்யும்அறை ; " புழுக்கறைப் பட்டோர் போன்று " (சு : சுநு) என்றார் மூன்றும்.

நுஅ - சுo. (இராசமாதேவி) வைப்பதென்னென்று காட்டி அடைப்ப வென்க.

சுஉ. வாணுதல் - மணிமேகலை. நுஅ - சுஉ. மணி. உரு : சுசு - எ.

சுசு. ஐயெனவிம்மி - வியாபப்பொருமி; " ஐயென வேஎப்ப " (சீவக. சசஅ); " மோதிரக்தொட் டையென்ற...தோக்கினர் " (சிந. கoசo.) ஆயிழை - இராசமாதேவி.

சுசா. செய்தவத்தாட்டியை - மணிமேகலைக்கு; ஐ, உருபுமயக்கம். சிறுமை - குற்றம்; என்றது மயற்பகைபுட்டியது முதலிய மூன்றனையும்.

சுசா - நு. பொறுது செய்தேனென்க.

சுசு. பொன்னேரணியாய் - திருமகளின்மறுதலிலேபோல்வாய்; திருமகளுக்குநேராகிய அத்தின்மையையுடையாயெனினுமமையும் (மணி. உ: கசு); " கோளரிக்குங் கிகரன்னார் " (திருச்சிற். உஉநு.) அவன் - இராசமாதேவி.

மேல்வருவன மணிமேகலைகூற்று.

(பி - ம்.) நுசு. 'நிணைப்பதறியேனென்று '

நீல பதிதன் வயிற்றிற் ரோன்றிய
வேலங் கமழ்தா ரிராகுலன் றன்னை
யழற்க ணாக மாருயி ருண்ண
எ0 வீழித்த லாற்றே னென்னுயிர் சுடுநாள்
யாங்கிருந் தழுதனே யிளங்கோன் றனக்குப்
பூங்கொடி நல்லாய் பொருந்தா தசெய்தனே
வுடற்கழு தனேயோ வுயிர்க்கழு தனேயோ
வுடற்கழு தனேயே லுன்மகன் றன்னை
எரு யெடுத்துப் புறங்காட் டிட்டனர் யாரே
யுயிர்க்கழு தனேயே லுயிர்புகும் புக்கில்
செயப்பாட்டு வினையாற் றெரிந்துணர் வரிய
தவ்வுயிர்க் கன்பினே யாயி னுய்தொடி
யெவ்வுயிர்க் காயினு மிரங்கல் வேண்டு
அ0 மற்றுன் மகனே மாபெருந் தேவி
செற்ற கள்வன் செய்தது கேளாய்
மடைக்கலஞ் சிதைய வீழ்ந்த மடையனே
யுடற்றுணி செய்தாங் குருத்தெழும் வல்வினே

சுஎ - அ. தோன்றிய இராகுலன் றன்னை.

சுஙூ. அழற்கண்ணாகம் - திட்டிவிடமென்னும் பாம்பு; அழல் - விடம்; "ஐத்தலை யரவின் சேற்றத் தாழுல் குளிக்க வுற்றார்" (சீவக.எசசு); "அழல் வாய் நாகத் தாரெயி றழுந்தினர்" சிலப். சூ: கஉசு.

எ0. வீழித்தல் - உயிர் வாழ்தல் ; நாகத்தின் தொழிலாக்கினுமமையும்.

எக. இளங்கோன் றனக்குயாங்கிருந்தழுதனே ; அழுதிலையென்றபடி.

எரு. புறங்காடு - மயானம்.

எசு. புக்கில் - புகுமிடமாகிய உடம்பு ; "நோக்கார்கொ னெய்ய தோர் புக்கிலே" நாலடி. சக.

எஎ. வினையென்றது, நல்வினை தீவினையென்னுமிரண்டையும்.

எசு - எ. வினையால் உயிர் புகும்புக்கில் தெரிந்துணர்வரியதென்க.

எஅ. அன்பினையுடையாயாயின் ; ஆய்தொடி, விளி.

எக. எவ்வுயிர்க்காயினும் - எல்லாவுயிர்க்கும்.

அ0. மாபெருந்தேவி - இராசமாதேவி; விளி.

அக. கோபித்த காஞ்சனன் கொலைசெய்ததற்குக் காரணமான தீவினையைக்கேள்.

அங. உடம்பைத்துண்டமாகவெட்டினமையால் தோன்றியெழுந்த வலிய தீவினை.

(பி - ம்.) எ0. 'இழிதலாற்றேன்' எரு. 'ஈமப்புறங்காடு' எஎ. 'செயற் பாட்டுவினை' அங. 'உருத்தெழுமவ்வினை', 'உருத்தெழுபாவம்'

நஞ்சுவிழி யரவி னல்லுயிர் வாங்கி
அரு விஞ்சையன் வாளால் வீட்டிய தன்றே
யாங்கறிந் தனையோ வீங்கிது நீயெனிற்
பூங்கொடி நல்லாய் புகுந்த திதுவென
மொய்ம்மலர்ப் பூம்பொழில் புக்கது முதலாத்
தெய்வக் கட்டுரை தெளிந்ததை யீரூ
கூo வுற்றதை யெல்லா மொழிவின் றுரைத்து
மற்று மூரைசெயு மணிமே கலைதான்
மயற்பகை யூட்டினே மறுபிறப் புணர்ந்தே
னயர்ப்பது செய்யா வறிவினே ஞயினேன்
கல்லாக் கயவன் காரிருட் டான்வர
கூரு நல்லா யாணுரு நான்கொண் டிருந்தே
னூணெழி மந்திர முடைமையி னன்றே
மாணிழை செய்த வஞ்சம் பிழைத்த
தந்தரஞ் சேறலு மயலுருக் கோடலுஞ்

அச. அரவின் - அரவினுல். நல்லுயிர் வாங்கியென்றது, முற்பிறப்பின் செய்தியை.

அரு. வீட்டியது - கொன்றது; வீழ்த்தியதென்பதன் மரூஉவுமாம்.

அங - ரு. வினே, முற்பிறப்பில் உயிரை அரவின்வாங்கி இப்பிறப்பில் விஞ்சையன்வாளால் வீட்டியது.

அசு. இது - இச்செய்தியை. அள. புகுந்தது - சம்பவித்தது.

அஅ. பொழில் - உவவனம்.

அக. தெய்வக்கட்டுரை - கந்திற்பாவைத்தெய்வங் கூறிய பொருள் பொதிந்த சொல்.

கூo. ஒழிவின்று - விடாமல். அள - கூo. இதுவெனவுரைத்தென்க.

கூக. மணிமேகலை பின்னும் சொல்லுவாள்.

கூங. அயர்ப்பது - மறப்பது.

கூச. கயவன் - கீழ்மகன்; கொடியவனுமாம். இருள் - இருளில்.

கூரு. நான் ஆணுருக்கொண்டிருந்தேன்.

கூச - ரு. மணி. உங : சுங - ருள.

கூள. வஞ்சம் - ஊணெழிந்தனென்று பொய்ந்நோய்காட்டிப் புழுக்கறையடைத்தது. பிழைத்தது - தப்பியது.

கூசு - எ. மந்திரமுடைமையினன்றே வஞ்சம் பிழைத்தது.

கூஅ. அயலுருக்கோடல் - வேற்றுருவங் கொள்ளல்.

(பி - ம்.) கூசு. 'உடைமையினன்றே'

சிந்தையிற் கொண்டிலேன் சென்ற பிறவியிற்
க00 காதலற் பயந்தோய் கடுந்துயர் களைந்து
தீதுறு வெவ்வினை தீர்ப்பது பொருட்டாற்
றையா லுன்றன் றடுமாற் றவலத்
தெய்யா மையறீர்ந் தின்னுரை கேளா
யாள்பவர் கலக்குற மயங்கிய நன்னுட்டுக்
க0ரு காருக மடந்தை கணவனுங் கைவிட
வீன்ற குழவியொடு தான்வே ருகி
மான்றேர் திசைபோய் வரையாள் வாழ்வுழிப்
புதல்வன் றன்னையோர் புரிநூன் மார்பன்
பதியோ ரறியாப் பான்மையின் வளர்க்க

கூஅ - க0க. போனபிறப்பில் எவர்க்குக் கணவனாயிருந்தானோ இப் பிறப்பிற் பெற்ற உனது துயரைக்களைந்து வினையைத் தீர்த்தற்பொருட்டே சேறலும் கோடலும் சிந்தையிற் கொண்டிலேனென்க.

க0உ. தையால், விளி.

க0ஊ - கூ. தடுமாற்றவலத்தெய்யாமையல் - தடுமாறுதற்குக் காரண மாகிய வருத்தத்தைச்செய்யும் அறியாமையாகிய மயக்கம்; மையல் - செல்வச்செருக்குமாம்; "மையன்மத யானைநிரை மன்னன்" சீவக. நுஅகூ.

மேல், காமம், கொலை, கள், பொய், களவு ஆகிய இவ்வைந்தும் நீக்கற் பாலனவென்று இராசமாதேவிக்கு மணிமேகலை உபதேசித்தல் முதலி யன கூறப்படும்.

க0ச. அரசர் கொடுங்கோல் செலுத்துதலால், யாவரும் தத்தம் நிலை தடுமாறிய கல்ல காட்டில்; கலி. நு.

க0ரு. காருகமடந்தை - இல்லறவொழுக்கினளாகியவொருத்தி; நெய் வோர் குலத்துப் பிறந்த ஒருத்தியென்றுமாம். கைவிட - துறக்க.

க0சு. குழவியும் தானும் வெவ்வேறிடத்துப் பிரிவுற்று.

க0எ. மான்று - மயங்கி. வரையாள் - தன்னலம் விலைகொடுப்பார் யாவர்க்கும் விற்பதல்லது அதற்கு ஆவார் ஆகாதாரென்னும் வரையறை யில்லாளாய்.

க0ச - எ. நாட்டிற் காருகமடந்தை கணவன் கைவிடுதலால் வேறுதி மான்று போய் வரையாளாய் வாழ்வுழியென்க. இல்லறவொழுக்கினளாகிய இவள் கற்பொழிந்து வரைவின்றி வாழ்தற்கு அரசனது கொடுங்கோன்மை காரணமாதலின், 'ஆள்பவர் கலக்குற' என்பது கூறப்பட்டது; "மாத வர் நோன்பு மடவார் கற்புங், காவலன் காவ லின்றெனி னின்றுரல்" (உஉ : உ0அ - கூ) என்று இக்கருத்து முன்பு வந்திருத்தல் காண்க.

க0அ - கூ. புரிநூன்மார்பன் புதல்வன்றன்னை வளர்க்க.

ககo வாங்கப் புதல்வ னவடிற மறியான்
ரூன்புணர்ந் தறிந்துபின் றன்னுயிர் நீத்தது
நீர்நசை வேட்கையி னெடுங்கட முழலுஞ்
சூன்முதிர் மடமான் வயிறுகிழித் தோடக்
கான வேட்டுவன் கடுங்கணை துரப்ப
ககடு மான்மறி விழுந்தது கண்டுமன மயங்கிப்
பயிர்க்குரல் கேட்டதன் பான்மைய னுகி
யுயிர்ப்பொடு செங்க ணுருத்த நீர்கண்
டோட்டி யெய்தோ னுருயிர் துறந்ததுங்
கேட்டு மறிதியோ வாட்டடங் கண்ணி
கஉo கடாஅ யானைமுன் கட்கா முற்றூர்
விடாஅது சென்றதன் வெண்கோட்டு வீழ்வ
துண்ட கள்ளி னுறுசெருக் காவது
கண்டு மறிதியோ காரிகை நல்லாய்

ககo. ஆங்கப்புதல்வன் - அங்ஙனம் வளர்க்கப்பட்ட புதல்வன்; அவள் திறம் - அவள் தன்னுடைய தாயென்னுந் தன்மையை.

ககக. பின்னறிந்தென்க.

ககஉ. நீர்நசை வேட்கையின் - நீரை நச்சிய விருப்பத்தால்; நசை வேட்கை, வினைத்தொகை; "நீர்நசை வேட்கையி னிரவலர் வருவதை" (புறநா. கூ.) கடம் - காடு.

ககஙூ. முதல் - கருப்பம். ககச. துரப்ப - செலுத்த.

ககடு. மான்மறி - பெண்மான்; மான்குட்டியுமாம்.

ககசு. பயிர்க்குரல் - பயிராகியகுரல்; பயிர் - பிருகங்களுள் ஒன்றை மற்றொன்று அழைக்கும் ஓசைக்குறிப்பு; "மடமா னுகு பிணைபயி ரழைப்பின்" (புறநா. கடுஎ.) அதன் பான்மையனுகி - அதன் பக்கத்தோனுய்.

ககஅ. ஓட்டியெய்தோன் - வேட்டுவன்; சுட்டு.

ககக - ங. நீத்ததும் துறந்ததும் கேட்டுமறிதியோ; இதனுல் காமத்தையும் கொலையையும் நீத்தல் வேண்டுமென்பது கூறப்பட்டது.

கஉo. கடாஅயானை - மதயானை; "கடாஅக் களிற்றின்மேல்" (குறள். கoஅஎ.) கட்காமுற்றூர் - கள்ளை விரும்பியுண்டுகளித்தோர்.

கஉக. கோடு - கொம்பு.

கஉo - உகூ. கட்காமுற்றூர் இங்ஙனமாதலை, "புதுக்கோள் யானை முன் போற்றூது சென்று, மதுக்களி மயக்கத்து வீரை மாய்த்தனு உம்" (மணி. கஉ: சுடு - சுஙூ) என்றதனுலுமுணர்க.

(பி - ம்.) ககஅ. 'ஓட்டியெய்தோன்'

பொய்யாற் றெழுக்கம் பொருளெனக் கொண்டோர்
கஉடு கையாற் றவலங் கடந்தது மூண்டோ
களவோர் வாழ்க்கைய ருறுஉங் கடுந்துய
ரிளவேய்த் தோளாய்க் கிதுவென வேண்டா
மன்பே ருலகத்து வாழ்வோர்க் கிங்கிவை
துன்பந் தருவன துறக்கல் வேண்டுங்
கஙo கற்ற கல்வி யன்றுற் காரிகை
செற்றஞ் செறுத்தோர் முற்ற வுணர்ந்தோர்
மல்லன்மா ஞாலத்து வாழ்வோ ரென்போ
ரல்லன் மாக்கட் கில்லது நிரப்புநர்
திருந்தே ரெல்வளை செல்லுல கறிந்தோர்
கஙடு வருந்தி வந்தோ ரரும்பசி கூர்ந்தோர்
துன்ப மறுக்குந் துணிபொரு ளுணர்ந்தோர்
மன்பதைக் கெல்லா மன்பொழி யாரென
ஞான நன்னீர் நன்கனந் தெளித்துத்
தேனு ரோதி செவிமுதல் வார்த்து

கஉச. பொய்யாற்றெழுக்கம் - பொய்வழிக்கணெழுகுதல். பொருளெனக் கொண்டோர் - காரியமாகக்கொண்டோர்.

கஉடு. கையாற்றவலம் - செயலதவாகிய துன்பம்.

கஉசு. களவோர்வாழ்க்கையர் - களவே உழவுபோலும் இல்வாழ்க்கைப் பொருளாகவுடையோர் ; "கைப்பொருள் வெளவுங் களவோர் வாழ்க்கைக், கொடியோர்" (பெரும்பாண். சo - சக.) கடுந்துயர் - மிக்கதுன்பம்.

கஉஅ. இவை - காமமுதலிய இவ்வைக்துந்.

கஙo. கல்வி காரிகை அன்று - கல்வி அழகுடைத்தன்று ; என்றது பின்பு கூறப்படும் நற்குணங்களில்லாதவழிக் கல்வி அழகுடையதன்றென்றவாறு. இவ்வடியை முன்னுள்ள அடியோடு கூட்டிழத் துன்பம் தருவனற்றைத் துறவாவழிக் கல்வி அழகுடைத்தன்றென்று பொருள்கூறினும் பொருந்தும்.

கஙக. அல்லன்மாக்கட்கு - வறுமைத்துன்பமுடையார்க்கு.

கஙஉ - ங. நிரப்புநரே வாழ்வோரென்போர்.

கஙச. எல்வளை, விளி.

கஙச - ஙி. அரும்பசி கூர்ந்தோரே செல்லுலகறிந்தோர்.

கஙசு. துணிபொருள் - பரமார்த்த தத்துவஞானம்.

கஙசு - எ. அன்பொழியாரே துணிபொருளுணர்ந்தோர்.

கஙஅ. ஞானநன்னீர் - ஞானமாகிய நல்லநீரை. நன்கனம் - நன்றாக.

கஙக. தேனுரோதி - இராசமாதேவி. செவிமுதல் - செவியிடம்.

(பி - ம்.) கஙக. 'நிரப்பினர்'

கசo மகன்றுயர் கெருப்பா மனம்விற காக
வகஞ்சுடு வெந்தீ யாயிழை யவிப்பத்
தேறுபடு சின்னீர் போலத் தெளிந்து
மாறுகொண் டோரா மனத்தின ளாகி
யாங்கவ டொழுதலு மாயிழை பொருஅ
கசடு டான்றொழு தேத்தித் தகுதி செய்திலே
காதலற் பயந்தோ யன்றியுங் காவலன்
மாபெருந் தேவியென் றெதிர்வணங் கினளென்.

உரை.---சிறைவிடுகாதை முற்றிற்று.

கசo. மகன்றுயர் - புதல்வனிறந்த துயரம்; (புத்திரசோகம்.)

கசக. அகம் - உள்ளிடம். ஆயிழை - மணிமேகலை.

கஙஅ-சக. ஞானநீரைத்தெளித்துவார்த்து வெந்தீயை அவிப்பவென்க.

கசஉ. தேறு - தேற்றுங்கொட்டை.

கசஙு. மாறுகொண்டு - பகைமைகொண்டு.

கசஞ. ஆங்கவள் - இராசமாதேவி. ஆயிழை - மணிமேகலை.

கசட. காதலற்பயந்தோயன்றியும் - என்னு பூர்வஜன்ம நாயகனே இப் பிறப்பிற் பெற்றதல்லாமலும்.

கசண - எ. காவலன் மாபெருந்தேவியென்று - அரசனது பட்டமகிஷி யாகவுமுள்ளாயென்று.

க - கசள. வாசந்தவையெனுமூராட்டி, மொழியினள், அவள் மன்னவ னருளாற் சென்றெய்தித் தொழுது முன்னின்று வாழ்த்தி, 'மன்னவன்தன் முன் துன்பங்கொள்ளேல்' என்று போயபின், அஞ்சிலோதி கரந்து அடக்கிக் கொண்டு மறைத்து 'மணிமேகலையை வஞ்சஞ்செய்குவல்' என்று ஒருநாள் அரசனுக்கு, 'சிலதத்தக்கன்று' எனா, 'நீக்க' என்று இதைசொல, குழலாள் அவனைக்கூவப்புக்கு 'செய்குவல்' என்று ஊட்ட, அறிவினளாக, கொடுப்ப, அணைதலும், இருப்ப, போயபின், அடைப்ப, இருப்ப, அவள் தொழ, மணிமேகலை ஒழிவின்றுரைத்து மற்றுமுரை செய்யும்; அங்ஙன முரைசெய்பவள் அவிப்ப, அவள் தொழுதலும், ஆயிழை பொருளாய் 'மாபெருந்தேவி' என்று எதிர்வணங்கினளென வினைமுடிவுசெய்க.

இருபத்துநான்காவது

ஆபுத்திரனுடைந்தகாதை.

[இருபத்துநான்காவது மணிமேகலை மாநகரோழிந்து ஆபுத்திரனுடைந்தபாட்டு.]

மன்ன குமரனே வஞ்சப் புணர்த்த
தொன்முது கணிகைதன் சூழ்ச்சியிற் போயவன்
விஞ்சையன் வாளின் விளிந்தோ னென்பது
நெஞ்சு நடுக்குறக் கேட்டுமெய் வருந்தி
(நு) மாதவி மகடனே வான்சிறை நீக்கக்
காவலன் றேவி காற்கீழ் வீழ்ந்தாங்
கரவே ரல்கு லருந்தவ மடவா
ருரவோற் களித்த வொருபத் தொருவரு
மாயிரங் கண்ணே னவிநயம் வழுஉக்கொள
(கo) மாயிரு ஞாலத்துத் தோன்றிய வைவரு
மாங்கவன் புதல்வனே டருந்தவன் மூனிந்த
வோங்கிய சிறப்பி னொருநூற்று நால்வரும்
திருக்கிளர் மணிமுடித் தேவர்கோன் றன்முன்
னிருப்பசி முனிந்த வென்குலத் தொருத்தியு
(கடு) மொன்று கடைநின்ற வாறிரு பதின்மரித்

க. மன்னகுமரனே - உதயகுமரனே. புணர்த்த - சேர்த்திய.

உ. முதுகணிகை - சித்திராபதி; எழுவாய் ; தொன்முது, ஒருபொருட் பன்மொழி. போயவன் - உதயகுமரன்.

ங. விளிந்தோன் - இறந்தான்.

(நு). மாதவிமகடனே - மணிமேகலையை. நீக்க - நீக்குதற்பொருட்டு.

சு. காவலன்றேவி - இராசமாதேவி. (நு) - சு. நீக்க வீழ்ந்து.

உ - சு. கணிகை, விளிந்தோனென்பதைக் கேட்டு வருந்தி வீழ்ந்து.

எ. 'அரவோர்' என்பது முதலியன சித்திராபதிகூற்று.

கக. புதல்வன் - சயந்தன். கடு. நூற்றிருபத்தொருவர்.

(பி - ம்.) (நு) - சு. 'சிறைதவிர்த்த, காதலன்றேவி' கடு. 'ஒன்றுகடை யிட்ட'

தொன்றுபடு மாநகர்த் தோன்றிய நாண்முதல்
யாஅறு துன்ப மியாவரும் பட்டிலர்
மாபெருந் தேவி மாதர் யாரினும்
பூவிலை யித்தவன் பொன்றின னென்று
மாதவி மாதவர் பள்ளியு ளடைந்ததும்
பரந்துபடி மனைதொறும் பாத்திர மேந்தி
யரங்கக் கூத்திசென் றறையங் கொண்டது
நகுத லல்லது நாடகக் கணிகையர்
தகுதி யென்னுந் தன்மை யன்மையின்
மன்னவன் மகனே யன்றியு மாதரா
லிந்நக ருறூஉ மிடுக்கணு முண்டா
லும்பளந் தழீஇய வுயர்மண னெடுங்கோட்டுப்
பொங்குதிரை யுலாவும் புன்னையங் கானற்
கிளர்மணி நெடுமுடிக் கிள்ளி முன்னு
விளவேனி லிறுப்ப விறும்பூது சான்ற

கசு. தொன்று - பழமை.

கஅ. மாபெருந்தேவி, விளி. மாதர் - நாடகக்கணிகைகள்.

கஎ - அ. மாதரெல்லாருள்ளும் யாவுறுதுன்பம் யாவரும்பட்டிலரென இயைக்க.

கக. பூவிலை - அற்றைப்பரிசம்; "பூவிலை மடந்தைய ரேவற் சிலதியர்" (சிலப்: நடு: நிகை.) ஈத்தவன் - கோவலன்.

உ0. மாதவர்பள்ளி - சங்கத்தாரான அறவணவடிகளுறையுமிடம்.

உஉ. அரங்கக்கூத்தி - மணிமேகலை.

உக - உ. அரங்கக்கூத்தி, பாத்திரமேந்திச் சென்று மனைதொறும் ஐயங்கொண்டதும்.

உ0 - உச. அடைந்ததும் கொண்டதும் நகுதற்குக் காரணமாவன வேயன்றி நாடகக்கணிகையர்களுடைய இயல்பன்மையால் அவற்றை அவர்க்குத் தகுதியென்று கூறார்; இனி 'நாடகக்கணிகையர்' என்பதை எழுவாயாகக் கொண்டு அவர் தகுதியென்னுமெனினுமமையும்.

உடு. மன்னவன் மகனேயன்றியும் - உதயகுமரனுக்கு உண்டான இடுக்கணல்லாமலும். மாதரால் - மணிமேகலையால்.

உசு. இடுக்கண் - துன்பம்.

உஎ. உம்பளம் - உப்பளம்; விகாரம். கோடு - கரை.

உஅ. கானல் - கடற்கரைச்சோலை.

உக. நெடுமுடிக்கிள்ளி: ஓர் அரசன். முன்னு - முன்னுக.

ஈ0. இறுப்ப- தங்குதலால். இறும்பூது - அதிசயம். இறுப்பச்சான்ற.

(பி - ம்.) கஅ. 'மாதர்யாவரும்', 'மாதர்யாவளாயினும்'

பூகாறு சோலை யாருமி லொருசிறைத்
தானே தமிய லொருத்தி தோன்ற
வின்ன ளார்கொ லீங்கிவ ளென்று
மன்னவ னறியான் மயக்க மெய்தாக்
கூடு கண்ட கண்ணினுங் கேட்ட செவியினு
மூண்ட வாயினு மூயிர்த்த மூக்கினு
மூற்றுண ருடம்பினும் வெற்றிச்சிலைக் காமன்
மயிலையுஞ் செயலையு மாவுங் குவளையும்
பயிலிதழ்க் கமலமும் பருவத் தலர்ந்த
சுo மலர்வா யம்பின் வாசங் கமழப்
பலர்புறங் கண்டோன் பணிந்துதொழில் கேட்ப
வொருமதி யெல்லை கழிப்பினு முரையாள்
பொருவரு பூங்கொடி போயின வந்நாள்
யாங்கொளித் தனளவ் விளங்கொடி யென்றே

உக. சோலை - சோலையில். ஒருசிறை - ஒருபக்கத்தில்.

உஉ. தானேதமியள் - தான்தனித்தவளாய்.

உசு - உஉ. முன்னுத் தோன்றவென்க.

உங. ஈங்குளளாகிய இத்தன்மையையுடையாள் யாவளோவென்று.

உச. அறியான் - அறியானுய். மன்னவன் மயக்கமெய்தி ; 'மயக்க மெய்தா' என்பது இடக்கர்.

உசு. வாயென்றது, நாவினை. உயிர்த்த - மோந்த.

உள. உற்றுணருடம்பு - தீண்டியுணருமுடம்பு.

உஎ. மயிலை - மல்லிகைவிசேடம். செயலை - அசோகு.

உஙு. பயிலிதழ் - செறிந்த இதழ். சுo. கமழ - கமழ்தலால்.

உஅ - சுo. மயிலை.முதலியனவாகிய அம்பெண்க.

கூடு - சுo. கண்ணினும் செவியினும் வாயினும் மூக்கினும் உடம்பினும் காமனுடைய மலரம்பின் வாசங்கமழ்தலால். ரண்டிக்கூறிய 'கண்டகண்' முதலியன அரசனுடைய பொறிகள்; என்றது, வேறுவேறுகாலங்களில் வேறு வேறுபொருள்களானனுபவிக்கப்படுவன ஒருகாலத்து அவள்கண்ணேயனு பவிக்கப்பட்டனவென்பதாம்.

சக. பலர் புறங்கண்டோன் - அரசன்.

சஉ. மதி - மாதம். கழிப்பினும் - கழித்தாளாயினும். உரையாள் - சொல்லாளாய்.

சசு. அந்நாள் - அந்நாளில்.

(பி - ம்.) கூசு. 'இன்னனோயார்கொல்' சஉ. 'கழிப்பவுரையாள்'

சரு வேந்தரை யட்டோன் மெல்லியற் றேர்வுழி
நிலத்திற் குளித்து நெடுவிசும் பேறிச்
சலத்திற் றிரியுமோர் சாரணன் றோன்ற
மன்னவ னவனை வணங்கி முன்னின்
றென்னுயி ரனையா ளீங்கொளித் தாளுள
ருக எனலு மொருத்தியைக் கண்டிரோ வடிகள்
சொல்லுமி னென்னு தொழுவவ னுரைப்பான்
கண்டிலே னுயினுங் காரிகை தன்னைப்
பண்டறி வுடையேன் பார்த்திப கேளாய்
நாக நாடு நடுக்கின் றுள்பவன்
ருரு வாகை வேலோன் வளைவணன் றேவி
வாச மயிலை வயிற்றுட் டோன்றிய
பீலிவளை யென்போள் பிறந்த வங்கா
ரிரவிகுலத் தொருவ னிணைமுலை தோயக்
கருவொடு வருமெனக் கணியெடுத் துரைத்தன

சரு. தேர்வுழி - தேடும்பொழுது.

சசு. நிலத்திற்குளித்து - நீரிற்புகுவதுபோல்நிலத்திற்புகுந்து. நெடு விசும்பேறி - சந்திரசூரியர்களையெட்டிப்பிடித்தற்குச்செல்வதுபோல் நீண்ட ஆகாயத்திற்சென்று.

சஎ. சலத்தில் திரியும் - பூமிமேல் நடப்பது போல் நீர்மேலே நடந்து திரியும்.

சசு - எ. குளித்து ஏறித்திரியும்ஒருசாரணன்தோன்றவென்க. நிலத்திற் குளித்தல் முதலியன அற்புத சத்தியாகிய இருத்தியெனப்படும். தனது தந்தையாகிய சுத்தோதனனுக்கு ஞானமுண்டாக்குதற்பொருட்டு நிலத்திற் குளித்தன் முதலிய பலவற்புதங்களைப் புத்தன் காட்டினனென்று அசுவகோஷபோதிசத்துவரென்பவராற் செய்யப்பட்டுள்ளபுத்தசரித்தத்தின் ககூ ஆம் வர்க்கத்தாற் றெரிகின்றது; "நீரினிற் பூவில் வானி னினைத்துழி யொருங்கு கின்ற, சாரண ரெண்ம ராவார் சமமணி லிருத்தி பெற்றோர்" (உ: ச) என்றார் சூடாமணிநிகண்டுடையாரும்; "வானூடி ழிற்றோன்" (கo: ஙஙு) என்று இந்நூலில் மூன்வந்திருத்தல்காண்க.

சஅ. அவனை - அச்சாரணனை. ருo. அன்னள் - அத்தன்மையாள்.

சஅ - ருக. அவனை வணங்கி நின்று சொல்லுமினென்று மன்னவன் தொழுவென்க.

ருங. அறிவுடையேன் - அறிதலுடையேன். ருரு. வாகை - வெற்றி.

ருரு - சு. தேவியாகிய வாசமயிலை. ருள. அங்காள் - அங்காளில்.

ருக. கரு -கருப்பம். வரும் - வருவாள். கணி -நூல்வல்ல நிமித்திகன்.

ருள - கூ. அங்காளிற் கணியெடுத்துரைத்தனன்.

(பி - ம்.) சஎ. 'திரியுஞ் சாரணன் சென்ற' சஅ - கூ. 'முன்சென்றே, யென்னுயிர்' ருo. 'காணிரோ வடிகள்'

சுஐ ஞங்கப் புதல்வன் வருஉ மல்லது
பூங்கொடி வாராள் புலம்ப லிதுகே
டீவகச் சாந்தி செய்யா நாளுன்
காவன் மாநகர் கடல்வயிறு புகூஉ
மணிமே கலைதன் வாய்மொழி யாலது
சுஎ தணியா திந்திர சாபமுண் டாகலி
ஞங்குப்பதி யழிதலு மீங்குப்பதி கெடுதலும்
வேந்தரை யட்டோய் மெய்யெனக் கொண்டிக்
காசின் மாநகர் கடல்வயிறு புகாமல்
வாசவன் விழாக்கோண் மறவே லென்று
சுஏ மாதவன் போயின வங்காட் டொட்டிமிக்
காவன் மாநகர் கலக்கொழி யாதாற்
றன்பெயர் மடந்தை துயருறு மாயின்
மன்பெருந் தெய்வம் வருதலு முண்டென
வஞ்சினே னரசன் றேவியென் றேத்தி
எடு நன்மனம் பிறந்த நாடகக் கணிகையை
யென்மனைத் தருகென விராசமா தேவி
கள்ளும் பொய்யுங் காமமுங் கொலையு

சுஐ. வருஉமல்லது - வருவானேயன்றி.

சுக. பூங்கொடி - பீலிவளை. புலம்பல் - வருந்தாதே.

சுஉ. தீவகச்சாந்தி - இந்திரவிழவு

சுஙு. நகர் - காவிரிப்பூம்பட்டினம்.

சுசு. மணிமேகலை - மணிமேகலாதெய்வம். அது - நகர்கடல்வயிறு புகுதல்.

சுஉ - சு. செய்யாநாளில்வாய்மொழியால்நகர்கடல்வயிறுபுகூஉமென்க.

சுசு - டு. இந்திரசாபமுமுண்டாதலின், அது தணியாது.

சுசூ. ஆங்கு - அக்காலத்தே. பதியிரண்டில், முன்னது நகரம் பின்னது அரசன்.

சுஅ. காசு - குற்றம். சுகூ. மறவேல் - மறவாதே.

எஐ. மாதவன் - சாரணன். எக. கலக்கு - கலங்குதல்.

எஉ. மடந்தை - மணிமேகலை. எஙு. தெய்வம் - மணிமேகலாதெய்வம்.

எடு. நாடகக்கணிகை - மணிமேகலை.

எசு. தருகென - தருவாயென்று சித்திராபதிகேட்ப.

எஎ. 'கள்ளும் பொய்யும்' என்பது முதலியன இராசமாதேவி கூற்று.

(டி - ம்.) சுசு. 'அழிதலுமூங்குப்பதிபுகுதலும்' எஐ. 'மாதவனுரைத்த வங்காட்' எஉ. 'துயருமாயின்' எடு. 'நஞ்சனேயிறந்தநாடகக்கணிகை'

மூள்ளக் களவுமென் றுரவோர் துறந்தவை
தலைமையாக் கொண்டநின் றலைமையில் வாழ்க்கை
அ0 புலைமையென் றஞ்சிப் போந்த பூங்கொடி
நின்னெதி போக்து நின்மனைப் புகுதா
ளென்னெ டிருக்குமென் றீங்கிவை சொல்வழி
மணிமே கலைதிற மாதவி கேட்டுத்
துணிகயந் துகள்படத் துளங்கிய வதுபோற்
அரு றெளியாச் சிந்தையள் சுதமதிக் குரைத்து
வளியெறி கொம்பின் வருந்திமெய்ந் நடுங்கி
யறவண ரடிவீழ்ந் தாங்கவர் தம்முடன்
மறவேன் மன்னவன் றேவிதன் பால்வரத்
தேவியு மாயமுஞ் சித்திரா பதியு
கூ0 மாதவி மகளு மாதவர்க் காண்டலு
மெழுந்தெதிர் சென்றுங் கிணைவளைக் கையாற்

எஅ. உரவோர் - அறிவுடையோர். துறந்தவை - நீக்கியவை.

எஎ - அ. மணி. உஉ : கஎ0 - எஉ.

எகூ. தலைமையில் வாழ்க்கை - கடையான பரத்தைமைத்தொழில்; "மேலோ ராயினு நூலோ ராயினும், பால்வகை தெரிந்த பகுதியோ ராயினும், பிணியெனக் கொண்டு பிறக்கிட் டொழியுங், கணிகையர் வாழ்க்கை கடையே" (கக : கஅ0 - அஉ) என்றார் சிலப்பதிகாரத்தும்.

எஎ - கூ. மணி. உ : ருள.

அ0. புலைமை - அசுத்தமுடையது. பூங்கொடி - மணிமேகலை.

அஉ. இருக்கும் - இருப்பாள். ஈங்கிவைசொல்வுழி - இவற்றை இராச மாதேவி சொல்லும்பொழுது.

இனி மணிமேகலையின் செய்தி கேட்டமாதவி அறவணவடிகளுடன் இராசமாதேவிபால் வருதல் கூறப்படும்.

அஊ. திறம் - காவலிலிருத்தல். திறத்தைக் கேட்டு.

அச. துணிகயம் - தெளிந்த நீர்நிலை. துளங்குதல் - கலங்குதல்.

அடு. சிந்தையள் - சிந்தையளாய்.

அசு. வளியெறிகொம்பின் - காற்றலலைக்கப்பட்ட பூங்கொம்புபோல.

அஉ - அ. ஈங்கிவை சொல்வுழி மாதவி கேட்டுத் தெளியாச்சிந்தை யளாய் உரைத்து வருந்தி நடுங்கி வீழ்ந்து அவருடன் இராசமாதேவிபால் வரவென்க.

அகூ. ழ. மணி. உச : கசகூ. ஆயம் - சிலதியர்கூட்டம்.

(பி - ம்.) எகூ. 'தலைமையாநின் ற தன்மையில்'

ரெழுந்தகை மாதவன் றுணையடி வணங்க
வறிவுண் டாகவென் றுங்கவன் கூறலு
மிணைவளை நல்லா ளிராசமா தேவி
கூடு யருந்தவர்க் கமைந்த வாசனங் காட்டித்
திருந்தடி விளக்கிச் சிறப்புச் செய்தபின்
யாண்டுபல புக்கதும் மிணையடி வருந்தவென்
காண்டகு நல்வினை நும்மையீங் கழைத்தது
நாத்தொலை வில்லை யாயினுந் தளர்ந்து
கஅ. மூத்தறிவ் யாக்கை வாழ்கபல் லாண்டெனத்
தேவி கேளாய் செய்தவ யாக்கையின்
மேவினே னுயினும் வீழ்கதிர் போன்றேன்
பிறந்தார் மூத்தார் பிணிநோ யுற்ரு
நிறந்தா ரென்கை யியல்பே யிதுகேள்
கஅடு பேதைமை செய்கை யுணர்வே யருவுரு
வாயி லூறே நுகர்வே வேட்கை

கூச - சு. நல்லாளாகிய தேவி ஆசனங் காட்டி விளக்கிச் சிறப்புச் செய்தபினென்க.

கூள. 'யாண்டு பலபுக்க' என்பதுமுதலியன இராசமாதேவிகூற்று.

கூள - அ. எனது நல்வினை இணையடி வருந்த நும்மை ஈங்கழைத்தது.

கூக. நாத்தொலைவில்லையாயினும் - நுமது நா மெலிதலில்லையாயினும், சொல்வன்மை குறைந்திலதென்றபடி.

கஅ. இவ்யாக்கையென்றது, அறவணவடிகளுடம்பை. எனை - என்று இராசமாதேவி சொல்ல.

கூசு - கஅ. "நரைமூதிர் யாக்கை நடுங்கா காவி, னுரைமூ தாளன்" (கஉ : சு - சு) என்று முன்னும் வந்திருத்தல் காண்க.

கஅக. 'தேவிகேளாய்' என்பது முதலியன அறவணவடிகள் கூற்று. தவயாக்கை - தவவுடம்பு.

கஅஉ. வீழ்கதிர் - அத்தமிக்குஞ்ஞாயிறன். மரணத்திற்குச் சூரியன் அத்தமித்தலை உவமை கூறுதல் பௌத்தநூன்மரபு; "சாக்கா டென்ப தருவுருத் தன்மை, யாக்கை வீழ்கதி ரென்மரைத் திறுதல்" (சுஅ : கஅஉ - சு) என இந்நூலிற் பின்பு வருதல் காண்க.

கஅசு - ச. பிறப்புப்பிணிமூப்பிறப்புக்கள் உடலுக்கியற்கையென்றபடி.

கஅடு - அ. பேதைமைமுதலிய பன்னிரண்டும் துவாதசநிதானமெனப்

(பி - ம்.) கூடு. 'காட்டத்' கூள. 'புக்கினுமிணையடி வருந்தக்' கூக. 'நாத்தொலைவில்லாயாயினுங்கிளர்ந்து' கஅ. 'மூத்தயாக்கை', 'மூத்தவிவ் யாக்கை' கஅச. 'இதுகெடப்'

பற்றே பலமே தோற்றம் வினைப்பய
னிற்றென வகுத்த வியல்பி ராமும்
பிறந்தோ ரறியிற் பெரும்பே றறிகுவ
ககo ரறியா ராயி னஞ்ஞா னறிகுவர்
பேதைமை யென்ப தியாதென வினவி
னோதிய விவற்றை யுணராது மயங்கி
யியற்படி பொருளாற் கண்டது மறந்து
மூயற்கோ கிண்டெனக் கேட்டது தெளித
ககரு லுலக மூன்றிலு முயிரா முலக
மலகில பல்லுயி ரறுவகைத் தாகு
மக்களுந் தேவரும் பிரமரு நரகரும்
தொக்க விலங்கும் பேயு மென்றே
நல்வினை தீவினை யென்றிரு வகையாற்
கஉo சொல்லப் பட்ட கருவினுட் டோற்றி
வினைப்பயன் விளையுங் காலை யுயிர்க்கட்கு
மனப்பே ரின்பமுங் கவலையுங் காட்டுந்
தீவினை யென்ப தியாதென வினவி
னுய்தொடி நல்லா யாங்கது கேளாய்
கஉரு கொலையே களவே காமத் தீவிழை
வுலையா வுடம்பிற் றோன்றுவ மூன்றும்

படும்; இவற்றினியல்பை, இத்தூல், கo - ம் காதையால் விளங்கவுணர்க.

ககக. பேதைமை - அவிச்சை.

ககஉ. இவற்றை - துவாதசநிதானங்களை. ககச. கோடி - கொம்பு.

ககக - சு. பேதைமையென்பது மயங்கிக் கண்டதுமறந்து கேட்டது தெளிதலென்க.

ககரு. 'உலகமூன்றிலும்' என்பதுமுதற் செய்கை கூறப்படும்.

ககரு - சு. உயிராமுலகம் அலகில - உயிராகிய உலகம் அளவில்லாதன. செய்கைகூறுதற்கு அங்கமாக ஈண்டு அறுவகையுயிர்களும் கூறப்பட்டன.

கட்கு - அ. பேயுமென்றே அறுவகைத்தாகுமென்க.

கஉo. சொல்லப்பட்ட கரு - மேற்கூறிய மக்கட்கருமுதலிய ஆறும்; "தெய்வக் கருவுந் திசைமுக்க் கருவும்" (பதி. உஅ) என்று முன்புவந்திருத்தல் காண்க.

ககக - உஉ. (செய்கை) இருவகையால் தோற்றிக் காட்டுமென்க.

கஉரு. காமத்தீவிழைவு - காமமாகிய கொடிய விழைவு.

கஉரு - சு. கொலையும் களவும் காமமுமென உடம்பிற்றோன்றுவன மூன்றும்.

(பி - ம்.) கoஅ. 'இவ்வீராறும்' ககo. 'நரகடைகுவர்' கஉo. 'பட்டர் பிறப்பினுட்டோன்றி' கஉரு. 'தீவழக்கு'

பொய்யே குறளை கடிஞ்சொல் பயனில்
சொல்லெனச் சொல்லிற் ரூன்றுவ நான்கும்
வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சியென்
கஙூ0 றுள்ளந் தன்னி னுருப்பன மூன்றுமெனப்
பத்து வகையாற் பயன்றெரி புலவ
ரித்திறம் படரார் படர்குவ ராயின்
விலங்கும் பேயு நரகரு மாகிக்
கலங்கிய வுள்ளக் கவலையிற் ரூன்றுவர்
கஙூரு ஈல்வினை யென்ப தியாதென வினவிற்
சொல்லிய பத்தின் ரூருதியி னீங்கிச்
சீலந் தாங்கித் தானந் தலைநின்று
மேலென வகுத்த வொருமூன்று நிறத்துத்
தேவரு மக்களும் பிரமரு மாகி
கசo மேவிய மகிழ்ச்சி வினைப்பய னுண்குவ
ரரைசன் றேவியொ டாயிழை ஈல்லீர்

கஉஎ. குறளை - கோள்.

கஉஎ - அ. பயனில் சொல் - அறம்பொருளின்பங்களுள் ஒன்றும் பயவாத சொல்.

கஉகூ. வெஃகல் - விரும்பல். வெகுளல் - கோபித்தல்; வெஃகல் முதலிய மூன்றும் முறையே காமம் வெகுளி மயக்கமெனப்படும்.

கஙo. உருப்பன - தோன்றுவன.

கஉங - ஙக. நீவினையென்பது, மூன்றும் நான்கும் மூன்றுமெனப் பத்துவகைப்படும்.

கஙஉ. இத்திறம் - கொலைமுதலிய நீயவழிகளில். படரார் - செல்லார்.

கஙஉ - ச. நீல. மோக்கல. கசுo. சமய. மேற். இக்கருத்து "விலங்கு நரகரும் பேய்களு மாக்குந், கலங்குஞ்ர் நீவினை கடிமின்" (உருஃ சக - உ) எனப்பின்னும் வருதல் காண்க.

கஙசு. சொல்லியபத்து - கொலை, களவு, காமம், பொய், குறளை, கடிஞ் சொல், பயனில்சொல், வெஃகல், வெகுளல், பொல்லாக்காட்சியென்பன.

கஙஎ. சீலம் - பஞ்சசீலமுதலியன. கஙக. மணி. உச: ககஎ.

கஙஎ - கூ. நீல. மோக்கல. கசுo. சமய. மேற்.

கஉங - ஙகூ. நீல. புத்த. உஅ, சுருஃ சமய. மேற்.

கசo. மகிழ்ச்சிவினை - ஈல்வினை. கoருஃ - சo. மணி. ஙo: சுருஃ - அக.

கசக. ஆயிழைஈல்லீரென்றது, மாதவியையும் சுதமதியையும் ஆயத் தையும்.

(பீ - ம்.) கஉஎ. 'பயமில' கஉகூ. 'வெகுடல' கஙo - ஙக. 'மூன் றும், பத்துவகையெனப்' கஙசு. 'நீக்கி' கசக. 'அரசன்'

புரைதீர் கல்லறம் போற்றிக் கேண்மின்
மறுபிறப் புணர்ந்த மணிமே கலைதீ
பிறவறங் கேட்ட பின்னுள் வந்துனக்
கசடு கித்திறம் பலவு மிவற்றின் பகுதியு
மூத்தோர் நகையாய் முன்னுறக் கூறுவ
லென்றவ னெழுதலு மிளங்கொடி யெழுந்து
நன்றறி மாதவ னல்லடி வணங்கித்
தேவியு மாயமுஞ் சித்திரா பதியு
கடுo மாதவர் நன்மொழி மறவா துய்ம்மி
னிங்ஙகர் மருங்கின்யா னுறைவே னுயின்
மன்னவன் மகற்கிவள் வருங்கூற் றென்குவ
ராபுத் திரனு டடைந்ததற் பின்னுண்
மாசின் மணிபல் லவந்தொழு தேத்தி
கஞிரு வஞ்சியுட் புக்கு மாபத் தினிதனக்
கெஞ்சா கல்லறம் யாங்கணுஞ் செய்குவ
லெனக்கிட ருண்டென் றிரங்கல் வேண்டா
மனக்கினி யீரென் றவரையும் வணங்கி
வெந்துறு பொன்போல் வீழ்கதிர் மறைந்த
கசுo வந்தி மாலை யாயிழை போகி
யுலக வறவியு முதியாள் குடிகையு
மிலகொளிக் கந்தமு மேத்தி வலங்கொண்

கசஉ. புரை - குற்றம். கல்லறம் - அருளறம்.

கசச. பிறவறம் - மற்றைச்சமயதருமம்.

கசடுசு. இத்திறம் பலவற்றையும் இவற்றின்பகுதிகளையுங் கூறுவேன்.

கசள. இளங்கொடி - மணிமேகலை. கசகூ. மணி. உச: அகூ.

கடுரு. கண்ணகியைத்தரிசித்தற்பொருட்டு வஞ்சிநகரத்திற் புகுந்து.

கடுஅ. அவரையும்: உம், இறந்ததுதழீஇயது.

கசுo. அந்திமாலையில். கசுக. முதியாள் குடிகை - சம்பாபதி கோயில்.

கசுஉ. கந்தம் - தூண் ; என்றது, கந்திற்பாவையை ; ஆகுபெயர் ; "கலிகெழு கடவுள் கந்தங் கைவிட" புறநா. நுஉ.

(பி - ம்.) கசஉ. 'கல்வினை போற்றிக்' கசச - டு. 'பின்னுளன்னைக்கு' கசசு. 'முத்தொகையாக முன்னர்க்கூறுவன்' கடுo. 'மறவாதுய்மின்' கடுஉ. 'இவள் கூற்றென்னவறைகுவர்' கடுரு. 'அடைந்தபின்னுள்' கசுக, 'முதியாள் கோட்டமும்'

டந்தர மாருப் பறந்துசென் ருயிழை
யிந்திரன் மருமா னிரும்பதிப் புறத்தோர்
கசுடு பூம்பொழி லகவயி னிழிந்து பொறையுயிர்த்
தாங்குவாழ் மாதவ னடியிணை வணங்கி
யிங்ஙகர்ப் பேர்யா திங்ஙக ராலு
மன்னவன் யாரென மாதவன் கூறு
ஙாக புரமிது நன்னக ராள்வோன்
களo பூமிசந் திரன்மகன் புண்ணிய ராச
னீங்கிவன் பிறந்த வங்ஙாட் டொட்டு
மோங்குயர் வானத்துப் பெயல்பிழைப் பறியாது
மண்ணு மரனும் வளம்பல தருஉ
மூண்ணின் முருக்கு நோயுயிர்க் கில்லெனத்
களடு தகைமலர்த் தாரோன் றன்றிறங் கூறின
னகைமலர்ப் பூம்பொழி லருந்தவன் ருனென்.

உச.—ஆபுத்திரனுடைந்தகாதை முற்றிற்று.

கசுஉ. அந்தரம் ஆறு - ஆகாயமேவழியாக ; மணி. சு: உகக.

கசுச. இந்திரன் மருமான் - புண்ணியராசன்; மருமான் -வழித்தோன் றல். பதி - ஙாகபுரம்.

கசுடு. அகவயின் - உள்ளிடத்தே. கசுஎ. மாதவன் - தருமசாவகன்.

கசுஅ. யாரென-யாரென்று மணிமேகலைக்கட்ப. கூறும்-சொல்லுவான்.

களக. தொட்டு - தொடங்கி.

களஉ. பெயல் - மழை. பிழைப்பு அறியாது - தவறுதலேயறியாது.

களஎ. தரூஉம் - கொடுக்கும். களச. உயிர்களுக்குநோயில்லை.

களடு. தாரோன் -புண்ணியராசன். களஎ. அருந்தவன் -தருமசாவகன்.

க-களஎ. தொன்முதுகணிகை கேட்டு வருந்தி வீழ்ந்து, ஏத்தி, 'தருக' என, இராசமாதேவி ஈங்கிவை சொல்வுழி, மாதவி அறவணவடிகளுடன் வர, காண்டலும், எதிர்சென்று தாழ்வணங்க, அவன், 'அறிவுண்டாக' என்றுகூறலும், இராசமாதேவி காட்டி விளக்கிச் செய்தபின், 'வாழ்க' என, 'தேவி கேளாய் ; நல்லீர் கேண்மின் ; மணிமேகலை முன்னுறக்கூறுவல்' என்று அவனெழுதலும், இளங்கொடி எழுந்து வணங்கி என்று வணங்கிப் போகி ஏத்தி வலங்கொண்டு சென்று இழிந்து பொறையுயிர்த்து வணங்கி, 'யாது ? யார்' என, மாதவன் கூறும் ; அங்ஙனங் கூறுமருந்தவன் கூறினனென வினைமுடிவுசெய்க.

இருபத்தைந்தாவது

ஆபுத்திரனெடு மணிபல்லவமடைந்த காதை.

[இருபத்தைந்தாவது மணிமேகலை ஆபுத்திரனை மணிபல்லவத் திடையழைத்துப் புத்தபீடிகைகாட்டிப் பிறப்புணர்த்தி வஞ்சிமாநகர்புக்கபாட்டு.]

அரச னுரிமையோ டப்பொழில் புகுந்து
தரும சாவகன் றன்னடி வணங்கி
யறனு மறனு மநித்தமு நித்தத்
திறனுந் துக்கமுஞ் செல்லுயிர்ப் புக்கிலுஞ்
சார்பிற் றோற்றமுஞ் சார்பறுத் துய்த்தியு
மாரிய னமைதியு மமைவுறக் கேட்டுப்
பெண்ணினை யில்லாப் பெருவனப் புற்றுள்
கண்ணினை யியக்கமுங் காமனை டியங்கா
வங்கையிற் பாத்திரங் கொண்டறங் கேட்கு

க. அரசன் - புண்ணியராசன்; உரிமை - மனைவி; "உரிமை முன் போக்கி யல்லா லொளியுடை மன்னர் போகார்" சீவக. உஎஉ.

உ. தருமசாவகனென்பது, அப்பொழிலில் தோற்று வதியும் ஒரு முனிவன் பெயர். இப்பெயர்க்குத் தருமங்கேட்பவ னென்பது பொருள்.

ங. மறன் - பாவம். அநித்தம் - அநித்தியப் பொருளின்வகை.

ஙூ - ச. நித்தத்திறன் - நித்தியப்பொருளின்வகை. துக்கம் - பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு, விரும்பியனபெறுமை, வேண்டாதன பெறுதல் என்னுமாறும். புக்கில் - புகுமிடம்.

ஞ. சார்பிற்றோற்றம் - பேதைமைமுதலியபன்னிரண்டுநிதானத்தினது தோற்றம். உய்தி - பிழைத்தல்; "செய்தி கொன்றோர்க் குய்தியில்" (புறநா. ஙூச); "உய்திக் கால முரையீ ரோவென" சிலப். க0: உச0.

சு. ஆரியன் - ஆசிரியன்; என்றது புத்தனை. எ. பெருவனப்பு-பேரழகு.

அ. இயக்கம் - இயங்குதல்; இவ்வடியோடு "உருவி லாளனெ டுருவம் பெயர்ப்ப" (ஞ: சு) என்று முன்வந்தது ஒப்புநோக்கற்பாலது.

(பி - மீ.) சு. 'அறிவுறக் கேட்டு' ஙூ. 'அங்கை பாத்திரங்'

கo மிங்கிணை யில்லா ளிவள்யா ரென்னக்
காவலற் றொழுது கஞ்சுக னுரைப்போ
னுவலற் தீவிளிங் ஙங்கையை யொப்பார்
யாவரு மில்லை யிவடிற மெல்லாங்
கிள்ளி வளவனெடு கெழுதகை வேண்டிக்
கரு கள்ளவிழ் தாரோய் கலத்தொடிம் போகிக்
காவிரிப் படப்பை ஙன்னகர் புக்கேன்
மாதவ னறவண னிவள்பிறப் புணர்ந்தாங்
கோதின னென்றியா னன்றே யுரைத்தே
னுங்கவ ளிவளவ் வகனகர் நீங்கி
உo யீங்கு வந்தன ளென்றலு மிளங்கொடி
நின்கைப் பாத்திர மென்கைப் புகுந்தது
மன்பெருஞ் செல்வத்து மயங்கினை யறியா
யப்பிறப் பறிந்திலை யாயினு மாவயிற்

கo. யாரென்ன - யாரென்று அரசன்கேட்ப.

க-கo. அரசன் புகுந்து வணங்கிக் கேட்டு, 'இவள்யார்' என்னவென்க.

கக. கஞ்சுகன் - சட்டையிட்ட பிரதானி.

கஞ்சுகன் மணிமேகலையின் வரலாற்றை அரசனுக்குக் கூறுதல் இனிக் கூறப்படும்.

கஙு. இவள் திறமெல்லாம் - இவளுடைய வரலாறு முழுதும்.

கச. கிள்ளிவளவனென்றது, உதயகுமரன்தந்தையை. கெழுதகை - உரிமை ; என்றது, நட்பை.

கசு. காவிரிப்படப்பைஙன்னகர்-காவிரியைத்தோட்டக்கூற்றிற்கு எல்லை யாகவுடையகாவிரிப்பூம்பட்டினம் ; படப்பை - பக்கமுமாம் ; "காவிரிப் படப்பைப் பட்டினம்" சிலப். கருo: கடுக.

கஅ. அன்றே - யான் போய்வந்த அக்காலத்தே.

கஙூ - அ. இவடிறமெல்லாம் அன்றே யுரைத்தேன்.

உo. இளங்கொடி - மணிமேகலை.

கக - உo. உரைப்போனுகிய கஞ்சுகன் 'ஙங்குவந்தனள்' என்றலும்.

உக. 'நின்கைப் பாத்திரம்' என்பது முதலியனை, புண்ணியராசனை நோக்கி மணிமேகலை கூறுங்கூற்று. பாத்திரம் - அமுதசுரபி.

உஉ. செல்வத்து - செல்வத்தால்.

உஙூ. அப்பிறப்பு - போனபிறப்பு ; என்றது, சாலிவயிற்றிற்பிறந்த பிறப்பை.

(பி - ம்.) கஅ. 'ஓதினனெறியானன்றே' கஙூ. 'ஆங்கவடானவ்வகனகர்'

நிப்பிறப் பறிந்திலை யென்செய் தனையோ
உடு மணிப்பல் லவம்வலங் கொண்டா லல்லது
பிணிப்புறு பிறவியின் பெற்றியை யறியா
யாங்கு வருவா யரசநீ யென்றப்
பூங்கமழ் தாரோன் முன்னர்ப் புகன்று
மையறு விசும்பின் மடக்கொடி யெழுந்து
உ0 வெய்யவன் குடபால் வீழா முன்னர்
வானின் நிழிந்து மறிதிரை யுலாவும்
பூநா றடைகரை யெங்கணும் போகி
மணிப்பல் லவம்வலங் கொண்டு மடக்கொடி
பிணிப்பறு மாதவன் பீடிகை காண்டலுற்
உடு தொழுதுவலங் கொள்ளவத் தூமணிப் பீடிகைப்
பழுதில் காட்சி தன்பிறப் புணர்த்தக்
காயங் கரையெனும் பேரியாற் றடைகரை
மாயமின் மாதவன் றன்னடி பணிந்து
தருமங் கேட்டுத் தாடொழு தேத்திப்
சு0 பெருமகன் றன்னெடும் பெயர்வோர்க் கெல்லாம்
விலங்கு நரகரும் பேய்களு மாக்குங்

உசு. பிணிப்பு - பற்று. பெற்றி - தன்மை.

உள. ஆங்கு - மணிபல்லவத்திற்கு. நீ ஆங்கு வருவாயென்று.

உஅ. தாரோன் - புண்ணியராசன். உ0-உஅ. இளங்கொடி புகன்று.

உக. மடக்கொடி - மணிமேகலை.

உக. இழிந்து - இறங்கி. உசு. மாதவன் - புத்தன்.

உக - உசு. மடக்கொடி எழுந்து இழிந்து போகி வலங்கொண்டு காண்டலுமென்க.

உசு. பழுது - குற்றம். தரு - சு. பீடிகைக்காட்சி உணர்த்த.

உள. அடைகரை - அடைகரையிலுள்ள.

உஅ. மாதவன் - பிரமதருமன்.

உக. 'தருமங்கேட்டு' என்பது முதலியன, பிரமதருமனே முன்னிலையார்க்கி, மணிமேகலை கூறுங்கூற்று.

சு0. பெருமகன் - அரசன்; என்றது அத்திபதியை. பெயர்வோர்க் கெல்லாம் - அவந்தி நகரத்திற்குச்செல்வோரெல்லோருக்கும்.

(பி - ம்.) உசு. 'பெற்றிமையுணராய்' உஅ. 'முன்னர்ப் பொருந்தி' உடு. 'கொள்ளத்தூமணிப்' உசு - எ. 'பிறப்புணர்ந்த, சாயங்கரை'

கலங்கஞர்த் தீவினை கடிமின் கடிந்தாற்
றேவரு மக்களும் பிரமரு மாகுதி
ராகலி னல்வினை யயரா தோம்புமின்
சரு புலவன் மூழுதும் பொய்யின் றுணர்ந்தோ
னுலகுயக் கோடற் கொருவன் ரேன்று
மங்கா ளவனறங் கேட்டோ ரல்ல
தின்னுப் பிறவி யிழுக்குக ரில்லை
மாற்றருங் கூற்றம் வருவதன் முன்னம்
நுo போற்றுமி னறமெனச் சாற்றிக் காட்டி
நாக்கடிப் பாக வாய்ப்பறை யறைந்தீ
ரவ்வுரைகேட்டுநும் மடிதொழு தேத்த
வெவ்வுரை யெங்கட்கு விளம்பினி ராதலிற்

சஉ. கலங்கஞர்த்தீவினை - கலங்குதற்குக் காரணமாகிய தின்பத்தை யுண்டாக்கும் கொலைமுதலிய பத்துவகையினதாகிய பாவத்தை.

சச. நல்வினை - கொல்லாமை முதலிய பத்துவகையினதாகிய புண்ணியத்தை. அயராது ஓம்புமின் - மறவாது பாதுகாத்திடுமின்.

சடு. புலவன் - ஞானி ; புத்தனென்பது இப்பொருட்டு. முழுதும் பொய்யின் றுணர்ந்தோன் - ஸர்வஜ்ஞன்.

சசு. உலகுயக் கோடற்கு - உலகைப் பிழைப்பித்தற் பொருட்டு ; ஏக தேவனென்பது புத்தன் பெயர்களுள் ஒன்றுதலின், இங்கே 'ஒருவன்' என்றார்.

சடு - சு. புலவனும் உணர்ந்தோனுமாகிய ஒருவன் உலகை உயக்கோடற்குத் தோன்றுமென்க.

சஎ. அவனறம் - அவனுரைத்த அறம்.

சஅ. இன்னு - துன்பம். இழுக்குகரில்லை - தப்புவோரிலரே.

சகூ. மாற்றருங் கூற்றம் - பிறரால் தடுத்தற்கரிய இயமன் ; "மாற்றருங்கூற்றம்" (தொல். புறத்திணை. சூ.உசு); "மருந்தில் கூற்றம்" புறநா. கூ.

நுo. அறம் போற்றுமினென்று சொல்லிப் பொருளை விளங்கச் செய்து; சாற்றி - நிறைத்தென்றுமாம் ; "நிவந்துசெ னீத்தங் குளங்கொளச் சாற்றி" மதுரை. உசகு.

நுக. நாவே கடிப்பாக வாயாகியபறையை அறைந்தீர்; கடிப்பு - பறையடிக்குங் குறுந்தடி; "நாக்கடிப் பாக வாய்ப்பறை யறையினும்" சிலப். கசு: உகூ.

சo - நுக. பெயர்வோர்க்கெல்லாம் சாற்றிக் காட்டி அறைந்தீரென வியைக்க.

நுகூ. வெவ்வுரை - பதினறுகாளில் இராகுலன் திட்டிவிடுமென்னும் பாம்பாலிதப்பாவென்றும், நீ அவனுடு நீயில் மூழ்குவையென்றுஞ் சொன்னசொற்கள்; இதனை, இந்நூல் கூ-ஆம் காதை, சஅ-ஆம் அடிமுதலிய வற்றுணர்க.

(பி - ம்.) சசு. 'உலகுயக் கேட்டற்கு'

பெரியவன் ரேன்ரு முன்னரிப் பீடிகை
ருடு கரியவ னிட்ட காணஞ் தானு
மன்பெரும் பீடிகை மாய்ந்துயிர் நீங்கிய
வென்பிறப் புணர்த்தலு மென்னென் றியான்ரெழு
மூற்ற வுணர்ந்த முதல்வனே யல்லது
மற்றப் பீடிகை தன்மிசைப் பொரு அது
சுo பீடிகை பொறுத்த பின்ன ரல்லது
வானவன் வணங்கான் மற்றவ் வானவன்
பெருமகற் கமைத்துப் பிறந்தார் பிறவியைத்
தரும பீடிகை சாற்றுக வென்றே
யருளின ஞதலி ஞயிழை பிறவியு
சுடு மிருளறக் காட்டி மென்றெரித் தூரைத்த
தன்றே போன்ற தருந்தவர் வாய்மொழி
யின்றெனக் கென்றே யேத்தி வலங்கொண்
டங்கிவ ளின்னண மாக விறைவனு

ருசு. பெரியவன் - புத்தன்; பீடிகை - பீடிகையை.

ருடு. கரியவன் - இந்திரன்; "தேவர்கோ னிட்ட மாமணிப் பீடிகை" (அ: ருஉ) என்று முன்பு வஜ்ரிருத்தல்காண்க.

ருடு - எ. காரணந்தானும் உணர்த்தற்குக்காரணமும் எவ்வளவென்று யான்தொழ.

ருஅ. முற்றவுணர்ந்த முதலவன் - எல்லாமறிந்தமுதல்வன்; ஸர்வஜ்ஞன்; மணி. ரு: கoக.

ருகூ. பொறுஅது - சுமவாது; முற்று. சுக. வானவன் - இந்திரன்.

சுஉ. பெருமகற்கமைத்து-புத்தனே அறிந்துகோடற்பொருட்டு இயற்றி. பிறந்தார்பிறவியை- பிறந்தோருடைய பழம்பிறப்பின் செய்தியை.

சுஎ. சாற்றுச் - உணர்த்துக.

சுசு. அருளினன் - ஆணைதந்தான். ஆயிழை பிறவியும் - உன்பிறவியையும்.

சுக-ச. அவ்வானவன் அமைத்துச் சாற்றுகவென்று அருளினனென்க.

சுசு. அருந்தவர், முன்னிலைக்கண்வந்தது. சுருடு. இருளற-மயக்கமற.

சுருடு - சு. அன்று உரைத்ததாகிய வாய்மொழி.

சுசு - எ. எனக்கு வாய்மொழி இன்றைக்குரைத்தது போன்றதென்று.

சுஅ. இவள் - மணிமேகலை; இன்னணமாக - இப்படி இங்கேயிருக்க. இறைவன் - புண்ணியராசன்.

(பி - ம்.) ருகூ. 'பீடிகைதன்மிசைப்பெரு அப்' சுருடு - சு. 'மருளறக் காட்டுதுமென் றெரித்தூரைத்த, வன்றே'

மாங்கப் பொழில்விட் டகலகர் புக்குத்
தந்தை முனியாத் தாய்பசு வாக
வந்த பிறவியு மாமுனி யருளாற்
குடர்த்தொடர் மாலை சூழா தாங்கோ
ரடர்ப்பொன் மூட்டையு ளடங்கிய வண்ணமு
மாமுனி யருளான் மக்களே யில்லோன்
எடு பூமிசந் திரன்கொடு போந்த வண்ணமு
மாய்தொடி யரிவை யமரசுந் தரியெனுந்
தாய்வாய்க் கேட்டுத் தாழ்துய ரெய்தி
யிறந்த பிறவியின் யாய்செய் தனூஉம்
பிறந்த பிறவியின் பெற்றியு நினைந்து
அ0 செருவேன் மன்னர் செவ்விபார்த் துணங்க
வரைசுவீற் றிருந்து புரையோர்ப் பேணி
நாடகங் கண்டு பாடற் பான்மையிற்
கேள்வி யின்னிசை கேட்டுத் தேவிய
ருடற் செவ்வி பார்த்து நீடாது

எ0. முனி - மண்முகமுனிவன்; மணி. கடு: சு.
எங. அடர் - தகடு. எஉ - ஙூ. மணி. கடு: கஉ - சு.
எக - ஙூ. அருளால் அடங்கியவண்ணமும்.
எடு. பூமிசந்திரன் - நாகபுரத்தரசன்.
எசு - நு. இல்லோனுகிய பூமிசந்திரன்.
எசு. அமரசுந்தரி - பூமிசந்திரன்மனைவி.

சுஅ - எள. இறைவனும் விட்டுப் புக்குப் பிறவியும் அடங்கியவண்ணமும் போன்தவண்ணமும் கேட்டுத் துயரெய்தியென்க.

எஅ. இறந்தபிறவி - போனபிறப்பு. யாய் - தாய்; என்றது, சாலியை. இறந்தபிறப்பின் செய்தியை மணிமேகலையாலுணர்ந்தான்போலும்.

எக. பெற்றி -பேறு; என்றது, பசுவயிற்றிற்பிறந்தது முதலியவற்றை.

அ0. செவ்வி - தம் குறைகூறுதற்கேற்ற மனமொழிமெய்கள் இனியனுங்காலம். உணங்க - வாட.

அக. வீற்றிருந்து -வருத்தமின்றியிருந்து; செம்மாந்திருந்தென்றுமாம்; (முநூ. எ0.) புரையோர்ப்பேணி - பெரியோரைவழிபட்டு; அமைச்சர்களையும் புரோகிதர்களையும் விரும்பித் துணைக்கொண்டென்றுமாம்.

அஉ - ஙூ. பட்டினப். கஙூ.

அசு. ஊடல - பிணங்கல்; 'வழக்காட்டு' என்பர் வெண்பாமாலை உரையாசிரியர். நீடாது - தாமதியாமல்.

(பி - ம்.) எஉ. 'மாலை சூடியாங் கோர்' எசு. 'அரிவையாசுந்தரியெனும்'

அரு பாடகத் தாமரைச் சீறடி பணிந்து
தேமரு கொங்கையிற் குங்கும மெழுதி
யங்கையிற் றுறுமலர் சுரிகுழற் சூட்டி
ஈறுமுகை யமிழ்துறூஉந் திருநகை யருந்தி
மதிமுகக் கருங்கட் செங்கடை கலக்கக்
கூ0 கருப்பு வில்லி யருப்புக்கணை தூவத்
தருக்கிய காமக் கள்ளாட் டிகழ்ந்து
தூவறத் துறத்த னன்றெனச் சாற்றித்
தெளிந்த நாதனென் செவிமுத லிட்டவித்
தேத மின்ரு யின்று விளைந்தது
கூரு மணிமே கலைதான் காரண மாகவென்
றணிமணி நீண்முடி யரசன் கூற
மனம்வே ரூயினன் மன்னென மந்திரி

அரு. பாடகம்-ஒருவகைக்காலணி. அசு. குங்குமம்-குங்குமச்சாந்து.

அள. அங்கையி ன் - அகங்கையினுலே. துறுமலர் - நெருங்கிய மலர். அங்கையிற்சூட்டி.

அஅ. முகை - அரும்பு; ஈறுமுகை போலுந திருநகை.

கூ0. கருப்புவில்லி - மன்மதன். அருப்புக்கணை - மொட்டாகுமலராகிய அம்பு. வில்லி கணையைத்தூவ.

கூக. காமக்கள்ளாட்டு - காமமாகிய கள்ளையுண்டு விளையாடும் விளையாட்டு (மணி. ஈ உ : ஈ 0); "காமக் கள்ளாட் டடங்கினர் மயங்க" சிலப். உஉ : கஉள.

அஉ - கூக. 'நாடகங்கண்டு' என்பது முதலியன காமக்கள்ளாட்டிற்கு அடை.

கூஉ. தூவறத்துறத்தல் - பற்றுக்கோடறத்துறத்தல.

கூங. நாதன் - தருமசாவகன். முதல் - இடம். வித்து - அவன்கூறிய உபதேசமொழி.

கூச. ஏதமின்றுய் - குற்றமில்லாமல.

கூசு. நீண்முடி - தொன்றுதொட்டுவருதமுடி ; குலத்தின்பெருமை கூறியவாறு ; "நெடுமுடிக் குரிசில்" (சீவக. உசுச.) அரசன் - புண்ணியராசன்.

கூங - சு. வித்து, மணிமேகலைகாரணமாக இன்று விளைந்ததென்று அரசன்கூற.

எள - கூசு. அரசன் தியரெய்தி நீங்கிந்து இகழ்ந்து சாற்றிக் கூற.

கூள. மன் - அரசன்.

மேல்வருவன, சனமித்திரனென்னுமந்திரிகூற்று.

(பி - ம்.) அரு. 'சீறடிபிடித்து' அஅ 'அமிழ்துறு திருநகை' கூ0. 'கருப்புலிலதன்' கூஉ. 'தூவரத்துறசித்தல்'

சனமித் திரனவன் முடொழு தேத்தி
யெங்கோ வாழி யென்சொற் கேண்மதி
கo0 துங்கோ னுன்னைப் பெறுவதன் முன்னுட்
பன்னீ ராண்டிப் பதிகெழு நன்னுடு
மன்னுயிர் மடிய மழைவளங் கரந்தீங்
கீன்முள் குழவிக் கிரங்கா ளாகித்
தான்றனி தின்னுந் தகைமைய தாயது
கoடு காய்வெங் கோடையிற் கார்தோன் றியதென
நீதோன் றினையே நிரைத்தா ரண்ண
ரோன்றிய பின்னர்த் தோன்றிய வுயிர்கட்கு
வானம் பொய்யாது மண்வளம் பிழையா
தூனுடை யுயிர்க ளுறுபசி யறியா
ககo நீயொழி காலை நின்னு டெல்லாந்
தாயொழி குழவி போலக் கூஉந்
துயர்நிலை யுலகங் காத்த லின்றிநீ
யுயர்நிலை யுலகம் வேட்டனை யாயி
னிறுதி யுயிர்க ளெய்தவு மிறைவ
ககடு பெறுதி விரும்பினை யாகுவை யன்றே

கூகூ. கேண்மதி - கேள் ; மதி, முன்னிலையசை.

கo0. துங்கோன் - பூமிசந்திரன்.

கoக. இப்பதிகெழுநன்னுடு - இங்ஙகரத்தினையுடையகல்லாவகநாடு.

கo உ. கரந்து - மறைத்து. கoக - உ. மணி. கச: நிடு - சு.

கoங. ஈன்முள் - தாய். கoக - ச. நாடு தகைமையதாயது.

கoஅ. பிழையாது - தப்பாமல். கoகூ. உயிர்கள் அறியா.

ககo. ஒழிகாலை - நீங்கியபொழுது. ககக. கூஉம் - கூப்பிடும்; முற்று.

ககo - ஙக. "தாயி னூவாக் குழவி போல, வோவாது கூஉம்" (புறநா. ச); " புன்கண் கொள்ளனீ போந்ததற் கிரங்கின்மன், மன்பெரு நன்னுடு வா யெடுத் தழைக்கும்" மணி. உரு: உகூ - எ.

ககங. உயர்நிலையுலகம் - நிருவாணம் ; "வரனென்னும் வைப்பு" (குறள். உச.) வேட்டனையாயின் - விரும்பினையாயின்.

ககச. இறுதி - மரணம். உயிர்கள் இறுதியெய்தவும்.

ககடு. பெறுதி - இலாபம்.

ககஙூ - டு. வேட்டனையாயின் விரும்பினையாகுவை.

(பி - ம்.) கo0. 'துங்கோனின்னை' கoஉ - ஙூ. 'வளங்கரந்த, தீன்முள்' ககஉ. 'காக்கலொன்றுநீ' ககச. 'இறுதியுலகமெய்தவு மிறைவன்'

தன்னுயிர்க் கிரங்கான் பிறவுயி ரோம்பு
மன்னுயிர் முதல்வ னறமூழீ தன்ரூன்
மதிமா றேர்ந்தனே மன்னவ வென்றே
முதுமொழி கூற முதல்வன் கேட்டு
கஉ0 மணிபல் லவம்வலங் கொள்வதற் கெழுந்த
தணியா வேட்கை தணித்தற் கரிதா
லரசு முரீமையு மகரகர்ச் சுற்றமு
மொருமதி யெல்லே காத்தனின் கடனெனக்
கலஞ்செய் கம்மியர் வருகெனக் கூஉ
கஉரு யிலங்குநீர்ப் புணரி யெறிகரை யெய்தி
வங்க மேறினன் மணிபல் லவத்திடைத்
தங்கா தக்கலஞ் சென்றுசார்ந் திறுத்தலும்
புரைதீர் காட்சிப் பூங்கொடி பொருந்தி
யரைசன் கலமென் றகமகிழ் வெய்திக்
கஉ0 காவலன் றன்னெடுங் கடற்றிரை யுலாவுந்
தேமலர்ச் சோலைத் தீவகம் வலஞ்செய்து

கஉசு. தன்னுயிர்க்கு - தன்னுயிர் வருந்துதற்கு. ஓம்பும்-பாதுகாக்கும்.

கஉள. மன்னுயிர் முதல்வன் - புத்தன். அறம் - காருணியம். ஈது - நீ துறந்து நிருவாணமடைதற்கெண்ணியது. ஈது முதல்வன றமுமன்று.

கஉசு - எ. புத்தனே,'பரதுக்கதுக்கன்' (சிவ-சித்தி. பரபக்கம், சௌத்திராந்திகன்மதம், க) என்று கூறியிருத்தல் காண்க.

கஉஅ. மதி மாறேர்ந்தனேயென்றன் ; பிறவுயிர்களின்வருத்தத்தை நீக்கக்கருதாது தன்பயனேக்கருதித் துறத்தற்கு எண்ணினமையால்.

கஉக. முதல்வன் - புண்ணியராசன்.

கஉள - கஉக. சனமித்திரன், மன் மனம்வேறுயினனென்று தொழுதேத்தி முதுமொழிகூற.

கஉங. மதி - மாதம்.

கஉச. கலஞ்செய்கம்மியர் - கப்பலில் தொழில்செய்வோர் ; "கலம் புணர் கம்மியர்" மணி. எ: எ0.

கஉரு. புணரி - கடல்.

கஉக - உசு. முதல்வன் அம்மொழியைக்கேட்டுக் காத்தல் நின்கடனெனக் கூறிக் கூஉய் எய்தி ஏறினனென்க.

கஉள. தங்காது - இடையேதங்காமல். இறுத்தலும் - தங்கலும்.

கஉஅ. புரை - குற்றம். காட்சி - அறிவு. பூங்கொடி - மணிமேகலை.

கஉ0 - உக. காவலன்றன்னெடும் வலஞ்செய்து.

(பி - ம்.) கஉச. 'கம்மியர் கடனெனக்கூஉய்'

பெருமகன் காணுய் பிறப்புணர் விக்குந்
தரும பீடிகை யிதுவெனக் காட்ட
வலங்கொண் டேத்தினன் மன்னவன் மன்னவற்
கஉடு குலந்த பிறவியை யுயர்மணிப் பீடிகை
கையகத் தெடுத்துக் காண்போர் முகத்தை
மையறு மண்டிலம் போலக் காட்ட
வென்பிறப் பறிந்தே னென்னிடர் தீர்ந்தேன்
றென்றமிழ் மதுரைச் செழுங்கலைப் பாவாய்
கசஅ மாரிநடுநாள் வயிறுகாய் பசியா
லாரிரு ளஞ்சா தம்பல மணைந்தாங்
கிரந்தூண் வாழ்க்கை யென்பால் வந்தோர்க்
கருந்தூண் காணு தழுங்குவேன் கையி
னுடுவறங் கூரினுமிவ் வோடுவறங் கூரா
கசடு தேடா வழிய லெழுந்தது கொள்கென
வமுத சுரபி யங்கையிற் றந்தென்
பவமறு வித்த வாளோர் பாவா
யுணர்விற் றோன்றி யுரைப்பொரு ளுணர்த்து

கஉ. பெருமகன் - அரசன் ; அண்மைவினி.

கஉ அ - கஉ. பூங்கொடி பொருந்தி மகிழ்வெய்தி வலஞ்செய்து காட்ட.

கஉ. உலந்தபிறவி - போ ாபிறப்பில் நிகழ்ந்த செய்தியை.

கஉ. மையறுமண்டிலம் - குற்றமற்ற கண்ணாடி ; "வயக்குறு மண்டிலம்" கலி. உடு.

கஉ - எ. மண்டிலம்போலப் பீடிகை உலந்தபிறவியைக் காட்ட.

மேல்வருவன, பழம்பிறப்புணர்ந்த புண்ணியராசன் கூற்று.

கஉ. கலி -வித்தை. கசஅ. மாரிநடுநாள் - மழையையுடைய நடுஇரவில்.

கசஉ. இரந்தூண் ணுமுணவையே வாழ்க்கைப்பொருளாகவுடைய என் பால்வந்தோர் பொருட்டு.

கசஉ. அழுங்குவேன் - வருந்துவேன் ; பெயர்.

கசச - டி. மணி. கசா: கஉ - கூ.

கசஎ. அங்கையின் - அழகிய கையினால்.

கசஏ. பவம் - கருமக்கூட்டம்.

கஉ - சஏ. இவ்வடிகளிற்கூறப்பட்டுள்ள சரித்திரத்தை, இந்நூலில் கச - ஆம் காதை, கூ - ஆம் அடி முதலியவற்றால் உணர்க.

கசஅ. உரைப்பொருள் - சொற்பொருள்.

(பி - ம்.) கஉ - கூ. 'என்னிடர் தீர்த்த, தென்' கசஉ. 'காணுதழு வேன்' கசடு. 'ஏடாபரியல்'

மணிந்தக முவிரொள் மடந்தை நின்னடி
கருo தேவ ராயினும் பிரம ராயினு
நாமாசு கழுஉ நலங்கிளர் திருந்தடி
பிறந்த பிறவிகள் பேணுத லல்லது
மறந்து வாழேன் மடந்தையென் றேத்தி
மன்னவன் மணிமே கலையுட னெழுந்து
கருந தென்மேற் காகச் சென்று திரையுலாங்
கோமுகி யென்னும் பொய்கையின் கரையோர்
தூமலர்ப் புன்னைத் துறைநிழ லிருப்ப
வாபுத் திரனே டாயிழை யிருந்தது
காவற் றெய்வதங் கண்டுவந் தெய்தி
கசுo யருந்துயிர் மருந்துமுன் னங்கையிற் கொண்டு
பெருந்துயர் தீர்த்தவப் பெரியோய் வந்தனை
யங்நா ணின்னை யயர்த்துப் போயினர்
பின்னுள் வந்துநின் பெற்றிமை நோக்கி

கசஉ. மணி - பளிங்கு ; "மணிமரு டெண்ணீர்" (மலைபடு. உருo); முத்துமாம்.

கருக. நா மாசு - நாக்குற்றம். கழுஉம் - போக்கும்.

கருஉ. பிறவிகள் - பிறவிகள்தோறும். பேணுதல் - உட்கொண்டு வழி படுதல்.

கருங. மடந்தை, விளி.

கசகருங. நின்னடிகளைப் பிறவிகடோறும் பேணுதலல்லது மறவேன்.

கருரு. உலாம் - உலாவும். கருசு. கரை - கரையில்.

கருங - எ. மன்னவன் சித்தி எழுந்து சென்று கரையில் நிழலில் இருப்பவென்க.

கருகூ. தெய்வதம் - தீவதிலகை.

கசுo. 'அருந்துயிர் மருந்து' என்பது முதலியன, தீவதிலகை புண்ணிய ராசனே நோக்கிக்கூறும் கூற்று. உயிர்மருந்து - சோறு.

கசுக. பெருந்துயர் - பசித்துயர். வந்தனை - வந்தாய்.

கசுஉ. அங்நாள் - போன பிறப்பில்; மதுரையிலிருந்து கப்பல் வழியே வந்து இத்தீவத்தைச் அடைந்த அந்நாளில். அயர்த்து - மறந்து. போயினர், பெயர்.

கசுங. பெற்றிமை-தன்மை; என்றது, "உண்ணு நோன்போ டுயிர்பதிப் பெயர்த்தமை" மணி. கச : கூரு.

(பி - ம்.) கருக. 'நாமுறைபுகழ்ந்தநலந்திகழ்திருந்தடி' கருஅ. 'ஆயிழைதன்னைக்' கசுo. 'மருந்துனங்கையிற்' கசுக. 'வருந்துயிர் நீக்கிய மறவோன்'

நின்குறி யிருந்து தம்முயிர் நீத்தோ
ரொன்பது செட்டிக ளுடலென் பிவைகா
ணுங்கவ ரிடவுண் டவருடன் வந்தோ
ரேங்கிமெய் வைத்தோ ரென்பு மிவைகா
ணூர்திரை தொகுத்த வுயர்மணல் புதைப்ப
வாய்மலர்ப் புன்னை யணிநிழற் கீழோ
லன்புடை யாருயி ரரசற் கருளிய
வென்புடை யாக்கை யிருந்தது காணுய்
நின்னுயிர் கொன்றுய் நின்னுயிர்க் கிரங்கிப்
பின்னுள் வந்த பிறருயிர் கொன்றுய்
கொலைவ னல்லையோ கொற்றவ னுயினே
பலர்தொழு பாத்திரங் கையி னேந்திய
மடவர னல்லாய் நின்றன் மாககர்
கடல்வயிறு புக்கது காரணங் கேளாய்

கசுஎ. நின்குறியிருந்து -நீ இறந்தவிடத்து உண்ணுநோன்புடனிருந்து; குறி - இடம்.

கசுசு. ஆங்கவரிடவுண்டு - அவ்வொன்பது செட்டிகளும் உணவளிக்க வுண்டு.

கசுஏ. மெய்வைத்தோர் - உயிர்நீங்கினோர்; மணி. சு; கஙக.

கசுஅ. ஊர்திரை தொகுத்த - பரந்த அலைகள் திரட்டிய.

கசுகூ. ஆய்மலர் - அழகியமலர். கீழால் - கீழிடத்தே ; உருபுமயக்கம்.

களெ. அன்பையுடைய அரியவுயிரை உனக்குக் கொடுத்த. ஆருயிரென்றது, ஈண்டு விஞ்ஞானஸ்கந்தத்தினை.

சளத. காணுய் - பாராய்.

கசுஅ - எக. புதைப்பக் கீழால் யாக்கையிருந்தது காணுயென்க.

களெ - எக. இவ்வடிகளோடு, "அன்போ டியைந்த வழக்கென்ப வாரு யிர்க், கென்போ டியைந்த தொடர்பு" (குறள். எகூ) என்பது ஒப்புநோக்கற் பாலது.

களசு. கொலைவன் - கொல்லுதலைச்செய்பவன்; "கொலைவன் யார் கொலோ கொலைவன் மற்றிவன்" புறநா. கருடூ.

களஉ - சு. 'நின்னுயிர் கொன்றுய்' என்பது முதலியன வஞ்சப் புகழ்ச்சி.

களடு. 'பலர்தொழுபாத்திரம்' என்பது முதலியன, தீவதிலகை மணி மேகலையைநோக்கிக் கூறுங்கூற்று.

களசு. நகர் - காவிரிப்பூம்பட்டினம். களசு - எ. நகர் கடலிலழுந்திற்று.

(பி - மீ.) கசுசு. 'ஆங்கவர்மடவாரவருடன்வந்தோர்' கசுஅ. 'ஊதை யீட்டிய வுயிர்மணல்' களசு. 'மடவரலாய்'

நாக ரன்ன டாள்வோன் றன்மகள்
பீலிவளை யென்பாள் பெண்டிரின் மிக்கோள்
கஅ0 பனிப்பகை வானவன் வழியிற் ரோன்றிய
புனிற்றிளங் குழவியொடு பூங்கொடி பொருந்தியித்
தீவகம் வலஞ்செய்து தேவர்கோ னிட்ட
மாபெரும் பீடிகை வலங்கொண் டேத்தியிழிக்
கம்பளச் செட்டி கலம்வந் திறுப்ப
கஅரு வங்கவன் பாற்சென் றவன்றிற மறிந்து
கொற்றவன் மகனிவன் கொள்கெனக் கொடித்தலும்
பெற்ற வுவகையன் பெருமகிழ் வெய்திப்
பழுதில் காட்சிப் பைந்தொடி புதல்வனைத்
தொழுதனன் வாங்கித் துறைபிறக் கொழியக்
ககூ0 கலங்கொண்டு பெயர்ந்த வன்றே காரிரு
ளிலங்குநீ ரடைகரை யக்கலங் கெட்டது
கெடுகல மாக்கள் புதல்வனைக் கெடுத்தது
வடிவேற் கிள்ளி மன்னனுக் குரைப்ப

களஅ. நாகரன்ன டாள்வோன் - வளைவணன்.

கஅ0. பனிப்பகைவானவன் - ஆரியன். வழி - பரம்பரை.

கஅக. பூங்கொடி - பீலிவளை.

கஅ0 - அக. பூங்கொடிபொருந்தியதனை, இந்நூல், உச - ஆம் காதை உசு - ஆம் அடிமுதலியவற்றுலுணர்க.

கஅக - உ. இத்தீவகமென்றது, மணிபல்லவத்தை.

கஅஉ. பீடிகை - புத்தபீடிகை. ஏத்தியிழி - துதிக்குமிடத்து.

களஅ - அ. மகள் எம்பாள் மிக்கோள் பூங்கொடி குழவியொடு பொருந்தி வலஞ்செய்து வலங்கொண்டு ஏத்தியிழியென்க.

கஅச. இறுப்ப - தங்க.

கஅரு. அவன்றிறம் - அவன் காவிரிப்பூம்பட்டினத்திற்குச் செல்லுதலை.

கஅசு. கொடித்தலும் - (பீலிவளை) கொடித்தலும்.

கஅஙு. தொழுதனன்வாங்கி - தொழுதுவாங்கி; (மணி. கூ : உ0.) பிறக்கொழிய - பின்னொழிய.

ககூ0. இருள் - இருளில். ககூஉ. கெடுத்தது - இழந்தசெய்தியை.

(பி - ம்.) கஅள. 'உகவையன்' கஅசு. 'தொழுதனன்வணங்கி' ககூ0. 'கொண்டுபோயவனன்றே' ககூஉ. 'கெடுத்தமாக்கள் புதல்வனைக்கெடுத்து'

மன்னவன் மகனுக் குற்றது பொறுஅ
ன்மணி யிழந்த நாகம் போன்று
கானலுங் கடலுங் கரையுந் தேர்வுழி
வானவன் விழாக்கோண் மாநக ரொழிந்தது
மணிமே கலாதெய்வ மற்றது பொறுஅ
ளணிநகர் தன்னை யலைகடல் கொள்ளென
விட்டனள் சாபம் பட்ட திதுவாற்
கடவுண் மாநகர் கடல்கொளப் பெயர்ந்த
வடிவேற் றடக்கை வானவன் போல
விரிதிரை வந்து வியனகர் விழுங்க
வொருதனி போயின னுலக மன்னவ
னருந்தவன் றன்னுட னுயிழை தாயரும்
வருந்தா தேகி வஞ்சியுட் புக்கனர்
பரப்புநீர்ப் பௌவம் பலர்தொழக் காப்போ
ரூரைத்தன கேட்க வுறுகுவை யாயினின்
மன்னுயிர் முதல்வனை மணிமே கலாதெய்வ

ககசு. உற்றது பொறுஅன் - உண்டான துன்பத்தைப் பொறுஞ்சி.

ககடு. மணி. எ: கடல. ககசு. தேர்வுழி - தேரும்படத்து.

ககஎ. வானவன் விழாக்கோள் - இந்திரவிழாவெடுத்தல்.

ககஅ - எ. தேர்வுழி ஒழிந்தது. உ00. பட்டது - உண்டானசெய்தி.

உ0ச. ஒருதனி - துணையின்றி. மன்னவன் - தெய்வமுடிக்கிள்ளி.

உ0டி. அருந்தவன் - அறவணவடிகள். ஆயிழைதாயர் - உன்தாயார்; என்றது, மாதவியையும் சுதமதியையும்.

உ0எ. பௌவம் - கடல். காப்போர் - மணிமேகலாதெய்வம். பலர் தொழப்பௌவத்தைக்காப்போரென்க.

உ0அ. உரைத்தன - சொல்லப்பட்டன; முற்று.

உ0எ - அ. மேற்கூறிய செய்திகள், காப்போராால் எனக்கு உரைக்கப் பட்டனவென்க. இனி, 'உரைத்தன' என்பதைப் பெயராக்கி, 'கேட்கவுறுகுவையாயின்' என்பதனோடு கூட்டிப்பொருளுரைப்பினும் பொருந்தும்.

உ0அ - கூ. நின்மன்னுயிர் முதல்வனென்றது, கோவலன்மரபில் முற்பட்டானொரு வணிகனை.

(பி - ம்.) ககச - கூ. 'மன்னதுதெய்வமற்றதுபொறுஅளகனகரதனை' ககசு. 'கானலும் பொழிலும்' உ00. 'விட்டது சாபம்' உ0ச -டு. 'போயின னருந்தவன்றன்னுடன்' உ0கூ. 'புக்கனள்' உ0எ. 'பலர்கொளக காபபாள'

உகo முன்னு ளெடுத்தது மங்கா ளாங்கவ
னறவர சாண்டது மறவணன் றன்பான்
மறுபிறப் பாட்டி வஞ்சியுட் கேட்பையென்
றந்தரத் தீவகத் தருந்தெய்வம் போயபின்
மன்னவ னிரங்கி மணிமே கலையுடன்
உகடு முன்னிய தூமண லகழத் தோன்றி
யூன்பிணி யவிழவு மூடலென் பொடுங்கித்
தான்பிணி யவிழாத் தகைமைய தாகி
வெண்சுதை வேய்ந்தவ னிருக்கையி னிருந்த
பண்புகொள் யாக்கையின் படிவ நோக்கி
உஉo மன்னவன் மயங்க மணிமே கலையெழுந்
தென்னுற் றனையோ விலங்கிதழ்த் தாரோய்
நின்னு டடைந்தியா னின்னையீங் கழைத்தது
மன்னு நின்றன் மறுபிறப் புணர்த்தி
யந்தரத் தீவினு மகன்பெருந் தீவினு
உஉடு நின்பெயர் நிறுத்த நீணில மாளு

உகo. முன்னுள் - மரக்கலமுடைத்த அக்காலத்தில்.

உகக. அறவரசாண்டது - புண்ணியதானஞ்செய்தது.

உகஉ. தெய்வம் - நீலதிலகை.

இனி, மணிமேகலைத்தோண்டித் தன்பழைய உடம்பைக்கண்டு புண்ணியராசன் வருந்துதலும் மணிமேகலை அவனைத்தேற்றுதலும் கூறப்படும்.

உகடு. தூ - தூய்மை. அகழ - தோண்ட.

உகசு. ஊன்பிணியவிழவும் - தசையின் பிணிப்புநீங்கவும்.

உகள. தானென்றது, யாக்கையை. பிணியவிழா - கட்டவிழாத.

உகஅ. வெள்ளிய சுண்ணச்சாந்தால் வேயப்பட்டு அவ்விடத்து இருத்தல் போல இருந்த.

உகக. படிவம் - வடிவம். உஉஉ. ஈங்கு - இத்தீவத்திற்கு.

உஉஉ. மறுபிறப்பு - பழம்பிறப்பு.

உஉச. அந்தரத்தீவினும் - இரண்டாயிரம் சிறுதீவுகளிலும். அகன்பெருந்தீவினும் - நான்குபெருந்தீவுகளிலும்; மணி. சு: ககடு - சு.

உஉடு. பெயர் -புகழ்.

உஉஉ - டு. நின்னையீங்கழைத்தது உணர்த்தி நிறுத்தற்பொருட்டேயென்க.

(பி - மீ.) உகக. 'ஆங்கவன்றன்னை' உகஉ. 'கேட்குவை' உகச. 'மன்னவன் வணங்கி' உகச - டு. 'உடனுறனுனையது வாமணலகழத்தோனறினை' உகள. 'தகைமைத்தாகி' உகஅ. 'வேற்தவரிருக்கை' உகக. 'கொளாக்கை' உஉச. 'அந்தரதீவின'

மரசர் தாமே யருளறம் பூண்டாற்
பொருளு முண்டோ பிறபுரை தீர்த்தற்
கறமெனப் படுவ தியாதெனக் கேட்பின்
மறவா திதுகேண் மன்னுயிர்க் கெல்லா
உகo முண்டியு முடையு முறையுரு மல்லது
கண்ட தில்லெனக் காவல னுரைக்கு
மென்னுட் டாயினும் பிறர்நாட் டாயினு
நன்னுத லுரைத்த நல்லறஞ் செய்கே
னென்பிறப் புணர்த்தி யென்னீ படைத்தனை
உகரு நின்றிற நீங்க லாற்றேன் யானெனப்
புன்கண் கொள்ளனீ போந்ததற் கிரங்கினின்
மன்பெரு நன்னுடு வாயெடித் தழைக்கும்

உஉஎ. உலகத்திற் குற்றநீர்த்தற்குப் பொருளேயிராது; எல்லாவுயிர்களும் குற்றமற்றனவாமென்றபடி. பிற, இடைச்சொல். புரை - குற்றம்.

உஉசு - ஏ. இவ்வடிகளின்பொருள், 'மன்னவ னெப்படி மன்னுயி ரப்படி' என்னும் பழமொழியின் பொருளை விளக்கிற்று.

உகo. உண்டிமுதலியவற்றையல்லாமல். உறையுள் - இருப்பிடம்; "பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர், தொகுத்தவற்று ளெல்லாந் தலை" (குறள்.உ2உ); "உண்டி யுறையு ளுடுக்கை யிவையீந்தார்" ஏலாதி. கூ.

உகக. கண்டதில்லென - கண்டதில்லையென்று சொல்ல.

உஉஅ - ஙக. அறமெனப்படுவது, எல்லாவுயிர்கட்கும் உண்டிமுதலிய வற்றையீதலேயன்றி வேறுகண்டதில்லையென்று மணிமேகலைசொல்ல; உண்டி முதலியவற்றையீதலேயறமென்றபடி.

உங உ. ஆயினும், எண்ணிடைச்சொல்.

உஙஙு. நன்னுதல் உரைத்த - நீசொல்லிய. செய்கேன் - செய்வேன்.

உஙச. என்பிறப்பு உணர்த்தி - என்பழம்பிறப்பையறிவித்து. பழம் பிறப்புணர்ந்தது நலறம் பூணுதற்குரிய விசேடவுணர்வினுதற்குக்காரண மாயிருந்ததுபற்றி, 'என்னீ படைத்தனை' என்றான். இது, "மானவன்றன் மகள்" (சிலப். உசு: "தென்னவன்") என்றாற் போன்றது.

உஙரு. நின்னிடத்தினின்றும் பிரியும் வன்மையில்லேனென்று அரசன் சொல்ல.

உஙசு. புன்கண் கொள்ளல் நீ - நீ துன்பங்கொள்ளாதே. போந்ததற்கு இரங்கி - நீ இங்குவந்ததற்கு வருந்தி.

உஙஎ. நாடு உன்னையழைக்கும். உஙக - ஏ. மணி. உரி : கக o - கக.

(பி - ம்.) உஉஎ. 'உண்டோபுரைதீர்த்தற்கென' உஉஅ. 'கேட்பு' உகo. 'உண்டியுமுறையுமுடையுஞ்சல்லது'

வங்கத் தேகுதி வஞ்சியுட் செல்வனென்
றந்தரத் தெழுந்தன ளணியிழை தானென்.

உரு.—ஆபுத்திரனுடே மணிபல்லவமடைந்ததை முற்றிற்று.

உகூஅ. ஏகுதி - போவாய்.

உகூகூ. அந்தரத்து - ஆகாயத்தில். அணியிழை - மணிமேகலை.

க - உகூகூ. அரசன், புகுந்து வணங்கிக்கேட்டு, 'இவள் யார்' என்னக் கஞ்சுகன், 'நங்குவந்தனள்' என்றலும், இளங்கொடி, 'வருவாய்' என்று புகன்று எழுந்து இழிந்து போகி வலங்கொண்டு பீடிகையைக்காண்டலும், அதனைத்தொழுது அவள் வலங்கொள்ள, அப்பீடிகை உணர்த்த, பணிந்து 'போன்றது' என்று ஏத்தி வலங்கொண்டு இன்னணமாக, இறைவனும் விட்டுப் புக்குக் கேட்டு எய்தி நீனைந்து கள்ளாட்டிகழ்ந்து சாற்றி, 'வினைந்தது' என்று கூற, மந்திரி சனமித்திரன், தொழுதேத்தி, 'மன்னவ, மதிமாறோர்ந்தனே' என்று முதுமொழி கூற, முதல்வன் கேட்டு, 'காத்தல் நின் கடன்' என்று கூறிக் கூஉய்க் கூவையெய்தி ஏறினன் ; அக்கலம், சென்று சார்ந்திறுத்தலும், பூங்கொடி, பொருந்தி மகிழ்வெய்தி வலஞ்செய்து, 'பீடிகை இது' எனக்காட்ட, மன்னவன் வலங்கொண்டு ஏத்தினன் ; அவனுக்குப் பீடிகை பிறவியைக் காட்ட, மன்னவன், 'மறந்துவாழேன்' என்று ஏத்தி மணிமேகலையுடன் எழுந்து சென்று இருப்ப, தெய்வதம் கண்டு வந்தெய்தி, 'பெரியோய், வந்தனை ; உடலென்பு இவைகாண் ; என்புமிவைகாண் ; காணாய் ; கொன்றாய் ; கொன்றாய் ; ஆயினை ; மடவரலல்லாய், நகர் கடல் வயிறு புக்கது ; காரணங்கேளாய் ; மணிமேகலாதெய்வம் சாபமிட்டனள் ; இதுபட்டது ; உலகமன்னவன் போயினன் ; தாயரும் புக்கனர் ; கேட்க வுறுகுவையாயின், வஞ்சியுட் கேட்பை' என்று தெய்வம் போயபின், மன்னவன் இரங்கிப் படிவ நோக்கி மயங்க, மணிமேகலை எழுந்து, 'கண்டது இல்' என, காவலன் உரைக்கும் ; அங்ஙனம் உரைப்பவன், 'நீங்கலாற்றேன் யான்' என, அணியிழை, 'ஏகுதி ; செல்வன்' என்று எழுந்தனளென வினைமுடிவு செய்க.

இருபத்தாறுவது

வஞ்சிமாநகர்புக்ககாதை.

[இருபத்தாறுவது மணிமேகலை கண்ணகிகோட்டமடைந்து வஞ்சிமாநகர் புக்கபாட்டு.]

அணியிழை யந்தர மாரு வெழுந்து
தணியாக் காதற் ருய்கண் ணகியையுங்
கொடைகெழு தாதை கோவலன் றன்னையுங்
கடவு ளெழுதிய படிமங் காணிய
(5) வேட்கை துரப்பக் கோட்டம் புகுந்து
வணங்கி நின்று குணம்பல வேத்தி
யற்புக்கட னில்லாது நற்றவம் படராது

க. அணியிழை - மணிமேகலை.

உ. தணியா - குறையாத. தாய்கண்ணகி - தாயாகிய கண்ணகி.

ங. கொடைகெழுதாதை கோவலன் - ஈதல்பொருந்திய தாதையாகிய கோவலன்; கோவலன் கொடையிற்சிறந்தவனென்பது, கிரிப்பிள்ளையை அறியாது கொன்று கணவனுல் நீப்புண்ட டார்ப்பணியின் கொலைப்பாவநீங்குதற்குத் தருமாசனத்தோருரைத்த நூல்வழியே தானஞ்செய்து அப்பார்ப்பனியைக் கண்வனெடுகூட்டிப் பாதுகாத்தானென்றற்றொடக்கத்துச் சரித்திரங்களால் நன்கு புலப்படும்; இதனை, சிலப்பதிகார (கடு: பெ - எடு) த்திற் காண்க.

ச. (இமயமலைச்சிகையால்) தெய்வமாகப்பண்ணியவடிவத்தைத் தரிசித்தற்பொருட்டு; "கைவினை முற்றிய தெய்வப் படிமத்து"—எனச் சிலப்பதிகாரத்து வந்திருத்தல் காண்க; (உடு: ஈ-உடு)

ஞ. வேட்கை துரப்ப - ஆசைசெலுத்துதலால். கோட்டம் - கோயில்; இது சேரன் செங்குட்டுவனுற் கட்டுவிக்கப் பட்டது.

எ. 'அற்புக்கடன்' என்பது முதலியன மணிமேகலை வார்த்தை. அற்புக்கடன் - காதலனிறப்ப உடனிறத்தலும் நீப்பாய்தலும். நற்றவம்படர்தல் - நல்லதவவழியிற்சேறல்; அஃதாவது கைம்மைநோன்பைமேற்று உடம்பை வருத்துதல்.

(பி - ம்.) ச. 'படிவங்காணிய' ஞ: கோட்டம்புக்கு' எ - அ. 'நில்லா வற்றவஞ்சிறக்கக்கற்புக்கடம்பூண்டு'

கற்புக்கடன் பூண்டி நுங்கடன் மூடித்த
தருளல் வேண்டுமென்ன றழுதுமுன் னிற்ப
கo வொருபெரும் பத்தினிக் கடவுளாங் குரைப்போ
ளெம்மிறைக் குற்ற விடுக்கண் பொருது
வெம்மையின் மதுரை வெவ்வழற் படுநாண்
மதுரா பதியெனு மாபெருந் தெய்வ
மிதுநீர் முன்செய் வினையின் பயனற்
கடு காசில் பூம்பொழிற் கலிங்க நன்னாட்டுத்

அ. கற்புக்கடன் பூணடி - கற்பைக கடனுக மேற்கொண்டு; "கற்புக் கடம் பூண்ட வித்தெய்வ மல்லது, பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்" (சிலப். கடி: கசா - சு) எனவும், "கற்புக் கடம்பூண்டு காதலன் பின்போந்த, பொற்றொடி நங்கைக்குத் தோழிகான் கண்டீர்" (ஷெ உகூ:'தற் பயந்தாள்') எனவும் கண்ணகியை முறையே கவுந்தியடிகளும் அடித்தோழி யும் சிறப்பித்துப் பாராட்டியிருத்தல் காண்க; கண்ணகி கற்பை, மறக்கற் பென்றும், நீதியகற்பென்றுங் கூறுவர். நும் கடன் முடித்தது -உம்முடைய கடனை நிறைவேற்றியது; என்றது, இங்கே மதுரையை அழற்படுத்திச் சிதைத்துப் பகைஞன்காளிற் கோவலனைச் சென்று கூடியதையுணர்த் திற்று.

எ - அ. இவ்வடிகளின்கருத்து இன்னதாதலை, "காதல நிறப்பிற் கனை யெரி பொத்தி, பூதலைக் குருகி னுயிர்த்தகத் தடங்கா, தின்னுயி ரீவ ரீயா ராயி, னன்னீர்ப் பொய்கையி னளியெரி புகுவர், நளியெரி புகாஅ ராயி னன்பரோ, டடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம் படுவர், பத்தினிப் பெண் டிர்.....மாபெரும் பத்தினி" (உ: சஉ - நிரு) என்று இந்நூலில் முன்பு வற்திருத்தலாலுணர்க.

க - கூ. அணியிழை எழுந்து புகுந்து வணங்கினின்று ஏத்தி அருளல் வேண்டுமென்று அழுது நிற்பவென்க.

கo. பத்தினிக்கடவுள் - கண்ணகி.

கக. 'எம்மிறைக்கு' என்பது முதலியன, பத்தினிக்கடவுளாகிய கண் ணகிவார்த்தை. இறை - கோவலன். இடுக்கண் - துன்பம்; ஆவது, கொலை.

கஉ. வெம்மையின் - கோபத்தால். மதுரை - மதுரையை. படுநாள் - படுத்துநாள்; விகாரம்.

கஙூ. மதுராபதியென்பது, மதுரையம்பதியின் அதிதேவதையின் பெயர்; "மதுரா பதியென்னு மாது" (சிலப். உஉ: "மாமகளும்"); "மாபெருங் கூடன் மதுரா பதியென்பேன்" ஷெ உகூ: உஉ.

கச. 'இதுநீர்' என்பதுமுதலியன, மதுராபதி தனக்குக் கூறியதைக் கொண்டுகூறும் பத்தினிக்கடவுள் வார்த்தை. வினை - தீவினை. பயன் - பிர யோசனம். இது பயன், ஆல், அசை.

கடு. காசு - குற்றம்.

(பி - ம்.) கூ. 'என்றெழுத்தணிற்ப', 'என்றழுதணிற்ப' கஙூ - சி. தெய்வத, மதுநீர்செய்தவினை'

தாய மன்னவர் வசுவுங் குமரனுஞ்
சிங்க புரமுஞ் செழுநீர்க் கபிலையு
மங்காள் இன்றே ருடற்செரு வுறுநாண்
மூவிரு காவத முன்னுந ரின்றி
உ0 யாவரும் வழங்கா விடத்திற் பொருள்வேட்டுப்
பல்கலன் கொண்டு பலநறி யாம
லெல்வளை யாளோ டரிபுர மெய்திப்
பண்டக் கலம்பகர் சங்கமன் றன்னைக்
கண்டனர் கூறத் தையனின் கணவன்
உடு பார்த்திபன் ரெழில்செயும் பரத னென்னுங்
தீத்தொழி லாளன் றெற்றெனப் பற்றி
யொற்ற னிவனென வுரைத்து மன்னற்குக்
குற்றமி லோனைக் கொலைபுரிந் திட்டன
ரங்கவன் மனைவி யழுதன ளரற்றி

கசு. ஞாதியராகிய வசுவும் குமரனும். கள. கபிலை - கபிலபுரம்.

கஎ - ஏ. சிங்கபுரம் வசுவுக்கும், கபிலை குமரனுக்கும் உரியநகரங்கள்.

கஅ. ஆள்இன்றேர், பெயர். நாள் - நாளில்.

கஉ. மூவிருகாவதம் - ஆறுகாதம். முன்னுநர் - முற்படுவோர்; அணுகுபவருமாம்.

உ0. வழங்கா - செல்லாத. வேட்டு - விரும்பி.

உக. கலன் - ஆபரணம்.

உஉ. எல்வளை - ஒளிபொருந்தியவளையுடையாள்; என்றது, நீலியை. அரிபுரம் - சிங்கபுரம்.

உங. பண்டக்கலம் - பொன்னுலாகிய அணிகலம்; பண்டம் - பொன்; பண்டமும் கலமுமாம்; ஈண்டுப் பண்டம் சரக்கு. பகர்சங்கமன்றன்னை - விற்கும் சங்கமனென்னும் வணிகனை.

உச. தையல், விளி.

உடு. பார்த்திபனென்றது, வசுவை. பரதனென்றது, கோவலனுடைய பழம்பிறப்பிலுள்ள பெயர்.

உசு. தெற்றென - விரைவாக.

உள. ஒற்றன் - வேய்த்தறிபவன். மன்னற்குரைத்து.

உஅ. குற்றமிலோனை - நிரபராதியை.

உகூ. மனைவி - நீலியென்பவள். அழுதரற்றி.

(பி - ம்.) கள. 'செழிநீர்க்கயிலையும்' உ0. 'இடத்துப்பொருள்' உஉ. 'எரிபுரமெய்தி' உங. 'படைக்கலம்பகர்' உச. 'கண்டவர்கூறத்தையலென்' உள. 'உரைத்துமன்னவனுற்'

கூ0 யேங்கிமெய் பெயர்ப்போ ளிறுவரை யேறி
யிட்ட சாபங் கட்டிய தாகு
மும்மை வினைவந் துருத்தலொழி யாதெனு
மெய்ம்மைக் கிளவி விளம்பிய பின்னுஞ்
சீற்றங் கொண்டு செழுநகர் சிதைத்தேன்
கூரு மேற்செய்தல் வினையின் விண்ணவர்ச் சென்றே
மவ்வினை யிறுதியி னடிசினப் பாவ
மெவ்வகை யானு மெய்துத லொழியா
தும்ப ரில்வழி யிம்பரிற் பல்பிறப்
பியாங்கணு மிருவினை யுய்த்துமைப் போல
சா0 நீங்கரும் பிறவிக் கடலிடை நீந்திப்
பிறந்து பிறந்து முழல்வோம் பின்னர்
மறந்து மழைமரு மகத னன்னாட்டுக்

கூ0. மெய்பெயர்ப்போள் - உயிர்விடுவோள். இறுவரை - பெரியமலை; "இறுவரை யிவர்வதோ ரிலங்கெயிற் றரிமெயன்" சீவக. கஅகூட.

கூக. கட்டியதாகும் - பற்றித்ததாகும்.

கூஉ. உம்மைவினை - பழவினை. உருத்தல் - தோன்றுதல்; "ஊழ்வினை யுருத்துவந் தூட்டு மெய்ப்பாடீம்" (சிலப்.பதி.நிலை); "ஒளிப்பினு மூழ்வினை யூட்டாது கழியாது" இறை. கூ. உ - உரை.

கூஙு. இளவி - சொல்.

கஙூ - கூஎ. மாபெருந்தெய்வம் விளம்பியபின்னுமென்க.

கூஏ - கூ . இச்சாபவரலாறு, "கடிபொழி லுடுத்த கலிங்கநன் னாட்டு, வடிவேற் படக்கை வசுவுங் குமரனும்,.....வழுவில் சாபம், பட்டனிர்" (சிலப். உரை : கஅ - எ0) என்று கண்ணகிககு மதுரைமாநகர்த்தெய் வங்கூறியதாக இளங்கோவடிகள் கூறியிருத்தலாலும் விளங்கவுணரப்படும்.

கூச. நகர் - மதுரை.

கூடு. விண்ணவர்ச்சென்றேம் - கணவனும் யானும் தேவராய்ச்சென் றேம்.

கூசு. அவ்வினை - மேற்செய்தல்லவினை. அடிசினப்பாவம் - மதுரையை யழித்த கோபத்தாலுண்டானபாவம்.

கூகூ - எ. பாவம் எய்துதலொழியாது.

கூஅ. உம்பர் இல்வழி - தேவருலகத்தில் கல்வினை நுகர்ச்சியில்லாத விடத்தில்.

கூஅ - கூ. பல்பிறப்பியாங்கணும் - எல்லாப்பிறவியின் கண்ணும். இரு வினையுய்த்து - இருவினைகளாற் செலுத்தப்பட்டு.

சூஉ. மகதனன்னாட்டுக்கு - மகதநாட்டுக்கு.

(பி - ம்.) கூ0. 'மெய்வைப்போள்' கூக. 'சாபங்கிட்டிய' கூச. 'கொண் டிருநகர்' கூசு - எ. 'பாவை வெம்பகை' 'உறழ்வோம் பின்' சூஉ. மழை வரும்மகதன்'

கொருபெருந் திலகமென் றுரவோ ருரைக்குங்
கரவரும் பெருமைக் கபிலையம் பதியி
சரு னளப்பரும் பாரமிதை யளவின்று நிறைத்துத்
துளக்கமில் புத்த ஞாயிறு தோன்றிப்
போதி மூலம் பொருந்திவந் தருளித்
தீதறு நால்வகை வாய்மையுந் தெரிந்து
பன்னிரு சார்பின் பகுதித் தோற்றமு
ருo மங்கிலே யெல்லா மழிவுறு வகையு
மிற்றென வியம்பிக் குற்றவீ டெய்தி

சரு. திலகம் - மேலாதல். கபிலை இராசதானியாதலின், இங்ஙனம் கூறப்பட்டது.

சச. கரவு - மறைத்தல். கபிலையம்பதி - கபிலகர்; இது, கபில ரென்று பெயருள்ள ஒருமுனிவர் தவஞ்செய்தற்கு முன்னம் இடமாயிருந்ததுபற்றி இப்பெயர் பெற்றதென்பர்; கபிலவஸ்துவெனவும் வழங்கும்.

சரு. பாரமிதை - உடம்பு நேரவும் உறுப்பு நேரவும் பொருள் நேரவும் தானமுதல் ஞானமீறாகவுள்ள பத்தும் பூரித்தல்; (மணி.உக:உசு) (க)தான பாரமிதை, (உ) சீலபாரமிதை, (ங) சாமாபாரமிதை, (ச) வீரியபாரமிதை, (ஞ) தியானபாரமிதை, (ட) ப்ரஜ்ஞாபாரமிதை, (ண) உபாயபாரமிதை, (அ) தயா பாரமிதை, (கூ) பலபாரமிதை, (கo) ஞானபாரமிதை யென்பன. இவை தசபாரமிதையெனவும் தசாபாரமெனவும் வழங்கும்; இதனை, "தானஞ்சீலம்பொறை தக்க தாய வீரிய, மூன மிஃறி யானமே யுணர்ச்சியோ டுபாயமு, மானமில் ருளினை வைத்தலே வலிம்மையு, ஞான மீரைம் பாரமிதை நாடுங்கா லிவைகளும்" (நீல. மொக்கல. அஅ); "இன்பஞ்சால் பெரும் பார மீரைந்து முடனிறைத்து, கன்ன நிலேபெற்ற காத ன்" (நீல. மொக்கல. அஅ. சமய), "தானமே முதலாகத் தசபார நிறைத்தருளி, யூனமொன் றில் லாமை யொழிவின்றி யியற்றினையே" (வீர. யாப்பு. கக - உதாரணம்) என வருவனவற்று ணர்க. அளவின்று - அளவில்லாமல்.

சசு. புத்தஞாயிறு - புத்தனாகிய ஞாயிறு.

சள. போதி - அரசமரம்; என்றது, மகாபோதியை.

சஅ. நால்வகைவாய்மை - தக்கமுதலியன.

சகூ. பன்னிருசார்பு - பேதைமைமுதலிய துவாதச நிதானங்கள்.

ருo. பன்னிருசார்பின் அழிவும்.

சகூ - ருo. "சார்பிற் றோற்றமுஞ் சார்பறுத் துய்தியும்" (உரு : ரு) என்று முன்பு வந்திருத்தல் காண்க.

ருக. இற்று - இத்தன்மைத்து; இதனைத் தோற்றத்தோடும் வகையோடும் தனித்தனியே கூட்டுக. குற்றவீடெய்தி - காமமுதலிய குற்றம் (பி - ம்.) சச. 'கபிலையம்' சரு. 'அளவின்றுநிறைத்து' சள. 'பொதிந்திவந்தருளி'

யெண்ணருஞ் சக்கர வாள மெங்கணு
மண்ண லறக்கதிர் விரிக்குங் காலைப்
பைந்தொடி தந்தை யுடனே பகவ
நடு னிந்திர விகார மேழுமேத் துதலிற்
றுன்பக் கதியிற் றோற்றர வின்றி
யன்புறு மனத்தோ டவனறங் கேட்டுத்
துறவி யுள்ளக் தோன்றித் தொடரும்
பிறவி நீத்த பெற்றிய மாகுவ
சுo மத்திர மாயினு மநேக கால

களினின்றும் விடுதல்பெற்று;"குற்றவீ டாக மாதிக் குணங்களைக் குறைத்த லாகும்" சிவ - சித்தி. பரபக்கம், சௌத்திராந்திகன்மதம், சு.

நிசு. அண்ணல் - தலைமை. முன்பு புத்தனை ஞாயிறாக உருவகித்த தற்கேற்ப ஈண்டு அவனுபதேசிக்கப்படும் அறங்களைக் கதிராக உருவகஞ் செய்தார்.

சஉ - நிசு. மகதகாட்டிற் கபிலையம்பதியில் நிறைத்துத்தோன்றி வந் தருளித் தெரிக்கு இயம்பி எய்தி விரிக்குங் காலையென்க.

நிச. பைந்தொடி, முன்னிலைப்பெயர்.

நிடு. இந்திரவிகாரம் ஏழும் - இந்திரனால் நிருமிக்கப்பட்ட அரங்கு கள் ஏழனையும் ; இவை காவிரிப்பூம்பட்டினத்துள்ளவைகள் ; ஆகாயசாரி களாகியசாரணர்இருந்து பௌத்தாகமத்தின் பொருளை யாவர்க்கும் விளங்க உணர்த்துவதற்கு இடமாக இருப்பவை ; இதனை, "பணையைத் தோய்ந்த பாசிலைப் போதி, யணிதிகழ் நீழ லறவோன் றிருமொழி, யந்தர சாரிக ளறைந்தனர் சாற்று, மிந்திர விகார மேழுடன் போகி" (சீலப். கo : கக - சு) என்பதனாலுணர்க. ஏத்திதலின் - ஏத்திய புண்ணியத்தால் ; இதனால், கோவலனும் கண்ணகியும் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்தபொழுது இவற்றை ஏத்தி வழிபட்டார்களென்பது பெறப்பட்டது.

நிசு. துன்பக்கதி - துன்பத்தைச்செய்யும் இழிந்தபிறப்பு. தோற்ற ரவு- தோன்றுதல். 'இன்றி' என்றதனால், நற்கதியிற்பிறத்தல் கூறப்பட்டது.

நிள. அவனறம் - அவன்செய்யும் திருமோபதேசமொழிகளை.

நிஙு - எ. காலையிற் கேட்டென்க.

நிஅ. துறவி -துறத்தல்; உள்ளத்தே துறவி தோன்றியென்க; "மாதவி துறவிக்கு" (உ - கo) என்று இந்நூலில் மூன்பு வந்திருத்தல்காண்க; திருக் சிற்றம்பலக்கோவையாரில், "அளவியை" என்னும் கo - ஆம் செய்யுளின் விசேட வுரையில், 'துறவு துறவியென நின்றாற்போல அளவு அளவியென நின்றது' என்று பேராசிரியர் எழுதியிருக்கின்றனர்.

நிக. பெற்றி - நிருவாணம்.

நிடு - க. ஏத்துதலின், இன்றிக் கேட்டுத் தோன்றி நீத்த பெற்றியமா குவமென்க.

(பி - ம்.) நிஙு. 'விரிக்கும்போது' நிசு. 'பைந்தொடித்தக்தை' நிடு. 'விகாரமேழுந்திதித்தலிற்' நிள. 'அன்பறுமனத்தோற்பற்றறம்'

மெத்திறத் தார்க்கு மிருத்தியுஞ் செய்குவ
றறைகமழ் கூந்த னங்கை நீயு
மூறைமையி னிந்த மூதூ ரகத்தே
யவ்வவர் சமயத் தறிபொருள் கேட்டு
சுரு மெய்வகை யின்மை நினக்கே விளங்கிய
பின்னர்ப் பெரியோன் பிடகமெறி கடவா
யின்னதிவ் வியல்பெனத் தாயெடுத் துரைத்தலு

சுக. இருத்தி - ஸ்தித்தி.

சுஉ. 'நறைகமழ்கூந்தல்' என்பதுமுதலியவற்றுல் மணிமேகலைக்குப் பின்கிழ்வன கூறுவாள்.

சுங. இத்தமூதூரென்றது, வஞ்சிநகரத்தை.

சுரு. மெய்வகையின்மை - உண்மையில்லாமை.

சுசு. பெரியோன் பிடகமெறி - புத்தனருளிச்செய்த ஆகமங்களின் வழியை. புத்த தன்ம சங்கமென்னு மூன்றுமணிகளும் யாதோரிடையூறுமின்றி யிருத்தற்கிடமாய்க் கூடைபோலுதலின், பௌத்தாகமங்கள் பிடகமெனப் பட்டனவென்பர்; பிடகம் - கூடை; பிடகம், வினயபிடகம் ஸுத்திரபிடகம் அபிதர்மபிடகமென மூன்றுவகைப்படும்; இவற்றைத் திரிபிடகமென்றும், பிடகத்திரயமென்றும் வழங்குவர்; இவற்றுள், முதலாவது **வினய பிடகம்,** விபங்கம் கண்டகம் பரிவாரபாடமென மூன்றுவகைப் படும். இவற்றுள், விபங்கம் பாராஜிகாதி பிரதமபாகமென்றும் (இது சங்கத்திலிருந்து விலக்குதற்குரிய குற்றங்களைக் கூறுவது), பிராயச்சித்தீயாதி துவிதீய பாகமென்றும் (இது பிராயச்சித்தத்தால் நிவிர்த்தித்தற்குரிய குற்றங்களைக் கூறுவது) இரண்டு பகுதி யுடைத்து; கண்டகம், மஹாவர்க்கம் சூஷல்லவர்க்கமென இரண்டுபகுதி யுடைத்து. இரண்டாவது ஸுத்திரபிடகம், தீர்க்க நிகாயம், மத்தியமநிகாயம், ஸம்யுக்தநிகாயம், அங்கோத்தரநிகாயம், சூஷுத்திரக நிகாயமென ஐந்து வகையினையுடைத்து [நிகாயம் - கூட்டம்]. இவற்றுள், சூஷுத்திரகநிகாயம் சூஷுத்திரபாடம், தருமபதம், உதானம், இத்திவுத்தகம், ஸுத்திரநிபாதம், விமானவஸ்து, பிரேதவஸ்து, ஸ்தேரகாதை, ஸ்தேரீகாதை (ஸ்தேரரென்றும், ஸ்தவிரரென்றும் உத்தம பிக்ஷுக்களுக்குப் பெயர்), ஜாதகம், நிர்த்தேசம், பிரதிஸம்பிதாமார்க்கம், அபதானம், புத்தவம்சம், சரியாபிடகமெனப் பதினைந்து பகுதியுடைத்து. மூன்றுவது **அபிதர்மபிடகம்** தருமசங்கினி, விபங்கம், கதாவஸ்துப்பிரகரணம், புத்கலப் பிரஜ்ஞப்தி, தாதுகதை, யமகம், பிரஸ்தானப்பிரகரணமென ஏழுவகையினையுடைத்து; "ஆத்த னேயெனத் தெளிக்தவ ணமர்க்திருந் தவர்க்குச்,சூத்தி ரம்மிது வினயமு மிதுவிது பிறிதாஞ்,சாத்தி ரம்மிவை மூன்றென வன்றவத் தோன்றல், பாத்து ரைக்குந்தன் பதப்பொருள் பலவகைப் படவே" நீல. புத்த. கடு.

சுஎ. தாய் - கண்ணகியாகிய பத்தினிக்கடவுள்.

(பி - ம்.) சுக. **'இத்திறத்தார்க்கு'** சுடு - சு. **'விளங்கிப் பின்னர்ப் பெரியான்'**

மீனையள் வினையோ னென்றுனைக் கியாவரும்
வினைபொரு ளுரையார் வேற்றுருக் கொள்கென
மையறு சிறப்பிற் றெய்வதந் தந்த
மந்திர மோதியோர் மாதவன் வடிவாய்த்
தேவ குலமுந் தெற்றியும் பள்ளியும்
பூமலர்ப் பொழிலும் பொய்கையு மிடைந்து
நற்றவ முனிவருங் கற்றடங் கினரு
எறி தன்னெறி காணிய தொன்னூற் புலவரு
மெங்கணும் விளங்கிய வெயிற்புற விருக்கையிற்
செங்குட் டிவனெனுஞ் செங்கோல் வேந்தன்
பூத்த வஞ்சி பூவா வஞ்சியிற்
போர்த்தொழிற் முனை குஞ்சியிற் புனைய

இனி, மணிமேகலை வேற்றுருக்கொண்டு வஞ்சி நகரத்துள்ளே செல்லுதல் கூறப்படும்.

கூஅ - கூ. மணி. கo: எக-அo.

எo. தெய்வதம் - மணிமேகலாதெய்வம்.

எக. மந்திரம் - வேற்றுருவெய்துவிக்கு மந்திரம்.

எஉ. குலம் - கோயில்; "தேவகுலநிழல்" (ஆசார. கூ-.) தெற்றி-வேதிகை; திண்ணையுமாம். பள்ளி - சாலை; "ஒதுக்கின் றிணிமணற் புதுப்பூம் பள்ளி" புறநா. கூo ம.

எங. மிடைந்து - நெருங்கி. எடு. காணிய - கண்ட.

எஉ - கு. தேவகுல முதலியன மிடைந்து முனிவர் முதலியோர் எங்கணும் விளங்கிய இருக்கையென்க.

எள. செங்குட்டுவன்-சேரன்; இவன் இளங்கோவடிகளின் தமையன்; கண்ணகியைப் பிரதிட்டிப்பித்தோன்.

எஅ. பூத்தவஞ்சி-வஞ்சிமலர்; பகைவர் நாட்டைக் கொள்ளநினைந்து போர்செய்தற்கு அவர்மேற்செல்வோர் அதற்கு அறிகுறியாக அணிந்துகொள்வது; இது முதலுக்கேற்ற அடையடுத்துநின்றது. பூவாவஞ்சி - கருவூர்; வெளிப்படை; இங்ஙகரை வாடாவஞ்சி யெம்முங்கூறவர்; "பூவா வஞ்சியிற் பூத்தவஞ்சி, வாய்வா ணெடுந்தகை மணிமுடிக் கணிந்து" (உசு: நிo - நிக) எனச் சிலப்பதிகாரத்தும் வருதல் காண்க.

எசு - அ. இருக்கையினையுடைய பூவா வஞ்சியென்க.

எக. தானை - சேனை. குஞ்சி - குடுமி.

எஅ - க. பூவாவஞ்சியிற் பூத்தவஞ்சியைத் தானை குஞ்சியிற் புனைய வென்க.

(பி - மீ.) கூஅ. 'என்றுநீயுணர' கூக. 'வேண்டுருக் கொள்கென' எஉ. 'தெய்வகுலனும்' எஅ. ,பூவாவஞ்சியிற் பூத்தவஞ்சி' எக - அo. 'புனைந்து நிலைகாடெல்லை'

அ0 நிலகா டெல்லிதன் மலகா டென்னக்
கைம்மலைக் களிற்றினந் தம்முண் மயங்கத்
தேரு மாவுஞ் செறிகழன் மறவருங்
கார்மயங்கு கடலிற் கலிகொளக் கடைஇக்
கங்கையம் பேர்யாற் றடைகரைத் தங்கி
அரு வங்க நாவியி னதன்வடக் கிழித்து
கனக விசயர் முதற்பல வேந்த
ரனைவரை வென்றவ ரம்பொன் முடிமிசைச்
சிமைய மோங்கிய விமைய மால்வரைத்
தெய்வக் கல்லுந் தன்றிரு முடிமிசைச்
கூ0 செய்பொன் வாகையுஞ் சேர்த்திய சேரன்

அக. கையையுடைய மலைபோலுங் களிற்றினம். மயங்க - கலக்க.

அ0 - அக. மலைநாடென்றசொலலும்வண்ணம் களிற்றினங்கள்மயங்க வென்க ; செல்லு நெறிக்கணுள்ள நாடுகள், யானைகளின் மிகுதியால் மலை நாடென்று சொல்லப்பட்டன.

அஈ. கலிகொள - மூழங்க. கடைஇ - செலுத்தி.

அரு. நாவி - மரக்கலவிசேடம் ; இம்மொழி மலைநாட்டில் வழங்குகின் றது. வங்கநாவி, திருபெயரொட்டுப் பண்புத்தொகை. இழித்து - இறங்கி.

அசு. கனகவிசயர் - கனகனும் விசயனும் ; இவர் ஆரியவரசர். பலவேந் தர் - உத்தரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்தரன், சிவேதன் முதலியோர் ; இதனை, சிலப்பதிகாரம், உசு - ஆம் காதை, கஅஉ - ஆம் அடி முதலியவற்றிற்காண்க.

அள. அனைவரைவென்று - எல்லோரையும் வென்று ; உம்மை விகார வகையால் தொக்கது. அவரென்றது, கனகவிசயரை.

அஅ. சிமையம் - உச்சி.

அக. தெய்வக்கல் - பத்தினிக்கடவுளாகிய கண்ணகிவடிவம் அமைத் தற்குரிய கல்.

கூ0. வாகை - வாகைமலர் ; பகைவரை வென்றோர் வென்றதற்கு அறி குறியாக அணிந்துகொள்ளுவது ; அரசர் அம்மலரைப் பொன்னாற்செய்து அணிந்துகொள்ளுதல் இயல்பாதலின், 'செய்பொன்வாகை' என்றார் ; "பொலந்தோட்டுப் பைந்தும்பை" (உஉ) எனவும், "பொலந்தும்பை" (கள) எனவும் புறநானூற்றிற் கூறியிருத்தல் காண்க.

அள - கூ0. அவர் முடிமிசைக் கல்லும் தன் முடிமிசை வாகையுஞ் சேர்த்திய சேரனென இயைக்க.

எக - கூ0. புணைய மயங்கக் கலிகொளக் கடைஇத் தங்கி இழித்து வென்று சேர்த்திய சேரனென்க.

(பி-ம்.) அச. 'கங்கைப் பேரியாற்றடை' அரு. 'வங்கநாவாயிதன் வட இழக்கிழித்து' அசு. 'முதற்சின வேந்தர்' கூ0. 'செம்பொன்'

விற்றிறல் வெய்யோன் றன்புகழ் விளங்கப்
பொற்கொடிப் பெயர்ப்படூஉம் பொன்னகர்ப் பொலிந்தன
டிருந்துகல் லேது முதிர்ந்துள தாதலிற்
பொருந்துகால் வாய்மையும் புலப்படுத் தற்கென்.

உசு.—வஞ்சிமாநகர் புக்ககாதைமுற்றிற்று.

சேரன் செங்குட்டுவன் வடநாடு சென்றுஆரியவரசரை வென்று கற் கொண்டுமீண்ட வரலாற்றை, சிலப்பதிகாரம், கால்கோட்காதை முதலிய வற்றுல் விளங்கவுணர்க.

கக. விற்றிறல்வெய்யோன் - வில்வலியை விரும்பினேன்; "வெம் முனை வெற்றி விறலவெய்யோன்" பு - வே. காஞ்சி. அ.

எஎ - கக. தேவந்தன் சேரன் வெய்யோன்; அவன்தன்புகழென்க.

கூஉ. பொற்கொடி - அழகியகொடி; என்றது வஞ்சிக்கொடியை. நகர் - கருஆர்; "பூங்கொடிப் பெயர்ப்படூஉக், திருந்திய கன்னகர்" (உஅ: கoக - உ) என்று பின் வருதல் காண்க.

கூக - உ. விளங்கப் பொலிந்தனள்.

கூங. நல்லேது - நல்வினையாகிய காரணம்.

கூஉ - ங. ஆதலிற் பொலிந்தனள்.

கூச. நால்வாய்மை - நான்குவகைப்பட்ட சத்தியம்; அவை துக்க முதலியன; அவற்றை யுணர்ந்திய சதுஷ்டயமென்பர்.

கூஉ - ச. புலப்படுத்தற்குப் பொலிந்தனளென்க.

க - கூச. அணியிழை, எழுந்து புகுந்து நின்று ஏத்தி 'அருளல் வேண்டும்' என்று அழுதுநிற்ப, பத்தினிக்கடவுள் உரைப்பாள்; அங்ஙனமுரைப்பவளாகிய தாய், 'இன்னதிவ்வியலபு' என எடுத்துரைத்தலும், மணிமேகலை ஓதி வடிவாய்ப் பொன்னகர்ப் பொலிந்தனளென வினை முடிவு செய்க.

(பி - ம்.) கூஉ. 'கொடிபெயர்ப்' ஙகூ. 'திருந்தகல்லேது' கூச. 'நல் வாய்மை'

இருபத்தேழாவது

சமயக்கணக்கர் தந்திறங்கேட்டகாதை.

[இருபத்தேழாவது வஞ்சிமாநகர்ப்புறத்துச் சமயக்கணக்கர் தந்திறங்கேட்டபாட்டு.]

நவையறு நன்பொரு ளுரைமி னெனவெனச்
சமயக் கணக்கர் தந்திறஞ் சார்ந்து
வைதிக மார்க்கத் தளவை வாதியை
யெய்தின ளெய்திநின் கடைப்பிடி யியம்பென
நு வேத வியாதனுங் கிருத கோடியு
மேதமில் சைமினி யெனுமிவ் வாசிரியர்
பத்து மெட்டு மாறும் பண்புறத்
தத்தம் வகையாற் ரும்பகர்ந் திட்டனர்
காண்டல் கருத லுவம மாகம
கo மாண்டைய வருத்தா பத்தி யோடியல்

க. நவை - குற்றம். பொருள் - தத்துவம்.

உ. சமயக்கணக்கர் - சமயவாதிகள். திறம் - தொகுதி; இடமுமாம்.

க - உ. மணி. பதி: அள - அ. உரைமினெனவெனச்சார்ந்து.

ங. அளவைவாதி - பிரமாணவாதி.

ச. கடைப்பிடி - சித்தாந்தம். இயம்பென - சொல்லென்று மணிமே கலை விளுவ.

ஙு - ச. அளவைவாதியை எய்தி இயம்பென.

நு. 'வேதவியாதனும்' என்பதுமுதலியன அளவைவாதியின் வார்த்தை.

சு. ஏதம் - குற்றம்.

நு - அ. வேதவியாதன் பத்தளவையும் கிருதகோடி எட்டளவையும், சைமினி ஆறளவையும் பகர்ந்திட்டனரென்க.

கூ. 'காண்டல்' என்பது முதலியவற்றுல் பத்தளவைகளின் பெயரும், அவற்றினிலக்கணமுங் கூறப்படும். காண்டல் - பிரத்தியக்கம். கருதல் - அனுமானம் ; இது கருதுதலெனவும் வழங்கும்.

கo. இயல்பு - ஸ்வபாவலிங்கம்.

(பி - ம்.) ங. 'அளவையாதியை' சு. 'இவ்வாசியர்' அ. 'பகிர்ந்திட்டனர்' கூ. 'காண்டல்கருத்தே' கo. 'ஆண்டவருத்தாபத்தியோடியைபு'

பைதிக மபாவ மீட்சி யொழிவறி
வெய்தியுண் டாகெறி யென்றிவை தம்மாற்
பொருளி னுண்மை புலங்கொளல் வேண்டு
மருளில் காட்சி யைவகை யாகுங்
கரு கண்ணுல் வண்ணமுஞ் செவியா லோசையு
கண்ணிய மூக்கா னுற்றமு நாவாற்
சுவையு மெய்யா லூறுமெனச் சொன்ன
விவையிவை கண்டுகேட் டிபிர்த்துண் டுற்றுத்
துக்கமுஞ் சுகமு மெனத்துயக் கறவறிந்
உ0 துயிரும் வாயிலு மனமுமூ றின்றிப்
பயிலொளி யொடுபொரு ளிடம்பழு தின்றிச்
சுட்ட றிரிதல் கவர்கோட றேன்ருது
கிட்டிய தேச நாம சாதி
குணக்கிரி யையி னறிவ தாகுங்
உரு கருத்தள வாவது

கக. ஐதிகம் - ஐதிம்யம். அபாவம் - இன்மை. மீட்சியொழிவறிவு - மீட்சியினுல் ஒழிந்த பொருளே யறியுமளவை; என்றது பாரிசேடத்தை.

கஉ. உண்டாகெறி - சம்பவம். இவை தம்மால் - காண்டல் முதலிய இத்தப்பத்துப் பிரமாணங்களாலே.

கங. புலங்கொளல் - அறிதல்.

கச. 'மருளில்' என்பது முதலாகக் காட்சியளவையினிலக்கணம் கூறப் படும். மருள் - மயக்கம். காட்சி - பிரத்தியக்கப் பிரமாணம்.

கஞ. துயக்கு - தடை.

உ0. வாயில் - இந்திரியம். ஊறு - இடையூறு.

உக. ஒளி - சோமசூரியாக்கினிகள்.

உஉ. சுட்டல் - பொருளுண்மை மாத்திரைகாண்டல். திரிதல் - ஒன்றை மற்றொன்றுகக்கருதல் ; இது விபரீதமெனப்படும். கவர்கோடல் - சந்தேகம் : "கண்ட பொருளே யிரட்டிறவே கருத லேயந் திரியவே,கொண்ட றிரிவாம்" சிவ - சித்தி. சுபக்கம், அளவை. கூ.

உரு. 'கருத்தளவு' என்பதுமுதல் அனுமானப் பிரமாணம் கூறப்படும் கருத்தளவு - அனுமானப்பிரமாணம்.

(பி - ம்.) கக. 'மீட்சிமொழி' கஉ - கூ. 'உண்டானெறியென்றிவை தம்மாற்போபொருளினுண்மையுளங்' கரு - சு. 'ஓசையு, மூக்காலுற்றமு நாக்காற்சுவையும்' கஅ - கூ. 'உண்டியிர்த்துற்றுத், துக்க சுகமெனத் துயத் தறவறிந்து' உ0 - உக. 'மனமுமூன்றிப், பயிலொழியொடும்பொருள்'

குறிக்கொ ளனுமா னத்தனு மேயத்
தகைமை யுணருந் தன்மைய தாகு
முவகை யுற்றது பொதுவெச்ச முதலாம்
பொதுவெனப் படுவது சாதன சாத்திய
கூ0 மிவையந் நுவய மின்ரு யிருந்துங்
கடந்திகழ் யானைக் கானவொலி கேட்டோ
னுடங்கெழில் யானையங் குண்டென வுணர்த
லெச்ச மென்பது வெள்ளவே துவினு
னிச்சயித் தத்தலே மழைநிகழ் வுரைத்தன்
கூடு முதலென மொழிவது கருக்கொண் முகில்கண்
டிதுமழை பெய்யு மென வியம்பிடித

உசு. அனுமானத்து - அனுமானத்தால் ; 'அனுமானமாவது:—சாத்தியத்தையொழியச் சம்பவியாததாகிய சாதனத்தாற் சாத்தியத்தைப் பற்றிப் பிறக்கும் ஞானமாகும்' (நீல. தரும. கூஉ - சமய.) அனுமேயம் - அனுமித்தணரப்படுவது.

உஅ. அது - அவ்வனுமானவளவை ; அது பொதுவெனவும், எச்ச மெனவும், முதலெனவும் மூன்று வகைப்படும்.

உகூ. சாதனம் - ஏது. சாத்தியம் - துணிபொருள்.

கூ0. இவை - இவற்றிக்கு. அந்நுவயம் - சேர்க்கை; அஃதாவது நிய தமான உடனிகழ்ச்சி.

கூக. கடம் - மதம். காணம் - காடு. கூஉ. உடங்கு - உடனே.

உகூ - கூஉ. பொதுவெனப்படுவது உணர்தலென்க. பொதுவைச் சாமானியானுமானமென்பர்.

கூஙூ - சு. வெள்ள ஏதுவினுல் -வெள்ளமாகிய சாதனத்தால். அத்தலே- அவ்விடம். எச்சமென்பது வெள்ளவேதுவினுல் அத்தலே மழைநிகழ்வு நிச்சயித்தலுரைத்தல். இதனைச் சேஷானுமானமெனவும் காரியானுமானமெனவுங் கூறுவர்.

கூடு. கரு - சூல். முகில் - மேகம். கூசு. இது - இம்மேகம்.

கூடு - சு. முதலெனமொழிவது சூற்கொண்ட மேகத்தைக்கண்டு இது மழைபெய்யுமென்று நிச்சயித்தல். இதனைக் காரணானுமானமெனவும், பூர்வானுமானமெனவுங் கூறுவர். இது, வரற்பாலதை முன்னமே அனுமிப்பது.

கூங - சு. இவ்வடிகளிற் கூறப்பட்டுள்ள அனுமானங்களை, "இடித்து மின்னி யிருண்டு மேக மெழுந்த போதிது பெய்யுமென், றடுத்த தம்மகில் சந்த முந்தி யலைத்து வார்புன லாறுகொண், டெடுத்து வந்திட மால்வ ரைக்க ணிருந்து கொண்டல் சொரிந்ததென்று, முடித்த தம்மிவை காட்சி யன்றனு மானமென்று மொழிந்திடே" (சிவ- சித்தி. பரபக்கம், உலோகாய தம்மதமறுதலே, உ) என்பதனுலுமுணர்க.

(பி - ம்.) உசு. 'குறிகொள்' கூ0. 'இவைதமொடந்நுவய'

லென்னு மேதுவி னொன்றுமுக் காலக்
தன்னி லொன்றிற் சார்ந்துள தாகி
மாண்ட வுயிர்முதன் மாயின் முகிற்
சஅ காண்டற் பொருளாற் கண்டில துணர்த
லுவம மாவ தொப்புமை யளவை
கவய மாவாப் போலுமெனக் கருத
லாகம வளவை யறிவ னூலாற்
போக புவன முண்டெனப் புலங்கொள
சகு லருத்தா பத்தி யாய்க்குடி கங்கை
யிருக்கு மென்றூற் கரையிலென் றெண்ண
லியல்பி யானேமே லிருந்தோன் மேட்டிக்
கயலொன் றீயா ததுவே கொடுத்த

கூஅ. தன், பன்மையொருமைமயக்கம்.

கூக. உயிர்முதல் - உயிரும் இந்திரியமும் மனமும்; 'உயிரும் வாயிலு மனமூழு மின்றி (உள: உ0) என்றார் முன்னும்.

உவமவளவை:—

சஉ. கவயமா - ஒருவகைமிருகம். ஆப்போலும் -பசுவையொக்கும்.

சக - உ. "கண்ணன் கருமுகில்போல் வண்ணனெனக் கேட்டவனைக், கண்ணு முணர் வொப்பெனவே காண்" என்றும் வரும்.

ஆகமவளவை:—

சகூ. அறிவனூல் - ஆப்தன்வாக்கியமாகியநூல்.

சச. போகபுவனம் - சுவர்க்க நரகங்கள். புலங்கொளல் - அறிதல்.

சகூ - ச. ஆகமவளவையாவது புலங்கொளலென்க. இதனைச்சாத்த மென்றும், உரையளவையென்றுங் கூறுவர்.

அருத்தாபத்தியளவை:—

சசு. ஆய்க்குடி - இடைச்சேரி.

சசு - சு. இது பொருளளவையென்றுங் கூறப்படும்; "அடுத்துல கோதும் பொருளருத் தாபத்தி யாமதுதா, னெடுத்த மொழியினஞ் செப்புவ தாகுமிவ் வூரிலுளர், படைத்தவ ரென்னிற் படையா தவருமுண் டென்றுமி வன், கொடுப்பவ னென்னிற் கொடாதாரு முண்டென்றுங் கொள்வதுவே" என்றும் வரும்.

இயல்பளவை:—

சள. இருந்தோன் ஒன்றுதாவெனிலென வருவித்துக்கொள்க. தோட்டி- அங்குசம்.

சள - அ. "மாமே லிருந்தொரு கோறு வெனிற்சுள்ளிக் கோதாலுஞ், சோமே லிருந்தொரு கோறு வெனிற்றர் வேதணிந்து, பூமேவு கண்ணழுத்
(பி - ம்.) சள. 'இயைபிலியானே'.

லகிக மென்ப துலகுரை யிம்மரத்
நூ0 தெய்திய தோர்பே யுண்டெனத் தெளிந
லபாவ மென்ப தின்மையோர் பொருளைத்
தவாதல் விடத்துத் தானிலை யென்றன்
மீட்சி யென்ப திராமன்வெல் லுனென
மாட்சியி லிராவணன் றோற்றமை மதித்த
நூறு லுள்ளதெறி யென்பது காராசத் திரிவிற்
கொள்ளத் தகுவது காந்தமெனக் கூற

தக்கோல் கொடுத்தலும் பூதலத்தே, காமே வியல்பென்று கூறுவர் நல்ல சொன் னுவலரே" என்றும்வரும்; சோ - மதில்.

ஐதிகவளவை:—

சகூ. உலகுரை - உலோகவாதம் ; அஃதாவது, கர்ணபரம்பரையால் வரும்வாக்கியம்.

சகூ - நூ0. "கொன்பயில் வேலைக் கடல்புடை சூழுங் குவலயத்தோ, ரன்புட னுலி லலகையுண் டென்பர்க ளென்பதுவு,மின்பயில் புற்றில் விடநாக முண்டென்ப ரென்பதுவு, மென்பர்க ணுவல ரென்பது மைதிக மென்பர் களே" என்றும் வரும்.

அபாவவளவை :—

நூக - உ. அபாவமாவது - இன்மையாகும் ; அஃது ஒருபொருளை இல்லையென்பது.

மீட்சியளவை:—

நூச. மாட்சி - பெருமை.

நூஉ - சு. இஃது ஒழிபெனவும் பாரிசேடமெனவும் கூறப்படும்; "சீரா ரொழிபென்று செப்பப் படுவது தின்புலி மேற், போராடி நின்று பொருதர் நிருவர்தம் போர்க்களத்துப், பாரா நிராகவன் வென்று னெனிற்றன் பரிச ழிகது, நேரா மிராவணன் றோற்றசொல் லாகி நிகழ்வதுவே" என்றும் வரும். மூன்று பெயரிலே இருவரைக் கள்வரல்லரென்றல் நின்றவொருவனைக் கள்வ னென்றறிகையுமது.

சம்பவவளவை :—

நூநு. காராசத்திரிவின் - இருப்புச்சலாகையின் சலனத்தால்.

நூநு - சு. உள்ளதெறியெனினும், உண்டாதெறியெனினும், சம்பவ மெனினுமொக்கும் ; "தூயக்கற வுண்மை யெனநா வலர்க டெளிந்துரைப்ப, தியற்கைப் பொருளினை யிற்றென லாமிது தானுரைக்கின், வியக்குற்ற கால் சலிக் குந்தீச் சுடும்விய னீர்குளிரும், வயக்குற்ற மண்ணுவலி தென்றுபட் டாங்கு வழங்குவதே" என்றும்வரும்; ஆயிரத்தில் நூறுண்டென்பதும், நூற்றிலே தொண்ணூறுண்டென்பதுமது.

மேல் உவமைமுதலிய அளவைகளுக்குக் காட்டிப்போந்த "கண்ணன் கருமுகில்போல்" என்றற்றொடக்கத்துச் செய்யுட்கள், சிவஞானசித்தியார், சுபக்கம், அளவை இலக்கணத்திற்கு மறைஞானதேசிகர் எழுதியஉரையிற் காணப்பட்டன.

லெட்டெள பிரமா ணுபா சங்கள்
சுட்டுணர் வொடுதிரி யக்கோட லேயர்
தேராது தெளிதல் கண்டுண ராமை
சூ0 யெய்து மில்வழக் குணர்ந்ததை யுணர்த
னினைப்பென நிகழ்வசுட் டுணர்வெனப் படுவ
தெனைப்பொரு ளுண்மை மாத்திரை காண்ட
றிரியக் கோட லொன்றையொன் றென்றல்
விரிகதி ரிப்பியை வெள்ளியென் றுணர்த
சூடு லேய மென்ப தொன்றைநிச் சயியா
மையற் றறியோ மகளே வென்ற
றேராது தெளிதல் செண்டு வெளியி
லோராது தறியை மகனென வுணர்தல்
கண்டுண ராமை கடுமாப் புலியொன்
எ0 றண்டலே முதலிய கண்டுமறி யாமை
யில்வழக் கென்பது முயற்கோ டொப்பன
சொல்லின்மாத் திரத்தாற் கருத்திற் றேன்ற
லுணர்ந்ததை யுணர்த லுறுபனிக் குத்தீப்
புணர்ந்திடன் மருந்தெனப் புலங்கொள னினைத்த
எடு னினைப்பெனப் படுவது காரண நிகழாது
நினக்கிவர் தாயுந் தந்தையு மென்று
பிறர்சொலக் கருதலிப் பெற்றிய வளவைகள்

இதுகாறும் காட்சிமுதலிய அளவைகள் பத்தும் அவற்றினிலக்கணங்களும் முறையே கூறப்பட்டன.

இனி, சுட்டுணர்வு முதலிய பிரமாணுபாசங்களெட்டும் அவற்றினிலக்கணங்களும் முறையே கூறப்படும்.

பிரமாணுபாசங்கள் எட்டு :—

டுள. பிரமாணுபாசங்கள் - பிரமாணப்போலிகள்.

சுஉ. எனைப்பொருள் - எல்லாப்பொருள். சுசு. இப்பி - சிப்பி.

சுசு. மையல் - மயக்கம். தறி - கட்டை.

சுஎ. செண்டுவெளி - ஒருவகை முற்றம். சுஅ. ஓராது - உணராது.

சுசு. கடுமாவாகிய புலி. கடுமை - சினம். கண்டுணராமையை உபேக்ஷாத்மகஞானமென்பர்.

எ0. அண்டலே: ஐ, சாரியை. எக. கோடு - கொம்பு.

ஏச. மருந்து - பரிகாரம்.

ஏள. இப்பெற்றிய - இத்தன்மையை யுடையன ; முற்று.

(பி - ம்.) சுடு. 'நிச்சயியாது' சுசு. 'கடுமருபபுலியிலோர்ந்து'

பாங்குறு மூலோகா யதமே பௌத்தஞ்
சாங்கிய னையா யிகம்வை சேடிக
அ0 மீமாஞ் சகமாஞ் சமய வாசிரியர்
தாம்பிரு கற்பதி சினனே கபில
னக்க பாதன் கணைதன் சைமினி
மெய்ப்பிரத் தியமனு மானஞ் சாத்த
முவமான மருத்தா பத்தி யபாவ
அரு மிவையே யிப்போ தியன்றுள வளவைக
ளென்றவன் றன்னைவிட் டிறைவ னீசனென
நின்ற சைவ வாதிநேர் படுதலும்
பாசுநின் றெய்வ மெப்படித் தென்ன
விருசுட ரோடிய மானனேம் பூதமென்
கூ0 றெட்டு வகையு முயிரும்யாக் கையுமாய்க்

எஅ. பாங்கு - பகுதி. அக. சினன் - புத்தன்.

அஉ. அக்கபாதன் - அக்ஷபாத முனிவர்; இவர்க்குக் கௌதம முனிவ ரென்றும் பெயருண்டு. கணைதனென்பதற்கு கொய்யைப் புசிப்பவனென்று பொருள்; கணம் - கொய். இவர் இது காரணத்தாற் கணசனென்றும் பெயர் பெறுவர்.

அங. பிரத்தியம் - பிரத்தியக்கம். சாத்தம் - ஆகமம்.

எஎ - அரு. உலோகாயதமுதலிய அறுவகைசமயங்கட்கும் முறையே பிருகற்பதிமுதலிய அறுவரும் ஆசிரியரெனவும், மேற்கூறிய பத்தளவை களுள் அவர்களாற் கைக்கொள்ளப்பட்டு இப்பொழுது வழங்கும் அளவை கள் பிரத்தியக்கமுதல் அபாவமிறுதியாகிய ஆறுமேயெனவும் கொள்க. உலோகாயத முதலிய அறுவகைச்சமயங்களுள், உலோகாயதத்திற்குப் பிரத்தியக்கமொன்றும், பௌத்தத்திற்குப் பிரத்தியக்கத்தோடு அனுமான மும், சாங்கியத்திற்கு அவ்விரண்டனோடு ஆகமமும், நையாயிகத்திற்கு அம் மூன்றனோடு உவமானமும், வைசேடிகத்திற்கு அந்நான்கனோடு அருத்தாபத் தியும், மீமாஞ்சகத்திற்கு அவ்வைந்தனோடு அபாவமும் பிரமாணமாமெனக் கொள்க.

அசு. என்றவன் - அளவைவாதி.

சைவவாதம்:—

அகூ. இறைவன் - எப்பொருளினும்தங்குகின்றகடவுள்; இறை - தங்கு தல்.

அஅ. துதிக்கப்படும் நிலாதெய்வம் எத்தன்மையையுடையதென்று மணிமேகலை விளவ.

அகூ. இருசுடர் - சந்திரசூரியர். இயமானன் - உயிர்; யாகத்தலைவனு மாம்.

கட்டிநிற் போனுங் கலியுருவி னேனும்
படைத்து விளையாடும் பண்பி னேனுங்
துடைத்துத் துயர்தீர் தோற்றத் தோனுந்
தன்னில் வேறு தானென் றிலோனு
மன்னே னிறைவ னருளுமென் றுரைத்தனன்
பேருல கெல்லாம் பிரம வாதியோர்
தேவ னிட்ட முட்டை யென்றனன்
காதல் கொண்டு கடல்வண்ண புராண
மோதின னரணன் காப்பென் றுரைத்தனன்
கற்பங் கைசந் தங்கா லெண்கண்
டெற்றெ னிருத்தஞ் செவிசிக் கைமூக்
குற்ற வியாகர ணமுகம் பெற்றுச்

கூக. கலியுருவினேன் - கலிகளே உருவாகவுடையவன்; "ஐயா றதன் மிசை யெட்டித் தலியிட்ட, மையில் வான்கலி மெய்யுடன் பொருந்தி" என்றார்; திருச்சிற். க - பேர்.

கூங. துடைத்து - சங்கரித்து. துயர்தீர்தோற்றத்தோன் - உயிர்களது இளைப்பொழிக்கும் பெருமையையுடையவன்.

பிரமவாதம்:—

கூசு - எ. உலகெல்லாம் ஒரு தேவனிட்ட முட்டையென்று பிரமவாதி கூறினன்.

வைணவவாதம்:—

கூஅ. கடல்வண்ணன் - திருமால். புராணம் - பழமை.

கூக. ஓதினன் - வைணவவாதி.

வேதவாதம் :—

கoo. 'கற்பம்' என்பதுமுதல் வேதவாதி கூற்று. சந்தம் - சந்தோவிசிதி. எண் - சோதிடம்.

கoக. நிருத்தம் - நிருக்தம். சிக்கை - சிக்ஷை.

கoo - கoஉ. கற்பம் சந்தோவிசிதி சோதிடம் நிருத்தம் சிக்ஷை வியாகரணம் என்னுமிவ்வாறும்முறையே வேதத்திற்குக் கை கால் கண் காது மூக்கு முகம் என்னுமுறுப்புக்களாகவுள்ளன; இதனை, "முகம் வ்யாகரணந் தஸ்ய ஜ்யோதிஷந் நேத்ர முச்யதே, நிருக்தம் ச்ரோத்ர முத்திஷ்டஞ் சந்தஸாம் விசிதிஷ்பதே, சிக்ஷாக்ராணந்து வேதஸ்ய ஹஸ்தெளகல் பாந்ப்ரசக்ஷதே" என்னும் சுலோகத்தானுமறிந்து கொள்க; இது, பாணினீயவ்யாகரணத்தைச் சார்ந்ததும், பட்டோஜிதீக்ஷிதராற்செய்யப்பட்டதுமாகிய சப்தகௌஸ்துப மென்னும் வடநூலின் முதலிலுள்ளதாகிய பஸ்பசமென்னுமாஹ்நிகத்தில் உதகரிக்கப்பட்ட தென்பர். இது பற்றியே கற்ப முதலியவாறும் வேதாங்க மென்பப்படும். 'ஆறங்கமாவன:—உலகியற் சொல்லியொழித்து வைதிகச் சொல்லியாராயும் நிருத்தமும்; அவ்விரண்டையும் உடனராய்ந்த ஐந்திரத் தொடக்கத்தவியாகரணமும், போதாயனீயம் பாரத்வாசம் ஆபத்தம்பம் ஆத்திரேயமுதலிய கற்பங்களும், நாராயணீயம் வாராகமுதலிய கணிதங்க

உரை.—சமயக்கணக்கர்தந்திறங்கேட்டகாதை.கஉக

சார்பிற் றேன்ற வாரண வேதக்
காதி யந்த மில்லையது நெறியெனும்
கஅநி வேதிய னுரையின் விதியுங் கேட்டு
மெய்த்திறம் வழக்கென விளம்பு கின்ற
வெத்திறத் தினுமிசை யாதிவ ருரையென
வாசி வகநூ லறிந்த புராணனைப்
பேசுகின் னிறையார் நூற்பொருள் யாதென
ககஅ வெல்லையில் பொருள்களி லெங்குமெப் பொழுதும்
புல்லிக் கிடந்து புலப்படு கின்ற

ரும், எழுத்தாராய்ச்சியாகியபிரமமும், செய்யுளிலக்கணமாகிய சந்தமுமாம், (தொல். புறத். சூ. உ; கலி. கடவுள்) என்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

கஅக. சார்பிற்றேன்ற-ஓரிடத்திற் றேன்றுத ; ஸ்வயம்புவென்றபடி. திருவள்ளுவமாலையில் வேள்ளிவீதியார் (சஉ) பாட்டில் வேதம், "செய்யா மொழி" என்று கூறப்பட்டிருத்தல் காண்க; இக்கருத்தை, "காத்திக மல்லது சொல்லலி யாயின்மு னுள்பயந்த, சாத்திர மாவது வேதமன் றேவதுதான் சயம்பு, சூதிரி னீயது வல்லி யலாமையிற் சொல்லுகிலாய், போத்தந்தியோ வதன்மீமையென் றுன்பொங்கிப் பூதிகனே", "பூதிகன் றானது சொல்லலும் யானது வல்லவெல்லாஞ்,சாதிகண் டாயெனத் தான்றள ராதசாற்றுகென் றுட்,காதியென் றுணுமொ ரந்தமென் றுணுமுண் டேலதற்கு,நீதியி னுரை நீயினி யானது கோவ னென்றுன்" (நீல. வேத. உ - ச) எனவருவனவற்று ணுணர்க. வேதக்கு - வேதத்திற்கு.

கஅந. வேதியன் - வேதவாதி.

கஅசு. மெய்த்திறம் - நூல்வகைகள். மெய்யுணர்த்துவனவற்றைமெய் யென்றார்; "மெய்த்திறம் வழக்கு நன்பொருள் வீடு" (க : ஙக) என முன்பு வந்திருத்தல் காண்க. "யாமெய்யாக்கண்டவற்றுள்" (உ00) என்னும் திருக் குறளில், 'மெய்' என்பது இப்பொருளதாதலறிக. வழக்கு - உலகியல்.

கஅசு. எ. இவ்வடிகளாற் கூறப்பட்டுள்ளவை மணிமேகலையின் உட் கோள்.

ஆசீவகவாதம் :—

கஅஅ. ஆசீவகநூல் - சமணசமயத்தின் பாகுபாடு இரண்டனுள் ஒரு வகைக்குரியநூல் ; "அன்னதோர் வாய்மை யாசீ வகனம னார்களித் கூறும்" (சீவ. சிந்தி. பரபக்கம், ஆசீவகமதம், க.) புராணன் -முதியோன். ஆசீவகமதம், முற்காலத்துச் சமதண்டமென்று பெயருள்ள ஒருநிற் பரவியி ருந்த தென்று தெரிகின்றது (நீல.)

கஅகூ. இறை யார் - கடவுள்யாவன். நூற்பொருள் யாதென - உனது நூலிற் சொல்லப்படும் பொருள் எவ்வெவன்று மணிமேகலை கேட்ப.

கஅஅ - கூ. "ஆத்த நூலும் பொருளு நிகழ்ச்சியும், பாத்தன சொல் லிற் பயம்பெரி தாதலி,னேத்துரை யேயிங் குரையென் றுரைத்தனள்,சாத் திரம் யாவையுத் தன்னிக ரில்லாள்" நீல. ஆசீவக. கஉ.

(பி - ம்.) கஅசு- சு. 'வேதத், தாதியந்த மில்லை யதுவே நெறியெனும்'

வரம்பி லறிவ னிறைநூற் பொருள்களோ
துரந்தரு முயிரோ டொருநால் வகையணு
வவ்வணு வுற்றுங் கண்டு முணர்ந்திடப்
பெய்வகை கூடிப் பிரிவதுஞ் செய்யு
நிலநீர் தீக்காற் றெனநால் வகையின
மலைமர முடம்பெனத் திரள்வதுஞ் செய்யும்
வெவ்வே றுகி விரிவதுஞ் செய்யு
மவ்வகை யறிவ துயிரெனப் படுமே
வற்ப மாகி யுறுநிலந் தாழ்ந்து
சொற்படி சீதத் தொடுசுவை யுடைத்தா
யிழினென நிலஞ்சேர்ந் தாழ்வது நீர்தீத்
தெறுதலு மேற்சே ரியல்பு முடைத்தாங்

ககஉ. வரம்பிலறிவன் இறை - அகத்ஞானியாகிய மற்கலிதேவனே எமது கடவுள். நூற்பொருள்கள் ஐந்து - நவகதியென்னும் நூலிற் கூறப் பட்டுள்ள பொருள்கள் ஐந்தாகும்.

ககங. அப்பொருள்கள் உயிரும் நால்வகையணுக்களுமாம்.

ககஉ - ங. ஆசீவகமதத்தினர்க்குத்தெய்வம் மற்கலியென்பதும், நூல் நவகதியென்பதும், அதிற் கூறப்பட்ட பொருள்கள் ஐந்தென்பதும் ஆகியஇவற்றை, "என்றது மற்கலி தானே யிறையினி,யொன்பது வாங்கதிர் நூல்யா முடையள, மண்பெறு மண்பொரு ளைந்தியல் பாயவை, யின்ப நிகழ்ச்சியுங் காழ்ப்பா டெனச்சொல" (நீல.ஆசீவக. கஙு) என்பதனாலறிந்து கொள்க. "மற்கலி நூலின் வகையிது" (கசுரு) என்று இக்காதையி லேயே பின் வருதல் காண்க.

ககச. அவ்வணுவென்றது, உயிரை.

ககரு. கூடி - நிலவணுமுதலிய நால்வகையணுக்களோடுங் கூடி.

ககச - ரு. இவ்வடிகள் உயிரணுவின் இலக்கணங்கூறின.

ககசு. மேற்கூறிய நால்வகையணுக்களும் இவையென்றபடி.

ககள - அ. அந்நால்வகையணுக்களும் திரள்வதுஞ்செய்யும் விரிவ துஞ்செய்யும்.

ககசு - அ. இவ்வடிகளால் மேற்கூறிய நால்வகையணுக்களின் பொது விலக்கணங் கூறப்பட்டது.

கஉ0. வற்பம் - வன்மை. நிலம் வற்பமாகியுறும்.

கஉ0 - உஉ. தாழ்ந்து உடைத்தாய்ச்சேர்ந்து ஆழ்வது நீரென்க.

கஉங. தெறுதல் - சுடுதல்.

கஉஉ - ங. தீ, பெறுதலும் மேற்சேரியல்புமுடைத்து.

(பி - ம்.) ககங - ச. 'காலவகையினு, மூவணு'

காற்று விலங்கி யசைத்தல் கடனிவை
கஉடு வேற்றியல் பெய்தும் விபரீ தத்தா
லாதி யில்லாப் பரமா ணுக்க
ளுதற் றியாவதுஞ் சிதைவது செய்யா
புதிதாய்ப் பிறக்தொன் றொன்றிற் புகுதா
முதுகீ ரணுவில வணுவாய்த் திரியா
கஙo வொன்றிரண் டாகிப் பிளப்பதுஞ் செய்யா
வன்றியு மவல்போற் பரப்பதுஞ் செய்யா
வுலாவுந் தாழு முயர்வதுஞ் செய்யுங்
குலாமலை பிறவாக் கூடும் பலவும்
பின்னையும் பிரிந்ததந் தன்மைய வாகு
கஙஉ மன்னிய வயிரமாய்ச் செறிந்துவற் பமுமாம்
வேயாய்த் துளைபடும் பொருளா முளைக்குங்
தேயா மதிபோற் செழுநில வரைப்பா
நிறைந்தவிவ் வணுக்கள் பூதமாய் நிகழிற்
குறைந்து மொத்துங் கூடா வரிசையி

கஉசு. விலங்கி - குறுக்கிட்டு. இவை - இவ்வணுக்கள்.

ககஙூ - உசு. இவ்வடிகளாற் கூறப்பட்டுள்ள ஐந்துபொருள்களினியல்பைப் பின்வருஞ்செய்யுட்களாலுமறிக; "நிலநீ ரெரிகாற் றுயிரி னியல்பும், பலநீ ரவற்றி னிடபா லவைதாம்,புலமா கொலியொ டிருமுய முதற்காஞ், சலமா யதுதண் மைபைபே முதலாம்", "ரறித்த னிமுதலா யினதீ யினவாஞ், செறித்தல் லொலியோ டிவைகாற் றினவாம், மறித்தல் லறிதல் லவைதா மூயி ராஞ், குறித்த பொருளி னிகுணமா லிவையே." நீல. ஆசிரிய. கஎ, கஅ.

கஉசி. வேற்றியல்பு - வேறுதன்மை.

கஉள. யாவதும் - சிறிதும். சிதைவது - அழிதல்.

கஙக. அவல்போல்-அவலிடிப்போல். கஙரி. வற்பம் - வன்மை.

கஙசு. வேய் - மூங்கில். கஙள. தேயாமதி - முழுமதி.

கஙஙூ. குறைந்தும் ஒத்தும் கூடா- பிரி சொல்லப்படுமளவிற் குறைந்தும் அளவொத்துங் கூடுவனவல்ல.

கஙஙூ - சக. "ஒன்றினை யொருவி மூன்றங் குற்றிடா விரண்டு விட்டு, நின்றிடா திரண்டு கூடு நெறிநில காய்கு நீர்மூன், றின்றிரண் டழல்கா லொன்று விசைத்திடும் பூமி யிவ்வா, றெய்தினீர் நீகா லாதி யீண்டுவ தென்றியம்பும்" (சீவ - சித்தி. பரபக்கம், ஆசிரிய மதம், எ) எனவருதல்காண்க.

(பி - ம்.) கஉச. 'ஆற்றுவிங்கே யசைத்தல்கடிவை' கஉரி. 'வேற்றியலெய்தும்' கஉள. 'யாதுஞ்சிதைவது' கஉஅ. 'புத்தாப்பிறதொய்து' கஙக. 'பிறவாய்க்கூடுமலையும்' கஙசரி. தன்மையதாக,வன்னிய' கஙஙூ. 'வேயிரத் தினைப்படும்' கஙஎள. 'வரைப்பால்' கஙஙூ. 'கூடாவரியின்'

கசo ஞென்று மூக்கா னைரகா லாயுறும்
துன்றுமிக் கதஞற் பெயர்சொலப் படுமே
யிக்குணத் தடைந்தா லல்லது நிலஞுய்ச்
சிக்கென் பதுவு நீரா யிழிவதுந்
தீயாய்ச் சுடுவதுங் காற்றுய் வீசலு
கசரு மாய தொழிலை யடைந்திட மாட்டா
வோரஞுத் தெய்வக் கண்ணே ருணர்குவர்
தேரார் பூதத் திரட்சியு ளேனோர்
மாலைப் போதி லொருமயி ரறியார்
சாலத் திரண்மயிர் தோற்றுதல் சாலுங்
கருo கரும்பம் பிறப்புங் கருலைப் பிறப்பும்
பசும்பம் பிறப்பும் செம்பம் பிறப்பும்
பொன்ன் பிறப்பும் வெண்ண் பிறப்பு
மென்றிவ் வாறு பிறப்பிலு மேவிப்
பண்புறு வரிசையிற் பாற்பட்டுப் பிறந்தோர்
கருரு கழிவெண் பிறப்பிற் கலந்துவீ டீணைகுவ

கசஉ. சிக்கென்பதுவும் - வன்மையுற்றிருத்தலும்; 'வற்ப மாகி யுறு கிலம்' (கூ.o) என்று இக்காதையில் முன்பு வற்திருத்தல்காண்க.

கசசு. தெய்வக்கண்ணேர் - கேவலஞானிகள்.

கசஎ. தேரார் - அறியார். ஏனோர் - மற்றையோர்; என்றது, கேவல ஞானிகளல்லாதாரை.

கசசு - எ. ஓரணுவை ஏனோர் தேராரென்க. கசஅ. போது - காலம்.

கசகூ. சாலும் - மேற்கூறியதற்கு உவமையாகவமையும்.

கரிo. கரும்பிறப்பென்றது, நரகசன்மத்தை.

கருரு. கழிவெண்பிறப்பு - மிகவெள்ளியபிறப்பு.

கரிo - ருரு. இவ்வடிகளித் கூறிய கரும்பிறப்புமுதலியவைகள் முறையே ஒன்றற்கொன்று ஏற்றமுடையவை; "வெண்மைகன் பொன்மை செம்மை நீல்கழி வெண்மை பச்சை, யுண்மையில் வாறி னுள்ளுங் கழிவெண்மை யோங்கு வீட்டின், வண்மைய தாகச் சேரு மற்றிவை யுருவம் பற்றி, யுண்மையவ் வொட்டித் நீட்டுக் கலப்பினி னுணரு மென்றுன்" (சிவ - சித்தி. பரப க்கம், ஆசிவகன்மதம், அ.) ஈண்டுப்பிறப்புக்களை வகுத்துக் கூறியதுபோல,

(பி - ம்.) கசo. 'அரைக்காலாயும்' கசக. 'மிக்கவதனிற்' கசகூ. 'சிக்கென்பதுஉநீராயிழைவதும்' கசச. 'தீயாச்சுடுவதுங் காற்றுய் வீசுவதும்' கசரு - சு. 'மாட்டாதோரணு' கசஎ. 'கோலாபூதத்திரட்சியுளா னோர்' கசஅ. 'மயிருமமியார்' கரிச - ரு. 'பாற்படக் கழிந்த, கழிவேய்பிறப் பிற் கலந்து வீடணைவர்'

ராழியல் வேண்டா ரதுவுறற் பாலா
ரிதுசெம் போக்கி னியல்பிது தப்பு
மதுமண் டலமென் றறியல் வேண்டும்
பெறுதலு மிழத்தலு மிடையூ றுறுதலு
கசுஐ முழுமிடத் தெய்தலுந் துக்கசுக முறுதலும்
பெரிதவை நீங்கலும் பிறத்தலுஞ் சாதலுங்
கருவிற் பட்ட பொழுதே கலக்கு
மின்பமுந் துன்பமு மிலையுமணு வெனத்தகு
முன்னுள வூழே பின்னுமுறு விப்பது
கசுருஐ மற்கலி நூலின் வகையிது வென்னச்
சொற்றடு மாற்றத் தொடர்ச்சியை விட்டு

"மணியுயிர் பொன்னுயிரா மாண்ட வெளியியி, லாலியுயிர் செம்புயி ரிரும்பு போலவாம், பிணியுயி ரிறுதியாப் பேசி வேணினைத், துணிமின மெனத் தொழு திறைஞ்சி வாழ்த்தினர்" (சீவக. ஈகஉ) என்று உயிர்களை வகுத்துக் கூறியிருத்தல் காண்க.

கருசு. 'அது' என்றது, கழிவெண்பிறப்பினை.

கருள. 'இது' என்றது, கரும்பிறப்புமுதல கழிவெண்பிறப்பு இறுதியாகவுள்ள பிறப்புக்களில முறையே பிறகது வீடுபெறுதலை.

கருகூ - சுஉ. பெறுதன்முதற்சாதலீறுகவுள்ளவைகள் கருவிற் சேர்ந்த பொழுதே கலப்பனவாம்.

கசுஐ. இன்பதுன்பங்களாகிய இவைகளும் அணுவென்று கூறப்படும்.

கருகூ - சுசு. இவ்வடிகளின் பொருளோடு, "பேதிழ விடையூ மின்பம் பிரிவிலா திருக்கை மற்றும், வேறொரு காட்டிற் சேறல் வினைந்திடு மூப்புச் சாதல், கூறிய வெட்டு முன்னே கருவியுட் கொண்ட தாகுந், தேறிய வூழிற் பட்டுச் செல்வதிவ் வுலக மெய்ருர்", "புணர்ணிய பாவமென்னு மிரண்டணுப் பொருந்த வைத்தே, யெண்ணிய விவற்றினோடு மேழென வெங்களோடு, நண்ணிய வொருவன் கூறு ஞானமிவ் வாறதெரிந்து,கண்ணிய கருத்தினோகள் கதியினைக் காண்ப ரெய்ருன்" (சீவ - சித்தி. பரபக்கம், ஆசீவ கண்மதம், ஈ - கo) என்னும் செய்யுடனை ஒப்பிடுக.

கசுரு. மற்கலிதேவனது ஒன்பதுகதிரென்றும் நூலிற் கூறப்பட்டுள்ள வகை இதுவாகுமென்று ஆசீவகமதத்தோன் சொலல.

கசுசு. சொற்றடுமாற்றதொடர்ச்சி - தடுமாற்றச் சொற்றொடர்ச்சி ; என்றது, பூர்வோத்தரவிரோதமுள்ள ஆசீவகமதத்தோன் கூற்றை.

(பி - ம்.) கருகூ. 'அழியியல்வேண்டா வதுவுறற்பாலா' கருஅ. 'வேண்டுதலும்'கருஉ. 'இறத்தலும்' கசுo. 'உடமிறுத்தெய்தலுந் துக்க முஞ் சுகமிறுறலும்' கசுஉ. 'பொழுதேபிறக்கு' 'பொழுதேயிறக்கும்' கசுஈ. 'இவையிவையெனத்தகு' கசுரு. 'மறக்கலின்னூலின் வகையிது வென்று' கசுசு. 'சொற்றமாற்றத்'

நிகண்ட வாதியை நீயுரை நின்னுற்
புகழுந் தலைவன் யார் நூற்பொருள் யாவை
யப்பொரு ணிகழ்வுங் கட்டும் வீடு
களo மெய்ப்பட விளம்பென விளம்ப லுறுவோ
னிந்திரர் தொழப்படு மிறைவனெம் மிறைவன்
றந்த நூற்பொரு டன்மாத்தி காயமு
மதன்மாத்தி காயமுங் காலா காயமுந்
தீதில் சீவனும் பரமா ணுக்களு
களரு நல்வினை யுந்தீ வினையுமவ் வினையாற்
செய்வுறு பந்தமும் வீடுமித் திறத்த
வான்ற பொருடன் றன்மைய தாயுந்
தோன்றுசார் வொன்றின் றன்மைய தாயு

களo. மெய்ப்பட - உண்மைப்பட.

கசுஎ - எo. நிகண்டவாதியை நோக்கி உங்கள் தலைவன்யார்? நூற் பொருள்கள் யாவை? அப்பொருள்களின் நிகழ்ச்சியையும், பந்தத்தையும், வீட்டினையும், சொல்லுவாயென்று மணிமேகலை கேட்ப, நிகண்டவாதி - சமணர் இருதிறத்தாரில் ஒருவகையார்; இவர் நிர்க்கந்தவாதியென்றும் நிகம்பரவாதியென்றும் கூறப்படுவர்; இறைவன், நூல், பொருள், பொருணிகழ்வு என்னுமிந்நான்கினையும் முறையே ஆப்தன், ஆகமம், பதார்த்தம், பிரவர்த்தியென்பர்.

நிகண்டவாதம்:—

களக. சதேந்திரர்களாலே வணங்கப்படும் அருகனே எமது ஸ்வாமி; சதேந்திரராவார்:— பவணேந்திரர் நாற்பத்திருவரும், வியந்தரேந்திரர் மூப்பத்திருவரும், கற்பேந்திரர் இருபத்திருவரும், சந்திரனும் சூரியனும் நரேந்திரனும் மிருகேந்திரனுமென்பார்.

களஉ. தந்தநூற்பொருள் - (அருகன்) உண்டுபண்ணிய அங்காகமம் பூர்வாகமம் பகுசுருதியாகமமென்னுமூன்று ஆகமங்களிலும் கூறப்பட்டுள்ள பொருள்கள்.

களங. காலமும் ஆகாசமும்.

களஉ - சு. தந்தநூற்பொருள்கள் திருமால்திகாயம் முதல் வீடு இறுதியாகவுள்ள இந்தப் பத்துப் பகுதியின.

களசு-சு. இவ்வடிகளாற் கூறப்பட்டுள்ள இறைவனையும் அவன்கூறிய நூற்பொருள்கள்பத்தையும், "எனக்கேட்டாங் கெடுத்துரைப்பா னிந்திரர்க டொழப்படுவான், நினக்காய தருமமு மதருமமுஞ் காலமு, மனப பாட்டி லாகாய முயிரருவும் புண்ணியமே, நினைக்குங்காற் பாவமே கட்டுகீ டெனநிறுத்தி" (நீல. மொக்கல. உஉ) என்னும் செய்யுளாலுமறிந்து கொள்க.

(பி - ம்.) கசுஅ. 'புகழ்ந்த தலைவன்'

மஹித்தமு மித்தமு மாகி நின்று
கஅ0 நுனித்த குணத்தோர் கணத்தின் கண்ணே
தோற்றமு நிலையுங் கேடு மென்னு
மாற்றரு மூன்று மாக்கலு மூரித்தா
நிம்ப முளைத்து நிகழ்த்த னித்திய
நிம்பத் தப்பொரு ளன்மை யநித்தியம்
கஅரு பயற்றுத் தன்மை கெடாதகும் மாய
மியற்றி யப்பய றழிதலு மேதுத்
தருமாத்தி காயந் தானெங்கு முளதாய்ப்
பொருள்களே டத்தும் பொருந்த நித்தியமா

களக - அ0. ஒருபொருள் ஒரேகணத்தில் அநித்தியத்தன்மை நித்தியத்தன்மையென்னும் இரண்டையுமடையுமென்பதை, "கல்வியா னல்லனே காமாதியாற் றீயன், செல்வத் துயர்ந்தான் குலத்தினிற் முழ்ந்தன ரும், வல்லுவா னெண்ணெண்ணென்று வல்லா னினுவன்றே, நில்லாமை நித்த நிலை" (நீல. மொக்கல. ககங - சமய) என்பதனாலுமுணர்க. கணம் - க்ஷணம்.

கஅ0 - அட. ஒருபொருள் ஒரேகணத்தில் உற்பத்தி ஸ்திதி நாச மென்னு மூன்றையுமடையுமென்பதை, "உருவப் பிழம்பப் பொருளென் றுரைப்பனிப் பாதபிர்மோர், பருவத்தி னும்பரி யாயப் பெயரென்பன் பால ழிந்து, தருவித் துரைத்த தயிருரு வாய்மும்மைத் தன்மையதாந், திருவத்த தென்பொரு ளாதலைத் தேர தெளியிதென்றான்" (நீல. மொக்கல. கஉஉ) என்னுஞ்செய்யுளாலும், 'உருவப்பிழம்பாகியபுற்கலத்தைப்பொருளென் பேன்; பால்தயிர் முதலாயின அதனது பரியாயமென்பேன்; பாற் பரியாயத்து நின்ற புற்கல திரவியம் தயிர்ப் பரியாயமடைந்து பரிணமித்த லில் உற்பத்தி ஸ்திதி விநாசாத்மகமாகித் தூவிக்கப்படாத பெருமைத்தாம் என்பொருளென்று தெளியென்று சொன்னார்' என்னும் அதனுரையாலு மறிந்துகொள்க.

களக - அஉ. பொருள் உரித்தாமென்க. கஅங. நிம்பம் - வேம்பு.

கஅரு - சு. இவ்வடிகளாற் கூறப்பட்டுள்ள திருஷ்டாந்தத்தினியல் பை, "பெற்றது தானுங்கும் மாயத் திரிபு டியற் றியல்பே, யிற்ற திதுவென திட்டமென் பாயிவ் விருமையினும், தெற்றெனத் தீர்ந்தோர் பொருளென்னே தேற்றினித் தேற்றலேயேன், மற்றது வாமை மயிரெனச் சொல்லுவன் மன்னு மென்றான்" (நீல. மொக்கல. கஉங) என்பதனாலுமுணர்க. கும்மாயம் - புழுக்கிய பச்சைப் பயற்றோடு சருக்கரை முதலியன கூட்டி ஆக்கப்படுவ தொரு சிற்றுண்டி; இஃது இப்பெயரோடு விஷ்ணுவாலயங்களில் இக்கா லத்தும் வழங்கிவருகின்றது; "கும்மாயத்தொடு வெண்ணெய்விழுங்கி" (திவ். பெரியாழ்வார். ங. ங : ங) என்பதில் 'கும்மாயம்' என்பதற்கு ஸ்ரீ மணவாளமாமுனிகள் 'குழையச்சமைத்தபருப்பு' என்று பொருள்செய் திருக்கின்றனர். 'பயற்றது கும்மாயம்' நன். சூ. உகூங - மயிலை. மேற்.

கஅள - அ. தருமாத்திகாயம் எங்குமுளதாகி எக்காலத்தும் பொருள் களே டத்துமென்க.

வப்படித் தாகி யதன்மாத் திகாயமு
ககூ0 மெப்பொருள் களையு நிறுத்த லியற்றுங்
காலங் கணிக மெனுங்குறு நிகழ்ச்சியு
மேலுங் கற்பத் தின்னெடு நிகழ்ச்சியு
மாக்குமா காய மெல்லாப் பொருட்கும்
பூக்கு மிடங்கொடுக்கும் புரிவிற் ருகுஞ்
ககூரு சீவ னுடம்போ டொத்துக் கூடித்
தாவில்சுவை முதலிய புலன்களை நுகரு
மோரணு புற்கலம் புறவுரு வாகுஞ்

ககஅக - கூ0. அதன்மாத்திகாயம் எப்பொருள்களையும் நிற்கச்செய்யும.

ககஎ - கூ0. இவ்வடிகளாற் கூறப்பட்டுள்ள தருமாஸ்திகாயம் அதரு மாஸ்திகாயங்களினிலக்கணங்களைப் பின்வருபவைகள் நன்கு புலப்படுத் தும்:—" அத்தியா யமூர்த்தியா யாகி நேசியா, யொத்தள வுகினெ டுலக லோகமாந், தத்துவ நிணச்செய்து தம்மத் தம்மமா, மத்திகள் செல வொடு நிலையிற் கேதுவாம்", "அச்சுநீர் தேரொடு மீனை யீர்த்திடா, வச்சுநீ ரன்றியத் தேரு மீன்செலா, வசசுநீர் போலத்தம் மத்தி சேறலே, யிச்சையு முயற்சியு மின்மி யாக்குமே ", " அத்தரத் தறுபத்து மூன்ற தாகிய, விந் திர படலமு நிரைய மேழ்களு, மந்தர மலைமண ணுமற்று நின்றிடா,வந்தமி னிலையதம் மத்தி யிலமிலையல ", " பறவையின் சிறகொடு பாத நின்றுழி, நெறியினுந் செலவொடு நிலையை யாக்குமா, லுறவிலுப் கலமிவை யோட னிற்றலைச், செறிவுறத் தம்மத்தம் மத்தி செய்யுமே " (மேருமந்தர. வைசயந்தன்முத்தி. அக, கூ0, கூக, கூஉ); 'தருமாத்திகாயம், குயவன் திகிரிக்குக் கீழிட்டசிலைபோலவும், தேருக்கு அச்சுப்போலவும், கலத்திற் குக் கடல்போலவுமாம',' தருமாத்தியும் அதருமாத்தியும் பகுதிக்குச் சிறகுங் காலும்போற் சீவபுற்கலங்களுடைய கமனத்திற்கும் ஸ்திதிக்கும் அப்பிரே ரகசாதனமாம்' நீல. மொக்கல. உஎ, உஅ - சமய.

ககக. கலிகம் - கணிகம்.

ககக - கூ. காலம் குறுநிகழ்ச்சியையும் நெடுநிகழ்ச்சியையுமாக்கு மென்க ; 'கணிகமென்பது ஏழுசெங்கழுநீரிதழை ஒருகுதட்டிலடுக்கிப் பல வானையினொருவன் மிகவுங் கூரியதோருளியைத்துக் கூடமிட்டுப் புடைத் தால் ஆரும்புரையற்று ஏழாம்புரையிற் செல்லுமளவாம்;இனிக்கற்பமாவது, ஓசனையகன்றுயர்ந்ததோர் வச்சிரமலை கருப்பிணியுடுத்த பட்டாடைத் தோ கை பட்டுக் கையறத்தேய்ந்ததாம்' நீல. மொக்கல. கூக - சமய.

ககஙூ - ச. ஆகாயம் எல்லாப்பொருட்கும் இடங்கொடுக்குஞ் செயலை யுடையது; "பரந்திடங் கொடுக்கும் விசும்புதோ யுள்ளம்" மலைபடு. நருஅ.

ககஙரு - ஈ. சீவன் உடம்போடொத்துக்கூடிப் புலன்களை நுகரும்.

ககஙள. ஓரணு - பரமாணு ; அவ்வணு புற்கலமும் புறவுருவுமாகும். புற்கலமென்றது, உடம்பை ; புறவுருவென்றது, மற்றை வடிவங்களை.

(டி - ம்.) ககஙரு. 'ஒத்துத்தோன்றி'

சீர்சா னல்வினை தீவினை யவைசெயும்
வருவழி யிரண்டையு மாற்றி மூன்செ
யருவினைப் பயனனு பவித்தறுத் திடித
லதுவீ டாகு மென்றன னவன்பி
னிதுசாங் கியமத மென்றெடித் துரைப்போன்
றனையறி வரிதாய்த் தான்மூக் குணமாய்
மனங்கழ் வின்றி மார்ண்பமை பொதுவா
யெல்லாப் பொருளுந் தோன்றுதற் கிடமெனச்
சொல்லுதன் மூலப் பகுதிசித் தத்து
மானென் றுரைத்த புத்தி வெளிப்பட்
டதன்கணு காயம் வெளிப்பட் டதன்கண்
வாயு வெளிப்பட் டதன்க ணங்கி
யானது வெளிப்பட் டதன்க ணப்பின்
றன்மை வெளிப்பட் டதின்மண் வெளிப்பட்
டவற்றின் கூட்டத் தின்மனம் வெளிப்பட்
டார்ப்புறு மனத்தாங் கார விகாரமு
மாகா யத்திற் செவியொலி விகாரமும்

ஈகஅ. நல்வினை நல்வினையையும், தீவினை தீவினையையுமுண்டாக்கும் ; இன்பதுன்பங்களையுண்டாக்குமெனினும் பொருந்தும்.

பத்தத்தினிலக்கணங்கூறித்தில், "அவ்வினையாற், செய்வுறு பந்த மும்" (களவு - சு) என்று முன்னார்க்கூறினமையின்.

ஈகஈ. வருவழியிரண்டு - நல்வினைவரும்வழியும் தீவினைவரும்வழி யும். மூன்செய் - முற்பிறப்பிற்செய்த.

உ0க. மென்றனன் - என்று நிகண்டவாதி கூறினன்.

ஈகஉ - உ0க. வீட்டிலக்கணம் இவ்வடிகளாற் கூறப்பட்டதுபோல, "பெரும்பாவ மறத்துய்த்துப் பெறுதுன்யாம் வீடென்னே,மரும்பாவ காரிநீ யாவர்வா யதுகேட்டாய், வரும்பாவ மெதிர்காத்து மன்னுயிர்த்தம் பழவினையு, மொருங்காக வுதிர்த்தக்கா லுயிர்த்தூய்மை வீடன்றுள்" (நீல. மொக்கல. ஈள) என்னும் செய்யுளில் வந்திருத்தல்காண்க.

சாங்கியவாதம் :—

உ0சு. சொல்லுதல் மூலப்பகுதி - சொல்லப்படுவது மூலப்பகுதி. சித் தம் - மூலப்பகுதி.

உ0எ. மான் - மகத்தத்துவம். மகத்தத்துவத்திற்குப் புத்தியென்றும் ஒருபெயருண்டு.

உ0ஈ. அங்கி - அக்கினி. உகஉ. அப்பு - நீர்.

உகஎ. கூட்டம் - ஸமஷ்டி.

உகரு வாயுவிற் ரெக்கு மூறெனும் விகாரமு
மங்கியிற் கண்ணு மொளியுமாம் விகாரமுந்
தங்கிய வப்பில்வாய் சுவையெனும் விகாரமு
நிலக்கண் மூக்கு நாற்ற விகாரமுஞ்
சொலப்பட் டிவற்றிற் ரெக்கு விகாரமாய்
உ2o வாக்குப்பாணி பாத பாயு ருபத்தமென
வாக்கிய விவைவெளிப் பட்டிங் கறைந்த
பூத விகாரத் தான்மலே மரமுத
லோதிய வெளிப்பட் டிலகாய் நிகழ்ந்து
வந்த வழியே யிவைசென் றடங்கி
உஉரு யந்தமில் பிரளய மாயிறு மளவு
மொன்ரு யெங்கும் பரந்துநித் தியமா
மறிதற் கெளிதாய் மூக்குண மன்றிப்
பொறியுணர் விக்கும் பொதுவு மன்றி
யெப்பொரு ளுந்தோன் றுதற்கிட மன்றி
உங்o யப்பொரு ளெல்லா மறிந்திடற் குணர்வா
யொன்ரு யெங்கும் பரந்துநித் தியமாய்
நின்றுள வுணர்வாய் நிகழ்தரும் புருடன்
புலமார் பொருள்க ளிருபத் தைந்துள
நிலநீர் தீவளி யாகா யம்மே
உங்ரு மெய்வாய் கண்மூக் குச்செவி தாமே
யுறுசுவை யொளியூ ரோசைநாற் றம்மே
வாக்குப்பாத பாணி பாயு ருபத்த

உகரு. தொக்கு - தூவக்கிந்திரியம். ஊறு - பரிசம்.

உகo. நிலக்கண் - நிலத்தின்கண்.

உஉக. இவையென்றது, கருமேந்திரிய பஞ்சகத்தை.

உஉர. ஒதிய, வினையாலணையும்பெயர்.

உஉஎ - ஙஉ. இவ்வடிகளாற் புருஷ தத்துவத்தினிலக்கணங்கூறப் பட்டது; இதனை, "எத்திறத் தினுஞ்செய் யான்குண மொன்றிலன், நத்துவ னின்பி னனேதன லேக, னித்திய னெங்கு முளனெடுங் காட்சி யன், றுய்த்த லுடையனென் றோன்றலு மென்றுன்" (நீல. சாங்கிய. எ) என்பதனுமறிந்துகொள்க.

(பி - ம்.) உஉஎ. 'மூக்குணமின்றி' உஉஅ. 'பொருளுமின்றி'

மாக்கு மனைபுத்தி யாங்கார சித்த
முயிரெனு மான்மா வொன்றெடு மாமெனச்
செயிரறச் செப்பிய நிறமுங் கேட்டு
வைசே டிகனின் வழக்குரை யென்னப்
பொய்தீர் பொருளுங் குணமுங் கருமமுஞ்
சாமா னியமும் விசேடமுங் கூட்டமு
மாமாறு கூறு மதிற்பொரு ளென்பது
குணமுங் தொழிலு முடைத்தா யெத்தொகைப்
பொருளுக்கு மேதுவா மப்பொரு ளொன்பான்
ஞாலநீர் தீவளி யாகா யந்திசை
கால மான்மா மனமிவற் றுண்ணில
மொலியூறு நிறஞ்சுவை நாற்றமொ டைந்தும்
பயில்குண முடைத்து நின்ற நான்குஞ்
சுவைமுத லொராகுண மவைகுறை வுடைய

உகஅ. புத்தி - மகத்தத்துவம். சித்தம் - பிரகிருதி.

உகக - கூ. இவ்வடிகளால் இருபத்தைந்து தத்துவங்களுங் கூறப்பட்டன; இதனை, "மன்னுயிர் தெற்றென வில்லது மான்செருக்கு, கென்னவு மிக்கிய மைம்தைத் தொருமன,மன்னதின் மாத்திரை யைந்தைந்து பூதமும், பன்னிய வைபைம் பதப்பொரு ளென்றான்" (நீல. சாங்கிய.சு) என்பதனுடு முணர்க ; தெற்றெனவில்லது - பிரகிருதி. செருக்கு - அகங்காரம்.

உசo. கேட்டு - மணிமேகலை கேட்டு.

உசக. உரையென்ன - சொல்வாயென்று மணிமேகலைகேட்ப.

வைசேடிகவாதம்:—

உசகூ. சாமானியம் - பொதுமை. விசேடம் - சிறப்பு. கூட்டம் - சமவாயம்; இதனை உடன்புணர்ப்பென்றுங் கூறுவர்.

உசச. ஆறுகூறும் - ஆறுபகுதியாகும்.

உசசு. அப்பொருள் ஒன்பான் - அந்தப்பொருள் ஒன்பது வகைப்படும்.

உசஎ - சு. பொருளென்பது உடைத்தாய் ஏதுவாகும்.

உருo. நின்றநான்கு - நீர் தீ காற்று ஆகாயமென்பன.

உருக. சத்தமுதல் நாற்றமிறுதியாகிய ஐந்தனுள், நீர் சத்தமுதலிய நான்கு குணங்களையும், தீ சத்தமுதலிய மூன்றினையும், காற்றுச் சத்தமுதலிய இரண்டினையும், ஆகாயம் சத்தமொன்றினையு மூடையன.

திசைமுதலிய நான்கினிலக்கணங்களும் ஒரு பிரதியிலும் காணப்படவில்லை; பின் வருவனவற்றுள்ளும் சில இப்படியே யுள்ளன.

வோசை யூறு நிறஞாற் றஞ்சுவை
மாசில் பெருமை சிறுமை வன்மை
மென்மை சீர்மை நொய்ம்மை வடிவ
உருரு மென்னு நீர்மை பக்கமூக லனேகங்
கண்ணிய பொருளின் குணங்க ளாகும்
பொருளுங் குணமுங் கரும மியற்றற்
குரிய வுண்மை தருமூதற் பொதுத்தான்
போதலு நிற்றலும் பொதுக்குண மாதலிற்
உசுo சாதலு நிகழ்தலு மப்பொருட் டன்மை
யொன்றனு கூட்டங் குணமுங் குணியுமென்
றுன்றிய வாதியு முரைத்தன னுடனே
பூத வாதியைப் புகனீ யென்னத்
தாதகிப் பூவுங் கட்டியு மிட்டு
உசுரு மற்றுங் கூட்ட மதுக்களி பிறந்தாங்

உருஉ - சு. இவ்வடிகளாற் குணங்கள் பகுத்துக் கூறப்பட்டன.

உருள - அ. பொருளும் குணமும் கருமத்தைச் செய்தற்கு உரிமையை யுடையன; பொருள் குணமென்னுமிரண்டாலும் நிகழ்வது கருமமென்றபடி. உண்மை - ஸத்துவம். முதற்பொது - பரசாமானியம். முதற்பொது உண்மை தருமென்க.

உசுக. ஒன்று - விசேடம்; அணு - பிருதுவிமுதலிய நான்கு பூதங் களின் பரமாணுக்கள்; ஒன்று அணுவிலுள்ளதென்க. கூட்டம் - ஸமவாயம். இவ்வடி, விசேடத்தினிலக்கணமும், சமவாயத்தினிலக்கணமுங் கூறிற்று.

உசுஉ. ஒன்றியவாதி - விசேடவாதி.

உசுஉ - சுஉ. இவ்வடிகளாற் கூறப்பட்டுள்ளபொருள்களாதினியல்பை, "நெறியெனப் படுவது நின்ற மெய்ம்மையங், கறிதலுக் கரியன வாறு சொற்பொருள், செறியயான் சொஃறிரப்பியங் குணகதொழில்,பொறியினுய் பொதுச் சிறப் புடன்பு ணர்ப்பதே", "பூதமைந தொடுதிசை மனம்பொழு துயி,ரோதினப் பொருள்களா மொன்ப தாமவை,நீதியிற் குணமவற் றியல்பு செய்கையும், போதரும் பொருட்புடை பெயர்ச்சி யாகுமே", "பெரியதும் பின்னது மாய தப்பொது,வுரிதினிற் பொருள்களைச் செலுத்து மொற்றுமை, தெரிவுற வருவது சிறப்ப தாங்குணக்,கிரியைக ளிதற்கெனக் கிளத்தல் கூட் டமே" (நீல. வைசேடிக. சு, ச, ரு) எனவருஞ்செய்யுட்களானுமுணர்க.

உசுசு. புகல் நீ என்ன - நீசொல்வாயென்று மணிமேகலை சொல்ல.

பூதவாதம்:—

உசுச. தாதகிப்பூ - ஆத்திப்பூ. கட்டி - கருப்புக்கட்டி.

உசுரு. மற்றுங்கூட்ட - கூட்டத்குரிய மற்றைப் பொருள்களையுங் கூட்ட. மதுக்களி பிறந்தாங்கு - மதுவினிடத்துள்ள மதசக்தி தோன்றினாற் போல.

குற்றிடும் பூதத் துணர்வு தோன்றிடு
மவ்வுணர் வவ்வப் பூதத் தழிவுகளின்
வெவ்வேறு பிரியும் பறையோ சையிற்கெடு
முயிரொடுங் கூட்டிய வுணர்வுடைப் பூதமு
உஎ0 முயிரில் லாத வுணர்வில் பூதமு
மவ்வப் பூத வழியவை பிறக்கு
மெய்வகை யிதுவே வேறுரை விகற்பமு
முண்மைப் பொருளுமூலோ காயத வுணர்வே
கண்கூ டல்லது கருத்தள வழியு
உஎடு மிம்மையு மிம்மைப் பயனுமிப் பிறப்பே
பொய்ம்மை மறுமையுண் டாய்வினை தூய்த்த

உசுசு. பிருதுவி முதலிய ஐது தத்துவங்களின் சமவாயத்தில் அறிவு உதிக்கும்; பூதங்களேதமுண்டென்பது பூதவாதியின் கொள்கை. நிலம், நீர், தீ, வளியெனப்பூதம் நான்கேயென்பது உலோகாயதன்கொள்கை.

உசுஅ. பறை - பேரிகை. ஓசையின் -ஓசையைப்போல.

உசுச - அ. 'மாமுதலாகிய ஐது திரவியத்தின் கூட்டத்தில மதசக்தி பிறந்தாற்போலப் பிருதுவியாதி பஞ்சபூதசமவாயத்து ஞான சுகாதி தோன்றி அவை வளர வளர்ந்து அந்தப் பூதங்கள் பிரிதலால அவை தம்மினமாகிய பூதங்களிற் சென்று சேரும்' நீல. பூத. (நு) - சமய.

உஎஉ. வேறு உரைவிகற்பமும் - யாம்கூறும் வேறுள்ள சொல்விகற் பங்களும்.

உஎங. உண்மைப்பொருளும்-தத்துவங்களும். உலோகாயதனுணர்வே-உலோகாயதனுணர்த்தவைகளே; உலோகாயதன் கொளகையினை, சிவஞான சித்தியார் பரபக்கத்துள்ள உலோகாயதன் மதத்தாலும், 'காட்சியே அளவை யாவதென்றும், நிலம் நீர் நீ வளியெனப் பூதம்நான்கேயென்றும், அவற்றது புணர்ச்சிவிசேடத்தாற்றோன்றிப் பிரிவால மாய்வதாய உடம்பின்கண்ணே அறிவு மதுவின்கட் களிப்புப்போல வெளிப்பட்டழியுமென்றும், இறந்தவுயிர் பின்பிறவாதென்றும், இன்பமும் பொருளும்ஒருவனுற் செய்யப்படுவனவென் றஞ் சொல்லும் உலோகாயதம்' (குறள். உஅக) என்று பரிமேலழகரெழு தியவாற்றாலுமுணர்க.

உஎஉ - கூ. உலோகாயதன் கொள்கைகளுள் பூதநான்கேயென்ப தொழிந்தவைகள் தன்கொள்கையோடொக்குமாதலின், 'வேறுரை விகற்ப மும் உண்மைப்பொருளு முலோகாயதனுணர்வே' என்றான்.

உஎச. கண்கூடு - பிரத்தியக்கப்பிரமாணம்; கருத்தளவு - அனுமானப்பிரமாணம்.

உஎடு. இப்பிறப்பே - இப்பிறப்பிலேதானே கழிவன; ஈண்டு, 'கழிவன' என்று ஒருசொலவருவிக்க.

உஎசு. தூய்த்தல் - அனுபவித்தல்; தூய்த்தல் பொய்ம்மை.

லென்றலு மெல்லா மார்க்கமுங் கேட்டு
நன்றல வாயினு நான்மா றுரைக்கிலேன்
பிறந்தமுற் பிறப்பை யெய்தப் பெறுதலி
உஅ0 னறிந்தோ ருண்டோ வென்றுக் கிதெலுந்
தெய்வ மயக்கினுங் களுவுறு திறத்தினு
மைய லுறுவார் மனம்வே றும்வகை
யைய மன்றி யில்லையென் றலுநின்
றந்தை தாயரை யனுமானத் தாலல
உஅரு திந்த ஞாலத் தெவ்வகை யறிவாய்
மெய்யுணர் வின்றிமெய்ப் பொருளுணர் வரிய

உஎஎ. என்றலும் - என்று பூதவாதி சொலலலும். கேட்டு - மணி மேகலைகேட்டு.

உசுச - எஎ. இவ்வடிகளிற் கூறப்பட்டுள்ளவற்றைப் பின்வருஞ் செய்யுட்கள் நன்குபுலப்படுத்தும்:—"அணிகொ ளாரத் தரசவை கேட்கெனப், பிணிகொண் மூஞ்சிப் பிசாசகன் சொல்லுவான், குணிகுணம் மெனுங் கூற்றில ஞலதென், றுணிவைம் பூதங்க ளேதொழில் சொல்லுவேன்", "திண்ணென் றீநில நீர்வளி காயத்தாற், கண்ணு மூக்கொடு நாமெய் செவிகளாய், வண்ண நாற்றஞ் சுவையிஞெ டுரெலி, யெண்ணுங் காலி யியைத்தழி யெய்துமே", "ஐந்துங் கூடி யறிவின்ப மாதியா, வந்து தோன்றி மதுமயக் காற்றலி, னந்தி நாளுங் குடஞ்சுடர் நாட்டம்போற், சிந்தி ஞலவை சென்றினஞ் சேருமே", "உலகெ லாமவை யேயுயி ருண்டெனச், சொலவ லாருரை சொற்றெளிக் தேகின்று, பலக லாங்களுஞ் செய்ப பயனிலார், புலவ ராவதன் றேவக்குப் போந்ததே", "சென்ற காலத்துஞ் செல்கின்ற காலத்து, நின்ற காலத்தி லும்மிக் நிகழ்ச்சியே, யென்று மிவ்வுல கத்தன்மைத் தேயிது, வன்ற தென்றுளாட் பாரயர்ப் பார்களே" நீல. பூத. கூ, ச, டு, சு, எ.

உஎகூ. முற்பிறப்பை எய்தப்பெறுதலின் - முற்பிறப்புணர்ச்சியைப் புத்தபீடிகையால் நான் அடையப்பெற்றதை ; சாரியைநிற்க இரண்டனுருபு தொக்கது.

(உஎஅ) 'நன்றலவாயினும்' என்பதுமுதல் (உஅ0) 'உண்டோ' என்பது இறுதியாகவுள்ளவை மணிமேகலையின் உட்கோள்.

உஅ0. என்று நக்கிதெலும் - என்று மணிமேகலை உட்கொண்டு மறு பிறப்பில்லையென்ற பூதவாதிகூற்றை நிராகரித்து நகைத்து, நகைத்தென்னை யென்றுவினவிய அவனுக்குத் தான் பழம்பிறப்புணர்ந்ததைத்தெரிவித்தலும்.

உஅக - கூ. நீ பழம்பிறப்புணர்ந்தேனென்றது, மையலுறுவார்மனம் தெய்வமயக்கினும் களுவுறுதிறத்தினும் வேறுபடும் விதமேயாகும் ; அதி, பிரத்தியக்கமன்மையாற்சந்தேகமேயன்றிவேறில்லையென்றுஅவன் கூறலும்.

உஅசு - டு. இவ்வடிகள், பிரத்தியக்கமன்றி அனுமானவளவைகொள்ளாத பூதவாதிக்கு அவ்வளவையுண்டென்று கூறுமுகத்தால் மறுமையுண்டென்று மணிமேகலை சாதித்ததைக்கூறின.

உஅசு. மெய்யுணர்வு - சத்தியஞானம். மெய்ப்பொருள் - பரமார்த்தத்தத்துவங்கள்.

உள.—சமயக்கணக்கர்தந்திறங்கேட்டகாதை.நஉடு

வைய மல்லதிது சொல்லப் பெருயென
வுள்வரிக் கோலமோ டின்னிய பொருளுரைத்
தைவகைச் சமயமு மறிந்தன ளாங்கென்.

உள.—சமயக்கணக்கர்தந்திறங்கேட்டகாதை முற்றிற்று.

உஅள. ஐயமல்லது இது - இது சந்தேகமன்று. சொல்லப்பெரும் - சொல்லாதே.

உசுச - அள. இவ்வடிகளிற் கூறப்பட்டுள்ள பூதவாதிகூற்றுக்களும் அவற்றிற்கு மணிமேகலை கூறிய விடையுமாகிய இவை, " இறைவனு மில்லை யிறக்தோர் பிறவா, ரதனே டென்னையென் றறைந்தோன் றன்னைப், பிறவியு மறவியும் பெற்றியி னுணர்ந்த, நறுமலர்க் கோதை யெள்ளினை நகுதி, யெள்ளினை போலு மிவ்வுரை கேட்டிங்,கொள்ளிய துரையென வுன்பிறப் புணர்த்துவை, யாங்குநிற் கொணர்ந்த வருந்தெய்வ மயக்கக், காம்பன தோளி கனமயக் குற்றமை,யென்றவ னுரைக்கு மிளங்கொடி கல்லா, யன்றென் றவன்மு னையர்தொழி வாயலை " (உக: கo - கஉ) எனக் கந்திற்பாவை மணிமேகலைக்கு வருவதுரைத்ததாக முன்வந்ததனோடு ஒப்புநோக்கற்பாலன.

உஅஅ. உள்வரிக்கோலம் - மறைந்த வேடம்.

உஅக. இக்காதையிற் கூறியவை பத்துமதங்களாகவிருப்ப, இங்கே 'ஐவகைச்சமயம்' என்றது இழுக்கன்றேவெனின், அளவைவாதமுதலிய ஐந்தும் ஒருவகையிலும், ஆசீவகவாதம்நிகண்டவாதமென்னுமிரண்டும் ஒருவகையிலும் அடங்குமென்பராதலின், அன்றென்க ; "அவ்வுரு வென்ன வைவகைச் சமயமுஞ், செவ்வி தன்மையிற் சிந்தையின் வைத்திலேன்" (உசு: சஉ - ச) என்று அறவணவடிகளுக்கு மணிமேகலை கூறியதாகப் பின்னும் வருதல் காண்க; "ஐம்பெருஞ் சமயமு மறந்தோற் றனவென" (பெருங். க. நசு: உசகூ.)ஆங்கு - வஞ்சிநகரத்தில்.

உ - உஅக. (மணிமேகலை) சார்ந்து அளவைவாதியை யெய்தி இயம்பென, அவன் அளவைகளென்றனன் ; என்றவன் றன்னைவிட்டுச் சைவவாதியை நின்தெய்வம் எப்படித்தென்ன, அவன் இறைவனுருமென்றுரைத்தனன் ; பிரமவாதி முட்டை யென்றனன் ; கடல்வண்ணன்புராணமோதினன் காப்பென்றுரைத்தனன் ; அவற்றோடு வேதியனுரையின் விதியுக்கேட்டு இவருரை இசையாவென்று நினைந்து, ஆசீவகனை நோக்கி, இறை யார் ? நூற்பொருள்யாது? என, அவன் 'வகையிது' என்ன, நிகண்டவாதியை நோக்கி, 'மெய்ப்படவிளம்பு' என, அவன் அது வீடாகுமென்றனன்; அவன் பின் சாங்கியன் செப்பியதிறமுங்கேட்டு 'வைசேடிக ! நின்வழக்கையுரை' என்ன, அவனும் உரைத்தனன் ; உடனே பூதவாதியைநோக்கி, 'நீபுகல்' என்ன, அவன் 'வினைதுய்த்தல்பொய்ம்மை' என்றலும், நக்கிடுதலும், அவன் இல்லையென்றலும், 'எவ்வகையறிவாய் ; இது சொல்லப் பெரும்' என உரைத்து ஐவகைச் சமயமுமறிந்தனளென வினைமுடிவுசெய்க.

இருபத்தேட்டாவது

கச்சிமாநகர்புக்ககாதை.

[இருபத்தேட்டாவது தாயரோடு அறவணரடிகளையுந்தேர்ந்து கச்சிமாநகர்க்கட்சென்றபாட்டு.]

ஆங்குத் தாயரோ டறவணர்த் தேர்ந்து
வாங்குவிற் முனை வானவன் வஞ்சியின்
வேற்று மன்னரு முழிஞைவெம் படையும்
போற்புறஞ் சுற்றிய புறக்குடி கடந்து
சு சுருங்கைத் தூம்பின் மனைவளர் தோகையர்
கருங்குழல் கழீஇய கலவை நீரு
மெந்திர வாவியி லினஞருரு மகளிருந்
தந்தமி லாடிய சாந்துகழி நீரும்

க. ஆங்கு - வஞ்சிமகரத்தில். தாயர் - மாதவியையும் சுதமதியையும்.

உ. வாங்குவில் - வளைந்தவில். வானவன் - சேரன்.

ங. வேற்றுமன்னர் - பகையரசர். உழிஞைவெம்படை - உழிஞை மாலையைச்சூடி அரணைக்காக்கும் வெவ்வியபடை. உழிஞை,புறமதிலவனைப் போரும் அதனைக்காப்போருமாகிய இருதிறத்தினரும் அணிதற்குரித்து.

ச. புறக்குடி-புறத்தேயிருத்தற்குரிய பலவகைமாந்தரும் குடியிருக்குமிடம் ;என்றது, புறகரத்தை ; இது புறஞ்சிறையென்றும், புறப்படை வீடென்றும், புறஞ்சேரியென்றுங் கூறப்படும்.

ஙு - ச. புறநகர், நால்வகைப் படைவீரரும் பிறருஞ் செறிந்திருத்தற்கு இடமாதலின், இங்ஙனங்கூறப்பட்டது.

ஞ. சுருங்கை - நீர்செல்லுதற்குக் கற்களாற் கரந்துபடுத்தது ; தூம்பு - சலதாரை ; சுருங்கையாகிய தூம்பென்க ; "நீணிலம் வகுத்து நீர்நிரந்து வந்தி ழிதரச், சேணிலத்தி யற்றிய சித்திரச் சுருங்கை சேர், கோணி லத்து வெய்யவாய் கொடுஞ்சுதத் தடங்கிடங்கு" (சீவக. கசஉ); "சுருங்கை வீதி மருங்கிற் போகி" (சிலப்.கச: சுரு); சுருங்கையின் இயல்பு இருபதாம் பரிபாடலாலுமுணரப்படும்.

(ஞ) 'சுருங்கைத்தூம்பின்' என்பது 'பாய்தலின்' (கஎ) என மேல்வருவதனோடு சென்றியையும்.

சு. கழீஇய - கழுவிய.

எ. எந்திரவாவி - வேண்டும் பொழுது நீரை நிறைத்தற்கும் வேண்டாதபொழுது போக்குதற்குமுரிய யந்திரங்களையுடைய பொய்கை; இஃது, இலவந்திகையெனவுங் கூறப்படும். இனஞர் - ஆடவர்.

அ. ஆடிய - பூசிய. சாந்து - சந்தனம்.

புவிகா வலன்றன் புண்ணிய நன்னாட்
கo சிவிறியுங் கொம்புஞ் சிதறுவிரை நீரு
மேலை மாதவர் பாதம் விளக்குஞ்
சீல வுபாசகர் செங்கைஊறு நீரு
மறஞ்செய் மாக்க ளகின்முதல் புகைத்து
நிறைந்த பந்தற் றசும்புவார் நீரு
கரு முறுப்புமூ ணூருமற் கந்தவுத் தியினூற்
செறித்தரைப் போர்த்தஞ் செழுமணி நீரு
மென்றிங் நீரே யெங்கும் பாய்தலிற்
கன்றிய காரா மிடங்கரு மீன்களு

கூ. காவலன் - அரசன். புண்ணியநன்னாள் - புண்ணியத்தையுடைய நல்ல நட்சத்திரத்தில்; என்றது, அரசனுடைய சன்ம நட்சத்திரத்திலென்ற வாறு.

கo. சிவிறி கொம்பு என்னுமிரண்டும் நீரைவீசுங்கருவிவிசேடங்கள்; சிவிறியைப் பெருந்துருத்தியென்று கூறுவர்.

கூ - கo. ஒருவன் சீவித்திருக்குங்காறும்அவன் பிறந்தநட்சத்திரத்திலும் இறந்தபின்பு அவன் இறந்த திதியிலும் சிறப்புச் செய்யவேண்டுமென்பது தருமநூற்றுணிபு.

கக. மேலைமாதவர் - மேன்மையையுடைய முனிவர்; ஐ, சாரியை.

கஉ. சீலவுபாசகர் - பஞ்சசீலத்தையுடையஉபாசகர்; பௌத்தரில் இல்லறம் நடத்தும் ஆடவரையும் மகளிரையும் முறையே உபாசகரென்றும் உபாஸகைகளென்றுங்கூறுதல் மரபு.

கச. பந்தல் தசும்பு-தண்ணீர்ப்பந்தரிலுள்ள நீர்க்குடம்; இனி, உலோகத்தாற் குழாய் வடிவமாகச் செய்யப்பட்ட உறுப்பினையுடைய தூபமுட்டியுமாம்; பந்தல், அம்பணமெனவும் வழங்கும்; இதனை, "இம்புரிப் பகுவாயம்பண நிறைய" (நெடுநல். கூஅ) என்பதிற்கு, 'அம்பணம்'என்பதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'பந்தல்' என்று பொருள் செய்திருத்தலாலுணர்க. வார்நீர் - ஒழுகுகின்றநீர்.

கரு. உறுப்பு முரணுறுமல் - உறுப்புக்கள் மாறுபடாமல்; "நேர்கட்டி செம்தே னிரியாசம் பச்சிலை, யாரு மகிலுமுப்போ டாறு" (சிலப். ரு: கசஅடியார்.) கந்தவுத்தியினூல - சேர்த்தற்குரிய வாசனைப் பண்டங்களால்; உத்தி - சேர்த்தல்; இதுயுக்தியென்னும் வடமொழிச்சிதைவு.

ரு - கள. சுருங்கைத்தூம்பிற் பாய்தலிலென்க.

கஅ. கன்றிய - பகைமையிற்றழும்பிய. காராம் இடங்கள் என்னுமிரண்டும் முதலிலச்சாதிவிசேடங்கள்; "கொடுந்தாண் முதலேயு மிடங்கருங் காராமும்" குறிஞ்சி. உருள.

(பி - ம்) கச. 'தசும்பமர்நீரும்' கரு. 'கந்தபுத்தியினூல்' கசு. 'செறித் தமைப் போர்த்தஞ் செழுமணிநீரும்' கள. 'எங்கும்பரத்தலின்'

மொன்றிய புலவொழி யுடம்பின வாகித்
உ0 தாமரை குவளை கழுநீ ராம்பற்
பூமிசை பரந்து பொறிவண் டார்ப்ப
விந்திர தனுவென விலங்கக ழுடித்து
வந்தெறி பொறிகள் வகைமாண் புடைய
கடிமதி லோங்கிய விடைநிலை வரைப்பிற்

கள - கூ. பாய்தலிற் புலவொழிந்தன.

உ0. தாமரைமுதலிய மூன்றும் பகற்பூவென்றும், ஆம்பல் இராப்பூ வென்றுங் கூறுவர் அடியார்க்குநல்லார் ; இதனை, சிலப்பதிகாரம், உ - ஆம் காதை, கச - நு ஆம் அடிகளின் விசேடவுரையிற்காண்க.

உக. மிசைபரந்து - மேலேபரவப் பெற்று ; இவ்வெச்சம் காரணப் பொருட்டு. ஆர்ப்பப் பரந்தென்க.

உஉ. கலவைநீர் முதலியன பாயப்பெற்றுப் பலநிறப்பூக்களையுடை மையின், அகழிக்கு வானவில் உவமையாயிற்று ; "சுந்த ரம்ம லர்த லெண் ணெய் சுண்ணந் தாது குங்குமஞ், சந்த னக்கு ழம்புமேற்ப ரந்து பாடி சூழ்ந்தக, ழந்த ரத்த ருக்க ணைய ணிந்து சூழ்கிடந்ததோ,ரிந்தி ரத்த னுவின் வண்ண மென்ன தன்ன தாகுமே" மேருமந்தர. வைசயந்தன்மூத்தி.

நு - உஉ. கலவைநீரும் சாந்துகழிநீரும் விரைநீரும் நறுநீரும் வார் நீரும் மீனநீரும் ஆகிய இந்நீர் சுருங்கைத்தூம்பினுல் எங்கும்பாய்தலின், உடம்பினவாகிப் பரத்தலான் இலக்கு அகழென்க.

உங. பொறிகள் - யந்திரங்கள் ; அவற்றின் வகையைப் பின் வருவன வற்றுலுணர்க :—"மாற்றவர் மதப்படை மலைந்துமதில் பற்றி, னூற்றுவ ரைக் கொல்லியொடு நூக்கியெறி பொறியுங்,தோற்றமுறு பேய்களிறுதற்று பெரும் பாம்புங், கூற்றமன கழுகுதொடர் குந்தமொடு கோண்மா", "விற்பொறிகள் வெய்யவிடி குரைதொட ரயில்வாள்,கற்பொறிகள் பாவை யன மாடமடி செந்தீக், கொற்புனைசெய் கொள்ளிபெருங் கொக்கெழில் செய் கூகை, நற்றலைக டிருக்கும்வலி நெருக்குமர நிலையே", "செம்புருகு வெங்களிக ளுமிழ்வதிரிந் தெங்கும், பெம்புருகு வட்டமிழ்வ வெக்கெய்முகந் தமிழ்வ, வம்புமிழ்வ வேலுமிழ்வ கல்லுமிழ்வ வாகித், தம்புலன்க ளால்ய வனர் தாட்படுத்த பொறியே", "கரும்பொனியல் பன்றிகத ராகம்விடி சக டங், குரங்குபொரு தகரிஞெடி கூர்ந்தரிவ நுண்ணூல், பரந்தபசும் பொற் கொடி பதாகையொடு கொழிக்குந், திருந்துமதி தெவ்வர்தலை பனிப்பத்திருந் தின்றே" (சீவக. கoக - ச); "வலிவிற் பொறியுங், கருவிர லூகமுங் கல் லுமிழ் கவணும், பரிவுறு வெங்கெயும் பாகடு குழிசியுங், காய்பொன் னுலை யுங் கல்லிடு கூடையுங், தூண்டிலுங் தொடக்கு மாண்டலை யடுப்புங், கலை யுங் கழுவும் புதையும் புழையு,மையவித் துலாமுங் கையெய ருசியுஞ்,சென் றெறி சிரலும் பன்றியும் பிணையு, மெழுவுங் சீப்பு முழுவிறற் கிணையமும், கோலுங் குந்தமும் வேலும் பிறவும்" சிலப். கடி: உoஎ - க்சு.

உச. கடிமதில் - காவலாகியமதில்; என்றது, ஏணியெய்தாத உயர்ச்சி யும் புறத்தோர்க்கு அகழலாகா அடியகலமும் அகத்தோர்க்கு நின்றுவினை செய்யலாந்தலையகலமும், கல்இட்டிகைகளாற்செய்யப்பட்டிருத்தலிற்குத் தப்படாமையுமுடையதென்றவாறு.

உங - ச. "உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கி, னமைவர

உரு பசுமீன் பரந்து பஃறொழி னிறைந்த
வெள்ளிக் குன்ற மூள்கிழிக் தன்ன
நெடுநிலை தோறு நிலாச்சுதை மலருங்
கொடிமிடை வாயில் குறுகினள் புக்குக்
கடைகாப் பமைந்த காவ லாளர்
ஈ0 மிடைகொண் டியங்கும் வியன்மலி மறுகும்
பன்மீன் விலைஞர் வெள்ளுப்புப் பகருநர்
கண்ணைடை யாட்டியர் காழியர் கூவியர்
மைந்நிண விலைஞர் பாசவர் வாசவ
ரென்னுநர் மறுகு மிருங்கோ வேட்களஞ்
ஈரு செம்பு செய்ஞ்ஞருங் கஞ்ச காரரும்
பைம்பொன் செய்ஞ்ஞரும் பொன்செய் கொல்லரு
மரங்கொஃ றச்சரு மண்ணீட் டாளரும்

ணென்றுரைக்கு நூல்" குறள். ஈசஈ.

உரு. மீனை - காவற்காடு. ச - உஅ. கடந்து குறுகினள் புக்கென்க.

உக - அ. உள் கிழித்தன்ன வாயில். புக்கு - புகுந்து.

உஈ. கடைகாப்பமைந்த - வாயில் காத்தற்கமைந்த.

ஈ0. மிடைகொண்டு - நெருங்குதல்கொண்டு.

ஈக. மீன்விலைஞர் - மீன்விலைப்பரதவர். உப்புப்பகருநர் - உப்புவிற்பார்; ஆவார், உமணரும் உமட்டியரும் ; அளவருமாம் ; பகர்தல் - விற்றல்.

ஈஉ. கள் நொடையாட்டியர் - கள்ளைவிற்கும் வலிச்சியர்; நொடை - விலை ; "நறவுநொடை" (பெரும்பாண். கசக.) காழியர் - பிட்டுவாணிகர். கூவியர் - அப்பவாணிகர் ; " காரகற் கூவியன் பாகொடு பிடித்த " ஐங். ஈஎஈ.

ஈங. மைந்நிண விலைஞர் - ஆட்டுவாணிகர். பாசவர் - இலையமுதிடுவார் ; அன்றி, கயிறுதிரித்துவிற்பாரும், பச்சிறைச்சி ஆட்டிறைச்சி விற்பாருமாம். வாசவர் - பஞ்சவாசம்விற்பார் ; அவை, "தக்கோலக் தீம்பூத் தகைசா லிலவங்கம், கப்பூரஞ் சாதியோ டைந்து" (சிலப். ரு : உசு - மேற்) என்பன.

ஈச. கோவேட்கள்-குயவர்; இப்பெயர் வேட்கோவரெனவும் வழங்கும்.

ஈரு. செம்பு செய்ஞ்ஞர் - செம்பு கொட்டிகள். கஞ்சகாரர் - வெண்கலக்கன்னர்.

ஈசு. பைம்பொன்செய்ஞ்ஞர் - பொற்பணிசெய்வோர். பொன்செய் கொல்லர் - உருக்குத்தட்டார்.

ஈஎ. மரங்கொஃறச்சர்-மரத்தைவெட்டுந்தச்சர்; கொல்லல்-வெட்டல்.

(பி - ம்.) உஎ. 'நெடுநிலைமணிதொறும்' ஈஉ. 'பைந்நிண விலைஞர்' ஈரு. 'செய்ஞரும்' ஈஎ. 'மரங்கொறச்சர்'

வரந்தர வெழுதிய வோவிய மாக்களுங்
தோலின் றுன்னருந் துன்ன வினைஞரு
சுo மாலைக் காரருங் காலக் கணிதரு
நலந்தரு பண்ணுந் திறனும் வாய்ப்ப
நிலங்கலங் கண்ட நிகழக் காட்டும்
பாண ரென்றிவர் பல்வகை மறுகும்
விலங்கரம் பொருஉம் வெள்வளை போழ்நரோ
சரு டிலங்குமணி வினைஞ ரிரீஇய மறுகும்
வேத்தியல் பொதுவிய லென்றிவ் விரண்டின்
கூத்தியல் பறிந்த கூத்தியர் மறுகும்
பால்வே ருக வெண்வகைப் பட்ட
கூலங் குவைஇய கூல மறுகு
நுo மாகதர் சூதர்வே தாளிகர் மறுகும்

மண்ணீட்டாளர் - சித்பாசாரிகள் ; அன்றிச் சுதையாற் பாவையுள்ளிட்டன பண்ணுவாரென்றும் குயவரென்றுமாம்; மணி. கூ: சஎ.

ஙஅ. ஓவியமாக்கள் - சித்திரகாரிகள்.

ஙக. தோலின் துன்னர் - செம்மார், உறைகாரரும், பறம்பர் முதலாயினருமாம். துன்னவினைஞர் - தையற்காரர்.

சo. மாலைக்காரர் - மாலைதொடுப்போர். காலக் கணிதர் - சோதிடராலோர் ; இவர்கள் கணிகளெனவுங் கூறப்படுவர்.

சக. பண் - இசை ; பாலை குறிஞ்சி மருதம் செவ்வழியென்னும் பெரும்பண்ணுமாம் ; நிறம் - அவற்றிற் கிளைகள் ; அவை இருபத்தொரு வகைப்படும்.

சஉ. நிலம் - மூவகைத்தானம் ; அவை எழுத்தும் அசையும் சீரும். கலம் - யாழ். கண்டம் - குரல்.

சங. பாணர் - இசைக்காரர்; இசைப்பாணரும், யாழ்ப்பாணரும், மண்டைப்பாணருமெனப் பாணர் பலவகையினராவார்.

சச. விலங்கரம் - வாளரம் ; வளைபோழ்நர் - சங்கறுப்பார்.

சரு. மணிவினைஞர் - மூத்துக்கோப்பார்.

சள. கூத்தியல்பு - கூத்தினிலக்கணம். கூத்தியர் - பதியிலார்.

சசு - எ. மணி. உ : கஅ - கூ. சஅ. பால் - பகுதி.

ச்கூ. குவைஇய - குவித்த. கூலமறுகு - கூலக்கடைத்தெரு.

சஅ - கூ. எண்வகைக்கூலங்களாவன: "கெல்லுப் புல்லு வரகுதினை சாமை, யிறுங்கு தோரையொடு கழைவினை கெல்லே" (சிலப். நு: உங-அடியார்) என்பன; கூலம் பதிணென்வகைத்தென்பர் (சிலப். ப. கருநு, ககூக) கூத்தநூலார்.

நுo. மாகதர் - இருந்தேத்துவார். சூதர் - நின்றேத்துவார். வேதாளிகர் - பலவகைத்தாளத்திலாடுவார்; "சூதர் வாழ்த்த மாகதர் றுவல, வேதா

(பி - ம்.) ஙஅ. 'வரந்தரவெழுதும்' ஙக. 'தோலின்றொழினரும்'

போகம் புரக்கும் பொதுவர்பொலி மறுகும்
கண்ணுழை கல்லா துண்ணூற் கைவினை
வண்ண வறுவையர் வளந்திகழ் மறுகும்
பொன்னுரை காண்போர் நன்மனை மறுகும்
நிஙி பன்மணி பகர்வோர் மன்னிய மறுகு
மறையோ ரருந்தொழில் குறையா மறுகு
மரையியன் மறுகு மமைச்சியன் மறுகு
மெனைப்பெருந் தொழின்செ யேனோர் மறுகு
மன்றமும் பொதியிலுஞ் சந்தியுஞ் சதுக்கமும்
சுo புதுக்கோள் யானையும் பொற்றூர்ப் புரவியுங்
கதிக்குற வடிப்போர் கவின்பெறு வீதியுஞ்
சேணுஞ்ங் கருவி தாழ்ந்தசெய் குன்றமும்

ளிகரொடு காழிகை யிசைப்ப" (மதுரை. சுஎo - எக); "சூதர் மாகதர் வேதா ளிகரொடு", "மாகதப் புலவரும் வைதா ளிகருஞ், சூதரும்" சிலப். நி: ரூஅ; உசு: எரு - நி.

நிக. பொதுவர் - பொதுமகளிர். நிஉ. நுழைகல்லா - நுழையாத.

நிங. வண்ணவறுவையர் - பலநிறங்களையுடைய உடைநெய்வோர்; புடைவை விற்பாருமாம்; "கோக்குநுழை கல்லா நுண்மையு.....அறுவை" பொருந. அஉ- ங.

நிச. பொன்னுரைகாண்போர் - பொன்னை உரைத்தவுரையை அறுதி யிடும் பொன்வாணிகர்.

நிநி. பன்மணிபகர்வோர் - பலவகைப்பட்ட இரத்தினங்களை விற்கும் வாணிகர்.

நிசு. அந்தணர்வீதி. நிள. இராசப்பெருந்தெருவும் மந்திரிகள்வீதியும்.

நிஅ. எனை - ஏனை; விகாரம். ஏனோர் - சேனாபதிகள் முதலியோர்.

நிகூ. "மன்றமும் பொதியிலும்" (மணி. உo: ங்o.) சந்தி - மூச் சந்தியும் ஐஞ்சந்தியும். சதுக்கம்- நாற்சந்தி; "சதுக்கமுஞ் சந்தியும் புதுப் பூங் கடம்பு, மன்றமும் பொதியிலும்" பழநாகு. உஉநி - சு.

சுo. புதுக்கோள் யானை - புதிதாகப்பிடிக்கப்பட்டு வந்த யானை; (மணி. கஉ: சநி; கஅ: கசுஅ.) பொற்றூர்ப்புரவி - பொன்னலாகிய இண் இணி மாலையையணிந்த குதிரை.

சுக. கதிக்குற - நடையில் மேம்பாடுற. வடிப்போர் - பயிற்றும் யானைப் பாகரும், அச்சுவகாரியரும் ; வடித்தல் - பயிற்றல் ; "வடிகயி றுய்ந்து" சீவக. எசுசு.

சுஉ. சேண் - நெடுந்தூரம். செய்குன்றம் - கட்டுமலை.

(பி - ம்.) நிக. 'போகம்புரக்குமுழவர்' நிஉ. 'ஞண்ணூற்கைவினை' நிகூ. 'மன்றமுங் கவலியும்' சுக. 'கவின்கொள்வீதியும்'

வேணவா மிகுக்கும் விரைமரக் காவும்
விண்ணவர் தங்கள் விசும்பிட மற்றது
சுரு நண்ணுதற் கொத்த நன்னீ ரிடங்களுஞ்
சாலையுங் கூடமுந் தமனியப் பொதியிலுங்
கோலங் குயின்ற கொள்கை யிடங்களுங்
கண்மெழிற் வுற்றுக் கொண்ட வேடமோ
டந்தர சாரிக ளமர்ந்தினி துறையு
எ0 மிந்திர விகார மெனவெழில் பெற்று

சுரூ. வேணவா - வேட்கையாலுண்டாகிய அவா; வேட்கையாவது:— பொருள்கண்மேற் றோன்றும் பற்றுள்ளம்; அவாவாவது:—அப்பொருள் தானே பெறவேண்டுமென்ற மேன்மேல் நிகழும் ஆசை; "செய்யுண் மருங்கின் வேட்கை யென்ன, மையெனிறுதி யவாமுன் வரினே, மெய்யொடுங் கெடுத லென்மனார் புலவர், டகார ணகார மாதல் வேண்டும்" (தொல். உயிர். சூ. உஅஅ) என்பதனால் முடித்துக்கொள்க.

சுரு. நீரிடங்கள் - பொய்கை முதலியவைகள்.

சுசு. சாலை - அரச்சாலைகள். தமனியப்பொதியில் - பொன்னாலாகிய அம்பலம்; 'பொன்னம்பலமு முண்டு' (சிலப். பதி. சo - சக) என்பர் அடியார்க்குநல்லார்; "கண்ணெலாங் கவர்வன கனக கூடமும்" (சூளா. நகர. எ) என்று வருதல் காண்க.

சுஎ. கோலங்குயின்ற - சித்திரமெழுதப்பெற்ற. கொள்கையிடங்கள்- விரதங்களை அனுட்டித்திருத்தற்குரிய தவச்சாலைகள்; கொள்கை- விரதம்; "தாவில் கொள்கைத் தந்தொழின் முடிமார்" (முருகு. அசு); "கோவலன் சென்றக் கொள்கையி னிருந்த, காவந்தி யையையைக் கைதொழு தேத்தி" சிலப். கச : கடு - சு.

உக - சுஅ. வியன்மலி மறுகுமுதற் கொள்கையிடங்களிறுதியாக வுள்ள இடவிசேடங்களைக் (மணிமேகலை) கண்டுகொள்க. இவ்வடிகளிற் போலப் பற்பலசாதியாருடைய குடியிருப்புக்களையும் இளங்கோவடிகள் கூறியிருத்தல்காண்க; "வேயா மாடமும் வியன்கல விருக்கையும்..... பாடல்சால் சிறப்பிற் பட்டினப் பாக்கமும்" சிலப். கு : எ - குஅ.

சுசு. அந்தரசாரிகள் - ஆகாயசாரிகள். அமர்ந்து - விரும்பி.

எ0. இந்திரவிகாரம் - புத்தனுலயத்தில் இந்திரனால் நிருமிக்கப்பட்ட அரங்கு; விகாரம் - 'கையாற் கருவியாற் பண்ணுது மனத்தால் நிருமித்தல்' (சிலப். க0 : கச) என்பர் அடியார்க்கு நல்லார்.

சுக - எ0. இந்திர விகாரமென்றது, காவிரிப்பூம்பட்டினத்துப் புத்த சைத்தியத்திலுள்ள ஏழரங்கினையும்; இஃது, 'அந்தர சாரிக ளமர்ந்தினி துறையும்' என்பதனாற்பெறப்பட்டது; "அந்தர சாரிக ளறைதலர் சாற்று, மிந்திர விகார மேழுடன் போகி" (க0. கசு - ச), "இந்திர விகார மேழுடன் புக்காங், கந்தர சாரிக ளாறைதம் பதின்மர்" (உஎ : கூஉ - சு) எனச் சிலப்பதிகாரத்து வருதல் காண்க.

(பி - ம்.) சுச. 'விசும்பிடை'

நவையறு நாத னல்லறம் பகர்வோ
ருறையும் பள்ளிப் பிறைவீ நல்லாள்
கோவலன் முதை மாதவம் புரிந்தோன்
பாதம் பணிந்துதன் பாத்திர தானமூங்
எடு தானப் பயத்தாற் சாவக மன்னவ
ஞானமொன் றின்றி யுலகாள் செல்வமுஞ்
செல்வற் கொணர்ந்தத் தீவகப் பீடிகை
யொல்காது காட்டப் பிறப்பினை யுணர்ந்தது
மூணர்ந்தோன் மூன்ன ருயர்தெய்வந் தோன்றி

எக. நவை - குற்றம். நாதன் - புத்தன். நல்லறம் - அருளறம். பகர்வோர் - சங்கத்தார்.

எஉ. பள்ளி - தவத்தோருறைவிடம்; "ஐயருறை பள்ளியிடம்" சீவக. கஎஉ.

எ0 - எஉ. இந்திரவிகாரம் பள்ளிக்கு உவமம்.

எங. கோவலன்முதை-மாசாத்துவான்; இவன், மதுரையிற் கோவலன் கொலையுண்டது முதலியவற்றை மாடலனென்னும் மறையவன் கூறக்கேட்டுத் தன் பொருளையெலாம் தானஞ்செய்துவிட்டுக் காவிரிப்பூம்பட்டினத்திற் புத்தசைத்தியத்துள்ள ஏழுவிகாரங்களிலுமிருந்து நோற்கும் பௌத்த முனிவர்களுக்கு முன்னேசென்று துறவுபூணடானதலின், 'மாதவம்புரிந்தோன்' என்றார், இதனை, "மைந்தற் குற்றது மடதையைக் குற்றதுஞ், செங்கோல் வேந்தற் குற்றதுங் கேட்டுக், கோவலன் முதை கொடுந்துய ரெய்தி, மாபெருந் தானமா வான்பொரு ளீத்தான், இந்திர விகார மேழுடன் புக்கான், கந்தர சாரிக ளாறைம் பதின்மர், பிறநூ லாக்கைப் பிறப்பற முயன்று, துறந்தோர் தம்முன் துறவி யெய்தவும்" (உஎ : அஅ - கூடு); "மாசாத்துவான் முன்முறப்பவும்" (உசு : உரைப்பாட்டுமடை) எனச் சிலப்பதிகாரத்து வருதலாலும், இக்காதையிற் பிற்கூறவரும் 'தையல்கேள்' (கூங) என்பது முதலியவற்றாலும் அறிந்துகொள்க.

எச. தன் பாத்திரதானம் - தங்கையிலுள்ள அமுதசுரபியென்னும் பாத்திரத்தாற் செய்யப்படும் அன்னதானம்.

எடு. தானப்பயம் -முற்பிறப்பிற் செய்த அன்னதானத்தாலுண்டாகிய புண்ணியம்; பயம் - பிரயோசனம். சாவகமன்னவன் - சாவகநாட்டரசனாகிய புண்ணியராசன்.

எடு - கூ. உலகாளுதற்குக்காரணம் தானப்பயன்.

எள. செல்வற் கொணர்ந்து - புண்ணியராசனே அழைத்துவந்து. பீடிகை - புத்தபீடிகை.

எஅ. ஒல்காது - தளராது. எஎ - அ. பீடிகையைக்காட்ட.

எசு. உணர்ந்தோன் - புண்ணியராசன். தெய்வம் - தீவதிலகை.

(பி - ம்.) எச. 'பாத்திரத்தாலனமூம்' எஅ. 'ஒல்லாதுகாட்ட'

அ0 மனங்கவல் கெடுத்தது மாநகர் கடல்கொள
வறவண ரடிகளுந் தாயரு மாங்குவிட்
டிறவா திப்பதிப் புகுந்தது கேட்டதுஞ்
சாவக மன்னன் றன்னு டெய்தத்
தீவகம் விட்டிடத் திருநகர் புகுந்ததும்
அரு புக்கபி னந்தப் பொய்யுரு வடனே
தக்க சமயிக டங்திறங் கேட்டது
மவ்வவர் சமயத் தறிபொரு ளெல்லாஞ்
செவ்வி தன்மையிற் சிந்தைவை யாதது
நாத னல்லறங் கேட்டலை விரும்பி
கூ0 மாதவற் றேர்ந்து வந்த வண்ணமுஞ்
சொல்லின ளாதலிற் றூயோய் நின்னையென்
னல்வினைப் பயன்கொ ளுன்கண் டதுவெனத்
தையல் கேணின் முதையுந் தாயுஞ்
செய்ததீ வினையிற் செழுநகர் கேடுறத்

அ0. மனங்கவல் கெடுத்ததும் - உள்ளம் கவலைகொள்ளுதலைக் கெடுத்ததும்; கவல் - கவலுதல்; முதனிலைத்தொழிற்பெயர். நகர் - காவிரிப்பூம் பட்டினம்.

அஉ. இப்பதியென்றது, வஞ்சியை. கேட்டதும் - (தீவதிலகையால்) தான் கேட்டதும்.

அச. தீவகம் - மணிபல்லவம்.

அரு. புக்கபின் - புகுந்து கண்ணகி கோட்டம் தொழுதபின். பொய்யுரு - மாதவன் வடிவு.

அசு. சமயிகள் - அளவையாதிமுதலியோர்.

அஅ. செவ்விது அன்மையின் - திருத்தமுடையன அல்லாமையின்; செவ்விது, பன்மையொருமைமயக்கம்.

அசு. நாதனல்லறம் - புத்தன் கூறிய தருமங்களை; மணி. உஅ: எக.

கூ0. மாதவற்றேர்ந்து - அறவணவடிகளைத்தேடி.

கூக. 'தூயோய்' என்றது முதலியன கோவலன்றுதை வார்த்தை.

கூங. தையல், விளி. தாதையும் தாயும் - கோவலனும் கண்ணகியும்.

கூச. தீவினை - முற்பிறப்பிற்சங்கமனைக்கொல்வித்ததனாலாகியபாவம். நகர் - மதுரை.

(பி - ம்.) அஉ. 'புகுந்ததுங் கேட்டதும்' அங. 'தன்னெடெய்த' அச. 'தீவகம் விடஇத்திரு' அடு. 'புக்கவளிர்த' அஅ. 'செவ்வித்தன்மை' கூச. 'திருநகர்'

கூடு துன்புற விளிந்தமை கேட்டுச் சுகத
னன்புகொ ளறத்திற் கருகனே ஞதலின்
மனைத்திற வாழ்க்கையை மாயமென் றுணர்ந்து
தினைத்தனை யாயினுஞ் செல்வமும் யாக்கையு
நிலையா வென்றே நிலைபெற வுணர்ந்தே
கஂ0 மலையா வறத்தின் மாதவம் புரிந்தேதன்
புரிந்த யானிப் பூங்கொடிப் பெயர்ப்பகீஉக்
திருந்திய ரன்னகர் சேர்ந்தது கேளாய்
குடக்கோச் சேரலன் குட்டுவர் பெருந்தகை
விடர்ச்சிலை பொறித்த வேந்தன் முன்னுட்

கூடு. விளிந்தமை - இறந்தமை. சுகதன் - புத்தன்; நல்ல வருகையையுடையவனென்று பொருள்; நல்லடையையுடையவனென்றுமாம்.

கூச - டு. தீவினையாற் கொலையுண்டிறந்தமையைக்கேட்டு.

கூசு. அன்புகொள் அறம் - நல்லறம். அருகன் - பக்குவி.

கூள. மனைத்திறவாழ்க்கை - இல்வாழ்க்கை. மாயம் - பொய்.

கூஅ. தினைத்தனையாயினும் - தினையளவாவது.

கூஅ - கூ. மணி. உஉ: கஈடு - சு.

கஂ0. பௌத்ததருமம் பூர்வோத்தர விரோதமில்லாததென்பராதலின், 'மலையாவறத்தின்' என்றார்; மலைதல் - மாறுபடல்; "முரணுத் திரு வற மூர்த்தியை" (சு), "மூன்பின் மலையா மங்கல மொழியின்" (உசுக)என ஈ0 - ஆம் காதையில் வருதலுங்காண்க. புரிந்தேதன் - செய்தேதன்.

கஂக. கொடி - வஞ்சி. கஂஉ. ஈகர் - வஞ்சிநகர்.

கஂக - உ. இந்நகர், "பொற்கொடிப் பெயர்ப்பகீஉம் பொன்னகர்" (உசு: கூஉ) என்று முன்னுங்கூறப்பட்டது.

கஂஈ. குடக்கோச்சேரலன் - மேனாட்டிற்கு அரசனாகிய சேரன்; குடக்கு - மேற்கு; கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டனுள் ஒன்றாகிய குடநாட்டிற்கு அரசனென்பதுபற்றிக் குடக்கோவென்றுரைக்குமமையும். குட்டுவர் பெருந்தகை - குட்ட நாட்டார்க்கு அரசன்; குட்டமும் கொடுந்தமிழ் நாடுகளுள் ஒன்று; "குடக்கோக் குட்டுவன்" (சிலப். உசு : சுக); "இயறோர்க் குட்டுவன்" சிறுபாண். சுகூ.

கஂச. விடர்ச்சிலை பொறித்த வேந்தன் - நெடுஞ்சேரலாதன்; இவன் வடநாட்டரசர்களெவென்று சென்று இமயமலையில் தனது இலச்சினையாகிய விற்பொறியைப்பொறித்தமையால், இமயவரம்பனெனவும், விடர்ச்சிலை பொறித்தவேந்தனெனவும் பெயர்பெற்றான்; இவனே, இமயவரம்பன் (பி - ம்.) கூடு - சு. 'விளிந்தமைகேட்டுச் சுகத்த, னங்கொன்றறத் திற்கு' கூஅ. 'தினைத்தனைத்தானும்' கூக. 'நிலையாதென்றே நிலைபெற வுணர்ந்து' கஂக-உ. 'பெயர்படுதிருந்திய'

கoருப்படு செவ்வாய்த் துடியிடை யாரொடு
மிப்பொழில் புகுந்தாங் கிருந்த வெல்லையு
ளிலங்கா தீவத்துச் சமவெளி யென்னுஞ்
சிலம்பினே யெய்தி வலங்கொண்டு மீளுந்
தரும சாரணர் தங்கிய குணத்தோர்
ககo கருமுகிற் படலத்துக் ககனத் தியங்குவோ
ரரைசற் கேது வவ்வழி நிகழ்தலிற்
புரையோர் தாமுமிப் பூம்பொழி லிழிந்து
கற்றலத் திருந்துழிக் காவலன் விரும்பி
முற்றவ முடைமையின் முனிகளே யேத்திப்

கெடுஞ்சேரலாதனெனவுங்கூறுவர்; இது, பதிற்றுப்பத்தில் இரண்டாம் பத்தாலுணரப்படும்; "இமயஞ் சூட்டிய வேம வித்பொறி, மாண்வினை நெடுந்தேர் வானவன்" (நூகூ) எனப்புறநானூற்றிலும், "விடர்ச்சிலை பொறித்த விறலோன்" (உஅ: கஙசு) எனச்சிலப்பதிகாரத்திலும் இவன் கூறப்பட்டிருத்தல்காண்க.

கoருப்பு - பவளம். துடி - உடுக்கை.

கoஉ - சு. சேரலனும் பெருந்தகையுமாகிய வேந்தன் முன்னொருகாலத்தித் துடியிடையாரொடும் இப்பொழிலிற்புகுந்து இருந்தவிடத்தென்க.

கoஎ - கூ. இலங்கைத்தீவத்துள்ள சமவெளியென்னுமலையையடைந்து வலங்கொண்டு மீண்ட சாரணர். இம்மலை, சமந்தமென்றும் சமந்தகூட மென்றும் பெயர்பெறும். இதன் விவரணம், இந்நூல் ககo-ஆம்காதை உஉ-ஆம்அடிக்குறிப்பிற் கூறப்பட்டது. தங்கிய குணத்தோர் - குணங்கள் தங்கப்பெற்றோர்.

ககo. முகிற்படலம் - மேகக்கூட்டம். ககனம் - ஆகாயம்; ககனத்தியங்கல் இருத்திகளில் ஒன்று.

ககக. அரசற்கு - இமயவரம்பனுக்கு. ஏது அவ்வழி நிகழ்தலின் - நல்வினையாகிய காரணம் பயனளித்தற்கு அவ்விடத்தே தோற்றுதலினாலே.

ககஉ. புரையோர் - மேற்கூறிய தருமசாரணர்.

கoகூ - கஉ. சாரணரும் குணத்தோரும் இயங்குவோருமாகிய புரையோர்.

ககசு. கற்றலத்து - சிலாதலத்தில். காவலன் - சேரன்.

கoச - கசு. வேந்தன் இருத்திவெல்லையுள் அவ்வழிக்கு ஏது நிகழ்தலிற் புரையோரும் இழிந்து அப்பொழிலிற் கற்றலத்திருந்தபொழுது.

ககச. முனிகளே - தருமசாரணரை.

(பி - ம்.) கoருி. 'துவர்படுசெவ்வாய்' கoகூ - கo. 'தரும சாதனர், தன்னின் மூத்தார்க்கு முகிற்படலதத்திக்கனை' ககச. 'முனிகளேயெவிப்'

ககடு பங்கயச் சேவடி விளக்கிப் பான்மையி
னங்கவர்க் கறுசுவை நால்வகை யமிழ்தம்
பாத்திரத் தளித்துப் பலபல சிறப்பொடு
வேத்தவை யாரொடு மேத்தின னிறைஞ்சலிற்
பிறப்பிற் றுன்பமும் பிறவா வின்பமு
கஉ0 மறத்தகை முதல்வ னருளிய வாய்மை
யின்ப வாரமு திறைவன் செவிமுதற்
றுன்ப நீங்கச் சொரியு மங்கா
ணின்பெருந் தாதைக் கொன்பது வழிமுறை
மூன்னோன் கோவலன் மன்னவன் றனக்கு
கஉடு நீங்காக் காதற் பாங்க ணுதவிற்
றுங்கா நல்லறந் தானுங் கேட்டு
மூன்னோர் முறைமையிற் படைத்ததை யன்றித்
தன்ஞ னியன்ற தனம்பல கோடி
யெழுநா ளெல்லையு ளிரவலர்க் கீத்துத்
கஊ0 தொழுதவம் புரிந்தோன் சுகதற் கியற்றிய

ககசு. அறுசுவையாவன:—கைப்பு, கார்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, தித்திப்பு (குறள். சஉ0. பரி) என்பன. நால்வகை யமிழ்தமாவன:—உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன; (மணி. உஅ: உசக - உ.) அமிழ்தம் - உணவு.

ககஞ - அ. காவலன், விரும்பி ஏத்தி விளக்கி அளித்து ஏத்தி இறைஞ்சலினென்க.

கஉ0. அ,ஏத்தகைமுதல்வன் - புத்தன்; தருமராசனென்றவாறு. வாய்மை - நால்வகைச்சத்தியம்.

ககக - உ0. மணி. உ: சுசா - எ; ம 0: கஅசு - அ.

கஉக. இறைவன் செவிமுதல் - அரசனுடைய செவியிடத்தே.

கஉ0 - க. வாய்மையாகிய அமுதை.

கஉஞ. ணின்பெருந்தாதைக்கு - உனது தந்தையாகியகோவலனுக்கு.

கஉஎ. முறைமையின் - நல்வழியாலே.

கஉக. எழுநாளென்றல், ஒருமரபு.

கஊ0. புரிந்தோன் - முற்கூறிய முன்னோனாகிய கோவலன். சுகதற்கு - புத்தனுக்கு.

(பி - ம்.) ககடு. 'விளக்கிய பான்மையின்' ககசு. 'அமிர்தம்' ககஅ. 'வேந்தனிறைஞ்சலின்' கஉஉ. 'சொரியு முன்னலில்' கஉசு. 'எல்லையிர வலர்க்களித்து'

வானோங்கு சிமையத்து வாலொளிச் சயித்த
மீனோர்க் கெல்லா மிடர்கெட வியன்றது
கண்டுதொழு தேத்துங் காதலின் வந்தித்
தண்டாக் காட்சித் தவத்தோ ருருளிக்
கஉடு காவிரிப் பட்டினங் கடல்கொளு மென்றவத்
தூவுரை கேட்டுத் துணிந்திவ ணிருந்த
தின்னுங் கேளாய் நன்னெறி மாதே
தீவினை யுருப்பச் சென்றநின் முதையுங்
தேவரிற் றோற்றிமுற் செய்தவப் பயத்தா
கசo லாங்கத் தீவினை யின்னுந் துய்த்துப்
பூங்கொடி முன்னவன் போதியி னல்லறந்
தாங்கிய தவத்தாற் முன்றவந் தாங்கி
காதலி தன்னெடு கபிலேயம் பதியி

கஉக. சிமையத்து - மலையில். வாலொளிச்சயித்தம் - வெள்ளிய ஒளியையுடைய ஆலயம் ; சயித்தம் - சைத்தியமென்னும் வடமொழிச் சிதைவு.

கஉஉ. ஈனோர்க்கு - இவ்வுலகத்தோர்க்கு; "ஈனோர்வடிவில்" (சீலப். பதி: நிருக; உக: களசு); "ஈனோர்க் குரைப்பாம் பதிகத்து ளியன்ற வாறே" சீவக. உங.

கஉச. தண்டாக் காட்சி - நீங்காத அறிவு.

கஉங - ச. இத்தவத்தோரென்றது, ஆண்டுள்ள முனிவர்களே.

கஉசு. யான் இவ்விடமிருந்தது தூவுரை கேட்டமையாலேயேயென்க.

இதுகாறும், தான் துறந்ததற்கும் வஞ்சிநகரடைந்ததற்கும் ஆண்டே வதிவதற்கும் காரணங் கூறிய மாசாத்துவான், மேலே பெரியோர் தனக்குக்கூறிய செய்தி முதலியன கூறுவான்.

கஉஅ. சென்ற - கொலையுண்டிறந்த.

கஉக. முற்செய்தவப்பயத்தால் தேவரிற் றோற்றியென்க.

கசo. ஆங்கத்தீவினை - முற்கூறிய தீவினையின் பயனை. துய்த்து - அனுபவித்து.

கசச. பூங்கொடி, விளி. முன்னவன் - புத்தன்.

கசஉ. காதலி - கண்ணகி. கபிலேயம்பதி - கபிலநகர் ; இது புத்தன் பிறந்தஇடம் ; கபிலவஸ்துவென்றும் கூறப்படும்.

(பி - ம்.) கஉக - உ. 'வால்வளைச் சயித்தம், மேனோர்க் கெல்லாமடர் கெட' கஉங, 'காதலன்வந்து' கஉடு - சு. 'மென்ற, தூமுரைகேட்டுத் தணிந்தியானிருந்தேன்' கஉஅ. 'தீவினையிறுப்ப' கஉக. 'தோற்றமுன்' கசக. 'போதியர்நல்லறம்'

ஞதை னல்லறங் கேட்டுவீ டெய்துமென்
கசடு றற்புதக் கிளவி யறிந்தோர் கூறச்
சொற்பய னுணர்ந்தேன் ரோகை யானு
மங்ஙா ளங்கவ னறநெறி கேட்குவ
னின்ன தன்மையங் கெடுநிலைக் கந்திற் முன்னிய
துவதிக னுரையிற் முணிந்தனை யன்ரே
கடுo தவநெறி யறவணன் சாற்றக் கேட்டன
ஞங்கவன் ரனுநின் னறத்திற் கேதுப்
பூங்கொடி கச்சி மாநக ராதலின்
மற்றம் மாநகர் மாதவன் பெயர்நாட்
பொற்றொடி தாயரு மப்பதிப் படர்ந்தன
கருடு ரன்னதை யன்றியு மணியிழை கேளாய்
பொன்னெயிற் காஞ்சி நாடுகவி னழிந்து
மன்னுயிர் மடிய மழைவளங் கரத்தலி
னங்ஙகர் மாதவர்க் கைய மிடுவோ

கசச. நாதன் - புத்தன். எய்தும் - அடைவான்.

கசடு. கிளவி - சொல். கசசு. பயன் - பிரயோசனம். தோகை, விளி.

கசள. அவனறநெறி - புத்தனுபதேசிக்கும் அறவழிகளை.

கசசு - எ. யானும் அறநெறிகேட்குவன்.

கசஅ. நின்னது தன்மை - உனது பிற்காலச் செய்தியை.

கசஅ - கூ. நினது தன்மையைத் துவதிகனுரையால் தெளிந்தா யன்ரே.

கடுo. (கந்திற்பாவையால் நீ அறிந்தாயென்பதை) அறவணவடிகள் சொல்லக்கேட்டேன்.

கடுக. அவன்ரனும் - அறவணவடிகளும். ஏது - ஏதுநிகழ்ச்சிக் குரிய இடம்.

கடுஉ. பூங்கொடி, விளி.

கடுச. பொற்றொடிதாயரும் - உனது தாயராகிய மாதவியும் சுதமதி யும்.

கடுஈ - ச. பெயர்நாளில் தாயரும் உடன் சென்ரார்.

கடுசு. காஞ்சிநாடு - காஞ்சிநகரத்தையுடைய நாடு.

கடுள. மடிய - இறக்க. கடுஅ. ஐயம் - பிச்சை.

கடுசு - எ. மணி. உக: கசள - அ.

(பி - மீ.) கசடு - சு. 'கழறச்சொற்பய' கசள. 'அறநெறிகடவேன்' கசஈ. 'துணிந்தனை தவநெறி' கடுச. 'பொற்றொடித்தாயரும்' கடுடு. 'அன்னதன்றியும்'

நின்மையி னிங்ஙன மெய்தினர் காணூ
கசுo யாருயிர் மருந்தே யங்காட் டகவயிற்
காரெனத் தோன்றிக் காத்தனின் கடனென
வருந்தவ னருள வாயிழை வணங்கித்
திருந்திய பாத்திரஞ் செங்கையி னேந்திக்
கொடிமதின் மூதூர்க் குடக்கணின் றேங்கி
கசுரு வடதிசை மருங்கின் வானத் தியங்கித்
தேவர் கோமான் காவன் மாநகர்
மண்மிசைக் கிடந்தென வளர்தலை மயங்கிய
பொன்னகர் வறிதாப் புல்லென் றூயது
கண்டிளங் கசிந்த வொண்டொடி நங்கை
களo பொற்கொடி மூதூர்ப் புரிசை வலங்கொண்டு
நடுநக செல்லை நண்ணின ளிழிந்து
தொடுகழற் கிள்ளி தூணெயிளங் கிள்ளி
செம்பொன் மாச்சினைத் திருமணிப் பாசடைப்
பைம்பூம் போதிப் பகவற் கியற்றிய

கருகூ. எய்தினர் - (அம்மாதவர்) வந்தார்.

கசுo - சுக. மணி. உக: கருள - அ.

கசுக. காரை உவமைகூறினர், இவள் கைம்மாறு கருதாமலளிக்கின் றமையின் ; "கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட், டெண்ணற்றுங் கொல்லோ வுலகு" குறள். உகக.

கசுஉ. மாசாத்துவானை 'அருந்தவன்' என்றார், துறவு பூண்டமையின்.

கசுச. மூதூர்க்குடக்கண் - பழைமையாகிய வஞ்சிநகரத்தின் மேற் றிசைக் கண்ணே.

கசுசு. மாநகர் - அமராவதி.

கசுஅ. பொன்னகர் - காஞ்சிநகர். வறிதாப் புல்லென்றூயது - செல்வ மின்றிப் பொலிவிழந்திருந்ததை.

கசுக. நங்கை - மணிமேகலை. களo. புரிசை - மதில்.

களஉ. தொடுகழற் கிள்ளியின் தம்பியாகிய இளங்கிள்ளி ; கிள்ளி - சோழன்.

களங. சினை - கிளை. திருமணி - அழகிய மரகதமணி. பாசடை - பசிய இலை.

களக - ச. இவ்வடிகளிற் கூறியது போலவே, "பவளச் செழுஞ்

(பி - ம்.) கருகூ - சுo. 'காணுவாருயிர்' கசுஉ. 'அருந்தவரருள' கசுள. 'மிசைகிடகதனவளந்தலை மயக்கிப்' கசுஅ. 'வறிதாய்ப்புல்'. களo-எக 'புரிசை புலங்கொண்டு, நகெரெல்லை நண்ணஎள்ளிழிந்து'

களரு சேதியங் தொழுது தென்மேற் காகத்
தாதணி பூம்பொழி ருன்சென் றெய்தலும்
வையங் காவலன் றன்பாற் சென்று
கைதொழு திறைஞ்சிக் கஞ்சுக னுரைப்போன்
கோவலன் மடந்தை குணவதம் புரிந்தோ
கஅ0 ணுவலங் தீவிற் ருனனி மிக்கோ
ளங்கையி னேந்திய வமுத சுரபியொடு
தங்கா திப்பதித் தருமத வனத்தே
வந்து தோன்றினண் மாமழை போலென
மந்திரச் சுற்றமொடு மன்னனும் விரும்பிக்
கஅரு கந்திற் பாவை கட்டுரை யெல்லாம்
வாயா கின்றென வந்தித் தேத்தி
யாய்வளை நல்லா டன்னுழைச் சென்று
செங்கோல் கோடியோ செய்தவம் பிழைத்தோ .

சுடர் மரகதப் பாசடைப், பசும் பொன் மாச்சினை விசும்பகம் புதைக்கும், போதி'' (வீர. யாப்பு. கக - உதாரணம்) என்று மகாபோதியை இவ்வனஞ் சிறப்பித்துக்கூறியிருத்தல் காண்க. மகாபோதி பொன்மயமாயிருந்ததென்பது பற்றிப் பௌத்தர் இக்காலத்தும் அரசமரத்தைப் பொற்றகட்டாலலங்கரித்து வழிபடுவர்.

களரு. சேதியம் - கோயில்.

களஉ-ரு. தூணியிளங்கிள்ளி பகவற்கியற்றிய சேதியத்தைத்தொழுது.

களஎ. வையங்காவலன் - தூணியிளங்கிள்ளி.

களஅ. கஞ்சுகன் - சட்டையிட்ட பிரதானி.

களசு. 'கோவலன்மடந்தை' என்பது முதலியன கஞ்சுகன்கூற்று. மடந்தை - மகள்.

கஅஉ. தருமதவனம் - தருமத்தைக்கொடுக்கும் வனம்.

கஅங. மழைபோல் வந்து தோன்றினனென்று கஞ்சுகன் கூற.

கஅச. மந்திரச்சுற்றம் - மந்திரிகள்.

கஅரு. கந்திற்பாவையென்றது, காஞ்சியில் ஒருநூணிலுறையும் தெய்வவிசேடத்தை.

கஅசு. வாயாகின்றென - உண்மையாகின்றதென்று. வந்தித்தேத்தியது, மேற்கூறிய கந்திற்பாவையை.

கஅள. நல்லாடன்னுழை - மணிமேகலையிடத்து.

கஅஅ. 'செங்கோல்' என்பதுமுதல் தூணியிளங்கிள்ளி வார்த்தை.

கஅஅ. மணி. எ: அ - க0.

(பி - ம்.) களரு. 'சேதிமந்தொழுது' கஅஉ. 'தருமதாவனத்தே' 'தருமசார்வனத்தே' கஅஅ. 'தெய்வம்பிழைத்தோ'

கொங்கவிழ் குழலார் கற்புக்குறை பட்டோர்
ககூ0 நலத்தகை நல்லாய் நன்னு டெல்லா
மலத்தற் காலை யாகிய தறியேன்
மயங்குவேன் முன்னரோர் மாதெய்வத் தோன்றி
யுயங்கா தொழிகின் னுயர்தவத் தாலோர்
காரிகை தோன்று மவள்பெருங் கடிஞையி
ககூடு னுருயிர் மருந்தா லகனில மூய்யு
மாங்கவ ளருளா லமரர்கோ னேவலிற்
றுங்கா மாரியுந் தானனி பொழியு
மன்னு ளிந்த வகனகர் புகுந்த
பின்னு ணிகழும் பேரறம் பலவாற்
உ00 கார்வறங் கூரினு நீர்வறங் கூராது
பாரக வீதியிற் பண்டையோ ரிழைத்த
கோமுகி யென்னுங் கொழுநீ ரிலஞ்சியொடு
மாமணி பல்லவம் வந்த தீங்கெனப்
பொய்கையும் பொழிலும் புனைமினென் றறைந்தத்
உ0டு தெய்வதம் போயபிற் செய்தியா மமைத்த
திவ்விட மென்றே யவ்விடங் காட்டவத்

ககக. அலத்தற்காலை - வறுமைக்காலம். அறியேன் - அறியேனாகி.

கஅஅ - கக. மணி. கடு: சுசு - டு0.

ககஉ. உயங்காதொழி - வருந்தவேண்டா.

ககச. தோன்றும் - தோன்றுவாள். கடிஞை - பிச்சைப்பாத்திரம்.

ககடு. ஆருயிர் மருந்து - சோறு. ககள. மாரி - மேகம்.

ககசு - எ. அவளருளால் கோன் ஏவலிற் பொழியும்.

ககஅ. அன்னுள் - அம்மங்கை. ககக. பின்னுள் - பிற்காலத்து.

உ00. கார்வறங்கூரினும் - மழைபெய்யாதொழியினும். கூராது, முற்று.

உ0க. பண்டையோரிழைத்த - முன்னோர் செய்த.

உ0உ. இலஞ்சி : பொய்கை.

உ0ச. புனைமின் - அலங்கரித்துச் செய்மின்.

உ0சு. (துணையிளங்கிள்ளி) காட்ட.

(பி - ம்.) ககஉ. 'முன்னரோமாதெய்வம்' உ0ச - டு. 'பொதியிலும் புனைமினென்றறைந்த, தெய்வதம்'

தீவகம் போன்ற காவகம் பொருந்திக்
கண்ணெஞ் சிறந்த காரிகை நல்லாள்
பண்டையெம் பிறப்பினைப் பான்மையிற் காட்டிய
உகஅ வங்கப் பீடிகை யிதுவென வறவோன்
பங்கயப் பீடிகை பான்மையின் வகுத்துத்
தீவ திலகையுந் திருமணி மேகலா
மாபெருந் தெய்வமும் வந்தித் தேத்துதற்
கொத்த கோயி லுளத்தகப் புனைந்து
உகரு விழவுஞ் சிறப்பும் வேந்த னியற்றத்
தொழுதகை மாதர் தொழுதன ளேத்திப்
பங்கயப் பீடிகைப் பசிப்பிணி மருந்தெனு
மங்கையி னேந்திய வமுத சுரபியை
வைத்துநின் றெல்லா வுயிரும் வருகெனப்
உஉஅ பைத்தர வல்குற் பாவைதன் கிளவியின்
மொய்த்த மூவறு பாடை மாக்களிற்
காணர் கேளார் கான்முட மானோர்
பேணு மாக்கள் பேசார் பிணித்தோர்
படிவ நோன்பியர் பசிநோ யுற்றோர்

உஅள. தீவகம் - மணிபல்லவம். காவகம் - சோலையினுளளே.

உகஅ. அங்கப்பீடிகை - மணிபல்லவத்திருந்தபுத்தபீடிகை. அற வோன் - புத்தன்.

உகக. வகுத்து - செய்து.

உகச. உளத்தக - நினைத்தற்குத்தக. உகசு. மாதர் - மணிமேகலை.

உகள. பங்கயப்பீடிகை - பாதபீடிகையில்.

உகரு. வருகென - வருகவென்று மணிமேகலை சொல்ல.

உகள - ரு. பீடிகையில் அமுதசுரபியை வைத்தென்க.

உஉஉ. காணர் - குருடர். கேளார் - செவிடர்; அவயவஹீனர்க்கு இரங்குதலைப் பத்துவிஷ்டைகளுள் ஒன்றென்பர்.

உ஧உரு. பேணுமாக்கள் - பாதுகாக்கப்படாதமாக்கள் ; என்றது, அகதி களை.

உஉஉ - ரு. மணி. கரு: ககச - உ.

உஉச. படிவநோன்பியர் - தவவேடத்தையும் நோன்பையுமுடையவர்.

(பி - ம்.) உகரு. 'மாதெய்வந்தன்னையும்' உகரு. 'அறித்தனளேத்தி' உகக. 'எலலாவகையிரும்' உஉ஦. 'தன்கையின்'

உஉரு மடிநல் கூர்ந்த மாக்கள் யாவரும்
பன்னூ றுயிரம் விலங்கின் றொருகுதியு
மன்னுயி ரடங்கலும் வந்தொருங் கீண்டி
யருந்தியோர்க் கெல்லா மாருயிர் மருந்தாய்ப்
பெருந்தவர் கைப்பெய் பிச்சையின் பயனு
உஈ0 நீரு நிலமுங் காலமுங் கருவியுஞ்
சீர்பெற வித்திய வித்தின் விளைவும்
பெருகிய தென்னப் பெருவளஞ் சுரப்ப
வசித்தொழி லுதவி வளர்த்தற் றதுவெனப்
பசிப்பிணி தீர்த்த பாவையை யேத்திச்
உஈரு செல்லுங் காலைத் தாயர் தம்மூட
னல்லவை கடிந்த வறவண வடிகளு
மல்லன் மூதூர் மன்னுயிர் முதல்வி
நல்லறச் சாலை நண்ணினர் சேறலுஞ்

உஉரு. மடிநல்கூர்ந்தமாக்கள் - உடுத்தற்கு ஆடையுமின்றி வறுமையுற்றமாக்கள் ; சோம்புதலால் வறுமையுற்றமாக்களெனினுமமையும்.

உஉக. பெருந்தவர் கைப்பெய் பிச்சையின்பயன் பெருகுதலை, "அறப்பயனும், தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால், வான்சிறிதாப் போர்த்து விடும்" (நாலடி. ஈஅ) என்பதனாலுணர்க.

உஈக. வித்தியவித்து-விதைத்தவிதை. உஈஉ. (அப்பாத்திரஞ்) சுரப்ப.

உஉஈ-ஈஉ. பிச்சையின் பயனும் வித்தின் விளைவும் பெருகியதென்னச் சுரப்ப.

உஈஈ. வசி - மழை ; மணி. க : எக.

உஈச. பாவையை - மணிமேகலையை. ஏத்தி - மேற்கூறிய காணர் முதலியோர் துதித்தி.

உஈரு. காலை - காலத்தில். தாயர்தம்முடன்- மாதவி சுதமதியென்னு மிருவருடன்.

உஈசு. அல்லவைகடிந்த - அறமல்லாதவற்றை நீக்கிய.

உஈள. உயிர்முதல்வி-மணிமேகலை. உஈஅ. அறச்சாலை-தருமசாலையை.

உஈரு - அ. தாயர்தம்முடன் அறவணவடிகளும் உயிர்முதல்வியின் அறச்சாலையை நண்ணுதலும்.

(பி - ம்.) உஉரு. 'நல்கூர்தலமகளையாவரும்' உஉஅ - ஈ. 'மருந்தி பெருந்' உஈஈ. 'தொழிலுதவிவந்ததுவென்ன'

சென்றவர் தம்மைத் திருவடி வணங்கி
உசஎ நன்றென விரும்பி நல்லடி கழுவி
யாசனத் தேற்றி யறுசுவை நால்வகைப்
போனக மேந்திப் பொழுதினிற் கொண்டபிற்
பாலிலைத் திரையலும் பளிதமும் படைத்து
வாய்வ தாகவென் மனப்பாட் டறமென
உசடு மாயைவிட் டிறைஞ்சினண் மணிமே கலையென்.

உஅ.—கச்சிமாநகர்புக்ககாதை முற்றிற்று.

உஈக. சென்று வணங்கி. உசஎ. கழுவி - விளக்கி.

உசஉ. பொழுதினில் - காலம்பெற.

உஈக - சஉ. மணி. உஅ: ககச - எ.

உசஈ. திரையல் - வெற்றிலை. பளிதம் - கருப்பூரம்.

உசச. வாய்வதாக - தப்பாது பலித்திடுக.

க - உசடு. மணிமேகலை, தோய்ந்து கடந்து வாயில் குறுகினள்புக்குக் கண்டு மகிழ்வுற்றுப் பள்ளிபுக்குப் பணிந்து சொல்லினளாதலின், அருந்தவன், 'நின்னைக் கண்டது எந்த நலவினைப்பயன்கொல்' என்றுகூறி, 'காத்தல் நின்கடன்' என அருள, ஆயிழை வணங்கி ஏந்தி ஓங்கி இயங்கி வலங்கொண்டு இழிந்து தொழுது சென்றெய்தலும், கஞ்சுகனுரைப்போன், 'வந்து தோன்றினள்' என, மன்னனும் விரும்பி ஏத்திச் சென்று காட்ட நல்லாள் பொருந்தி வருத்துப் புனைந்து ஏத்தி வைத்து 'வருக' என, காணர் முதலியோரும் விலங்கின்றெருகுதியும் மன்னுயிரடங்கலும் வந்தீண்டி ஏத்திச் செல்லுங்காலையில தாயர்தம்முடனை அறவணவடிகளும் நண்ணினர்சேறலும் மணிமேகலை வணங்கி விரும்பிக் கழுவி ஏற்றி ஏந்திப் படைத்து விட்டு இறைஞ்சினளென வினைமுடிவுசெய்க.

(பி - ம்.) உஈக. 'திருவடிதொழுது' உசஎ. 'நல்லடிவிளக்கி', 'நல்லடிதழுவி' உசஉ. 'ஏத்தப்'

இருபத்தோன்பதாவது

தவத்திறம்பூண்டதருமங்கேட்டகாதை.

[இருபத்தோன்பதாவது மணிமேகலை, காஞ்சிமாநகர்க்கட்சென்ற பின்னர் அறவணரடிகளும் தாயருஞ்செல்ல அவரைக்கண்டு இறைஞ்சித் தருமங்கேட்ட பாட்டு.]

இறைஞ்சிய விளங்கொடி தன்னை வாழ்த்தி
யறந்திகழ் நாவி னறவண னுரைப்போன்
வென்வேற் கிள்ளிக்கு நாகநா டாள்வோன்
றன்மகள் பீலி வளைதான் பயந்த
புனிற்றிளங் குழவியைத் தீவகம் பொருந்தித்
தனிக்கலக் கம்பளச் செட்டிகைத் தரலும்
வணங்கிக் கொண்டவன் வங்க மேற்றிக்
கொணர்ந்திடு மந்நாட் கூரிரு ளியாமத்
தடைகரைக் கணித்தா வம்பி கெடுதலு
மரக்கலங் கெடுத்தோன் மைந்தனைக் காணு

க. இளங்கொடிதன்னை - மணிமேகலையை.

ங. வென் - வெல்லு. கிள்ளி - கெடுமுடிக்கிள்ளி. நாகநாடாள்வோன் - வளைவணன்.

ச. மகளாகிய பீலிவளை. பயந்த - பெற்ற.

ரு. குழவியை - குழந்தையை. தீவகம் - மணிபல்லவம்.

க. தனிக்கலம் - ஒற்றைக்கபபல்.

ங - சு. பீலிவளை தான் கிள்ளிக்குப் பயந்த குழவியைத் தீவகத்தைப் பொருந்திக் கம்பளச் செட்டியின்கையில் தரலும்.

எ. அவன் - கம்பளச்செட்டி.

அ. கூரிருள்யாமத்து - மிக்க இருளையுடைய இடையிரவில்.

சு. அணித்தா - சமீபமாக. அம்பி - கப்பல்.

கo. கெடுத்தோன் - கம்பளச்செட்டி. மைந்தனை - குழந்தையை.

(பி - ம்.) 'இருபத்தேழாவது தருமதிறம்' க. 'இறைஞ்சியநின்ற விளங்' ரு. 'தீபம்பொருந்தி'

தரைசற் குணர்த்தலு மவனயர் வுற்று
விரைவனன் றேடி விழாக்கோண் மறப்பத்
தன்விழாத் தவிர்தலின் வானவர் தலைவ
னின்னுயிர்த் தந்தை நெடுங்குலத் துதித்த
கரு மன்னுயிர் முதல்வன் மகர வேலையுண்
முன்னிய வங்க மூங்கிக் கேடிறப்
பொன்னி னூசி பசுங்கம் பளத்துத்
துன்னிய தென்னத் தொடுகட லுழுந்துழி
யெழுநா ளெல்லை யிடுக்கண்வந் தெய்தா
உ0 வழுவாச் சீலம் வாய்மையிற் கொண்ட
பான்மையிற் றனது பாண்டு கம்பளக்
தானகெக் குற்ற தன்மை நோக்கி
யாதி முதல்வன் போதி மூலத்து
நாத னுவோ னளிநீர்ப் பரப்பி

கக. அரைசற்கு - நெடுமுடிக்கிள்ளிக்கு. அயர்வுற்று - வருத்தி.

கஉ. விரைவனன் - விரைபவனாகி. தேடி-குழந்தையைத்தேடுதலால். விழாக்கோள் - இந்திரவிழாக்கொள்ளுதலை.

கங. வானவர்தலைவன்-இந்திரன். ககூ. இன்னுயிர்த்தந்தை-கோவலன்.

கடு. மன்னுயிர்முதல்வனென்றார், அருளாற்பூண்டோனுதலின்.

கசு. முங்கி - முழுகி.

கஎ. ஊசி வணிகனுக்கும், பசுங்கம்பளம் கடலுக்குமுவமம்.

கஅ. உழுந்துழி - வருத்தி நீந்தியபொழுது.

கடு -கூ. எழுநாளெல்லை உயிர்முதல்வர் தொடுகடலுழுந்துழியென்க ; (மணி. உஅ : கஉங - ஈ0) "மண்ணுவழி யின்றி நாள்சில நீந்த" (கடு : ஈக) என்றார் சிலப்பதிகாரத்தும்.

(ககூ) 'எழுநாள்' என்பதைப் பின்வரும் (உ0) 'கொண்ட' என்பதனோடு கூட்டினும் பொருந்தும்.

உ0. சிலத்தை நால்வகைவாய்மையுடன்கொண்ட.

உக. பாண்டுகம்பளம் - வெள்ளைக்கம்பளமாகிய ஆசனம்.

உக - உ. மணி. ககஎ: உஅ - கூ.

உங-சு. ஆதிமுதல்வனுகிய நாதனுகற்பாலோன்; எல்லாரும், முற்கூறிய வணிகனை ; இங்ஙனம் புத்தனுகற்பாலோரைப் போதிசத்துவரென்பர். நளி - பெருமை.

(பி - ம்.) ககூ. 'அரசர்க்குரைத்தலும்' ககூ. 'முருங்கிக் கேடிற' கஅ. 'கடனீர்த்துழி' கஙூ. 'எல்லையுருவந்தெய்தா' உக - உ. 'கம்பளத்தானகெக்குற்ற' உங. 'அதிரமுதல்வன்' உசு - ஞ. 'நாதனாவானை...நீர்பரப்பி, யெவ்வம்'

உரு னெவ்வமுற் றுன்றன தெவ்வர் தீரெனப்
பவ்வத் தெறித்துப் பாரமிதை மூற்றவு
மறவர சாளவு மறவாழி யுருட்டவும்
பிறவிதோ றுதவும் பெற்றிய ளென்றே
சாரண ரறிந்தோர் காரணங் கூற
உ0 வந்த வுதவிக் காங்கவள் பெயரைத்
தந்தையிட் டனனினைத் தையனின் றுறவியு
மன்றே கனவி னனவென வறைந்த
மென்பூ மேனிமணி மேகலா தெய்வ
மென்பவட் கொட்ப வவனிடு சாபத்து

உசு - ருரு. நாதனுலோன் கடலில் துன்பமுற்றான் ; அவனது துன்பத்தைத் தீர்ப்பாயென்று மணிமேகலாதெய்வத்திற்கு இந்திரன் சொல்ல.

உசு. பாரமிதை: (மணி. உசு : சரு); பாரமிதைபத்தும் உயிருறுப்புப் பொருணேர்ச்சிவகையான்முப்பதாமென்பர் ; "அருணெறியாற்பாரமிதையாதைந்து முடனடக்கிப், பொருண்முழுதும் போதியின்கீழ் முழுதுணர்ந்த முனிவரன்ற, னருண்மொழியா னல்வாய்மை யறிந்தவரே பிறப்பறுப்பார், மருணெறியாம் பிறதூலு மயக்கறுக்கு மாளுளதோ" (சித்தாந்தத் தோகை ; சிவ - சித்தி. பாபக்கம், சௌத்திராந்திகன்மதம், உ-ஞானப்) பாரமிதையென்பதற்குக் கரையையடைவதென்றுபொருள். ஈண்டுக்கூறிய தானமுதலியபத்தும் நிரம்பப்பெற்றவனுலமையின், புத்தன் தசபல னென்று வழங்கப்படுவன். இப்பத்தினுள், தானபாரமிதையைவிளங்கக் கூறுவதாகிய தானபாரமிதையென்னும் நூலொன்று வடமொழியிலிருப்பதாகத் தெரிகின்றது ; இது ஸ்ரீ ஹரிஷகவி செய்த ஸம்ஸ்கிருதகாவ்யம், ரு-ஆம் ஸர்க்கத்துள்ள கக-ஆவது சுலோகத்தாலும் அதற்கு ஸ்ரீமல்லிநாத ஸூரிசெய்த வியாக்கியானத்தாலுமுணரப்படும். முற்றவும் - பூரிக்கவும்.

கச - உசு. மணி. உக: கஅக - உ. உஎ. அறவாழி - தருமசக்கரம்.

உசு - அ. எடுத்துப்பிறவிதோறும் உதவும்பெற்றியள்.

உஅ - கூ. பெற்றியளென்றுகூற.

உ0. அந்தவுதவிக்கு - மேற்கூறிய வணிகனைக் கரையேற்றிய அவ்வுபகாரத்தைத் தான் மறவாதிருத்தலைப் புலப்படுத்தற்பொருட்டு.

உக. தந்தை - கோவலன். தினை - தினைக்கு. துறவியும் - துறத்தலையும்.

கச - உக. மணி. எ: உஉ - அ. சிலப். கரு: உஅ - உஎ. உ0 - உஉ.

உச. என்பவட்கொட்ப அவனிடுசாபத்து என் றதனுல், மணிமேகலாதெய்வம் சாபமிட்டமைபெறப்பட்டது.

(பி - ம்.) உசு. 'அறிந்தோராரணங்கூற' உக. 'தாதையிட்டனன்' உச. 'என்பவட்குரைப்பவவனிடுசாபத்து'

நுரு நகர்கடல் கொள்ளகின் ரூயரும் யானும்
பகருகின் பொருட்டா லிப்பதிப் படர்ந்தன
மென்றலு மறவணன் ருளிணை யிறைஞ்சிப்
பொன்றிகழ் புத்த பீடிகை போற்றுந்
தீவ திலகையு மித்திறஞ் செப்பின
சுo ளாதலி னன்ன வணிநகர் மருங்கே
வேற்றுருக் கொண்டு வெவ்வே றுரைக்கு
நூற்றுறைச் சமய நுண்பொருள் கேட்டே
யவ்வுரு வென்ன வைவகைச் சமயமுஞ்
செவ்வி தன்மையிற் சிந்தையின் வைத்திலே
சுரு னடிகண் மெய்ப்பொரு ளருளுக வென்ன
நொடிகுவெ னங்காய் நுண்ணிதிற் கேணீ
யாதி சினேந்திர னளவை யிரண்டே
யேதமில் பிரத்தியங் கருத்தள வென்னச்

நுரு, நகர் - காவிரிப்பூம்பட்டினம்.

கநூ - நுரு. தன்விழாத்தவிர்தலின், மணிமேகலாதெய்வத்திற்கொப்ப வானவர்தலைவனுகிய அவன் இட்டசாபத்தால் நகரைக் கடல்கொள்ளவென்க.

நு - நுரு. மணி. உசூ: உகூ - சுகூ. நுசூ. பதி - காஞ்சிநகரம்.

நுரு - சூ. மணி. உஅ: கரு க - சூ.

நுஎ. என்றலும் - என்று அறவணவடிகள் கூறலும்.

நுஅ - கூ. புத்தபீடிகைபோற்றும் தீவதிலகை: மணி. கக: உஎ - கூ.

நு - நுகூ. மணி. உரு: கஎக - உகக. சுo. நகர் - வஞ்சிநகரம்.

சுஉ. சமயம் - அளவைவாதமுதல் பூதவாதமிறுதியாகிய சமயங்கள்.

சுந. மணி. உஎ : உஅகூ.

சுச. செவ்விது, பன்மையொருமை மயக்கம்.

சுரு. அடிகள், விளி. என்ன - என்று மணிமேகலை கேட்ப.

சுசு. நொடிகுவென் - சொல்லுவேன்.

'நொடிகுவென்' என்பதுமுதலியன அறவணவடிகளுடைய வார்த்தை.

சுஎ. சினேந்திரன் - புத்தன்.

சுஅ. ஏதம் - குற்றம். பிரத்தியம் - பிரத்தியக்கப்பிரமாணம் (மணி. உஎ: அந.) கருத்தளவு - அனுமானப்பிரமாணம்.

சுஎ - அ. என்ன இரண்டேயென்க.

(பி - ம்.) நுஎ. 'அறவணனடியிணை' நுஅ. 'திகழ்பவத்தபீடிகை' நுகூ. 'தீவலிலகையும்' சுo. 'ஆதலினந்தவணி' சுஉ. 'நூற்றியச்சமயநுண்'

*சுட்டுணர் வைப்பிரத் தியக்க மெனச்சொலி
ஞ விட்டனர் நாம சாதிகுணக் கிரியைகண்
மற்றவை யனுமா னத்துமடை யும்மெனக்
காரண காரிய சாமா னியக்கருத்
தோரிற் பிழைக்கையு முண்டிபிழை யாதது
கனலிற் புகைபோற் காரியக் கருத்தே
ரு யேனை யளவைக ளெல்லாங் கருத்தினி
லான முறைமையி னனுமான மாம்பிற
பக்க மேதுத் திட்டாந்த முபநய
நிகமன மென்ன வைந்துள வவற்றிற்
பக்க மிம்மலை நெருப்புடைத் தென்றல்

---

* இவ்வடிமுதலியவற்றால் இக்காதையிற் கூறப்பட்டுள்ள பிரத்தியக்கம் அனுமானமென்னும் இரண்டளவையிலக்கணங்களும், அவற்றின் பாகுபாடுகளும் இன்ன நூலின் கருத்தைத் தழுவிவந்தனவென்று விளங்காமையாலும், தமிழிலுள்ள தருக்கசங்கிரகம் அன்னம்பட்டீயமுதலியவற்றிலும், சிவஞானசித்தியார் சுபக்கத்துள்ள அளவையிலக்கணத்திற்குப் பலரெழுதிய உரைகளிலும் வந்துள்ள குறியீடுமுதலியவைகள் வேறு முறையாக இருத்தலாலும், இயன்றவனவு விசாரித்தும் இத்தமுறையுள்ள பழைய நூல்கள் இக்காலத்துவழங்கவில்லையென்று, வடமொழித்தருக்கநூல்கள் பலவற்றிலும் மிக்க பாண்டித்தியமுள்ளவரும், முன்பு கும்பகோணத்தில் வசித்தவருமாகிய குறிச்சி மஹாமஹோபாத்யாய ஸ்ரீ ங்காசாரியாவர்கள் முதலிய மஹாவித்துவான்கள் பலரும் சொல்லிவிட்டமையாலும், இவற்றைப் பற்றி இலங்கையிலுள்ள வித்தியோதயபாடசாலைத்தலைவரும் பௌத்த மதாசாரியருமாகிய ஸ்ரீ ஸ-மங்களரை விசாரிக்கும்படி செய்ததற்கு அவர் பிரத்தியக்கம் அனுமேயம் ஸ்ரூதத்தேயமெனப் பிரமாணம் மூன்றுவகைப் படுமென்றும், அவற்றுட் பிரத்தியக்கத்தினிலக்கணம் அங்கோத்தரநிகாயமென்னுநூலிலுள்ள காலாமசூத்திரத்திலும் மத்தியமநிகாயமென்னுநூலிலுள்ள மஹாஹஸ்திபதோபமசூத்திரத்திலும் அனுமேயத்தினிலக்கணம் மேற்கூறிய நூல்களிலுள்ள அனுமானசூத்திரங்களிலும் ஸ்ரூதத்தேயத்தினிலக்கணம் மேற்கூறியநூலிலுள்ள மஹாஸிஹ்மநாதசூத்திரத்திலும் கூறப்பட்டுள்ளனவென்றுமட்டுந்தெரிவித்தமையாலும், அந் நூல்களும் அவற்றைப்புலப்படுத்தவோரும் கிடைக்காமையால், இந்தப்பாகத்திற்குக் குறிப்புரை எழுதப்படவில்லை; ஆயினும் முதலிற்கூறிய வித்துவான்களுடைய முன்னிலையில் பலமுறை ஆராய்ச்சிசெய்து ஏட்டில் இருந்தவாறே மூலம் மாத்திரம் பதிப்பிக்கப்பட்டது.

(பி - ம்.) சக. 'வைகப்பிரத்தியக்கம்' ஙக. 'மானத்தடையுமெனக்' ஙஉ. 'காரியஞ்சாமானிய' ஙஎ. 'கனலியிற்புகைபோல்' ஙஞ. 'ஏணையள வைகள்' ஙள • அ. 'திருட்டாந்தமுபனயனிகமனவைத்து'

சுஐ புகையுடைத் தாதலா லெனல்பொருந் தேது
வகையமை யடுக்களே போற்றிட் டாந்த
முபஅய மலையும் புகையுடைத் தென்ற
னீகமனம் புகையுடைத் தேதெருப் புடைத்தென
னெருப்புடைத் தல்லா தியாதொன் றதுபுகைப்
சுரு பொருத்த மின்று புனல்போ லென்றன்
மேவிய பக்கத்து மீட்சி மொழியாய்
வைதன் மியதிட் டாந்த மாகுங்
தூய காரிய வேதுச் சுபாவ
மாயிற் சத்த மநித்த மென்றல்
எஐ பக்கம் பண்ணப் படுத லாலெனல்
பக்க தன்ம வசன மாகும்
யாதொன்று யாதொன்று பண்ணப் படுவ
தநித்தங் கடம்போ லென்றல் சபக்கத்
தொடர்ச்சி யாதொன் றநித்தமல் லாதது
எரு பண்ணப் படாத தாகாசம் போலெனல்
விபக்கத் தொடர்ச்சி மீட்சிமொழி யென்க
வதன்னு வயத்திற் பிரமாண மாவ
திவ்வெள் ளிடைக்கட் குடமிலை யென்றல்
செவ்விய பக்கந் தோன்றுமை யில்லெனல்
அஐ பக்க தன்ம வசன மாகு
மின்மையிற் கண்டில முயற்கோ டென்ற
லங்கெறிச் சபக்கம் யாதொன் றுண்டது
தோற்றர வடிக்குங் கைகெல்லி போலென
லேற்ற விபக்கத் துரையெனை லாகு
அரு மிவ்வகை யேதுப் பொருள்சா திப்பன
வெண்ணேகா ரியம்புகை சாதித்த தென்னிற்

(பி - ம்.) சுஉ - ஈ. 'மூபஅயமூ மலையுடை....புகையுடைத் தென்னி கமனம்' சுஈ - ஊ. 'நெருப்புடைத்தனநெருப்புடைத்தல்லாதியாது' சுரு. 'புலன்போலென்றல்' சுசு. 'மேயவிப்பக்கத்து' எக - உ. 'பககத்தன்ம வசனமாகும், யாதொனமியாதொன்று' எஈ - ரு. 'அநித்தியங்கடம்போ லென்றல் சபக்கத், தொடர்ச்சியாதொன் றணித்த மல்லாதி, பண்ணே யிலாகாதாகாசம்போலென்றல்' எஎ. 'அனுஉபவயத்திற்' அ0. 'பக்கத்தன்ம' அரு. 'எய்துப்பொருள்' அசு-எ. 'புகைசாதித்தல், புகையுள்ள விடத்தது நெருப்பு'

புகையுள விடத்து நெருப்புண் டென்னு
மன்னுவயத் தாலு நெருப்பிலா விடத்துப்
புகையில்லை யென்னும் வெதிரேகத் தாலும்
புகைஇ நெருப்பைச் சாதித்த தென்னி
னேரிய புகையி னிகழ்ந்துண் டான
வூர்த்தச் சாமங் கௌடிலச் சாமம்
வாய்த்த நெருப்பின்வரு காரிய மாதலின்
மேனேக் கிக்கறுத் திருப்பபகைத் திருப்ப
தாமே நெருப்பைச் சாதிக்க வேண்டி
மன்னு வயஞ்சா திக்கின் முன்னும்
கழுதை யையுங் கணிகை யையுந்
தம்மி லொருகா லத்தோ ரிடத்தே
யன்னு வயங்கண் டான்பிற் காலத்துக்
கழுதை யைக்கண்ட விடத்தே கணிகையை
யனுமிக்க வேண்டி மதுகூ டாநெருப்
பிலாவிடத் துப்புகை யிலேயென னேரத்
திருத்தகு வெதிரேகஞ் சாதிக்கு மென்னி
ஞய்வா லில்லாக் கழுதையின் பிடரி
னரிவாலு மிலேயாக் காணப் பட்ட
வதனேயே கொண்டி பிறிதோ ரிடத்து
நரிவாலி ஞனுய் வாலேயனு மித்த
லரிதா மதனு லெதுவு மாகா
தொட்டிய வுபநய நிகமன மிரண்டிங்
திட்டாந் தத்தி லேசென் றடங்கும்
பக்க மேதுத் திட்டாந் தங்க
ளொக்க நல்லவுந் தீயவு முளவதில்
வெளிப்பட் டுள்ள தன்மி யினேயும்

(பி - ம்.) அஅ. 'அன்னியத்தாலு' கூஉ - ருு. 'ஊர்த்ததிசசாம வணணங்களைடச் சாயம, வாய்த்த நெருப்பினவருகாரியங்களமர்தலின, மேனேகஇறுததிருப்பகாடனநெருப்பை' கூசு. 'அனனுவயசாதிக்கின்' கக - கoக. 'எனனுவயங்கலிறகாலததுங், கணிகையைக்கண்ட விடத்தே கழுதை, யனுபவிக்கவேணுமேதுவேண்டா' கoக - ரு. 'நெருப், பில்லாத விடத்துப்புகையில்லை யென்றுநெருதிருததரு', கoருு - சு. 'பட்டத்தினேயே' கoஎ- அ. 'வாலேயனு மிக்கவரிதாமனனுதவு' கoக. ஒட்டியவுபாயமிக மன' ககக. 'பக்கமேதுத்திருட்டானதத்தங்கள்'

வெளிப்பட் டெசாத் தியதன் மத்திறம்
ககடு பிறிதில் வேரும் வேறுபாட் டினையுங்
தன்கட் சார்த்திய நயந்தருத லுடையது
நன்கென் பக்கமென நாட்டுக வதுதான்
சத்த மஞ்ச நித்தமென் றுன்றைப்
பற்றி நாட்டப் படுவது தன்மி
கஉ0 சத்தஞ் சாத்திய தன்ம மாவது
நித்தா நித்த நிகழு நல்லே தூ
மூன்றுய்த் தோன்று மொழிந்த பக்கத்
தூன்றி நிற்றலுஞ் சபக்கத்துண் டாதலும்
விபக்கத் தின்றியே விதிதலுஞ் சபக்கஞ்
கஉடு சாதிக் கிற்பொரு டன்னுற் பக்கத்
தோதிய பொதுவகை யொன்றி யிருத்தல்
சத்த வஞ்சத்தஞ் சாத்திய மாயி
னெத்த வஞ்சத்தங் கடாதி போலெனல்
விபக்கம் விளம்பில் யாதொன் றியாதொன்
கஙo றஞ்சதமல் லாதது பண்ணப் படாத
தாஅ காசம் போலென் றுகும்
பண்ணப் படுதலுஞ் செயலிடைத் தோன்றலு
நண்ணிய பக்கஞ் சபக்கத் திலுமாய்
விபக்கத் தின்றி யஞ்சத்த் திலுக்கு
கஙடு மிகத்தகு மேதுவாய் விளங்கிற் றென்க
வேதமி றிட்டாங் தம்மிரு வகைய
சாதன் மியம்வை தன்மி யம்மெனச்
சாதன் மியமெனப் படுவது தானே
யஞ்சத்தங் கடாதி யன்னுவயத் தென்கை
கசo வைதன் மியதிட் டாந்தஞ் சாத்திய
மெய்தா விடத்தி லேதுவு மின்மை
யித்திற நல்ல சாதனத் தொத்தன

(பி - ம்.) ககடு. 'இனைவுந்' ககசு. 'சாத்தியயநதருதலு' ககஅ. 'மனித்தமென் றுன்றை' ககக. 'பற்றநாட்ட' ககக - உ0. 'தன மிரத்தஞ் சாத்திய' கஉ.உ. 'தோன்றிமொழிந்த' கஉடு. 'சாதிக்க பொரு டன்னுற்' கஙo. 'அளித்தமொன்றுபண்ண' கஙo-ங.க. 'பண்ணப்படாதாகா சம்' கஙஉ. 'செய்தலுடைத் தோன்றலும்' கஙசு. 'அணித்திறுக்குமித்த தஞ்' கஙசு - எ. 'இருவகைசாதன்'

தீய பக்கமுந் தீய வேதுவுந்
தீய வெடுத்துக் காட்டு மாவன
கசஎ பக்கப் போலியு மேதுப் போலியுந்
திட்டாந்தப் போலியு மாஅ மிவற்றுட்
பக்கப் போலி யொன்பது வகைப்படும்
பிரத்தி யக்க விருத்த மனுமான
விருத்தஞ் சுவசன விருத்த மூலோக
கஞ0 விருத்த மாகம விருத்த மப்பிர
சித்த விசேடண மப்பிர சித்த
விசேடிய மப்பிர சித்த வுபய
மப்பிர சித்த சம்பந் தம்மென
வெண்ணிய விவற்றுட் பிரத்தியக்க விருத்தங்
கஞ்ரு கண்ணிய காட்சி மாறுகொள லாகுஞ்
சத்தஞ் செவிக்குப் புலனன் றென்றன்
மற்றனு மான விருத்த மாவது
கருத்தள வையைமா ருகக் கூற
லநித்தியக் கடத்தை நித்திய மென்றல்
கசுo சுவசன விருத்தந்தன் சொன்மாறி யியம்ப
லென்ரூய் மலடி யென்றே யியம்ப
லுலக விருத்த மூலகின்மா ருமூரை
யிலகுமதி சந்திர னல்ல வென்ற
லாகம விருத்தந்தன் னூன்மா றறைதல
கசுரு லநித்த வாதியா யுள்ளவை சேடிக
னநித்தி யத்தைநித் தியமென நுவற
லப்பிர சித்த விசேடண மாவது
தத்த மெதிரிக்குச் சாத்தியந் தெரியாமை
பௌத்தன் மாரூய் நின்றசாங் கியனைக்
களo குறித்துச் சத்தம் விநாசி யென்ரு
லவனவி நாச வாதி யாதலிற்
சாத்திய விநாசமப் பிரசித்த மாகு

(பி-ம்.) கசஈ-ச. 'ஏதுவு மெடுத்தீய வேதுக்காட' கசசு. 'போலியு மெனா விவற்' கசஅ-கூ. 'பிரத்தியக்கமனுமான, விருத்தஞ்சுவன விருத்தமுதலோத்' கஞ்க-உ. 'சித்தசேடணமாப் பிரசித்திய விசேடிய' கஞ்அ. 'அளவை மாரு கூறல்' கசுஉ-ங. 'உலகவுரையிலகுமதிதந்திர' கசுச. 'தன்னூதைமாறைத்'

மப்பிர சித்த விசேடிய மாவ
தெதிரிக்குத் தன்மி பிரசித்த மின்றி
களரு யிருத்தல் சாங்கியன் மாரூய் நின்ற
பௌத்தனைக் குறித்தான் மாச்சை தனியவா
னென்ரு லவன நான்ம வாதி
யாதலிற் றன்மி யப்பிர சித்த
மப்பிர சித்த வுபய மாவது
கஅo மாரு ஞேர்க்குத் தன்மி சாத்திய
மேரு தப்பிர சித்தமா யிருத்தல்
பகர்வை சேடிகன் பௌத்தனைக் குறித்துச்
சுகமுத லியதொகைப் பொருட்குக் காரண
மான்மா வென்ரூற் சுகமுமான் மாவுங்
கஅரு தாமிசை யாமையி லப்பிரசித் தோபய
மப்பிர சித்த சம்பந்த மாவ
தெதிரிக் கிசைந்த பொருள்சா தித்தன்
மாரும் பௌத்தற்குச் சத்த வசித்தங்
கூறி லவன்ன் கொள்கையஃ தாகலில்
ககூo வேறுசா திக்க வேண்டா தாகு
மேதுப் போலி யோதின்மூன் ரூகு
மசித்த மதைகாங் திகம்விருத் தம்மென
வுபயா சித்த மண்ணியதா சித்தஞ்
சித்தா சித்த மாசிரயா சித்த
ககூரு மெனநான் கசித்த மூபயா சித்தஞ்
சாதன வேது விருவர்க்கு மின்றிச்
சத்த மசித்தங் கட்புலத் தென்ற
லன்னியதா சித்த மாரூய் நின்ரூற்
குன்னிய வேது வன்ரு யொழிதல்
உoo சத்தஞ் செயலுற லசித்த மென்னிற்
சித்த வெளிப்பா டல்லது செயலுற

(பி - ம்.) களக - சு. 'யாவது தனமி யெதிரிக்குத் தனமாசிதத மின்றி' களள. 'என்ரூலவனுறமவாதி' கஅரு - சு. 'அப்பிரசித்த, மப்பிரசித்த சம்பந்த' கஅள. 'எதிரிகருதியிருந்த பொருள்சாதிக்கை' கஅஅ - கு. 'அனித்தம், கூடுலவன்' ககக - உ. 'என்ரூருஞ்சித்தம்' ககச - ரு. 'சித்தமாச்சியா சித்தமுமன' ககரு - சு. 'சித்தமாவது சாதன' உoo. 'செயலுறுதலினித்த' உoக. 'சத்த வெளிப்பாடு'

லுய்த்த சாங்கியனுக் கசித்த மாகுஞ்
சித்தா சித்த மாவ
தேதுச் சங்கய மாய்ச்சா நித்த
லாவி பனியென வையுரு நின்றே
தூய புகைநெருப் புண்டெனத் துணித
லாசிரயா சித்த மாரு னவனுக்
கேற்ற தன்மி யின்மை காட்டித
லாகாசம், சத்த குணத்தாற் பொருளா மென்னி
ஞகா சம்பொரு ளல்லவென் பாற்குத்
தன்மி யசித்த மகைகாந் திகமுஞ்
சாதா ரணமசா தாரணஞ் சபக்கைக
தேச விருத்தி விபக்க வியாபி
விபக்கைக தேச விருத்தி சபக்க
வியாபி யுபயைக தேச விருத்தி
விருத்த வியபி சாரியென் ருறு
சாதா ரணஞ்சபக்க விபக்கத் துக்கு
மேதுப் பொதுவா யிருத்தல் சத்த
மநித்த மறியப் படுதலி னென்ரு
லறியப் படுதனித் தாநித்த மிரண்டுக்குஞ்
செறியுங் கடம்போ லநித்தத் தறிவோ
வாகாசம் போல நித்தத் தறிவோ
வென்ன லசாதா ரணமா வதுதா
னுன்னிய பக்கத் துண்டா மேதுச்
சபக்க விபக்கந் தம்மிலின் ருதல்
சத்த நித்தங் கேட்கப் படுதலி
னென்னிற் கேட்கப் படலெனு மேதுப்
பக்கத் துள்ள தாயி னல்லது
சபக்க விபக்கத்து மீட்டித் தாதலிற்
சங்கய மெய்தி யகைகாந் திகமாஞ்
சபக்கைக தேச விருத்தி விபக்க

(பி - ம்.) உஅச. 'ஏதுசங்கயமாயநிச்சயி' உஅசு. 'உண்டெனத்தெளி தல்' உகஉ - ருி. 'சாதாரணவபசகனகதெவிருதிவிபககவிபாவிவிபக தெசவிருத்தி' உகசு. 'விருத்தாவியாபிசாரி' உஉசு - ஙக. 'பகததது மிடத் தாதலிற், சபக்க தேசவிருத்தி'

வியாபி யாவ தேதுச் சபக்கத்
தோரிடத் தெய்தி விபக்கத் தெங்கு
மூண்டாத லாகுஞ் சத்தஞ் செயலிடைத்
உசுரு தோன்ரு தாகு மநித்த மாகலி
னென்ரு லநித்த மென்ற வேதுச்
செயலிடைத் தோன்ரு மைக்குச் சபக்க
மின்னினு மாகா சத்தினு மின்னி
னிகழ்ந்தா காசத்திற் காணு தாகலி
உசo னநித்தங் கடாதியி ஞெத்தலிற் கடம்போ
லழிந்து செயலிற் ரூன்றுமோ மின்போ
லழிந்து செயலிற் ரூன்ரு தோவெனல்
விபக்கைக தேச விருத்தி சபக்க
வியாபி யாவ தேது விபக்கத்
உசரு தோரிடத் துற்றுச் சபக்கத்தொத் தியறல்
சத்தஞ், செயலிடைத் தோன்று மநித்தமா தலினெனி
னநித்த வேதுச் செயலிடைத் தோன்றற்கு
விபக்க வாகா யத்தினு மின்னினு
மின்னி னிகழ்ந்தா காசத்துக் காணுது
உரo சபக்கக் கடாதிக டம்மி
லெங்குமா யேகாந்த மல்ல மின்போ
லநித்தமாய்ச் செயலிடைத் தோன்ரு தோ கடம்போ
லநித்தமாய்ச் செயலிடைத் தோன்று மோவென
னுபயைக தேச விருத்தி யேதுச்
உருரு சபக்கத் தினும்விபக் கத்தினு மாகி
யோர்தே சத்து வர்த்தித்தல் சத்த
நித்த மமூர்த்த மாதலி னென்னி
னமூர்த்த வேது நித்தத் தினுக்குச்
சபக்கவா காச பரமா ணுக்களி
உசுo ஞகா சத்து நிகழ்ந்து மூர்த்தமாம்

(பி - ம்.) உசுசு. 'உண்டாதலாம்' உசுரு. 'ஆகுநித்த மாதலின்' உசுசு. 'என்ரு நித்த' உசுஅ-சo. 'மின்னி நிகழாகாசதாதலினதந் கடாதி யின்' உசுங. 'விபக்கவறதேசவிருத்தி' உசுரு - எ. 'இயறல; செயலிடைத தோனறலிற் சொல்லனித்த மென்னித்த வேறுச்' உருo. 'கடதிகடனின ஞெங்குமா' உருசுசு. 'தோன்றுமோ வென்று, மூபயத தேசவிருத்தி'

பரமா ணுவினிக ழாமை யானும்
விபக்க மான கடசுகா திகளிற்
சுகத்து நிகழ்ந்து கடத்தொழிந் தமையினு
மேகதே சத்து நிகழ்வதே காந்தமன்
உசுடு றமூர்த்த மாகாசம் போல நித்தமோ
வமூர்த்த சுகம்போ லநித்த மோவெனல்
விருத்த வியபிசாரி திருந்தா வேதுவாய்
விருத்த வேதுவிற் கும்மிடங் கொடுத்தல்
சத்த மநித்தஞ் செயலிடைத் தோன்றலி
உஎ0 னைத்த தெனினைச் செயலிடைத் தோன்றற்குச்
சபக்கமா யுள்ள கடாதி நிற்கச்
சத்த நித்தங் கேட்கப் படுதலிற்
சத்தத் துவம்போ லெனச்சாற் றிநித
லிரண்டினுஞ் சங்கயமா யேகாந்த மல்ல
உஎடு விருத்தந் தன்னைத் திருத்தக விளம்பிற்
றன்மச் சொரூப விபரீத சாதனந்
தன்ம விசேட விபரீத சாதனந்
தன்மிச் சொரூப விபரீத சாதனந்
தன்மி விசேட விபரீத சாதன
உஅ0 மென்ன நான்கு வகைய தாகுமத்
தன்மச் சொரூப விபரீத சாதனஞ்
சொன்ன வேதுவிற் சாத்திய தன்மத்
துருவங் கெடுதல் சத்த நித்தம்
பண்ணப் படுதலி னென்றுற் பண்ணப்
உஅடு படுவ தநித்தமா தலிற்பண்ணப் பட்ட
வேதுச் சாத்திய தன்மநித் தத்தைவிட்
டநித்தஞ் சாதித்த லான்விப ரீதந்
தன்ம விசேட விபரீத சாதனஞ்

(பி - ம்.) உசுஉ. 'சுகததிகநிகழ்ந்து' உசுடு. 'ஆகாசமபோனித்தமோ' உசுசு. 'அமூர்த்தமோச சுகமம போலநித்ததமோ' உசுள. 'வியாபிசாரியாவது விருத்தவேதுவவிற்' உ஻஼அ - எ0. 'கொடுத்த,மனித்தஞ் செயலிடைத் தோன்ற, லொத்தெநினசெயலிடை 'உ஻0 - எக. 'தோனறறஞ சனைசுபக்கமா' உஎஉ - ச. 'சாடுத, லிரணடிவங்கய' உஎக - அங. 'தனமசசருமவிபரீத சாதனஞ, சொனனவிசற சாதியதனமத, தருவங்கெடல' உஅஅ - கூ. 'விபரீதஞ் சொன்ன'

சொன்ன வேதுச் சாத்திய தன்மந்
தன்னிடை விசேடங் கெடச்சா தித்தல்
கண்முத லோர்க்கு மிந்திரி யங்க
ளெண்ணிற் பரார்த்தந் தொக்குநிற் றலிஞற்
சயஞ சனங்கள் போல வென்ரூற்
ரூக்கு நிற்றலி னென்கின்ற வேதுச்
சயஞ சனத்தின் பரார்த்தம்போற் கண்முத
லிந்தியங் கரூயும் பரார்த்தத்திற் சாதித்துச்
சயஞ சனவா னேப்போ லாகிக்
கண்முத லிந்தியத் துக்கும் பரஞய்ச்
சாதிக் கிந்திர வயவமா யுள்ள
வான்மா வைச்சா வயவ மாகச்
சாதித் துச்சாத் தியதன் மத்தின்
விசேடங் கெடுத்த லின்விப ரீதந்
தன்மிச் சொரூப விபரீத சாதனந்
தன்மி யுடைய சொரூபமாத் திரத்தினே
யேதுத் தானே விபரீதப் படுத்தல்
பாவந் திரவியங் கன்ம மன்று
குணமு மன்றெத் திரவிய மாமெக்
குணகன் மத்துண் மையின்வே ரூதலாற்
சாமா னியவிசே டம்போ லென்ரூற்
பொருளுங் குணமுங் கருமமு மொன்ரூய்
நின்றவற் றின்னிடை யுண்மைவே ரூதலா லென்று
காட்டப் பட்ட வேது மூன்றினுடை
யுண்மை யேதுப் படுத்தும் பொதுவா
மூண்மை சாத்தியத் தில்லா மையினுந்
திட்டாந் தத்திற் சாமானிய விசேடம்

(பி. மி.) உஅகூ-கூ0. 'ஏதுச்சாதியை, தமைந்தனினிடை' உகூக. 'கண் ணறிவோர்க்குமிந்திரி' உகூஉ. 'தொகுத்து நிற்றலினுற்' உகூங - ச. 'போலவொன்ரூற், ரூக்குத்துநிற்றலி னென்னினை' உகூங்-அ. 'சாதிச்சயனப் பாகீன, போறகண' உகூஅ-ஙூ. 'பாயனுக, சாகனினிரவயவ' கூ00. 'சாமயமாகச' கூ0உ. 'விசேடங்கொடுத்தலின்' கூ0கூ-ச. 'விபாதந, தனமிசசரூபரிததாதனங்' கூ0எ. 'குணமனதெதிரவியாமாமெக' கூகக. 'கினதவயிறறிடை' கூஉ-ச. 'ஏதுமனநினுடை, யுணமைபேதப்படுதலும்பொருளா, மூண்மை சாத் தியசத்தியத் தில்லில்லா'

போக்கிப் பிறிதொன் றில்லாமை யாலும்
பாவ மென்று பகர்ந்ததன் மியினே
யபாவ மாக்குத லான்விப ரீதந்
தன்மி விசேட விபரீத சாதனந்
கஉo தன்மி விசேட வபாவஞ் சாதித்தன்
முன்னங் காட்டப் பட்ட வேதுவே
பாவமா கின்றது கருத்தா வுடைய
கிரியையுங் குணமுமா மதனை விபரீத
மாக்கிய தாதலாற் றன்மி விசேடங்
கஉரு கெடித்தது தீய வெடித்துக்காட் டாவன
தாமே திட்டாந்த வாபா சங்க
டிட்டாந் தம்மிரு வகைப்படு மென்றுமூற்
கூறப் பட்டன விங்க ணவற்றுட்
சாதன் மியதிட் டாந்தவா பாச
கஉo மோதி லிலந்து வகையுள தாகுஞ்
சாதன தன்ம விகலமுஞ் சாத்திய
தன்ம விகலமு முபய தன்ம
விகலமு மகன்று வயம்விப ரீதான்
றுவய மென்ன வைதன் மியதிட்
கஉரு டாந்த வாபா சமுமை வகைய
சாத்தி யாவி யாவி ருத்தி
சாத ஞவி யாவி ருத்தி
யுபயாவி யாவிருத்தி யவ்வெதி ரேகம்
விபரீத வெதிரேக மென்ன விவற்றுட்
கசo சாதன தன்ம விகல மாவது
திட்டாந் தத்திற் சாதனங் குறைவது
சத்த நித்த மமூர்த்த மாதலான்
யாதொன் றியாதொன் றமூர்த்தமது நித்த
மாதலாற் காண்புற்றது பரமாணு விலெனிற்

(பி - ம்.) கஉசு - எ. 'யாறு, மயகாபமெனறுபகர்ந்ததன்' கஉஉ-ச. கிரிகையாருமதனைவிபரீத, மாதலாலதன்சேட' கஉக - கூ. 'தன்மியமிக லஞ் சாத்திக, மகனம விகலவுபைய விகல மனனனுவையம் விபரீதானறு' கஉசஉ. 'எனமதனினமியதிருட்டாந்தமுமையவகைய' கஉசு - கூ. 'சாத் தியாலியா...லிருதநி, யவலிதிரேகவிபரீதவிதிரேகமிவற்றுட்' கஉசச. 'தானவற்றது'

ஈசடு றிட்டாந் தப்பர மாணு
நித்தத் தோடி மூர்த்த மாதலாற்
சாத்திய தன்ம நித்தத்துவ நிரம்பிச்
சாதன தன்மவமூர்த் தத்துவங் குறையுஞ்
சாத்திய தன்ம விகல மாவது
ஈடுo காட்டப் பட்ட திட்டாந் தத்திற்
சாத்திய தன்மங் குறைவு படுதல்
சத்த நித்த மமூர்த்த மாதலால்
யாதொன் றியாதொன் றமூர்த்தமது நித்தம்
புத்திபோ லென்னுற்
ஈடுடு றிட்டாந்த மாகக் காட்டப் பட்ட
புத்தி யமூர்த்த மாகி நின்றே
யநித்த மாதலாற் சாதன வமூர்த்தத்துவ
நிரம்பிச் சாத்திய நித்தத்துவங் குறையு
முபய தன்ம விகல மாவது
ஈசுo காட்டப் பட்ட திட்டாந் தத்திலே
சாத்திய சாதன மிரண்டுங் குறைத
லன்றியு மதுதான் சன்னு மசன்னு
மென்றிரு வகையா மிவற்றுட்சன் னுவுள
வுபய தன்ம விகல மாவ
ஈசுடு துள்ள பொருட்கட் சாத்திய சாதனங்
கொள்ளு மிரண்டுங் குறையக் காட்டுதல்
சத்த நித்த மமூர்த்த மாதலான்
யாதொன் றியாதொன் றமூர்த்தமது நித்தங்
கடம்போ லெனிற்றிட் டாந்த மாகக்
ஈளo காட்டப் பட்டகடந் தாணுண் டாகிச்
சாத்திய மாயுள நித்தத் துவமுஞ்
சாதன மாயுள வமூர்த்தத் துவமுங் குறையு
மசன்னு வுள்ள வுபயதன்ம விகல
மில்லாப் பொருட்கட் சாத்திய சாதன
ஈளடு மென்னு மிரண்டுங் குறையக் காட்டுதல்

(பி - ம்.) ஈசஅ - டுo. 'அமூர்த்தங் குறையும், சோத்தியனமவிகலன், காட்டப்பட்ட' ஈசுக - ஈ. 'குறைத, லின்றியும்மதுதான் சனனசனனு, மென்றிருவகையாமவற்றுட்' ஈசுஈ. 'கடம்போலெனத்திருட்டாந்தங்' ஈளெ - டு. 'சர்தன, வெல்லையிரண்டுங் காட்டுதல்'

சத்த மநித்த மூர்த்த மாதலான்
யாதொன் றியாதொன்று மூர்த்தம தநித்த
மாகாசம் போலெனுக் திட்டாந் தத்துச்
சாத்திய தன்மமா யுள்ள வநித்தமுஞ்
நஅ0 சாதன தன்மமா யுள்ள மூர்த்தமு
மிரண்டு மாகாச மசத்தென் பானுக்
கதன்க ணின்மை யானே குறையு
மூண்டென் பானுக் காகாச நித்த
வமூர்த்த மாதலா லவனுக்குங் குறையு
நஅரு மஉன்னுவய மாவது சாதன சாத்தியக்
தம்மிற் கூட்ட மாத்திரஞ்சொல் லாதே
யிரண்ட னுடைய வுண்மையைக் காட்டுதல்
சத்த மநித்தங் கிருத்த மாதலின்
யாதொன்று யாதொன்று கிருத்தம தநித்தமெனு
நகூ0 மன்னுவயஞ் சொல்லா துடத்தின் கண்ணே
கிருத்த வநித்தங் காணப் பட்ட
வென்ரு லன்னுவயங் தெரியா தாகும்
விபரீதான் னுவயம் வியாபகத் துடைய
வன்னுவயத் தாலே வியாப்பியம் விதித்தல்
நகூரு சத்த மநித்தங் கிருத்தத் தாலெனின்
யாதொன்று யாதொன்று கிருத்த மநித்தமென
வியாப்பியத் தால்வியா பகத்தைக் கருதா
தியாதொன் றியாதொன் றநித்தமது கிருத்தமென
வியாபகத் தால்வியாப் பியத்தைக் கருதுத
சஉ0 லப்படிக் கருதின் வியாபகம் வியாப்பியத்தை
யின்றியு நிகழ்த லின்விப ரீதமாம்
வைதன்மிய திட்டாந்தத்துச்
சாத்தி யாவியா விருத்தி யாவது
சாதன தன்ம மீண்டு
சஉரு சாத்திய தன்ம மீனா தொழிதல்

(பி - மி.) நஅஉ - சு, 'இன்னதையான் குறையு, நித்தாவமூர்த்த மூண்டென்பானுக், காகாசநித்தாவத்தமாதலா, லவனுக்குங்குறையும்' நஅரு. 'சாதியசாதனங்' நஅக - கூ0. 'கிருத்தமநித்த, மன்னுவயஞ்' நகூக - உ. 'பட்ட, தொன்ரலன்று' நகூச. 'வியாபியம்விபித்தல்' நகூசு. 'மனித்தமே' நகூள - சஉக. 'விபாபகத்தை, யின்றியும்'

சத்த நித்த மமூர்த்தத் தென்றால்
யாதொன் றியாதொன்று நித்தமு மன்றது
வமூர்த்தமு மன்று பரமாணுப் போலெனி
னப்படித், திட்டாந்த மாகக் காட்டப் பட்ட
சகo பரமாணு நித்தமாய் மூர்த்த மாதலிற்
சாதன வமூர்த்த மீண்டு
சாத்திய நித்த மீளா தொழிதல்
சாதனவியா விருத்தி யாவது
சாத்திய தன்ம மீண்டு
சகரு சாதன தன்ம மீளா தொழிதல்
சத்த நித்த மமூர்த்தத் தென்றால்
யாதொன் றியாதொன்று நித்த மன்றஃ
தமூர்த்தமு மன்று கன்மம்போ லென்றால்
வைதன் மியதிட் டாந்த மாகக்
சஉo காட்டப் பட்ட கன்ம
மமூர்த்தமாய் நின்றே யநித்த மாதலிற்
சாத்திய மான நித்திய மீண்டு
சாதன மான வமூர்த்த மீளா
தபயாவி யாவிருத்தி காட்டப் பட்ட
சஉரு வைதன் மியதிட் டாந்தத்தி னின்று
சாதன சாத்தியங்கண் மீளாமை யன்றியு
முண்மையி னுபயா வியாவி ருத்தி
யின்மையி னுபயா வியாவி ருத்தி
யெனவிரு வகையுண்மையி
சகூo னுபயாவி யாவிருத்தி யுள்ள பொருட்கட்
சாத்திய சாதன மீளா தபடி
வைதன் மியதிட் டாந்தங் காட்டல்
சத்த நித்த மமூர்த்த மாதலி
னென்றுற் கியாதொன் றியாதொன்று நித்தமன்

(பி - ம்.) சoஅ - கூ. 'மன்றறுபரமனுபபோலெனின், படிவைதன மியதிருட்டாந்தம்' சகo - உக. 'மூர்தத, மாகாட்டப்படடதினமமூர்தத மாகினறே யனித்தமாதலின்' சஉசஅ. 'காட்டப்பட்ட, தன்மிய திருட்டாந்த' சஉசூ. 'மீளாதுமையின்றியும்' சகூஉ - சு. 'திருட்டாந்தமாகக், காட்டப்பட்ட'

சகடு றமூர்த்தமு மன்ரு காசம்போ லென்ரூல்
வைதண்மிய திட்டார்ந்த மாகக் காட்டப் பட்ட
வாகா சம்பொரு ளென்பாற்
காகாச நித்தமு மமூர்த்தமு மாதலாற்
சாத்திய நித்தமுஞ் சாதனமா வுள்ள

சசo வமூர்த்தமு மிரண்டு மீண்டில வின்மையி
னுபயாவி யாவிருத்தி யாவது
சத்த மநித்த மூர்த்த மாதலா
னென்றவிடத் தியாதொன் றியாதொன் றநித்த
மூர்த்தமு மன்ன் ருகாசம் போலென

சசடு வைதன் மியதிட் டார்ந்தங் காட்டி
லாகா சம்பொரு ளல்லவென் பானுக்
காகாசந் தானே யுண்மையின் மையிஞற்
சாத்திய வநித்தமுஞ் சாதன மூர்த்தமு
மீட்சியு மீளா மையுமில யாகு

சடுo மவ்வெதி ரேக மாவது சாத்திய
மில்லா விடத்துச் சாதன மின்மை
சொல்லாதே விடுத லாகுஞ் சத்த
நித்தம் பண்ணப் படாமையா லென்ரூல்
யாதொன் றியாதொன்று நித்த மன்று

சடுடு பண்ணப் படுவ தல்லா ததுவு
மன்றெனு மிவ்வெதி ரேகந் தெரியச்
சொல்லாது குடத்தின் கண்ணே பண்ணப்
படுதலு மநித்தமுங் கண்டே மாதலா
னென்னின் வெதிரே கந்தெரி யாது

சசுo விபரீத வெதிரேக மாவது
பிரிவைத் தலேதடு மாறுச் சொல்லுதல்
சத்த நித்த மூர்த்த மாதலி
னென்ரு லென்று நின்ற விடத்து
யாதோ ரிடத்து நித்தமு மில்லையவ்

(பி - ம்.) சகஅ. 'ஆகாசத்தின் கண்ணேநித்தமும்' சசக. 'இ-ா மைபாயவிருத்தி' சசக. 'மீட்சியு மீளாமையுமாகும்' சடுஅ. 'டுதலு மநித்த மனித்தங்கண்டே' சசுo. 'விதிராவிதிரைக' சசுக - ச. 'இடத்தின், யாதொரிடத்தினித்தியமில்லை'

சூரு விடத்து மூர்த்தமு மில்லை யெனுதே
யாதோ ரிடத்து மூர்த்தமு மில்லையவ்
விடத்து நித்தமு மில்லை யென்றுல்
வெதிரேக மாறு கொள்ளுமெனக் கொள்க
நாட்டிய விப்படித் தீயசா தனத்தாற்
சஎ0 காட்டு மனுமான வாபா சத்தின்
மெய்யும் பொய்யு மித்திற விதியா
லேய மின்றி யறிந்துகொ ளாய்ந்தென்.

உசூ.—தவத்திறம்பூண்டதருமங்கேட்டகாதை முற்றிற்று.

(பி . ம்.) சஎ0 - எக. 'ஆபாச, மெய்யும் பொய்யும்'

மூப்பதாவது

பவத்திறமறுகெனப் பாவைநோற்றகாதை.

[மூப்பதாவது பவத்திறமறுகெனப்பாவைநோற்ற பாட்டு.]

தானந் தாங்கிச் சீலந் தலைநின்று
போன பிறப்பிற் புகுந்ததை யுணர்ந்தோள்

க. மணி. ங0: எஅ. சீலம் - பஞ்சசீலம், அஷ்டாங்கசீலம், தசசீல மென மூன்று வகைப்படும்; இவற்றினியல்பை, இந்நூல ச-க - ஆம் காதை, நிஎ-ஆம் அடிக்குறிப்பாலும் அறிக; மணிமேகலை பிக்குணியாதலின், அவற்றுள், தசசீலமே ஈண்டுக்கொள்ளத்தகுவதாலன; "எண்ணிக்கந்த காலங்க ளெம் பொருட்டான் மிகவுழன், றெண்ணிக்கந்த வுலகங்க ளிருமூ வொருங்குணர்ந், தெண்ணிக்கந்த தானமுஞ் சீலமு மிவையாக்கி, யெண்ணிக்கந்த குணத்தினு னெம்பெருமா னல்லனே" (நீல. சமய) என்றும், "தோடார் நிலங்கு மலர் கோதி வண்டு வரிபாட நீடு துணர்சேர், வாடாத போதி நெறிநீழல் மேய வரதன் பயந்த வறநூல, கோடாத சீல விதமேவி வாய்மை குணனுக ளாளு முயல்வார், வீடாத வின்ப நெறிசேர்வர் துன்ப வினைசேர்த்த னுருமிலரே" (ஜீவ. யாப்பு. ங-உதாரணம்) என்றும் தானசீலங்கள் கூறப்பட்டு வருதல்காண்க.

உ. உணர்ந்தோள் - மணிமேகலை. பழம்பிறப்பில் நிகழ்ந்தவற்றை அறிதற்குரிய அறிவும் யோகவித்தியைப்போன்ற இருத்தியும் பக்குவிகளுக்கு ஈப்படியேனும் உண்டாகுமென்பது பௌத்தநூற்றுணிபு. இப்பழம்

புத்த தன்ம சங்க மென்னு
மூத்திற மணியை மும்மையின் வணங்கிச்
சு சரண கதியாய்ச் சரண்சென் றடைந்தபின்
மூரணத் திருவற மூர்த்தியை மொழிவோ

பிறப்புணர்ச்சியையும் இருத்தியையும் முறையே மணிபல்லவத்துள்ள புத்த பீடிகைக் காட்சியாலும் மணிமேகலாதெய்வத்தாலும் மணிமேகலையடைந்தா னென்று இந்நூலிலுள்ள கூ, கo - ஆம் காதைகளிற் கூறுதல் காண்க. மஹாபோதிவிருக்ஷத்தினடியிலிருந்தபொழுது வித்தார்த்தனுக்கு முற்பிறப் புக்களில் நிகழ்ந்தசெய்திகள் மனத்திற்றோற்றியபின்னரே ஸத்யசதுஷ்டய ஞானந்தோற்றியதென்று புத்தசரித்திரங் கூறும்.

கூ. புத்த தன்ம சங்கமென்னும் - புத்தனும் தருமமும் சங்கமுமென் கிற. **புத்தன்** - ஸர்வஜ்ஞன் ; பாளீபாஷையிலுள்ளதாகிய **மகாவீர்க்க** மென்னும் நூலிலுள்ள மகாகண்டகமென்னும்பாகத்திலும், **மத்தியமநிகா யத்துள்ள** ஆரியபரியேஷணஸுத்திரத்திலும், **தீர்க்கநிகாயத்துள்ள** மகா பரிநிர்வாணஸுத்திரத்திலும், மஹாபதான ஸுத்திரத்திலும் புத்தசரிதங் கூறப்பட்டுள்ளதென்பர். **தருமம்** - அவன்கூறிய **அருளறங்கள்** ; அவை, அபிதருமம், ஸுத்திரதருமம், வினயதருமமென மூன்றுவகைப்படு மென்றும், அவற்றுள் அபிதருமவகைகள் **அபிதர்மார்த்தஸங்கிரகமென்னு** நூலிலும், ஸுத்திரதர்மவகைகள் **ஸாரஸங்கிரகமென்னு**நூலிலும், வினய தர்மவகைள் **பிராதிமுக்தகவினயவிபிச்சயமென்னு**நூலிலும்சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளனவென்றும், இம்மூன்றுவகைத்தருமங்களும் பிடகத்திரயத் தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளனவென்றுங் கூறுவர். **ஸங்கம்** - பௌத்த ரில் துறந்தோர்களின்கூட்டம் ; இதிலுமுறந்த இருபாலாரும் கலப்பின்றி வேறுவேறிடங்களில் இருத்தல்வேண்டுமென்பதும், அவர்களில் பிக்ஷுக் களுக்குப் பிக்ஷுணிகள் வணங்கி நடத்தல்வேண்டுமென்பதும், பதின் மருக்குக் குறையாமலிருத்தல்வேண்டுமென்பதும்விதி.

ச. மூத்திறமணி - தருமமணி ; மேற்கூறிய புத்த தரும சங்கத்தை த்திருமணியென்பர் ; மும்மையின் வணங்கலாவது - "புத்தம் சரணங்கச் சாமி, தர்மம் சரணங்கச்சாமி, ஸங்கம் சரணங்கச்சாமி" என்பனவற்றை மூன்றுமுறைஜபித்து மூன்றுமுறைபணிதல்; இனி 'மும்மையின் வணங்கி' என்பதற்கு மற்றொருவகுக்காயங்கொண்டும் முக்காரணங்களால் வணங்கி யெனினும் பொருந்தும்.

சு. சரணகதி - அடைக்கலம் அடைதல்.

உ - சு. உணர்ந்தோள் வணங்கிச்சென்று அடைந்தபினென்க ; என் றது, தருமத்தங்களையும் மணிமேகலை வணங்கியபினென்பதாம்.

கூ. மூரணத் திருவறமூர்த்தியை - பூர்வோத்தர விரோதமில்லாத தர்ம ஸ்வரூபத்தை; "மலீயா வறத்தின் மாதவம் புரிந்தேன்" (உஅ: கoo); "மூன்பின் மலீயா மங்கல மொழி" (ர o: உகக) என இந்நூலுள்ளே வரு திருத்தல் காண்க; தங்கள் தருமத்தை முதலிலும் இடையிலும் கடைசி லும் உத்தமமானதென்று கூறுவர் பௌத்தர்.

மேல்வருவன அறவணவடிகள் கூற்று.

(பி - ம்.) ச. 'முதலைமையின் வாங்கிச்'

னறிவு வறிதா யுயிர்கிறை காலத்து
முடிதயங் கமரர் முறைமுறை யிரப்பத்
துடித லோக மொழியத் தோன்றிப்
கo போதி மூலம் பொருந்தி யிருந்து

எ. அறிவு வறிதாய் - நிருவாண இலக்கணத்தை ஆராய்ந்து அதனைப் பெறுவதற்குரிய ஞானமின்றி ; காரணகாரியஞானமின்றியென்றுமாம்; மணி. கo: எ.

அ. அமரர்-மஹாராஜிகலோகமுதலிய ஆறு உலகிலுமுள்ள தேவர்கள்; மணி. பதி: உஅ - கூ.

கூ. துடிதலோகம் - துஷிதலோகம் ; கௌதம புத்தராக அவதரித்த பிரபாபாலரென்னும் போதிஸத்துவர் இங்ஙனம் அவதரிப்பதற்குமுன்பு இருந்தவிடமென்பர் ; "தொழுமடியா ரிதயமல ரொருபொழுதும் பிரிவரிய துணைவ னெனலா, மெழுபிரவி கிரணங்க ளிலகுதலை புனைசெய்தரு னிறைவ னிடமாங், குழுவுமறை யவருமுனி வாருமரி பிரமரும் வவ்வு மெ வரும், தொழுதகைய விமையவரு மதமருவு துதிசெய்தெழு துடிதபுரமே" (பிர. யாப்பு. கூசு - உதாரணம்) என்னுஞ் செய்யுள் துடிதபுரமென்று ஒரு புத்தஸ்தலம் பூமியிலிருந்ததாகத் தெரிவிக்கின்றது ; துடிதவிமான மென்ற ஒரு விமானமிருப்பதாக நீலகேசியுரை (புத்த. க - உ) கூறுகின்றது. தோன்றி - கோசலதேசத்திற் கபிலவஸ்துவிற் சாக்கியசக்கரவர்த்தியாகிய சுத்தோதனனுடைய பட்டமகிஷியாகிய மாயாதேவியின் வயிற்றிலிருந்து அவள் மைந்துக்குல்வழியே உலும்பினிவனத்தில அவதரித்து; இங்ஙனம் அவதரித்ததை, "உலம்பினி வனத்து லொண்குழைத் தேவி, வலம்படு மருங்குல், வடுநோ யுறுமு, னான்றே னவ்வழித் தோன்றின ஞதலி, னீன்றே ளேழ்வா ளின்னுயிர் வைத்தாள்" (விம்பசாகாதை; சிவ - சித்தி. பரபக்கம், சௌத்திராந்திகன்மதமறுதலை, பி; நீல. குண்டல. சக) என்னுஞ் செய்யுளாலுணர்க.

அ - கூ. ஈண்டுக் கூறியதுபோலவே "சக்கர வாளத்துத் தேவ லெல்லாம், தொக்கொருங் கீண்டித் துடித லோகத்து, மிக்கோன் பாதம் விழுந்தனி ரிரப்ப" (கஉ : எஉ - சு) என்று மூன்பு வருதிருத்தல காண்க.

கo. போதிமூலம் - இக்காலத்துப் புத்தகயையென்று வழங்கப்படுவதும் நைரஞ்சரா அல்லது பல்குனியென்று கூறப்படும் நதிக்கரையிலுள்ளதுமாகிய இடத்தில் ஐந்து ஜோயையுடைத்தாய் விளங்கிய அரசமரத்தின் அடியில் ; போதி - அரசமரம்; இஃது ஐந்துஜோயையுடைத்தாதல, "பணையைத் தோன்கிய பாசிலைப் போதி, யணிதிகழ் நீழ லறவோன்" (சிலப். கo: கக - உ) என்பதனாற் பெறப்படுகின்றது. லலிதார்த்தன் உண்மையறிவையடைதற்குத் துதவுபூண்டு பலவிடத்துஞ் சென்று பலவாறுமுயன்று முடிவில் இம்மரத்தடியில்வந்து சீலசமாதியிலிருந்து பழம்பிறப்புக்களை யறிந்து தசபாரமிதையும் நிறையப்பெற்று (மணி. உசு: உசு) ஆராய்ந்தபொழுது புத்தியசதஷ்டய ஞானமுழுதும் அவனுக்குத் தோற்றினமையால், இம்மரம் மஹாபோதிவிருக்ஷமென்று பௌத்தர்களால் மிகப்பாராட்டி, கெடுக்தூரத்

(பி - ம்.) எ. 'அறிவுதோயவுயிர்ன்ற' கூ. 'துடிசலோகரம்'

மாரனை வென்று வீர னெனிக்
குற்ற மூன்று முற்ற வறுக்கும்
வாமன் வாய்மை யேமக் கட்டுரை

திருத்தும் திக்குநோக்கி வணங்கப்படுவது. பண்டைக்காலத்தில் இத்தெய்வட்டிலிருந்த பௌத்தர்கள் வடதிசைநோக்கி இதனைத் தொழுதவந்தார்களென்றுந் தெரிகின்றது ; 'போதிவிருட்சம் வடக்கேயிருப்பதென்று பௌத்தன் தொழுதலால் திக்குளதென்க' (தீவ-சித்தி. சௌத்திராந்திகன்மதமறுத்தலே, நூ-உரை.) இம்மரத்தின்கீழிருந்து ஞானம்பெற்றமையால், புத்தன் போதிவேந்தனென்று கூறப்படுவன்.

கக. மாரன் - நற்குணநற்செய்கைகளைநீக்கித் தீக்குணந்தீச்செய்கைகளை விளைவிப்பவனுகிய ஒரு தேவன் ; இவனுக்கு அறுவகைத் தேவலோகங்களிலும் அதிகாரமுண்டு. இவன் புத்தனுக்கு ஞானமுண்டாகாதவண்ணம் தன்மகளிர் மூவரும் தானுமாகவந்து பலவகையான இடையூறுகளைச்செய்து முடிவில் தோல்வியுற்றான் ; "தாமகறுங் குழன்மழைக்கட் டெரிரியலார் தம் முன்னர்க், காமனையே மூன்றெரிலித்தாற் கண்ணோட்டம் யாதாங்கொல்" (வீர. யாப்பு. கக. உதாரணம்.) மாரனை வென்றமையால, புத்தனை மாரஜித் தென்று கூறுவர்; வீரியம், தசபாரமிதையுளொன்றுதலின், அதனையுடையா னெனப்பார் 'வீரன்' எனறார் ; வீரியமென்றது, இங்கே அறிவுபெறுத்துணையும் பலவகையான இடைஞ்சற்றினுக்குமஞ்சாது மடிவின்றிமுயன்ற முயற்சியை ; அது "விளைவாய போதியை யுறுமளவும் விணைமடியாண், தளர்வின்றி யோடிய தாளினு னல்லனே" (நீல. மொக்கல. அஅ - சமய) என்பதனாற் பெறப்படும். "காமற் கடந்த வாமன்" (நூ: எள), "மாரனை வெல்லும் வீர" (கக: சுக) எனறார் மூன்னும் ; இராமனை யுத்த வீரனென்றும், கன்னனைத் தானவீரனென்றும், புத்தனைத் தயாவீரனென்றுங் கூறுவர் வடநூலார்.

கஉ. குற்ற மூன்று - காமம் வெகுளி மயக்கங்கள் ; "காமம் வெகுளி மயக்கங் காரணம்" (உருகூ) என்று இக்காதையிற் பின்னுங் கூறுவர் ; இம் மூன்றையும் துவரத் துறந்தமையின், புத்தன் முக்குற்றங் கடிந்தோனென்று கூறப்படுவன் ; (மணி: நூ: கoo - அடிக்குறிப்பைப் பார்க்க) ; 'அறுக்கும்' என்றதனால், குற்றமூன்றையும் கட்டென்றாயிற்று ; 'போய்க் குற்ற மூன்று மறுத்தான்புகழ் கூறுவேற்கென், வாய்க்குற்ற சொல்லின் வழுவும் வழுவல்ல வன்றே" (குண்டலகேசி, அவையடக்கம்.) இனி, பொய், கொலை, கள், காமம், களவு என்பனவற்றை ஐங்குற்றமென்று வழங்குவதுமுண்டு; "கள்ளும் பொய்யும்.....துறந்தவை" (மணி. உசு: எள-அ); "வீடி கொண்ட நல்லறம் பகர்ந்து மன்பதைக் கெலாம் விளங்கு திங்க ணீர்மையால் விரிதிலங்கு மன்பினோன், மோடிகொண்ட வெண்ணுரைக் கருங்கடற் செழுஞ் சுடர் மூளைத்தெழுந்த தென்னலாய் முகிழ்ந்திலங்கு போதியி, னுமிகின்ற மூவகைப் பவங்கடந்து குற்றமான் வைத்தொடங்கொர் மூன்றறுத்த நாதன்" (வீர. யாப்பு. கூ - உதாரணம்) என வருதல் காண்க.

கஙூ. புத்தனது நால்வகைச் சத்தியங்களாகிய, இன்பத்தை விளைக்கும் பொருள் பொதிந்த சொல்.

எ - கங. காலத்து இரப்பத் தோன்றி இருந்து வென்று வீரனுகி அறுக்கும் வாமனது வாய்மையாகிய கட்டுரையென்க; மணி. கஉ: நிஅ-எசு.

(பி - ம்.) கஙூ. 'எனக்கட்டுரை'

யிறந்த காலத் தெண்ணில்புத் தர்களுஞ்
கரு சிறந்தருள் கூர்ந்து திருவாய் மொழிந்த
தீரறு பொருளி னீர்ந்தெறி யுடைத்தாய்ச்
சார்பிற் றோன்றித் தத்தமின் மீட்டு
மிலக்கணத் தொடர்தலின்

கச. கௌதம புத்தருடைய காலத்திற்கு முன்பு தருமம்குறைந்த ஒவ் வொருகாலத்தும் ஒவ்வொருவராகப் புத்தர்கள் பலர்அவதரித்து உபதேசஞ் செய்து தருமஸ்தாபனஞ் செய்தார்களென்பது பௌத்தநூற்றுணிபாத லி ', 'இறந்த காலத் தெண்ணில்புத் தர்களும்' என்றார்; கௌதம புத்தரு டைய சரித்திரத்திலும், புத்த ஜாதக கதையிலும் இக்கருத்து ஆங்காங்குப் பெறப்படும்; கௌதம புத்தருக்கு முன்னேயுள்ள புத்தர்களுள், இருபத்தெ ழுவர் பெயர்கள்மட்டும் இப்பொழுது தெரிகின்றன. அவைவருமாறு:—(க) தண்ணகாரர், (உ) மேதங்கரர், (ங) சரணங்கரர், (ச) தீபங்கரர், (ஞ) கௌண்டின்னியர், (சு) மங்களர், (ஏ) ஸுமங்களர், (அ) இரேவதர், (கூ) சோபிதர், (கo) அநோமதர்சி,(கக) பதுமர், (கஉ) நாரதர்,(கங) பதுமோத் தரர், (கச) ஸுமேதர், (கஞ) ஸுஜாதர், (கசு) பிரியதர்சி, (கஎ) அர்த்த தர்சி, (கஅ) தர்மதர்சி, (கஙு) ஸித்தார்த்தர், (உo) திஷ்யர்,(உக) புஷ்யர், (உஉ) விபச்சித், (உங) சிகி, (உச) விருஷபர், (உஞ) கஞ்தர், (உசு) ஸ்காகமர், (உஎ) கஸ்யபர். இவ்விருபத்தெழுவரும் கௌதமபுத்த ரும் ஸர்வஜ்ஞ புத்தரென்று கூறப்படுவர். இஃது, இலங்கையிலுள்ள வித் தியோதய பாடசாலைத் தலைவராகிய ஸ்ரீ ஸுமங்களாரால் தெரியவந்தது. தண்ணங்காரன், மஹாவீரன் முதலிய இருபத்திமூன்று புத்தரென்பாரு மூளர்.

கட - ஞ. யான்கூறுவது, ஏமக்கட்டுரையும் திருவாய் மொழிந்தது மாகவுள்ளதென்று அறவணவழ கள் கூறினரென்க.

கசு. ஈரறு பொருளின் - பன்னிரண்டுபொருள்களால்; என்றது, பேதைமை முதலியவற்றை. அவையாவன : பேதைமை, செய்கை,உணர்வு, அருவுரு,வாயில், ஊறு, நுகர்வு, வேட்கை, பற்று,பவம், தோற்றம், வினைப் பயன் (மணி. உச: கoஞ்- அ); இவற்றை மூறையே அவித்யை,கர்மம் அல் லது ஸம்ஸ்காரம்,விஜ்ஞானம்,நாமரூபம் அல்லது ரூபாரூபம், ஷடாயதனம், ஸ்பரிசம்,வேதனை, திருஷ்ணை,உபாதானம்,பவம்,ஜர்மம் கர்மபலம் என்பர் வட நூலார். இவை துவாதசநிதானமெனப்படும்; சிவ - சித்தி. சௌத்திரா ந்திகவ்மதம், கக - உரை.

'ஈரறுபொருளின்' (கசு) என்றது முதலியவற்றிற்குப் பின்வரும் 'பேதைமை' (சுஞ) என்பது முதலியவற்றால் விவரணங் கூறப்படும்.

கஎ - அ. சார்பிற்றோன்றி - சம்பந்தத்தால் உண்டாகி; சம்பந்தமென் றது காரணகாரியத் தொடர்ச்சியை. "சார்பிற்றோற்றம்" (உஞ: ஙு) என்று மூன்பு வற்திருத்தல் காண்க. மேற்கூறிய பன்னிரண்டனுள் பேதை மையிலிருந்து செய்கையும், அதிலிருந்து உணர்வும், அதிலிருந்து அருவரு வும், அதிலிருந்து வாயிலும், அதிலிருந்து ஊறும், அதிலிருந்து நுகர்வும், (பி - மீ.) கஞ்-சு. 'மொழிந்த, நீதறு பொருளினீர்மை யுடைத்தாய்'

மண்டில வகையா லறியக் காட்டி
உ0 யெதிர்முறை யோப்ப மீட்சியு மாகி
யீங்கி தில்லா வழியில் லாகி
யீங்கி துள்ள வழியுண் டாகலிற்
றக்க தக்க சார்பிற் றோற்றமெனச்
சொற்றகப் பட்டு மிலக்கணத் தொடர்பாற்
உரு கருதப் பட்டுங் கண்டகான் குடைத்தாய்
மருவிய சந்தி வகைமூன் றுடைத்தாய்த்

அதிலிருந்து வேட்கையும், அதிலிருந்து பற்றும், அதிலிருந்து பவமும், அதிலிருந்து தோற்றமும், அதிலிருந்து விஜைப்பயனுந் தோன்றுமெனக்கொள்க; (மணி. கூ0: க0ச-அ.) இதனுல் முதன்முறைத்தோற்றங் கூறியவாறாயிற்று. தத்தமில் மீட்டும் இலக்கு அண்ணத்தொடர்தலிற் - அப்பன்னிரண்டனுள் செய்கை முதலிய ஒவ்வொன்றும் தத்தமக்கு முன்னுள்ளதற்றில்லின்றும் தோன்றியதுபோலப் பன்னிரண்டாவதாகிய விஜைப்பயனினின்றும் எண்ணுமுறையில் முதற்கண்ணின்றதாகிய பேதைமைதோன்ற அதனினின்றுந் திரும்பவும் செய்கைமுதலியனமுன்தோன்றியவாறே தோன்றுதலால்; மீட்டும் : உம்மை, இறந்ததுதழீஇயது. பேதைமைமுதலிய பன்னிரண்டும் தங்கட்டோன்றுனவற்றைநோக்கப் பகுதியாதலும், தமக்குமுதலாகவற்றைநோக்க விகுதியாதலுமுடையனவென்பது பௌத்தர் கொள்கை. இலக்கு - குறி.

ககூ. மண்டிலம் - வட்டம் ; "ஊழின்மண் டிமாச் சூழுமிங் நுகர்ச்சி" (சகஅ) என்பர் பின்னும்.

உ0. எதிர்முறை ஓப்ப - தோன்றும் முறைமையினிக்க ; எதிர்தல் - தோன்றுதல் ; என்றது, காரணத்தை இல்லையாக்கவென்றபடி. பேதைமை மீளச் செய்கையும், அதுமீள உணர்வும், அதுமீள அருவுருவும், அதுமீள வாயிலும், அதுமீள ஊறும், அதுமீள நுகர்வும், அதுமீள வேட்கையும், அதுமீளப் பற்றும், அதுமீளப் பவமும், அதுமீளத் தோற்றமும். அதுமீள விஜைப்பயனுமீளுமென்றவாறாயிற்று. மீளுதல்-ஈண்டு இன்மைப்பொருட்டு; மணி. கூ0 : ககூ - கூச.

உக. இதுவென்றது, காரணத்தை. இல்லாகி - காரியங்களில்லையாகி.

உரு. மேற்கூறிய பேதைமைமுதலிய பன்னிரண்டனுள், பேதைமை, செய்கை என்னும் இந்த இரண்டும் முதற்கண்டமென்றும், உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு என்னுமிவ்வைந்தும் இரண்டாங்கண்டமென்றும், வேட்கை, பற்று, பவம் என்னுமிம்மூன்றும் மூன்றாங்கண்டமென்றும், தோற்றமும் விஜைப்பயனும் நான்காங்கண்டமென்றுங் கூறப்பட்டும்; மணி. கூ0: கசுரு - சள.

உசு. செய்கையுமுணர்வுஞ்சேர்தலே முதற்சந்தியென்றும், நுகர்வும்

(பி - ம்.) கள - கூ. 'மீட்டுத், தொடர்தலினமனமவகையதிய' உ0. 'முறைபிறப்பமீடிசி' உஉ - கூ. 'ஈங்கில்லவழியுண்டாதலாறக்கசார்பிற்' உசு. 'சொற்றகப்படுமிலக்கணத்'

தோற்றம் பார்க்கின் மூன்று வகையாய்த்
தோற்றற் கேற்ற காலமூன் றுடைத்தாய்க்
குற்றமும் வினையும் பயனும் விளைந்து
கூ0 கிலேயில வறிய துன்பமென நோக்க
வுலேயா வீட்டிற் குறுதி யாகி
நால்வகை வாய்மைக்குச் சார்பிட னாகி
யைந்துவகைக் கந்தத் தமைதி யாகி
மெய்வகை யாறு வழக்குமுக மெய்தி
கூடு நயங்க ணான்காற் பயன்க ளெய்தி
யியன்றநால் வகையால் விளைவிடை யுடைத்தாய்
நின்மிதி யின்றி யூழ்பா டின்றிப்
பின்போக் கல்லது பொன்றக் கெடாதாய்ப்

வேட்கையுஞ்சேர்தலே இரண்டாஞ்சந்தியென்றும், பவமூக் தோற்றமுஞ் சேர்தலே மூன்றாஞ்சந்தியென்றுங் கூறுவர்; மணி. கூ0: கசஅ - ருஉ.

உள. தோற்றம் - பிறப்பு; மணி. கூ0: கருகூ - அ.

உபா. மணி. கூ0: கருஉ - எசி. கூ0 - கூக. மணி. கூ0: கஎருு - அ.

கூஉ. நால்வகை வாய்மைக்கு - நான்குவகைப்பட்ட சத்தியங்களுக்கு; மணி. உ: கூசி - எ; கூ0. கஅசூ - அ.

கூஊ. ஐக்துவகைக்கந்தம் - பஞ்சஸ்கந்தம்; ஸ்கந்தம் - கூட்டம்; மணி. கூ0: கஅக - கூ0.

கூஎ. ஆறுவழக்காவன: உண்மைவழக்கு, இன்மைவழக்கு, உள்ளது சார்ந்த உண்மைவழக்கு, இல்லதுசார்ந்த இன்மைவழக்கு, உள்ளதுசார்ந்த இன்மைவழக்கு, இல்லதுசார்ந்த உண்மைவழக்கு; மணி. கூ0: ககக-உகசூ.

கூருு. நயங்கள்நான்கு - ஒற்றுமைநயம், வேற்றுமைநயம், புரிவின்மை நயம், இயல்புநயம் (மணி. கூ0: உகள - உஅ.) பயன்கள் - பிரயோசனங் கள்; அவை நான்குவகைப்படும்; மணி. கூ0: உஉக - கூ.

கூக. நால்வகையால்விளைவிடையுடைமை-துணிந்துசொல்லல், கூறிட்டு மொழிதல், விளைவின்விடுத்தல், வாய்வாளாமை; மணி. கூ0: உகூருு - சகூ.

கூஎ. நின்மிதி - நிர்மாணம். (உண்டாக்குதல்) ஊழ்பாடு - முடிவுபடு தல். தொடக்கமும் ஈறுமின்மியென்பதாம்.

கூஅ. பின்போக்கு - தொடர்ச்சி; இதனை ஸந்தானமென்பர்; அது வாயுஸந்தானம், தீபஸந்தானம், தாராஸந்தானம், பிபீலிகாஸந்தானம் என

(பி - ம்.) உள - கூ. 'மூன்றுவகையாதி, தோன்றமூன்றுடைத்தாய் வினையும்பயனுங் குற்றமும்விளைந்து' கூஎ - அ. 'நின்மதனினறியூழ்பாடின பேபினபோகலலது'

பண்ணுக ரின்றிப் பண்ணப் படாதா
சக யாணு மின்றி யென்னது மின்றிப்
போனது மின்றி வந்தது மின்றி
மூடித்தலு மின்றி மூடிவு மின்றி
வினையும் பயனும் பிறப்பும் வீடு
மினையன வெல்லாந் தானே யாகிய
சருக பேதைமை செய்கை யுணர்வே யருவுரு
வாயி லூறே நுகர்வே வேட்கை
பற்றே பவமே தோற்றம் வினைப்பய
னிற்றென வகுத்த வியல்பி ராறும்
பிறந்தோ ரறியிற் பெரும்பே றறிகுவ
ருக ரறியா ராயி னஞ்சுக ரறிகுவர்
பேதைமை யென்ப தியாதென வினவி
னேதிய விவற்றை யுணராது மயங்கி
யியற்படி பொருளாற் கண்டது மறந்து
மூயற்கோ டுண்டெனக் கேட்டது தெளித

நான்குவகைப்படும். பொன்றக்கெடாதாய் - முற்றக்கெடாததாகி.

கூஅ - சசு. மணி. கo: ருo - ருக.

இனிப் பேதைமைமுதலிய பன்னிரண்டுசார்பும் அவற்றின் இலக்கணங்களும் முறையே கூறப்படும்.

சருி. செய்கை - கர்மம். உணர்வு-விஞ்ஞானம். அருவுரு - நாமரூபம்; "அருவுருத் தன்மை, யாக்கை" (கoஉ - கூ) என்பர் பின்.

சசு. வாயில் - ஷடாயதனம்; ஆவது, ஞானேந்திரியங்கள்ஐந்தும் மனமும். ஊறு - ஸ்பரிசம்; அஃதாவது, இந்திரிய விஷயசம்பந்தம். நுகர்வு - வேதனை ; அஃதாவது, சுகதுக்க அநுபவம். வேட்கை - த்ருஷ்ணை; அஃதாவது, இன்பத்தை அடையவேண்டுமென்றும் துன்பத்தைப்போக்க வேண்டுமென்றும் உண்டாகுமாசை.

சஎ. பற்று - உபாதானம் ; அஃதாவது, இன்பத்தைக்கொடுக்கும் பொருள்களோடு ஒட்டிக் கொள்ளுதல. வினைப்பயன் - கர்மபலம்.

சஅ. இயல்பு - ஸ்வபாவம். சகூ. பெரும்பேறு - நிர்வாணம்.

ருஉ. இவற்றையென்றது, நான்கு சத்தியங்களையும் அவற்றை நன்கு விளக்கும் துவாதச நிதானங்களையும்.

ருக - ச. பேதைமையென்பது, மயங்கிக் கண்டதுமறந்து கேட்டது தெளிதலென்க ; "பேய்மை யாக்குமிர் பேதைமைக் கள்வனே டுனுப்க்,

(பி - ம்.) சக. 'போனது மின்றி மூடித்தலுமின்றி' சஅ. 'வகுத்தவீறாறும்' ருo - ருக. 'நரகமிருவாபேதையென்ப' ருஉ-கூ. 'மயங்கியற்படி'

நிரு லுலக மூன்றினு மூயிரா முலக
மலகில பல்லுயி ரறுவகைத் தாகு
மக்களுந் தேவரும் பிரமரு நரகருந்
தொக்க விலங்கும் பேயு மென்றே
நல்வினை தீவினை யென்றிரு வகையாற்
சூ0 சொல்லப் பட்ட கருவிற் சார்தலுங்
கருவிற் பட்ட பொழுதினுட் டோற்றி
வினைப்பயன் விளையுங் காலை யுயிர்கட்கு
மனப்பே ரின்பமுங் கவலையுங் காட்டிந்
தீவினை யென்ப தியாதென வினவி
சூநி ஞய்தொடி நல்லா யாங்கது கேளாய்
கொலையே களவே காமத் தீவிழை

காமுற் றமதன் பயத்தினிற் காமனைக் கடந்து, நரமருவம்புகழ கொடுப்
தோர் நன்னெறி நண்ணும்,வாமன் வாய்மொழி மறந்திட்டு மறநதொழி இ
ரும்" (வீர. யாப்பு. நிு - உதாரணம்) என்று கூறப்பட்டிருத்தல் காண்க
இவ்வடிகளாற் பேதைமையதிலக்கணம் கூறப்பட்டது.

நிரு. உலகமூன்றினும் - மூன்றுலகங்களுள்ளும் ; உலகம் முப்ப
தொன்றென்பராலெனின் மஹாராஜிகலோகமுதலிய உலகம் இருபத்தாறினை
யும் மேலுலகென்றும், நாரகலோகமுதலிய உலகம்நா ன்கினையும் கீழு
கென்றுங்கொண்டு அவற்றை நடுநின்ற மனுஷ்யலோகத்துடன் கூட்டி, இ
நூலாசிரியர் உலகம் மூன்றெனக் கொண்டார் போலுமென்க ; "திருமே
பதமஞ்சேர் திசைமுகனே முதலாக, வருமேலி யவதரித்த வுயிரனைத்த
மூயக்கொள்வா, னிவ்வுலகுங் கீழுலகு மிசையுலகு மிருணீங்க, வெ
வுலகுந் தொழுதேத்த வெழுந்தசெழுஞ் சுடரென்ப, ...பெரியோய்நீ
(வீர. யாப்பு. கக - உதாரணம்) என்பதில் உலகங்கள் மூன்றுங்கூ றப்ப
டிருத்தல் காண்க. உயிராமுலகம் - சேதனப்பிரபஞ்சம்.

நிசு. அலகில - அளவில்லாதன.

நிசு - அ. மக்களும் தேவரும் பிரமரும் நரகரும் விலங்கும் பே
மென்று பல்லுயிர் அறுவகைத்தாகும் ; இவ்வறுவகைப்பிறப்பும் ஷட்க
யெனப்படும்.

சுஉ. "வினைவின்கண், வீயா விழுமந் தரும்" குறள். உஅசு.

சு0 - சுகூ. (செய்கை) சார்தலையும் இன்பத்தையும் கவலையுங் காட
டும்.

சுசு. காமத்தீவிழைவு, இருபெயரொட்டு.

(பி - ம்.) நிரு. 'உயிராகுலமு' நிசு - எ. 'வகைத்தாளுந் தேவரு
நிஎ - அ. 'நரகரும், விலங்கும்பேயுமன்றே' நிசு - சுக. 'என்றிருபயத்தா
சொல்லப்பட்டப்பிறப்பினுட் டோன்றி'

வுலையா வுடம்பிற் றோன்றுவ மூன்றும்
பொய்யே குறளை கடுஞ்சொற் பயனில்
சொல்லெனச் சொல்லிற் றோன்றுவ நான்கும்
எ0 வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சியென்
றுள்ளந் தன்னி னுருப்பன மூன்றுமெனப்
பத்து வகையாற் பயன்றெரி புலவ
ரித்திறம் படாஅர் படர்குவ ராயின்
விலங்கும் பேயு நரகரு மாகிக்
எடு கலங்கிய வுள்ளக் கவலையிற் றோன்றுவர்
நல்வினை யென்ப தியாதெனி னினவிற்
சொல்லிய பத்தின் றொகுதியி னீங்கிச்
சீலந் தாங்கித் தானந் தலைநின்று
மேலென வகுத்த வொருமூன்று திறத்துத்
அ0 தேவரும் மக்களும் பிரமரு மாகி
மேவிய மகிழ்ச்சி வினைப்பய னுண்குவ

சுஅ. கடுஞ்சொல் - வன்சொல்.

எ0. பொல்லாக்காட்சி-மயக்கம்; அஃதாவது, உண்மையையறியாமை.

சுசு - எஉ. இவ்வடிகளிற்கூறியபத்துக்குற்றங்களையும் தசதோஷங்க ளென்பது பௌத்த நூல் வழக்கு.

எஎ. சொல்லியபத்து: "மருடரு மனம்வாய் மெய்யிற் கொலைமுதல் வினைபத் தாமே" (சித்தாந்தத்தொகை; நீல. புத்த. சூரி - சமய.) நீங்க லாவது, இப்பத்தினின்றும் நீங்கிக் கொலலாமை முதலியபத்தினையும் பெறு தல்; 'பள்ளிவலம்புரிதல் தவஞ்செய்தல் தானஞ்செய்தல் என்னும் காயத் தின்குணம் மூன்றும், மெய்யுரை, நல்வார்த்தை, இனியனகூறல், பயன்படு சொற்கூறல் என்னும் வாக்கின்குணம் நான்கும், அருணினைவு, ஆசையறுத் தல், தவப்பற்று என்னும் மனத்தின் குணம் மூன்றும் ஆகிய நற்குணம் பத்து' என்றுகூறுவாருமுளர்; சிவ - சித்தி. சௌத்திராந்திகன்மதம், கூ0 - உரை.

எஅ. சிலத்தின் வகைகளை இந்நூல் உக-ஆம் காதை, நுஎ-ஆம் அடிக் குறிப்பிற்காண்க.

அக. மகிழ்ச்சி வினைப்பயன் - இன்பம். மகிழ்ச்சிவினை - புண்ணியம்.

சுசு - அக. இவ்வடிகளிற் கூறியதுபோலவே, "விலங்கு நரகரும் பேய் களு மாக்குங், கலங்களுர்த் நீவினை கடிமின் கடிந்தாற், றேவரு மக்களும்

(பி - ம்.) சுஅ - கூ. 'பயமில, சொல்லே சொல்லிற றோன்றுவ நான் கும்' எக - உ. 'மூன்றும் பத்துவகை' எகூ. 'இத்திறப் படாஅர்' எஎ. 'தொகுதிநீங்கி'

ருணர்வெனப் பிவ துறங்குவோ ருணர்விற்
புரிவின் ருகிப் புலன்கொளா ததுவே
யருவுரு வென்பதவ் வுணர்வு சார்ந்த
அரு வுயிரு முடம்பு மாகு மென்ப
வாயி லாறு மாயுங் காலே
யுள்ள முறுவிக்க வுறுமிட னுகு
மூவெறன வுரைப்ப துள்ளமும் வாயிலும்
வேறு புலன்களே மேவுத லென்ப
கூ0 நுகர்வே யுணர்வு புலன்களே நுகர்தல்

பிரமரு மாகுதி, ராகலி னல்லினே யயரா தோம்புமின்'' (உரு: சக - ச) என்று முன்பு வந்திருத்தல் காண்க.

சரு - அக. மு. மணி. உசு : கo0 - சo.

அஉ. உணர்வு: இது பஞ்சஸ்கந்தத்துள் ஒன்றுகவும் கூறப்படும் ; உறங்குவோருணர்வின் - தூங்குவோருடைய உள்ளம் கர்த்ருத்வமும் போக்த்ருத்வமுமின்றி ஸாக்ஷிமாத்திரமாக நிற்றலைபோல.

அங. புரிவு இன்ருகி - செய்யுந்தொழில் யாதொன்று மின்றி ; புலன் கொளாதது - விஷயங்களே அநுபவியாது ஸாக்ஷிமாத்திரையாயிருத்தலை யுடையது.

அட - ங. உணர்வு, உள்ளம், விஞ்ஞானமென்பன ஒரு பொருட்சொற் கள் ; இதுவே கருமத்தொகுதியோடுகூடிய வியவகாரதசையில் உயி ரென்று வழங்கப்படுமென்பதும், முடிவில் ஆன்மாவென்று ஒன்று இல்லை யென்பதும் பௌத்தர்கொள்கை ; (நீல. புத்த. ஙங - ஙூ. சமய) ஆன் மா இல்லையென்பதனால் இவர்கள் அநான்மவாதிகளென்று கூறப்படுவர்; இந்த இரண்டடிகளாலும் உணர்வினிலக்கணம் கூறப்பட்டது.

அச - ஞ. இவ்விரண்டடிகளாலும் அருவுருவினிலக்கணம் கூறப் பட்டது.

அசு. வாயில், துவாரம், வழி, ஆயதனம், இடமென்பன ஒருபொருட் சொற்கள்.

அள. உள்ளமுறுவிக்க - விஞ்ஞானத்தில் விஷயங்களையடைவித் தற்கு ; உறும் இடனுகும் - உற்ற இடங்களாகும் ; இடங்கள்: மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் இந்திரியமைந்தும் மனமொன்றும்.

அசு - எ. இவ்விரண்டடிகளாலும் வாயிலினிலக்கணம் கூறப்பட்டது.

அஅ. ஊறு - ஸ்பரிசம். அகூ. புலன்களே - விஷயங்களே.

அஅ - கூ. ஷடாயதனங்கள் விஷயங்களே ஸ்பரிசித்தல் ஊதெனப்படு மென்பர் ; இவ்விரண்டடிகளாலும் ஊற்றினிலக்கணம் கூறப்பட்டது.

கூ0. இதனால் நுகர்வினிலக்கணம் கூறப்பட்டது.

(பி - ம்.) அச - ஞ. 'மருவுணர்வென்பதவவுருவுசார்ந்துயிரு' அசு. 'வாயினூறுமாயுங்' அஅ. 'ஊதென்றுரைப்பது' அகூ-கூ0. 'வேவுதலென்பது நுகர்வெனப்படுவதுணர்வு புலனுக்காதல்'

வேட்கை விரும்பி துகர்ச்சியா ராமை
பற்றெனப் படுவது பசைஇய வழிவே
பவமெனப் படுவது கரும வீட்டஃ
தருமுறை யிதுவெனத் தாந்தாஞ் சார்தல்
பிறப்பெனப் படுவதக் கருமப் பெற்றியி
னுறப்புண ருள்ளஞ் சார்பொடு கதிகளிற்
காரண காரிய வருக்களிற் ரோன்றல்
பிணியெனப் படுவது சார்பிற் பிறிதா
யியற்கையிற் றிரிந்துடம் பிடும்பை புரிதன்
மூப்பென மொழிவ தந்தத் தளவுந்
தாக்குறிலை யாமையிற் ரூந்தளர்ந் திடுதல்

நெ. வேட்கை - திருஷ்ணை ; ஆராமை - நிரம்பாமை ; "ஆரா வியற்கை யவா" (குறள். ஈ எ0.) நிரம்பாமையாவது - தாமேயன்றித் தம்பயனும் நிலையாமையின், வேண்டாதனவாகிய பொருள்களே வேண்டி மேன்மேல் வளர்தல் ; இதனால் வேட்கையதிலக்கணம் கூறப்பட்டது.

நெஎ. பசைஇய - ஒட்டிக்கொண்ட ; இதனாற் பற்றினிலக்கணம் கூறப்பட்டது.

நெஅ. ஈட்டம் - கூட்டம்; ஈண்டுக்கூறியதுபோலப் பவத்தைக் கருமத் தொகுதியென்று பின்னுங்கூறுவர்; நெஉ, நெஏ.

நெஉ-ம். இந்த இரண்டடிகளாலும் பவத்தினிலக்கணம் கூறப்பட்டது.

நெஙி. கருமப்பெற்றியின் - கருமங்களினியல்போடு.

நெசு. உறப்புணருள்ளம் - மிகப்புணர்ந்த விஞ்ஞானம் ; சார்பொடுகதிகளில் - சம்பந்தத்தோடு கூடிய பிறப்புவகைகளில்.

நெள. இங்கே 'காரண காரிய வருக்களிற் ரோன்றல்' என்பதற்கேற்ப, "அன்புடை யாருயி ராசற் கருளிய, வென்புடை யாக்கை" (உறு : எள0 - எக) என்று முன்னுங் கூறியிருத்தலுகாண்க.

நெசு - எ. உள்ளம் தோன்றலென்க.

நெஙி - ஙி. இவ்வடிகளால் தோற்றத்தினிலக்கணம் கூறப்பட்டது.

நெஅ. பிணி - வியாதி. பிறிதாய் - வேறுபட்டு.

நெந. இயற்கை - ஸ்வபாவம். திரிந்து - வேறுபட்டு. இடும்பை - துன்பம்.

நெஅ - நெ. இவ்வடிகளாற் பிணியினிலக்கணம் கூறப்பட்டது.

நெ00 - நெந. அந்தம் - மரணம். இவ்வடிகளால் மூப்பினிலக்கணங் கூறப்பட்டது.

(பி - ம்.) நெச. 'தருவதுமுறையென' நெசு - எ. 'உறப்புளஞ்சார் பொடுகதிர்களிற ரோன்றல்' நெஅ. 'சார்பிறபிறகாய்' நெந. திரிந்துடலிடும்பையுறுதன' நெ00 - நெ0உ. 'மூப்பெனப் படுவ...தளவுதாக்குதார்தெளிவுறுதல் சாகாடென்ப'

சாக்கா டென்ப தருவுருத் தன்மை
யாக்கை வீழ்கதி ரெனமறைந் திடுதல்
பேதைமை சார்வாச் செய்கை யாகுஞ்
கo(சி) செய்கை சார்வா வுணர்ச்சி யாகு
முணர்ச்சி சார்வா வருவுரு வாகு
மருவுருச் சார்வா வாயி லாகும்
வாயில் சார்வா வூறு கும்மே
யூறு சார்ந்து நுகர்ச்சி யாகு
ககo நுகர்ச்சி சார்ந்து வேட்கை யாகும்
வேட்கை சார்ந்து பற்று கும்மே
பற்றிற் றோன்றுங் கருமத் தொகுதி
கருமத் தொகுதி காரண மாக
வருமே யேனை வழிமுறைத் தோற்றந்
ககசி தோற்றஞ் சார்பின் மூப்புப்பிணி சாக்கா
டவல மரற்றுக் கவலைகை யாறெனத்
தவலி றுன்பந் தலைவரு மென்ப
வூழின்மண் டிலமாச் சூழுமிந் நுகர்ச்சி
பேதைமை மீளச் செய்கை மீளுஞ்
கஉo செய்கை மீள வுணர்ச்சி மீளு
முணர்ச்சி மீள வருவுரு மீளு

கo஧ - ஙூ. சாக்காடு-மரணம். அருவுருத்தன்மையினையுடையவுடம்பு அத்தமிக்குஞ் சூரியனைப்போல மறைந்துபோதல்; இத்தன்மையே இந் நூலில் முன்பும் (உசு: கoக - உ) கூறப்பட்டிருத்தல் காண்க; இவ்வடிகளாற் சாக்காட்டினிலக்கணம் கூறப்பட்டது.

கூஅ - கo஧. இவ்வடிகளாற் பிணி மூப்புச் சாக்காடென்னும் விசேப பயன்களுக்கு இலக்கணங்கூறினர்.

ககசு. அவலமுதலியவற்றினிலக்கணங்களை இப்புத்தகத்தின் நூஙூ - ஆம் பக்கத்திற்பார்க்க.

ககநி - ள. மூப்புமுதலியன துக்கமெனவுங் கூறப்படுமாதலின், அவைகள் 'தவலிறுன்பம்' எனப்பட்டன.

ககஅ. ஊழ் இல் மண்டிலமா - முடிவில்லாத வட்டமாக; ஊழ் - முடிவு; "ஊழ்பா டின்றி" (ஙo: ஙூள) என்றார் முன்னும்; இந்நுகர்ச்சி சூழுமென்க; ஊழின் - முறைமையினையுடைய எனினுமாம்.

கoச - கஅ. இவ்வடிகளால துக்கமும் துக்கோற்பத்தியுமாகிய வாய்மைகளிரண்டும் கூறப்பட்டனவென்பர்.

கககூ. மீள - நீங்க; இல்லையாகவென்றுமாம்.

(பி - ம்.) கoஙூ. 'மறைந்தீறுதல்' கoஎ. 'அருவுருசார்வா' ககஙூ - சு. 'கானமாகி, வருமுயாயானவழி'

மருவுரு மீள வாயின் மீளும்
வாயின் மீள வூறு மீளு
மூறு மீள நுகர்ச்சி மீளு
கஉடு நுகர்ச்சி மீள வேட்கை மீளும்
வேட்கை மீளப் பற்று மீளும்
பற்று மீளக் கருமத் தொகுதி
மீளுங் கருமத் தொகுதி மீளத்
தோற்ற மீளுந் தோற்ற மீளப்
கஙo பிறப்பு மீளும் பிறப்புப் பிணிமூப்புச்
சாக்கா டவல மரற்றுக் கவலை
கையா றென்றிக் கடையி றுன்ப
மெல்லா மீளுமிவ் வகையான் மீட்சி
யாதிக் கண்ட மாகு மென்ப
கஙடு பேதைமை செய்கை யென்றிவை யிரண்டுங்
காரண வகைய வாத லானே
யிரண்டாங் கண்ட மாகு மென்ப
வுணர்ச்சி யருவுரு வாயி லூறே
நுகர்ச்சி யென்று நோக்கப் படுவன
கசo மூன்னவற் றியல்பாற் றுன்னிய வாதலின்
மூன்றுங் கண்டம் வேட்கை பற்றுக்
கரும வீட்ட மெனக்கட் கிரைப்பவை
மற்றப் பெற்றி நுகர்ச்சி யொழுக்கினுட்
குற்றமும் வினையு மாக லானே

கஙo. பிறப்பு - ஈண்டுப் புனர்ஜனனம் ; இப்படியே பின்னும் வரும்.

கஙடு. மீட்சி இவ்வகையினையுடைத்து.

ககக - ஙக. இவ்வழிகளால் துக்கநிவாரணமாகிய மூன்றாவது வாய்மை கூறப்பட்டதென்பர்.

இனி, நான்குகண்டங்களும் முறையே கூறப்படும்.

கஙச - சு. பேதைமையும் செய்கையுமாகிய இரண்டும் காரணங்களாக வுள்ளனவாதலின், இவை முதற்கண்டமென்று கூறப்படும்.

கஙஎ - சo. உணர்ச்சி முதலிய ஐந்தும், பேதைமை செய்கையென்னு மிரண்டாலும் வந்தனவாதலின், இவை இரண்டாங்கண்டமென்று கூறப் படும்.

கசக - ச. வேட்கை முதலிய மூன்றும் மேற்கூறிய நுகர்ச்சியொழுக்

(பி - ம்.) கசக - உ. 'பற்று, கருமவீடகம்' கசச. 'பறறு நுகர்ச்சி'

கசடு நான்காங் கண்டம் பிறப்பே பிணியே
மூப்பே சாவென் மொழிந்திடுந் துன்ப
மெனவிவை பிறப்பி னுழக்குபய ஞதலிற்
பிறப்பின் முதலுணர் வாதிச் சந்தி
நுகர்ச்சி யொழுக்கொடு விழைவின் கூட்டம்
கடுஐ புகர்ச்சியின் றறிவ திரண்டாஞ் சந்தி
கன்மக் கூட்டத் தொடுவரு பிறப்பிடை
முன்னிச் செல்வது மூன்றுஞ் சந்தி
மூன்றுவகைப் பிறப்பு மொழியுங் காலை
யான்றபிற மார்க்கத் தாய வுணர்வே
கடுடு தோன்றல் வீடெனத் துணிந்து தோன்றியு
முணர்வுள் ளடங்க வுருவாய்த் தோன்றியு
முணர்வு முருவு முடங்கத் தோன்றிப்
புணர்தரு மக்க டெய்வம்விலங் காகையுங்
கால மூன்றுங் கருதுங் காலை
கசூஐ யிறந்த கால மென்னல் வேண்டு
மறந்த பேதைமை செய்கையா னவற்றை
நிகழ்ந்த காலமென நிரப் பிடுமே
யுணர்வே யருவுரு வாயி னுறே

கத்தின்கணுண்டாகிய குற்றமும் அதனுலுளதாகும் வினையுமாக இருத்தலின், இவை ழுன்றுங்கண்டமென்று கூறப்படும்; வேட்கை முதலிய மூன்றனுள் வேட்கையும் பற்றும் குற்றமெனவும் பவம் வினையெனவுங்கொள்க.

கசடு - எ. பிறப்பும் பிணிமுதலிய கன்மபலனும் முற்கூறிய வினைப் பயனுக இருத்தலின், இவை நான்காங்கண்டமென்று கூறப்படும்.

கசஅ. பிறப்பின் முதல் - செய்கை. செய்கையும் உணர்வுஞ் சேர்தல் முதற்சந்தியாகும்.

கசகூ. கூட்டம் - சேருதல.

கசகூ-டுஐ. நுகர்ச்சியும் வேட்கையுங்கூடுதல இரண்டாஞ்சந்தியாகும்.

கடுக - உ. பவமும் தோற்றமுஞ் சேர்தல ழுன்றாஞ்சந்தியாகும்.

கடுகூ - சுஅ. பேதைமையும் செய்கையுமாகிய இவை இறந்த (பி - ம்.) கசசு - எ. 'துன்ப, மிவையிறபபிலுழ்க்குபயனுதலின்' கசஅ - டுஐ. 'உணர்வாதிபெ...வினையினிடை முதறசுதிநுகர்ச்சியினறிவ திரண்டா' கடுக. 'கனமகசுதொடு' கடுச. 'ஆயுவுணர்வே' கடுசு. 'உளடன் யிருமுணர்வாய்' கடுஎ. 'உடலுற்றத் தோன்றி' கசுஉ -அ. 'காலமென விசைக் கப்படுமே மூப்பேசாவேபிணியே யவலமொறறுக'

நுகர்வே வேட்கை பற்றே பவமே
கசுரு தோற்ற மென்றிவை சொல்லுங் கர்லை
யெதிர்கா லம்மென விசைக்கப் படுமே
பிறப்பே பிணியே மூப்பே சாவே
யவல மரற்றுக் கவலைகை யாறுகள்
குலவிய குற்றமெனக் கூறப் படுமே
கஎ0 யவாவே பற்றே பேதைமை யென்றிவை
புணையுமடை பவமும் வினைசெய லாகு
முணர்ச்சி யருவுரு வாயி லூறே
நுகர்ச்சி பிறப்பு மூப்புப்பிணி சாவிவை
நிகழ்ச்சிப்பய னுங்கே நேருங் காலைக்
கஎரு குற்றமும் வினையும் பயனுந் துன்பம்
பெற்ற தோற்றப் பெற்றிக ணிலையா
வெப்பொரு ளுக்கு மான்மா விலையென
விப்படி யுணரு மிவைவீட் டியல்பா
முணர்வே யருவுரு வாயி லூறே
கஅ0 நுகர்வே பிறப்பே பிணிமூப்புச் சாவே
யவல மரற்றுக் கவலைகை யாறென
நுவலப் படுவன நோயா கும்மே
யந்நோய் தனக்குப்

காலத்தனவென்றும், உணர்வுமுதல்தோற்றமீரறனவை நிகழ்காலத்தனவென்றும், தோற்றமுதற் கையாறிறுதியாகவுள்ளவை எதிர்காலத்தனவென்றுங் கூறப்படும்.

கசுக - எ0. அவாவும் பற்றும் பேதைமையுமாகிய இம்மூன்றும் குற்றமென்று கூறப்படும்.

களக. பவமும் செய்கையும் வினையாகும்.

களஉ - ச. உணர்ச்சி முதலியவாறும் மூப்புப் பிணி சாக்காடென்னும் வினைப்பயனென்றும் ஆகிய ஏழும் பயனுகக்கூறப்படும்.

களசு. தோன்றிய இயல்பையுடைய பொருள்கள் நிலையா.

களடு - அ. இவ்வடிகள், மூன்று, "நிலையில வறிய துன்பமென நோக்க, வுலையா வீட்டிற் குறுதி யாகி" (கூ0: கூ0 - கூக) என்றதனை விளக்கி நின்றன.

களகூ - அஅ. உணர்வுமுதல் வினைப்பயனீறுகவுள்ளவேழும் துக்க

(பி - ம்.) களடு. 'துனபமும்' களஅ. 'உணருமென்பிவை' கஅ0 - அக. ,பிறப்பே மூப்பேசாவேயவலவாறறுகவலைகையாதென்ன'

பேதைமை செய்கை யவாவே பற்றுக்
கஅரு கரும வீட்டமிவை காரண மாகுக்
துன்பக் தோற்றம் பற்றே காரண
மின்பம் வீடே பற்றிலி காரண
மொன்றிய வுரையே வாய்மைநான் காவ
துருவு துகர்ச்சி குறிப்பே பாவனை
ககூ0 யுள்ள வறிவிவை யைங்கந்த மாவன

மென்று கூறப்படும்; அதற்குப் பேதைமைமுதலிய ஐந்தும் காரணமாகும்; ஆதலால் தோன்றுதல் துன்பம்; அதற்குக்காரணம் பற்று; வீடு இன்பம்; அதற்குக்காரணம் பற்றின்மையே; என்கிற நான்குரைகளும் நான்கு வாய்மைகளாகும்; "பிறக்தோ ருறுவது பெருகிய துன்பம், பிறவா ருறுவது பெரும்பே ரின்பம், பற்றின் வருவது மூன்னது பின்ன, தற்றே ருறுவது" (உ: சுசா - எ) என்று மூன்பும் வக்திருத்தல்காண்க. இவற்றை ஸத்திய சதுஷ்டயமென்பர் நீலகேசியுரையாசிரியர்; இக்கான்கினுள் துக்கநிவாரண மார்க்கம் எட்டுவகைப்படும்; அஃது அஷ்டாங்கமார்க்கமென்றும் விசுத்தி மார்க்கமென்றும் பழுதிலாவாழ்க்கையென்றுங் கூறப்படும். இவ்வெட்டாவன:—நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளத்தோர்தலைப்பாடென்பன; "பழித்திடாப் பழுதில் வாழ்க்கை யெட்டையும் பாரித்து" (சீவ - சீத்தி. பரபக்கம், சௌத்திராந்திகன்மதம், ஈக); "நற்காட்சி நல்லொழுக்க நல்வாய்மை நல் வாழ்க்கை, நற்செய்கை யோடைந்து நாடு", "நன்முயற்சி நன்காண் கடைப் பிடிநல் லோர்தம்பாற், செல்கையுட னெட்டினைத்துக் தேறு" (பாமத தீபிரபானு) என வருவனவற்றாலறிக. இவ்வெட்டும் ஸம்மியக் திருஷ்டி, ஸம்மியக்ஸங்கற்பம், ஸம்மியக் வாக்கு, ஸம்மியக்கருமம், ஸம்மியகாஜீவம், ஸம்மியக்வியாயாமம், ஸம்மியக்ஸ்மிருதி, ஸம்மியக் ஸமாதியென்றுபெயர் பெறுமென்றும், இவைகளே ஜன்மமரண துக்கத்தை மாற்றுதற்குரியவழி யென்றும் அசுவகோஷபோதிஸத்துவரால் வடமொழியிற் செய்யப்பட்டுள்ள புத்தசரித்திரத்தின் கரு-ஆம் வர்க்கத்தால் தெரிகின்றன.

கஅக. துகர்ச்சி - வேதனை. ககூ0. உள்ளமறிவு - விஞ்ஞானம்.

கஅக - கூ0. உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானமென்னும் இவ்வைந்தும் பஞ்சஸ்கந்தமெனப்படும்; (சீவ-சீத்தி. பரபக்கம், சௌத்திராந்திகன்மதம், கூ.) அவற்றுள் உருவக்கந்தம், பூதவுரு உபாதாயவுருவென இருவகைப்படும். பூதவுரு-பிருதுவி, அப்பு, தேயு, வாயு எனும் நான்குமாம்; உபாதாயவுரு-வலி, இரதம், வன்னம், கந்தமென்னு நான்குமாம். வேதனை - சுகலவேதனை (சுகவறிவு), அகுசலவேதனை (துக்கவறிவு), குசலாகுசலவேதனை (சுகதுக்கவறிவு) என்னுமூன்றுமாம். குறிப்பு - மெய் வாய் கண் மூக்குச் செவியென்னுமைந்தும் மனமொன்றும் ஆகிய ஆறுமாம். பாவனையாவது - மனோவாக்குக்காயங்களினுலுண்டாகும் கல்வினைபத்தும் தீவினைபத்தும் ஆகிய இருபதுமாம். "எட்டிவை யுருவ மூன்று வேதனை யாறு ஞான,

(பி - ம்.) கஅரு. 'கரணமாகும்' கஅக. 'குறிப்பினை, யுள்ளமறிவினை'

வறுவகை வழக்கு மறுவின்று கிளப்பிற்
றொகையே தொடர்ச்சி தன்மை மிகுத்துரை
யியைந்துரை யென்ற நான்கினு மியைந்த
வுண்மை வழக்கு மின்மை வழக்கு
ககூடு முள்ளது சார்ந்த வுண்மை வழக்கு
மில்லது சார்ந்த வின்மை வழக்கு
முள்ளது சார்ந்த வின்மை வழக்கு
மில்லது சார்ந்த வுண்மை வழக்குமெனச்
சொல்லிய தொகைத்திற முடம்புநீர் நாடி

மொட்டிய குறிப்போ ராறு செய்கையு மிருப தாகக், கட்டிய பஞ்ச கந்தங் கணத்தினிற் பங்க மாகுங, தொட்டநாற் பத்து மூன்றுஞ் சுகதநூற் ரூணிவு தானே'' (சிவ-சித்தி. பரபக்கம், சௌத்திராந்திகன்மதம், ரு o. உ-ம்) என்று வருதல் காண்க; இன்னும் இவற்றினிலக்கணங்களே, ''ஓங்குருவம் வே தனே யுளக்குறிப்புப் பாவனைமெய், தாங்குணர்வென் றைந்தாங்கந் தம்'' எ-ம்,''உருவமுடல பூத மூபாதாய மென்னு,மிருவித்தி ஞுமெழு மென்'' எ - ம், ''வேதனை துன்பிலி பிவற்றின் விரவலுமென், றோதவொரு மூன்று மென் றோர்'' எ-ம், ''பொறிவிதமோ ரைந்தும் பொறியைப் பொருத்தி, யறியுமன முங்குறிப்பென் றுய்'' எ-ம், ''வாக்குமன மாக்கையிவை பாவனை யென் றேதமிரா, யாக்குமிவை தாமறம்பா வம்'' எ - ம், ''இக்கால் வகை யினுமேய்ந் தையமற வெண்ணுமெனம், விஞ்ஞான மென்றே விளம்பு'' எ - ம், ''இந்தவித மைந்துஞ்ச தானத் தெழுந்தழிகை, பந்தமென வேநீ தான் பார்'' எ - ம், ''அறக்கெடுத லேபர மூத்தியிவை யைந்து, மறக் கெடுமா றுங்கூறு வாம்'' எ - ம் வரும் திருவாக்காலு (பரமதத்திமிரபானு) மறிந்துகொள்க. இந்தப் பஞ்சஸ்கந்தக்கூட்டமே உயிரென்பர்; அது, ''கவை யொப் பனகை விரலுந துகளு, மிவையிப் படிகைப் பிடியென் றதுபோ, லவையப் படிகந் தங்கொந் துகளு, நவையைப் படுகல வுயிரா மெனவும்'' (நீல. புத்தி. ரு o) என்னும் பாடலால் நன்குணர்த்தப்படுகின்றது. இவ் வைந்தினுள்ளே குறிப்பினைக் குறியென்றும், அது வடமொழியில் ஸம்ஜ் ஞாஸ்கந்தமென்று பெயர் பெறுமென்றுங் கூறுவாரும், இரண்டொன்றிற்கு வேறு இலக்கணங்கூறுவாருமுளர்.

ககூக - அ. அறுவகைவழக்காவன:—தொகை, தொடர்ச்சி, தன்மை மிகுத்துரை, இயைத்துரையென்றநான்கொடுஞ்சேர்ந்த உண்மைவழக்கு முதலிய ஆறுமாம். இயைத்துரையைத் தொகையிலடக்கி மூன்றென்பாரு முளர்.

ககூக. தொகைத்திறமாவது: உடம்பும் நீரும் நாடுமென்க ; என்றது, பலதாதுக்களின்கூட்டம் உடம்பென்றும் பலதுளிகளின்கூட்டம் நீரென் றும் பலவூர்களின்கூட்டம் நாடென்றும் வழங்கப்படுமாறுபோலப் பஞ்சஸ் கந்தங்களின் கூட்டமே ஆன்மாவென்று வழங்கப்படுவது தொகையென்ற

(பி - ம்.) ககூக - அ. 'சார்ந்தவுண்மைவழக்கு, மில்லதுசார்ந்தவி ன்மை....சார்ந்தவின்மை வழக்கும்'

உ00 தொடர்ச்சி வித்து மூலதா லென்றிங்
நிகழ்ச்சியி லவற்றை நெல்லென வழங்குத
லியல்பு மிகுத்துரை யீறுடைத் தென்றுந்
தோன்றிற் றென்று மூத்த தென்று
மூன்றி னொன்றி னியல்புமிகுத் துரைத்த
உ0டு லியைந்துரை யென்ப தெழுத்துப் பலகூடச்
சொல்லெனத் தோற்றும் பலகாட் கூடிய
வெல்லையைத் திங்க ளென்று வழங்குத

வாறு ; இனி இத்தொகையினை உண்மைவழக்கு இன்மைவழக்கு என்பவற் றோடுசேர்த்து 'சுவரும்மரமும் ஆக்கையும் கற்றையுங்கூடின சமுதாயத்தை வீடென்று வழங்குமாறுபோலவும் பலவுருங்கூடின சமுதாயத்தை நா டென்றும்பற்றென்றும்வழங்குமாறுபோலவும்பஞ்சஸ்கந்தக்கூட்டத்தை ஆன் மாவென்று வழங்குவது கற்பனாமமெனக்கொள்க' என்றும், 'மரம் கற் றைமுதலியவற்றைப்பிரித்தால் வீடில்லையானதுபோலவும் ஊர்களைப்பிரித் தாற் பற்றும் நாடுமில்லையானதுபோலவும் ஐந்துஸ்கந்தங்களையும் பிரித்துண ருங்கால் ஆன்மா இல்லையாமெனக்கொள்க' (சிவ-சித்தி.பரபக்கம், உரை)என் றும் விளங்க அவற்றிற்குஉதாரணங்காட்டினருமுளர்; "ஒருவனென் றோதப் பட்டா னுருவாதி யைந்துங் கூடி, வருபவ னென்று ரைத்த றெகையுண்மை வழக்க தாகு, முருவமங் காதி யாய வைந்தையு மொருவ னின்று, தருவது தொகையி னின்மை வழக்கதாஞ் சாற்றுங் காலே" சிவ - சித்தி. பரபக்கம், சௌத்திராந்திகன்மதம், எ.

உ00 - உ0க. தொடர்ச்சியாவது-வித்திலிருந்து மூலையும் மூலையிலி ருந்து தாளுந்தோன்றி நிகழ்ந்து நெல்லென்று வழங்குமாறுபோல எல்லாம் காரணகாரிய சம்பந்தமாகவுள்ளதென்பது; "காரண காரி யத்தின் றொடர்ச் சியாய்க் கால மூன்றின், சோர்வதத் தோன்றுங் கெட்டி வழியென்கை தொடர்ச்சி யுண்மை, போர்தரி னொருவ னேயெக் காலத்து மூன்றா னென் று,தோர்வது தொடர்ச்சி யின்மை வழக்கதாஞ் செப்புங் காலே" (சிவ-சித்தி. பரபக்கம், சௌத்திராந்திகன்மதம், அ)என்று இத்தொடர்ச்சியை உண்மை வழக்கு இன்மைவழக் கென்பவற்றோடுசார்த்தி அவற்றிற்கு இலக்கணங்கூறி யிருத்தல் காண்க.

உ0உ - சு. இயல்பு மிகுத்துரை-தன்மைமிகுத்துரை. தன்மைமிகுத் துரையாவது - ஒருபொருளினுடைய இறப்புப்பிறப்பு மூப்பு என்பவற்றுள் ஒன் றனியல்பை மிகுத்துச் சொல்லுதல். இதனை உண்மைவழக்கு இன்மை வழக்கென்பனவற்றோடுசார்த்தி, "தோற்றிய பொருள்க ளெல்லா நாசமா மென்று சொல்லு, மாற்றமுன் னுரைத்தின் மற்றை மிகுத்துரை வழக்கி னுண்மை, போற்றிய பொருள்கண் கட்குப் போனது போன்மு திர்ந்து, வேற்றுமைப் பட்ட தென்கை மிகுத்துரை யில்வழக்கே" (சிவ - சித்தி. பரபக்கம், சௌத்திராந்திகன்மதம், கு) என்று முறையே அவற்றிற்கு இலக்கணங் கூறியிருத்தல் காண்க.

உ0டு - எ. தொகைக்கும் இயைத்துரைக்கும் வேற்றுமையாதோவெ (பி - மீ.) உ0க. 'நிகழ்ச்சியிலத்தை'

உள்வழக் குணர்வில் வழக்கு முயற்கோ
டுள்ளது சார்ந்த வுள்வழக் காகுஞ்
உகo சித்தத் துடனே யொத்த துகர்ச்சி
யுள்ளது சார்ந்த வில்வழக் காகுஞ்
சித்தமுற் பவித்தது மின்போ லென்கை
யில்லது சார்ந்த வுண்மைவழக் காகுங்
காரண மின்றிக் காரிய நேர்த
உகடு வில்லது சார்ந்த வில்வழக் காகு
முயற்கோ டின்மையிற் றேற்றமு மில்லென
வுன்கு நயமெனத் தோன்றப் படுவன
வொற்றுமை வேற்றுமை புரிவின்மை யியல்பென்க

னின் பலபொருள்களின் வரையறைப் படாததொகுதி தொகையாமென்றும் பலபொருள்களின் வரையறைப்பட்ட தொகுதி இயைத்துரையாமென்றுங் கூறுவர்.

ககக - உoஎ. இவ்வடிகளால் தொகை முதலிய நான்கினிலக்கணங் களும் கூறப்பட்டன.

உoஅ - ககூ. இவ்வடிகளால் உண்மைவழக்கு, இன்மைவழக்கு, உள் ளதுசார்ந்தவுண்மைவழக்கு, உள்ளதுசார்ந்தவின்மைவழக்கு, இல்லது சார்ந்தவுண்மைவழக்கு, இல்லதுசார்ந்தவின்மைவழக்கென்னும் ஆறினிலக் கணங்களும் முறையே கூறப்பட்டன; "அறுவகை வழக்கு நெறிபட வுணர்ந்து" என்பது பொருந்தநூல்; இவ்வறுவகைவழக்கின் டையரும் அவற்றி னிலக்கணங்களும் ஈண்டுக்கூறப்பட்டிருத்தல்போலப் பின்வரும் திருவிருத் தங்களினுங் கூறப்பட்டிருத்தல் காண்க; "உள்வழக் கில்வழக்குள் ளது சார்ந்த வுள்வழக்கோ, டுள்ளது சார்ந்த வின்மை வழக்குட வின்மை சார் ந்த,வுள்வழக் கின்மை சார்ந்த வில்வழக் கென்றே ராறு,மூள்வழக் குள துண் டென்கை முயற்கோடின் றில்வ ழக்கே", "உணர்வு சார்ந் துணர்வு திக்கை யுள்ளது சார்ந்த வுண்மை, யுணர்வுபி னின்று மென்கை யுள்ளது சார்ந்த வின்மை, யுணர்வு முன்பின்றித் தோன்ற வில்லது சார்ந்த வுண்மை, யுணரினில் லதுசா ரின்மை யுள்ளங்கை யுரோம நாணே" (சீவ - சித்தி. பரபக்கம், சௌத்திராந்திகன்மதம், கo, கக.)

உகள - அ. ஒற்றுமைநயம் வேற்றுமைநயம் புரிவின்மைநயம் இயல்பு நயமென நயங்கள் நான்கு வகைப்படும்.

(பி - மீ.) உoகூ - கo. 'வழகதேற்குமசிகதிதுடனேயொத்து துகர்ச்சி' உகஉ - அ. 'உற்பவித்தமினனநான்குநயமெனதோன்றப்படுவ தொற்றுமை' உகஅ - கூ. 'இயலபெனக்'

காரண காரிய மாகிய பொருள்களே
உஉ0 யொன்ரு வுணர்த லொற்றுமை நயமாம்
வீற்றுவீற் ருக வேதனே கொள்வது
வேற்றுமை நயமென வேண்டல் வேண்டும்
பொன்றக் கெடாஅப் பொருள்வழிப் பொருள்களுக்
கொன்றிய காரண முதவுகா ரியத்தைத்
உஉரு தருதற் குள்ளந் தானிலை யென்றல்
புரிவின்மை நயமெனப் புகறல் வேண்டு
செல்வித் தகத்து ணெண்மூலே தோற்றுமென
னல்ல வியல்புநய மிவற்றினுங் கொள்பயன்
ருெக்க பொருளல தொன்றில்லை யென்று
உகூ0 மப்பொரு ளிடைப்பற் ருகா தென்றுஞ்

உகக - உ0. இவ்வடிகளால் ஒற்றுமைநயத்தினிலக்கணங் கூறப் பட்டது.

உஉக. வேறுவேறுக அறிதல்.

உஉக - உ. இவ்வடிகளால் வேற்றுமைநயத்தினிலக்கணங் கூறப் பட்டது.

உஉகூ. பொன்றக்கெடாப்பொருள் - முற்றக்கெடாதபொருள். வழிப் பொருள் - காரியப்பொருள்.

உஉரு. உள்ளம் - விஞ்ஞானம். உஉக. புரிவின்மை-செய்தலில்லாமை.

உஉரு - கூ. "உணர்வெனப் படுவ துறங்குவோ ருணர்வித், புரி வின் ருகிப் புலன்கொளா ததுவே" (கூ0: அஉ - கூ) என்ருர் முன்னும்; விஞ்ஞானத்திலடங்கியிருக்கும்கன்மபீஜமேமறுபிறப்பிற்குக்காரணமென்பர்.

உஉகூ - ங. இந்த ரான்கடிகளாலும் புரிவின்மை நயத்தினிலக்கணம் கூறப்பட்டது.

உஉஎ-அ. இவ்வடிகளால் இயல்புநயத்தினிலக்கணம் கூறப்பட்டது.

உஉஅ. இவற்றின் நாம் கொள்பயன் - இந்த ஒற்றுமைநயமுதலிய நயங்கள் ரான்காலும் நாம் கொள்ளும்பயன் யாவையெனின்.

உஉக. தொக்கபொருளல்ல -சேர்ந்தபொருள்களேயல்லாமல். ஒன்று-வேருகிய ஒன்று.

இவ்வடியாற் கூறப்பட்டது ஒற்றுமைநயத்தாற்போந்த பயனென்க.

உகூ0. இவ்வடியாற் கூறப்பட்டது வேற்றுமைநயத்தாற்போந்த பய னென்க.

(பி - ம்.) உஉ0. 'ஓர்விலனுயொனரு' உஉ0 - உக. 'நயம் வீற்றுவீற் ருதலெனே கொள்வது' உஉகூ. 'பொனகெகொட...' உஉசு - அ. 'புகலல் வேண்டுகெனமூலையீனறு மெவலலவியலபு' உஉஅ - கூ. 'பயனுங கொன பயன, ருெழுக்கபொருளதொனறில்லை'

செய்வா னெடுகோட் பாடிலை யென்று
மெய்துகா ரணத்தாங் காரிய மென்று
மதுவு மன்றத லாதது மன்றென்றும்
விதிமுறை தொகையிலூல் விரிந்த நான்கும்
உஉரு வினைவிடை நான்குள
துணிந்து சொல்லல் கூறிட்டு மொழிதல்
வினைவின் விடுத்தல் வாய்வா ளாமையெனத்
தோன்றியது கெடுமோ கெடாதோ வென்றூற்
கேடின் டென்ற றுணிந்துசொல லாகுஞ்
உசo செத்தான் பிறப்பா னேபிற வானே
வென்று செப்பிற்
பற்றிறக் தானே வன்மக னேவெனன்
மிகக்கூ றிட்டு மொழிதலென விளம்புவர்

உஉக. செய்வான் - கருத்தா. இவ்வடியாற்கூறப்பட்டது புரிவின் மையத்தாற் போந்த பயனென்க.

உஉஉ - ங. இவ்வடிகளாற் கூறப்பட்டஇரண்டும் இயல்புநயத்தாற் போந்த பயன்களெனக்கொள்க; இங்ஙனங்கொள்ளாமல் இந்த இரண்டு பயனையும் பிரித்து மூன்னதை மூன்னதனோடுகூட்டினும் பொருந்தும்.

உஉச. விரிந்த, முற்று. நான்கும் விரிந்தனவென்க. நான்கும் -நான்கு பயன்களும்.

உஉரு. வினைக்களுக்குரிய விடைகளென்க.

உஉசு. கூறிட்டுமொழிதல் - பகுத்துச்சொல்லல்.

உஉள. வாய்வாளாமை - பேசாதிருத்தல்; ஆசிரியர் நச்சினார்க்கினியர், "அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்" (தொல். புறத். உo) என்னுஞ் சூத்திரத்தில், 'நாலிரு வழக்கிற் றுபதப் பக்கமும்' என்பதனுரையில், தவஞ்செய்வோர்க்குரியனவாகவடுத்துக்காட்டிய 'ஊணசையின்மை, நீர்சையின்மை, வெப்பம்பொறுத்தல், தட்பம்பொறுத்தல்; இடம்வரையறுத்தல், ஆசனம்வரையறுத்தல், இடையிட்டுமொழிதல், வாய்வாளாமை' என்னும் எட்டினுள் இம்மொழிவக்திருத்தல் காண்க.

உஉரு - எ. துணிந்துசொல்லல், கூறிட்டுமொழிதல், வினைவின்விடுத் தல், வாய்வாளாமையென நான்குவிடைகளுள்ளன.

உஉஅ - கூ. தோன்றியது - உண்டான பொருள். தோன்றியபொருள் கெடுமென்பது ஒருதலையாதலின், ஈண்டுக்கேடின்டென்றல் துணிந்துசொல் லலாயிற்று; துணிந்துசொல்லலென்னும் விடையினியல்பு கூறப்பட்டது.

உசo-சஉ. கூறிட்டுமொழிதலென்னும் விடையினியல்பு கூறப்பட்டது. (பி - ம்.) உஉக. 'தெடாபாடிலை யெனறும்' உஉஉ - ங. 'காரணத் தாங்காரியமென்றுமதுவு மன்ற தாதுவு மனறெ' உஉச - ஞ. 'மூறைதொ கைவினவிடைநான்குள்'உஉக. 'உண் டென்னித்துணிந்து'

வினுவின் விடித்தன் முட்டைமுந் திற்றே
உசரு பணைமுந் திற்றே வெனக்கட் டுரைசெ
பென்ரு லெம்முட்டைக் கெப்பணை யென்றல்
வாய்வா ளாமை யாகா யப்பூப்
பழைதோ புதிதோ வென்று புகல்வா
னுரைக்கு மாற்ற மூரையா திருத்தல்
உரிo கட்டும் வீடு மதன்கா ரணத்த
தொட்டித் தருதற் குரியோ ரில்லே
யாமே லுரைத்த பொருள்கட் கெல்லாங்
காமம் வெகுளி மயக்கங் காரண

உசசு-சு. இந்தவடிகளால் வினுவின்விடித்தலென்னும் விடையினியல்பு கூறப்பட்டது.

உசஅ. பழைது - பழையது.

உசள - கூ. இந்தவடிகளால் வாய்வாளாமையென்னும் விடையினியல்பு கூறப்பட்டது.

உகூரு - சகூ. இவ்வடிகளிற் கூறிய விடைவகை நான்கும் தொல்காப்பிய உரையிற் கூறப்பட்டுள்ளன; கிளவி. ரு. கக.

உரிo. கட்டு - பந்தம். 'அதன் காரணத்தினது' என்பதனைக்கட்டினேடும் வீட்டினேடும் தனித்தனியே கூட்டுக.

உரிகூ. காமமுதலிய மூன்றும் முக்குற்றமெனப்படும்.

உரிஉ - ஙூ. மேற்கூறியபொருள்களெல்லாவற்றிற்கும் காமம் வெகுளி மயக்கமென்னும் இம்மூன்றுங் காரணமாகும்; "காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற, னுமங் கெடக்கெடு நோய்" (குறள். ஙூசo) என்று வள்ளுவநாயனாரும் கூறியிருத்தல்காண்க.

இனி, எல்லாவற்றிற்கும்காரணமாகியகாமவெகுளிமயக்கங்களை முறையேநீக்குதற்குரிய பாவனைகள் கூறுவார்.

மைத்திரீபாவனை கருணாபாவனை முதிதாபாவனை அசுபபாவனை உபேக்ஷாபாவனை யெனப் பாவனை ஐந்துவகைப்படும்; அவற்றுள்,

க. மைத்திரீபாவனை:— ஒருதாவி வசதியான ஓரிடத்தையடைந்து தக்க ஆஸனத்திலிருந்த பின்பு பின்வருமாறு தியானித்தலாம்: 'உத்தமமான பிறப்பினையுடைய பிராணிகளெல்லாம் களிப்புற்றுவாழ்வனவாகுக; அவையெல்லாம் துக்கம் வியாதி துராசையென்னும் இவைகளினின்றும் விடுபட்டனவாகுக; எல்லாமனிதர்களும் எல்லாத்தேவர்களும் நரகவாதையினுற் பீடிக்கப்படுகிறவாரும் ஸந்தோஷமுடையவர்களாக ஆகுக; அவர்கள் துக்கம் வியாதி துராசையென்னும் இவற்றினின்றும் விடு

(பி - ம்.) உசச. 'வினுவின்விடித்தல விரிக்குங்காலே முட்டை' உசரு. சு. 'கட்டுரையென்றல்' உசஅ - கூ. 'புகல்வானுக்கு' உருஉ. 'பொருள் களெல்லாம்'

மநித்தந் துக்க மாஸ்மா வசுசியெனத்

பட்டவர்களாக ஆகுக.' மைத்ரம் ஸ்நேகம் அன்பு என்பன ஒருபொருட் சொற்கள் ; மைத்திரமென்பது குரோதத்திற்கு மாறுனது ; அவ்விரண்டும் ஓரிடத்துங்கழா ; மைத்திரமென்பது 'த்ருஷ்ணையென்னுமாசையன்று ; அவித்தை அல்லது மோகங்காரணமாக த்ருஷ்ணை பிறக்கும் ; அதனால் துராசைபிறக்கும். மைத்திரமென்னும் ஸ்நேகத்திலிருந்து துராசையுண்டாகாது. ஒருவனுக்குத் தன்துணைவன்விஷயமாக உண்டாகுமன்புதான் மைத்திரமென்பது.

உ. **கருணாபாவனை :—**'வறியவர்கள் வறுமை நீங்கிச் செல்வமுடையவர்களாக ஆகுக' என்றுபாவித்தல். கருணையாவது இரக்கமுள்ளஎண்ணம். அஃது, ஒருபிராணி துன்பமுறுவதைக்காணின், மனக்கலக்கத்தையும் அத்துன்பத்தை நிவர்த்தி பண்ணவேண்டுமென்பதையும் ஒருவருக்கு உண்டாக்கும்.

ஊ. **முதிதாபாவனை :—**' ஆக்கமுடையவர்களுடைய நல்ல அதிர்ஷ்டமானது எப்பொழுதும் நீங்காதிருத்தல் வேண்டும் ; ஒவ்வொருவரும் தத்தமக்கு அமைந்துள்ள நல்வினைப்பயனை அடைக' என்று பாவித்தல். முதிதையென்பதற்குச் சந்தோஷமென்பது பொருள் ; ஆனால் அஃது உலகப்பொருள்களையுடைமையால் உண்டாகுங்களிப்பன்று ; இது மைத்திரி, கருணையென்னும் இரண்டுபாவனைகளுக்கும் சம்பந்தமானது. முற்கூறிய மூன்று வகைப்பாவனைகளுள் ஏதாவதொன்றை அப்பியசிக்குந்தவறி, தான் கருதிய பாவனையை முதலில் சிலஜனங்களிடத்தும் அப்பால் ஒருதெருவில் வாழ்பவர்களிடத்தும் அப்பால் ஒருநாரிடத்தும் அப்பால் ஒரு தேயத்தாரிடத்தும் முறையே செலுத்திப் பயிலுதல்நலம்.

ஈ. **அசுபபாவனை :—**அசுபமென்பதற்குப்பொருள் அமங்கலம் ; நல்ல அதிர்ஷ்டமென்பதன் எதிர்மொழியாயிருப்பதோடு மகிழ்ச்சியின்மை வெறுப்பு என்பனவற்றையுண்டாக்குவதாகவுமுள்ளது. இதைப்பயிலும் ஒருதுறவி, சரீரமானது முப்பத்திரண்டு குற்றத்தாலாக்கப்பட்டதென்றும் சரணியின்குவியலில் தோன்றிவளரும் புழுக்கள்போலக் கருப்பப்பையில் உண்டாகின்றதென்றும் மலங்கழிக்குமிடத்தைப்போல அசுத்தத்தின் கொள்கலனுயிருப்பதென்றும் அருவருப்பான கசிவு அதிலுள்ள நவத்துவாரங்களின் வழியே ஓயாமற் பெருகுகின்றதென்றும் ஜலதாரையைப்போல் வெறுத்தற்குரிய நாற்றத்தை அது வெளிப்படுத்துகின்றதென்றும் பாவித்தல். 'சரீரத்தின் காலவளவை ஒரு நிமிஷமே; மின்னலேயும் நுரையையும் நீரிற்போகட்ட உப்பையும் காய்ந்த புல்லிற்பற்றிய நெருப்பையும் கடலின் அலையையும் ஆகாயத்திற் சஞ்சரிக்கிற ஜுவாலையையும் புன்னுனியிற்பட்ட பனித்துளியையும் போலப் பிறந்தபோதே அதுநாசமாம்' என்று சரீரத்தின் நிலையின்மையைப் பாவித்தலும் அசுபபாவனையின்பாற்படும்.

ரு. **உபேக்ஷாபாவனை :—**எல்லாவுயிர்களையும் சமமாகப் பாவித்தலும் விருப்புவெறுப்பின்றி யிருத்தலுமாம். இது, மற்ற நான்குபாவனைகளைக் காட்டிலும் மிகவுயர்ந்தது ; அருகத்தக்களால் அனுட்டிக்கப்படுவது ; இது சமசித்தத்துவமென்றுங் கூறப்படும்.

(பி- ம்.) உருஉ - ச. 'காரண, மனித்தருதுகமாறபாசுசியென'

உருடு தனித்துப் பார்த்துப் பற்றறுத் திடுதன்
மைத்திரி கருணை மூதிதையென் றறிந்து
திருத்துநல் லுணர்வாற் செற்றமற் றிடுக
சுருதி சிந்தனை பாவனை தரிசனை
கருதி யுய்த்து மயக்கங் கடிக

மைத்திரி, கருணை, முதிதம்,உபேக்ஷையென்னும் நான்கு பாவனைகளும் உயர்வுபற்றிப் பிரஹ்மவிகாரபாவனையென்று கூறப்படும் ; இவைமஹாப் பிரஹ்மாக்களால் அனுஷ்டிக்கப்படுவன.

உருடு. பார்த்து - அசுபபாவனை பண்ணி. பற்று - காமம்.

உருகூடு. அசுபபாவனையாற்காமத்தையொழிக்கவென் றவாறு. உடம்பினை அநித்தியம் துக்கம் அநான்மா அசுசியென்றுபாவித்தல் அசுபபாவனையெனப்படுவதன்றி ஸ்ரீலக்ஷணபாவனையென்றுங் கூறப்படும். இதனைச் சிவஞானசித்தியார்,பரபக்கம், சௌத்திராந்திகன்மதம், உ-ஆம் திருவிருத்தத் தாயிற்காண்க; இவ்வசுபபாவனை, "நன்கென நாறுமி தென்றிவ் வுடம்பு நயக்கின்ற தாயி, னென்பது வாயில்க டோறு முண்ணின் றழுக்குச் சொரியத், தின்பதொர் நாயு மிழுப்பத் திசைதொறுஞ் சிப்பிலுக் போழ்ந்தி, னின்ப நன் னுற்ற மிதன்க ணெவ்வகை யாற்கொள லாமே" எ-ம், "உறப்புக்கடா முடன் கூடி யொன்று யியைந்த பெரும்பை, மறைப்பில் விழைவிற்குச் சார் வாய் மக்குவ தேலிவ் வுறுப்புக், குறைத்தன போல வழுகிக் குறைத்து குறைத்து சொரிய, வெறுப்பிற் கிடந்த பொழுதின் வேண்டப் படுவதி முண்டோ"எ - ம், "எனதெனச் சிந்தித்த லான்மற் றிவ்வுடம் பின்பத்துக் காமேற், றினையெய்த புன்கத்தைப் போலச் சிறியவு மூத்தவு மாகி, வனையப் புழுக்கும் தமாவி காணவும் வாழவும் பட்ட, வினைய வுடம்பினைப் பாவி யாரென னென்னது மாமோ" எனவும் வருங் துண்டலகேசிச் செய்யுட்களாலு முணர்ந்தப்பட்டது ; "வினையின் வந்தது வினைக்கு வினையது,..... மிக்கோ யிதனைப் புறமறிப் பாராய்" (சு: ககஉ -உக), "என்புந் தடியு முதிர மும் யாக்கையென்.....காய்ந்தபசி யெருவை கவர்ந்தா ணுதையும்' (சு: கoஎ - கஎ) என இக்தூலுள்ளே வந்தன அசுபபாவனையின்பாற்படும்.

உருசு - எ. மைத்திரீபாவனைமுதலியமூன்றும் கோபத்தைப் போக்கு.

உருஅ. சுருதி - ஞானநூற்பொருளைக் கேட்டல். சிந்தனை - சிந்தனை (சிந்தித்தல்.) பாவனை-பாவனை (பாவித்தல்) ; இதுதெளிதலென்றுங்கூறப்படும். தரிசனை - அறிதல் ; மேற்கூறிய பாவனையைத்தனுள் ளடக்கூறிய சுருதிமுதலியன உபேக்ஷாபாவனையின் பாற்படும்.

உருகூ. உய்த்து - ஆராய்ந்து.

உருஅ - கூ. உபேக்ஷாபாவனையால் மயக்கத்தைப்போக்குக வென்றவாறு.

(பி - ம்) உருடு. 'தம்மிற்பார்த்து' உருசு - அ. 'மயிரிறமிரி...திதையு பெகையெனநிருதருறற செறறமறறிடுக சுருபசிந்தனைபாவனை' உருஅ-கூ. 'பாவனதெசசனைகருதியுய்தலுமயககு'

உசு0 விஞ்ஞால் வகையான் மனத்திரு ணீங்கென்று
முன்பின் மலையா மங்கல மொழியின்
ஞான தீப நன்கனங் காட்டத்
தவத்திறம் பூண்டு தருமங் கேட்டுப்
பவத்திற மறுகெனப் பாவைநோற் றனளென்.

கூ0.- பவத்திறமறுகெனப்பாவைநோற்றகாதை முற்றிற்று.

உசு0. இந்நால்வகையென்றது, மேற்கூறியசருதிமுதலியநான்கினையும். மனத்திருள்-மயக்கம்; 'இந்நால் வகையான் மனத்திரு ணீங்கு'என்றது அறுவாதம்.

உசுக. முன்பின்மலையா - பூர்வோத்தரவிரோதமிலலாத; மணி. உசு: க00 ; கூ0 : சு.

உசுக - உ. மொழியினற் காட்டவென்க.

உசுச. பவத்திறம் - பிறப்பின்வகைகள். பாவை - மணிமேகலை.

க - உசுச. உணர்ந்தோள் வணங்கிச் சென்று அடைந்தபின் மொழிவோன் காட்டப் பாவைகேட்டுப் பூண்டு நோற்றனளென்க.

(பி - ம்.) உசு0 - உ. இருணீங்கலனமொழியினறீபகலனகனக'

மணிமேகலை முற்றுப்பெற்றது.

மணிமேகலைப்பாட்டு

முதற்குறிப்பு அகராதி.

காதை.	பாட்டு		பக்கம்.
உசு	அணியிழையந்தரம்	...	உகூ
சு	அந்திமாலைநீங்கிய	...	சுசு
உ0	அரசஞ்ஞையினையிழை	...	உகள
உ(ரு)	அரசனுரிமையோடு	...	உளசு
க0	அறவோனுசனத்து	...	க0ள
கூ	ஆங்கதுகண்டவாயிழை	...	க0க
கஅ	ஆங்கதுகேட்டாங்கு	...	கஅசு
கஉ	ஆங்கவர்தம்மூடன்	...	கஙூ
கச	ஆங்கவற்கொருநாள்	...	க(ரு)உ
